தமுஎகச மாநில இலக்கிய பரிசு 2009

என்.தங்கமுத்து - சீதாலட்சுமி நினைவு

இலக்கிய விருது 2010

பெருமாயி குப்பண்ணன் நினைவு பரிசு

# அறுபடும் விலங்கு

-கரன் கார்க்கி

# அறுபடும் விலங்கு

## கரன் கார்க்கி

தமுஎகச மாநில இலக்கியப் பரிசு 2009

என்.தங்கமுத்து-சீதாலட்சுமி நினைவு இலக்கிய விருது 2010

பெருமாயி குப்பண்ணன் நினைவு பரிசு

**அறுபடும் விலங்கு** (நாவல்)
கரன் கார்க்கி ©
முதல் மறுபதிப்பு: ஜனவரி–2019
வெளியீடு:
**வாசகசாலை பதிப்பகம்,**
சென்னை–73.
மின்னஞ்சல்: vasagasalai@gmail.com
இணையதளம்: www.vasagasalai.com

**Arubadum Vilangu** (Novel)
Karan Karki ©
First Re-Edition : January-2019
Published by :
**Vasagasalai Publications,** Chennai-73
Contact: (+91) 9942633833, 9790443979.
email: vasagasalaiweb@gmail.com
web : www.vasagasalai.com

Pages : 336
Price : **350/-** INR
Wrapper : Karthikeyan Maddy
Conception & Layout : Karthick Pugazhendhi.
writerpugal@gmail.com
Printed by : Ramani Print Solution, Chennai-89.

All rights, including professional, amateur, motion pictures, recitation, public reading, broadcasting and the rights of translation into foreign languages are strictly reserved. No part of this book may be reproduced in whole or in part or utilized in any form or by any means electronic or mechanical, including photo copying, recording or by any information storage and retrieval system now known or hereafter invented, without the prior written permission of the author/publisher.

# அறுபடும் விலங்கு

## கரன் கார்க்கி

## போராடுவதன் மூலம் வாழ்வதும்...
## வாழ்வதன் மூலம் போராடுவதும்...

கலை, இலக்கியம் யாவும் மனித வாழ்க்கையைச் சார்ந்துதான் இயங்குகின்றன. வாழ்க்கையைச் சாராத, மனித உணர்வுகளைச் சொல்லாத இலக்கியம், இலக்கியமே அல்ல. மனித வாழ்வின் ஒட்டுமொத்த அனுபவங்களைச் சொல்வதற்கு ஏற்ற இலக்கிய வடிவம் நாவல்தான். கவிதை களும், சிறுகதைகளும் மனித உணர்வுகளை, அவற்றின் கோலங்களை வடிப்பதற்கு ஏற்ற வடிவங்கள் என்றாலும், வாழ்க்கையின் விரிந்த அனுபவங்களைச் சொல்வது நாவல்தான். தேர்ந்த எழுத்தாளர்கள் தங்கள் இலக்கிய வடிவமாக நாவலைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம் இதுதான். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை, சமூகத்தின் வரைபடத்தை, பல்வேறு கதை மாந்தர்களின் நுட்பமான உணர்வுகளை, வாசகன் கற்பனை செய்து பார்க்காத நடுக்கமான அனுபவங்களை, புரிந்துகொள்ள முடியாத விசித்திரங்களைச் சொல்ல ஏற்ற வடிவம் நாவல்.

கரன் கார்க்கியின் முதல் நாவல் இது. இப்படிச் சொல்வதில் ஒரு மகிழ்ச்சியும் துக்கமும் எனக்கு ஏற்படுகிறது. ஒரு தேர்ந்த எழுத்தாளரைத் தமிழ் இலக்கிய உலகம் கண்டுபிடித்திருக்கிறது என்பதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இவ்வளவு காலம் எங்கே இருந்தார்? ஏன் இத்தகைய படைப்பைச் சில பத்தாண்டுகளுக்கு முன்பே கொண்டுவரவில்லை? கரன் கார்க்கியைப் போல் இன்னும் எத்தனை எழுத்தாளர்கள் வெளிப் படாமல் இருக்கிறார்கள் என்று யோசிக்கும் போது, துக்கமாக இருக்கிறது.

கரன் கார்க்கிக்கு அருமையான தத்துவத்தளம் இருக்கிறது. கார்ல் மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார், அயோத்திதாசப் பண்டிதர் மதலியவர்களை உள்வாங்கிச் செரித்துக் கொண்டவர். தமிழ் நவீன இலக்கியத்திற்கு அடித்தளம் இட்ட பாரதி, அவர் ஆராதிக்கும் இலக்கியவாதியாக இருப்பார் என்று நம்புகிறேன். இந்த நாவலைப் படித்தபோது எனக்கு ஏற்பட்ட எண்ணங்கள் இவை. கரன் கார்க்கி யார்? அவர் பின்புலம் என்ன? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. எழுத்தாளரைத் தெரியாமல், எழுத்தை மட்டும் வாசித்து மதிப்பிடுவதில் ஒரு வசதி இருக்கிறது. அம்பேத்கரின் சிந்தனை களும், பெரியாரின் சிந்தனைகளும் இந்த நாவலில் விரவிக் கிடக்கின்றன. இத்தகைய கருத்தியல் தளத்துடன் பெரும்பாலும் இன்று நாவல்கள் வருவதில்லை. கரன் கார்க்கிக்கு இத்தகைய கருத்தியல் பின்புலம் இருக்கிறது. ஆனால், இவற்றைப் பின்னணியாக வைத்துக் கொண்டு,

வாழ்க்கையையும், மனிதர்களையும் விதவிதமாக எழுதுவதால்தான் அவர் சிறந்த இலக்கியவாதியாக இருக்கிறார்.

பல்வேறு வாழ்க்கைகளைச் சொல்வதால்தானோ என்னவோ, இந்நாவலில் பல்வேறு மரணங்கள். ஒரு மரணத்துடன்தான் இந்த நாவல் தொடங்குகிறது. அதே மரணத்துடன்தான் இந்த நாவல் முடிகிறது. இடையில் கோபால், அவருடைய தந்தை, சங்கரன், சுலோச்சனா, விஜயா, சாரதா என்று பல்வேறு கதைமாந்தர்களின் கதைகள். முப்பது மற்றும் நாற்பதுகளில் தமிழ்ச் சமூக வாழ்க்கை எப்படி இருந்தது என்ற விசாரணைதான் இந்த நாவலின் களம். விளிம்பு நிலை மக்கள் ஆதிக்கவாதிகளால் எவ்வாறெல்லாம் கொடுமை செய்யப்பட்டார்கள் என்பது இந்நாவலின் மையம். ஆங்கிலேய ஆட்சியின்போது, கிராமங்களில் இருந்து தலித்துகள், ஆதிக்கவாதிகளின் கொடுமையிலிருந்து விடுபட, தங்கள் ஊரைவிட்டு வெளிநாடுகளுக்கும், சென்னை போன்ற நகரங்களுக்கும் இடம்பெயர்கிறார்கள் என்பதுடன் இந்த நாவல் தொடங்குகிறது. இந்து மதத்தின் சீர்கேடுகளைப் பிரச்சாரமாகச் சொல்லாமல், கதைமாந்தர்களின் வாழ்வியல் அனுபவங்களோடு பேசியுள்ளார் கரன்கார்க்கி.

விலங்குகளைக் காட்டிலும் தாழ்த்தப்பட்டவர்கள் கீழாக நடத்தப்பட்டார்கள் என்பதுதானே சமூக வரலாறு. ஒரு தலித் செருப்பு அணியக்கூடாது, கைக்கடிகாரம் அணியக்கூடாது, பிராமணர்களின் அல்லது ஜமீன்தார்களின் முன்னால் பேசக்கூடாது, சுயமரியாதையுடன் வாழக்கூடாது, எதிர்ப்பைத் தெரிவித்தால் குடிசைகள் எரிக்கப்படும். ஆதிக்கவாதிகளின் போலியான சமூக விழுமியங்களை இவ்வளவு வெளிப்படையாகத் தோலுரித்த நாவல் அண்மைக் காலத்தில் எழுதப்படவில்லை. தேச விடுதலையைக் காட்டிலும், சமூக விடுதலையைத் தாழ்த்தப்பட்டவர்களும் சமூக உணர்வாளர்களும் அவாவியதற்கான நியாயமான காரணங்கள் இந்நாவலில் முன்னிறுத்தப்பட்டுள்ளது போல் வேறு எந்த நாவலிலும் முன்னிறுத்தப்பட்டதில்லை என்று தோன்றுகிறது. பார்ப்பனர்களின் போலித்தனமான விழுமியங் களையும், இந்த நாவலைப் போல் அண்மைக்காலத்தில் வேறு எந்த நாவலும் சாடியதில்லை என்று தோன்றுகிறது.

கோபாலின் மருத்துவத் தந்தை, பூசாரியின் மகனைக் காப்பாற்ற முனைகையில், உடலைத் தொடலாமா என்று கேட்கும் இடம் ஓர் உதாரணம். தலித் பெண்களைத் தொடுவதற்கு சீரழிப்பதற்கு, பிராமணர்களும், ஜமீன்தார்களும் தயங்கியதில்லை. புறவாழ்க்கை

என்று வரும்போதுதான் அவர்கள் பயன்படுத்துகிற ஆயுதம் இந்தத் தீட்டு. காலங்காலமாக வெவ்வேறு வடிவங்களில் தீண்டாமைக் கொடுமை, பார்ப்பனராலும், பார்ப்பனீயத்தைப் பின்பற்றுபவர் களாலும் கடைபிடிக்கப்படுவதை மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளார் கரன் கார்க்கி.

இந்த நாவலின் மையப் பாத்திரமாக கோபால் விளங்கினாலும், கரன் கார்க்கியின் அரசியல் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு உதவும் கதைமாந்தர்களாக சங்கரனும், சங்கரனின் ஆசிரியர் சாமுவேலும் படைக்கப்பட்டுள்ளனர். பிறப்பால் பிராமணனாக விளங்கினாலும், பிராமண மதிப்பீடுகளைத் தூக்கியெறிவதில் மகாகவி பாரதிபோல் விளங்குகிறான் சங்கரன். அம்பேத்கரியமும், பெரியாரியமும், பாரதியியமும் இணையும் மையப்புள்ளி சங்கரன். சங்கரனின் மூலமாகவே மேற்குறிப்பிட்ட ஆளுமைகளின் கருத்துகள் நாவலில் விவாதிக்கப்படுகின்றன. அரசியல் கலவாத வாழ்க்கை எங்கே இருக்கிறது? ஆனால், வாழ்க்கை அதன் இயல்பான போக்கில் இயங்குகிறது என்பதை ஓர் இலக்கியவாதி என்ற முறையில் கரன் கார்க்கி மறக்கவில்லை. அதனால்தான், சுலோச்சனா மற்றும் அவள் தாயார் விஜயா போன்ற தாசிகளின் வாழ்க்கையைச் சித்திரித்துள்ளார்.

இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது இனத்தின் கலாச்சார வரலாறுதான். விஜயா என்ற தாசியுடன் உறவு வைத்துக்கொண்டு சமூகத்தில் உத்தமனைப் போல் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் சங்கரனின் தந்தையைப்போல், ஏராளமான பிராமணர்கள் இருந்திருக்கக்கூடும். சுலோச்சனா போன்ற பேரழகிகளை அடைய, அடையாமல் போனால் அவர்களை உருத்தெரியாமல் அழிக்க, எத்தனையோ ஜமீன்தார்களும், மிட்டா மிராசுகளும் இருந்திருக்கக்கூடும். இந்திய / தமிழக ஆதிக்கவாதிகளின் வாழ்க்கை சாதித்தவர்களால் கட்டமைக்கப்பட்ட வாழ்க்கைதான். எத்தனை என்பது குடிசைகள் எரிந்தன என்பதற்கும், எத்தனை உடல்கள் கருகின என்பதற்கும் கணக்கேயில்லை. சுலோச்சனா போன்ற பெண்ணின் எந்தப் பெருமூச்சுகள் காற்று மண்டலமெங்கும் வியாபித்துள்ளன என்பதை மறந்துவிட்டு, வெற்றுப் பெண்ணியம் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை.

அறுபதுகளில் திராவிட இயக்க எழுத்தாளர்களால் எழுதப் பட்டிருக்க வேண்டிய நாவல் இது. தாழ்த்தப்பட்டவர்களின் துயரங்களையும், தாசிகளின் துயரங்களையும் அவர்கள் ரத்தமும் சதையுமாகப் பதிவு செய்திருந்தால், நம் தலைமுறையின் கலாச்சார வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும். நாற்பதுகளில் தமிழகத்தின்

கலாச்சார வரலாறு எப்படி இருந்தது என்பதை நாம் அறிவதற்கு கரன் கார்க்கிக்காகக் காத்திருக்கவேண்டி நேர்ந்துள்ளது.

இந்த நாவலில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான பாத்திரங்கள் இறந்து போகின்றனர். ஆதிக்கவாதிகளால் கொல்லப் படுகின்றனர். கோபாலின் தந்தை, விஜயா, சுலோச்சனா, பீமன், சங்கரன், முனியன், மணி, நாகம்மா, குயிலம்மா என்று பல பேர். அப்படித்தான் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை இருந்திருக்கிறது. ஆதிக்கவாதிகளை எதிர்க்க, புருவத்தை உயர்த்தினாலும், விளிம்புநிலை மக்களின் நிழல்கூட உருத்தெரியாமல் அழிக்கப்படுவதை எழுத, எத்தனையோ இலக்கியங்கள் எழுதப்பட வேண்டியுள்ளது. அப்படி எழுதப்பட்டிருந்தால், திண்ணியத்தில் மலம் திணிக்கப் பட்டிருக்குமா? குஜராத்தில் இத்தனை உடல்கள் எரிக்கப்பட்டிருக்குமா? வரலாறுக்கும் இலக்கியத்திற்கும் தொடர்பேயில்லை என்று ஒரு வாதத்திற்காகப் பேசுவோம். கண்களுக்குத் தெரிந்தும், தெரியாமலும் இத்தனை வன்முறைகள் நடைபெற்ற பிறகும்கூட, ஒன்றுமே நடக்க வில்லை என்று பாவனை செய்வது போலல்லவா இன்று சமூகம் இருக்கிறது? கிணற்றில் மிதக்கும் சுலோச்சனாவின் நிர்வாண உடல் வெறும் சுலோச்சனாவுடையது மட்டும்தானா? போலித்தனங்களை எதிர்க்கப் புறப்படும் சங்கரன்களைப் பைத்தியக்காரர்கள் என்று முத்திரை குத்துவதுடன் சமூகத்தின் கடமையிலிருந்து விலகுவது தான் புத்திசாலித்தனமா?

இந்துத்துவத்தின் கோர முகங்கள்தானே இத்தனைக்கும் காரணம்? அறிந்தும் அறியாமலும் அதன் வஞ்சக வலையில் விழுந்து சுவாசிப்பது மட்டும்தான் இந்திய வாழ்க்கையா? கரன் கார்க்கி எழுதுகிறாரே, 'மணிக்கு பணம் சம்பாதிக்கத் தெரிந்தது. பாவம், வாழத் தெரியவில்லை' என்று. போராடுவதன் மூலம் வாழ்வதும், வாழ்வதன் மூலம் போராடுவதும்தான் உண்மையான வாழ்க்கை என்பதை இந்த நாவல் சொல்கிறது, பல மரணங்களின் மூலமாக.

வாழ்வதாக நினைத்துக்கொண்டு, இந்த திறந்தவெளிச் சுடுகாட்டில் சாவதைக் காட்டிலும், சாவுகளின் மூலமாக வாழ்க்கையைப் புரிந்துகொள்வது போல் ஓர் உன்னதம் வேறு உண்டா? இலக்கியம், இந்த உன்னதங்களைக் கற்றுக் கொடுப்பது. அவற்றைக் கற்றுக் கொடுக்க, கரன் கார்க்கி தொடர்ந்து எழுத வேண்டும். என்னை எழுதப் பணித்த கரன்கார்க்கிக்கும், நண்பர் யாழினி முனுசாமிக்கும் அன்பு கலந்த நன்றிகள்.

என்றும் அன்புடன்,

**பா.இரவிக்குமார்**

# எங்கிருந்து தொடங்க...

இதையே எவ்வளவு காலம் சொல்லிக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பீர்கள் என்று யாராவது கேட்கக்கூடும்.

நான் அவர்களுக்குச் சொல்வேன். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அநீதியாகச் செய்யும் ஒவ்வொன்றும் முற்றிலுமாக அழித்து அடையாளமில்லாதபடி ஒழிந்துபோகும் காலம் வரை நானும் பூமி முழுவதும் உள்ள எனது தோழர்களும் இப்படித்தான், இப்படியேதான் எழுதுவோம், பேசுவோம்.

நான் கற்பனை செய்வதைக்கூட மனிதகுல எதிரிகள் தடை செய்து விட்டார்களோ என்று அஞ்சுகிறேன். காரணம், கடந்தகால, நிகழ்கால வரலாற்றில் என் மூதாதையருக்கும் எனக்கும் என் மக்களுக்கும் நிகழ்ந்ததை, நிகழ்வதை எழுதுகிறேன். எதுவும் கற்பனை அல்ல.

'மாந்தர்களின் கண்காட்சிக் கூடமாக உலக வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் நாடு என்னுடையது.'

இந்தக் கூற்றை நான் உண்மைதான் என்று கண்டபோது, இந்த மாபெரும் காட்சிக் கூடத்தில் நான் யார்? என் சமூகம் எது? செறிவுடைய இந்தியச் சமூகத்தில் என் சமூகத்தின் பங்களிப்பு என்ன? பலவிதமான மொழி, பண்பாட்டில் ஊறித் திளைக்கும் இந்த மண்ணில் என் சமூகத்தின் நிலை எவ்வாறு உள்ளது. இந்தக் கேள்விகளோடு நான் வரலாறுகளையும், இதிகாசங்கள் என்று சொல்லப்படுபவை களையும், புரட்டும்போதும் கேட்கும்போதும் பலவித சூழல்களால் அறியும்போதும் நான் அடைவதோ அதிர்ச்சி... அதிர்ச்சி...

அதன் விளைவாக எழுந்த துயர்மிக்க எனது தன்னிலை உணர்தலும், அர்த்தமுள்ள கோபமுமே எனது எழுத்தாக வெளிப் பட்டிருக்கிறது. வெள்ளையர்கள் வந்தார்கள். நல்லவை, கெட்டவையென்று ஏராளமானதை அவர்கள் இந்தியர்கள் மீது திணித்தார்கள். ஆனால், அற்புதமான ஒன்றை, வரலாற்றை மாற்றிப்போடும் ஒன்றை, என் மூதாதைகளின் சமூகப் பழைமையை, அதன் இருப்பை, அதன் காலம் கடந்த உன்னதத்தைச் சொல்லும் சிந்துச்சமவெளி நாகரிகம் என்ற தொல்குடி நாகரிகத்தை, நாடு சுதந்திரம் அடைய 25ஆண்டுகளுக்கு

முன்பாக உலகுக்கு வெளிச்சமிட்டு உணர்த்தினார்கள். அந்த மகத்தான ஆய்வாளனுக்கு நான் மட்டுமல்ல, திராவிட ரத்தம் பாயும் அத்தனை மக்களும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள்தாம்.

ஆரியத்தினால் கட்டப்பட்ட சமூகம் இது என்கிற பொய்யான வாதத்தை சுக்குநூறாக்கி, தொல்குடிகளின் மேல் வந்து விழுந்த வெள்ளை நாசம் தொல்குடிகளை, இந்த மண்ணின் மைந்தர்களைத் தந்திரச் செயல்களால் வீழ்த்தி அதை வீரம் என்றும், அறிவு என்றும் அலங்காரமாய்ப் புனைந்து மனிதப் பண்புகளின் உச்சமாக விளங்கிய தொல்குடி திராவிடர்கள் மீது தங்களது கட்டமைப்பைத் திணித்து அவர்களின் வாழ்வியல் பண்பாட்டை அபகரித்த கொடும்போக்கை அறிவினிற் சிறந்த மக்களால் புரிந்துகொள்ள முடியும்.

கருப்பு மனிதன் மேல் வந்து விழுந்த வெள்ளைத் துண்டை ஒரு வரைபடமாக்கிப் பார்த்தால் புரியும். மேலடுக்கிலிருந்து வெள்ளை நிறம் படிப்படியாக இறங்கி வருவது. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் பெரும்பாலும் கருமை மாறாது. உள்ளம் கருமையாகாது. வண்டல் போல் அடித்தளத்தில் சிக்கித் திணறும் மாபெரும் சமூகக் கூட்டத்தைக் காணலாம்.

உலகம் மெச்சுவதுபோல் இந்த நாட்டில் கலை, பண்பாடு, நாகரிகம் செழித்து உள்ளது. ஏராளமான வரலாற்றுப் புராணங்கள் இருக்கின்றன. இதில் இந்தியாவின் தொல்குடிகள் அடித்தள மக்கள், ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள் எங்கே இருக்கிறார்கள்?

நசுக்கியவர்களும் நாசம் செய்தவர்களும்தான் இருக்கிறார்கள், நசுக்கப்பட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

ஏராளமான கேள்விகள் குடைந்தெடுக்க ஓ... மானுட சமூகமே! எங்களின் கலைகளும் பண்பாடும் நாகரிகமும் மறுக்கப்பட்டு, அதை அவர்கள் தங்கள் மீது சாயமாகப் பூசிக்கொண்டார்கள். பிறகு, இது எங்கள் கலை, எங்கள் பண்பாடு, இது எங்கள் நாகரிகம் என்கிறார்கள். இதை நம்பும்படியாக, மற்றவர்களை ஏமாற்ற ஒவ்வொரு கலையும் ஒரு தேவதை தந்ததாகவோ அல்லது கடவுள் தந்ததாகவோ சொல்லியும் எழுதியும் வைத்திருக் கிறார்கள். தொடர்ந்து கூச்சமின்றிப் பொய்யை உண்மைபோல் பேசுகிறார்கள்.

கலைகளின் ஊற்றாக, திறன்மிக்க பழந்தமிழரின் திறன்கள் மீளாக்கம் பெறவும், வரலாற்று ஏடுகளில் நாங்கள் இல்லாது போனாலென்ன, வரலாறாகவே நாங்கள் இருக்கிறோம். எங்கள் உண்மை வரலாற்றை மீளாக்கம் செய்வதோடு உண்மை

வரலாறுகளைப் படைப்போம் என்கிற நோக்கத்தில் நேர்மையாகவும், மனசாட்சிக்கு விரோதமின்றி என் மூதாதைகளைப் போல் மனித உள்ளத்தோடு இந்தப் படைப்பை உங்கள் முன்வைக்கிறேன்!

•••

கிராமத்தின் தொடர்புகளற்று நகரத்தில் பிறந்து வாழும் ஒருவனுக்கு லேசான ஒடுக்குமுறையோ அல்லது உயர்வு, தாழ்வு நியதியின் அடிப்படையில் தன்னை நடத்த முயன்றாலோ எழும் துயர்மிகு கோபம் அதன் விளைவாய் எழும் எதிர்ப்பு நிலை. கடந்த கால, நிகழ்கால சமூகம் பற்றிய அவனது புரிதல், அதோடு அவனுக்கு மொழியும் வசப்பட்டிருந்தால் ஏற்படும் வினை, படைப்பு.

என் பதின் வயதில் நான் நூல்களை ஆர்வத்தோடு, ஆசையோடு வெறிகொண்டு வாசித்துக் கொண்டிருந்தேன். அதன் எதிர் வினையாக என் உள்ளம் கனன்று எரியும்; தலை எப்போதும் பரபரத்துக் கொண்டிருக்கும். என் வாய் நிறைய வார்த்தைகள் நிரம்பி வழியும். என் வார்த்தைகளைப் பாய்ச்ச நான் செவிகளைத் தேடியலைந்து கொண்டிருப்பேன். குறைந்த அளவாக என் நண்பர்கள்தான் என் களம். அவர்களது செவிகள் வலியால் துடிப்பதுபோல் முகம் சுளிப்பார்கள். பொறுமை இழப்பார்கள். பல நேரங்களில் அவர்கள் உறங்கிப் போனதும் உண்டு. என் வாய், வார்த்தைகளின்றித் திணறும்வரை பேசித் தீர்ப்பேன். அவர்கள் கேள்விப்படாத பலவற்றை ஒருவித வெறிகொண்ட களிப்போடு பேசுவேன். அது விவாதமாய் மாறி நான் ஒரு பக்கமும், நண்பர்கள் அனைவரும் ஒரு பக்கமுமாய் வாதித்த நாட்கள் ஏராளம். இதனால் ஒரு கட்டத்தில் நண்பர்களால் நான் சனரஞ்சகமான நட்பு வட்டத்துக்கு லாயக்கற்றவன் என்றும், எதற்கெடுத்தாலும் வாதிடுபவன் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டேன். யாரிடம் சொல்வது என் நிலை பற்றி?

நான் ஓட்டப் பந்தய வீரன் இல்லையே கோட்டுக்குள் ஓட. என் உள்ளம் இலக்குத் தெரியாமல் ஓடும் குதிரைபோல் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது. அப்போது ஒரு நண்பன் சாட்டையால் விளாசி என் ஓட்டத்தில் தடை போட்டான். கொடூரமான வார்த்தை அது.

உலகளாவிய பல செய்திகள் பற்றி நான் படித்ததை ஓயாமல் பேசுவதால் காழ்ப்புணர்ச்சியோ அல்லது ஒருவேளை அறியாமையாக இருக்கலாம்.

''நீ எவ்வளவுதான் பிரமிப்பூட்டும் உலக விஷயங்களைப் பேசினாலும் ஒரு விஷயத்தை நீ புரிந்துகொள். 'உயர உயர

பறந்தாலும்ஊர்க்குருவி பருந்தாகாது.''

பல நாட்கள் என்னைத் தூங்கவிடாமல் செய்த வார்த்தையது.

பருந்தாக அவனையும், குருவியாக என்னையும் உருவகப்படுத்த அவனைத் தூண்டியது எது? அடிப்படையில் எந்தவிதமான பொது அறிவுமற்ற அவனை அப்படி மார்தட்டிக் கொள்ள வைத்தது எது?

கணக்கிலடங்கா முறை எனக்கு நானே கேள்வி கேட்டுப் புழுங்கினேன். பிறகு, எனக்கு நானே சமாதானமானேன். பேசும் ஆவல் குறைந்து, எழுதவேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. எழுதினேன். நான் எழுதியதில் முக்கால் பங்கைக் கிழித்து எறிந்து விடத் துணிந்தேன். கிழிந்து குப்பைகளான கவிதைகளும், சிறுகதைகளும் எனக்குக் கற்றுத் தந்தன.

முடிவில் ஓர் உண்மை புரிந்தது. என்னில் இருந்து தொடங்கும் போதெல்லாம் நான் மிக வெறுமையாக உணர்ந்தேன். முடிவில், அது எங்கிருந்து தொடங்க வேண்டும் என்று என் எழுத்துக்களால் நிரம்பி வழிந்து கிழிபட்ட காகிதக் குவியல் கற்றுக் கொடுத்தது.

என் முன்னோரில் இருந்து தொடங்க என் வேரில் இருந்து தொடங்கினேன். என் எழுதுகோல் சிறு இடைவெளிகளுடன் தயக்கமின்றி வெப்பம் உமிழ ஓடியது.

முதல் ஓட்டம் தொடங்கியது 13.2.2000ல். அது முடிவுக்கு வந்தது 19.7.2000இல். எனக்கு நன்றாகத் தெரியும், அது சோதனையோட்டம் என்று.உண்மையில் அது ஏராளமான குறைகளுடன் இருந்தது. என் தலையணைக்கடியில் வைத்து வெப்பமூட்டிக் கொண்டிருந்தேன். அதை வெளியிட பதிப்பகங்கள் தேடி அலைந்து கொண்டிருந்தேன் ஒருவர் அதை வாங்கி இரண்டு ஆண்டுகள் வைத்திருந்து திருப்பித் தந்தார். நானும் சளைக்காமல் இரண்டாவது நாவலை எழுதத் தொடங்கி விட்டேன்.நன்றாகவே வந்தது. நான் வாசித்த புத்தகங்களை விடவும், நான் எழுதிய அச்சிடப்படாத புத்தகம் அதிக நம்பிக்கையளித்தது.

நண்பர் அமல் மூலமாக 'முரண்களரி' அறிமுகமானது. ஒரு பர்வையாளனாக நான் அங்கே பலரைச் சந்திக்கும் வாய்ப்பும் கடப்பாளிகளின் அனுபவங்களும் எனக்கு மேலும் நம்பிக்கை உந்தன. அதன் அமைப்பாளர் கவிஞர் யாழினி முனுசாமியின் லெக்கியம் சார்ந்த தொடர் செயல்பாடுகள், எனக்குள் மேலும் வேகத்தை அதிகப்படுத்தின. அவரிடம் என் நாவலின் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்தேன். படித்துமுடித்த அவர், 'உங்கள் நாவலை முரண்களரியில்

வெளியிடலாம் தோழர்'' என்று சொன்னபோது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவரே ஒளி அச்சுக்கு கவிஞர் சூரியசந்திரனை அறிமுகப்படுத்தினார்.

பிழைதிருத்தத்திற்காக, முதல் பிரதியை வாசித்தபோது எந்த மனிதனாலும் பெயர்வைக்கப்படாத அந்தப் பறவை சிறகடித்தது. அச்சு எழுத்துகளுக்கு மேலாகவும், இடைவெளியிலும் எழுதுகோல் தாவியோடியது. முழுமையடையும்வரை கருத்துகளை இடையிடையே செருகிக்கொண்டே இருந்தேன். அருமைத் தோழர் சூரியசந்திரன் தொழில்முறையை மீறி நட்போடு நான் தரும் இடைக்குறிப்புகளைச் சேர்த்துக்கொண்டே வந்தார். அவருக்கு நன்றி.

மரியாதைக்குரிய தோழர் முனைவர் பா.இரவிக்குமார் மிகச் சரியான அணிந்துரையுடன் பிழைதிருத்தமும் செய்து தந்தார். அந்த நேரத்தில் அவருக்கு இருந்த நெருக்கடியிலும் அவரது பங்களிப்பு என்னை என்றென்றைக்கும் நெகிழச் செய்யும். நன்றி தோழரே.

அழகுற அட்டையை வடிவமைத்துத் தந்த தோழர் பாலாஜிக்கும் என் நன்றி.

இந்நூல் வெளிவருவதற்கு முன்பாகவே நூறு பிரதிகளுக்கான முன்பணம் தந்து உதவிய சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் திரு.செல்வப்பெருந்தகை அவர்களுக்கும், அவரை எனக்கு அன்புள்ளத்தோடு அறிமுகம் செய்துவைத்த வழக்குரைஞர் தோழர்.தமிழினியன் அவர்களுக்கும் நான் நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளேன். என்னை ஊக்குவித்ததோடு, உதவியும் செய்த என் பாசமிகு தங்கை திருமதி. இளவரசி ரவி அவர்களுக்கும், நூலைப் பதிப்பித்த தோழர் 'முரண்களரி படைப்பகம்' யாழினி முனுசாமிக்கும் நன்றி சொல்ல வார்த்தைகளற்றவனாய் இருக்கிறேன்.

உங்கள் விமர்சனம் என் எழுத்தை மேலும் கூர்மைப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன்...

**கரன்கார்க்கி**
9884518986
jdkarankarki@google.com

கன்னிகாபுரம்,
சென்னை – 12

# மறுபதிப்பிற்கான முன்னுரை

தமிழ் இலக்கியச் சூழலில் ஒரு படைப்பு மறுபதிப்பாக வருவதென்பதே பெரிதும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதுதான். அதுவும் அதை வேறொரு புதிய பதிப்பகம் வெளியிடுவது என்பது எழுதுகிறவனுக்குக் கூடுதல் மனசிலிர்ப்பை தரக்கூடியது. எப்போதையும் விட, இலக்கியத்தை எழுத நிறைய பேர் முன் வந்திருக்கிற காலமிது. அதை மக்களிடம் கொண்டு செல்வது என்பது தான் மிக அவசியமான பணியாக இருக்கிறது.

தமிழ்ச் சூழலில் அந்தப் பணியை மிக நேர்த்தியோடு , நம்பிக்கையூட்டும் விதத்திலும் கொண்டு செல்லும் வாசகசாலை நண்பர்கள் அறுபடும் விலங்கு நாவலை மறுபதிப்பாகக் கொண்டு வருவது மிக மகிழ்ச்சியாக உணர வைக்கிறது. 2000–த்தில் எழுதி 2009– ல் வெளியான என் முதல் நாவல் என்பதுடன் குறிப்பிட்ட அளவு வாசகர்களிடம் என்னை அறிமுகப்படுத்திய படைப்பு, இப்போது 2019–ல் புதிய அட்டைப் படத்துடன் வருகிறது. இடைப்பட்ட பத்தாண்டுகளில் படைப்புலகில் நானும் சில வேலைகளைச் செய்தவன் என்கிற வகையில் இந்தப் புதினம் தான் என் எழுத்து எண்ணத்துக்கு வடிவம் தந்தது.

இலக்கிய வடிவில் மக்களோடு உரையாட, எனக்கு புதின வடிவம் தான் வசதியாக இருக்கிறது. உலகின் ஆகச்சிறந்த படைப்புகளை வாசித்தறிந்தவன் என்கிற வகையில் தமிழிலும் அத்தகைய படைப்புகளைத் தரமுடியும் என்று நம்புகிறவன் நான். என் முதல் முயற்சியான அறுபடும் விலங்கு புதினத்துக்கு வாசகர்கள் சிறப்பான ஆதரவு தந்தார்கள் அவர்களுக்கும் இனி அரவணைக்கப் போகிற வாசகர்களுக்கும் நன்றி. இதை புதிய பதிப்பாகக் கொண்டு வரும் வாசகசாலை பதிப்பகத்தாருக்கு நன்றி.

**-கரன்கார்க்கி**
சென்னை–12.

மனிதன் மீது நிகழ்த்தப்படும்
அனைத்துக் கொடுமைகளுக்கும் எதிராகப்
போராடிய, போராடுகிற
மாவீரர்களுக்கு...

# அறுபடும் விலங்கு

கோயிலைச் சுற்றி வழக்கமாய் இருக்கும் கூட்டத்தைவிட இன்று அதிகமாய் இருந்தது. வடக்கு மூலையில் இன்னும் அதிகமாக சோகம் அப்பிய முகத்துடன் 'ஓ'வென்று ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ரத்த சோகையால் பாதிக்கப்பட்டவள்போல் தோற்றமளித்த பெண் வேதனையால் மண்ணில் விழுந்து புரண்டு கொண்டிருந்தாள். அவளது கால்பக்கமாக ஒரு பையனும் இப்போதுதான் நடக்க ஆரம்பித்த இன்னொரு பொடியனுமாய்ச் சுற்றி நின்ற கூட்டத்தாரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் புரிந்தும் புரியாமலும். தாய் தலையில் அடித்துக் கொள்ளும்போதெல்லாம் குழந்தைகள் வீறிட்டு அலறினார்கள். கொஞ்சம் தள்ளி வயதான பெண்கள் மார்பில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர்.

காவி நிறப் பற்களால் சுருட்டை இழுத்துக் கொண்டும் மங்கலமான புகையை ஊதிக்கொண்டும் இருந்த பெரியவர் தோள் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார். பிறகு சுற்றிலும் நோட்டமிட்டவர்,

"சரி, பிணத்தை ஊருக்குள்ள எடுத்துகினு போயிடலாம்; இங்கயே இருந்தா எப்டி?" என்றார்.

"கொஞ்சயிருப்பா, தோள்லயா தூக்கிட்டுப் போவ முடியும்? கயித்துக் கட்லு எடுத்தாரப் போயிருக்காங்க" என்றபடி பிணத்தை விட்டுச் சற்று தூரம் நகர்ந்துபோனான் ஓர் இளைஞன்.

பெரியவர், 'அப்படியா' என்பதுபோல் பார்த்துவிட்டுச் சடலத்தின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார். சடலத்துடன் பேசுவது போல் அதை உற்றுப் பார்த்தார். பிறகு தனது துயரம் தோய்ந்த குரலில், "அடப்பாவமே இவன் இப்பிடியாச் போய்ச் சேரணும்? நாங்கள்லாம் கல்லாட்டம் கிடக்கோம்" என்று மேலும் ஏதோ சொன்னார். வார்த்தைகள் வரவில்லை; கண்ணீர் வந்தது.

உட்காரக்கூடப் பலம் இல்லாமல் தரையில் சாய்ந்து விட்டார். யாரோ ஒருவர் அவரைக் கைத்தாங்கலாய் அழைத்துப் போய் ஒரு பாறையோரமாக உட்கார வைத்தார்.

"மெட்ராசுக்கு ஆள் அனுப்பியாச்சா?" யாரோ கேட்டார்கள்.

"ஏம்பா! பாடி இப்பவே வாசனை வருது. அவங்க வர நேரமாயிடுச்சுனா எடுத்துட வேண்டியதுதான்!"

பெரியவர் முருவனின் கண்களில் நீர் பெருக்கெடுத்து வெளுத்த தாடிக்குள் மறைந்து போனது. அதைத் தேடுவது போல் நடுங்கும் கைகளை ஒடுங்கிய கன்னத்தில் தேய்த்தபடி சடலத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரை யாரோ தாக்கியது போல் திடீரெனத் திமிறிக் கொண்டு கத்தினார்.

தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டார். சடலம் வாய் திறந்து கிடக்க மதில் ஈக்கள் கொத்தாக மொய்த்துக் கொண்டிருந்தன.தூரத்தில் காவி உடையில் தோளுக்குக் கீழே சடை புரள மெதுவாய் நடந்து வந்தார், சாமியார்.

"சரி, இப்படி அழுது புலம்பினா திரும்பி வரவாபோறான்? அவளோட கருணை... அவன் போயிட்டான். அவளாலேயே முடியல. கைவுட்டுட்டா" என்று அவர் கோயிலைக் கை நீட்டிக் காண்பித்தார்.

"நேரம் ஆவுது, சீக்கிரம் ஊருக்குள்ள கொண்டு போயிடுங்க"

பதிலுக்கு காத்திராமல் அவர் போய் விட்டார். பெரியவர் கண் இருண்டு போனது போல் கைகளைக் காற்றில் அலைய விட்டார். வேதனையால் அவருக்கு மூச்சுத் திணறியது. வேண்டாத பொருளைப் போல பூசாரியைப் பார்த்தார்.

இப்படிக் கோயில்ல அனாதைப் பிணமாய் கிடப்பவனின் அப்பன் வாழ்ந்த வாழ்க்கை அவருக்கு நினைவு வந்தது.

கண் முன்னாடி எல்லாம் நேற்று நடந்தது போல் ஓடியது.

"இப்படிக் கோயில்ல வந்து ஒண்ணுமில்லாம போயிட்டானே படுபாவிப் பய. பட்டணத்துல இல்லாத மாத்திர மருந்தாடா... அடப்பாவி! குட்டியும் குலுவானுமா இருக்குதே" என்று தலையைப் பிடித்துக் கொண்டார். "சே... என்னத்த வாழ்க்கையோ" என்று துப்பினார். கண்ணீரும் எச்சிலுமாய் வெளியே வந்து விழுந்தது.

பெரியவர் விரல் நடுங்க கண்களைத் துடைத்துக் கொண்டார். அழுகை அடக்க முடியாதபடி பீறிட்டது.

கண்களை மூடிக்கொண்டார். நினைவுகள் துரத்தின. விடாப்பிடியாய்க் கடந்த கால நினைவுகள் அவரை மலைப்+பாம்பு போல் சுற்றி வளைத்து இறுக்கின.

⊙⊙⊙

தென்னாடெங்கும் வறட்சி தலை விரித்தாடியது. பூமி பாளம் பாளமாய் வெடித்து விரிசலிட்டிருந்தது.

ஊரில் ஆடுமாடுகள்கூடப் பட்டினியால் செத்துக் கொண்டிருந்தன. எங்கும் பஞ்சம். பழந்தமிழர்கள் வாழும் பகுதியைக் கேட்கவே வேண்டாம். பஞ்சம் இங்கு கொலை வெறித் தாண்டவமாடியது. தாகத்துக்குத் தண்ணீர்கூட அரிதாய்க் கிடைத்தது. ஊரே கெட்ட மாமிச வாடை அடித்தது. செத்துப் போன ஆடு மாடுகளோட இறைச்சி சனங்களோட வயிற்றை நிரப்பியது. ஆனால், அதுவே காலரா பேதிக்கு வழி செய்து கொண்டிருந்தது.

குடும்பத்துக்கு ஒருத்தரோ இருவரோ பலியான கொடுமையோடு, குடும்பமே பலியாக அழுகையும் ஒப்பாரியுமாய் ஆளுயரத்துக்கு நின்ற ஈச்சை, பனை மரங்களையும் வெட்டிச் சாய்த்து அதன் குருத்துக்களைத் தின்று தீர்த்தார்கள். அப்போது எல்லாம் பட்டணம் போய் பொழைக்க வேணும் என்ற எண்ணம் வலுக்காத காலம். பட்டணத்தில் போய் செய்ய எந்த வேலையும் தெரியாத காலமும்கூட. பசியும் பட்டினியுமாய் மக்கள் அலைமோதிக்கொண்டு இருக்க மிட்டா மிராசுகள், நிலம் படைத்த பண்ணைகளின் தொப்பைகள் மட்டும் குறையாமல் 'தளுக்புளுக்'கென்று ஆடிக் கொண்டுதான் இருந்தன. இன்னும் ஓரிரு வருடம் பஞ்சம் நீடித்தாலும் அவர்களுக்கு வாட்டம் வரப்போவதில்லை. வயிறு ஒட்டி நாவறண்ட கூட்டம்தான் தண்ணிக்கும், நீச்சத் தண்ணிக்கும் அல்லாடியது. உள்ளூர் முதலாளிகள் உறிஞ்சிப் போட்ட சக்கை மனிதர்களில் தப்பியோடி பிழைத்துக்கொள்ள துணிந்தவர்களை மொரிசியஸ், தென்னாப்பிரிக்கா, பினாங்குன்னு வெளிநாடுகளுக்குக் கூலியாட்களாய் இலவசமாய் ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்தார்கள் வெள்ளைக்காரர்கள். ஒரு சிலர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். சிலருக்கோ பிறந்த மண்ணை விட்டுப் போவது பஞ்சத்தைவிடக் கொடுமையானதாய் இருந்தது.

அப்படியே யாராவது விசயந்தெரிந்து போக முயற்சித்தால் ஊரில் இருந்த மேல் சாதிக்காரங்களும் ஏகப்பட்ட நிலத்துக்குச் சொந்தக்காரர்களும் தடுக்க முயற்சித்தார்கள். எங்கயாவது ஓடிப் போயாவது பஞ்சம் பிழைக்க ரங்கன் குடும்பம் மூட்டை முடிச்சுகளைத் தயார் பண்ணிக்கிட்டிருப்பது எப்படியோ ஊருக்குள்ள தெரிஞ்சுப்போச்சு.

ரங்கன் ஒரு முக்கியப் புள்ளி. அந்தக் கூட்டத்துலயே விவரமான ஆளு. காலனி சனங்க ரங்கனோட பேச்சுக்குக் கட்டுப்படும். அப்படியொரு செல்வாக்கு அந்தாளுக்கு.

ரங்கன் உண்மையிலேயே பொய ரோசக்காரன். இரண்டு மாட்டு வேலைய அவன் ஒருத்தன் மட்டுமே செய்யற பலம். புள்ள குட்டின்னு நாலு பேர். பட்டினியில் நோய் புடிச்சு, ஒரு மாசத்துக்கு முன்னாடிதான் நாலாவது செத்துப் போனது. மூணாவதுக்கு காய்ச்சல். கால் ரெண்டும் எதிரெதிர் பக்கமா வளைச்சுக்கிட்டுப் போவுது.

ரங்கனால சகிக்க முடியல. ஊர்ல இருக்குற யாரும் ஒரு பிடி வரகுகூடத் தரமாட்டாங்க. ஆனா அவங்க வீட்ல மூட்டை மூட்டையா கேழ்வரகும் நெல்லும் இருப்பது ரங்கனுக்குத் தெரியும்.

இங்கேயே இருந்தா ஒவ்வொருத்தரா செத்துத் தொலைய வேண்டியதுதான்.

ரெண்டு ஏக்கர் நிலம் இருக்கு. என்னத்த பண்ண, தொண்ட வறண்ட கிழட்டு வாய்போல வானத்த பாத்துக்கினு கெடக்கு வெப்ப வழியுற கெணறு. வித்துற வேண்டியதுதான்னு தோணுது வாங்கறதுக்கு ஆள் இல்லையே!

மேல ஊர்க்காரங்க வாங்கிக்குவாங்க. ஆனா... ஒரு மூட்டை கேழ்வரகும் தேறாது. நிலைமை அப்படி. வேற வழி இல்லாம வித்துப்புட்டாலும் தான் மட்டும் வச்சிக்கிட்டுச் சாப்பிடற ஆள் கிடையாது. ஊரே பட்டினிக் கிடக்குதே.

ரங்கன் கலவரமான நிலையில் யோசித்தான். எப்படியும் ஊரைவிட்டுப் போய்விட வேண்டியதுதான் என்று மனதுக்குள் தீர்மானம் செய்திருந்தான்.

ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் டவுன்ல இருந்து வந்தவங்க தண்டோரா போட்டுட்டுப் போனாங்க. கூலிவேலை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஆட்கள் தேவைன்னு 'ஆள் பிடிக்க'

ஆட்களை மேய்ப்பதில் தேர்ந்த ஓநாய்மனம் படைத்த கங்காணிகள் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அதுவும் தங்களை உயர்ந்த சாதியென்று கருதிக் கொள்பவர்களுக்கு தெரியாமல்தான்.

எப்ப மழை பெய்யும்ன்னு தெரியாது. ஆளுங்க எல்லாம் பஞ்சம் பொழக்கப் போயிட்டா நிலத்துல உழைக்க ஆளுக்கு எங்க போறது? இது ஆண்டைகளோட கவலை.

நிலமாவது, மண்ணாவது. இவனுங்களுக்கு உழைச்சி ஓடா போனதுதான் மிச்சம். சிறுமபட்ட வாழ்க்கை வாழ்ந்தது போதும்டா சாமி... வெள்ளக்காரன் உடுற கப்பலேறி பஞ்சம் பொழைக்கப் போறதுதான் உத்தமம்ன்னு தோணுச்சி ரங்கனுக்கு. இங்கேயே இருந்தா மண்ணோட மண்ணா மக்க வேண்டியதுதான். சொந்த சனங்ககிட்ட சொன்னா விட மாட்டங்க. சந்தடியில்லாம கிறம்பறதுன்னு முடிவு பண்ணிட்டான் ரங்கன்.

அவன் முடிவு பண்ணா... பண்ணதுதான்.

ரங்கனோட மனைவி பொன்னியம்மாள் அழுது அடம் புடிச்சி ரகளைப் பண்ணிப் பார்த்தாள். கன்னம் ரெண்டுத்துலேயும் கைரேகை பதியறமாதிரி ரெண்டு அப்புதான் கிடைத்தது. ஊரே பாக்குற மாதிரி, 'பஜாரி வேஷம் போட்ட மவளே அடிச்சுப் பொதைச்சுப் புடுவேன்'னு மிரட்டல் வேற. எதுக்கு வம்பு என்று பொன்னியம்மாள் துணிமணிகளை மூட்டைக் கட்டத் தொடங்கினாள்.

இந்தச் சேதி பொன்னியம்மாளோட தம்பிகளுக்கு எப்படியோ தெரிஞ்சுப்போச்சு. குடும்பத்தோட கிணத்துல குதிச்சி, சாகப் போறவங்கள காப்பாத்தறவங்க மாதிரி அம்மாக் கிட்ட ஓடினார்கள் தம்பிகள்.

"அடிப்பாவி மக்க... அப்பிடியா சேதி" என்று குதித்தாள் அம்மா. இத்தனைப் பஞ்சத்திலும் அவளோட துடுக்கு மட்டும் குறையவே இல்லை.

"நீங்களும் நானும் சொன்னாவா அந்த ராங்கிக்காரன் கேக்க போறான்... அய்யோ என்னடா பண்ணுவேன்!"

"எம் பொண்ணையும் புள்ளைங்களையும் கப்பல் ஏத்தி எங்க கொன்னும்போய்த் தள்ளப் போறானாம் பாவிபய" மூக்கைச் சிந்தி முந்தானையால் துடைத்துக் கொண்டாள். அவளது ஒப்பாரி சேரி முழுக்கக் கேட்டது.

"டேய்! ஒரு யோசனை, ஓட்டமாப் போய் பண்ணைக்கார

அய்யாகிட்ட சொல்லிப் புடுங்க. அந்தாளுக்கு மட்டும்தான் அவன் பயப்படுவான். ''ஓடுங்க... ஓடுங்க'' என்று பிள்ளைகளை விரட்டினாள்.

அம்மாவின் வார்த்தையை தூக்கிக்கொண்டு ஒரே ஓட்டமா ஓடி பண்ணை வீட்டு முன்னாடிப் போய் நின்னாங்க முருவனும், பாவாடையும்.

பொன்னியம்மாள் தம்பி முருவனுக்கு அக்கா ஊரை விட்டே போயிடப் போறாளேன்னு வருத்தம். எப்படியாவது தடுத்து நிறுத்திப்புடலாம் என்ற நப்பாசையில் கலங்கிய குரலில் கத்தினான்.

''சாமி... சாமி... கொஞ்சம் வெளியே வாங்க!''

''யார்டா அது. என்னடா வேணும்?'' என்று கேட்டுக் கொண்டே பண்ணையார் வெளியே வந்தார்.

அவர் தலையில் எண்ணெய்ப் பளபளத்தது. தொப்பைத் தள்ளிக்கிட்டுக் கிடந்தது. கண்ணு ரெண்டும் கோவப் பழமாட்டம் செக்கச் செவேல்னு குப்புனு ஒரு குளுகுளு வாசனை என்னமா இருக்குது.

''டேய், தூரப் போங்கடா!'' எந்த நாற்றமும் வரவில்லை யென்றாலும் அவர் மூக்கைப் பொத்திக் கொண்டார். அது அவர் வழக்கமாய்ச் செய்வது. இவங்களும் கொஞ்சம் பின்னாடி நகர்ந்து போய் நின்னுக்கிட்டாங்க.

தன்மீது தெளிக்கப்பட்டுள்ள ஜவ்வாது வாசனையை அவங்க முகரக் கூடாதுன்னு நெனைச்சாரோ, என்னவோ?

தலையைச் சொரிந்துகொண்டே வேலிக்கு வெளியே போய் நின்று 'சாமி'ன்னு கூப்பிட்டான். முருவனின் கண்களில் கண்ணீர் பூத்தது. தம்பி பாவாடை வாய் பேசாது நின்றிருந்தான். அந்தாள் எப்போதும் மௌனச் சாமியார் போலதான்.

இந்த மண்வாசனையைக் கூடப் பொறுத்துக்க முடியாத பண்ணையார் இவங்களுக்கு என்னத்தச் செய்துடப் போறார்? இந்த சாதராண விஷயம்கூடப் புரியாத ரங்கனோட மச்சானுங்க அவனையும் பாசம் என்ற பெயரில் காட்டிக் கொடுக்க வந்து விட்டார்கள்.

வெற்றிலையையும், சீவலையும் பதமா சேத்துப் பக்குவமா வாய்க்குள்ளாறத் தள்ளி ஆசவாசப் படுத்திக்கொண்டு வெளியே

வந்தார் பண்ணையார்.

"டேய் என்னங்கடா?"

இதுவரை அவர்களின் கையில் தொங்கிக் கொண்டிருந்த அழுக்குத் துண்டு இப்போது இடுப்பில் ஏறிக்கொண்டது. கை கூப்பியது முதுகு வளைந்தது.

"சாமி, எங்க மாமா குடும்பத்தோட கப்பலேறி சீமைக்குப் பஞ்சம் பொழைக்கக் கிளம்பறாங்க சாமி" இது பாவாடையோட வழக்கத்துக்கு மீறய பதற்றமான குரல்.

"ரங்க மாமா கோவக்காரர்... நீங்கதான் சொல்லி அவரைத் தடுக்கணும். மனசு வையுங்க சாமி" என்று குப்புற விழுந்தான் முருவன்.

"என்னடா புதுக் கதையா இருக்குது. அந்தப் பயலுக்கு என்ன கிறுக்குப் புடிச்சுப் போச்சா... மானங்கெட்டவனுங்க. அந்த வெள்ளைக்கார நாயிங்க நம்மள அடிமையாக்கினது போறாதுன்னு இந்த வேலைய வேற பண்றாங்களா. டேய், இந்தச் சொந்த மண்ணுலயாவது கொஞ்சம் கௌரவமா, சுதந்திரமா இருக்கீங்க. சொல்றவ பேச்சு கேட்டுக்கிட்டு பஞ்சம் பொழைக்கப் போறன்னு கௌம்புனா அதோ கதி தான். பஞ்சம் பொழைக்கப் போறானுங்களாம் மானங்கெட்ட பயலுவ. மவன... தண்ணி–யில்லாக் காட்டுல கொன்னுப்போய்த் தள்ளி நாயாட்டாம் வேலை வாங்கி கடல்ல தள்ளிப் போடப் போறான்" என்று எகிறினார் பண்ணை.

"ஐய்யய்யே... சாமி இவ்ளோ நடக்குமா?" மச்சான்மார்களுக்குக் குலை நடுங்கியது. "சாமி... நீங்கதான் அவரை தடுத்துவிடணும். உங்க பேச்சை மாமா தட்டாது" என்று நா குழறினான்.

"சரி, நான் கூப்பிட்டேன்னு அவன்ட்ட போய்ச் சொல்லுங்க! நான் பேசிக்கறேன்."

"ஐயா, நாங்க போய்ச் சொன்னா ஏதோ கலகம் பண்ணிட்டதா எகிறுவாறு. நீங்களா தெரிஞ்சுகிட்டுத் தடுக்கறா மாதிரி ஏதாவது வழி பண்ணுங்க சாமி"

பண்ணையார் யோசித்தார்.

"சரி நீங்க போங்கடா நா பாத்துக்கறேன்"

அவங்க ரெண்டு பேரும் மாயமா மறைஞ்சுப் போனாங்க. வேற பயல் எவனா தொலைஞ்சி போனா விட்டுத் தொலைச்சிடலாம்.

ரங்கன் நிலத்தை மணிமாதிரி பார்த்துக்குவான். இவ்வளவு அவ்வளவு என்று வாய்த் தொறக்க மாட்டான். மாடா ஒழைக்கறவன். இவன விட்டுட்டா போச்சு. இவன் வாலைப் புடிச்சுக்கிட்டு ஒவ்வொருத்தனா ஓடிப் போவானுங்க என்று தோன்றியது நிலத்துக்காரருக்கு.

"டேய் செங்கா" என்று குரல் கொடுத்தார்.

தூரத்தில் வேலியோரமாய்த் தென்னங்கன்றுக்குப் பள்ளம் போட்டுக் கொண்டிருந்தான். காது கொஞ்சம் மந்தம். தீவிரமாய் வேலை செய்து கொண்டிருந்தான். கடப்பாறையைப் பலம்கொண்ட மட்டும் நிலத்தில் பாய்ச்சிப் பள்ளம் பறித்துக் கொண்டிருந்தான். வியர்வைத் துளிகள் நிலத்தில் விழும் முன்னே ஆவியானது.

"டேய் செங்கா" என்று மீண்டும் அழைத்தவர், உடன் சேர்த்து ஆபாசமான வார்த்தையால் கூப்பிட்டார்.

கடப்பாறையைப் போட்டுவிட்டு, குதிரையோட்டமாய் ஓடி வந்தான்.

"காதுல எந்தச்... சிரிக்கி குரல் கேக்குதுடா தடிப் பயலே நான் கூப்பிடறது கேக்கலையா? போடா... போய் ரங்கன வரச் சொல்லு. வெள்ளைக்காரக் கப்பல்ல போயி பெரிய தொரையா–யிடலாம்னு கனவு காண்றானுவ, பொறுக்கி தே... பயலுங்க" தூ'வென்று துப்பினார்.

செங்கேணி ரங்கனைப் கூப்பிடப் போனான். ரங்கனோட குடிசையில் ஒரே களேபரமாய் இருந்தது.

அம்மா அழுது ஒப்பாரி வச்சுக்கிட்டு இருந்தாள். "எப்பா உன் கால்ல விழுந்து கேக்கிறேன்... எம்பொண்ணு புள்ளைங்கள இங்க வுட்ருய்யா. என் சொத்தல்லாம் அவளுக்குத்தான். எங்கயும் போயிடாதீங்க ராசா" என்று கதறினாள்.

மிரண்டுபோய் நின்று கொண்டிருந்த பிள்ளைகளை இழுத்து மார்போடு அணைத்து அழுது புலம்பினாள். "இந்த வானம் மனமிரங்காமலா போயிடும்... காலம் மாறிடும் சாமி. எங்கள வுட்டுட்டு எங்கயும் போகாதிங்க என் கண்ணுங்களா..." அம்மாவுக்குத் தொண்டை வரண்டு போனது.

ரங்கனுக்குக் கோபம் தலைக்கேறியிருந்தது. ஆனாலும் அவனுக்கு நிலைமை புரியாமலில்லை. மனதுக்குள் அவனும் வேதனைப்பட்டான்.

"இங்கேயே இருந்தா என் கண்ணு முன்னாடியே எம் புள்ளைங்களும், பொண்டாட்டியும் குழிக்குள்ளாரப் போவ வேண்டியதுதான். ஓழைக்க வழியிருக்குற எடத்துக்குப் போறோம்.

எங்கள வுட்றுங்க, நாங்க எங்கயாவது போய்ப் பொழச்சுக்கறோம். இவ்வளவு காலமா ஒழச்சு என்னத்த கண்டோம் இந்த பூமியில, ஈனசாதிப் பறையன்ற பேரத் தவிர...

ஊர்க்காரங்கக்கிட்ட என்னதான் இல்ல... இந்தான்னு தூக்கிப் போட எவனுக்காவது மனசு இருக்குதா? இம்மா காய்ச்சல்லயும் கம்பும், கேழ்வரகுமா மூட்டை மூட்டையா இருக்குதே எவனையாவது ஒரு படியளக்க சொல்லுங்க பாப்பம். உம்.. இங்க கெடந்து இவங்களுக்கு ஒழச்சி ஓடா போறத விட வெள்ளக்காரன் கப்பல் வுட்றானாம். பணம் எதுவும் இல்லை. எப்படியோ போய்ப் பொழச்சுக்கறோம். வூடு, பண்டபாத்திரம் எல்லாம் இருக்குது, எடுத்துக்குங்க. பூமியும் இருக்கு. பயிர் வச்சுக்கோங்க. எங்கள வுடுங்க"

ரங்கனோட பேச்சு தீர்மானமாக இருந்தது. இனி அவனைத் தடுக்க முடியாது என்பதைப் பொன்னியம்மாளோட தம்பிகள் புரிந்து கொண்டார்கள். பொன்னியம்மாள் கேவிகேவி அழுதாள். தம்பிகளையும் ஆத்தாளையும் பார்க்கும்போது அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அம்மாவுக்கு உடம்பு ஒரு குலுங்குக் குலுங்கியது. ஓ'வென்று கத்தி பொன்னியம்மாளைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள்.

"நா பெத்த மவளே" அவளோட உச்சந்தலையும் முகமுகமா மாறி மாறி முத்தமிட்டாள்.

"குழந்த மறவன்தாங்கலுக்கு ஆளு அனுப்பியிருக்கேன். பெரியத்தம்பி வந்திடுவான். ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிடுடி என் ராசாத்தி நீ கலங்காதடி..." என்று மகளைத் தேற்றிவிட்டு அவள் கதறினாள்.

"மாமா பெரியண்ணா வந்துரும். அது வந்த பொறவு போங்க. ஆத்தா ஆளு அனுப்பிருக்குது. நாங்க எல்லாருமா சேர்ந்து உங்கள ஒரு முறை பார்த்துக்கறோம்" பாவாடை இப்படிச் சொன்னதும் எல்லாருமா சேர்த்து அழ ஆரம்பித்து விட்டார்கள் பேசாதவன் கூடப் பேசினான்.

ரங்கனும் லேசாய்க் கண்கலங்கினான். இதையெல்லாம் பார்க்கக் குடுத்து வைக்காத செங்கன் அப்போதுதான் வந்து சேர்ந்தான்.

''ரங்கண்ணா, பெரியப்பா உன்ன கூப்புட்டாரு'' சிரிப்பூட்டும் கீச்சுக் குரலில் சொன்னான். வேற சமயமா இருந்தால் அவனைச் சீண்டி வம்புக்கு இழுத்து நையாண்டி செய்திருப்பார்கள்.

''சரி, நான் வர்றேன்னு போய்ச் சொல்லு'' என்று ரங்கன் சொன்னது செங்கனுக்கு ஒரு மாதிரியா இருந்தது. ரங்கன் எப்போதும் இப்படி மரியாதைக் குறைவா பதில் குடுக்க மாட்டான். கூப்பிட வந்தவங்களுக்கு முன்னாடி ஐயா முன் போய் நிற்பான். செங்கன் அப்படியே நின்று விட்டான். அவனுக்குக் கூட என்னவோ உறைத்தது.

''சரி, நான் போய்ப் பார்த்துவிட்டு வர்றேன்'' ரங்கனோட நடையில் ஒரு தீர்மானம் இருந்தது.

மச்சான்கள் இருவருக்கும் நல்லா தெரிஞ்சுப் போச்சு. இனி ரங்கன நிறுத்தி வைக்க முடியாது. அவன் மனசுல தீர்மானம் போட்டா போட்டதுதான்.

எப்படியோ போற இடத்துல குறைவு எதுவும் இல்லாம நல்லா இருந்தா போதும் என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டார்கள். வேறு வழியில்லை என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அம்மா மட்டும் இன்னும் அழுகையை நிறுத்தவில்லை. மருமவன் மனச மாத்திக்கிட்டா கிடா வெட்டுறேன்; கோழி கொடுக்கறேன்னு பிராத்தனை நடத்திக்கிட்டிருந்தாள். பத்தே நிமிடத்தில் பதினைந்து தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் வேண்டுதல்கள் வைத்தாள்.

அன்னைக்குப் பார்த்து வானம் மந்தாரமாய் இருந்தது. தோட்டத்தில் ஆசாரி ஏர்க்கால் செதுக்கிக் கொண்டு இருந்தான். தூரத்தில் தென்னந்தோப்பு தெரிந்தது. பெரும்பாலும் தீய்ந்து போய் மொட்டையாகிப் போனதுதான். வற்றிப் போன ஓடைப் பக்கமாய் முதலாளி கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

ரங்கன் வருவதைப் பார்த்து விட்டவர் குதப்பிய எச்சிலைத் துப்பி வாயையும் நாக்கையும் தயார்படுத்திக் கொண்டார்.

ரங்கன் மனசைத் தயார்படுத்திக் கொண்டு போனான். நரித்தனமான பேச்சு எதுக்கும் அசையறது இல்லன்னு மனசுக்குள் முடிவு கட்டிட்டான்.

பட்டினிச் சாவுகள் அவன் மனத்தை இரும்பாக்கி இருந்தன. பஞ்சம் அவனுக்கு நிறைய விஷயங்களைப் புரியவைத்தது.

"இன்னாடா ரங்கா தொர மாதிரி நடந்து வர்ற, கப்பல்ல ஏறிட்டவன் மாதிரி?" என்று ஏளனமாய்க் குரல் கொடுத்தார் பண்ணையார். ரங்கன் நடையிலும் ஒரு வீராப்பான விறைப்பு இருக்கத்தான் செய்தது.

"அப்படில்லாம் ஒண்ணும் இல்லைங்க சாமி" என்று பழக்கத்துல முதுகை வளைத்தான். "கேள்விப்பட்டனே அதெல்லாம் நெசமா" என்றார்.

"உண்மைதானுங்க. புள்ள குட்டிங்கள வச்சுக்கிட்டுச் சிரமமா இருக்குது சாமி, உங்களுக்குத் தெரியாததா கூழ விடுங்க குடிக்க தண்ணி கெடைக்கலிங்க சாமி"

"தெரியும்டா. நீ மட்டுமா கஷ்டப் படற, எல்லாத்துக்கும் சேர்த்துதானே கஷ்டம்? ஊரை விட்டுப் போயிட்டா மட்டும் கஷ்டம் போயிடுமா? அவ கண்ணு வக்கணும்டா ஊர்ல என்ன குத்தம் நடந்துச்சோ, வானம் மனசு வக்கல. கிடா கோழின்னு பலி போட்டு ஆத்தா மனசு குளுரவச்சா வானம் தானா கண்ண தொரந்துட்டுப் போவுது. இதெல்லாம் நம்ப கையிலயா இருக்குது? ஆத்தா கண் தொறக்கணும்டா! ரங்கா என்ன நான் சொல்றது மடையனாடா நீ. புரிஞ்சு நடந்துக்கோ. போடா போய் ஆவுற வேலையைப் பாரு. போ.. போ..."

"டேய்ச் செங்கா இவனுக்கு நாலுபடி நெல்லு குடுத்து வுட்றா" என்று முடித்துவிட்டு வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவினார்.

ரங்கன் நின்றுகொண்டே இருந்தான். எந்த ஏமாத்துப் பேச்சுக்கும் அசையறதில்லைன்னு முடிவு பண்ணிட்டுத் தானே வந்தான்.

"என்னடா... போய் வாங்கிக்கோ, எல்லாம் சரியாப் போயிடும். போ..." என்று பெரிதாய் ஒரு ஏப்பம் விட்டார்.

"இல்ல சாமி... நான் போறதுன்னு முடிவாயிடுச்சு. இங்க கெடந்து சாவுறத வேற எங்கனாச்சும் போய்ச் சாவறோம்... என்னோட பங்காளி பட்டணத்துல துரைகிட்ட வேலை பாக்குறான், உங்களுக்குத் தெரியுமே.." என்று இழுத்தான்.

"சொல்லு! ஊர்ப் பக்கம் தலை வைக்காதபடி துரத்தியடிச்சமே தேவ..." என்று பற்களை நெரித்தார். பண்ணையார் வாயிலிருந்து இன்னும் என்னன்னமோ வசைச் சொற்கள் வந்து விழுந்தன.

"அவன் கடுதாசி போட்டான். நாளைக்கு மறுநாள் கப்பல் கெளம்புதாம். உங்க புண்ணியத்துல எங்கயாவது போய்ப்

பொழைச்சுக்கறேன்'' என்றபடி கை கூப்பினான்.

வெற்றிலை எச்சிலைக் காறி உமிழ்ந்தார்.

''நன்றி கெட்ட நாய்களா... உங்கள மாதிரி திருட்டுப் பயலுங்களாலதான் வானம் பெய்யமாட்டேன்னுது. மத்தவனுக்குத் தர்றதவிட உனக்கு எல்லாமே கொஞ்சம் ஏத்தித்தானடா கொடுப்பேன். ஏதோ பூமி வறண்டு போச்சு. நாளானா எல்லாம் சரியா போயிட்டுப் போவுது. அந்தத் துட்டுக்கும் துணிக்கும் மதம் மாறின பசங்க பண்ற வேலையிது. வீணா கெட்டுப் போவாதே போ... போய் வேலையப் பாரு. உன் பொழப்புக்கு நான் வழி பண்றேன்.''

''இல்ல சாமி, நான் முடிவு பண்ணிட்டேன்'' ரங்கனோட குரல் தீர்மானமாய் வந்தது.

''எலேய், என்ன நான் சொல்லிக்கிட்டு இருக்கேன், சுத்த ரோசங் கெட்ட பயலா இருக்கியேடா. கொடியேத்தி மிட்டாய் கொடுத்தப்ப வந்தே மாதரம்... வந்தே மாதரம்னு கோஷம் போட்டியே சுதந்திரம் கிடைச்சா இந்த பூமியிலகூட பொன்னு விளையும்டா. அப்ப பார் தங்கத்தைக் கட்டிகட்டியா கப்பல்ல ஏத்திட்டுப் போய் அதே வெள்ளைக்காரங்கிட்ட வித்துட்டு வருவோம். அதைக் கெடுக்கத்தான் இந்த வெள்ளைக்காரங்க அப்பாவி சனங்களைக் கொண்டுபோய் கடல்ல தள்ளப் போறானுங்க. இதெல்லாம் உனக்கு எங்க தெரியப் போவுது'' என்று சலித்துக் கொண்டார். ''புத்தி வேணும்டா'' என்று மண்டையில் தட்டிக் காண்பித்தார்.

ஆமா! இப்பவும் தங்கம் வெளையத்தான் செய்யுது. எல்லாம் உன்னோட பெட்டிக்குத்தானே வருது. எங்களுக்கு எப்பவும் பஞ்சம்தான். என்ன! இப்ப கொஞ்சம் கூடுதல். ரங்கன் மனதில் இப்படி ஓடியது இதையெல்லாம்போய் முதலாளிகிட்ட சொல்லமுடியுமா?

ரங்கன் தன்னோட முடிவை மாற்றிக் கொள்வதாயில்லை. ''டேய் உன்னோட உடம்புல சொரணை உள்ள ரத்தம் ஓடுதுன்னா இங்கேயே இருந்து பாடுபடு. நான் உனக்கு வழி காட்றேன். மானங்கெட்ட பயலா என் கண்ணு முன்னாடி நிக்காதே. போய் அந்த வெள்ளைக்காரன் கப்பல் ஏறி கண்காணா தேசத்துல போய் அடிமையாச் செத்துப்போ'' என்றபடி எழுந்து போய்விட்டார்.

அவருக்கு நெஞ்சு கொதித்தது. 'இங்க மட்டும் என்ன

வாழுதாம்... இங்கேயும் அடிமை... அடிமை தான்' என்று அவன் மனசாட்சி சொன்னது.

இடுப்பில் இருந்த துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு நடந்தான். நடையில் ஒரு மதப்பு தெரிந்தது. யாராலும் தடுக்க முடியவில்லை. அவன் மூட்டையைக் கட்டிக்கொண்டு சீமைக்குப் பஞ்சம் பொழக்கக் கிளம்பின கும்பலோடு சேர்ந்து கொண்டு கிளம்பிவிட்டான். அவனை வழியனுப்புவதைத் தவிர உறவுக்காரர்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

ரங்கன் ஊரை விட்டுபோய் ரெண்டு நாள் கழிச்சு பொன்னியம்மாளோட மூத்த தம்பி கோபால் ஊர் வந்து சேர்ந்தார். பொஞ்சாதியோடு மாமியார் வீட்டுக்குப் போனவர் இப்படித் தனிக்கட்டையா வந்து நின்னதைப் பார்த்ததும் ஆத்தாளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஏற்கனவே வீடு கலவரக்காடாய் இருந்தது. ஆத்தாவோட முகமெல்லாம் வீங்கி கன்னிப் போய் கிடந்தது. கோபாலைப் பார்த்ததும் மூக்கைச் சிந்தி எதிரே தூக்கியெறிந்தாள். அவளுடைய மன நிம்மதியும் அதனூடே போய்த் தொலைந்ததுபோல் கையைக் காற்றில் அலையவிட்டு ஈனக் குரலில் ஓலமிட்டாள்.

"டேய் கோபாலு... உன் மாமங்காரன், பொண்டாட்டி புள்ளங்கிள கூட்டிக்கிட்டு எங்கேயோ போயிட்டான்டா பாவி" என்று வேதனையும் கண்ணீருமாய்த் தரையைப் பிராண்டினாள். திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவள் போல், "சரி ஓம் பொஞ்சாதி எங்கடா?" என்று சுற்றிலும் பார்த்தாள்.

கோபால் எங்கேயோ வானத்தைப் பார்த்தபடி, "செத்துப் போயிட்டா" என்றார். என்னடா கோபாலு... என்னடா சொல்ற!" அவளுக்கு வார்த்தையே வரவில்லை.

"எம்மா எதுக்கு அழுது அரற்ற? பணம் எதுனாச்சம் இருந்தா குடு, நான் பட்டணம் போய் ஏதாவது வேலை பார்த்துக்கறேன்" என்று தலையைச் சொரிந்துகொண்டு நின்றார்.

"பட்டணம் போறீயா... என்னடா சொல்ற?"

அம்மா காயம் பட்ட இதயத்துல யாரோ கடப்பாறை செருகியது போல் அலறிக் துடித்தாள். "டேய்... டேய் பாவிமக்க எந்தப் பாவி முண்ட கண்ணுபட்டதோ... குடும்பமே பொரிகல்லையா பறக்குதே! எல்லாம் போச்சு.. போச்சுடா... போச்சு!"

அவளுக்குப் பித்து பிடித்து விட்டதுபோல் சாணம் மொழுகிய

தரையில் விழுந்து புரண்டாள். அவளுக்கு யாராலும் ஆறுதல் சொல்ல முடியலை.

பட்டணம் கிளம்பிய கோபாலை தம்பிகளாலும் அம்மாவாலும் தடுக்க முடியவில்லை.

கோபால் ஒரு கோபக்கார மனுசன். பொஞ்சாதியோடு மாமியார் வீட்டுக்குப் போனவர் அங்க என்ன நடந்துச்சோ, நீயாச்சு உன் உறவாச்சின்னு அறுத்துக்கிட்டு தனியா வந்த மனுசனுக்கு மனசு பேயாட்டம் ஆடியது. அக்காளும் எங்கயோ கண்காணா தேசம் போயிட்டா. கோபாலுக்கு என்னவோ போல இருந்தது.

மெட்ராஸ் போவணும்ன்ற முடிவு பண்ண கோபாலுக்கு யாருகிட்ட எவருகிட்ட போறதுன்னு யோசனை. ஒரு யோசனை ஏற்கனவே பட்டணம் போய் பொழப்ப பார்க்குற மாமன் முனியன்கிட்ட போயிடறதுன்னு முடிவு பண்ணி கையில் கிடைத்த சில்லறைகளோடு மெட்ராஸுக்கு நடையைக் கட்டிட்டார்.

அம்மாவால் தடுக்க முடியவில்லை.

⊙⊙⊙

அடிமைகளின் தேசத்தில் ஆர்ப்பாட்டமாய்ப் பறந்து கொண்டிருந்தது வெள்ளையனின் கொடி. ஐரோப்பியப் பாணியில் கற்கள் பாவப்பட்ட சாலைகள் வரிசை வரிசையாகப் பெரிய செந்நிறக் கட்டிடங்கள் பெருந்தூண்கள் அமைந்த வெள்ளைக் கட்டிடங்கள் கோபாலுக்குப் பிரமிப்பைத் தந்தன.

துறைமுகக் கப்பல்கள் எப்போதாவது பெருத்த குரலெடுத்துக் கத்தும். வெள்ளையரைச் சுமந்த மோரிஸ், ஃபோர்டு கார்கள் அவ்வப்போது சாலையில் போய் வந்து கொண்டிருந்தன. ஒன்றிரண்டு கை ரிக்ஷாக்களில் வட இந்தியர்களும் முகமதியரும் போய்க் கொண்டிருந்தனர். பார்ப்பனர்கள் கை ரிக்ஷாக்களில் ஏறுவது மிக அரிது. பெரும்பாலும் பழந்தமிழர்கள்தான் வண்டியை இழுத்தார்கள்.

"பட்டணம் இவ்வளவு பிரமாண்டமானதா!" கோபால் வியந்து போய்ப் பார்த்து மிரண்டு போயிருந்தார். விதவிதமான புதிய முகங்கள் பார்க்க ஆசையாகவும், ஆச்சரியமாகவும் இருந்தன.

ஒருநாள் மாலைப் பொழுதில் களைத்துப் போய் மாமன் முனியனின் குடிசைக்கு முன்பாக நின்றபோது அஞ்சலைக்குச் சரியாக அடையாளம் தெரியவில்லை. அப்போதுதான் வீடு

திரும்பியிருந்த முனியன், கோபாலைப் பார்த்ததும் அப்படியே சேர்த்துப் பிடித்துக்கொண்டார். அவர் மீது சாராய வாடை வீசியது. அஞ்சலைக்குப் புரிந்து விட்டது. பாரேன் புள்ளய அடையாளம் தெரியல. இருட்டுல யாரோ... எவரோன்னு நெனச்சிட்டு அவள் நொந்துகொண்டாள்.

"இன்னாடா, ஊர்ல எல்லாம் எப்படி. மாமா, அக்கால்லாம் நல்லா இருக்காங்களா? உம் பொஞ்சாதிக்காரி எப்படி, எதுனாச்சம் உண்டா?"

முனியன் சிரித்தான். கோபால் உம்மென்று உட்கார்ந்து கொண்டிருந்தார். "என்னடா மச்சா... நான் பேசிக்கிட்டிருக்கேன். நீ வாயே தொறக்க மாட்ற?"

"என்னடா எதாச்சும் துக்கம் சொல்ல வந்தியா?" என்று அஞ்சலை கேட்டாள். முனியன் திடீரெனப் பதறினார்.

"சும்மா இருடீ... மச்சான் என்னமோ வெசனமா இருக்குறான். போட்டு உருட்ற" அவர்கள் முகத்தில் வெளிச்சம் படும்படி சிம்னி விளக்கைத் தள்ளி வைத்தாள். கோபாலின் முகத்தில் கலக்கம் தெரிந்தது. முனியன் போதையற்று இருந்தார். அவர் திரும்பவும் சாராயக்கடைக்குப் போகும் நேரம் இது.

"என்னடா மச்சான் ஒண்ணும் வெசனப்படாதே... சொல்லு மாமன் கேக்கறன்ல"

"என்னத்தச் சொல்ல, ரங்க மாமா அக்காவையும், புள்ளங்களையும் இட்டுக்கினு சீமைத் தோட்டத்துல வேலை செய்யப்போறன்னு போயிட்டாரு. எனக்கும் அங்க ஒண்ணும் புடிபடல. நானும் இங்க வந்துட்டேன்."

"சரி வுட்ரா ரங்கன் வெவரமானவன் தானே. ஒன்னும் கவலப்படாதே எல்லாம் நல்லா தான் இருப்பாங்க, எவ்ளோ காலந்தான் ஆண்டைகளோட எச்சில துன்னுகினு சேறு சகதில பொறண்டு, பத்தாக் கொறைக்குச் சாணிப்பாலு, சாட்டையடிய வாங்கறது. காலம் மாற... மாற நாமளும் மாறத்தானே வேணும். இவ்ளோ காலம் மாடா ஒழைச்சி நம்ம சனம் என்னத்தக் கண்டுச்சி. போ... அவன் எங்கயாவது போவட்டும். இவனுங்கள வுட்டு நாம ஒழிந்தா சனிய நம்மளவுட்டு ஒழிஞ்ச மாதிரி. நீ ஒன்னும் கவலப்படாத. தம்மானமும், பொழைப்பும் நடக்குற எடம் தேடி ஓடட்டும் உட்றா மச்சா.. ஊற விட்டு வந்து நான் இன்னா நாறியா போயிட்டன்"

அஞ்சல சோறும் கறியும் கொண்டு வந்து வைத்தாள். கோபாலுக்கு நல்ல பசி. சாப்பிட உட்கார்ந்துவிட்டார். ஆனால், சாப்பாட்டில் கை போக மறுத்தது. "என்னடா மச்சா வெசனத்த வுட்றா. நாலு நாள் பட்டணத்தச் சுத்திப் பாரு. பீச்சில போய் நடந்துட்டு வா... எல்லா சரியாப் போவும். ஊம்.. பொஞ்சாதிக்காரி ஊர்ல உன்ன நெனச்சிப் பதறிக்கிட்டு கெடப்பா. நாளான பின்ன எல்லா சரியா போவும்டா. நீ சாப்புடு" முனியன் பேசப் பேச... கோபால் சாப்பாட்டுத் தட்டைத் தூரத் தள்ளிவைப்பவர் போல இருந்தார்.

அஞ்சலை சிம்னி விளக்குத்திரியை ஏற்றினாள் குடிசைக்குள் ஒளி பரவியது. கோபாலின் முகத்தில் ஏகப்பட்ட கலவரம் வெடித்துக் கொண்டிருந்தது. முனியன் ஒரு பீடியை உருவிப் பற்ற வைத்தார். பீடியின் புகை நெடியில் முனியன் லேசாக இருமித் தொண்டையைச் செருமினார். கோபால் திடீரென ஏதோ பேசமுயல்வது போல் முனியனை உற்றுப் பார்த்தார்.

"என்னடா எதனாச்சும் மனசுல இருந்தா சொல்லுடா"

விருந்தாளி ஏதோ கலவரத்துடன் இருப்பதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது.

"எனக்கு எதாவது வேல பாரு. நான் இங்கேயே இருந்துக்கறன்"

முனியன் கோபாலைக் கூர்ந்து பார்த்தார். என்னமோ முடிவோட தான் வந்திருக்கிறான் என்பது தெரிந்தது.

"கோபாலு ஒன்னும் கவலப் படாத, மாமன் நா இருக்கறேன் சாப்புட்டு நிம்மதியா தூங்கு. காலைல பேசலாம்" எழுந்து வந்து சாப்பாட்டுத் தட்டைக் கோபால் பக்கமாத் தள்ளி வைத்தார்.

பிறகு அஞ்சலையிடம் ஏதோ குசுகுசுத்தவர், சாராயக் கடைக்குப் கிளம்பிப் போய்விட்டார். குடிசைக்கு வெளியே பாயப்போட்டு ஒரு கந்தல் மூட்டையைத் தலையணைக்குப் போட்டாள். களைப்பும் நல்ல சாப்பாடும் கோபாலைத் தூக்கத்தில் தள்ளியது.

"பட்டணத்துல என்ன வேலைக்கா பஞ்சம்? பத்து கம்பெனிக்கு நான் மேஸ்திரி. எனக்கும் உன்னப் போல ஒருத்தன் வேணும்னு தானடா நானும் மனசுல எண்ணம் வச்சிருந்தேன். நல்லதாப் போச்சு மருமவனே வந்து சேர்ந்துப்புட்டான்"

முனியன் முழு திருப்தியோட சாராயத்த உள்ள இறக்கினார். போத அதிகமாயிடுச்சி "மாப்ள... மாப்ள..." என்று உளறினார்.

சாராயம் விக்கற குயிலம்மா எரிச்சலடைந்தாள். ஆள வீட்டுக்கு அனுப்பினாதான் வேலை நடக்கும் என்று நினைத்தவள் ஒரு ஆளப் புடிச்சி, "முனிய மாமாவ கொண்டுபோய் வூட்ல உட்ருப்பா" என்று சாராயத்தக் கடன் கேட்டு வந்தவனுக்கு உத்தரவு போட்டாள்.

பாவம் அவன் தலையாட்டிக் கொண்டு முனியனைக் கைத் தாங்கலாகப் பிடித்தான். அவன் கையை உதறினார்.

"வா, மேஸ்திரி வூட்டுக்குப் போகலாம்" போலீஸ் வர நேரம் அவன் அடக்கமாகப் பேசினான்.

"த... தபார் குயிலு இவனுக்குக் கொஞ்சம் ஊத்து. நா துட்டு தரேன்..." குடிக்கிற சொகம் குடிகாரனுக்குத்தான் தெரியும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். "போ... போடா வாங்கிக் குடி போ... நா போயிக்கிறேன்" முனியன் தள்ளாடியபடி தானே எழுந்து போய் விட்டார்.

மறுநாளே முனியனுடன் வேலையிடத்துக்கு போன கோபாலுக்கு. நம்ப மாமனா இத்தன கம்பெனிக்கும் மேஸ்திரி! பிரமிப்பாக இருந்தது, முதல் நாளே வேலையில் இறங்கிட்டார்.

"ஒரு ரெண்டு நாளு நின்னுப் பாருடா. அப்புறம் உனக்கு வேலை எப்படின்னு தெரிஞ்சிப் போவும்" என்று சொல்லி வைத்தார் முனியன்.

கோபாலு அன்னைக்கே மூட்டையத் தூக்க ஆரம்பிச்சுட்டார். அன்னைக்குப் பாத்து நாலு கடையிலயும் இருட்டற வரைக்கும் வேலை. கூலி பிரிக்கும்போது ஒவ்வொருத்தர் கையும் இருவது ரூபா.

கோபாலுக்கு நம்ப முடியல ஒருநாள் கூலி இவ்ளோன்னா. ஒரு மாசம் சம்பாதிச்சா ஊர்ல ஒரு ஏக்கரா நெலம் வாங்கலாம் போல இருக்குதே. கோபாலின் மனம் கணக்கு போட்டது.

ஆளுங்கிட்டயும் நல்லாசுமுகமானபழக்கம். எல்லார்கிட்டயும் சிரிச்சி கலகலப்பா பேசி எப்படியோ அந்தக் கூட்டத்துல ஒருத்தரா மாறிட்டார். ஆனா கணக்குல கறார் பேர்வழி. வெத்தல, பீடி, சாராயம் ஒரு பழக்கம் இல்ல. சுத்தமான கிராமத்து மனுசனா இருந்தார்.

பட்டணம்வந்ததுலரொம்பதிருப்தியாகஇருந்தது. ஊருலஅம்மா தம்பிகளோட நெனப்பு வந்தது. இடையே சீமைக்குப் போய்விட்ட அக்கா பென்னியம்மாள் குடும்பத்தை நெனச்சிக்கிட்டார்.

பட்டணம் வந்த நாமளே இவ்ளோ சம்பாதிக்கறம்னா சீமைக்குப்போன மாப்ள நல்லாதான் சம்பாதிச்சித் அக்கா புள்ளைங்களப் பார்த்துக்குவார் என்று மனசுக்குள் திருப்திப் பட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு நாளும் வேலையிடத்துல முன்னேறிக் கொண்டிருந்தார். கைக்குத் தோதான ஆள் கெடைச்சதுல முனியனுக்கும் பரம திருப்தி. கழனி வேலைக்குப் பழக்கப்பட்ட கோபாலின் மூளையும் உடம்பும் முதல்ல கொஞ்சம் தயங்கினாலும் உடல் உழைப்புத்தானே, சீக்கிரமே வேலைக்குப் பழகிவிட்டார்.

''டேய்ப் பாத்துடா, கைய கால ஒடச்சுக்கப் போற'' முனியன் எச்சரிக்கைக் குரல் கொடுப்பார்.

முனியன் காக்கி நிசார், காக்கிச் சட்டையில போலீஸ்காரனே தான். அவர் மீசைய முறுக்கி அது மேல இரண்டு எலுமிச்சைப் பழத்தை வைக்கலாம். கம்பீரமான மனுசன். மனசு சுத்தத் தங்கம் அப்படித்தான் பலரும் பேசிக் கொண்டார்கள்.

கிராமத்துல இருந்து திடுதிப்புனு வந்து நின்னுக்கிட்டு பொழப்பு கேட்ட கோபாலுக்கு வழிகாட்டுன மவராசன். சும்மாவா? சொந்த அக்கா மவனாச்சே. கூட இருந்த ஆளுங்க வாய்த் திறந்துகிட்டு பார்க்கிறமாதிரி கோபாலு காட்ற வேகம் இருக்குதே சொல்லி மாளாது. கொம்பு, கயிறுன்னு எதுவும் தேவையில்லை. எவ்வளவு பெரிய பாரத்தையும் சுலபமா ஏத்த வழி சொல்ற அளவுக்குப் பக்குவப்பட்டாச்சு.

கூலி பிரிக்கும்போது ஆளுங்க அடக்கமா முனியன் முன்னாடி நிப்பாங்க. கொடுக்கறதை வாங்கிக்கிட்டுச் சத்தமில்லாம நகர்ந்துடுவாங்க. அப்படியொன்றும் ஆட்களின் வயிற்றில் அடிக்கிற ஆள் இல்லை என்றாலும், கோபால் சரியா கணக்கு போட்டு எண்ணி பார்த்துட்டுத்தான் நகர்வார். கோபாலின் இந்தப் போக்கு முனியனுக்கு சில சமயத்துல எரிச்சலை ஏற்படுத்தியது இவ்வளவு நாளும் அவர் கொடுக்கறததான் ஆளுங்க வாக்கிட்டுப் போவாங்க..

கோபாலு எல்லார் முன்னாடியும் கணக்குப் போட்டுக் கேட்க ஆரம்பித்தார். கூலி கொறைஞ்சா அவரால பொறுத்துக்க முடியாது. மாமன்னுக் கூடப் பாக்காம பட்டுன்னு கேட்டு விடுவார். ஒருநாள் முனியனுக்குக் கோபம் வந்துடுச்சி.

''டேய் நீயே எல்லார்க்கும் கணக்குப் பார்த்துட்றா. பாய்கிட்ட

பணம் வாங்கிக் கொடுத்துடறேன். நீயே பிரிச்சுக் கொடுத்துடு''ன்னு முனியன் ஒரு கோபத்துல சொன்னார். ஆனால், அது உண்மையான கோபமாய்த் தெரியவில்லை. என்னமோ கோபலு பொழப்புல இப்படி வளர்ரது முனியனுக்கு உள்ளூர சந்தோசந்தான்.

இது எப்படிடா போவுது கதைன்னா! முனியனுக்கு ஒரு மகள் அதுக்கு ஒரு வழிய காட்டலாம்னு அவரு மனசுல ஒரு கோட்டை. கோபாலுக்கு ஏற்கனவே கல்யாணமானது இவருக்குத் தெரியும்தான். ஆனா, அவ கூட இவன் போய் வாழ்வான் என்ற நம்பிக்கை முனியனுக்குப் போய் வெகு நாட்களாகிவிட்டது.

டேய், போய் பொண்டாட்டியக் கூட்டிட்டு வாயேண்டா கை நிறைய சம்பாதிக்கற அத வச்சுக்சிட்டு என்னடா பண்ணப் போறன்னு பலமுறை சொல்லிப்புட்டார். கோபால் அசையறதா தெரியலை. அந்தப் பேச்சை எடுத்தாலே வேதாளம் முருங்கை மரம் ஏறினது போல் முறைப்பு. ''த... பாரு மாமா இன்னொரு வாட்டி அவளப் பத்தி எதினாச்சம் பேசினின்னா உன்னோட வூட்டுப் பக்கமே தலை வைக்க மாட்டேன். ஆமா... நான் தான் அறுத்துவுட்டுட்டேன்னு சொல்றனே இனி அந்தப் பேச்சை எடுக்காதே'' என்று ஓர் எகிறு.

''சீ... நான் எதுக்குடா அந்தப் பேச்சை எடுக்கப் போறேன் ஏதோ கோவத்துல வந்துட்டான் மாசம் ஆறு ஆவுது. நாலு தரம் எடுத்துச் சொன்னா மனசு மாறி மாமா பேச்சை எடுத்துக்குவேன்னுதான் சொல்றது. நீ நல்லாயிருக்கனும்னு தானே மச்சான் நான் ஆசைப்படுவேன். கட்டினவள ஊர்ல விட்டுவிட்டு நீ இங்க எவ்ளோ சம்பாதிச்சி என்ன புண்ணியம். மாமன்காரன் இத கூடவா கேட்கத் கூடாது. நீ என்னடான்னா எமன முழுங்கி ஏப்பம் விட்டுட்டுப் பத்தாததுக்கு என்ன கேட்கறாப்பல மொறைக்கிறியே. இனி நீயாச்சு உம் பொஞ்சாதியாச்சு போடா...''

அடிக்கிற ஆள் இல்லையென்றாலும் இது நடந்ததுக்குப் பிறகு இந்தப் பேச்சை முனியன் கோபாலிடம் பேசுவதில்லை. ஆனால் வேறு ஒரு கணக்குப் போட்டார்? வயசுப் பையன் சும்மா விட்டுட முடியுமா?

நைசா பேசி தன்னோட பெண்ணைச் கட்டி வைத்து விடலாம் என்ற யோசனை தோன்றியது. ஆனால் கோபாலை நெருங்கவே முடியலை. அவர் திமிறிக் கொண்டு ஓடுற காளை மாதிரி. ஏதிரில் குண்டக்க மண்டக்கன்னு போய் நின்னா குபீர்னு பாய்ந்து விடும்

ரகம். நேரம் பார்த்துத்தான் வளைக்கணும். வளைக்கத் தோதான நேரத்தைத் தேடிக் கொண்டிருந்தார் முனியன்.

⊙⊙⊙

வேலை முடிந்து கூலி பிரிக்க சாதாரணமா இருட்டிப் போகும். கொடவுன் பக்கத்துல கிணறு பக்கத்துலயே பெரிய தொட்டி. அது நிறைய தண்ணீர் தளும்பும்.

பளு தூக்கியும் வண்டியிழுத்தும் உரமேறிப் போயிருந்த கருத்த தேகங்களில் உப்பு காய்ந்து கோடுகளிட்டிருக்கும். வேலை முடிந்ததும் தொட்டி நீரை அலுப்புத் தீர வாரி இறைத்து உடலைக் கழுவித் துண்டை உதறித் துடைத்துக்கொண்டு வருவதற்குள் முனியனும் கோபாலும் கணக்குப் போட உட்கார்ந்து விடுவார்கள். எல்லோரும் கூலிப் பணத்தை வாங்கிக் கொண்டு கடமையாய்ச் செய்யற ஒரு காரியம் கொத்தவால்சாவடிச் சந்து பயணம். ஏன்னா அங்க தான் சந்தடியில்லாம சாராயம் கிடைக்கும். சாராயம் மட்டுமா, சப்பி, கலக்கல், இன்னும் என்னவெல்லாமோ கிடைத்தது. காசுக்கேத்த சரக்கு.

முனியன் சாராயத்துல எத்தனை வகை இருக்தோ, அத்தனை யையும் ஒரு கை பார்த்தவர். வாய்ச்சதுனா அதில் நீத்தி உள் நீச்சலடித்து அடி மண்ணை அள்ளி வருகிற ரகம். அப்படி ஒரு மகா குடியன். மிச்சமா நிக்கற ஒரே ஆள் கோபால்தான். பீடி, சிகரெட் குடி எதுவும் பழக்கமில்லை.

வேலை முடிஞ்சதும் முனியன் வீட்டுக்கு வேண்டியது ஏதாவது வாங்கிக் கொடுப்பார். இனிப்பு, காரம், பழம் ஏதாவது அதைக் கையில் பிடித்துக்கொண்டு நேரே டிராம் வண்டிக்குப் போற மாதிரி மதுர மாட்டு வண்டி இருக்கற இடத்துக்குப் போய்விடுவார். மதுரயும் இவருக்காகவே காத்திருப்பதும் வாடிக்கையான ஒன்று.

மதுர ஒத்தையாளாப் பட்டணம் வந்தவர்தான். இப்பக் குடும்பமே இங்க வந்தாச்சு. அவங்க மொத்த பேருக்கும் சோறு போட்டுக் காப்பாத்தறது அவரும் இந்த மாட்டு வண்டியும்தான்.

மதுரக்கும் கோபாலுக்கும் நல்ல நட்பு ஏற்பட்டிருந்தது. பட்டணம் வந்து கெடைச்ச முதல் நண்பன். வேலை முடிஞ்சி சாயந்தரத்துல கோபலுக்காகக் காத்திருப்பார்.

மதுர மாட்டு வண்டியில ஏறி உட்கார்ந்தா போதும். எண்ணி ஒரு மணி நேரத்துல வீட்டுல இருக்கலாம். அன்றைக்கும் வண்டி காத்திருந்தது.

''என்ன கோபாலு இன்னைக்கு லேட்டு'' சலிப்பாகக் கேட்டார் மதுர.

''ஒண்ணும் இல்ல கூலி பிரிக்க நேரமாயிடுச்சு அதான்''

''கோபாலு ஒன்னு தெரியுமா? இந்த லிங்கி செட்டித் தெருவுல ரொம்ப காலமா முனியன் ஆதிக்கம்தான். நீ வந்த கொஞ்ச நாள்ல கதையில்ல மாறுது'' என்று கிண்டலடித்தார்.

''அட நீ வேறப்பா. சும்மா எதனாச்சும் சொல்லிக்கிட்டு''

''எது சும்மா! யாரு பாரு உன்ன தானப்பா கேட்கிறாங்க முனியன் மேஸ்திரி இடத்துல நீ உக்கார்ந்துட்டதா பேசிக்கிறாங்க''

மதுர சிரித்தார். அவர் சொல்வதில் உண்மையிருப்பதைக் கோபால் உணரத்தான் செய்தார்.

''அட நீ ஒன்னு,கஷ்டப்பட்டு உழைக்கறவன எல்லாருக்கும் புடிச்சுத்தானே போகும்'' என்றார்.

வண்டி திடுதிப்பென பள்ளத்தில் இறங்கி எகிறி ஓடியது. கோபால் வண்டியில் மல்லாக்கப் புரண்டு எழுந்து உட்கார்ந்தார். வண்டி குலுங்கி, தடதடத்து ஓடியது.

''தூர... நாயே தினமும் இது இப்படி தாம்பா பண்ணுது'' சாட்டையால் மாட்டின் முதுகில் விளாசினார் மதுர. அது துள்ளிப் பாய்ந்து ஓடியது.

''அட அது இன்னா பண்ணும் நீ பேச்சு வாக்குல கயிறு மாத்திப் போட்டு இருப்ப''

''நீ வேற கோபால் நீ நினைக்குற மாதிரி மாடு இல்ல இது சரியான மொல்லமாறி, முடிச்சு அவுத்தி காலைல இருந்து சொமைய ஏத்தி விடறோம் இல்ல அதான் இப்ப ஆடிக்காட்டுது. ஓய் வாடி வூட்டுக்கு நான் உனக்குத் தண்ணி காட்றேன்''. அவர் அந்த விலங்கிடம் ஜம்பம் பேசினார்.

''தினமும் நான் பார்க்கிறேன் அந்தப் பள்ளத்துல இறங்காமப் போவாது பொல்லாத ராங்கிக்கார மாடு. இதனாலேயே எனக்கு ஒரு பக்கமா வீங்கிடுச்சயா சே'' என்று சலித்துக் கொண்டு மாட்டை விளாசினார்.

கோபால் சிரித்துக் கொண்டார். சிரிக்கச் சிரிக்கப் பேசுறவங்கள அவருக்குப் பிடிக்கும். ஆனால் அவருக்குச் சிரிப்பை விட கோபம் தான்... சிரிக்க தெரியாத மனிதன்.

சால்ட் கோட்ரஸ் பக்கமா வண்டி திரும்பியது.

"கோபாலு" என்று குரல் கொடுத்தார் மதுர. "என்ன?"

"தோ தெரியுதே கம்பம், இங்கதான் ஒரு நாள் லோடு எடுத்துக்கிட்டு இந்தப் பக்கமா வர்ரேன் ரோட்டோரமா யாரோ ஆள் சுருண்டு படுத்துக் கிடக்கான்போல் தெரிஞ்சது. ஆள் நடமாட்டமும் கம்மியா இருக்குது. கிட்டக்கப் போய்ப் பார்க்கிறேன். அய்யோ குலையே ஆட்டங்கண்டு போச்சு போயேன். மனுசன் ரத்தக் குட்டையில கிடக்குறான் முகமே அடையாளந் தெரியல. எதாவது லாரி அடிச்சுட்டு இருக்கும் போல என்னால அங்க இருக்க முடியல" என்று இப்ப பார்த்தவர் மாதிரி பதறினார்.

"அதாம்பா பட்டணத்துல இருக்கற ஒரு கஷ்டம். அவன் அங்க மாட்டிக்கிட்டா, இவன இங்க குத்திப்புட்டாங்கன்னு சே... என்ன பொழப்பு இது" என்று சலித்துக் கொண்டார்.

வீடு நெருங்கி விட்டது. வண்டியில் இருந்து பையை எடுத்துக் கொண்டு குதித்தார் கோபால்.

மாடு வண்டியை மீண்டும் இழுத்துக்கொண்டு ஓடியது. வழக்கமா குடிசைகளை நெருங்கும்போது வரும் புகை வாடையும் சமையல் நெடிகளும் அன்று கொஞ்சம் தூக்கலாக இருப்பது போல் இருந்தது. மூட்டையைத் தூக்கிக் கொண்டு குடிசைக்குள் நுழையப் போனார்.

"அண்ணா" என்ற குரல் கேட்டது. பழக்கமான குரல். முருவன் இருட்டில் நின்று கொண்டு இருந்தான். அடையாளம் தெரிஞ்சு போச்சு கோபாலுக்கு அவர் ஆச்சரியத்தோடு தம்பியை நெருங்கிப் பார்த்தார்.

"என்னடா எப்படா வந்த" என்ற கோபால் ஆச்சரியமாய் தம்பியைப் பார்த்தார்.

"சாயங்காலமே வந்தட்டன்னா" என்றான். அவனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் அண்ணனைப் பார்த்து விட்ட மகிழ்ச்சி தெரிஞ்சது.

"இன்னா... நீ எப்படி இருக்கிற" என்று கேட்கும் போது கண்ணு கலங்குது.

"டேய்... சீ என்னடா பொம்பளையாட்டம், நான் நல்லாதான் இருக்கிறேன். அம்மால்லாம் எப்படி இருக்கறாங்க"

"ஆமா அம்மா தான் எப்பவும் அழுது புலம்பறாங்க. ஒரு

கடுதாசி போடக் கூடாதா? உடம்புக்கும் முடியல என்னாச்சோ ஏதாச்சோ என்று ஒரே வெசனமா இருக்குது. அம்மாகிட்ட யாரோ நீ மாமாவூட்டுலதான் இருக்கன்னு சொன்னாங்க. அதான் ஒடனே தொறத்திவுட்றுச்சி வாண்ணே ஊருக்குப் போயிடலாம்'' முருவன் கெஞ்சினான்.

''மழை கொஞ்சம் போல பெய்ஞ்சது ஏர் ஓட்டி விட்டிருக்கோம்'' என்று ஊர்க் கதையை ஆரம்பித்தான்.

''சரி நீ சாப்பிட்டியாடா'' என்றார்.

''வீட்டுக்கு வந்தவுடன் மொத வேல அதுதான்''

''சரி நீ போய் மொகம் அலம்பிட்டு வா''

அஞ்சலை பெரிய கோரைப்பாய்க் கொண்டு வந்து பிரித்து விட்டு கோபால் கொண்டு வந்த பையை உள்ளே எடுத்துப் போனாள். அதில் இனிப்புப் பலகாரங்கள் இருந்தன. அதைக் கொண்டு வந்து முருவன் முன்னாடி வைத்தாள்.

''சாப்புடு தம்பி...'' அஞ்சலையின் ஊர் விசாரணை தொடங்கியது.

முனியனோட மகள் வந்து எட்டிப் பார்த்தபடி துவைத்த துணியைக் கையில் பிடித்துக்கொண்டு நின்றாள்.

சீமை எண்ணெய் விளக்கு ஒளியில் மங்கலாய் அவள் முகம் தெரிந்தது.

''என்னடி பாக்குற, உன் மாமன்தான்'' என்று அம்மா கேலியாகச் சொன்னாள். வெட்கப்பட்டுக்கொண்டு உள்ளே ஓடியது அந்தப்பெண்.

பலகாரம் வாசனையில் தெரு நாய் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டது. அஞ்சலை நாயை விரட்டியடித்தாள்.

கோபால் முகம் கை கால் கழுவிக் கொண்டு வந்து உட்கார்ந்தார். சிம்னி விளக்கு ஒளியில் அண்ணனோட கருத்த முகம் மின்னுவது போல் இருந்தது. முருவன் அண்ணனையே உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அண்ணனோட முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல தோன்றியது. மெல்லியதாய் இருந்த மல்லுத்துணியில் ஜிப்பா போட்டிருந்தார் கோபால்.

பண்ணைக்காரர் போடற துணி அண்ணனுக்கு அமர்க்களமா பொருந்தியிருந்தது. பட்டணம் வந்து அண்ண இந்தத்

துணியெல்லாம் போடுது. முருவன் ஆச்சரியப்பட்டான்.

''அண்ணா அம்மா உன்னப் பாத்துச்சுன்னா ரொம்ப சந்தோஷப் படுவாங்கண்ணா'' என்றான் முருவன்.

''சரி, சாப்பிட்றா எனக்கு வரணும்னுதான் தோணுது இங்க வேலை சரியா இருக்குது என்ன பண்ண''

அண்ணியப் போய்க் கூட்டிக்கினு வந்துடுணா என்று சொல்ல வேண்டும் போல் தோன்றியது. இந்தக் கோவக்கார மனுசன் என்ன சொல்லிடுவாரோ என்று பயத்துலேயே முருவன் விட்டுவிட்டான்.

சாப்பிட்டு முடிச்சதும் உறக்கம் வரும் வரைக்கும் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

''பண்ணையார் எங்களைப் பார்த்தாலே ஏதோ பேய பார்க்கற மாதிரி பாக்கறார். மாமாவும் ஊரை விட்டுப் போயிட்டார். நீயும் வந்துட்ட கொஞ்ச நா போயி இன்னும் ரெண்டு பேர் பெங்களூர் போயிட்டாங்க. அந்தக் கோபத்த எங்க மேல காட்றான் அந்தாளு. நன்றி கெட்ட பயலுவ உங்களயெல்லாம் நிலத்துல எறக்கறதே பாவம்ன்னு மானாவரியா பேசுறார். நானும் பாவாடை அண்ணனுமா மாமனோட நிலத்தை உழுது வச்சி இருக்கும். அம்மாகிட்ட எதுவும் இல்ல. கொஞ்சம் போல காசு இருந்தா எதாவது வெதைக்கலாம்.''

''சரி நான் கொஞ்சம் பணம் வச்சிருக்கேன் தர்ரேன்'' என்றார்.

கோபாலுக்கு உள்ளூர கோபமாய் வந்தது.அந்தப் பண்ணைக்காரைனப் போய் நாலு கேள்வி கேட்கனும் போல் இருந்தது. தூக்கம் வரவில்லை.

உழைக்கிற உடம்புக்கு எங்கயும் எல்லாம் கிடைக்கும். இங்க எவனும் மரியாதை குடுக்கலனாலும் நம் மரியாதையாவது நம்மகிட்ட இருக்கும்டா.

அங்க மூச்சுக்கு முன்னூறு தடவ பறப்பையன்... பறப்பையன்னு கூப்பிடுவான். நாம சாமி... சாமின்னு முதுக வளைக்கணும், செருப்புப் போட வுடுவாணுங்களா இல்ல வெள்ளையா ஒரு சட்டைதான் போட முடியுமா? பட்டணத்துல எவனும் அப்படிக் கூப்பிட்டு தோ இரண்டு வருஷத்தை தாண்டுது நா கேக்கல. வேற வேற ஆளுங்க நாலு பேர் எங்க கூட சுமை தூக்கறாங்க. இங்க பேதம் எதுவும் இல்லை. பட்டணத்துல இது ஒரு நிம்மதியா இருக்குது'' மனசுக்குள்ள வைச்சுருப்பானுங்களோ என்னமோ வெளிய எவனும் பேசறது இல்ல.

"சரி, பாவாடை எப்படியிருக்குறான்டா"

"ஆமா, அதுக்கு இன்னா ஆட்ட ஓட்டிக்கினு போவுது வருது. யார்கிட்டயும் பேசவும் மாட்டேன்னுது என்னமோ ஒரு மாதிரியா இருக்குது. இப்பல்லாம் ஆட்ட ஓட்டிக்குனு போனா நாலு நாள் கழிச்சிதான் வூட்டுக்கு வருது. அது கிட்ட ஒன்னுமே கேட்க முடியல என்னமோ போ... ஒண்ணும் புரியல" முருவன் துயரமாய்ப் பேசினான்.

கோபால் பேச்சை மாற்ற எதையாவது பேச நினைத்தார்.

"அது சரி சீமைக்குப் போனவங்களப் பத்தி எதாவது சேதி வந்ததா"

"ஆமா அதயேன் கேக்குற?" துயரமான விதத்தில் உச்சு கொட்டினான்.

"ஏண்டா எதனாச்சும் கடுதாசி வந்திச்சா?"

"இல்லணா அக்கா மாமா போனாங்களே அப்ப கூடவே நம்ம சாமிக்கண்ணும் அவ பொஞ்சாதியும் கூட போனாங்க இல்ல"

"ஆமா"

"சாமிக்கண்ணு எப்படியோ ஓடியாந்துட்டான். அவன் பொஞ் சாதிய வெள்ளக்கார தொரைங்க கெடுத்துக்கொன்னுட்டாங்களாம். அவன் கையையும் வெட்டிப் போட்டாங்களாம். அவன் எப்படியோ தப்பிச்சு யாரோ புண்ணியவான் ஒதவி பண்ண தப்பிச்சி வந்து சேந்தான். பாவம் பித்துப் புடிச்சாப்பலதான் இருந்தான்" அதைச் சொல்லும்போது முருவன் நடுங்குவது தெரிந்தது.

கோபால் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு முருவன் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தார். அக்காள் பொன்னியம்மாளைப் பற்றி ஏதாவது சொல்வான் என்று ஏங்கினார்.

"சரி நம்ப அக்காளைப்பத்தி எதுனாச்சும் தகவல் சொன்னானா?"

"உம் சொன்னான். ஒரு நா ராத்திரியில ஊருக்குள்ள கந்தலும் கோலமுமாய் வந்தான். ராத்திரி பூரா தொண்ட கிழிய ஒரே புகாரா சொல்லிக்கிட்டு அழுதான். ஊரே அவன் சொல்றத எல்லாம் கேட்டு நடுங்கிப்போச்சி. அவ்ளோ கொடும நடக்குதாண்ணே. அந்த ஊர்ல பாலும் தேனும் ஓடுதன்னு கூட்டிக்கிட்டுப் போனவங்க பொம்பளைங்களாண்ட தப்புதாண்டா பண்ணறதும் எதுத்துக் கேட்டா கொன்னுப் போடுறானுங்களாம். நம்ம அக்காளும்

மாமனும் தேயில தோட்டத்துலதான் வேல பாக்குறாங்களாம் புள்ளங்க... எல்லாம்... வார்த்தையை முடிக்காமல் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு அழுதான்.

கோபாலுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவன் சொல்றதயெல்லாம் கேட்டா நெஞ்சு திக்குன்னுது.அந்த வெள்ளைக்காரத் தொரைங்ககூட சேர்ந்துக்குனு நம்ம கங்காணிங்களும் அவ்ளோ அட்டூழியம் பண்றாங்களாம். நம்ம பற சனம் ஒலகத்துல எந்த மூலைக்கிப் போனாலும் வாழ வுடமாட்றானுங்க என்னத்தப் பண்ண சின்னச் சின்னதா மரப்பொட்டிங்க மாதிரி வூடு குடுத்து இருக்காங்களாம். கால் நீட்டிப்படுக்க முடியாதாம். மாமனுக்கும் அக்காளுக்கும் நெறைய கடன் இருக்குதாம். நாள் பூரா ஒழைச்சாலும் குடிக்கக் கூழ் இல்லையாம் எல்லாம் கடன்...கடன்னு போட்டுப் புடுங்கறாங்களாம். என்னமோ...போ அந்தாள் அக்காளையும் புள்ளைங்களையும் கூட்டிக்கினு போய் அந்த மலக்காட்டுல தள்ளி கொன்னு''

துயரத்தின் தேம்பலுடன் ''குழந்தைங்க எப்படியிருக்குதாம்'' கோபால் கேட்டார்.

''பெரிய கொழந்தை இங்க போவும் போதே கப்பல்ல மூச்சடைச்சுப் செத்துப் போச்சாம். மத்த ரெண்டு அங்க போயி நோயில படுத்துருச்சிங்களாம். என்னத்த சொல்ல இப்ப அக்காவம் மாமாவம் மட்டும்தான் மிச்சமாம்'' சொல்லிவிட்டு முருவன் குழந்தை போல குலுங்கிக் குலுங்கி அழுதான்.

வயசுக்கு வந்த பொம்பள ஒருத்தியும் தன்மானத்தேடு இருக்க முடியாதாம். வெள்ளைக்கார தொரைகளும் கங்கானியுமா சேந்து அதுங்கள நாசம் பண்றானுங்களாம்.

நாலுஞ்சு பொம்பளைங்கப் பெத்த கொழந்தைங்க வெள்ளைக்காரன் நெறத்துல இருத்துச்சாம். அதுல மூணு பொம்பளங்க தூக்குல தொங்கியும் கழுத்தை அறுத்துக்கிட்டும் உசுர விட்டுட்டாங்களாம். அந்த ஊர்ல இவ்ளோ கொடுமையும் நடக்குதாம். பேசும்போதே அவன் விழியோரம் நீர் கசிவதைக் கோபால் பார்த்தார்.

''சாமிகண்ணு கதை கதையா சொல்றான்''

விசும்பிக்கொண்டே சொன்னான். மேற்கொண்டு பேச அவனால் முடியவில்லை. திணறினான். சாமிக்கண்ணு

சொன்னதையெல்லாம் அண்ணனிடம் சொல்ல முடியாது. அவனது உடல் நடுங்கியது. இதுக்கெல்லாம் என்ன தான் தீர்ப்பு நாலு எழுத்த படிச்சி நம்ம புள்ளங்களாவது புத்தியோட மேல வந்தா தான் உண்டு என்று அவன் மனதிற்குள் பலவிதமாக யோசித்தான்.

"இங்கதான் நம்மளக் கொல்றானுங்கன்னா சீமைக்குப் போனாலும் நம்மல விடமாட்றானுங்களே போட்டு கசக்கிப் பிழிஞ்சி எடுக்கறானுங்கலாம். கங்காணி பயலுவ ஆட்டம்தான் ரொம்பப் பெரிசாப் போச்சுன்னு சாமிக்கண்ணு சொல்றத நம்ப முடியலண்ணா. எல்லாம் சாமிக்குத்தான் வெளிச்சம்" அவன் பேசிக்கொண்டே விசும்பினான். அவன் அப்படி அழும்போது கோபாலும் அக்காளை நினைத்துக் கண் கலங்கினார்.

சாமிக்கண்ணு ஊருல இருந்து வந்த ராத்திரி பூரா சனங்கக்கிட்ட கதைகதையாப் பேசிக்கிட்டு இருந்தான். பொழுது விடிஞ் சப்புறமும் கூத்துப் பாக்கற சனங்க மாதிரி அவனையே உத்துப் பார்த்துக்குனு அவன் சொல்றதக் கேட்டு அழுதுகினு இருந்தாங்க. பொழுது விடியற சமயத்துல நம்ம கருப்பன் ஓடியாந்தான்.

"டேய் சாமிக்கண்ணு உன்ன கங்காணி ஐயா தேடிக்கினு வந்துக்கிறாரு உன்ன கூட்டியாறச் சொன்னாருடா" என்று கத்தினான்.

"கங்காணியா..." அவன் பதறியபடி கேட்டான். "பாத்தீங்களா அந்தத் தேவடியா பய இங்கயும் என்ன தேடிக்கிட்டு வந்துட்டான் நம்ம சனங்கள அங்க தொரைங்களோடு சேந்துகினு அட்டூழியம் பன்றாணுங்க. செத்த பொணத்தக்கூடத் தேயிலப் பொதரு அடியில் போட்டுப் பொதச்சித் செடிக்கு ஓரமாக்கிடுறானுங்க. அவனுங்கள நம்பிப் போவாதீங்க... போவாதீங்க..." அவன் வெறிப்பிடிச்சவன் மாதிரி கத்திக்கிட்டு ஓடினான்.

"அன்னைக்கு மத்தியானவாக்குல அவனோட பொணம் சவளப்பட்டு ஏரி மதகுல இருக்குதுன்னு வந்து சொல்றாங்க என்னத்த சொல்ல" அவன் இவ்வளவும் தனக்குள்ளே நினைத்துக் கொண்டும் ஓரிரு வார்த்தைகளை வெளியே கேட்கும்படி பேசிக்கொண்டும் இருந்தான்.

"இங்க இருந்து சனங்களப் புடிச்சிட்டுப் போற அந்தக் கங்காணிதான், அவன கொன்னுட்டதா ஊருக்குள்ள பேசிக்கிறாங்க என்னத்த பன்ன. நாம யாரப் போய் தட்டிக் கேக்கறது. அந்த

ஆள் சீமைக்குப் போக ஆள் கூப்பிட்டுப் பார்த்தான். சனங்க பயந்துகிட்டு அவன் இருக்குற பக்கம்கூடப் போகல. பக்கத்து ஊர்ல போய் சனங்களத் திரட்டிக்கிட்டுப் போனான்.

இரண்டு பேருக்கும் மனவேதனையாக இருந்தது. ''அம்மா, அக்கா நெனப்புலயே ஒருவாரமா காய்ச்சலா கெடந்தது. மானம் மருவாதியில்லாம நாமெல்லாம் இன்னும் எவ்ளோ காலத்துக்குத் தான் இப்படி உதைபடுவோமோ? தாயும் பிள்ளையுமா பிரிஞ்சி இப்படி சின்னா பின்னப்பட்டுச் சாகிறோம். அம்மாவுக்கு முன்ன இருந்த தெடம் இப்ப கெடையாதுண்ணே நீ வேற இங்கு வந்துட்ட நீயாவது ஒரு கடுதாசி போட்டியா''

அவனது கண்ணீர் உதடுகளில் நுழைந்து நாவையும் தொட்டது. துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டே பாயில் மல்லாந்து படுத்தபடி துயரத்தால் தூங்கிப் போனான்.

முருவன் நடுராத்திரில திடுப்புனு முழுச்சிக்கிட்டான். அண்ணன்கூட தூங்கறது அவனுக்கு நிம்மதியா இருந்தது. கோபால் குறட்டைவிட்டார். அக்காளும் மாமனோட திரும்பி வந்துட்டா எவ்ளோ நல்லா இருக்கும்னு தோணிச்சி.

இந்தக் கோவக்கார மனுசன் எந்த வம்புல மாட்டிக்குவாரோ என்ற பயம் அவனுக்குத் திடீரெனத் தோன்றியது. பட்டணம் பொல்லாததுன்னு பேசிக்குறாங்களே.

எப்படியாவது அண்ணன ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போய் அம்மாகிட்ட காட்டணும் என்று துடித்தான்.

பட்டணத்துல எதனாச்சும் எதிர்த்துப் பேசனா டப்பு... டப்புன்னு சுட்டுப்புடுவாங்க என்று முருவன் நினைத்திருந்தான்.

அண்ணன் இங்க வந்து பழகிட்டு சாதாரணமாப் பேசறதப் பார்த்து முருவனுக்கு மலைப்பாய் இருந்தது.

முனியன் மாமா நினைவுக்கு வந்தது. நாம தூங்கின பிறகு வந்து இருப்பார் என்று நினைத்துக் கொண்டான்.

முனியன் பட்டணம் வந்த கதை அவனுக்கும் தெரியும்.யாரோ ஊருக்குள் பெரிய மனுசன் ஒருத்தன் சொந்தகாரப் பொண்ண கேவலமாப் பேசிப்புட்டான். கோவம் தாங்காம ஒரே உதை பாறைல போய் மோதிக்கிட்டு, மண்டை ரெண்டா பொளந்துருச்சி.

அன்னைக்கு ராத்திரியோட ராத்திரியா ஓடி வந்தவர்தானே! அது நடந்து ரொம்ப காலம் ஆயிடுச்சி.

நினைவுகளை அசை போட்டான் முருவன். கோபால் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்தார். உழைத்த களைப்பு.

நடுராத்திரி கடந்து போன சமயம் தூரத்துல கடகடன்னு சத்தம். முருவன் கண் முழுச்சிப் பார்த்தா ரொம்ப கிட்டத்துல யாரோ வண்டிய இழுத்துட்டு வர்றது தெரிஞ்சது.

அதுமாதிரி வண்டிய அவன் பார்த்தது கிடையாது. கிராமத்துல ஏது கை ரிக்ஷாவெல்லாம்.

இருட்டுல முருவனுக்கு அதைப் பார்க்க ஆச்சரியமா இருந்தது. யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருக்கான். பட்டணத்துல துட்டுக்கு இப்படி வண்டியில உக்கார வச்சு இழுத்துட்டுப் போவாங்களாம்.

திறந்தவெளி வாசலில் படுத்து இருந்த முருவன் உற்றுப் பார்த்தான்.

வண்டி கிட்டத்துல வந்தது. குடிசை வாசலில் நின்றது.

"அஞ்சல அக்கா, எக்கா..." என்று குரல் கொடுத்தான் வண்டியை இழுத்து வந்தவன்.

"அட, நம்ம வீட்டுக்குத்தான் யாரோ வந்து இருக்காங்க முருவன் எழுந்து வந்தான்."

அஞ்சலை தூக்கக் கலக்கத்தில் எழுந்து ஓடி வந்தாள்.

"சே மனுசன் இன்னா குடி குடிக்கறாம்பா. தொண்டையில இருந்து அடி வயித்து வரைக்கும் சாராயந்தான் தளும்புது. வண்டி யெல்லாம் வாந்தியென்று" வண்டிக்காரன் அலுத்துக்கொண்டான்.

முனியன் நடக்கக்கூட முடியாமல் தள்ளாடினார். வண்டிக்காரனும் அஞ்சலையுமா சேர்ந்து முனியனைத் திண்ணையில் படுக்க வைத்தார்கள்.

வண்டிக்காரன் போய் விட்டான்.

"பாத்தியா! உன்னோட மாமன் யோக்கிதைய தெனமும் இதே கூத்துதான். ஏதோ புண்ணியத்துக்கு அந்தாள் கொண்டாந்து வுட்டுட்டுப் போறான். சரி நீ போய் தூங்கு நான் பாத்துக்கறேன்" என்றவள், தண்ணி கொண்டு வந்து முகத்தைக் கழுவி விட்டாள். இதென்னடா கூத்து என்றிருந்தது முருவனுக்கு.

கொஞ்ச நேரத்தில் முருவனும் தூங்கிப் போனான்.

முனியன் மீண்டும் ஒரு முறை சாப்பிட்டதையெல்லாம் வெளியே எடுத்தார். அந்தக் கெட்ட வாடையில் கோபால் விழித்துக் கொண்டார்.

கோபால் எழுந்து உட்கார்ந்து கொண்டார். இந்த மனுசன என்னத்தப் பண்றது. இப்படி சம்பாதிக்கற துட்டபூறா குடிச்சுப்புட்டு வந்தா உடம்பு தேறுமா என்று வருந்தினார்.

''என்ன மச்சான் தூங்கலையா'' என்று உளறினார் முனியன்.

''அட போ மாமா'' என்றவர் முகச்சுழிப்போடு திரும்பிக் கொண்டார்.

தெருக்கோடியில் மாநகராட்சிக் கம்ப மஞ்சள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அந்த மொத்த ஊருக்கம் அதுதான் இரவு சூரியன்.

சனங்க காற்றோட்டமாய் வெளியே படுத்து இருந்தார்கள். இரண்டு மூணுவீடு தள்ளி ஒருத்தன் பாட்டுப் பாடிக்கிட்டுக் குடிபோதையில் உளறிக்கொண்டிருந்தான். விடியற நேரம் வரைக்கும் அவனுக்கும் போதை தெளியவில்லை.

அவன் பெண்சாதி எதையோ கேட்டு உதைபட்டு மூலையில் விழுந்து கிடந்தாள். இது தினம் நடக்கிற சங்கதிதான்.

இந்தப் பாழாப் போற சாராயம் எங்கறந்து தான் வந்து தொலையுதோ கடினமாய் உழைக்கிறார்கள் ,ஆனால் சனங்களோட வருமானத்தைப் பிசாசு மாதிரி சாராயம் காய்ச்சுபவர்கள் விழுங்கி ஏப்பம்பிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

பாவம் சனங்கள். தங்களோட வறுமையையும் உழைப்பு வேதனையையும் மறக்க இந்தப் பிசாசு கிட்ட அடைக்கலம் புகுகிறார்கள்.

அதுவோ அவர்களை விழுங்கி ஏப்பம் விடுகிறது.

சேவல் கூவி விடியலைச் சொல்லியது.

சனங்கள் விழிப்புப் பற்றியறியாமல் உறங்கிக்கொண்டு இருந்தார்கள். அந்த உறக்கத்தில் மூட்டைப்பூச்சிகளும் கொசுக்களும் அவர்கள் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக் கும்மாளமிட்டன. கூரை மீது இரண்டு சேவல்கள் தொடர்ந்து கூவிக்கொண்டே இருந்தன. ஒன்று வடக்குப் புறத்தில், மற்றொன்று தென்புறத்திலுமாய் கூவல் வந்தது.

அன்றைய பொழுது உண்மையில் கலகலப்பான பொழுது தான். தார தப்பட்டை ஓசை சனங்களை எழுப்பிவிட்டது.

உடுக்கையும் பறையொலியுமாய்ப் பொழுது ஏகப்பட்ட குதூகலத்தோடு பிறந்தது.

அன்று ஊர்க்கோயில் திருவிழா. முனியன்தான் அதற்கு எல்லாமும் அவருடைய நண்பர் சமரனும் முனியனும் சேர்ந்து தான் அந்தக் கோயிலையே ஏற்படுத்தினார்கள். இப்போது அவர்களே தர்மகர்த்தாக்கள்.

பழைய கூரையப் பிரிச்சு புதுக் கூரை போட்டு வெள்ளைக் காவியில் கோவில் மினுமினுத்தது. மாவிலை வேப்பிலை தோரண அலங்கார வேலை நடந்து கொண்டிருந்தது.

முனியன் காலையிலே வெள்ளை வெளேர்னு வேட்டியும் ஜிப்பாயுமாய்த் திரிந்து கொண்டு இருந்தார். சமரனும் முனியனும் 'இதப் பண்ணுங்கடா அதப் பண்ணுங்கடா' என்று உத்தரவு போட்டு அதிகாரம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள். முனியனும் சமரனும் இரட்டைப் பிறவிங்க மாதிரி அச்சுல போட்டா மாதிரி ரெண்டு பேரும் ஒரே மாதிரி இருப்பாங்க. சுமரன் மட்டும் காக்கிச் சட்டை காக்கி நிசார் சீருடையை மாத்தவே மாட்டார். இன்னைக்கும் அதே உடுப்புதான். சிவப்புத் தொப்பி ஒன்னுதான் குறைச்சல் மத்தபடி போலிஸ் மிடுக்குதான். இந்த மிடுக்குதான் அவரை மரக் கொடவுன் பூராவுக்கும் காவலாளியா ஆக்கியிருந்தது.

அந்த வட்டாரம் பூராவும் சமரனுக்கு மரியாதை.பாசம் காட்டினா கரைஞ்சு பூவா சிரிக்கிற மனுசங்ககிட்ட யாராவது வாலாட்டினா, கட்டிப் போட்டுத்தான் உதைப்பார். திருட்டுப் பயல்களுக்கு அவரக் கண்டாலே பயம்தான். ஊர் சனங்க எல்லாரும் அன்று மதியம் முண்டக் கண்ணியம்மா கோயிலில் குவிந்திருந்தார்கள். கோயிலில் கூழ் ஊற்றுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. யாரோ காங்கிரஸ் தலைவரை வரச் சொல்லி ஏற்பாடு செய்து இருந்தார்கள். முனியனும் காங்கிரஸ்காரர்தான்.

எந்தக் கூட்டத்துக்கும் போகறதில்லை போராட்டம் எதுலயும் கலந்துக்கறதும் இல்ல. ஆனால், காங்கிரஸ் அபிமானி. காந்தி மெட்ராஸ் வந்தப்ப போய்ப் பார்த்ததோட சரி. அந்த விதத்துல அவர் காங்கிரஸ்காரர்தானே. இந்த நாட்களில் காங்கிரஸ்காரன்னு சொல்லிக்கறதே பெருமையான விஷயம்.

கரகாட்டமும் கோலாட்டமுமாய்த் திருவிழா தொடங்கியது. கோல் சண்டைக் கும்பல் தங்களோட வீரதீரங்களைக் காட்டி சனங்களைக் கை தட்ட வைத்தார்கள். விசில் சத்தம் பறந்தது. முனியன் குடிசை முன்னாடி ஒரு மரியாதைக்காகக் கரகாட்டம்

ஆடினார்கள். ஊர் முழுக்கச் சுற்றிவர வேண்டியவர்கள் வெகுநேரம் அங்கேயே ஆட்டம் போட்டார்கள்.

எரிச்சலாகிப் போன முனியன், ''ஏம்பா எல்லாம் என் வீட்டு முன்னாடி ஆடினா போதுமா? போங்க அப்படி ஒரு சுத்து சுத்தி வாங்க'' என்று கையை ஒரு வட்டம் போட்டுக் காட்டினார்.

சூரியன் உச்சிக்கு வந்த சமயம். ஒரு ஆள் தெருத் தெருவாய் போய்த் தண்டோரா போட்டான்.

'ஊரக் காப்பாத்துற உலகத்தக் காப்பாத்துற முண்ட கன்னியம்மா ஆத்தாளுக்கு விழா எடுக்கறதால ஊர் சனங்க எல்லாம் திரண்டு வந்து ஆத்தாளோட அருளைப் பெற்று, கூழ் வாங்கிச் செல்லும்படி அழைக்கிறோம்' என்று தொடர்ந்து கத்திக்கொண்டுப் போனான்.

கோயில் பந்தலில் பெருங்கூட்டம் ஜனங்கள் நெருங்கியடித்துக் கொண்டு நின்றார்கள்.

பளீர்னு ரெண்டு மூணு பேருதான் இருந்தாங்க. மத்த சனங்க எல்லாம் கந்தலும் கிழிசலுமா இருந்தாங்க.

அந்த ரெண்டு மூணு பேர் முனியனும் சமரனும் தான் என்று சொல்லவே வேணாம். கொஞ்சம் ஈரம் உள்ளவர்களும் இருக்கத் தான் செய்தார்கள். அவர்கள் ஏன் வெளியே வரப்போகிறார்கள். அவர்கள் குடிசைக்கு மேலாக சமையல் நடப்பதற்கான புகை கிளம்பியது.

சனங்க பஞ்சத்துல ஓடி வந்த அகதிங்க மாதிரி முண்டியடிச்சுக்கிட்டு நின்னாங்க. குறுக்கே புகுந்த ஒரு பெண்ணை இன்னொருத்தி வெளியே விட்டாள்.

அட... காது கொடுத்துக் கேட்க முடியாது. அப்படி ஓர் ஆபாச பேச்சும் கேலிச் சிரிப்புமாய் சனங்கள் இரைச்சலோடு சச்சரவு பண்ணிக்கொண்டு இருந்தார்கள். ஒரே கூச்சல்.

விழாத் தலைவருக்காக் காத்திருந்தார்கள்.

''இன்னாயா அவரு நேரம் தவற மாட்டாறே!'' முனியன் தலையைச் சொறிந்தார்.

''அங்க பாரு மாமா...'' என்று சமரன் சுட்டிக் காட்டிய சிசையில் ஒரு ஆடம்பரம் இல்ல, அலட்டல் இல்ல, தனியா வந்து கொண்டிருந்த கக்கனுக்கு இரு கை கூப்பி வணக்கம் சொன்னார் சமரன். பதிலுக்கு வணங்கியவர் வெள்ளைச் சிரிப்புடன், ''சரி ஆரம்பிங்க, நடந்து வர நேரமாகிவிட்டது'' என்று தன் தவறுக்கு

மன்னிப்புக் கேட்பவர்போல நெற்றி சுழித்தார்.

"உங்களுக்காகத்தான் அண்ணே காத்துக்கிட்டு இருக்கிறோம்" முனியன் பவ்யமாய் சொன்னார்.

"அட மனுசனுக்காக சாமி காத்துக்கிட்டு இருக்க கூடாது" என்றவர் சனங்களைப் பார்த்தார்.

பசி களைப்பு எல்லோர் முகத்திலும் தெரிந்தது. பெண்கள் அவரைப் பார்த்துவிட்டுத் தங்களுக்குள் கிசுகிசுத்தார்கள். சிலர் சிரிக்கவும் செய்தார்கள்.

"யாரோ பெரிய ஆளு வர்றார்ன்னாங்க இவரப் பாத்தா எங்க மண்ணு மாமா மாதிரி இருக்காரே" என்றாள் ஒருத்தி

"ஆமாண்டி உங்க மாமா மாதிரிதான். போய் கண்ணாலம் கட்டிக்கிறியான்னு கேளு" சிரித்தாள் அடுத்தவள்.

"அடி மானங்கெட்டவளே, ஒரு பேச்சுக்குச் சொன்னேன்"

இப்படியே அங்க கசமுச பேச்சு நடந்து கொண்டு இருந்தது.

சுத்தமான கறுப்புக்கல் அம்மனைச் சிங்காரிச்சு புதுப் புடவை நகை நட்டுமாய் அலங்காரம் கண்ணைப் பறித்தது. ஆட்டத்தக் காட்டி உடுக்கைய அடிச்சி வாய்க்கு வந்தபடி புகழ்மாலை பாடும் பூசாரி உச்ச குரலில் கத்திக் கொண்டிருந்தார். 'தாயே' என்று ஓங்காரமாய் குரலெடுத்துக் கத்தி ஆங்காரமாய் விறைத்துக் கொண்டு கீழே விழுந்தார் ஒரு பெரியவர். உடுக்கைகாரர் வேட்டி அவிழ்ந்தது கூடத் தெரியாமல் ஆவேசமாய் அடித்து நொறுக்கினார். தொண்டை நரம்புகள் புடைக்கப் பாடினார். சில சமயம் வசனம் பேசினார். கூட நாலுபேர் ஆமாம் போட்டார்கள்.

ஒரு பொம்பள சாமிய மரியாதை இல்லாம அவளே இவளேன்னது மட்டுமில்லாம நீ ஈஸ்வரன் பொண்டாட்டி நீ திருமால் பொண்டாட்டின்னு ஒரு பொம்பள சாமிக்கு நாலைந்து கணவன் பேரைச் சொல்லி ஆவேசமாய்ப் பாடி அவர் குதூகலமடைந்தாரா இல்லை சாமிய குதூகலப் படுத்தினாரா யாருக்குத் தெரியும்! சனங்கள் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. கூழ் கரைக்கும் இடத்தில் கூட்டம் வேடிக்கை பார்த்தது போல இதையும் வேடிக்கை பார்த்துக் சிரித்துக் கொண்டிருந்தார்கள். கூழ் எப்ப ஊற்றுவார்கள் வாங்கி ஒரு வாய் குடிச்சி பசியாற்றிக் கொள்ளலாம் என்ற ஆர்வம் அவர்களுக்கும் பொங்கி வழிந்தது.

உச்சி வெயில் பசியைத் தூண்டியது. இதுல உடுக்கைச் சத்தமும் ராகத்தோடு வந்த மாரியாத்தாள் பாட்டுமாய்ச் சேர்ந்து இரண்டு பெண்களைக் கவர்ந்து இழுத்து ஆட வைத்து விட்டது. இதுதான் சமயமென உடுக்கைக்காரர் அடி பிய்த்து எடுத்தார். அவங்க ஆட, இவர் ஏத்தி இறக்கிப் பாட சனனங்களுக்கு ரொம்ப குதூகலமாய்ப் போனது சுற்றி நின்று வேடிக்கைப் பார்க்கும் கூட்டம் அதிகமாகி விட்டது. கூழ் அண்டாவை வெளியே கொண்டாந்தது கூட சனங்களுக்குத் தெரியலை. அவங்க எப்போதும் தங்களது மனத் துயரங்களை எதிலாவது புதைத்து விடவே விரும்பினார்கள். உடுக்கைகாரர் அந்த ஆடும் பெண்களையே சுற்றி வட்டம் போட்டுப் பாடினார். அதில் ஒரு பெண் மயக்கத்தில் கீழே சாய்ந்து விட்டாள். கூட்த்தில் யாரோ இருவர் வந்து தூக்கிக் கொண்டு போனார்கள். இன்னொரு பெண்ணும் மயக்கத்தில் கீழே விழுவது போல் தெரிந்தது. உடுக்கைக்காரர் சுதாரித்துக் கொண்டு ஏதோ உரக்க கத்தினார். அந்த பெண் நாக்கை கடித்துக் கொண்டு பார்த்தாள். உடுக்கைகாரர் ஆத்தாளிடம் பேட்டி எடுக்க ஆரம்பித்துவிட்டார். அதில் அவர் வித்தைகாரர் தான்.

"எம்மா... வந்து இருப்பது யார் என்பதை சபையோர் முன் சொல்வாயா?" என்று ராகமிழுத்தார் உடுக்கைக்காரர்.

"ஏய் இன்னாடா, நீதானடா கூப்புட்ட, யார்ன்னு கேக்கற நான்தான்டா..." என்று அந்த சாமி பல்லைக் கடித்தது.

முதல் பதிலே அப்படி வந்தது.

அய்யோ இதென்னடா வம்பா போச்சே மவன இன்னைக்கு மாட்டிக்கினோம்டா என்று சங்கடத்தில் நெளிந்தார் உடுக்கைகாரர். நாக்கு துண்டாகி விடும்படி சாமியாடி நாக்கை கடித்தார்.

"கோபப்டாதே தாயே நீயார்ன்னு எனக்குத் தெரியாதா ஆத்தா உன்னபத்தி" என்று உளறினார் தெளிவில்லாத உளறல்கள் வந்தது அவரிடமிருந்து. கண்கள் விரிந்து முறைப்பு அதிகமாக,

"நீங்க யாருன்னு சபைக்குத் தெரியணுமே தாயே.."

"நான்தான்டா ஆத்தா வந்திருக்கேன்..."

"அப்படி போடு, ஆத்தா! அதானே பார்த்தேன், வேற எதாவது வந்துடுச்சோன்னு பார்த்தேன். நீ பேசு தாயே, சனங்க உனக்காகத் தான் காத்திருக்காங்க. நீ வரணும் தாயே வரணும், வரம் தரணும் தாயே தரணும்" என்று எதுகையும் மோனையுமா கலந்துவிட்டார்.

சாமி மீண்டும் பல்லைக் கடித்து கண்ணை உருட்டியது.

"தாயே நாங்க உங்க குழந்தைங்க. எங்கமேல கோபப் படலாமா! வேணுங்கறதத் கேளு தாயி. என்ன கஷ்டப் பட்டாவது செய்யறோம். உனக்குச் செய்யாம வேற யாருக்கு ஆத்தா செய்யப் போறோம்?"

"டேய் பசிக்குதுடா..."

சாமி நேரடியாக விஷயத்துக்கு வந்தவுடன் உடுக்கைக்காரருக்குச் சப்பென்று போய்விட்டது. உடுக்கைக்காரர் அப்படியே பிளேட்டை மாற்றிப் போட்டார். அதுதானே அவரோட பலமே.

"ஏம்பா அண்ணனைக் கூப்புடுங்கப்பா, ஆத்தாளுக்குப் பசியாம்... முணியண்ணே வாங்கோ..." என்று ராகத்தோடு கூப்பிட்டார்.

"கூப்புடு... கூப்புடு... டேய் முனியா... முனிய்... யா" என்று இரைந்தது சாமி. முனியனைக் கண்டாலே தூரமா ஒதுங்கிப் போற திருடன் சின்னக்கருப்பனோட பொண்ணு அருள் வந்து ஆடி முனியனையே டேய் போட்டுக் கூப்பிட்டதை யாரும் வித்யாசமாய் எடுத்துக்கவில்லை. இப்பக் கூப்பிடுவது சாமியாம். பணிவோடு ஓடி வந்தார் முனியன். கூட்டம் விலகி வழிவிட்டது.

"முனியண்ணே நீ செய்யற மரியாதைக்கு மனமிரங்கி தாயே வந்திருக்கா. பேசுண்ணே பேசு..."

உடுக்கையடித்து ஆரம்பித்து விட்டார்.

"என்ன ஆத்தா எதாவது குறை வச்சுட்டனா?"

"ஆமாடா, வச்சுட்டயே... குறைய வச்சுட்டயே... நூறு நூறா.. பணத்தையும் ஆட்டையும் மாட்டையுமா நான் தர்றேன். அதுல ஒண்ணு எனக்குத் தரக்கூடாதா?"

"அண்ணே... ஆத்தா எவ்வளவு வருத்தப்பட்டுக் கேட்கிறா பாரு. அவள சமாதானப் படுத்தண்ணே" என்று உடுக்கைக்காரர் ஏத்திவிட்டார்.

அவளுக்கும் வாய்க்கு ருசியா கவுச்சி வேணுமே.

"ஆத்தா, கோழியின்னா அடுத்த வருஷம் ஆட்டையே தர்ரேன் ஆத்தா..." என்று பேரம் பேசினார் முனியன்.

"அடுத்த வருடம் என்னடா இந்த வருஷம் எனக்கு ஒரு கோழியாவது தரக்கூடாதா?"

ஒரு கோழி லெவலுக்குப் பேரம் படிந்தது. கடவுளும் மனிதனும் ஊர் சனம் முன்னாடி இவ்வளவு சகஜமாகப் பேசிக்

கொண்டிருக்கும் அற்புதம் அங்கு நடந்தேறியது. இந்தக் கலகலப்பைக் களைந்தெறியவோ என்னவோ தூரத்தில் பெரிய கலவரமான பேரிரைச்சல் கேட்டது. பொசுங்கிப்போன துர்வாடை வீசியது. கூச்சல் வந்த திசை நோக்கி மக்கள் ஓடினார்கள்.

ஜனங்களோட கூச்சல் அதிகமாகி களேபரமாய்ப் போனது. கறுத்தப் புகை தூரத்தில் உயரமாய் எழுந்து ஏதோ குடிசை தீப் பிடித்து எரிவதைக் காட்டியது.

ஓர் ஆள் ஓடி வந்தான். "ஏம்பா சின்னக் கருப்பன் வீடு தீப்பிடிச்சு எரியுது" என்று கத்தினான். ஜனங்கள் கூட்டமாய்ப் பதறியடித்துக் கொண்டு ஓடினார்கள். சாமியாடிக் கொண்டிருந்தவள் சின்னக் கருப்பன் என்ற பெயர் கேட்டதும் விழித்து விழித்துப் பார்த்தாள் பிறகு "நைனா... நைனா..." என்று கத்தினாள்.

ஆடிய களைப்பும் வெயில் கொடுமையும் பாவம் கீழே விழுந்துவிட்டாள் அந்தப் பெண்.

முகத்தில் நீர்த் தெளித்துவிட்டார் உடுக்ககைக்காரர். கொஞ்சம் விபூதி எடுத்து நெற்றியிலும், வாயிலும் போட்டு மீதமிருந்த உள்ளங்கை விபூதியை அவள் முகத்தில் ஊதிவிட்டார். கொஞ்ச மிச்சமிருந்த தெம்பும் போய் சுழன்று விழுந்து திமிறி எழ முயன்றாள்.

கண்ணைக் கசக்கிக்கொண்டு அந்தப்பெண் ஓடினாள். விபூதி படிந்த கண்கள் சிவப்பாக மாறிவிட்டது. வயிற்றில் அடித்துக் கொண்டு "நைனா... நைனா" என்று கத்தினாள்.

தீ கொழுந்துவிட்டு எரிந்தது. காற்று சுழன்று அடித்து மேலும் எரியவிட்டது. அந்தப் பெண் தலையில் அடித்துக்கொண்டு கதறினாள்.

"நைனா... நைனா அய்யோ எங்க நைனா உள்ளாற. ஏங்க நைனா உள்ளாற..."

இளம் வாலிபர்கள் கையில் கிடைத்ததைக் கொண்டு அணைக்க முற்பட்டார்கள்.

பக்கத்தில் உள்ள குடிசையும் தீப்பிடித்துக்கொண்டு எரிந்தது. வரிசையாக எல்லாக் குடிசைக்கும் பரவியது. முக்கள் பதறியடித்துக்கொண்டு அங்கும் இங்குமாகச் சிதறி ஓடினார்கள். சாமியாடிய பெண்ணின் தகப்பன் குடிபோதையில் உள்ளே படுத்துக் கிடந்தான், யாரும் உள்ளே நுழைந்து காப்பாற்ற முடியவில்லை. குடிசை அப்படியே சரிந்து உள்ளுக்குள் விழுந்தது.

கிட்ட நெருங்க முடியாதபடி தீ கொழுந்து விட்டு எரிந்தது.

தீ மேலும், மேலும் தீவிரம் அடைந்துகொண்டே போனது. அனல் தாங்கமுடியவில்லை. கையில் கிடைத்த பெட்டி படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள் ஜனங்கள். எரிந்த குடிசைகளுக்கு எதிரில் பெரிய வெட்ட வெளி மைதானம் இருந்தது. புதர் மண்டிப் புல் தரையாகக் கிடந்த இடத்தில் வீடிழந்தவர்கள் அடைக்கலமானார்கள்.

மொத்தக் குடிசையும் எரிந்து சாம்பலாகிப் போனது. கருகிய குட்டிச் சுவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தது. பெண்கள் அழுது ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு பெரிய தீக் கோலத்தையம் அதன் கோரதாண்டவத்தையும் கோபால் இதற்குமுன் பார்த்ததில்லை. அவர் முகத்தில் கிலி பிடித்துக் கொண்டுவிட்டது. எரிந்த குடிசைகளுக்கு மத்தியில் அவர் கலவரத்தோடு நடமாடிக் கொண்டிருந்தார்.

இரவு வெகு நேரம் வரையும் குடிசைகள் எரிந்து கொண்டு இருந்தன. தீயில் கருகிய மூங்கில் பட், பட்டென்று வெடித்துக்கொண்டு சுடர்விட்டு எரிந்தது. அனல் அடங்கியபின் சின்னக்கருப்பனின் சடலத்தை வெளியில் கொண்டு வந்தார்கள். தீய்ந்து அடையாளம் தெரியாமல் கருகிப்போய்க் கிடந்தது பிணம்.

அவனோட மகள் கத்தக்கூட திறனற்றுச் சாம்பலோடு சாம்பலாய்க் குறுகிக் கிடந்தாள். ஆறுதலாய் எதாவது பேசினாலும் விழி இமைக்காமல் பேந்தப் பேந்த விழித்தாள்.

ஒரு வீடும் அங்கு மிச்சம் இருக்கவில்லை. வீடிழந்த சோகம் எல்லோரையும் வாட்டியதால் உயிர் பலியானது ஒன்றும் பெரிய தாய்த் தெரியவில்லை. ஆளுக்குக் கொஞ்சம் பணம்போட்டுப் பிணத்தை எடுக்க ஏற்பாடு நடந்துகொண்டு இருந்தது.

இந்தக் குய்யோ... முறையோ கூச்சலுக்கு மத்தியில் போலீஸ்காரர்களின் பூட்ஸ் தடதடப்பு கேட்டது. சாதாரணமாகவே அந்த ஓசை ஓர் கலக்கத்தை ஏற்படுத்தியது.

சிவப்புத் தொப்பியைப் பார்த்தாலே மக்கள் நடுங்கினார்கள். ஊர்ப் பெரியவர்களான முனியனும் சமரனும் வேறு சிலரும் போலீஸ்காரர்களை எதிர்கொண்டார்கள். "எப்படி நடந்தது?" என்று விசாரித்தார் தலைமைப் போலீஸ்காரர். அவருடைய அரைக் கால்சட்டை கத்திபோன்று நீட்டிக்கொண்டிருந்தது. எல்லாவற்றையும் விட காலில் சுற்றியிருந்த கம்பளி காலுறையும்

சிவப்புத் தொப்பியும் தான் கலக்கத்தை ஏற்படுத்தின. பொது ஜனங்கள் யாரும் கிட்ட வரவில்லை. பல அடி தொலைவில் நின்று கொண்டிருந்தார்கள் எல்லோர் முகத்திலும் கரியும் சாம்பலும் படிந்து அவர்களை அலங்கோலமாய்க் காட்டியது.

''சரி... சரி எல்லாம் அப்படிப் போய் நில்லுங்க கலெக்டர் பார்க்க வர்றார்..'' என்றபடி சுற்றிப் பார்வையிட்டார் போலீஸ்காரர். பழைய கந்தலால் போர்த்தப்பட்டிருந்த பிணத்தைப் பார்த்தார். ஒரு காவலர் கிட்டத்தில் போய்ப் பார்த்துவிட்டுப் பிறகு மூக்கைப் பொத்திக்கொண்டு தூரமாய் வந்துவிட்டார்.

''யார்ரா அது?'' என்று அதட்டலோடு கேட்டார் தலைமை அதிகாரி.

''சின்னக் கருப்பன்னு பேரு'' என்றார் சமரன்.

''வேற எதாவது உயிரிழப்பு உண்டா?''

''இல்லீங்க ஐயா... பண்டம் பாத்திரம் மொத்தமும் நாசமாப் போச்சுங்க''

நான்கு போலீஸ்காரர்களும் எரிந்த குடிசைகள் மத்தியில் ஒரு ரவுண்டு வந்தார்கள். அவர்கள் சொல்ல அதிகாரி நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டார்.

''சரி துரை வர்றார்டா. எல்லாத்தையம் சொல்லுங்க. பார்த்து எதாவது சொல்வார் என்ன'' என்று அதட்டுவதுபோல் சொன்னார் தலைமைக் காவலர். சரியென்று முனியனும் வேறு பலரும் வெறுமனே தலையாட்டினார்கள்.

ஒரு போலீஸ்காரர் சைக்கிளில் போய் விட்டார். தலைமை அதிகாரி அங்கேயே இருந்தார். இரண்டு காவலர்கள் சாம்பலான குடிசைகளிடையே சுற்றி வந்தார்கள். கொஞ்ச நேரத்தில் ஒரு வண்டியில் ரொட்டியும் பாலும் கொண்டு வந்தார்கள்.

போலீஸ்காரர்கள் அப்பால் போய் விட்டார்கள். கூட்டம் அலைமோதியது. ரோட்டி எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. வெள்ளையாய் இருந்த ரொட்டி, தூசி படிந்த அவர்கள் கைக்குப் போனதும் கருப்பாகிப் போனது. பால் வாங்க வரிசையில் நின்று கொண்டிருந்தவர்களிடம் பாத்திரங்கள் உராயும் ஓசையும் மக்களின் பலவீனமான குரலுமாய்ச் சேர்ந்து அசாதாரணமான சூழல் நிலவியது. இளம் பெண் ஒருத்தி பால் அளந்து ஊற்றிக் கொண்டிருந்தாள். அத்தனைக் கூட்டத்திலும் அவள் ஒருத்தி மட்டும் வித்யாசமாய்த் தெரிந்தாள். கோபால் அவளையே வெகு

நேரமாய் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''தே.. பாப்பா இன்னாடி, நாங்க மூணுபேர் இத்துனுண்டு ஊத்தறியே'' என்று சலித்துக்கொண்டாள் ஒரு பெண்.

''அட போம்மா பின்னாடி திரும்பிப் பாரு எவ்ளோ கூட்டம். எல்லாத்துக்கும் வரணும் போ.. போ...'' என்று காரியத்தில் கவனம் காட்டினாள் நாகம்மாள். எங்கோ குழந்தை வீறிட்டு அலறியது. அந்தப் பெண் திரும்பிப் பார்த்தாள். யாரோ தூரத்தில் கையைக் காட்டினார்கள்.

''ஏன்டி நாவம்மா, கொழந்த அழுவுது. அதுக்குப் போய்ப் பால் குடுடின்னா, இங்க நின்னு பால் ஊத்திக்கினுகீறியே''

ஒரு வயதான பெண் குரல் கொடுத்தாள். எல்லோரும் வாங்கத்தான் முண்டியடிச்சுட்டு நிற்கிறார்களே தவிர, முன்னே நின்று ஊற்ற யாரும் வரவில்லை. தூரத்தில் இருந்து நிலைமையைப் பார்த்துக் கொண்டிருந்த கோபால்,

''ஏம்மா.. போ.. குழந்தை கத்துதாம். நான் ஊத்தறேன் போம்மா..'' என்றார்.

பாதி பால் கீழே சிந்தி சிதறியது. கோபால் எரிச்சலடைந்து கத்தினார். கோபாலை அவள் ஒருமுறை முறைத்துவிட்டு ஓடினாள். யாரு இவ, இவளே குழந்தை மாதிரி இருக்கிறா. இவளுக்கு குழந்தயா என்று தோன்றியது.

பால் தீர்ந்துகொண்டே போனது. நான்கைந்து பேர்தான் இருந்தார்கள்.

''என்ன கோபாலு எல்லாருக்கும் பால் பத்துமா'' என்று கேட்டுக்கொண்டு வந்தார் மதுர.

''என்னா பால் வாங்கிப் போய் டீ போடப் போறியா'' கிண்டலடித்தார் கோபால்.

''அட நீ ஒண்ணு. நாவம்மா பால் ஊத்திட்டு இருந்துச்சில்லே. அதனால குழந்தைக்கு பால் வாங்க என்னை அனுப்பி வுட்டுச்சு.''

கடைசியாக இருந்த கொஞ்சம் பாலை வடித்து ஊற்றினார் கோபால்.

''யார்பா அது'' என்று விசாரித்தார் கோபால்.

''என் தங்கச்சி தான்''

''அட ஒந்தங்கச்சியா.. ம்ம்''

''அத ஏன் கேட்கிற அது ஒரு கொடும. அப்புறமா பேசுவோம்.

போய் பாலக் குடுத்துட்டு வர்றேன். கொழந்த அழுவுது" என்றபடி மதுர போய்விட்டார். அந்தப் பெண்ணைப் பத்திக் கேட்டதும் மதுரயின் முகம் சுருங்கியதைக் கோபால் கவனித்தார்.

கருகிச் சாம்பலான குடிசைகளைப் பார்வையிட வரும் கலெக்டருக்காக சனங்கள் காத்திருந்தார்கள். வெகுநேரம் கழித்து ஒரு மோட்டார் கார் வந்தது. இரண்டு வெள்ளைக்கார துரைகள் வந்து இறங்கினார்கள். கூடவே காகிதக் கட்டுக்களுடன் எழுத்தரும் வந்தார்.

மாலைவேளை சூரிய ஒளியில் அவர்களைப் பார்ப்பதற்குத் தேவ தூதர்களைப் போல் தோன்றினார்கள். தமிழ் தெரியாத அவர்களுக்கு எழுத்தர்தான் மொழிபெயர்ப்பாளர்.

எழுத்தரும் மொழிபெயர்ப்பாளருமான அவர் கட்டுக் குடுமியும் பஞ்சகட்சமும் வாய் நிறைய வெற்றிலைச் சாருமாக உருண்டைக் கண்கள் விரிய தூரத்தில் நின்றபடியே பார்த்தார். இயல்பாக அவர் துண்டால் மூக்கைப் பொத்திக் கொண்டார்.

இரண்டு வெள்ளையர்களில் ஒருவர் உயர் அதிகாரி. மற்றவர் அவரிடைய செயலாளர். மக்கள் ஏதோ காட்டு விலங்குகள் போல் மிரண்டுபோய் நின்றுகொண்டிருந்தார்கள். கூட்டத்தில் நின்ற ஒரு வாலிபரை துரை கைநீட்டி அழைத்தார். அவன் வெட்கப்பட்டுக் கொண்டு கூட்டத்தினூடே போய் ஒளிந்துகொண்டான்.

தலைமைப் போலீஸ்காரர், "டேய் வெளியே வாடா" என்று கத்தினார். ஒளிந்துகொண்டவன் ரொம்பவும் மிரண்டுவிட்டான்.

'வேண்டாம், விட்டுவிடு' என்பதுபோல் துரை சைகை காட்டினார். எரிந்த குடிசைகளைப் பார்க்கும்போது அதிகாரி முகத்தில் வேதனைக் கோடுகள் படர்ந்தன. சுற்றிலும் பார்த்துவிட்டு, உடன் வந்தவர்களிடம் என்னமோ கிசுகிசுத்தார். இரண்டாவது ஆங்கிலேயர் தூரத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த எழுத்தரை, 'கம் ஹியர்' என்று ஆங்கிலத்தில் இரைந்தார். எழுத்தர் தயக்கத்தோடு அருகில் வந்தார். மூக்கில் இருந்து இன்னமும் கையை எடுக்கவில்லை. வெள்ளைத் துரைக்கு இது எரிச்சலாய் வந்தது போல் தோன்றியது. எழுத்தர் அருகே வந்ததும், "எனக்கு முழு விவரமும் வேண்டும் புரியுதா" என்று உத்தரவிட்டார்.

பிறகு இரு வெள்ளையர்களும் வண்டியில் போய், உட்கார்ந்து கொண்டார்கள். எழுத்தர் நிலைமை மெல்லவும் முடியாமல்

விழுங்கவும் முடியாமல் போனது. ''என்ன ஐயர்வாள் அரசாங்க உத்தியோகத்துக்கு வந்துட்டு இதெல்லாம் பார்த்தால் முடியுமா'' என்று சீண்டினார் தலைமைப் போலிஸ்காரர்.

''யோவ். நாற்றம் குடல் புரட்டுதுய்யா...''

கூட்டத்தில் இருந்த இருவரைப் பார்த்து, ''டேய் இங்க வாங்கடா'' என்று அழைத்தார் தலைமைப் போலிஸ்காரர்.

எந்த மரியாதையும் எதிர்பார்க்க முடியாது. அவர்களிடம் முனியன் ஓடிவந்தார். கோபாலும் சமரனும் உடன் சேர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் திருவிழாவில் ஆரம்பித்து குடிசைகள் மொத்தமும் சாம்பலான வரை சொல்லி முடித்தார்கள். ஐயர் வெள்ளைத் தாளில் எழுதியதை ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு,

வண்டியில் உட்கார்ந்து இருந்த துரைகளிடம் கொண்டு போய்க் கொடுத்தார். மேலிருந்து கீழாக அறிக்கையை ஒருமுறை நோட்டம் பார்த்தார்.

துரை அதிகாரமாய் வண்டியைக் கிளப்பச் சொல்லி உத்தர விட்டார். புழுதியைக் கிளப்பிக்கொண்டு வண்டி புர்..புர் சப்தத்துடன் ஊர்ந்து கொண்டுபோனது.

போலிஸ்காரர்களும் போய்விட்டார்கள். எதற்கு வந்தார்கள் என்ன செய்தார்கள் சும்மாவே போய்விட்டார்கள். ஜனங்களுக்கு எதுவும் புரியவில்லை. அவர்கள் அங்கிருந்து போனதே அவர்களுக்கு நிம்மதியைத் தந்தது.

பிணத்தைக் கொண்டு போய் அடக்கம் செய்துவிட்டு வந்தார்கள். சாம்பலான குடிசைப் பகுதியில் வெறுமை குடி கொண்டிருந்தது. ஒரு ஈ காக்கை சப்தம் கூடக் கிடையாது.

தீய்ந்து போன நாலைந்து தென்னை மரங்கள் மொட்டையாக கொண்டிருந்தன.

திறந்தவெளி மைதானத்தில் மிஞ்சிய பண்ட பாத்திரங்களும் குடியேறியிருந்த மக்களிடம் கவலையும் பசியையும் தவிர வேறு எதுவும் மிச்சம் இல்லை. எரிச்சலும் வசவுகளுமாய்க் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்.

⊙⊙⊙

மலை மயங்கி இருள் கவிழத்தொடங்கிய நேரத்தில், பெட்ராமாக்ஸ் விளக்குகளுடன் நாலைந்து பேர் கூட்டமாய்

வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களை வேடிக்கை பார்க்க மக்கள் கூட்டம் சேர்ந்து விட்டது. வந்தவர்கள் கழுத்தில் சிலுவைகள் தொங்கிக் கொண்டு இருந்தன.

''கர்த்தர் நம்மைக் கைவிடமாட்டார்'' என்று சொல்லியபடி ஒருவர் முன்னே வந்தார். பெட்ராமாக்ஸ் ஒளியில் அவர் முகம் பிரகாசித்தது. அவரும் வெள்ளையர்தான். அவர் வாயில் இருந்து உதிர்ந்த தமிழ் வார்த்தைகள் கூடியிருந்த சனங்களுக்கு ஆச்சரிய மூட்டியது. ஆனாலும் அவர் இயல்பாகப் பேசினார்.

''வாங்க பசியோடு இருக்கற எல்லாருக்கும் கர்த்தர் உணவு அனுப்பியிருக்கிறார்'' என்று எல்லோரையும் தன் பக்கம் வரும்படி அழைத்தார். உணவு என்றதும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு வந்தார்கள். பெட்ராமாக்ஸ் விளக்கைப் பிடித்து இருந்தவர்கள் மக்கள் மத்தியிலும் பாதிரியார் முகத்திலும் ஒளிபடும்படியாய் உயர்த்திப் பிடித்தார்கள்.

பாதிரியார் சின்ன மண் மேட்டில் ஏறி நின்று கொண்டார். மக்கள் எல்லோராலும் அவரைப் பார்க்க முடிந்தது. ''நடந்த நிகழ்ச்சிகளைக் கேள்விப் பட்டோம். கிறித்துவின் பெயரால் எனது வருத்தத்தை அறிக்கை செய்து கொள்ள ஆசைப்படுகிறேறன்'' என்று சொன்னவர் சிலுவைக் குறியிட்டுக் குறி இட்டுக்கொண்டார். மக்களை நோக்கி சிலுவை வரைந்தார். பிறகு, மௌனமாக செபித்தார்.

''நாங்க உங்களுக்கு உதவி செய்ய வந்து இருக்கு, கொஞ்சம் உணவும் உடையும் கொண்டு வந்து இருக்கேன். அதை உங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ளுமுன்னே நம்ம கடினமான இந்த நிலையைக் குறித்துக் கடவுளிடம் சின்னதா ஒரு பிரார்த்தனை செய்துகொள்ளலாமா?'' என்று ஒரு வேண்டுகோள்போலக் கேட்டார்.

உடை, உணவு, கடவுள் என்று பாதிரி, மக்களைக் கவர முயற்சித்தார். மக்கள் சலசலப்பை நிறுத்த விட்டு அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் ஏற்கனவே சில கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் அவர் முன்பாக வந்து நின்று கொண்டார்கள்.

அதில் ஒருவனான கோவிந்தன் என்கிற அந்தோணிதாஸ் ''பாதர், நீங்க வந்தது எங்களோட நல்ல காலம்தான். பிரார்த்தனையை

நடத்தலாம்'' என்றான். மக்களின் கவனமெல்லாம் அவர்கள் கொண்டு வந்த பெரிய பொட்டலங்களின் மேல் இருந்தது. அவர் ஒரு சிறு பிரசங்கமும் பிரார்த்தனையும் நடத்தி அவரின் தேவனான இயேசுவிடம் முறையிட்டார்.

அவர் சொல்லியதாவது:

மேலும் எங்கள் உடமைக்கும் உயிருக்கும் மோசம் வராதபடி, எங்களைக் காத்தருளிய தேவனுக்கு நன்றியுடன் ஸ்தோத்திரத்தைச் செய்து கொள்கிறோம். இதற்குப் பதிலாக ஆமென் என்ற பதில் குரல்கள் வந்தன. பிரார்த்தனை அரை மணிநேரம் நீடித்தது. சனங்களின் பொறுமையைச் சோதிக்க விரும்பாமல் பாதிரியார் மன்றாட்டை முடித்துக்கொண்டார்.

பிறகு உணவுப் பொட்டலங்களும் போர்வைகளும் வழங்கப் பட்டன. கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்படவில்லை. எல்லோருக்கும் போதுமான அளவு உணவு கிடைத்தது.

அந்தோணி தாஸ் சின்னக் கருப்பனின் பெண்ணைப் பாதிரி முன் கொண்டுவந்து நிறுத்தினான். அவள் கண்ணீரும் அழுக்குமாய் அவர் முன்பாக வந்து விழுந்தாள் அவள் ஆடைக் ஈரத்துடன் இருந்தன. விக்கி... விக்கி அழுது கொண்டிருந்தாள்.

''மகளே கவலைப்படாதே, நிர்க்கதியானவர்களை ஆண்ட அதிகம் நேசிப்பார். தந்தையை நினைத்து வருந்தாதே. தேவனே உனக்கு என்றென்றைக்கும் தந்தையாக இருக்கிறார். இவளை நாளைக்கு கோவிலுக்கு அழைத்து வாருங்கள். அங்கேயே இருந்து கொள்ளட்டும்'' என்று ஆதரவுடன் அவளைத் தட்டி எழுப்பினார். மறுவாரம் அவள் கிறிஸ்துவப் பெண் ஆனாள்.

மாரியம்மாள் மேரியம்மாளான கதை இப்படித்தான் ஆனது. எரிந்த குடிசைகள் அகற்றப்பட்டு புதிய குடிசைகள் போடப்பட்டன. பாதிரியார் நிறைய உதவிகள் செய்தார். சேரி புதிய பொலிவோடு எழுந்து நின்றது. மேலும் ஐந்து குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து தங்கள் கழுத்தில் சிலுவைகளைத் தொங்கவிட்டுக் கொண்டார்கள். வீட்டு முகப்பில் தொங்கிய மந்திரித்த எலுமிச்சைகளுக்குப் பதில் சாத்தானை வீழ்த்தும் கப்ரியேல் படத்தை மாட்டிக் கொண்டார்கள்.

இவ்வளவு கூத்துகளையும் பார்த்துக் கொண்டு முருவன் திக்குத்திசை தெரியாத காட்டுல விட்ட கதையா, இரண்டு வாரமாக நடந்தவைகளால் கலவரப்பட்டுக் கிடந்தான். அஞ்சலை

நல்ல சோறு கறின்னு ஆக்கிப் போட்டு கவனித்துக் கொண்டதால் கொஞ்சம் மினுமினுப்பு அவன் முகத்தில் தெரிந்தது.

முருவன் அந்த ரெண்டு வாரத்துல பட்டணம் பூரா சுத்தி வந்து இருப்பான். கடலைப் பார்த்த அவனால் அதை நம்பவே முடியவில்லை. எம்மாடி எவ்ளோ பெரிசு என்று வியந்துகொண்டு, ஒரு நாலு தடவையாவது மெரினா கரையோரம் போய் உட்கார்ந்துட்டு வந்திருப்பான்.

பட்டணத்த விட்டு ஊருக்குப் போற எண்ணமே அவனுக்குத் தோன்றவில்லை. எல்லாமே புதுமையா இருந்தது.

தெருக்கோடியில் முதல் முறையா குழாய் போட்டுத் தண்ணீர் விட்டிருந்தார்கள். அதைப் பார்க்க முருவனுக்கு ரொம்ப ஆச்சரியமாய் இருந்தது.

எப்ப நம்ம கிராமத்துல இப்படி குழாயில் தண்ணீர் வரும் என்ற ஏக்கம் அவன் மனதில் வந்துபோனது.

கிராமத்துல கலங்கிப்போன ஏரித்தண்ணியதானே குடிக்கறோம். சுத்தமான கிணறு தண்ணி இருக்கும் தான், நமக்குக் கிடைக்காதே. வறட்சி காலத்துல கிணத்துத் தண்ணி மட்டுமில்லை கலங்கிப் போன ஏரித்தண்ணி கூடக் கிடைக்காது.

இதைவிடக் கொடுமை என்னடான்னா ஊருக்குள் ரொம்பப் பெரியகுளம் ஒன்று இருக்கும். ஆனால், அதில் தண்ணீர் மொள்ளக் கூடாதே. அதுல தண்ணி வத்தினதே கிடையாதுன்னு ஊர்ல பேசிக்குவாங்க. என்ன புண்ணியம் சேரி ஆளுங்க அங்க போய் தண்ணி குடிக்க முடியாது.

ஒருமுறை திருட்டுத்தனமா தண்ணி அள்ளிக் குடித்த அனுபவம் முருவனுக்கு உண்டு.

எந்தச் சுவையுமற்று நாவுக்கும் தொண்டை இனித்தது. குளத்துத் தண்ணீர் அது இனித்ததோ இல்ல அவன் அப்படி நினைத்துக் கொண்டான். அந்த குளத்துத் தண்ணீர் மீது அவன் ஏக்கமாய் இருந்த நாட்களும் உண்டு.

தனது மன வேதனையை இந்தக் குழாயடியில் தீர்த்துக் கொள்பவன் போலத் தண்ணீரைத் தன் மீது பீய்ச்சியடித்துக் கொண்டு குழந்தைபோல குதூகலித்தான்.

அன்று ராத்திரி தூங்கும் நேரத்தில் கோபால் கேட்டார்.

‘என்னடா பட்டணம் பூரா ஒரு சுத்து சுத்திட்டியா.

அவன் வெறுமனே 'ஆங்' என்றான்.

'சரி நாளைக்குக் கெளம்பு அம்மா வெசனமா இருப்பாங்க'

முருவனுக்கு இன்பமான சுவை கலைச்சிட்டா மாதிரி இருந்தது. பட்டணம் அவனை அந்த அளவு கவர்ந்து விட்டது.

'என்னடா மூச்சே காணோம்." அவன் வாயைத் திறக்காமல் உம்மென்று இருந்தான்.

"என்னடா கேட்டுக்கினே இருக்கறேன். கல்லு சாமியாட்டம் உம்முன்னு இருக்கற" என்று முறைத்தார்.

"இல்லண்ணா நீ ஒரு தடவ வந்து அம்மாவப் பாத்து வந்தா நல்லா இருக்கும்" என்று இழுத்தான்.

'கொஞ்சநாள் போகட்டும் நீ போய் அம்மாவுக்கு கூடமாட ஏதாச்சும் ஒத்தாச பண்ணு. நான் கொஞ்சம் பணம் கொடுத்து உடறேன். இன்னா..

"சரி" என்று அவன் சொன்னது அவர் காதில் விழவில்லை.

நீ வந்தினா பாவாடையைப் பாத்து எதுனா புத்திமதி சொல்வ."

"அவன விட்றா. அவன் போக்குல போவட்டும். நம்ப அப்பாவோட புத்திய போல இருக்குறான். யார் சொன்னா கேக்கப் போறான்"

ஏதோ ஆழ்ந்த யோசனையோடு சொன்னார்.

"நம்ம அப்பனும் இப்படித்தான் ஒரு தினுசா இருந்தாராம் அம்மா சொல்லும். எனக்குக்கூடக் கொஞ்சம் நெனப்பு இருக்குது. அவனும் அவரப் போலத்தான் இருக்கிறான். அவன நீயும் திருத்த முடியாது. நானும் ஒண்ணும் பண்ண முடியாது" இருவருமே கொஞ்ச நேரம் அமைதியா இருந்தாங்க. கோபால் கண்கள் லேசாகக் கலங்கின. அப்பாவை நினைக்கும் போது வழக்கமாக அவர் கண் கலங்குவது உண்டு.

"சரி, காலம்பற பஸ் ஒன்னு இருக்குது. விடிய கார்த்தால் கெளம்பிரு. அத உட்டா மறுநாள் தான் வண்டி."

இருவரும் வழக்கம்போலவே பேசிக்கொண்டே உறங்கி விட்டார்கள்.

முருவனுக்குப் புதுத் துணியும் ஊருக்கு எடுத்துப் போவ பட்டணத்துப் பொருளுங்கன்னு நெறைய வாங்கியாந்து வைத்திருந்தார். அது ஒரு மூட்டையாக மூலையில் இருந்தது.

பொழுது விடிந்ததும் தெருமுனைக் குழாயடிக்குப் போய்

குளித்துவிட்டு வந்தான். வயிறு குழாய் நீரால் தளுக் புளுக்குனு ததும்பியது. குழாயில் குளிப்பதும் குடிப்பதும் அவனுக்குப் புதுமையாய் இருந்தது.

அஞ்சலையும், முனியனும் முருவனை மேலும் கீழுமாய்ப் பார்த்தார்கள்.

முனியனோட மகள் சின்னப்பொண்ணு முருவன ஒளிச்சி நின்னு பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. மஞ்சள் நிறத்தில் முழுக்கால் சட்டையும் நீல முழுக்கைச் சட்டையும் போட்டுக் கொண்டு பிரகாசமாய் இருந்தான். முருவனும் தன்னைத்தானே பலமுறை பார்த்துக் கொண்டான். எண்ணெயும் தண்ணீரும் சேர்ந்து தலைமுடியை வளைத்துக் குழைத்து வாரி முன்பக்கம் சுருள் வைத்து விட்டிருந்தான். தெருவில் போவோர் கூட அவனை ஒருமுறை பார்த்துவிட்டுப் போனார்கள். அவனுக்கும் பூரிப்பாய் இருந்தது. வெளியே போக வெட்கமாய் இருந்தது. சின்னப் பொண்ணு அவனைக் கிண்டல் செய்வது பால் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். முருவனுக்குக் கூச்சம் தாங்க முடியவில்லை.

கோபாலிடத்தில் முகம் கொடுத்துப் பேசாதவள் முருவனிடத்தில் சகஜமாகப் பழகினாள்.

ஊருக்குக் கிளம்பும்போது ஒளிந்துகொண்டு நின்றவளைப் பார்த்து, 'போய் வரேன்' என்று சொன்னான். தலையாட்டி விட்டுச் சின்னப் பொண்ணு தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டாள்.

புது ஆடையில் மினுமினுத்தபடி ஒரு பெரிய பையைத் தூக்கிக் கொண்டான். இன்னொரு பையையும் தூக்கித் தோள் மேல் வைக்கப் போனவனை,

'டேய் கீழ இறக்குடா' என்று அதட்டினார் கோபால். மதுர மாட்டு வண்டிய ஓட்டிக்கொண்டு வந்தார். அவர்களை ஏற்றிக்கொண்டு கரடு முரடான பாதையைக் கடந்து ஓடியது வண்டி.

தெரு முனையைத் தாண்டி வண்டி திரும்பும் வரை முருவன் முனியனுக்கும் அஞ்சலைக்கும் கையசைத்துக் கொண்டே போனான். பின்பக்கமாகச் சின்னப்பொண்ணு ஏக்கமாக நின்றிருப்பது தெரிந்தது. அவனும்கூட அவளுக்காக ஏங்கினான்.

இதற்கான அர்த்தங்களைக் கோபாலும் அறிந்துதான் வைத்திருந்தார். அமைதியான காலைப் பொழுதில் வண்டி

குலுக்கலோடு ஓடியது. மூட்டை உருண்டுவிடாமல் கெட்டியாக, பிடித்துக் கொண்டிருந்தான் முருவன்.

''நீ எப்ப ஊருக்கு வரப் போற?''

பூக்கடைப் பேருந்து நிலையம் நெருங்கியது.

''சரிப்பா வண்டிய ஓரமா நிறுத்திக்கோ. இவன வண்டி யேத்திட்டு வர்றேன்'' வண்டியில் இருந்து குதித்தார் கோபால்.

அந்த ஒரே பஸ்தான் ஊருக்குப் போய் வந்து கொண்டிருந்தது. அந்த பஸ்ஸ விட்டா அதோட நாளைக்குத்தான்.

பஸ் நின்று கொண்டிருந்தது.

நீ எப்ப ஊருக்கு வரப்போறன்னு முருவன் கேட்டது கோபால் காதில் விழவே இல்லை. மீண்டும் கேட்க நினைத்தான். ஏனோ சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

கோபால் திடீரென்று தம்பியின் தோளைத் தட்டினார்.

'இன்னும் ஒரு மாசம் போல போவட்டுண்டா நான் ஊருக்கு வர்றேன். நீ அம்மாவ நல்லபடியா பாத்துக்க இந்தா இத அம்மாகிட்ட குடு'' என்று கொஞ்சம் பணத்தை அவன் பாக்கெட்டில் திணித்தார். மூட்டையைத் தூக்கிப் போய் நடுமத்தியில இடம் புடுச்சி முருவன உக்கார வச்சுட்டுக் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருந்தார். பஸ் நிறைய கூட்டம் நெருக்கியடித்தது. கீழே இறங்கி வரமுடியவில்லை.

''டேய் பத்திரம்'' சன்னல் வழியாகப் பார்த்துத் தம்பியை எச்சரிக்கை செய்தார்.

முருவன் மௌனமாய்த் தலையாட்டினான். அண்ணன் தன் கூடவே ஊருக்கு வந்துவிட மாட்டாரா என்று குழந்தைபோல் ஏங்கினான்.

கோபால் மெயின் ரோட்டைக் கடந்து பிராட்வே சாலைக்குள் நுழைந்தார். எதிர்ப்புறத்தில் வந்தே மாதரம்... வந்தே மாதரம் என்ற பலத்த கோஷங்களை எழுப்பிக் கொண்டு ராட்டை பொறித்த மூவர்ணக் கொடியை ஏந்தியபடி சுதந்திரப் போராளிகள் வந்து கொண்டிருந்தார்கள். உணர்ச்சிப் பிழம்பான பலத்த குரல்.

முழக்கம் போட்டு வந்தவர்களில் முதலில் வந்த ஒருவரை எங்கோ பார்த்த முகம் போல இருந்தது. அடையாளம் தெரியாமல் குழம்பினார் கோபால்.

ஞாபகம் வந்தது. பக்கத்துத் தெருவில் வசிப்பவர். கோவில்

திருவிழாவுக்குக் காங்கிரஸ் தலைவரை வரவழைத்தது இவர்தான். அவரோடு கோபாலுக்கு அவ்வளவு பழக்கம் இல்லை. இவங்க, இப்படி விடுதலைப் போராட்டம் அது, இதுன்னு வாழறாங்க. நாம் சம்பாதிக்கறதும் சொந்த நிலைமைகளைச் சமாளிக்கறதுமா பிழைப்பு நடத்தறோம் என்று அவரது நெஞ்சில் ஒரு கணம் தோன்றியது.

போராளிகள் ஒரே சீராய் அணிவகுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் கைகளில் மூவர்ணக் கொடி படபடத்தது. போராளிகளின் வாயிலிருந்து நெருப்புபோல் அனலோடு வந்தே மாதரம், வந்தே மாதரம் என்ற சத்தியக் குரல் ஆவசேமாய் வெளிப்பட்டது. கோபால் ஒரு கணம் உடல் புல்லரிக்க நின்று அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீர்னு எங்கிருந்தோ பாய்ந்து வந்தார்கள் குதிரைப்படைப் போலீசார். போராட்டக்காரர்கள் மத்தியில் சூறாவளி போல் பாய்ந்து சுழன்று அட்டூழியம் செய்தார்கள். குதிரையில் உட்கார்ந்தபடி நீளமான தடிகளால் மண்டைகளில் குறிபார்த்து வீசி அடித்து நெருங்கினார்கள்.

கூட்டம் சிதறி சின்னாபின்னமானது. மண்டையில் பலத்த காயங்களோடு போராளிகள் தரையில் விழுந்து கிடந்தார்கள். தப்பித்தவர்கள் அடிபட்டவர்களை இழுத்துக்கொண்டு ஓடினார்கள். சிலர் குதிரைகளின் வலுவான குளம்படியில் சிக்கிப் பரிதாபமாக அலறினார்கள்.

சில நிமிட நேரங்களில் நடந்தேறிய இந்தக் கொடூரம் எல்லோரையும் பீதியடைய வைத்தது. நெஞ்சுரமிக்க சில போராளிகள் வெள்ளைக் கதராடையில் புதியதாய் வழிந்த ரத்தம் பயங்கரமாகக் காட்சியளிக்க, தொடர்ந்து வந்தே மாதரம்... வந்தே மாதரம்... என்று வெறியோடு குரலெழுப்பினார்கள்.

ஒரு வெள்ளை அதிகாரி குதிரையில் அவர்கள் பக்கமாய் வந்து அவர்களது முதுகில் உதைத்தான். இருவர் கீழே சாய்ந்தார்கள். குதிரையை அவர்கள் மேல் ஏற்றி விடுவது போல் போக்குக் காட்டினான். அப்போதும் அவர்கள் ஓயவில்லை. குரலெழுப்பிக் கொண்டே இருந்தார்கள்.

சாலையெங்கும் கதர் வேட்டிகளும் செருப்பும் கொடியுமாய்ச் சிதறிக் கிடந்தன. சில நிமிடங்களில் போர்க்களமாய்க் களேபரமாய் நடந்தது. அங்கு எழுந்த கூச்சலும், மரண ஓலமும்

பார்ப்பவரை நடுங்க வைத்தது. போராளிகள் நாலாப் பக்கமும் சிதறி ஓடினர். பத்துக்கும் அதிகமானோர் தரையில் விழுந்து மூர்ச்சையடைந்து கிடந்தார்கள். இதுபோன்ற கொடுமையை முதல் முறையாகப் பார்த்த கோபாலுக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. பல்லைக் கடித்தார். யாரோ அவரை உசுப்பி விட்டதுபோல் சினமடைந்து விட்டார்.

குடிசை தீப்பிடித்து எரிந்தபோது வந்து பார்த்து விட்டுப் போன வெள்ளை அதிகாரிகள், பிறகு உணவு உடை கொடுத்த வெள்ளைப் பாதிரியார், இப்போது அமைதியாகப் போய்க் கொண்டிருந்த கூட்டத்தை அடித்து நொறுக்கும் வெள்ளைப் போலிஸ் அதிகாரிகள். இவர்கள் எல்லாம் இப்போது கோபால் கண்முன் வந்து போனார்கள்.

என்ன விபரிதமான தேசம் இது! இப்படிப்பட்டவர்களின் ஆளுமையில் நாடு இருப்பதை இப்போதுதான் முதல் முறையாக கோபால் உணர்ந்தார்.

அடிமைகளின் தேசத்தில் உரிமைக் குரலுக்கு அடியும், உதையும்தான் பரிசு.

நம்மவர்கள் நமக்குச் சாணிப்பாலும், சாட்டையடியும் கொடுக்கிறார்கள். வந்தவனோ ஒட்டு மொத்தமாக எல்லாருக்கும் குண்டாந்தடியும் பூட்சு காலால் மிதியும் கொடுக்கிறான். நல்ல உலகம்தான்.

பலவிதமாக யோசித்தபடி அவர் வேலையிடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

கொடவுனில் வழக்கம் போலவே வேலை சுறுசுறு நடந்து கொண்டிருந்தது.

லாரி மீது ஏற்றப்பட்ட மரப்பெட்டி. பார்சல் ஒன்று உருண்டு சாலையில் விழுந்ததில் சாலையில் கைவண்டி இழுத்துச் சென்ற வனைக் கலவரப்படுத்திவிட்டது. பயந்து போனவன் லாரி மீது இருந்த ஆட்களைக் கடுமையாக முறைத்துவிட்டு ஆபாசமாய்த் திட்டிவிட்டுப் போனான்.

''டேய் தடியா பார்த்துடா. கொஞ்சம் தள்ளி விழுந்து இருந்தால் அவனுக்குத் தலையே காணாம போயிருக்கும் பாத்து வேலை செய்யிடா'' என்று எச்சரித்தார் கணக்குப்பிள்ளை.

முனியன் வெளியே நின்றுகொண்டு வேலையாட்களுக்கு உத்தரவு போடுவதும் வேறு கிடங்குகளில் வேலை ஏதும் இருக்கிறதா

என்று பார்த்து வருவதுமாய் அலைந்து கொண்டிருந்தார்.

இப்போதெல்லாம் கோபால் லாரிமீது ஏறுவது கிடையாது. கிடங்கில் சரக்கேற்ற ஆட்களுக்கு உதவி செய்வதோடு சரி. இந்த உலகில் ஆதிக்கம் உள்ளவன் அரசன். அடங்கிப் போறவன் ஆண்டி. இல்லைனா வயலுக்கும் வரப்புக்குமா தாவிக்கிட்டிருந்தவன் பட்டணத்துக்கு வந்த கொஞ்ச நாள்ல மேஸ்திரி, முனியனுக்குத் தளபதியாக முடியுமா?

தனக்குப் பிறகு தனது மச்சானே மேஸ்திரி பதவிக்கு வரணும். அதுதானே முனியனோட ஆசையும். அந்த ஆசைக்குப் பங்கம் இல்லாமல் நடந்து கொண்டார் கோபால்.

கிடங்கில் முந்திரிப் பருப்பு மணம் வீசியது. ஒரு மரப் பெட்டி விழுந்து சணல் மூட்டை கிழிந்ததில் வெள்ளை வெளேரென்று பருப்பு இறைந்து கிடந்தது.

சுமையேற்றிக் களைப்படைந்த பொட்டக் கண்ணன் ஒரு பிடி முந்திரியை அள்ளி வாயில் போட்டவன் மீண்டும் கை நிறைய அள்ளிக் கால்சட்டைப் பையிலும் போட்டுக் கொண்டான். ஏற்கனவே அவனது இன்னொரு கால் சட்டையின் வலது பக்கப்பை நிறைமாதமாய் உப்பியிருந்தது இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கணக்குப்பிள்ளைக்கு ஆத்திரமாய் வந்தது. பருப்பை ஒரு பிடி அள்ளி வாயில்போட்டு மென்று விழுங்க அவரும் ஏங்கினார். அப்படிச் செய்வது கௌரவக் குறைச்சலாகவும் பட்டது. எனவே, பொட்டைக் கண்ணனைப் பார்த்து மனதிற்குள் பொருமினார்.

பொட்டக் கண்ணன் சுமையை வண்டியில் ஏற்றிவிட்டு குடவுனுக்குத் திரும்பும்போது, கால்சட்டைப் பையில் இருந்த பருப்பு, பிரசவம் முடிந்துவிட்ட வயிறு போல் வற்றி யிருந்தது. அவன் மறுபடியும் முந்திரிப் பருப்புக் குவியல் போனான். பொறுக்குமா கணக்குப் பிள்ளைக்கு. அவன் வாயில் போட்டதுதான் தாமதம்.

'டேய் ஒரு அளவு வேணாமா ஒரு மூட்டைய நீயே காலி பண்ணிடுவ போல இருக்குதே. முதலாளி கணக்கு கேட்டா நீயா பதில் சொல்லுவ? எடுத்தது போதும் போ... இனி அந்தப் பக்கம் போவாத...''

பொட்டக் கண்ணனுக்குச் சுருக்குன்னு வந்தது கோபம். வாயில் குதப்பிய முந்திரியைத் தூவெனத் துப்பினான். வேறு.

மோசமான ஆபாச வார்த்தையையும் சொன்னான்.

அவன் சொன்னது பக்கத்தில் அப்போதுதான் அங்கு வந்த கோபாலுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. அருவருப்பில் அவரும் தூவெனத் துப்பினார். அவன் சொன்னது கணக்குப் பிள்ளைக்கும் கேட்டிருக்கும். காதுல விழாதவர்போல 'சரிப்பா ஏத்தினது போதும் வண்டிய எடுக்கச் சொல்லு' என்று குரல் கொடுத்தார். சுமை ஏற்றிய வண்டி போய் காலி வண்டி வந்து நின்றது. கணக்கப்பிள்ளை மீண்டும் பொட்ட கண்ணனை பார்த்தார். அவன் வாய் அசை போடவில்லை. ஆனால், இரண்டு கால் சட்டைப்பையும் பருப்பால் உப்பிப் போய் இருந்தது. அவரால் ஒன்றும் பேச முடியவில்லை.

அதெல்லாம் பெரிய விஷயமே இல்லை. சிந்திச் சிதறிப் போகும் பருப்பில் கணக்கில் காட்டலாம். குடவுன் எலிகளைவிட இந்த மனிதர்கள் அனுபவிப்பது குறைவுதான். சோதனைச் சாவடிகளில் வழிமறிக்கும் அதிகாரிகள் வெறுமனே ஒரு பார்வையால் இரண்டு மூட்டைகளை அபகரித்து விடுவார்கள். பொட்டைக் கண்ணன் இதையெல்லாம் யோசித்தானோ என்னவோ வீட்டுக்கு எடுத்துப் போகுமளவு சேர்த்து விட்டான்.

இதுபோன்ற விஷயங்களில் அதிக ஆர்வம் காட்டாத பீமன் வண்டியில் சுமைகளை ஒழுங்காக அடுக்கிக் கொண்டிருந்தான். அவன் கையில் இருந்த ஊக்கு அவனுக்கு ஆறாவது விரல்போல இருந்தது. ஐம்பது கிலோ மூட்டைகள் அவன் தலைக்கு மேலாக இளவம் பஞ்சுத் தலையணை போல சுழன்றது. பெயருக்கேத்த பெரிய உடம்பு அவனுக்கு.

கிடங்கு ஆட்களிலேயே கோபாலுக்குப் பிடித்தமான ஆள் பீமன் தான். அவனது உடல் வாகும் செயலும் பெயருக்கு ஏற்றபடியே இருந்ததுதான் ஆச்சரியம்.

நடுப்பகல் சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். அனல் அதிகமாய் வாட்டியது. ஆட்கள் கருத்துப்போய் கருங்கற்களைப் போல் ஜொலித்தார்கள். வியர்வை மட்டும் ஆவியாகிக் காய்ந்து போகாமல் இருக்குமானால் பாதம் மூழ்கிவிடும் அளவுக்கு அங்கே வியர்வை தேங்கியிருக்கும். எப்போதாவது வரும் கடற்காற்று அவர்களைப் பரவசப்படுத்தி விட்டுப்போகும்.

பகல் இடைநிறுத்தத்தின்போது, உணவுக்கு குப்பாயி கூடை சோறுதான். பிளாட்பாரத்தில்தான் கடையென்றாலும் எண்ணெய்

மிதக்கும் அந்த மீன் குழம்புச் சட்டியைக் கண்ணால் பார்க்கும் போதே, நாக்கு எச்சில் கிணற்றில் மூழ்கிவிடும். உழைப்புக்குப் பின்பான பசியில் நிழல் பகுதியாய்ப் பார்த்து குத்துக்கால் போட்டு உட்கார்ந்துகொண்டு மீன்சோறை ஒரு பிடி பிடிப்பார்கள். பிறகு பீடி வெற்றிலை எல்லாம் நடக்கும். சுமைகள் இல்லாத சமயத்தில் குட்டித் தூக்கமும் கிடைக்கும். முனியனுக்கும் கோபாலுக்கும் கிடங்குக்கே தூக்குச் சட்டியில் பகல் வேளை உணவு போய்விடும். குப்பாயி நல்ல மீன் துண்டுகளைப் போட்டு ஆட்களிடம் கொடுத்து விடுவாள்.

கோபால் மீன் குழம்பு ரசிகர். அன்று குழம்பு அருமையான பக்குவத்தில் இருந்தது. நெய் நிறைந்த சங்கராவை ருசித்துச் சாப்பிட்டார். குடவுனிலே அன்று வேலை குறைவு. சுமையேற்றும் வேலை முடிந்துவிட்டது. ஒரு மூலையில் துண்டை விரித்துப் படுத்துக் கண்களை மூடினார்.

தாலி கட்டிய மனைவி ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைப்பு அவருக்கு இல்லவே இல்லை. அவரைப் பற்றி யாருக்கும் எந்த விவரமும் தெரியாது. எதையும் வெளிப்படையாகப் பேசாதவர்.

முனியன் எவ்வளவோ கேட்டுப் பார்த்துவிட்டார். வாயைத் திறக்காத மனுசனுக்கு மனைவி பேச்சை எடுத்தாலே கோபம் மட்டும் பொத்துக்கொண்டு வருகிறது. வசவுகள் சரமாரியாக வந்து விழுகிறது.

'அவ யாரோ நான் யாரோ அவளப் பத்தி இனி பேச வேணாம்' என்று ஒரு முறை கோபமாகக் கத்திவிட்டார் கோபால். எது எப்படியோ தன் மகளையாவது கட்டிக்குவியான்னு கேட்கலாம் என்று தோணும். எதாவது பிரச்சனை பண்ணிடுவானோ என்று பயந்தார் முனியன். ஆனால், அந்த ஆசை மட்டும் அவர் மனதில் பலமாக வளர்ந்துகொண்டு வந்தது.

குடவுனுக்கு வெளியே கட்டை வண்டிகளின் கட கட சத்தமும் ஒன்றிரண்டு மோட்டார் கார்களின் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தன. துறைமுகத்தில் நின்ற கப்பல்களின் சங்கொலிகூட எப்போதாவது கேட்டது.

கோபால் கையைத் தலைக்கு அடியில் மடித்து வைத்துக் கொண்டு ஒரு பெட்டியின் மேல் படுத்துக் கொண்டிருந்தார்.

வெளியே வழக்கத்துக்கு மாறாகப் பெருங்கூச்சல் கேட்டது, பிறகு அது பேரிரைச்சலாக மாறி லேசான உறக்கத்தில் இருந்த

கோபாலைக் கலவரப்படுத்தியது.

பதட்டத்தோடு கோபால் கிடங்குக்கு வெளியே வந்து எட்டிப்பார்த்தார்.

பெருங்கூட்டமாய் சனங்கள் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கோபால் கூட்டத்தை விலக்கிக்கொண்டு போனார். யாருடனோ கைகலப்பில் திமிறிக் கொண்டிருந்த பீமனை முனியன் மடக்கிக் கொண்டிருந்தார். அவரை ஒரு ஓரமாய்த் தள்ளிவிட்டுத் தான் குறிவைத்த ஆளைத் துவைத்துப் பிய்த்தெறிந்து விடுவதுபோல் தாவித்தாவித் தாக்கிக் கொண்டிருந்தான் பீமன்.

'டேய் மாமனை விட்டுர்றா, அந்தாளு குடிச்சிருக்கு' என்று பீமன் கையைப் பிடித்துக் கெஞ்சிக் கொண்டிருந்தாள் அவனுடைய அக்காள்.

அவள் உதட்டில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்கும்போது பீமன் இன்னும் வெறிகொண்டு மாமன் மேல் பாய்ந்தான்.

அந்தக் குடிகார மாமன் நிலை குலைந்து கீழே விழுந்தான்.

இன்னொருதரம் அக்கா மேல கைய வைச்ச குடிகார தே.. மவனே குடல உருவிடுவேன் என்று பேய் போல கத்தினான். ஆவேசத்தில் அவனுக்கு மூச்சு இரைத்தது. அவன் கையைப் பிடித்து ஓரமாய் இழுத்து வந்தார் கோபால். இந்தாளு எப்பப்பாரு குடிச்சுகிட்டு வந்துந்து அக்காளப் போட்டு மிதிக்கிறான். என்னைக்காச்சும் ஒரு நாள்னா சரின்னு வுடலாம். இந்த தேவடியாப் பயலுக்கு இதே பொழப்பா போச்சு... தூ...

'சரி வா குடிச்சிட்டு இருக்கான். ஒரு நேரம்போல இருக்காது...' என்று அவனைச் சமாதானப்படுத்தினான்.

சொந்த அக்கா வீட்டுக்காரன் ரிக்ஷா ஓட்டி வர காசுல சாராயத்தக் குடிச்சிட்டுப் பொண்டாட்டியப் போட்டு அடிக்கறது தெனமும் நடக்குற சங்கதிதான். பாவம் கூடப் பொறந்தவள். எத்தனை நாளுக்குத்தான் சும்மா பார்த்திட்டு இருக்க முடியும்.

வேடிக்கைப் பார்த்த சனம் திருப்தியற்ற முறையில் கலைந்து போனது.

''இந்த மாதிரி தினமும் ஊரு சிரிக்கறதவிடப் போய் எங்கயாவது உழுந்து செத்துத் தொலை'' என்று அக்காளைப்

பார்த்துக் கத்தினான்.

'சரி விட்றா அவ இன்னாடா பண்ணுவா? வா எல்லாம் சரியாப் போயிரும். அவ செத்துட்டா எல்லாம் சரியாயிடுமா...'' என்றார் கோபால்.

அவன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிடங்குக்குப் போய்விட்டான்.

அவன் மாமனும் அக்காளும் பட்டணத்துக்குப் பொழைக்க வந்த காலத்தில் தெருவில் பிளாட்பாரத்தின் ஓரத்திலேயே குடியமர்ந்து விட்டார்கள்.

மாமனுக்கு இருக்கவே இருக்கு கை ரிக்ஷா. மல்லிகா அதே தெருவில் முகமதியர் வீடு ஒன்றில் பாத்திரம் தேய்ச்சி துணி துவைக்கும் வேலையைப் பிடித்துக் கொண்டாள். கிராமத்தில் இருந்து பட்டணம் பொழைக்க வந்தவர்களுக்குச் சுலபமாக வாய்ச்சது இதுதான். ஏழைகளுக்கு வேறு என்ன வாய்க்கும். அவர்கள் கிராமத்திலிருந்து வரும்போது பீமன் ரொம்ப சின்ன பையன். இப்ப மாமனையே தட்டிப்போடும் அளவுக்கு வளர்ந்து விட்டான்.

பகலெல்லாம் உழைப்பு. வயித்துச் சோத்துக்குப் போதும் அப்புறமென்ன இருட்டிப் போச்சுன்னா தெருவே சந்தடி ஓய்ந்து போகும். பிளாட்பாரத்திலே நல்ல இடமா பாத்துத் துணிய விரிச்சுத் தூங்க வேண்டியதுதான். வேற எதபத்தி யாருக்குக் கவலை என்ற போக்கில் அவர்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. துறைமுகத்தில் இருந்து வீசும் காத்து கிராமத்துல கூடக் கெடைக்காது.

மாமனுக்குப் பீடிக் கட்டும் சாராயமும்தான் வாழ்க்கை. அதுக்கு இருக்கவே இருக்குது ரிக்ஷா.

ரிக்ஷா முதலாளிகள் கிராமத்தில் இருந்து ஓடிவரும் ஏழை மனிதர்களுக்காகக் காத்துக் கிடந்தார்கள். அப்படி ஓடி வருபவர்களுக்கு எப்படியும் இழுக்க ஒரு ரிக்ஷா கிடைக்காமல் போகாது. பட்டணத்தில் தான் சொகுசாக அரை கிலோமீட்டர் தூரத்துக்குக் கூட சொகுசாக பயணம் செய்ய நிறைய பணக்காரர்கள் இருக்கிறார்களே!

மல்லிகாவுக்கு வயித்துக்குச் சோறும் கட்டிக்கத் துணியும் வேணும். அதுக்குச் சலீம் பாய் வீடு இருக்குது. அங்கு மிச்சமாகும் நெய் நிறைந்த உணவுகளைத் தான் தின்றதுபோக

வூட்டுக்காரனுக்கும், தம்பிக்குமாக எடுத்து வருவாள்.

பீமனுக்குக் கிடங்கும் அதில் அடுக்கியிருக்கிற மூட்டைகளும் தான் படுக்கை. முதலாளி பொருளுக்குக் காவல் இருந்து போலவும் தங்க இடமுமாச்சு என்பதுபோல காலம் ஓடியது.

பீமனும் போதையேத்திக்கிறதுல கில்லாடிதான். இரண்டு பேரும் குடியர்கள். குடிப்பதை அவன் ஒருவனே குடித்துத் தீர்த்து விடுவான். வேலை நேரத்தில் அந்த எண்ணமே வராது என்பது ஆச்சரியமான விஷயந்தான்.

அவன் படிக்காவிட்டாலும் எதையும் புரிந்துகொள்ளும் புத்தி அவனுக்கு இருந்தது.

கோபாலுக்கு நம்பிக்கையான ஆள். அவரிடத்தில் ரொம்பப் பாசத்தோடு பழகினான். கூலியைத் தவிர அவனது கைச் செலவுக்குக் கூடுதலாகப் பணம் கொடுப்பார் கோபால்.

கொஞ்ச நாள் கட்சிக் கூட்டம்ன்னு அலைந்து கொண்டிருந்தான். கோபால் தான் அவனை அதட்டி ஒழுங்கா வேலைக்கு வரும்படி செய்தார். அவனுக்குள் சுதந்திரம் வெள்ளையன் போன்ற வார்த்தைகள் நன்றாகப் பதிந்துவிட்டன. வெள்ளையனால் தனக்கு எந்தக் கெடுதியும் ஏற்படவில்லையே என்பது போலத்தான் அவன் உணர்ந்து இருந்தான். ஒருமுறை காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியின் பேச்சைக் கேட்டபோது, அவனுக்கு ஏதோ புரிந்தது. நம் நாடே வெள்ளையனிடம் அடிமையாக இருப்பதை அவன் புரிந்துகொண்டான். ஆனால் தன் கிராமத்தில் தன் மக்களே தன்னை அடிமையாக வைத்திருந்தது அவன் நினைவுக்கு வந்தது.

ஊரில் உள்ள சாதிக் கொடுமைகள் அவனது அச்சத்தை ஏற்படுத்தின.

சிறுவயதில் தன் மாமனை மரத்தில் கட்டிப்போட்டு சாணியைக் குடிக்க வைத்ததையும் புதிதாக மணம் ஆனவள் என்ற இரக்கம் கூட இல்லாமல் தன் அக்கா ஆண்டையால் மானபங்கம் செய்யப் பட்டதையும் பீமன் நினைத்துப் பார்க்கும்போது அவன் நடுங்கினான். இந்தக் கொடுமைகள் செய்தவர்களை யார் தண்டிப்பது என்ற எண்ணம் அவன் நெஞ்சில் பல காலமாக இருந்தது. பட்டணம் வந்து கொஞ்ச காலம் அவன் அதை மறந்திருந்தான். இப்போது காங்கிரஸ்காரர்கள் நடத்தும் கூட்டங்களில் அவர்கள் பேசும் பேச்சுகள் அவன் மண்டையில் பல கேள்விகளை உருவாக்கின.

ஆனாலும் வந்தே மாதரம், சுய ராஜ்ஜியம், வெள்ளையனே வெளியேறு என்ற வார்த்தைகள் அவனுக்குள் கொதிப்பை ஏற்படுத்தின. சமீப காலமாக அவன் கதராடை உடுத்தத் தொடங்கினான். நாட்டில் உள்ள எல்லாக் குழப்பங்களுக்கும் வெள்ளையனே காரணம் என்ற மேம்போக்கான வாதத்தினை அவனும் நம்பினான். ஒரு இந்தியன் என்ற முறையில் வெள்ளையன் பேரில் சினம் கொண்ட மனிதனாக அவன் எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் கலந்து நிறைய தடியடிகளை வாங்கி யிருக்கிறான்.

துறைமுகத்துக்கு வெளியே மலிவாகக் கிடைத்த டெர்லீன் துணிகளை வாங்கி உடுத்தும் அவனுக்குக் கதராடை அணியப் பிடிக்கவில்லை. ஆனால், விடுதலை உணர்வும் வெள்ளையன் மேலிருந்த வெறுப்பும் அவனைக் கதராடை உடுத்தும்படி கட்டாயப் படுத்தின. தீவிரத் தொண்டனாக இருந்தவனை சுதந்திரம், விடுதலை என்ற வீரமிக்க வார்த்தைகளில் அவனைச் சந்தேகம் கொள்ள வைத்தது ஒரு நிகழ்ச்சி.

கையில் பணம் சேர்ந்துச்சுன்னா, கிராமத்துக்குப் போய் வருவான். அப்படி அவன் போகும்போது, ஊரே திரண்டு வந்து அவனைப் பார்க்கும். அவனும் அவன் டெர்லின் சட்டையுமாய் பளபளன்னு. ஒரு சிலர் அந்தச் சட்டையைத் தொட்டுத் தடவிக் கூடப் பார்ப்பார்கள். அப்படியொரு அட்டகாசமாய்ப் போய் வருபவனின் சட்டையை இரவல் வாங்கிப் போட்டுக்கொண்டு சந்தைக்குப் போய்ப் புகைப்படம் எடுத்துக் கொண்டவர்கள் ஏராளம். இத்தனை பவுசுமிக்க டெர்லீன் சட்டையைச் சுதந்திர இந்தியாவுக்காக இழந்து கதராடை உடுத்திய தேச பக்தன் அவன்.

சுதந்திர இந்தியா என்ற நினைப்பு அவனைக் கிளர்ச்சியடையச் செய்தது.

வெள்ளையன் நம்மை ஆள்வதால்தான் நாம் பஞ்சப் பராரிகளாய் ஓட்டாண்டிகளாக இருக்கிறோம் என்று நம்பிய அப்பாவிகளில் அவனும் ஒருவன். சுதந்திரம் என்ற வார்த்தை அவனுக்குச் சொர்க்கத்தை நினைவுபடுத்தியது.

◉◉◉

அந்த வாரத்தில் நிறைய கூலி கிடைத்திருந்தது. ஊருக்குப் போக நினைத்து வழக்கமாக கிராமத்தில் கிடைக்காத பொருள்களை

எல்லாம் வாங்கிச் சேகரித்துக்கொண்டு புறப்பட்டான். கூடவே, அவனுக்கு ரொம்ப நாட்களாகவே ஓர் ஆசை இருந்தது.

கிராமத்துக்குள் இருக்கும் முருகன் சிலைக்கு ஒரு மாலை வாங்கிப் போய் போடவேண்டும் என்ற வெகுநாள் கனவை நிறைவேற்ற நல்ல பெரிய மாலையாக வாங்கிக் கொண்டான். காங்கிரஸ்காரர்கள் சுதந்திரம், அடிமைத்தனம் ஒழிப்போம் என்று பேசுவதெல்லாம், அவனுக்குள் இருந்த பழைய சாதிய பயத்தைப் போக்கியிருந்தது.

ரொம்பப் பழைமையான கோயில் அது. பெரிய பாறையின் மேல் கட்டியிருந்தார்கள். கோயிலுக்கு வலப்புறத்தில் நில சொந்தக் காரர்களும் இடப்புறமாகக் கூலிகளும் வாழும் குடியிருப்புகள் இருந்தன.

சில விசேஷ நாட்களில் மட்டும்தான் அங்கு பூசை நடக்கும். மற்ற நேரங்களில் ஆடுகள், மாடுகள் இளைப்பாறும் இடமாக மாறிவிடும். நிழல் இல்லாததால் மனுசங்க யாரும் ஒதுங்கக்கூட மாட்டார்கள்.

பாம்புகள் விளையாட்டுத் திடல் என்றுகூட பெயர் வைக்கலாம். அவ்வளவு பாம்புகள் அங்கு ஊர்ந்துத் திரிந்தன. பாம்புக் கோயில் என்று பசங்கள் சர்வ சாதாரணமாகப் பேசிக் கொள்வார்கள்.

வருஷத்துக்குப் பத்து நாள்தான் அது கோயில்போலத் தெரியும். அதுக்குள்ள இருக்கும் சாமியப் பார்க்கணும் பீமனுக்கு ஆச. ஒரு தடவக்கூட கோயிலுக்குப் போனதில்லை. போகத்தான் முடியுமா? கதவு இல்லாத அந்தக் கோயிலுக்குச் சாதி காவலாக இருந்தது.

இப்ப கிராமத்த நோக்கி நடந்துவரும்போதே பாதைமேல் கம்பீரமா தெரிஞ்சது கோயில் கோபுரம்.

வாழை இலையில் சுற்றுப்பட்டிருந்த மாலையைப் பிரித்தான். பஸ்ஸில் வரும்போதே பாதிப்பூக்கள் உதிர்ந்து விட்டன.

பாறையில் ஏறி முருகனைப் பார்த்தபோது அவனுக்கு உடம்பு ஜிவ்வென்றிருந்தது.

செருப்பை ஓர் ஓரமாகக் கழற்றி வைத்து விட்டுச் சிலைக்கு மாலை போட்டான். முருகனை விடவும் மாலை பெரிதாக இருந்தது. தரையில் விழுந்து வணங்கினான். மனத்திருப்தியோடு வெளியே வந்தவன், செருப்பைப் போட்டுக் கொண்டு மூட்டைகளைத் தூக்கித் தோளில் வைத்தான். அந்த நேரம் பார்த்து பின் பக்கம் யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

‘யாருப்பா அது?’ என்று குரல் கொடுத்தார், வந்தவர். வந்தவரை அவனுக்கு அடையாளம் தெரிந்தது. மரியாதைக்குக் கும்பிட்டான். ‘நான்தான் சாமி.’

‘நீயா’ என்றவர் மலத்தை விழுங்கியவர்போல முகத்தைச் சுளித்தார்.

‘அடப்பாவி, நீயா சாமிக்கு மாலையைப் போட்ட?’ அவர் தலையில் அடித்துக் கொண்டு துண்டை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டார். அவர் கண்கள் தீக் கங்குகளைப்போல கோபத்தால் வெறியடைந்து மின்னியது.

ஊரு ஏற்கெனவே காஞ்சி, களைகெட்டுப் போய்க் கெடக்குது இது வேறவா.. உருப்படாத ஈனப்பயலே என்று வார்த்தை நெருப்பை அவன் மேல் கொட்டினார். பீமன் அதிர்ச்சியடைந்து விட்டான். என்னடா இது சாமிக்கு மால போட்டு வணங்குனதுக்கு இப்படி மரியாதை கெடைக்குதேன்னு எரிச்சலடைந்து போய் விழித்துக் கொண்டு நின்றான். நிறைய கூட்டங்களில் தலைவர்கள் பேச்சைக் கேட்டு வழக்கமான நிலைமைகள் எல்லாம் மாறிவிட்டதாக அவன் நினைத்துக் கொண்டிருந்தான்.

அவர் பக்கத்தில் இருந்த புதிரில் இருந்து நீளமான குச்சியை எடுத்து வந்து சிலையின்மேல் இருந்த மாலையை எடுத்துத் தூரமாய் வீசினார்.

‘ஏண்டா பட்டணம் போய் காசு பணம் பார்த்தா உங்களுக் கெல்லாம் உடம்புல கொழுப்பு புடிச்சிடுமா சாமி கும்புடறதா இருந்தா உன் வூட்டுல போயி மாலை போட்டுக் கும்பிடுடா. நாயி துன்ன சோறு இல்ல. உங்க தகுதிக்கு சாமி கேக்குதா’

சாமிக்கும் சோத்துக்கும் முடிச்சுப் போட்டார் அந்தத் தத்துவ ஞானி.

எரிச்சலோடு தூவென்று துப்பினார். அவன்மீது எச்சில் தெறித்தது.

ஊர் சனங்க வர்ற இடத்துல இப்படி அசிங்கம் பண்ணிட்டியே... பாவி... பாவி... போடா இறங்கித் தொலை என்று குச்சியால் அவன் முதுகில் விளாசி விரட்டினார்.

பீமன் கொதித்துப் போய் அவரை எரித்துவிடுவது போல் பார்த்தான்.

அந்தப் பார்வையால் அந்த ஆள் நடுங்கக்கூடச் செய்தான்.

ஆனால், சமாளித்துக்கொண்டு,

'ச்சீ.. அந்த ஐயர்கிட்ட எத்தனை முறை சொல்றது. ஒரு கதவு போடுய்யான்னு. பூட்டினா கண்ட நாயி உள்ள நொழையுமா? போடா... போ... என் கண்ணு முன்னால நிக்காத'' என்று விரட்டினான் வயதான ஆள்.

பீமனுக்கு அந்த ஆளை அப்படியே கழுத்தை நெறித்துக் கொல்லவேண்டும் போல் வெறி வந்தது. அவன் பொறுமையாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவனைப் பார்த்துக் கோபம் கொப்பளிக்கக் கத்தினான்.

'யோவ், பெரிய மனுசனாயா நீ? நான் இன்னா உன் பொண்டாட்டி கழுத்துலயா மாலைய போட்டேன். சாமிக்குத் தானே போட்டேன்'' என்று இரைந்தான். அவனது நரம்புகள் புடைத்துக் கொண்டு துடித்தன.

வழியில் போய்க் கொண்டிருந்தவர்கள் கலவரத்தை வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள்.

பெரியவருக்கு அவமானம் தாங்கமுடியவில்லை. இதுவரை ஊரில் அவருக்கு எதிர்ப்பேச்சே கிடையாது. குனிஞ்சு கும்புடு போடுற பயமவன் எப்படிப் பேசிப்புட்டான் பாரு என்று அவருக்கு அதிர்ச்சியாகிவிட்டது.

'டேய், நீ ஊருக்குள்ள வா. உன்னை பேசிக்கிறேன்.' அவர் பாறையில் இருந்து இறங்கிப் போய்விட்டார். எமன் போல நிற்கும் அவன் முன்னாடி நிற்க அவருக்கு அச்சமாக இருந்தது.

புதர் ஓரமாய்ப் போய் விழுந்து கிடந்த மாலையை ஆட்டுக் கிடாய் மென்று விழுங்கி ஏப்பம் விட்டது. பிறகு பீமனைப் பரிதாபமாகப் பார்த்தது. பாறையில் இருந்து இறங்கியபோது முருகனும் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதைத் திரும்பிப் பார்த்தான்.

கிராமத்துக்குப் பலவிதமான எண்ணங்களோடு வந்தவனுக்கு ஏன்தான் இங்கு வந்தோமோ என்றாகி விட்டது.

இவ்வளவு கலவரத்தையும் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் வாயைப் பிளந்து கொண்டு பீமனைப் பார்த்தார்கள்.

'ஏய்... பீமா யாரோ எவரோன்னுல்ல பாத்துட்டு நிக்கறோம்'' என்று ஆச்சரியப்பட்டுக் கத்தினான் கன்னியப்பன்.

'நம்ம சாதி சனம் தூரத்துல நின்னு பாக்குற சாமிக்கு நீ

கிட்டத்துல போயி மால போட்டது தப்புதானே பீமா... அந்த ஆளு ஊருக்குள்ளாறப் போயிருக்கான். எந்தக் கலவரத்தச் செய்யப் போறானோ அவன் பதட்டத்துடன் உச்சுக் கொட்டினான். அவனுக்கு உண்மையாகவே கைகால் நடுங்கியது. சரி.. வா.. வூட்டுக்குப் போவலாம்.'

'வுடு மச்சா என்னதான் நடக்குதுன்னு பாத்துப் பூடுவோம். மவன இவனுங்கள் இப்படிக் கேக்காம வுட்டதாலதான் நம்ம முதுவு தோல உறிக்கறானுங்க.

மச்சா பட்டணத்துக்கார அதான் ரோஷமா கேட்டுப்புட்டான்... வா.. வர்றத பாக்கலாம்.' இரண்டா மவன் சொன்னான். கன்னியப்பனும் மற்றவனும் ஆளுக்கு ஒரு பையை வாங்கித் தோளில் வைத்துக்கொண்டு நடந்தார்கள்.

இன்னா மாமா அநியாயம் இது. கூட்டம் போட்டுப் பேசும் போது நாமெல்லாம் ஒண்ணு, நாம் பாரதத்தாயின் பிள்ளைங்க வெள்ளைக்காரன்தான் அன்னியன். அவனைத் துரத்துற வரைக்கும் நாம இப்படித்தான் இருப்பம்னு கத்துறாங்க. சாமிக்கு மால போடக்கூட நமக்குச் சுதந்திரம் இல்ல. இந்தச் சுதந்திரத்த நமக்கு யார் தரப்போறாங்க வெள்ளக்காரனா..? அடக் கடவுளே, முதல்ல இந்த ஆண்டைகளை ஒழிக்கணும்போல இருக்குது. இவனுங்க தான் நம்மள அடிமையா வச்சிருக்கானுங்க இல்ல... மொதல்ல இவனுங்ககிட்ட இருந்து நம்ம சனத்துக்கு விடுதலை கெடைக்கணும்.

மூட்டையத் தூக்கி வந்த ரெண்டு பேரும் வாயை மூடிக்கிட்டு வந்தாங்க. அவங்களுக்கு மூட்டைக்குள்ள என்ன இருக்குமோ எதா இருக்குமோன்னு கற்பன ஓடிக்கிட்டு இருந்துச்சு. பீமன் பேச்சு அவர்கள் காதில் விழவே இல்ல.

'வெள்ளக்கார ஒரு காலத்துல நம்மள விட்டுப்போனாலும் இவனுக பிடியில் இருந்து நாம் தப்பமுடியாது போல இருக்குதேன்னு ஒரு வருத்தமான நெனப்பு அவன் மனதில் வலியாகத் தாக்கியது.

'பீமா ஊருக்குள்ள இன்னிக்கு ஒரு கலாட்டா இருக்குது. வா.. வாத்தியார் மாமாகிட்டப் போய்ச் சொல்லுவோம். அவர் ஏதாவது பண்ணுவார். நீ ஒண்ணும் கவலப்படாத. என்னதான் நடக்குதுன்னு பாத்துருவோம்' கன்னியப்பன் ஆறுதலாக தைரியப் படுத்தினான்.

பீமன் பயந்தவன் மாதிரித் தெரியவில்லை. அவர்கள் போய்ச் சேர்ந்ததும் கலவரச் சேதியும் பரவியது. இவ்வளவு கலாட்டாவிலும் கோழிக் குழம்பும் சோறுமாக விருந்து ஏற்பாடாகிவிட்டது.

கோபமும் பசியுமாகச் சேர்ந்து வயிறு முட்டச் சாப்பிட்டு பெரிதாக ஏப்பமும் விட்டான் பீமன்.

மொக்க மாமன், மச்சான், பங்காளிகள் என்று சகலரும் நலம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

மொக்க மாமன் எல்லாப் பொருளையும் பிரிச்சுக் கிட்டிருந்தார். வாத்தி மாமா தோல் துண்டை உதறிக் கொண்டு வந்தார். அவர் முகத்திலும் கலவரக்குறி தென்பட்டது.

'என்னடா பீமா நீ ஒருத்தன் பட்டணம் போயிட்டா ஊர் முறையெல்லாம் மாறிப் போயிட்டதா அர்த்தமா? ஊர்க்காரங்களப் பத்தி உனக்குத் தெரியாதா? இன்னா வாய குடுத்து இப்படி வினைய வாங்கியாந்துட்டியே அங்கபோய் பேசிட்டுதான் வர்றான். வெட்டிப்புடுவேன், குத்திப்புடுவேன்னு குதிக்கிறாங்க எதுக்குடா நம்மளுக்கு இந்த வம்பெல்லாம். நீ இன்னைக்குப் பேசிட்டு நாளைக்குப் போயிடுவே. நாங்க தினமும் அவங்க முகத்துல விழிச்சிக்கிட்டுத்தானே நிக்கணும்.

மாமன் சொல்றது நியாயமானதுதான். ஆனா, அந்த ஆள் அப்படிக் கோபப்படறதுக்கு நான் ஒண்ணும் கெட்ட காரியம் எதுவும் செய்துடலயே என்று தோன்றியது அவனுக்கு.

வயிறு புடைக்கச் சாப்பிட்டதின் அடையாளமாக மீண்டும் பெரிதாக ஒரு ஏப்பம் விட்டான். வாத்தி மாமா துண்டைக் கொடுத்தார்.

''கைய தொடைச்சக மாப்பிள.''

'நீயே சொல்லு மாமா. நான் ஏதாவது திருட்டு, தப்புதண்டா பண்ணியிருந்தா சரி. சாமிக்குத் தான் மாலை போட்டேன் இது தப்பா?'

வாத்தி மாமா சிரித்தார்.

'அந்த ஆளு. என்ன நாயி... நாயின்னு காறித் துப்புறான். அதான் நறுக்குன்னு கேட்டுபுட்டான். நமக்குப் பதில் பேசக்கூட உரிமையில்லையா இன்னா? சரிக்குச் சமமா பேசிக்கக் கூட உரிமையில்லனா, அப்புறம் இந்த நாட்டுக்குச் சுதந்திரம்

கெடச்சாலும் சனத்துக்கு என்ன ஆவப்போவுது' அவன் முகத்தில் கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது.

'அப்படிப் போட்றா நொக்காலி. மச்சா பட்டணத்தான் சொரணையோடதான் வந்திருக்கிறான் டோய்' என்று ஒரு மாமன் முறைகாரர் சூடேற்றினார்.

'டேய், பீமா கோபமும் சொரணையும் உனக்கு மட்டுமா இருக்குது. உன் தாத்தன், அப்பன் எல்லாத்துக்கிட்டயும் தான் இருந்துச்சு. ஒருத்தனுக்கு மட்டும் சொரணை வந்து என்னடா பண்ணும். ஆண்டை இங்க வரட்டும். ஒருத்தன் உன் பின்னாடி நிக்கறானா பார்.

நீ அவனுங்கள் எதிர்த்துக் குரல் கொடுக்கணும்னு நினைக்கற. உன் பின்னாடி எத்தனை பேர் வருவாங்கன்னு கொஞ்சம். யோசிச்சிப் பாருடா.

நமக்கு வீரம் கெடையாதா என்ன... மலையே மட்டமாக் கிடுறோம். மனுசத் தலை என்ன பெரிசா! நம்மகிட்ட இல்லாதது. பண சக்தியும், அரசியல் சக்தியும்தான். அவங்ககிட்ட எல்லாமே இருக்குது. நாளைக்கு நாம அவங்க நெலத்துல தான இறங்கி வேல பாக்கணும்.

நம்மகிட்ட என்ன மச்சா இருக்குது. உழைக்க கையும் காலையும் தவிர தப்பு பண்ணா சாணிப்பாலு... எதிர்த்துக் கேட்டா சாட்டையடி. கைய கால முறிஞ்சுப் புடுறானுங்க. இந்தப் பொழப்பு சரிப்படலனா உன்ன மாதிரி பட்டணத்துக்கு ஓடிப் போவலாம். வேற என்னத்தப் பண்ண நம்மகிட்ட வேற என்ன இருக்குது? உசுரயும் அதுல கெடக்கற பாசத்தையும் தவிர. இந்த நெலம ரொம்ப நாளைக்குப் போவாதுன்னு வச்சுக்க. இப்ப விடயம் முறுக்கிற மீசையில இல்லடா. உச்சியில இருக்கிற மூளையில தான் இருக்குது' என்று ஏத்திவிட்டது போல் பேசி அவனை அமைதியாக்கினார்.

வாத்தி மாமா பள்ளிக்கூடத்துல வாத்தியார். நாடகம் கூத்துன்னு ஆரம்பிச்சு இப்ப உண்மையாகவே வாத்தியாராக்கி விட்டார்கள் பாதிரிமார். மண்ணாங்கட்டியாக இருந்த வாத்தி இப்ப நல்ல தம்பியாகி விட்டார். அவரை ஜெம்சாகவோ, பவுலாகவோ மாத்த பாதிரிங்க எடுத்த முயற்சி வீணாகிவிட்டது. அவருக்கும் மதம் மாறுவதில் விருப்பம் இல்லை. அவரை யாரும் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால், பள்ளிக் வகுப்புக் குழந்தைகளுக்குப்

பாடம் சொல்லிக் கொடுக்க அவருக்கு பயிற்சி கொடுத்து வாத்தியாராக்கி விட்டார்கள்.

சரி நீங்கள்லாம் போய் வேலையப் பாருங்க. மச்சான் நீ மட்டும் என் கூட வாடா என்று பீமனை அழைத்தார் வாத்தி.

''என்ன மச்சா ஊருக்குப் போனா ரெண்டு நா சந்தோஷமா சொந்த பந்தங்களோட இருந்துட்டு வரலாம்னு பாத்தா இப்படி சிக்கல்ல மாட்டிக்கிட்டோமோன்னு வெசனப்படறயா... வுட்டுத் தள்ளு. அத நான் பாத்துக்கறேன் என்ன...'' வாத்தி மாமா பீமனின் தோளில் தட்டினார். பீமன் எதற்கும் துணிந்தவன் போல நடந்தான்.

''மச்சான் நீ எதுவும் பேசாதடா. ஆண்டை ரொம்ப கோவமா இருக்கானாம். அவன் பொறந்த காலத்துல இருந்து இதுவரைக்கும் அவன யாருமே கேள்வி கேட்டதில்லை. அந்தாளுக்கு நம்மளுக்கு உத்தரவு போட்டும் கைநீட்டி அடிச்சும் தான் பழக்கம். நீ இப்படி கேட்டதும் அந்த ஆளு ஆடிப்போயிருப்பான். காலம் மாறுதுல்ல இந்தப் பாதிரிங்க வந்தபிறகு ஆண்டையோட ஆட்டம் கொஞ்சம் கொறைஞ்சாப்பலதான் இருக்குது. ஆனாலும், நம்ம அடிமைத் தனம் மாற நாளாவும்னு நெனக்கிறேன். என்னத்த பண்ண அவனுங்க கையில சாட்ட இருக்குது.''

''நமக்கு மொத எதிரி இந்த ஆண்டைங்கதான். அப்புறம் தான் வெள்ளக்காரன். இவங்கள மொத ஒழிக்கணும்.''

''படவா இவங்கள ஒழிக்கமுடியாது. நாமதான் முழிச்சுக்கணும்.''

''என்ன மாமா சொல்றீங்க?''

நெலம் பூரா அவங்ககிட்ட இருக்குது. நம்ம ஜனங்கள்ள எழுதப் படிக்கத் தெரிஞ்சவன் எவனும் கிடையாது. பின்ன நாம எப்படிமேல வர்றது? கோபம் மட்டும் இருந்தா போதுமா? தாழ்ந்த சாதி... தாழ்ந்த சாதின்னு சொல்லியே இவனுங்க நம்மள கீழ தள்ளிட்டாணுங்க. நாம மேல வரணும்னா ஒரு வழி இருக்குது.''

'என்னது மாமா?' அவன் அவசரத்தோடு கேட்டான்.

''படிப்புதான். அது மட்டும்தான் நம்மள காப்பாத்தும். அவனுங்க சொல்ற இடத்துல கை நாட்டு வச்சி காலத்த ஓட்டுனது போதும்னு நம்ம புள்ளங்கள பாதிரிங்க கூடத்துக்கு அனுப்புங்கன்னா... இந்த சனம் எங்க கேக்குது. ஆமா, படிச்சி கலக்டரு ஆவப் போதுங்களான்னு கேலி பேசுதுங்க'' வாத்தி பெருமூச்சு ஒன்ன விட்டுட்டு வானத்தைப் பார்த்தார்.

அவர்கள் நடந்து போகும் பாதையின் இருபக்கமும் வேலி காத்தான் முள்செடிகள் அடர்ந்து வளர்ந்து காடாய் மண்டிக் கிடந்தது. அதில் இருந்து வரும் ஜில்வண்டுகளின் கீச்சொலி அவனுக்குக் கேட்க இதமாய் இருந்தது. எதிர்த் திசையில் மேய்ச்சலுக்குப் போய்த் திரும்பும் ஆடுகள் மந்தையாக எதிரே வந்து கொண்டிருந்தன. வாத்தியும், பீமனும் ஓரமாய் ஒதுங்கினார்கள். மந்தைக்குப் பின்பாக வயதான கிழவி போய்க்கொண்டிருந்தாள்.

பாவம் கிழவிக்குக் கண் பார்வை கொறஞ்சு போச்சு. எப்படித்தான் ஆட்ட மேய்க்குதோ வாத்தி மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

''நமக்குக் கோபம் வரணும்தான். ஆனா அத அடிதடியா மாத்தக்கூடாது. அதுல ஆபத்து நம்மளுக்குத்தான் புரிஞ்சிக்க.

அந்தக் காலத்துல மேல் சட்டை துண்டுகூட போடமுடியாது டோய்...

பொம்பளங்க மார காட்டிகினு திரியணும். நம்மல பாத்தாலே தீட்டுன்னு ஒதுங்கிப் போவாங்க. எதிர ஆளு வந்தா நாம ஓரமா ஒதுங்கி நின்னுடணும். எதிரப் போயிட்டம்னா தண்டம் போடுவாங்க. அதெல்லாம் இப்பவும் நடக்காம இல்ல. ஓரளவு தணிஞ்சு இருக்கு. பெரியாரும் அம்பேத்கரும் இவனுங்க மண்டையில ஓங்கியடிக்கிறாங்க. இத நம்ம சனங்க புரிஞ்சுக்கணும்.''

வாத்தி பேசிக் கொண்டே தூரத்தில் தெரிந்த பெரிய பாறைத் திட்டை உற்றுப் பார்த்தார்.

இன்னும் யாரையும் காணோம். நாம் போய் காத்துக் கிடக்கணும். ராசாவுங்க பொறுமையா வந்து நமக்குத் தண்டம் போடுவாங்க... பாக்கலாம் என்ன பண்றாங்கன்னு.

பட்டைப் பாறை வெறிச்சோடிக் கிடந்தது. வயலில் கிடந்த மணிகளைப் பொறுக்கிவிட்டுப் பசி தீர்ந்த நிறைவுடன் சாம்பல் குருவிகளும், மைனாக்களும் மரங்களை நோக்கிப் பறந்தன. எங்கோ தூரத்தில் கிளிகளின் கீச்சொலி கேட்டது. முழு அமைதியும் தூய்மையுமாய் அந்த இடம் இருந்தது. மேய்ச்சலுக்குப் போன கால்நடைகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன.

எதிரே தெரிந்த பட்டைப் பாறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஆள் நடமாட்டம் இல்லாத அமைதியான இடமாகத் தெரிந்தது.

பாறை கழுவி சுத்தம் செய்ததுபோல் தூய்மையாக இருந்தது. நூறு பேர் தாராளமாக உட்காரலாம் போலப் பெரிதான லேசான சரிவுடன் இருந்தது. பத்தடி உயரத்தில் ஆரம்பித்துப் பாறையின் முனை தரையில் போய் முடிந்தது.

பழங்காலத்துல இருந்து அந்தப் பாறைதான் நீதிமன்றம். ஆண்டைகள்தான் அதன் நீதிபதியாக இருந்து வந்தார்கள்.

தூரத்தில் நாலுபேர் வேகமாக வருவது தெரிந்தது. 'மச்சான் நீ வாயே தெறக்காத எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்.' மெதுவான குரலில் பீமனை அடக்கி வைத்தார் வாத்தி.

அந்த நால்வரும் ரொம்பக் கோபமாக வருவது தெரிந்தது. பத்தடி தூரத்தில் வரும்போதே ஒருவன் கத்தினான்.

'டேய் மண்ணாக்கட்டி இன்னா பயலுக்கு வாய்க் கொழுப்பு ஏறிப் போச்சா. பட்டணம் போய் நாலு காசு பாத்துட்டா பெரிய மயிருன்னு நெனப்பா''

ஆரம்பமே ரொம்ப மரியாதையாய் இருந்தது. பீமன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

'டேய் சும்மாயிரு'' என்று பீமனை மெதுவான குரலில் அடக்கினார் வாத்தி.

''சரிங்க... வயசுப் பையன் ஊர்ப் பழக்க வழக்கம் எதுவும் தெரியாது. சின்னப் புள்ளையிலேயே பட்டணம் போயிட்டதுங்க நீங்கதான் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுவிடணும்.''

அந்த நாலு பேரும் வழக்கமான சமதளமான பாறையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''இன்னடா மண்ணாங்கட்டி சாமிக்கு மாலை போட்டானாம் எவன்... எவன் எதைச் செய்யறதுன்னு ஒரு மரியாதை கெடையாதா. பெரியமனுசன பேசியிருக்கிறான் என்ன இதெல்லாம்...'

'இவன மாதிரி ஆளுங்கள் மரத்துல் கட்டிப்போட்டு சோறு தண்ணியில்லாம... சாவடிக்கணும். அப்பதா மத்த நாய்களுக்கும் புத்தி வரும்.''

'என்னங்க சாமி... நீங்க இவன் இன்னைக்கு வந்துட்டு நாளைக்குப் போயிடப் போறான். இவனால ஊர் கலவரம் எதுக்கு. இத இதோட விட்டுருங்க சாமி நாளைக்கே இவன அனுப்பிடுறேன்.''

'இன்னாடா, இவன கட்டிப் போட்டா காலனியாளுங்க

தெரண்டு வந்துருவாங்களான்னு ஏளனமாகக் கேட்டார் பெரியவர்.

சரி, விடுங்கப்பா இந்தப் பையன் வெளியூர்க்காரன். அதனால சாமி தீட்டானதால அதுக்குத் தீட்டு கழிக்கற செலவு நூறு ரூபாய் தண்டமா விதிக்கிறோம் அதக் குடுக்கலனா இவ ஆறு மாசத்துக்கு கூலியில்லாம கோயில் நெலத்துல வேலை செய்யணும். இதான் தீர்ப்பு. தெளிவாகவும் தீர்மானமாகவும் சொல்லிவிட்டார் கோயில் தர்மகர்த்தா. ஆண்டைக்கு அடுத்து ஊர் பெரிய மனுசன் அவர்தான்.

இந்தத் தீர்ப்ப ஏற்கெனவே திட்டம் போட்டுப் பேசி வைத்துத்தான் இங்கு வந்து சொல்கிறீர்கள் என்று வாத்தி புரிந்துகொண்டார்.

நூறு ரூவான்னா சாதாரண விவகாரமா. நெலத்துல ஒரு வருஷம் பூரா ஒழைச்சாலும் நூறு ரூவா கெடைக்காதே.

இது ஏதோ பிரச்சனை எழுப்ப ஏற்பாடோட வந்திருப்பதாகப் புரிந்துகொண்ட வாத்தி,

''என்னங்க சாமி, ஏதோ நடந்தது நடந்து போச்சு... ஏதோ நாலு மனுசாலப் பாத்துட்டுப் போவலாம்னு வந்தவன் கையில் ஏது ஐயா அவ்வளவு பணம். நடக்கற காரியமா சொல்லுங்க.

'தீர்ப்புல மாத்தமே கிடையாதுடா. நூறு ரூவா தண்டம் கட்டியே ஆவனும். இல்லாட்டி இவன் இப்பவே ஊர விட்டு வெளிய போவனும். இவன் இங்க இருக்கும்போது எது நடந்தாலும் நாங்க பொறுப்பு கெடையாது டோய்... ஊருக்குள்ள எந்தக் காலத்துலயும் திரும்பி வரக்கூடாது புரியுதா''

கொலை மிரட்டல் போல இருந்தது அவருடைய பேச்சு. பீமன் லேசான நடுக்கம் கண்டவன் போல மாமனைப் பார்த்தான்.

வாத்தி மாமா எதையோ பேச வாயெடுத்தார். பட... பட... ஓசையுடன் ஏதோ வண்டி வருவதுபோல் ஓசை கேட்டது. அப்படி ஒரு வண்டி பாதிரியார்கிட்ட மட்டும்தான் உண்டு.

வந்தது பாதிரியேதான். ஒரு மரியாதைக்காக அவர்கள் முன்பாக வண்டியை நிறுத்தினார். 'என்னங்க ஐயா கூட்டம்!'

பெரிசா ஒன்னும் இல்ல. ஊர் விஷயம்தான்' என்றார் பெரியவர்.

சரி அப்ப நான் கிளம்புறேன் என்று வண்டியை முடுக்கினார். அங்கு ஒரு புது ஆளைப் பார்த்துவிட்டு, விட்டு, 'யாரு இது புதுசா தெரியுது.' என்றார்.

ஆமா சாமி மெட்ராஸ்ல இருந்து வந்திருக்கிறான் இவன் தான் பிரச்னையே. கோயில் தீட்டு பண்ணிட்டு பெரியவர தப்பா வேற பேசியிருக்கிறான்.'

நால்வரில் இளையவர் ஒரு மாதிரியாகச் சொல்லி முடித்தார்.

'சரி அப்ப நான் தலையிட முடியாது. ஆனாலும், உங்களைவிட விட வயசுல பெரியவன்ற முறையில ஒண்ணு சொல்ல முடியும். அத நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது.

மனுசங்களாகிய நாம எல்லாருமே தேவன் முன்பாக சமம்னு வேதம் சொல்லுது. நாம் சமாதானமா போறதுதான் நல்லது வேணும்னா அந்தப் பையனோட தண்டப் பணத்த நான் தந்துடறேன். பிரச்னையை இதோட விட்ருங்க.'' பாதிரியை வாத்தி கையெடுத்துக் கும்பிட்டார்.

''நம்ம உறவுக்காரப் புள்ளதான் சாமி.''

''சரி, இந்தாங்க. வாத்தியார் நீங்களே கட்டிடுங்க. தேவனுக்குக் காணிக்கையா வந்தது.''

தர்மகர்த்தா நெளிந்தார். அவரையும் கூச்சம் லேசாக வாட்டியது. ''ஐயா, அது வந்து...'' என்று நெளிந்தார்.

'என்ன சொல்லுங்க.''

''நூறு ரூவா தண்டமா போட்டிருக்கோம்.''

பாதிரிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''நூறு ரூவாயா...?'' ஆச்சர்யமாய்க் கேட்டார். 'என்னடா வார்த்தையை விட்டுட்டோம்' என்று யோசித்தார். பிறகு, ''இதிலே ஒரு மாத காணிக்கை இருக்குது. இதுபோக, மீதி எவ்வளவு தரணும்னு சொல்லுங்க. தந்துர்றேன்..'

நால்வரும் வளைந்து நெளிந்தார்கள். ஒருவன் பணத்தை வாங்கி எண்ணி ஒருவருக்கு ஒருவர் கைமாற்றினார்கள். பணம் கடைசியாகக் கோயில் தர்ம கர்த்தாவிடம் போய்த் தஞ்சமடைந்தது.

பிரசங்கமோ எந்தவிதமான மூளைச் சலவையோ இல்லாமல் தேவனின் பேரில் நல்ல எண்ணத்தை ஏற்படுத்தி பார்வையுடன்,

''நல்ல தம்பி சாயந்திரம் வீட்டுக்கு வந்துட்டு போங்க'' என்று வாத்தியிடம் சொல்லிக்கொண்டே வண்டியைக் கிளப்பினார். அது பெருத்த உறுமலோடு அவரைச் சுமந்துகொண்டு ஓடியது.

நீங்க தெளிவு இல்லாம குட்டய குழப்புறிங்க. அவரு மீன் பிடிச்சிட்டுப் போறார் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்

வாத்தி மாமா.

''இங்க பார் மண்ணாங்கட்டி, பையன் மூச்சு காட்டாம ஊரப் போய்ச் சேரச் சொல்லு. ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆச்சுன்னா நாங்க பொறுப்பு இல்ல புரிஞ்சுக்கோ. நாங்க ஒண்ணு நடத்த வந்தா அது ஒண்ணு நடக்குது.''

துண்டை உதறிக்கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள். பீமன் வெளியூர்க்காரன் என்பதால், மேற்கொண்டு எதுவும் நடக்கவில்லை, நல்ல வேளையாக பாதிரி வந்துபோனது நல்லதாப் போச்சு.

அட அப்பனே முருகா! உன்னோட தீட்டக் கழுவ கர்த்தரோட துட்டு உதவுது. எல்லாம் யாருக்கு வெளிச்சமோ என்று முணுமுணுத்தார் வாத்தி மாமா.

பீமன் செயலற்றவன்போல அவருக்குப் பின்னால் மெதுவாக நடந்து வந்தான். இருட்டத் தொடங்கிவிட்டது.

வெள்ளையனே வெளியேறு, வந்தே மாதரம் என்று அவனைக் கொதிப்படைய வைத்த வார்த்தைகள். இப்போது அவனுக்கு அர்த்தமற்ற வார்த்தைகளாய்த் தெரிந்தன. இந்தச் சாதி வலையை அறுத்தெறியாமல் தனக்கும் தன்போன்று நாசமாக்கப்பட்ட மக்களுக்கும் எந்தச் சுதந்திரமும் முழுமையான சுதந்திரமாகாது என்று புரிந்துகொண்டான்.

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாகப் புறப்பட்டுவிட்டான்.

துணைக்கு வாத்தி மாமா கூடவே இருந்தார். ''டேய், சாமியார் ஒரு எட்டு போய் பாத்துட்டுக் கெளம்பு..'' என்று சொல்லிப் பார்த்தார்.

'''இல்ல மாமா நான் ஊருக்குப் போய்ப் பணம் அனுப்பறேன். சாமியார்க்குக் குடுத்துடு. நான் இங்க இருந்தா வீணா பிரச்சனை வரும். நான் போறேன்.''

ஐந்து மைல் தூரம் நடந்துதான் போகணும். பீமனுக்குப் பாதுகாப்பாகக் கூடவே போய் வழியனுப்பி விட்டுவந்தார்.

என்னடா ஒரே ஏமாத்து வேலையா இருக்குது. மூச்சுக்கு மூச்சு முருகா... முருகான்றோம். நான் மாலை போட்டா தீட்டு... தப்புன்றான்.

எங்கிருதோ வந்த ஏசு சாமி எல்லாம் சமம்ங்றார். நாம முருகனைக் கும்பிடறதா, ஏசுவக் கும்பிடறதா?

மொத்தத்துல இந்தச் சாதிப் பேய தொறத்தணும். முடிஞ் சா அதோட தொண்டய உடைச்சு உசுற எடுக்கணும் என்றும் இன்னும் பலவிதமான சிந்தனைகளோடு மெட்ராஸ் வந்து சேர்ந்தான் பீமன்.

⊙⊙⊙

கிராமத்தில் இருந்து வந்து இரண்டு மூன்று நாட்கள் ஆகியும் அவனுக்கு மனம் ஆறவில்லை. ஒரு மாதிரியாக இருந்தான். கோபால் அவனிடம் ஏதோ மாறுதல் இருப்பதைத் தெரிந்து ஊரில் ஏதாவது சொந்தபந்தங்களுக்கிடையில் பிரச்சனை இருக்கும் என்று எதுவும் கேட்காமல் விட்டுவிட்டார்.

அவனுக்கு வேலையில் கவனம் இல்லாமல் ஓர் இரும்பு பைப்பைக் காலில் போட்டுக்கொண்டு வலி தாங்க முடியாமல் போய் ஒரு மூலையாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டான்.

ஒரு கந்தலை எடுத்துப் போய் முட்டிக்குக் கீழே ஏற்பட்டிருந்த காயத்தைத் துடைத்தான் பொட்டக் கண்ணன். 'என்னப்பா இவ்ளோ ஆழமா குத்திக்கிட்டிருக்கு. கல்லு மாதிரி ஒக்காந்துக்கினு இருக்கிற.' அவன் ஆழமான காயத்தைப் பார்த்து வாயைப் பிளந்தான்.

"சரி, முனிய மேஸ்திரி எங்க காணோம்."

'அதயேன் கேக்கற மனுச திடீர்ன்னு ஒருநா ரத்த ரத்தமா வாந்தியெடுத்திட்டு கீழ விழுந்துட்டார். முந்தா நாள்ன்னு நெனக்கிறேன். உடம்புக்கு முடியாம படுத்துக் கிடக்கார். சரி இரு நான் போயி கோபாலண்ணகிட்ட சொல்ற. அடி பெருசா இருக்குதுபா." அவன் தலையில் அடித்துக்கொண்டு போனான்.

காயம் பெருசுதான். ஆனா அவனுக்கு வலி தெரியல.

நான் தொட்டதால தீட்டாகிப் போன சாமிய சுத்தப்படுத்த நூறு ரூவா தேவைன்னா. என் மனசு சாமிய தொட்டா என்னவாகும். அப்ப நான் கும்புட சாமியே கிடையாதா? எதுக்கு என்னையும் என்னய மாதிரி மத்த மக்களையும் ஒதுக்கி இப்படி நாசம் பண்றாங்க. அவன் மனம் கடுமையான வலியோடு திணறியது. சனங்கள் சாமிதான் படைச்சதுன்னா அந்தச் சாமிய கும்புட இவனுங்கத்தடை போடறானுங்க. அப்ப இவனுங்க சாமியைவிடப் பெரியவனுங்களா? ஒருவேளை சாமியையே இவனுங்கதான் படைச்சானுங்களா? பிறகு நீ தீண்டத்தகாதவன்றானுங்க. இந்த ஏற்பாடெல்லாம் யார் செய்திருப்பான். இந்த மாதிரி

கொள்ளைக்காரச் சட்டங்கள் வச்சுக்கிட்டு ஆண்டைங்க நம்மள வெளுத்துக் கட்றானுங்க. இதுக்கெல்லாம் முடிவே கெடையாதா. இவ்ளோ பொய் கூத்துக்களையும் இவனுங்க நடத்துறதாலதான் வெள்ளையன் இங்க வந்து ஆட்டம் போடறான். அப்படியும் இவனுங்க திருந்தமாட்டேன்றானுங்களே.

கோபால் வந்து பார்த்துவிட்டு அவனை ரிக்ஷாவில் ஏற்றி துணைக்கு ஓர் ஆளோடு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்.

முனியனுக்கு இருமல் அதிகமாகிக் கொண்டே போனது. சில நாட்களாகவே அவர் உடம்பு ரொம்பவும் இளைத்துக் கொண்டு போனது. நோய் ரொம்ப முத்திப் போச்சுன்னு டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள்.

சாராயத்தையும் பீடியையும் அவர் நிறுத்தவே இல்லை. அது இரண்டும் அவரை மூர்க்கமாகத் தாக்கி எழுந்து நடமாட முடியாத நோயாளியாக்கி விட்டது.

ஆனாலும், மருத்துவனைக்குப் போய்வந்துகொண்டிருந்தார். ஊசி அவரைப் படாத பாடு படுத்தியது. பளபளக்கும் ஊசிகளைப் பார்த்தாலே அவரது உடல் நடுங்கியது. ஊசியால் இரண்டு பக்கத் தோள்பட்டைக்குக் கீழாகக் கை வீங்கி அவரால் அசைக்கக்கூட முடியவில்லை.

அய்யோ, சாமி அந்த ஊசிய போட்டுக்கறதவிட செத்துப் போவலாம்டா சாமி என்று தலையில் அடித்துக்கொண்டார்.

உடம்புக்கு முடியாமல் அவர் வீட்டில் இருந்தாலும் அவருக்குச் சேர வேண்டிய கூலி வீட்டுக்கு நாள் தவறாமல் வந்து கொண்டிருந்தது.

நிலவொளியில் குடிசைகள் மௌனத்தில் கிடந்தன. முனியனின் வீட்டில் மட்டும் உரலில் உலக்கை இடிபடும் சத்தம் தொம் தொம்மென்று கேட்டது. மதுரயின் தங்கை மாவு இடித்துக் கொண்டிருந்தாள். கிராமத்துக்குப் போக பலகாரம் தயாராகிக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியில் இரண்டொரு வீட்டில் மட்டும்தான் உரல் இருந்தது. அதில் ஒன்று முனியன் வீட்டில் இருந்தது. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் பலகாரம் செய்ய மாவு இடித்துக்கொள்ள வருவார்கள். அஞ்சலை முகம் சுளிப்பது இல்லை.

கோபாலும் மதுரயும் வெளியே கோரைப்பாயில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். உள்ளே உலக்கையின் ஓசை கேட்டுக்

கொண்டிருந்தது. இடையே முனியனின் இருமல் அதைவிட அதிகமாகக் கேட்டது.

'அது சரி, உங்க தங்கச்சிப் புருஷன் என்ன ஆளையே பாக்க முடியலே.''

அவர் வெகுசாதாரணமாகக் கேட்டார். 'அட நீ ஒன்னு. உனக்குச் சங்கதி தெரியாதா?'' என்று திடுக்கிட்டுப் போய் வாயைப் பொத்திக்கொண்டார் மதுர.

'அந்தப் பாவி போய்ச் சேர்ந்து வருசம் மூணு ஆவப்போவுது' என்று சொல்லும்போது அவரது தொண்டையில் வரும் குரல் உடைந்து நொறுங்கியதுபோல் திணறியது. கண்களில் நீர் பெருகி கன்னத்தில் பளபளத்தது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டார்.

அடப்பாவமே, இதென்ன வம்பாப் போச்சே. கோபாலுக்கு அதிர்ச்சியாக இருந்தது இந்தச்சங்கதி. கோபாலுக்கு நெஞ்சில் யாரோ குத்தியதுபோல் வேதனை தந்தது.

அவர் மேல் துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு மதுரயின் முகத்தை உற்றுப்பார்த்தார். துயரமான கண்களை அழுத்தமாக மூடி கண்ணீரை வேதனையோடு வெளியேற்றினார். அவரிடமிருந்து சிறு விசும்பல் சத்தம் கேட்டது.

'சரிப்பா. நான் தெரியாம கேட்டுப்புட்டன். அந்தப் பொண்ணு மொகத்தப் பாத்தா அப்படித் தெரியல அதான்... கோபால் சங்கடத்தில் நெளிந்தார்.

'பாவிப் பையன் போய்ச் சேர்ந்துட்டான். கொழந்த முகத்த பாக்க முடியல கோபாலு. என்ன பண்ண அந்த சாமிக்குக்கூட கண்ணில்லாமப் போச்சு.' கண்ணீர் உடைத்துக்கொண்டு பெருகி வழிந்தது. தோள் துண்டால் முகத்தை அழுத்திப் பொத்திக் கொண்டார்.

''அது மொகத்த பாத்தா தெரியாதுதான். கொழந்த அது... அது குடுத்து வச்சது அவ்ளோதான். தாயும், புள்ளயுமாப் பாக்க முடியலப்பா.''

''சரி வுடுப்பா... ஏதோ நடக்கக் கூடாதது நடந்துபோச்சி. வேற ஏதாவது பாத்துப் பேசி குடுத்துட வேண்டியதுதான்.

'அட நீ ஒன்னு இன்னா ஒரு மாதிரி பேசற'' என்று எரிச்சலோடு கோபாலைப் பார்த்தார் மதுர.

இதெல்லாம் ஆண்டவன் விட்ட வழி. நாம் செய்ய இன்னா

இருக்குது.

நாள பின்ன அப்படி ஒன்று நடந்தா நல்லதுதான் என்று மனசுக்குள் நினைத்துக்கொண்டார் மதுர. அதை அவரால் வெளியே சொல்ல முடியவில்லை.

வீட்டினுள் முனியனின் இருமல் சத்தம் கேட்டது. மேஸ்திரி நல்லாத் தானே இருந்தார். திடுதிப்புன்னு படுத்த படுக்கையா யிட்டாரே.

'ஆமா, கொஞ்சமான சாராயமா? கொஞ்சமான பீடியா? பத்தா கொரைச்சலுக்கு வெள்ளக்கார சிகரட்டு. சம்பாதிக்கிறது மொத்தத்தையும் இப்படி பொகையும், சரக்குமா உள்ளே தள்ளினா?'' கோபால் எரிச்சலோடு பேசினார்.

மாவு இடிக்கும் சப்தம் நின்றுவிட்டது. நாகம்மாள் மாவைச் சட்டியில் போட்டு முந்தானையால் மூடிக்கொண்டு வெளியே வந்தாள். ''அண்ணா... வா... போவலாம்.'' 'நீ போய்க்கினு இரு. நான் பின்னாடி வரேன்'' அவர் சொல்லிவிட்டு கோரைப்பாயின் சிதைந்த முனைகளை உடைத்துக் கொண்டிருந்தார். கோபாலிடம் பேசிக் கொண்டிருப்பது அவருக்கு ஆறுதலாக இருந்தது.

நாகம்மாளை முதன்முறையாகப் பார்ப்பதுபோல ஆழமாக உற்றுப் பார்த்தார் கோபால். குறைவான நிலவொளியில் நிறைவான அவள் முகத்தில் பிறையளவுகூட எந்தக் குறையும் தெரியவில்லை. அவள் முகம் பிரகாசமாக இல்லைதான். நிர்மலமாய்த் தெளிவாக இருந்தது. அவளேகூட ஒரு குழந்தைப் போலதான் இருந்தாள். ஒருவேளை துயரத்தை மறைத்துக் கொண்டு அமைதியாக இருப்பது போல் பாசாங்கு செய்கிறாளோ என்று யோசிக்குமளவுபோய் விட்டார் கோபால்.

அவள் மாவு சட்டியோடு போய் இருட்டில் மறைந்தே போனாள். ஆனால், ஏனோ அவர் மனசில் அவள் நினைவு தங்கித் தொல்லைப் படுத்தியது.

அவளை மீண்டும் பார்க்கவேண்டும் என்று அவர் மனம் ஏங்கியது. அவரால் கட்டுப்படுத்த முடியாதபடி இருட்டில் அமர்ந்துப் பார்த்தார். அவள் மீதான இரக்கத்தில் அவரது இதயம் குழந்தையினுடையது போல் வேகமாகத் துடித்தது.

''சரி போய்த் தூங்கு. நாளைக்கு வேலைக்குப் போகணும்'' என்று தனக்குத் தூக்கம் வருவதுபோல் கொட்டாவி விட்டபடி சொன்னார். உண்மையில் அவருக்குத் தனிமையில்

இருக்கவேண்டும் போல் இருந்தது.

"தூக்கமா... உம் எனக்கு ஏது தூக்கம்" என்று துயரத்தோடு வானத்தைப் பார்த்தார் மதுர. வானம் மாசு மருவற்று நிர்மலமாய் நீலமாய் இருந்தது. நிலவு கூடத் தூய்மையான பளீர் வெண்மையோடு சுடர்ந்தது. ஒரு நிமிடம்போல அவர் நிலவை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"டேய் மதுர" என்று முனியனின் குரல் கேட்டது.

"மாமா உன்னக் கூப்பிடுதுண்ணா " என்று குடிசைக்கு வெளியே தலையை நீட்டிச் சொல்லிவிட்டு தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டாள் அஞ்சல. எழுந்து குடிசைக்குள் போன மதுர முனியனின் நெஞ்சைத் தடவி விட்டார். அவருக்குக் கடுமையாக மூச்சு இறைத்தது.

"என்ன மாமா என்ன பண்ணுது?"

"நெஞ்சை இழுத்துப் புடிச்ச மாதிரி இருக்குடா. நாக்குச் சொரணை கெட்டா போல இருக்குது" என்று ஏக்கத்தோட மதுரய பார்த்தார்.

"வாயே சப்புன்னு இருக்கு. ஒரு மொடக்கு சரக்கு தொண்டைக்குள்ள போச்சுன்னா நல்லா இருக்கும்."ஏக்கத்தோட குசுகுசுன்னு கோபால் காதில் விழாதபடி சொன்னார்.

"தோ... இரு மாமா வர்றேன்" என்று குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்த மதுர, "ஏம்பா கொஞ்சம் சாராயம் வாங்கிக் குடுக்கலாம்பா" என்று கோபாலிடம் சிபாரிசு பண்ணினார்.

"பாவம் மாமனைப் பாக்கப் பரிதாபமாக இருக்குது."

மாமன சாராயம் குடிக்கக் கூடாதுன்னு ஒரு வாரமா ரொம்பத்தான் கெடுபிடி பண்ணிவிட்டார் கோபால்.

முனியன் மேஸ்திரி பாவம் பல்லைக் கடிச்சிக்கிட்டு இருந்தார். அவரால முடியல. காரமான சாராயச் சுவைக்கு தொண்டையும் நாவும் ஏங்கியது. அவருக்கு நெனவு தெரிஞ்சு இந்தமாதிரி போதையில்லாம இருந்ததே கெடையாது. ஓயாம இருமல்கூடவே ரத்தமும் வெளியேறுது. சாரயத்தையும் பீடி சிகரெட்டையும் நிறுத்தாம ஊசி மருந்தால ஒரு புண்ணியமும் இல்லைனு டாக்டர் சொன்னாலும் சொன்னார் மாமனுக்கு பீடி சாராயம் வரும் எல்லா திசையையும் அடைச்சுட்டார். மருமவனாச்சேன்னு முனியனும் கட்டுப்பட்டுத்தான் இருந்தார். அவரால் முடியல. பாவம்

வாய்விட்டு மதுரய கேட்டுப்புட்டார்.

கோபாலுக்கும் என்னவோ போல இருந்தது. பாவம், மாமா ரொம்ப ஏக்கமாதான் கெடக்காரு. கொஞ்சம் வாங்கித்தான் கொடுப்பமே என்று கோபாலே நினைத்துக் கொண்டுதான் இருந்தார்.

''பாவம், மனுசன் முகத்துல களையே இல்லாம போச்சு. நீ இரு கோபாலு. நான் போயி வந்துடறேன்''

அவர் கால்சட்டை பாக்கெட்டைத் துழாவிக் கொண்டே போனார்.

''அட இரு நானுந்தா வர்றேனே'' என்று கோபாலும் கிளம்பினார்.

'''நீயெதுக்கு அங்க'' என்று ஆச்சர்யத்தோடு ராகம் இழுத்தார்.

நிலவு தவிர வேறு எந்த ஒரு வெளிச்சமுமின்றி இருள் முழுமையாகக் கவிழ்ந்து நின்றது. தெருவில் இரண்டொரு ஆட்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். எதிரே இரண்டு குடிகாரர்கள் ஆங்கில வார்த்தைகளை உளறிக்கொண்டு போதையில் தள்ளாடியபடி போனார்கள்.

''போதை ஏறிட்டா இவனுங்க வெள்ளைக்கார தொரையா யிடுறானுங்க''. கோபால் ஏதோ தீர்மானமாய் வந்துகொண்டிருப்பது போல் இருந்தது. உண்மையாகவே அவருக்குக் குடிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தவிட்டது. சாராயத்துல அப்படி என்னதான் இருக்குதோ.

பழைய கைவிடப்பட்ட பாழடைந்த கட்டிடம் பெரிய மைதானத்தின் வடக்கு மூலையில் தூங்கும் பேய்போல சரிந்து கிடந்தது. நிலவொளியில் அது ஏதோ சாம்பல் நிற பூதம் ஒடுங்கிப் படுத்துக் கிடப்பது போல் இருந்தது.

இரண்டு பேர் அதன் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். ஒருத்தி ஒரு பெரிய இடிந்து கிடந்த உருளைக்கல் மீது உட்கார்ந் திருந்தாள். வருபவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள்தான் சாராயம் விற்பவள் என்பதைப் புதியவர்கள்கூட தெரிந்து கொள்வார்கள். அப்படியிருந்தது அவள் தோற்றம்.

நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவன் குடிக்க, மற்றவன் அவளது எடுபிடி வேலை செய்யும் பையன்.

'நம்ம மதுர மாமந்தான்' என்று கிசுகிசுத்தான் குயிலம்மாவிடம்.

'இன்னா மாமா புதுசா ஒரு ஆளு யாரு.''

''எல்லா நம்ப ஆளுதான். போய் சரக்க எடுத்தா.''

இருட்டு மறைவில் இருந்து குயிலு எடுத்து வந்தாள். நிலவொளியில் அவளது முகம் மங்கலாகத் தெரிந்தது. சுருட்டை மயிரடர்ந்த மண்டை இரண்டு தலையளவு பெரிதாக இருந்தது.

''இன்னாயா, ஆரு, புதுசா கிறாரு'' என்றவள், கோபாலை நெருக்கத்தில் வந்து பார்த்தாள். ''நீயா?'' என்று ஆச்சர்யமாக வாய் பிளந்தவள், ''தோ... பாரேன்'' என்று கன்னத்துல கை வைத்துக்கொண்டு இரண்டடி பின்னால் தள்ளிப்போய் நின்றுகொண்டாள். அவள் பக்கத்தில் வந்தபோது அவள் மீது வீசிய தனிவிதமான புகையிலை நெடியும் வேறு சொல்ல முடியாதபடியான வசியமான ஒருவித நாற்றமும் அவரைக் குடித்தே தீரவேண்டும் என்று வெறிகொள்ள வைத்தது.

அந்தப் பகுதியில் எந்த ஆம்பள குடிப்பான். எவனெல்லாம் குடிக்கமாட்டான் என்று ஒரு பட்டியலே வைத்திருந்தாள். அதில் குடிக்காதவன் பட்டியலில் வருபவன் குடிக்க வந்திருக்கிறான் என்றால் அவளுக்கு ஆச்சரியமாய் இருக்காதா!

குயிலைப் பார்த்ததும் கோபாலுக்கு மனைவி ஞாபகம் வந்தது. வழக்கமாய் அவளைப் பற்றிய நினைப்பு வந்தால் அவருக்குக் கோபம்தான் வரும். ஆனால், இன்று மனுஷன் ஒருவிதத் தவிப்போடு நெளிந்தார். ஏறக்குறைய அவளைப் போல் இருந்தாள் குயிலம்மா.

குயிலம்மா... நாகம்மா... குயிலம்மா. நாகம்மா... கோபால் மனசு பரபரத்தது. இந்த மாதிரி அவதியால் அவர் தவித்துக் கொண்டு குயிலம்மாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மதுர வந்த காரியத்துல கருத்தா ரெண்டு கிளாஸ் சாராயத்த உள்ள அனுப்பி, ஆறிப்போன வறுத்த மீனைச் சுவைத்து முள்ளைத் துப்பிக் கொண்டிருந்தார். எனக்கும் எதனாச்சும் குடுக்கச் சொல்லன்' என்று மெதுவான குரலில் சொன்னது மதுர காதில் விழவில்லை. குயிலம்மா காதில் நன்றாகவே விழுந்தது.

சரி இங்க வா... என்று கூப்பிட்டாள். எதையோ எதோடவோ கலந்து கண்ணாடிக் குவளையை அவர் முன் நீட்டினாள். அவளைப் பார்த்துக்கொண்டே குவளையைக் காலி செய்து விட்டுப் போய் உருளை மீது உட்கார்ந்துக்கொண்டு தூ... தூவெனத் துப்பிக் கொண்டிருந்தார். ஒரே மடக்கில் குடித்து விட்டதால் நெடியும்

காரமும் அவரது கண்களைக் கலங்கச் செய்துவிட்டன. நாக்கு காரத்துக்குத் தவித்தது. சதை பிடிப்பான வறுத்த மீன் ஒன்றை அவர் முன்பாகக் கொண்டுவந்து வைத்தாள் குயிலம்மா. அதை விழுங்கும் முன்பாகவே அவர் ஓர் இனிய உலகம் ஒன்றிற்குள் நுழைந்து விட்டதுபோல் தனக்குத் தானே உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். கன்னம் இரண்டும் கிளர்ச்சியோடு பரபரத்தது.

'குயிலம்மா... கோபாலு இதுக்கு புதுசு எதனாச்சும் குடுத்துட போற பார்த்து கொஞ்சமா ஊத்து புரிஞ்சுதா கழுத...''

அவருக்கு அதிகமாகிவிட்டது. அவர் உட்கார்ந்து இருந்த இடத்துக்குப் பின்புறமாக நீளமான குட்டிச் சுவர் ஒன்று பாம்பு போல லேசான வளைவுகளுடன் வளர்ந்து போய்க்கொண்டே எங்கோ இருட்டில் மறைந்து விட்டது. அந்த நீளமான சுவர்களுக்குப் பின்பாக குட்டி மலைகளைப் போல நிலக்கரிக் கொட்டிக் கிடக்கிறது. அந்தக் குவியல்களில் புகையெழும்பி அதிலிருந்து வரும் தீய்ந்த கீல்வாடையும் ஒருவிதமான மக்கிய நெடியும் கோபாலுக்குப் புதுமையாகத் தெரிகிறது.

நிலக்கரிக் குவியல்களுக்கு இடையே நீராவி இரயில் எஞ்ஜின்கள் உறுமிக்கொண்டு நின்றன. அங்கும் இங்குமாக மஞ்சள் நிறத்தில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. திருடர்களுக்கு எச்சரிப்பாக இருக்க அடிக்கடி விசில் ஊதும் ஒலியும் இடைஇடையே வந்து கொண்டிருந்தது. கோபால் ஒரு புது உலகத்தில் விழுந்து தூரத்தில் தெரியும் புதுமைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். குயிலம்மாவின் முகம் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அவரிடம் லேசான தடுமாற்றம் தெரிந்தது. அவராகவே சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

சுவர் ஓரமாக இருந்து யாரோ குமட்டல் ஓசையுடன் வெளியே எடுக்கும் ஓசையும் ஆபாசமான உளறல்களும் கேட்டது. கோபால் இருளில் உற்றுப் பார்த்தார். நிலவொளியில் சரியாகத் தெரியவில்லை. போதையில் உளறும் மனிதனை அருகே போய்ப் பார்க்கும் ஆவலால் எழுந்து போனார். கால்கள் தள்ளாடின. மிதப்பது போல் கைகளைக் காற்றில் வீசித் தடுமாறினார். அந்த நேரம் பார்த்துக் குயிலம்மா வந்து அவரை தாங்கிக் கொண்டாள். அவர் முழுமையாகக் குயிலம்மா மேல் சரிந்து கிடந்தார். அவளால் அவரைக் கீழே தள்ள முடியவில்லை. அந்தக் கணம் அவரைப்

பலவிதமாக அலைக்கழித்தது. நல்ல வேளையாக இருள் கவிழ்ந்து கிடந்ததால் நிலைமை ஒருவிதமாகக் கடந்தது. அவர் திடுப்பெனச் சுதாரித்துக்கொண்டவர் போல நிலையாக நின்றுகொண்டார். அவரது கை பலமாகக் குயிலம்மாவின் இடையைப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஏற்கெனவே போதையில் உளறிக் கொண்டிருந்தவன் கடும்போதையில் குயிலம்மாவைக் கூசும்படியான ஆபாச வார்த்தைகளால் பாடினான்.

கோபால் கையை விசுக்கென்று உருவிக்கொண்டார். குயிலம்மாவும் ஒரு கணம் சிலிர்த்துப்போய் அவரைக் கைத் தாங்கலாகப் பழைய இடத்தில் கொண்டுபோய் உட்கார வைத்தார்.

குயிலம்மாவின் தொடுதல் அவரை என்னமோ செய்து விட்டது. அந்த அனுசரனையான நெருக்கம் அவள் மீது அவருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தியது. ஒரேயடியாய் குதூகலமடைந்துவிட்டார். "குயிலம்மா... குயிலம்மா..." என்று கூவினார்.

குயிலம்மாவே ஒரு கணம் அதிர்ந்து போய்விட்டாள். அது ஓர் உரிமையான அழைப்பு.

'தோ பாரேன் முன்னபின்ன தெரியாத பொம்பளய மனுசன் பேர் சொல்லி கூப்புடறது" என்று அவளே வாய் முணுமுணுத்தது கோபாலின் காதில் தெளிவாக விழுந்தது.

எத்தனையோ ஆம்பளைங்க குடிக்க வர்றாங்கதான். ஆனா புதுசா வந்த கோபாலு ஒரு தனியா தெரிந்தார்.

"இன்னாயா... போதையாயிடுச்சா ஒரு ராகமா கூப்புடுற" இன்னா என்பதுபோல் வந்து நின்றாள்.

வானம் நிலவு ஒளியை இளம் தூறலாய்ப் பொழிந்து கொண்டிருந்தது. குயிலம்மாவோட குரலும் அவளும், அவள் ஊத்தித் தந்த சரக்கும் கோபாலின் மனதுக்குப் பிடித்த ஏற்படுத்திவிட்டது.

"இன்னா கோபாலு வா மாமனுக்கு நாக்கு தவிச்சு கிட்டிருக்கும்."

மதுர அவசரப்படுத்தினார். அவர் கையில் இருந்த பச்சை நிறப் புட்டியில் போதைத் திரவம் சளக்..புளக் என்று சலசலத்தது.

'நீ போ நா அப்புறமா வர்றேன்" கோபாலின் நா குளறியது.

"அட நீ ஒன்னு வந்தமா சட்டுன்னு போயிடணும் போலிசு வந்துச்சுன்னா வம்பா போயிடும்... வா.. வா."

''அட நீ போய் மாமாவுக்குச் சரக்கக் குடுப்பா'' என்று வழக்கத்துக்கு மீறிய ராகத்துடன் பேசினார்.

''சரிதான் பையன்கிட்டதான் குடுத்துவுடண்ணா மேஸ்திரி வூடு பையனுக்குத் தெரியும்' என்று குயிலம்மா குறுக்கிட்டாள்.

மதுர கையில் இருந்த சாராயப் புட்டியை வாங்கிப் பையன் கிட்டக் கொடுத்துவிட்டாள் குயிலு..

பையன் புட்டியோடு இருளில் மறைந்தான்.

மதுரைக்கு ஆச்சரியமாய் இருந்தது. இந்தாளு மனசுல அப்படி என்ன தான் பூந்துக்கிருச்சோ. திடுதிப்புனு குடிச்சுட்டு ஆடுறானே என்று நினைத்துக்கொண்டார்.

இன்னைக்குச் சந்தோஷமான நாள். இன்னும் வாங்கிக்க என்று மதுரயப் பார்த்துக் குழறியவர், தனக்கும் இன்னும் வேண்டும் என்பதுபோல் காலி கண்ணாடி டம்ளரை நீட்டினார்.

குயிலம்மா சாராயத்தை நிரப்பிவிட்டு வறுத்த கறித் துண்டுகளைக் கொண்டு வந்து வைத்தாள்.

போதையில் மதுர சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

''குயிலம்மா போலீஸ் வருவாங்களா'' என்று எரிச்சலோடு கேட்டார்.

''எனக்கு இன்னா சோசியமா தெரியும் வராமாதிரி இருந்தா உட்டுட்டு ஓட வேண்டியதுதான்'' அவள் சிரித்தாள்.

''அது... சரி... அதுசரி'' என்று மதுர தலையாட்டினார்.

அவர்கள் இருவரும் சாப்பிட்டதுக்குக் கோபாலே பணத்தை கொடுத்துவிட்டு குயிலம்மாவைப் பார்த்தார். அவளும் அவரை ஒரு தினுசாகப் பார்த்தாள். நிலா வெளிச்சத்தில் சாராய போதையில் அவள் அவருக்குப் பேரழகியாகத் தெரிந்தாள். அவருக்கு இப்போது போதையோடு போதையாக அவளும் அவருள் ஏறிக் கொண்டாள்.

மாயையான அந்த நிலா ஒளியில் அவரது மனக்குதிரை தறி கெட்டு ஓடியது. இவரும் மதுக் கடையைவிட்டுப் புறப்படும்போது குயிலம்மாவைத் திரும்பிப் பார்த்தார். அவளும் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் பெரிய மைதானமே ஆழ்ந்த அமைதியோடு சாம்பல் படர்ந்தது போல் காட்சியளித்தது. இருவரும் மௌனமாகத் தள்ளாடிக்கொண்டே நடந்தார்கள்

கோபாலின் மனம் மட்டும் குதித்துக்கொண்டு இருந்தது

நெஞ்சு குயிலம்மா... குயிலம்மா என்று படபடத்தது.

மதுர அமைதியைத் துரத்த வேண்டும் என்ற நினைப்பில் ''ஏம்பா... கோபாலு கை நெறைய சம்பாதிக்கற. உம்பொஞ் சாதிய கூட்டியாந்துட வேண்டியதுதானே'' என்று எதார்த்தமாகக் கேட்டார். அவ்வளவுதான் கோபால் பல்லை நறநற வென்று நெறித்தார். அவரிடம் அனல் மூச்சொன்று வெளிப்பட்டது.

எதுக்கு அந்தச் சிறுக்கியப் பத்திப் பேசற அவ அவளோட அண்ணங்கக்கிட்டேயே இருந்து தொலையட்டும். அவளால ஒரு புண்ணியமும் கெடையாது. அவர் தொடர்ந்து பல்லை நெறித்துக் கொண்டார்.

''சரி வேற எதுனாச்சும் பண்ண வேண்டியதுதானே குடிக்காத ஆளு குடிக்கறான்னா மனசுல ஏதோ வாட்டம் இருக்குது தானே?''

''வாட்டமா... அதெல்லாம் ஒண்ணும் கெடையாது. '' சொல்லு உன் தங்கச்சியக் கட்டிக்குறேன்''

போதையில் அவர் கொஞ்சம் நீளமாக உளறினார். ஆனால். உள்ளதை உள்ளபடியே சொல்லிவிட்டார். மதுரைக்குத் தூக்கி வாரிப் போட்டது போல் இருந்தது. ஒரு கணம் நகராமல் அப்படியே நின்று விட்டார்.

''அட இன்னாயா மனுசன் நீ போதை தலைக்கு ஏறிடுச்சா சும்மா போ' என்று ஒரு பெருங்கோபத்தோடு திரும்பினார்.

மீண்டும் எதையோ பேச கோபால் வாயெடுத்தார். ''ஏம்பா உடுப்பா நீ ஒண்ணு கெடக்க ஒண்ணு ஒளறி வைக்கப்போற. வூடு வந்துடுச்சி. நீ... போ காலம்பற பாத்துக்கலாம்'' கோபம் இருந்தாலும் பெருந்தன்மையோடு கோபாலைப் பாயில் மல்லாக்கப் படுக்க வைத்துவிட்டுப் பெருங்குழப்பத்தோடு வூடு நோக்கி நடந்தார். அவருக்குப் போதை தெளிந்துவிட்டது.

திடீரென்று கோபால் இப்படிப் பேசியது மதுரைக்கு அவமானமாய் இருந்தது. எப்போதும்விட தன் தங்கச்சிக்காக மதுர ரொம்பவும் வேதனையடைந்தார். அடக்க மாட்டாமல் அவருக்கு அழுகை பீறிட்டது.

குடிசைக்கு வெளியே போதையில் கோபால் உறங்கிப் போனார். இடை... இடையே உளறல்கள் கேட்டது. கனவுலகில் அவர் மூன்று பெண்களால் துரத்திச் செல்லப்பட்டார். ஓட..ஓட... மூன்று பெண்கள் விடாப்பிடியாய் அவரைத் துரத்தினார்கள். அவரைத் துரத்தும் பெண்களில் ஒருத்திக்குக்

குழந்தையின் முகம் போன்று இருந்தது. அது நிலவு போல வெண்மையாக இருந்தது. மற்றொருத்தியின் முகமோ மஞ்சள் பூசப்பட்டுச் சூரியன்போல சுடர்ந்தது. மூன்றாமவளுக்கோ முகமே தெரியவில்லை. அவள் பெரிய பெரிய அங்கங்களோடு தலை தெறிக்க ஓடி வந்தாள். ஆனால், நிலவு முகமாய் இருந்தவளோ அவரைத் தாண்டிக்கொண்டு அவருக்கு முன்பாக ஓடினாள். அவர் அவளைத் துரத்தத் தொடங்கினார். விடியும்வரை அவர் உறக்கம் கலையும்வரை துரத்தல் தொடர்ந்தது. காலையில் விழித்தபோது அவரிடம் குழப்பம்தான் மிஞ்சியது. கலவரமான மன நிலையில் இருந்தார்.

காலையில் வழக்கமாகக் குரல் கொடுக்கும் மதுர வரக் காணோம். பொழுது விடிந்தது. இருவரும் ஒன்றாகப் போய் தேநீர் குடிப்பது வழக்கம். இன்னைக்குப் பொழுது விடிஞ்சு நேரம் போவுது ஆளக் காணோமே. கோபாலுக்குத் தலை அதிர்வதுபோல் முரட்டுத்தனமாய் வலித்தது. ஏடாகூடமா எதாவது பேசிட்டமோ என்று ஒரு கணம் தோன்றியது.

பிறகு ஒவ்வொன்றாய் நினைவுக்கு வந்ததும் சடக்கெனத் தலையில் அடித்துக் கொண்டார். "சே... இதென்னடா" என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டார்.

முனியன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். ஒரு வாரமாய் இருந்த இருமல் இப்போது அடங்கிப்போய் இருந்தது.

தெருவில் மாட்டுவண்டி உருண்டு வரும் தடதடா சப்தம் கேட்டது. குடிசைக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தார். மதுரதான் வண்டிய ஓட்டி வந்தார்.

வண்டியை நிறுத்தாமல் மாட்டைத் தூண்டி வேகமாக ஓட விட்டார். வண்டியில் மூட்டை முடிச்சுகளோடு குழந்தையை மடியில் உட்கார வைத்து இறுக்கிப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் நாகம்மாள்.

கோபால் இருந்த பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் மதுர வண்டியை ஓட்டிப் போனார்.

அட இதென்னடா வம்பா போச்சே அப்படி என்னதான் பேசிட்டேன் என்று உள்ளுக்குள் கலங்கினார்.

வெட்கம் மட்டுமல்ல வேதனையும் அவரைப் பிடுங்கித் தின்றது.

மனக் குழப்பத்தோடு நின்று கொண்டிருந்தார்.

'மச்சான் இரு இன்னைக்கு நானும் கொடவுனுக்கு வர்றேன். இப்படியே படுத்துக்கெடக்கறது என்னமோ போல இருக்குது'' லேசான இருமலுடன் எழுந்தார் முனியன்.

'அதெல்லாம் ஒன்னும் வேணா. இந்த ஓடம்போட வேலைக்கு வரவேணாம். இன்னும் ஒரு ரெண்டு மூணு நாளு போவட்டும். கொஞ்சம் ஓய்ஞ்சாப்பல இருந்தா உடம்பு தேறிடும்'' என்று கோபால் தடுத்தார்.

'எக்கா.. மாமாவ சாராயக்கட பக்கமா உட்டுறப்போற'' என்று அஞ்சலைய எச்சரித்துவிட்டு செலவுக்கு அவளிடம் பணம் கொடுத்துவிட்டுக் கிளம்பினார். மனம் மட்டும் குழப்பத்தோடு இருந்தது.

சின்னப்பொண்ணு குடிசைக்கு வெளியே எச்சில் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருந்தது. அந்தப் பெண் துணி துவைப்பதும் பாத்திரங் கழுவுவதும் எப்போதும் எதாவது ஒரு வேலை செய்துகொண்டு இருப்பதுமாக இருந்தாள். அவளது முகத்தை ஒரு முறைகூட சரியாகப் பார்க்க கோபாலுக்கு வாய்க்கவில்லை. கூச்ச சுபாவமுடைய அவளைப் பார்க்கவேண்டும் என்று அவருக்கும் தோன்றவில்லை.

காலை நேரத்தில் வெளியே தண்டோரா போடும் சப்தம் கேட்டது. மாநகராட்சிப் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கச் சொல்லி அறிவித்துக்கொண்டு போனார் ஒரு வயதான கிழவர்.

சிலர் குழந்தைகளை ஆர்வமாகப் பள்ளிக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். முனியனுக்கும் அஞ்சலைக்கும் சின்ன பொண்ணைப் பள்ளிக்கு அனுப்பும் எண்ணம் எதுவும் இல்லை. அஞ்சலைக்கு மட்டும் அந்த எண்ணம் இப்போது உதித்தது. தன் மகளையும் பள்ளிக்கு அனுப்பினால் நாலு எழுத்து கற்றுக் கொள்வாள். ஒரு கடுதாசி எழுத கத்துக்கிட்டா ஒரு பெருமையான விஷயம்தானே என்று தோன்றியது. முனியனிடம் சொல்லிப் பார்த்தாள். தகாத வார்த்தை சொல்லி விட்டதைப்போல அவர் இரைத்தார்.

பெண்ணைப் படிக்க அனுப்ப அவருக்கு விருப்பம் இல்லை. வயசுக்கு வந்த பொண்ண வெளிய அனுப்பறதா என்பது போல் பார்த்தார்.

''போடி, நீ ஒரு பன்னாட... கொழந்த வூட்டுல இருந்துக்கட்டும். அவ படிச்சி என்னத்த ஆவப் போவுது. ஆம்பளப் புள்ளையா

இருந்தா படிச்சி அச்சாப்பீஸ்ல உத்தியோகம் பாக்கலாம். அவ புருஷனுக்குப் பொங்கிப்போடப் போறா. அதுக்கு எதுக்குப் பள்ளிக்கூடம் போ... வேலையப் பாரு.''

பேசிக் கொண்டிருக்கும்போதே முனியனுக்குக் கடுமையான இருமல் வெளிப்பட்டது. வாய் நிறைய சூடான ரத்தம் வந்தது. அந்த வாடை சகிக்க முடியாமல் எழுந்துகொண்டு தடுமாறி வெளியே வந்தார். ரத்தத்தைத் துப்ப, அஞ்சலை அதைப்பார்த்து விட்டு நெஞ்சில் அறைந்துகொண்டு ஓ... வென்று கத்தினாள்.

முனியன் இந்த நிலையிலும் கோபாலை நினைத்துக் கொண்டார். அவன்கிட்ட பேசணும் என்று தோன்றியது. ஒருவேளை தான் செத்துப்போனால் தனது குடும்பத்தை நினைத்து அவருக்குக் கலக்கம் வந்தது.

நோய்ப் படுக்கையில் இருக்கும்போது கோபால்கிட்ட அதப் பத்திப் பேசத் துடித்தார். ஆனால், பயமாகவும் இருந்தது. ஊர்ல இருக்கிற பொண்டாட்டிய கூட்டிவரச் சொல்லனும். இல்லனா தன் மகளையாவது கட்டிக்கப்பான்னு கேட்கணும்னு மனசுக்குள் திட்டம் இருந்தது.

கோபாலைத் தனது மருமகனாக அவர் கனவு கண்டு கொண்டிருந்தார். பாவம் அவருக்கு நிலைமை எங்கே தெரியப் போகிறது.

கோபால் மனதில் ஏற்பட்டிருக்கும் கலவரத்தை யார் அறிவார்கள்? ஓரளவு நெருங்கிப் பழகும் மதுர கூட இப்ப குழம்பிக்கொண்டு தான் இருந்தார்.

கோபால் பேசுனது குடிவெறியில் இல்ல. மனசுல இருந்த நெனப்பதான் நேர்மையா சொன்னான். மனுச என்ன நெனைச்சிச் சொன்னானோ புரியலையே. தன்னோட தங்கச்சிக்குக் கோபால் மாதிரி ஒரு புருசன் கெடைச்சா நல்லதுதான்.

ஆனா, இது நடக்கக்கூடியதா? அந்த மனுச கட்டினவள காட்டுல விட்டது மாதிரி வுட்டுட்டு வந்தவன். வந்த இடத்திலயும் அவனுக்கு ஒருத்தி வளர்ர மாதிரி தெரியுது. இதுல கைக் கொழந்தையோட இருக்கறவள எப்படிக் கட்டிக்குவாம். மதுரக்குக் கொழப்பமா இருந்தது. தலையைப் பிடித்துக் கொண்டார். அவருக்குக் கண் கலங்கியது. புத்தியும் கலங்கியது போல் இருந்தது.

ஒருவேளை தங்கச்சிய கட்டிக்குவானா? அவர் மனம் தங்கையின் நல்வாழ்வுக்காக ஏங்கியது.

கோபால் குடிபோதையில் அப்படிக் கேட்டது மதுரைக்கு அவமானமாய்தான் இருந்தது. தங்கையை யாராவது ஒரு சொல் சொல்லிவிடக் கூடாது என்பதில் அவர் கருத்தாக இருப்பவர். தங்கச்சியப் பத்தி இவன் என்னதான் நெனைச்சிக்கிட்டிருக்கிறான், எதுக்கு அப்படிக் கேட்டான். இந்தக் கேள்வியே அன்னைக்குப் பொழுதுக்கும் கேட்டுத் தனக்குத் தானே கலங்கிக்கொண்டு குழப்பத்தோடு இருந்தார்.

எது எப்படியோ அவன்கிட்ட தானாப் போய் இனி பேசக் கூடாது என்ற வைராக்கியத்தோடு முடிவு செய்துகொண்டார் மதுர. அன்றைய பொழுது முழுதுமே இருவருக்குமே. மனப் போராட்டத்தில் ஓடியது.

ஆட்களுக்குக் கூலி பிரித்துக் கொடுத்தது போக மீதியைக் கணக்குப் பார்த்துச் சட்டை உள் பாக்கட்டில் வைத்துக்கொண்டு வியர்த்து வழியும் முகத்தைத் துடைத்துக் கொண்டு முகம் அலம்பத் தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கமாக நடந்தார் கோபால். அதே சந்து மூலையில் தான் மதுர வண்டி நிற்கும் இடம். வழக்கமாக கோபாலுக்காக மதுர காத்திருப்பார். இன்று வழக்கத்துக்கு மாறாக வண்டியில் மாட்டைப் பூட்டிக் கிளப்பினார். கோபாலுக்குச் சங்கடமாக இருந்தது.

அட அப்படியா சங்கதி இன்னும் கொஞ்சம் தாமதமா வந்திருந்தாலும் ஆள் போயிருப்பான் போல இருக்குதே. தன் மீது கோபத்தோடு இருக்கிறான் என்பதைப் புரிந்துக் கொண்டார்.

மதுர கோபாலைப் பார்த்துவிட்டார். கோபாலும் வண்டியை நோக்கித்தான் போய்க் கொண்டிருந்தார்.

துள்ளிப் பாய்ந்த மாட்டைக் கயிறு சுண்டிக் கட்டுப் படுத்தினார்.

''என்னவோய் கோவமா'' என்றவர் வண்டிக்குத் தாவினார். மதுர வாயே திறக்கவில்லை.

ரெண்டு பேருமே மனப் போராட்டத்தில் தத்தளித்தனர். அது மாதிரியான சமயத்தில் மாடு பள்ளம் ஒன்றில் இறங்கி ஏறியது. இருவருமே சுதாரிப்பு இல்லாமல் இருந்ததால் கோபால் வண்டியில் மல்லாக்க விழுந்து புரண்டார். மதுர சுதாரித்துக்கொண்டு மாட்டை ஆபாசமாகத் திட்ட வாயெடுத்து ஏனோ வாயை மூடிக்கொண்டு சாட்டையால் விளாறினார்.

''ஏம்பா மாட்ட அடிக்கற. கூட வரவேணாம்னா சொல்லு கீழ இறங்கிடறேன் அதான்'' கோபால் எரிச்சலாகப் பேசினார்.

''சரி இதுக்கு மேல வாய மூடிக்கிட்டு இருந்தா சரிப்படாது'' என்று மௌனம் கலைத்தார் மதுர.

'எதுக்கு கோபாலு எம் பொழப்பக் கண்டா எல்லாருக்குமே இளக்காரமா இருக்குது என்ன பண்றது.''

இயலாமையில் இருப்பவர்போல பரிதாபமாக வெளிவந்தது குரல், 'அட அப்படி என்னதான் நடந்துருச்சின்னு இப்படிப் பண்ற சொல்லு அப்படி நான் என்னத்தச் சொல்லிப்புட்டேன் மனசுல பட்டத சொன்னம்பா. நான் போதையில் எதுவும் ஒளறல தெரிஞ்சுக்கோ.''

மௌனம்... நீண்ட மௌனம். வண்டி தன் பாதையில் போய்க்கொண்டிருந்தது.

இதுநாள் வரைக்கும் இல்லாத இரக்கமும் நட்பும் அங்கு போட்டி போட்டுக்கொண்டு உறவாடியது.

இருவருமே தங்களது சம்பந்தத்தை விரும்பினார்கள். ஆனால் ,மதுர தனது தங்கையின் வாழ்வில் எந்தக் களங்கமும் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாயிருந்தார்.

அமங்கலியான தன்னோட தங்கை சுமங்கலியாவதை எந்த யோக்கியமான அண்ணன் தான் விரும்பமாட்டான். ஆனால், அதில் மீண்டும் ஒரு பூகம்பம் வந்துவிடக்கூடாது என்பதுதான் மதுரயின் கவலையெல்லாம்.

''நீ போதையில பேசனியா நிதானமா பேசனியான்றது எனக்குப் புரியல.''

'அட... மனசுல பட்டத சொன்னம்பான்றனே'' கோபால் பொறுமையாகவே சொன்னார்.

'''உனக்குத்தான் கல்யாணமாகி ஊர்ல பொண்டாட்டி இருக்காளய்யா இப்ப இந்த மாதிரி கேட்டா என்ன அர்த்தம்? அப்படியே நீ அவள அத்துபூட்டு வந்துட்டாலும் முனியன் மாமா தன்னோட பொண்ண உனக்குத்தான்னு சொல்லிட்டு இருக்காறே. இதெல்லாம் உனக்குத் தெரியாதா இன்னா?''

கோபாலைப் பொறுத்தவரையில் இது புது சேதிதான். கோபாலின் மனசு ஒரு கணம் ஆட்டம் போட்டது. வண்டியும் குறை வைக்காமல் தடதடத்துக்கொண்டு ஓடியது. ரெண்டு மனிதர்களின் பேச்சில் கவனம் செலுத்தியது போல் துள்ளிக்கொண்டு ஓடியது ''இந்த மாட்டுக்கு நடக்கவே தெரியாது ச்ச...'' என்று

சலித்துக்கொண்டார் மதுர.

ஆமா இத உனக்குச் சொல்லியாகணும் என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டார் கோபால். இதுநாள் வரைக்கும் யார்கிட்டேயும் சொல்லாத ரகசியம் மதுரயிடம் சொல்லிவிட துடித்தார். ஆனால், அதை எப்படிச் சொல்வது..? சொல்லித்தானே ஆகணும்.

''எனக்கு முன்னாடி நடந்துச்சே அது கல்யாணமே இல்ல. அது ஒரு ஏமாத்து வேலப்பா'' என்றார்.

இப்படிச் சொல்வது அவருக்கேகூடச் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனாலும், கோபாலின் முகத்தில் பழைய கடுகடுப்பு வந்துவிட்டது.

மதுர வண்டியைக் கொஞ்சம் நிதானமாகவே ஓட்டினார். மாடும் கதையைக் கேட்பதற்காகவோ என்னவோ நிதானமாக வண்டியை இழுத்துக் கொண்டு போனது.

''இன்னாத்த ஏமாத்திட்டாங்க'' ஏதோ ஆர்வம் இல்லாதவர் போல கேட்டார்.

என்னத்த சொல்றது பாவம் அவ கல்யாணமே வேணாம்னு தான் சொல்லியிருக்கிறா. தங்கச்சி ஏதோ விவரம் இல்லாம சொல்றான்னு அவ அண்ணனுங்க நம்மளப் பாத்துக் கட்டி வச்சுட்டானுங்க.

''அப்புறமா தானே தெரியுது. என்னத்த பண்றது. பாவம் ஒரு வாரமா கேவிக் கேவி அழுதுகிட்டிருந்தா. மனசு கேக்கல. அவ வீட்டுலேயே கொண்டுபோய் உட்டுட்டேன்.''

'வீட்டுல கொண்டுபோயி விடற அளவுக்கு அப்படி என்னதான் நடந்துச்சின்றன்''

அட அத எப்பிடிச் சொல்றது என்று நெகிழ்ந்தார். 'சர்தான் உடுப்பா' எதையோ சொல்லிச் சமாளிக்கிற சலிப்போடு பேசினார் மதுர.

அதில்லே.. அவகூட எந்த ஆம்பிளையும் குடும்பம் நடத்த முடியாதுப்பா என்று ஒருவழியாகக் கூட்டி முழுங்கிச் சொன்னார்.

''இதுன்னாயா புது சங்கதியா இருக்குதே. அப்பிடி இன்னாயா நீ கொறை கண்டுபிடிச்சே' '

''ஆமா புது சங்கதிதான்.'

அவரது வார்த்தைகள் தொண்டைக்குள்ளாகவே நின்று

விட்டன.

"சரிதான் அந்தப் பெண்ணுக்கும் உனக்கும் இனி எந்த உறவும் இல்லன்றியா?'

"அட அதான் சொல்றேனே அவகூட சம்சாரம் பண்ண முடியாதுப்பா."

'அவகூட நடத்த முடியாத குடும்பத்த இன்னொருத்தி கூட மட்டும் எப்படி நடத்துவ."

கோபாலுக்கு எரிச்சலா வந்தது. பொறுமையா இருந்தவரின் முகத்தில் எரிச்சலுக்கான குறி தெரிந்தது. அவர் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டார்.

"நான் ஒன்னு சொன்னா தப்பா எடுத்துக்கக் கூடாது." மதுர மௌனமாக இருந்தார்.

ஆம்பள கூடப் படுத்து அவளால புள்ள பெத்துக்க முடியாது. அந்தச் சங்கதியில அவளுக்கு ஆசை கெடையாது. அவள வச்சுக்கிட்டு நான் இன்னாத்த பண்றது" என்று குரலடக்கிப் பேசினார்.

கோபாலை, ஒருமுறை திரும்பிப் பார்த்தார். மதுர அந்த இருட்டிலும் அந்தக் கருப்பு முகத்தில் வெட்கமும் வேதனையும் தெரிந்தது.மதுரக்குப் புரிந்துவிட்டது. அடடா, இப்படியா கதை. அடப்பாவி மனுசா இவ்ளத்தையும் மனசுல போட்டுப் பூட்டிக்கினா காலத்தை ஓட்டின. கோபால் மீது சக மனிதனுக்கான இரக்கம் பிறந்தது.

"சரி, சரி இப்பப் புரியுது. அதான் உன் மாமன் பொண்ண உனக்குக் கட்டலாம்னு திட்டம் வச்சிருக்காரே."

"நீ ஒன்னு அது சின்னக் கொழந்த. மாமனுக்குதான் அப்படி நினைப்பே தவிர அத பத்தி எனக்கு எந்த நெனப்பும் கெடையாது. தம்பி முருவனுக்குத்தான் அவ பொருத்தமா இருப்பா. என் தம்பி இங்க வந்துட்டுப் போனான் தெரியும்ல" என்று இழுத்தாப்பல கேட்டார்.

"ஆமா" மதுர தலையாட்டினார்.

அப்ப ரெண்டும் ஜாடை மாடையா பேசிக்கிட்டு நிக்குதுங்க. சரி போவட்டும் அதுங்களுக்குன்னு ஒரு காலம் வரட்டும்ன்னு அப்பத்திலிருந்து நெனச்சுக்கிட்டு இருக்கிறேன். மாமனுக்கு அக்கா புள்ளைங்கள்ல ஒருத்தன் மருமவனா வரணும். அது

எப்படியும் நடக்கத்தான் போவுது.

பிறகு வெகுநேரம் அமைதியாக இருந்தார்கள். மாடு மட்டும் துள்ளிக்கொண்டு ஓடியது.

'அதுசரி... நீ எதுக்கு இப்பிடி எல்லாத்தையும் போட்டுத் துருவறா?'

'எல்லாங் காரணமாத்தான் கொஞ்சம் போவட்டும். முடிச் சுடலாம்.'' அவர் உள்ளுக்குள் பேசுவது போல் சொன்னார். ஆனால், கோபால் காதில் தெளிவாக விழுந்தது. அந்த வார்த்தை அவருக்கு இனித்தது.

குடிசைகளைப் பார்த்ததும் மாடு சாந்தமடைந்து விடும். அதன் துள்ளல் அடங்கி நிதானமாக நடக்கும். கிடைக்கப் போகும். உப்பு கலந்த தவிட்டுப் புண்ணாக்கு உணவுக்காக ஏங்கி நீளமான நாவால் மேல்கீழ் உதட்டை நக்கி ஈரப்படுத்திக் கொண்டு தன் முதலாளியிடம் நல்ல பிள்ளை போல் நடந்து கொள்வதற்காக மெதுவாக நடக்கும். இது வழக்கமான ஒன்றுதான்.

கோபால் தன் குடிசை வாசலில் இறங்கிக் கொண்டார். அவர் மனசும் அமைதியாக ஆனால், ஆனந்தமாகக் குதித்தது.

குடிசைக்குள் நுழைந்ததும் கொதிக்கும் அனலோடு படுத்துக் கிடந்த மாமனைப் பார்த்ததும் கொதிப்பெல்லாம் அடங்கிப் போனது.

அஞ்சலை ஒரு மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டி ருந்தாள்.

'ஊசிக்குப் பயந்துக்குனு மாமன் ஆஸ்பத்திரிக்கு வரமாட் டேன்னுடுச்சி'' அவள் குமுறி அழுதாள்.

கிட்டத்தில் போய் முனியனைத் தொட்டுப் பார்த்தார். அனலாய்க் கொதித்தது கடுமையான இருமல் அவரிடம் இருந்து வெடித்துக் கொண்டு கிளம்பியது. பக்கத்தில் இருந்த ஒரு தகர டப்பாவில் உமிழ்ந்தார். ரத்தம் கட்டியாக வெளியே வந்து விழுந்தது. அவர் கண்களை அச்சத்தோடு முடிக்கொண்டு இரண்டு கைகளாலும் மார்பைப் பிடித்துக்கொண்டார்.

அஞ்சலை மார்பில் அறைந்துகொண்டு அழுதாள். அவளைப் பார்ப்பதற்கே ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. சின்னப் பொண்ணு அப்பாவின் காலடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

''கோபாலு மாமாவுக்கு என்னப்பா ஆச்சி.''

'நீ சும்மா இருக்கா. ஒன்னும் இல்ல நாம ஆஸ்பத்திரிக்குப் போவலாம் எல்லாம் சரியாப் பூடும்.''

'ராசா மாதிரி இருந்த மனுச இப்பிடி கவுந்து கெடக்காறே'' நெஞ்சில் அறைந்து கொண்டாள்.

பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து எட்டிப் பார்த்துக்கொண்டு குசுகுசுவெனப் பேசிக்கொண்டார்கள்.

ஒரு வயதான பாட்டி குடிசைக்குள் வந்தார். அவருக்குத் தோலெல்லாம் சுருங்கிப் போய் உடம்புகூட வடிவிழந்து கூனி நடுங்கிக் கொண்டிருந்தது.

'டேய், முனியா என்னடா ஆச்சு இந்த மாதிரி கொழந்தை களைத் தவிக்கவுட்டுப் பாக்குறியே, சாராயம், பீடின்னு இப்படி அழியறானுங்கள பாவி மக்க.. எந்திரிச்சி வைத்தியங் கிட்டத்தான் போயேண்டா.''

கிழவி முனியனின் தலைப் பக்கமாப் போய் உட்கார்ந்து கொண்டார். அவரது தலை நிலையில்லாமல் ஆடிக் கொண்டிருந்தது.

கோபால் அமைதியாக நின்றுகொண்டிருந்தார். அவருக்கு எதுவும் புரியவில்லை. மாமனின் உடம்பு மோசமாக இருப்பது அவருக்குக் கலக்கமாய் இருந்தது.

முனியன் கண் திறந்து சுற்றிலும் ஒருமுறை பார்த்தார். பிறகு பெருமுயற்சி செய்து இருமலை அடக்கினார். ஆனால், விடாப் பிடியாகத் திமிறிக்கொண்டு இருமல் வெடித்தது. அவசரமாகத் தகர டப்பாவை எடுத்துத் துப்பினார். ரத்த வாடை அவருக்கு குமட்டல் எடுத்தது.

அவர் முகத்தைக் கடுமையான முறையில் சுருக்கினார். மூச்சு விட அவருக்குச் சிரமமாக இருந்தது. தனக்குச் சாவு நெருங்கிவிட்டதைச் சொல்பவர்போல கோபாலின் முகத்தைப் பார்த்தார். நீதான் எனக்கு எல்லாமும் என்பது போல் இருந்தது அந்தப் பார்வை. சுற்றி நின்றவர்கள் மிரண்டு போனார்கள். வாயைப் பொத்திக்கொண்டு பெண்கள் வெளியே வர வேறு சிலர் குடிசைக்குப் போக... இப்படியாகக் குடிசை அதிர்ந்தாடியது.

அங்கு நடந்த பதற வைக்கும் கூச்சலால் மதுரையும் விசாரிக்க வந்தார்.

மாமா படுத்துக் கெடக்காத சும்மா எழுந்து உக்காரு என்று, தானே தூக்கிச் சுவரோரமாகச் சாய்ந்து உட்கார வைத்தார் கோபால். முனியனுக்கு மூச்சு வாங்கியது. மேலும், இருமல் குமுறிக் கொண்டு வந்தது.

''ஏண்டி இங்க நிக்கறீங்க.''

இந்த நோவு பொல்லாதது என்பதுபோலப் பாட்டி மெதுவாகக் கிசுகிசுத்தார்.

''என்னத்த நோவோ என்னாமோ போங்க'' கிழவி புலம்பிக் கொண்டே வெளியே போய்விட்டார்.

அவனுக்கு நேரம் கிட்டத்துல வந்திருச்சி என்று கிழவியின் உள்மனம் சொன்னது. எதிரில் இருந்த அவரது குடிசை வாசலில் போய் உட்கார்ந்து கொண்டார்.

கிழவி முனியனின் இறுதிச் செய்தியைக் கேட்பதற்காக வென்றே உட்கார்ந்திருப்பது போல் இருந்தது.

இப்படியே ஒரு மாதம் இழுத்துக்கொண்டு போனது. ஆஸ்பத்திக்குப் போகவில்லையே தவிர, கோயில் மாயமந்திரம்னு எல்லா உருப்படாத விசயங்களுக்கு முனியனை அழைத்துக் கொண்டு திரிந்தாள் அஞ்சலை. கைச்செலவுக்குக் குறைவில்லாம் கோபால் கொடுத்துக் கொண்டிருந்தார்.

நெத்தி நெறைய விபூதியும் குங்குமமுமாக இருந்தார் முனியன். கோபால் இல்லாத சமயம் பார்த்து சாராயம் அவர் வாய்க்குள் தாராளமாகப் போய்க் கொண்டிருந்தது.

நோய் ரொம்பவும் முற்றிப்போய் ஆள் அடையாளமே தெரியாதபடி வதங்கிப் போய்விட்டார்.

நடமாட்டமே இல்லாமல் போய்விட்டது. ஒன்றை மட்டும் விடாப்பிடியாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அதாவது,

'டேய், கோபாலு அக்காளையும் கொழந்தையையும் பார்த்துக்கோ'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

கோபால் வீட்டில் இல்லாத சமயத்திலும் ''கோபாலு.. கோபாலு...' என்று கூப்பிட ஆரம்பித்துவிட்டார். அவர் வாயிலிருந்து இருமலும் கோபால் என்ற அழைப்பு மட்டுமே வந்து கொண்டிருந்தது.

வானம் மந்தாரமாய் இருந்த ஒரு பகல் பொழுதில் முனியன்

ஏறக்குறைய சவம்போல் வெளுத்து மயக்கத்தில் கிடந்தார். பயந்து போன அஞ்சலை அலறி சத்தம் போட்டதில் பக்கத்து குடிசைச் சனங்கள் கூடிவிட்டார்கள்.

அவசரமாகக் கை ரிக்ஷாவில் உட்கார வைத்து அஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

நோய் மிகவும் முற்றிப் போய்விட்டதால் செய்வதற்கு ஒன்றும் இல்லையென்றும் எதற்கும் தாம்பரம் கொண்டு போய்ப் பார்க்கும்படியும் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டார் டாக்டர்.

முனியன் அதற்கு உடன்படவில்லை. அவ்வளவு தூரம் தன்னைக் கொண்டு போக வேண்டாம் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்.

பூசாரி தினமும் வந்து வேப்பிலையடித்து விட்டுப் போனார். விபூதி குங்குமச் சமாச்சாரத்தோடு சாராயமும் அவரது நோய்க்கு மருந்தாகி அவரைக் கொன்று கொண்டிருந்தது. அஞ்சலை தினமும் சாராயம் வாங்கித் தந்து கொண்டிருந்தாள். அவர் போதையிலேயே கிடந்தார். சாராயம் அருந்தும்போது இருமலும் வேதனையான முனகல்களும் நின்றது. இதற்காகவே அஞ்சலை சாராயத்தை வாங்கி வந்து அவர் தலைமாட்டில் வைத்து விட்டாள். இப்போது நீளமான மட்ட ரக சுருட்டும் அவருக்குத் துணையாகி விட்டது. குழிப் புண்ணாகிவிட்ட அவரது நுரையீரலின் மிச்ச மீதியை அந்தப் புகை தின்று தீர்த்துக் கொண்டிருந்தது.

சின்னப்பொண்ணு அப்பாவின் தலைப்பக்கமாய் உட்கார்ந்து கொண்டு அழுவதும் தினமும் கொதித் தண்ணீரில் முக்கியத் துண்டால் அவரைத் துடைத்துச் சுத்தமான சட்டை போட்டு விடுவதுமாய் இருந்தாள். அப்பா விரைவில் எழுந்து வழக்கம்போல் மாமனுடன் வேலைக்குப் போய்விடுவார் என்று மனப்பூர்வமாய் நம்பினாள்.

அவளைப் பார்க்கும்போது முனியனின் கண்கள் கலங்கும். கல்யாணமாகி வெகுகாலம் குழந்தையில்லாமல் இருந்தார்கள், அப்படியே இருந்து தொலைக்கக் கூடாதா என்று வேதனைப்பட்டது மனம். சரி விடு கோபால் கரை சேர்த்திடுவான். அதே மனம் அவருக்குப் பதில் சொன்னது.

கோபாலின் போக்கு இப்போது மாறிவிட்டதை முனியன் எப்படி அறிவார். நாகம்மாளின் நினைப்பாகவே இருந்தார்

கோபால்.

⊙⊙⊙

நாகம்மாள் ஊருக்குப் போய் அங்கேயே வயதான தாயுடன் தங்கிவிட்டாள். அவள் எப்போது திரும்பி வருவாள் என்ற மதுர யிடம் கேட்கும் துணிவு அவருக்கு இல்லை. மாமன் இருக்கும் இந்த நிலையில் அதைப் பற்றிப் பேசவும் முடியாது. மாமனின் மோசமான உடல்நிலை தன் மகளையும் தன்னையும் சேர்த்து அவர் காணும் கனவு இதில் தன்னுடைய மனதில் வளரும் நாகம்மாள் இது எல்லாம் சேர்த்துக் கோபாலை உலுக்கி எடுத்தது. மனம் தடுமாறிக் கொண்டிருந்தார். இந்தத் தடுமாற்றம் எல்லாம் குயிலம்மாவின் சாராயம் மூலம் சாந்தமாகிக் கொண்டு வந்தது.

சாராயம் இப்போதெல்லாம் கோபாலின் தினசரி உபயோகத்துக்கு வந்துவிட்டது. குயிலம்மாவும் தனது புதிய வாடிக்கையாளரை நல்ல விதமாகக் கவனித்துக் கொண்டாள். அவர்மீது அவளுக்கும் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு, மாலை நேரங்களில் அவரது வரவுக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள். கொஞ்ச நேரம் கடந்தாலும் 'மேஸ்திரியப் பாத்தீங்களா' என்று வருபவர்களிடம் கேட்கவும் செய்தாள்.

இரண்டொரு நாள் போகாதபோது செல்லமாகக் கோபித்துக் கொள்ளவும் அதற்கு கோபால் சமாதானம் சொல்வதும் பிறகு அவளது சிணுங்கலும், கிண்டலும் கோபாலுக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. கோபால் நிலைமை இப்படித் திடீரென மாறிப்போனது. சாராயத்துக்காகக் குயிலம்மாவை நேசித்தார். குயிலம்மாவுக்காகச் சாராயத்தை நேசித்தார். தனது ஏமாற்றமான வாழ்க்கைக்கு இப்படி ஒரு வடிகால் தேடிக் கொண்டார். இந்த விசித்திரமான உறவின் நாடகம் வளர்ந்து கொண்டே போனதை மதுரை அறியாமல் போனதுதான் கொடுமை.

வறண்ட பாலைவனங்களில் திரியும் மனிதனுக்குச் சோலையைப் பார்த்ததும் ஓர் ஈர்ப்பும் மயக்கமும் ஏற்படுவது இயல்புதானே. அப்படி ஒரு சோலையாகவே குயிலம்மாள் தெரிந்தாள். ஆனால், போதை நேரங்களில் மட்டுமே அவள் அவருக்குத் தேவதை போலத் தெரிந்தாள். ஆனால் நெஞ்சு பூராவும் நாகம்மா உட்கார்ந்துகொண்டிருந்தாள். ஆனால், அவளோ கண் காணாத இடத்தில் இருக்கிறாள். அவரது ஏங்கித் தவிக்கும் நெஞ்சுக்குக் குயிலம்மா மருந்து தடவிக் கொண்டிருந்தாள்.

சாராயச் சுவை அவருக்குத் திகட்டாத தேனமுதுபோல் ஆனது. குடிபோதையில் தள்ளாட்டம். தடுமாற்றங்களால் அவரது முன் பல் முனை உடைந்து மூளியானது. அதை மூடி மறைக்கச் சீன பல் வைத்தியனிடம் தங்கப் பல் கட்டிக் கொண்டார். உண்மைப் பல் இருந்த இடத்தில் அது ஒளிர்ந்தது. உண்மை போல ஒரு பொய்.

தங்கப்பல் என்றாலே அவனிடத்தில் பணத்துக்குப் பஞ்சமில்லை என்று அர்த்தமாகிவிடுகிறது. இப்போதெல்லாம் சாராயத்துக்காக அவரது தொண்டையும் குடலும் ஏங்க ஆரம்பித்து விட்டது. குயிலம்மாவுக்காக அவரது மூளை பரபரத்தது. இந்த விதமான கட்டுப்பாடற்ற உணர்வுகள் ஒரு மனிதனைக் கீழே தள்ளிவிடப் போதாதா? கோபால் அதுபோன்ற அபாயகரமான சிக்கல்களில் சிக்கித் தவித்தார்.

எளிய மனிதர்கள் வாழும் குடிசைகள் கலைந்தோடும் மேகங்களுக்குக் கீழாகக் கிடந்தன. அந்தப் பகுதி முழுவதுமே துர்நாற்றத்துக்கு எந்தக் குறையும் கிடையாது பார்க்கும் இடமெல்லாம் கழிவுநீர் குட்டைபோல் தேங்கிக் கிடந்தது. மக்கள் தங்கள் வழக்கமான கடமைகளை எந்தவித மனக்கசப்பும் இன்றி இந்தக் கொடும் நாற்றங்களுக்கு மத்தியில் செய்துகொண்டுதான் இருந்தார்கள்.

குட்டை மண் சுவர்களின் மேல் கவிழ்ந்து கிடந்தது கூரைகள். அதன் துவாரங்களில் சூரியனும் நிலவும் மழைத்துளியும் காற்றும் புகுந்து அந்த எளிய மனிதர்களின் இருப்பிடங்களின் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு அவர்கள்பால் இரக்கம் கொள்வது இரண்டறக் கலந்து உறவாடின. சில குடிசைகளின் கூரை நைந்து நாசமாகி வெறும் கொம்புகளும் குச்சிகளும் துருத்திக் கொண்டு பரிதாபகரமான தோற்றத்தோடு இருந்தன. குருவிகள் கூரையின் பெரிய பெரிய திறப்புகள் வழியாகப் புகுந்து திரிந்து தங்கள் கூடுகளைக் கட்டிக்கொண்டு அந்த மனிதர்களை விடவும் நிறைவாக வாழ்ந்தன. நாள் முழுக்க வியர்வை வடியவூழைத்துவிட்டு இது போன்ற எலி, பறவை பொந்து போன்ற இருப்பிடங்களில் நுழைந்து தனது வாழ்வைத் துய்த்துக் கொள்ளும் இந்த மனிதர்கள் தங்களது எதிர்காலக் கனவுகளை 'மனிதர்களால் செய்யப்பட்ட, செதுக்கப்பட்ட, வரையப்பட்ட' உருவங்கள் முன்வைக்கிறார்கள். மனத்திருப்தியோடோ அல்லது மன திருப்தியற்றோ இது தொடர்ந்து நடக்கிறது. அவர்களின் துயரம் குறைவதாக அவர்கள்

கற்பனை செய்துகொண்டு சிலைகளின் முன் மண்டியிட்டுப் பாடி மனமுருகுகிறார்கள். மனமிறங்கத்தான் யாருமில்லை. காலப் போக்கில் ஏமாற்றத்தோடு சினமுற்ற நிலையில் பலவிதமான பொய் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துப் பெரும் ஆசையோடு மதம் மாறவும் துணிகிறார்கள். அங்கும் அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருக்கிறது என்பதை அவர்கள் அறியாமல் இருப்பதுதான் துயரம்.

சிற்பிகளால் வழங்கப்பட்ட சிலைகளும் ஓவியர்களால் வரையப்பட்ட தெய்வப்படங்களும் பலவிதமான கற்பனை புளுகுக்காரத் தந்திரவாதிகளால் எழுதப்பட்ட எழுத்துகளுக்கும் இவர்கள் உயிர் கொடுத்துத் தங்கள் உயிரைவிட்டு விடுகிறார்கள். துயரம் போக்கும் வடிகாலாக அவர்கள் அதையெல்லாம் நினைத்தாலும் துயரம் மட்டும் அவர்களை விட்டு விலகுவதே இல்லை.

கடும் உழைப்பாளிகளான அவர்கள் தங்கள் கொடும் சினங்களைப் போதைச் சச்சரவிலும் தொடர்ச்சியான அற்பக் கைகலப்பிலும் இழந்து அப்பாவி மனிதர்களாகத் திரிகிறார்கள்.

இயற்கை தன் எல்லாக் கொடுந் தாக்குதல்களையும் அவர்கள் மேல் கட்டற்ற அதிகாரத்தோடு செலுத்தி அவர்களை நிலைகுலையச் செய்கிறது. ஆனால் அவர்களால் இயற்கையை அதன் செல்வங்களைப் பயன்படுத்த முடிவதில்லை. இயற்கை அவர்களுக்கு அளித்த ஒரே கொடை அவர்கள் அளவற்ற விதத்தில் பல்கிப் பெருகுவதுதான்.

இயற்கையின் செல்வங்களை அவர்கள் பயன்படுத்தத் துணிவதில்லை. அவர்கள் பயன்படுத்த அதைத் தெரிந்து கொள்ளாதபடி சமூகம் அவர்கள் மேல் கொடும் அரக்கத் தனமான கட்டுப்பாடுகளை விதித்து அவர்கள் அடக்கப்பட்டு சீரழிக்கப் பட்டுவிட்டார்கள்.

அவர்கள் துர்நாற்றத்தைச் சுவாசிக்கவும், தூக்கி வீசப்பட கழிவுகளை உண்ணவும், கந்தல்களை உடுத்தவும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். கல்வியோ அவர்களுக்குக் கிடையாது. அவர் கள் தழைக்கவே முடியாதபடி கொடும் தடைகள் காலங் காலமாக திட்டமிட்டுப் பெரும் சர்வாதிகாரத்துடன் அவர்களை அடிமையாக்கி விட்டு இப்போது அவர்களைப் பார்த்துப் பரிகசிக்கிறார்கள். மனசாட்சியில்லாமல் அவர்களைக் குற்றஞ்

சாட்டுகிறார்கள் அவர்கள் குளிக்காதவர்கள் என்று.

இப்படி அடக்கி ஒடுக்கி சாக்கடை ஓரத்துக்கு அவர்களைத் துரத்தி அவர்களின் உழைப்பில் சுகம் காணும் அறிவாளிகள் அவர்களுக்கு அளித்த பட்டம் தீண்டத்தகாதவன். அந்தத் தீண்டத்தகாதவன் வியர்வையால் வந்த தானியங்கள் தான் அவர்கள் உடலில் ரத்தமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ரகசியமாக அவர்களது பிள்ளைகளை இவர்களும் இவர்களது பிள்ளைகளை அவர்களுமாகச் சுமந்து திரிகிறார்கள். தீண்டாமலே எப்படிப் பிள்ளைகளையைச் சுமக்கிறார்களோ எல்லாம் அந்த மனுவுக்குத்தான் தெரியும்.

கடும் உழைப்பினால் களைத்துப்போன மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்த நேரம் குடிசைகளின் மேல் இருள் கவிழ்ந்து கிடந்தது. எங்கோ வானத்தின் தொலை தூரத்தில் வானம் குமுறி அதிர்ந்தாடிய வெடிப்புச் சத்தம்போல் கேட்டது. பளபளப்பான ஒளிரும் வெள்ளிக் கம்பிகள் வேர்களைப் போல் ஓடிக் கண்களைக் கூசச் செய்து மறைந்து போனது. அதைத் தொடர்ந்து இடி கடுமையான சத்தத்துடன் வெடித்துப் பெரும் ஓசையெழுப்பி மக்களை அச்சப்படுத்தியது. தொடர்ந்து குளிர்காற்று வீசியது. குளிர் துளைத்து உடம்பை வாட்டியதால் ஓரிருவர் பீடிகளை உருவிப் பற்ற வைத்தனர்.

காச நோய் பிடித்த நுரையீரல்களின் உறுத்தலால் சிலரின் இருமல் சத்தம் கேட்டது.

குடிசைகளுக்கு வெளியே திறந்த வெளியில் கிடைத்ததைத் தரையில் விரித்து உறங்கிக் கிடந்த மனிதர்களின் மேல் திடீரென மழைத்துளிகள் பொத்பொத்தென்று விழுந்தன. உறங்கிக் கிடந்தவர்களைக் கலவரமடையச் செய்த இளம் மழை கணத்தில் பெரு மழையாக மாறத் தொடங்கிவிட்டது. மக்கள் அடித்துப் பிடித்துக் கொண்டு குடிசைக்குள் ஓடினார்கள். சில சுமை தூக்கும் தொழிலாளிகள் பாதிக் குடிபோதையில் கந்தலை இழுத்துப் பார்த்திக்கொண்டு தூங்க முயன்றார்கள். அவர்களது மனைவிகள் அதட்டி உசுப்பி எழுப்பிக் கொண்டும் அழும் குழந்தைகளை அடக்கிக் கொண்டும் பொத்தல் நிறைந்த குடிசைக்குள் ஓட முயன்றார்கள். இந்தக் கலவரங்களுக்கிடையே மழை வன்மத்துடன் பெய்யத் தொடங்கி விட்டது.

அட தூ... இன்னிக்கு பொழப்புல மண்ணுதான் என்று முணு அனுப்புடன் அவர்கள் குடிசைக்குள் போய்ப் புகுந்து கொண்டார்கள். அங்கு ஒன்றும் பெரிதான பாதுகாப்பு இல்லை. பெரும்பாலும் குடிசைகள் பெரிய பெரிய துவாரங்களுடன் பாலித்தீன் பேப்பர்களால் மூடப்பட்டும் சிலது அதுகூட இல்லாமலும் ஓலை பிய்ந்தும் இருந்தது. சிலர் குடிசையில் ஒழுகும் நீர் மேலே தெறிக்காமல் இருக்க கிடைத்த பாத்திரங்களை நீர் சொட்டும் இடத்தில் வைத்துவிட்டு, ஈரமாகாத மூலைக்குப் போய் உறங்க முயற்சித்தார்கள். உழைத்த களைப்பு அவர்களால் உறங்கவும் முடிந்தது.

முனியனின் குடிசையைச் சமீபத்தில்தான் பிரித்துக் கட்டியிருந்தார்கள். அந்த விதத்தில் அவர்கள் குடும்பம் தப்பித்தது. கோபால் குடிசைக்குள் ஒரு மூலையில் பாயை விரித்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தார்.

மழை சோவெனக் கொட்டியது. கூரைமீது விழும் மழைத் துளியின் ஓசையைக் கேட்டவர்களுக்குத் தான் அதன் இன்பம் புரியும். அதே நேரத்தில் குடிசை பொத்தலாய் இருந்தால் உள்ளே வரும் மழைத் துளிகளின் துன்பமும் அனுபவித்தவர்களுக்கும் தான் புரியும்.

மழை வன்மத்துடன் தாக்குவது போல் பேரிரைச்சலிட்டது. குடிசைக்குள் ஒருவிதமான இனிய மண்வாசனையும் இதமான கதகதப்பும் நிலவியது. கோபால் முகம் மறையப் போர்த்திக் கொண்டு உறங்கினார்.

முனியன் ஒரு முறை குளிர்க்காற்றை நுரையீரல் முழுக்க இழுக்க ஆசைப்பட்டவர் போல மூச்சிழுத்தார். அது பெரும் இருமலாய் வெடித்து அவரைத் திக்குமுக்காட வைத்தது. அஞ் சலை விழித்துக் கொண்டு கணவன் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள். முனியன் மிகுந்த வேதனையோடு முனங்கினார். அவருக்கு நெஞ்சு கரித்தது. இருமும்போது வாய் நிறைய சளி அவருக்கே குமட்டலெடுத்தது.

'இன்னா மாமா கஷ்டமா இருக்குதா?'' என்று கேட்டபடி அவரது நெஞ்சைத் தடவி விட்டாள். அவரது நெஞ்செலும்புகள் மேலும் கீழும் ஏறி இறங்கியது. உடல் காய்ச்சல் கண்டிருந்தது. முனியன் திடீரென நடுங்கினார்.

இந்த நேரத்தில் மழையடிப்பது அஞ்சலைக்குக் கலக்கத்தை

ஏற்படுத்தியது. அவள் முனியனின் முகத்தை உற்றுப் பார்விட்டுக் கண் கலங்கினாள். வீட்டில் மூலையில் திரி விளக்கு ஒரே நேர்க்கோட்டில் எரிந்து அவளுக்கு ஆறுதல் சொல்வதுபோல் லேசாக அசைந்து காட்டியது. முனியனின் நிலைமைஅவளுக்கு அச்சத்தைத் தந்தது. தானும் தன் மகளும் நிராதரவாக இருண்ட குகைகளுக்குள் அலைவது போல் தோன்றியது அவளுக்கு.

'அஞ்சல... அஞ்சல...' வெளியே யாரோ அவளை அழைக்கும் குரல் கேட்டது. கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். எதிர்வீட்டுக் கிழவி தலைக்கு மேல் சாக்குப் பையை மழைக்குத் தடுப்பாகப் போட்டுக் கொண்டு நின்றார்.

''உள்ளே வா ஆயா.''

இன்னாடியம்மா பண்றது அங்க ஒரு எடமும் பாக்கியில்ல குடிசை பொத்தலா போச்சு தரையெல்லாம் சொத சொதன்னு போச்சுடி. செத்த நேரம் இப்படி இருந்துக்கறேன்.''

'அதுக்கென்ன உள்ள வா, ஆயா''

கிழவிக்கு உலர்ந்த கந்தலை எடுத்துக் கொடுத்தாள். கிழவி தலையைத் துடைத்துக் கொண்டு கூரையை அண்ணாந்து பார்த்தாள்.

''உம் நான் அப்பவே சொன்ன எவ கேக்கறான் குடிச்சிட்டுக் கூத்தடிக்கிறானுவ. நாலு ஓலய வாங்கி பொத்தல் அடைச்சிருந்தா இப்ப மூலைக்கு ஒன்னா ஓட வேண்டியதில்லைய...'' அவள் புலம்பினாள்.

'சரி வுடு ஆயா, இதுவும் உன்னோட வூடுதான். மழ நிக்கற நாள் வரைக்கும் நீ இங்கேயே இருந்துக்க.''

'அட அதுக்கில்லடி கொழந்த. சம்பாதிக்கிறத பூரா குடிச்சி அழும்பு பண்றானுங்களேடி''

இரண்டு பொம்பளைகளின் பேச்சுக்கு நடுவே முனியனின் இருமல் சத்தம் வெடித்துக்கொண்டு வந்தது. அந்தச் சத்தத்தில் கோபால் விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

அக்கா காபி போடு... என்று சொல்லியபடி முதுகை ஒரு பக்கமாகச் சாய்ந்து முழு உடம்பையும் திமிறி ஒரு உலுக்கு உலுக்கினார்.

'என்னடா இன்னைக்குப் பொழப்பு அவ்ளோ தானா?'' முனியன் பலவீனமான குரலில் கேட்டார்.

''என்னத்த மாமா பண்றது மழைவிடாது போல இருக்குது.''

அஞ்சலையை லேசா கதவைத் திறந்து விடச் சொன்னார். குளிர்ந்த காற்று குடிசைக்குப் புது மண் மணத்தோடு உள்ளே பாய்ந்தது. அதில் ஒருவித நாற்றமும் அடித்தது. ஆனாலும், முனியன் ஆசையோடு அந்தக் காற்றை நெஞ்சுக்குள் இழுத்தார்.

திடுமென எழுந்து உட்கார்ந்துகொண்டார். வெளியே கூரையில் இருந்து நீர் சாரையாய்க் கொட்டுவது தெரிந்தது,

அஞ்சலை வறுத்த காப்பிக் கொட்டையை இரும்பு உரலில் போட்டு இடித்துக் கொண்டிருந்தாள். இடிபடும் காப்பிக் கொட்டையின் வாசம் இன்பமாய் இருந்தது. அந்தத் தூளில் வடித்தெடுத்த பால் கலவாத காப்பியைக் குடிக்க கோபாலின் நெஞ்சு ஏங்கியது.

காலை நேரத்தின் வெளுப்பு லேசாக வெளியே படர்ந்தது. சின்னப் பொண்ணு சட்டிப் பானைகளை வெளியே கழுவிக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரம் விட்டிருந்த மழை திடீரென சடசடவென அடித்தது. சின்னப் பொண்ணு எழுந்து குடிசைக்குள் ஒடிவந்தாள். அவள் முகத்தில் சிரிப்பு படர்ந்தது.

என்ன இந்த மழை! இப்படிப் போக்கு காட்டுதே அவள் கலுக்கெனச் சிரித்தாள். தலை மயிரிலும் முழுங்கையிலும் ஒட்டிய மழைத்துளிகளைத் தட்டி விட்டுக் கொண்டு கூரையில் இருந்து சொட்டும் நீரைக் கையில் பிடித்து விளையாடினாள்.

பக்கத்துக் குடிசையில் யாரோ கோபமாகக் கத்தும் சத்தம் கேட்டது. மழை இரைச்சலையும் தாண்டி வந்த குரல் கேட்க, கிழவி துள்ளி எழுந்து உட்கார்ந்து பிரிந்த கூந்தலை இறுக்கமாக முடிந்துகொண்டு காதைத் தீட்டிக் கொண்டு குரலைக் கூர்ந்து கேட்டார்.

''கத்தறது பிச்ச தானே'' என்று பதறியபடி கேட்டவள் ''அட. பாவி மக்க'' என்று கூவியபடி கணுக்கால் அளவு தண்ணீரில் இறங்கி கிழட்டு வாத்து போல எதிர்க் குடிசைக்கு ஓடினார். காற்று சுழற்றியடித்தது. வானம் இருட்டிக்கொண்டு பூமியைப் பார்த்து உறும, மின்னல் சிதறி எச்சரிக்கை செய்தது.

அந்த எளிய மக்கள் லேசாக நடுங்கினாலும் மழையால் அவர்களைப் பயங்கொள்ளச் செய்ய முடியவில்லை. அவர்கள் விவசாயக் கூலிகளாய்ப் பிழைப்பு நடத்திக் கொடுமை தாங்க முடியாமல் நகரத்திற்கு ஓடிவந்தவர்கள் தானே! மழையும், இடியும்

மின்னலும் அவர்களுக்குத் தாயின் தாலாட்டுப் போலத்தான் இன்பமாயும் துன்பமாயும் அவர்களை உணர வைத்தது.

அரிசி பருப்பு வைத்திருப்பவர்கள், குடிசை நல்ல நிலை உள்ளவர்கள் பாடு கொஞ்சம் பரவாயில்லை. அடுப்பெரிக்கும் சுள்ளிகளைக் கொஞ்சம் சேமித்து வைத்திருக்கும் ஆட்களும் இருக்கத்தான் இருந்தார்கள். ஆனால், பெரும்பாலும் எல்லாருமே கடைக்கு ஓட வேண்டியவர்கள்தான்.

தண்ணீர் குடிசைகளைச் சுற்றித் தேங்க ஆரம்பித்து விட்டது. மழையும் விடாமல் அடித்துத் துளைத்தது.

ஒரு முழுநாள் மழைக்கு குடிசைகளுக்குள் நீர் புகுந்து விட்டது. இந்த மழைக்கே அந்தக் குடிசைப் பகுதி சேற்றுக் களத்தில் தலைநீட்டிக் கொண்டிருக்கும் தவளைகள் போன்று அலைக்கழித்துக் கொண்டிருந்தது. இரண்டு நாள் மழையில் குடிசையை வெள்ளம் சூழ்ந்து கொண்டது. பெரும்பாலும் குடிசைகளின் மண் சுவர்கள் கரைந்து விழத் தொடங்கிவிட்டன.

இதில் முனியனின் வீடு தப்பித்துக் கொண்டது என்றே சொல்ல வேண்டும். பிரித்துக் கட்டிய குடிசையின் சுற்றுச்சுவர்களும் கட்டை குட்டையாய் வலுவாக இருந்தன.

சமீபத்தில் தான் அஞ்சலையின் உறவுக்காரப் பாட்டி கிராமத்தில் இருந்து வந்து போயிருந்தாள். அவள் கொண்டு வந்த தானியங்களும் கொஞ்சம் அரிசியும் அவர்களிடம் இருந்தன. மழை நாட்கள் முழுவதும் கடைக்குப் போகாமல் அவளால் சமாளித்துவிட முடியும். கையில் ஓரளவு சில்லரைகளும் இருந்தன. முனியன் உடல் நலக் குறைவாய் வீட்டில் இருந்தாலும் மேஸ்திரி என்ற முறையில் அவருக்கும் ஒரு பகுதி கூலி ஒதுக்கப்பட்டு தினமும் அவருக்கு வந்து சேர்ந்துவிடும்.

பக்கத்துக் குடிசையில் இருந்து பெண்கள் அஞ்சலையிடம் இரவல் கேட்டு வந்துபோய்க் கொண்டு இருந்தார்கள். அவரவர்க்கு ஏற்றபடி ஏதோ கொஞ்சம் கொடுத்து அனுப்பினாள். இல்லை யென்று சொல்லித் திருப்பி அனுப்ப மனமில்லாதவள் அவள்.

வாசலை ஒட்டிக்கொண்டு மழை நீர் ததும்பிக்கொண்டிருந்தது. அந்த அளவில் அவர்களது குடிசை கொஞ்சம் மேடான இடத்தில் இருந்தது. இதற்குள் ஏராளமான குடிசைகள் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டன. ஓரளவு மழை கட்டுக்குள் வந்தது. ஆனாலும் மின்னல் வெட்டுவதும் இடி இடிப்பதுமாய் வானம் வேடிக்கை காட்டியது.

தூரத்தில் தொடங்கும் இடியோசை குடிசை மீது இறங்குவது போல் பயங்கரமாக ஓசையெழுப்பியது.

சனங்கள் குடிசைகளை விட்டு வெளியே வந்து காய்ந்த கட்டை களுக்கும் கொஞ்சம் மண்ணெண்ணெய்க்காகவும் அலைந்தார்கள். சிறு பெட்டிக்கடைக்காரர்கள் இதுதான் சமயம் என்று விலையைக் கூடுதலாக ஏற்றி லாபம் பார்த்தார்கள். குடிகாரர்கள் சாராயத்துக்காக அலைந்து திரிந்தார்கள். அதற்கு அப்படி ஓர் தட்டுப்பாடு வந்து விட்டது. குயிலம்மாவுக்கு நல்ல வியாபாரம். அவுன்ஸ் விலை கூடுதலாகி விட்டது. அதைப் பற்றி குடியர்கள் கவலைப்படவில்லை

மழை குளிருக்குக் கதகதப்பு தேட அவர்கள் தொண்டை சாராயச் சுவைக்கு ஏங்கியது. அவ்வளவு தட்டுப்பாட்டிலும் கோபாலுக்கு மட்டும் சாராயம் சுலபமாகக் கிடைத்து வந்தது. குயிலம்மாள் அவருக்குத் தனியா எடுத்து வைத்திருந்தாள். தன் மனதுக்குப் பிடித்த புதிய வாடிக்கையாளனுக்காக அவள் சுத்தமான சரக்காகக் கொஞ்சம் ஒளித்து வைப்பது வழக்கமாகி விட்டது. கோபால் அளவுக்கு அதிகமாகவே குடித்துவிட்டுக் குடிசைக்குள் கிடந்தார்.

குடிசைகளின் மண் சுவர்கள் முழுவதுமாகத் தண்ணீருக்குள் மூழ்கி விட்டன, சுவர்கள் இருந்த இடம் தெரியாமல் கரைந்து குடிசைகள் காற்றில் ஆடின. பெரும்பாலான மக்கள் புதிதாகக் கட்டியிருந்த மாநகராட்சிப் பள்ளிகளில் தஞ்சம் புகுந்து இருந்தனர். அங்கும் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வதைபட்டார்கள். அங்கே பீடி வாசம் குமட்டலெடுத்தது. வகுப்பறைகள் கழிப்பறைகளாக மாறிவிட்டன. குழந்தைகள் பசி குளிரால் வீறிட்டு அலறித் துடித்தன. குடிகாரர்கள் வீர வசனம் பேசி, பாட்டுப் பாடி போதையில் உளறிக் கொட்டினார்கள்.

முனியன் குடிசைக்குள் தண்ணீர் நுழைந்தும் வீட்டை விட்டு வெளியே வர மறுத்துவிட்டார். கோபால் குடிசைப்பரணில் அவருக்கு ஒரு படுக்கையை ஏற்படுத்தினார். பரண் படுக்கை கதகதப்பாகவும் அடக்கமாகவும் இருந்தது. அஞ்சலையும் சின்னப் பொண்ணும் ஏற்கெனவே மாநகராட்சிப் பள்ளியில் போய் ஓர் இடம்பிடித்துக் கொண்டார்கள். கோபால், மாமனுக்கு பாதுகாப்பாகப் பரணில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டார். இந்த நேரம் பார்த்து முனியனுக்குக் காய்ச்சலும் இருமலும் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

ஒவ்வொரு முறை இருமும்போதும் ரத்தம் அதிகமாக வந்தது எதற்கும் தயாராக மனதைத் திடப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார் கோபால். காற்றின் வேகம் தாங்காமல் குடிசை கிரீச் முரீச் என்று சப்தமிட்டது. வேகமாகக் காற்று அடித்தால் அடி மூங்கில் முறிந்து எந்த நேரமும் குடிசை வெள்ளத்தில் விழுந்து விடும் அபாயம் இருந்தது.

மழை ஓய்ந்தாலும் வெள்ளம் வடிய ஒரு வாரமாவது ஆகும். அதுவரை தாக்குபிடித்தால் கூடப் போதும் என்று நினைத்துக் கொண்டார் கோபால். தொடர்ந்தார்போல் ஐந்து நிமிடம் முனியன் இருமாமல் இருந்தால் கோபாலுக்குச் சந்தேகம் வந்து குரல் கொடுத்துப் பார்ப்பார்.

''என்ன மச்சான் உயிரோடு இருக்கறனா செத்துப் போயிட்டன்னு பாக்கிறியா'' என்று ஒரு முறை பதிலுக்குக் கேட்டு விட்டார் முனியன்.

''அட நீ ஒன்னு. சும்மா இரு மாமா. எதுனா முடியலைனா சொல்லு'' என்றவர் ஆதரவாய் முனியனின் நெஞ்சைத் தடவி விட்டார்.

'டேய் கோபாலு கோச்சிக்காதடா...'' என்று இழுத்தார். வார்த்தைகள் சிரமப்பட்டு வந்தது.

'இன்னா மாமா... சொல்லு'' கோபாலிடம் இருந்து ஆதரவான குரல் வந்தது.

'எங்கனா கெடச்சா கொஞ்சம் வாங்கியாடா எனக்கு இன்னாவோ சாவுகிட்ட வந்துட்டாப்ல இருக்குதுடா. கொஞ்சம் சரக்கு போட்டா இருமல் நிக்கும்.''

அதற்கு மேல் தெம்பும் இல்லாமல் ஆழ்ந்து மூச்சிழுத்தார். பிறகு தொடர்ந்து இருமினார். ரத்தம் அவர் வாய் நிறைய வந்து நின்றது. தலையைத் தூக்கி பரண் இடைவெளியில் துப்பினார். கீழே அலைந்து கொண்டிருந்த வெள்ளத்தில் கட்டியாக ரத்தம் சளியோடு சேர்த்து மிதந்தாடியது. கோபாலுக்கு அது பெரிய அதிர்ச்சியைத் தந்து, அவரை உறைய வைத்து விட்டது. புது குடிகாரனான கோபாலுக்கு முனியனின் தவிப்புப் புரிந்து விட்டது. பரணில் இருந்து நீரில் குதித்தார். உயரமான அவருக்கு மார்புவரை வெள்ளம் நின்றது. நீர் பனி போல குளிர்ச்சியாய் இருந்தது. வெள்ளத்தில் துழாவிக் கொண்டு போனவர் வெகுநேரம் கழித்துக் குடிசைக்குத் திரும்பினார். அவர் கைகள் தலைக்கு மேலாக

நீட்டிக்கொண்டிருந்தது. பச்சை நிற போத்தல் அதில்தான் அந்த அதிசயத் திரவம் ஆடிக் கொண்டிருந்தது.

சாராய வாடை முனியனை குதூகலப்படுத்தி விட்டது. அவர் பரணில் எழுந்து உட்கார்ந்துக்கொண்டு கை நீட்டி புட்டியை வாங்கினார். கோபால் பரணில் தாவி ஏறினார். அது ஏற்கெனவே கயிறுகள் தளர்ந்து தள்ளாட ஆரம்பித்திருந்தன. கிழக்கில் இருந்து மழையோடு பலமான காற்று வீசியது.

போத்தலை முகர்ந்துப் பார்த்தவர் வறண்டு போன உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு மீசையை ஒதுக்கிக் கொண்டார். அவரது முகம் எப்போதைக் காட்டிலும் பரவசத்தோடு இருந்தது. அந்த இருட்டிலும் அவரது கரை படிந்த பற்கள்கூட தெரியும்படி கோபாலைப் பார்த்துச் சிரித்தார். பிறகு அவசரமாய்ப் பாட்டிலை வாய்க்குள் கவிழ்த்தார். கொடக்... புடக்கென்று சப்தம் மட்டும் கேட்டது. பாட்டிலின் கடைசிச் சொட்டையும் அமிர்தம்போல உறிஞ்சு சுவைத்தவர் பாட்டிலைப் பரணின் மூலையில் வைத்தார். அது உருண்டு சவுக்குக் கழிகளின் இடைவெளிகளின் வெள்ள நீரில் தொப்பென்று விழுந்தது.

முனியன் சிரிக்க ஆரம்பித்து விட்டார். அவரது கண்களில் நீர் திரளும் வரை சிரித்தார். கோபால் மிரண்டுபோய் மாமனையே பார்த்துக் கொண்டு இருந்தார். முனியனின் பெருஞ் சிரிப்பு அடங்கியது. காற்று பலமாக வீசியது. குடிசையின் மூலையில் ஓலை பியந்து போகும் என்று தோன்றியது. குடிசை லேசாகத் தள்ளாடத் தொடங்கி விட்டது. காற்று ஓவென இரைந்துக் கத்தியது. இருவரும் உச்சபட்ச போதையில் பரணில் கிடந்தார்கள். காற்று அவர்களைக் குடிசைத் தொட்டிலில் வைத்துத் தாலாட்டியது.

காலை பொழுது விடிந்தபோது குடிசையின் ஒரு மூலையில் இருந்த துவாரம் வழியாகச் சூரியன் உள்ளே காற்று ஓரிரு ஓலைகளைப் பியந்துப் போட்டிருந்தது. மழை சுத்தமாக நின்றுவிட்டது. குடிசைகள் இருந்த பகுதி மிகவும் பள்ளமாக இருந்ததால் வெள்ளம் இன்னும் குடிசைகளுக்குக் கீழாக தலக்... புலக்கென்று ஆடிக் கொண்டிருந்தது. ஆனாலும், சிறுவர்கள் குதியாட்டம் போட்டுத் துள்ளி ஒருவர் மேல் ஒருவர் அழுக்கடைந்த நீரை வாரியிறைத்துக் கொண்டனர். பெரும்பாலும் குடிசைகள் சீரழிந்து போய்விட்டன. ஒரு சில மட்டுமே காற்றில் தப்பி நின்றது. வெயில் சுரீர் என்று அடித்தது. அன்றைய நாளுக்கு

முன்பாக மழை பெய்தது என்பதற்கு சாட்சி, சீரழிந்த குடிசைகளும் தேங்கி நின்ற வெள்ளமும்தான். மற்றபடி கடுமையான வெயில் மக்கள் தங்கள் வயிற்றுப்பாட்டிற்காக வேலையிடங்களுக்குப் புறப்பட்டார்கள்.

வழியில் சிதையாமல் இருந்த தேநீர்க் கடையின் முன் கூட்டம் கூடியது. கடன் சொல்லியும் காசு கொடுத்தும் தேநீர் உறிஞ்சி' ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் மக்கள், பட்டினியால் துவண்டு போன நாய்களின் பரிதாபமான குரைப்பு, எங்கெங்கோ பதுங்கிக் கிடந்த பறவைகளின் கீச்சொலிகள் என்று மழை வெள்ளத் துயரத்தில் இருந்து மீண்டு மக்கள் நடமாடத் தொடங்கி விட்டார்கள்.

வெள்ளம் வடிந்தது. ஆனால் எங்கெங்கோ சேகரிக்கப்பட்ட குப்பைகளைக் குடிசைகளின் முன்பாக உள்ள திடலில் கொட்டி வைத்தனர் மாநகராட்சி ஊழியர்கள். எதிர்ப்புறத்தில் வாழ்பவர்கள் குடிசைவாசிகள்தான். ஆனாலும் அவர்களும் மனிதர்கள் தான் என்பது மாநகராட்சித் தலைவருக்குத் தெரியவில்லையோ என்னமோ? இங்கு வாழும் மக்கள் மிகுந்த சகிப்புத் தன்மையோடு வாழ்கிறார்களா அல்லது அவலமான சுத்தக் குறைவை அவர்கள் பொருட்படுத்த வில்லையோ. அவர்களைச் சுற்றி, குப்பைகள் மலைபோல் குவிந்து கிடந்தது. அதில் இருந்து வீசும் துர்நாற்றத்தைப் பற்றியும் அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் கவலைப்படுவதால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்று அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ.

நகரத்தின் நாகரிகமான படித்த பணவசதியான மக்களின் குப்பைகள் எல்லாம் இங்குக் கொண்டு வந்து கொட்டப்படுகிறது. மாநகராட்சி எப்பேர்ப்பட்ட மனநிலையில் இதைச் செய்கிறதோ அது அவர்களின் மனசாட்சிக்குத்தான் வெளிச்சம். குப்பையோடு குப்பையாக பன்றி ஆடு மாடு அவற்றின் சாணங்களுக்கு மத்தியில் இஷ்ட தேவதைகளுக்குப் பூசை செய்துகொண்டு பேய்ப் பிசாசு விரட்டிக்கொண்டும் உழைப்பின் வியர்வையில் மிதந்தபடி தங்கள் துயரங்களைக் குடிபோதையில் மறந்து தெளிவான அறிவு இன்றி நம்பிக்கை குறைந்து எல்லாம் தலைவிதி என்று புழுங்கும் மனிதர்கள் மத்தியில் தன்மானமும், சுயமரியாதையும் மிக்க மனிதர்கள் இதையெல்லாம் பற்றி யோசிக்கவும் பேசவும் செய்தார்கள். ஆனால், சக மனிதர்கள் இதுபோன்ற யோசனையில்

நம்பிக்கையிழந்து தங்களது அன்றாட வாழ்க்கையே தகிடதோம் போடும்போது சுற்றுச் சூழலைப் பார்க்க அவர்களால் முடியவில்லை. தங்களது வயிற்றுப் பாட்டிற்காகவே அவர்கள் நாள் பூராக உழைக்க வேண்டியுள்ளது. அப்படியும் வயிறு நிறைவது இயலாத காரியம். இதில் சாராயப் பேயின் அலைக்கழிப்பு அவர்களைப் பிடித்தாடியது.

துறைமுகத்தில் இருந்து கப்பல் புறப்படும் முன் எழுப்பும் சங்கொலி கேட்டது. கப்பல் துறைக்கும் குடியிருப்புக்கும் இடையில் சில கிலோமீட்டர் இடைவெளி இருக்கும் என்றாலும் இரவு நேர நிசப்தத்தில் சில சமயங்களில் கப்பலின் ஊதல் ஒலி கேட்கத்தான் செய்தது.

மழைக்காலம் முடிந்து வானம் விண்மீன்களின் கண் சிமிட்டல்களுடன் கருப்பாய் கவிழ்ந்து கிடந்த இரவில் கோபால் குடிசைக்கு வெளியே காற்றோட்டமான இடத்தில் பாய் விரித்து உறக்கத்தில் கிடந்தார். நடு இரவு. திடீரென்று குடிசைக்குள் பெண்களின் அலறல் கேட்டுப் பதற்றத்தோடு எழுந்து உட்கார்ந்து கொண்டார். குடிசைக்குள் இருந்து சின்னப் பொண்ணு கத்திக்கொண்டு வெளியே வந்து விழுந்துபுரண்டாள். குடிசைக்குள் அஞ்சலையின் தீர்மானமான குலை நடுங்க வைக்கும் அவளது துயரார்ந்த பேரழுகை நிலைமையை கோபாலுக்குப் புரிய வைத்துவிட்டது. தன்னையறியாமலே அவரது கை கால் உதறியது. எழுந்து குடிசைக்குள் ஓடினார்.

எல்லாம் முடிந்து விட்டிருந்தது. முனியனின் திறந்த வாயும், மூடியும் மூடாமலும் இருந்த விழிகளும் கோபாலை நடுங்க வைத்துவிட்டது. அஞ்சலை கோபாலைப் பிடித்துக் கொண்டு ஓ'வெனக் கதறியழுதாள். குடிசைக்கு வெளியே சின்னப் பொண்ணு மயக்கமுற்றுக் குப்புறக் கவிழ்ந்து கிடந்தாள். இதற்குள் அக்கம்பக்கத்து மக்கள் வந்துவிட்டார்கள். அங்கு அழுகையும் துக்கமும் தாண்டவமாடின.

சேதி தெரிந்து மதுரையும், சமரனும் ஓடிவந்தார்கள். பொழுது நன்றாகப் புலர்ந்து ஒளி பரவியிருந்தது.

யாராவது கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிஞ்ச புள்ளையா கூட்டியாங்கப்பா என்று சமரன் சொன்னார்.

பந்தலுக்குக் கீழே பிணமேடை தயாராகிக் கொண்டிருந்தது. ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவன் என்று அழைத்து வந்த

அந்த இளைஞன், கழுத்து மெலிந்து உயரமாக வளர்ந்திருந்தான். சில முகவரிகளை வாங்கிக்கொண்டு அவன் தந்தி கொடுக்கப் புறப்பட்டுப் போனான்.

முனியனின் மறைவு தெரிந்து ஊரே பிணப் பந்தலைச் சுற்றி யிருந்தது. பறையொலி காதைப் பிளந்தது. போதை தலைக்கேறிய இரண்டு குடியர்கள் துக்க நடனம் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

இந்திய சமூகத்தின் கடைசி மனிதனாக இவனைச் சித்தரித்து எவ்வளவுதான் மலிவுபடுத்தி ஊர்வன பறப்பன விடவும் கீழான பிறவியாய் தீண்டத்தகாதவன் என்று ஊருக்கு வெளியே திட்டமிட்டுச் சாக்கடையின் ஓரங்களில் வாழ நிர்ப்பந்தப் படுத்தினாலும் அதைப் பற்றியும் தனது சுயமரியாதையைப் பற்றியும் பொது படுத்தாமல் தன்னைத் தாழ்த்தும் மதம் சொல்லும் எல்லா சம்பிரதாயங்களையும் அர்த்தமற்ற முறையில் நிறைவேற்றிச் சடங்கு நடத்துபவருக்குப் பிழைப்பு தந்து கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த மதமோ, இவர்களை மனிதர்கள் என்று அங்கீகரிப்பதற்குக் கூட, அதன் நீதி மறுத்தது. எவ்வளவு உத்தமமான நீதி.

முனியன், மேளச் சத்தம் அதோடு சேர்ந்த ஆடல் அமர்க்களங்களுடன் சம்பிராதாயச் சடங்குகளுடன் சாம்பலானார்.

குடியும் புகையும் முனியனை விழுங்கி இரண்டு பேரை அனாதைகளாக்கி விட்டிருந்தது. இந்த மாதிரியே பல குடும்பங்கள் குடியால் அழிந்து அந்தப் பகுதியில் நிறைய தகப்பனற்ற குழந்தைகள் பெருகிவிட்டார்கள். ஆனாலும் யாரும் அதை லட்சியம் செய்வதாய்த் தெரியவில்லை எப்போதும் போல சாராய வாடையும் புகை சுருளுமாய் உடம்பையும் பணத்தையும் அழித்துக் கொண்டுதான் இருந்தார்கள். உடல் கெட்டு காச நோயால் ரத்தம் கக்கும்போது பேய், பிசாசுகளின் வேலை என்று இல்லாதவைகளின் மேல் பழியைப் போட்டார்கள்.

முனியனைக்கூட அவரது குலதெய்வமான முனீசுவரன்தான் அடித்து ரத்தம் கக்க வைத்து உயிரைப் பறித்ததாகக்கூடப் பேசிக் கொண்டார்கள்.

கோபாலின் அம்மா, தம்பிகள் சாவுக்கு வந்திருந்தார்கள். எல்லாம் முடிந்து ஊர் புறப்படும்போது கோபாலையும் ஊருக்கு வந்து விடும்படி அழைத்தார்கள். அவர் ஒரேயடியாக மறுத்து விட்டார். "இனி கிராமத்தில் வந்து என்னால் வாழமுடியாது

அங்க வந்து நம்மல மனுசனா கூட மதிக்காதவன ஆண்டை–யின்னும் நாலுவார்த்த ஒழுங்கா பேசத் தெரியாத பயலுகள் சாமின்னு கூப்பிட்டுகினு வெளங்காத பொழப்பு நடத்த முடியாது. இங்கயே பொழப்பு நல்லாதான் போய்க்கிட்டு இருக்குது ஊருக்கு நீங்க போங்க நான் ஒரு வாரம் போனதும் வரேன்.'' என்று மழுப்பினார்.

காரியம் முடிந்து எல்லோரும் புறப்பட்டார்கள். அஞ் சலையையும், சின்னப் பொண்ணையும் கிராமத்துக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கேயே அவர்கள் பிழைக்க வழி செய்வது என்று ஏற்பாடானது. கூலியாட்கள் தங்களுக்குள் வசூலித்த பணம் முதலாளி முனியனுக்குக் கொடுத்தது எல்லாம் சேர்ந்து ஒரு எழுநூறு ரூபாய் சேர்ந்தது. அதனுடன் கோபால் முந்நூறு ரூபாய் போட்டு ஆயிரம் ரூபாயாக அஞ்சலையிடம் கொடுத்தார்.

அவளால் அதை நம்பவே முடியவில்லை. அதை எண்ணக் கூட அவளுக்குத் தெரியாது. கத்தையாக நோட்டுகளைப் பார்த்தாள். அவளுக்கு அழுகை தாளமுடியாமல் வந்தது.

நோட்டுக் கத்தைகளை மார்போடு அணைத்து தானும் ரூபாய் நோட்டாக மாறிவிட்டது போலவே உணர்ந்தாள்.

அவ்வளவு ரூபாய் நோட்டுகளையும் தன் கையில் பார்த்ததால் ஏற்பட்ட பிரமிப்பு அதோடு எழுந்த துயரம் எல்லாம் அந்தப் புதிய விதவையைத் திகைப்படைய வைத்தது. அவள் கிராமத்துக்கே போய்விடுவது என்பது மேலும் துயரத்தைத் தந்தது. இயல்பாக அவள் கிராமத்தை விரும்புபவள். எல்லாவற்றையும் தொலைத்துவிட்டல்லவா போகிறாள். ஒரு வழியாகப் புறப்பட்டுப் போனார்கள், உயிர் தொலைத்து வேர் தேடி.

முனியனின் குடிசையில் தனியாளாய் தங்கியிருந்தார் கோபால். குடிசையில் சாராய வாடையும் சாம்பலான சிகரெட் மணமும் வீசியது. ஓரிரு முறை குயிலம்மா குடிசைக்கு வந்து, போனதை ஒரு சிலர் பார்த்துவிட்டுத் தங்களுக்குள் குசுகுசுத்தார்கள். நல்லவேளையாக மதுர காதுவரை போகாமல் போனது. ஒருவேளை அவர் கண்டும் காணாதவரைப் போல் இருந்தாரோ என்னவோ. அவருக்கு கோபாலை மாப்பிள்ளையாக்கி கொள்வதில் ஆசை இருக்கத்தான் செய்தது. கொஞ்சம் போகட்டும் என்று இருந்தார்.

பீமன் கோபாலுடன் வந்து தங்கிக் கொண்டான். அவனும்

இது போன்று குடிசை ஒன்று வாடகைக்கு எடுத்து அக்காளையும் மாமனையும் அதில் குடி வைக்க திட்டம் போட்டிருந்தான். அவனுடைய மாமன் எதற்கும் ஒத்து வரமாட்டேன் என்று இருந்ததால். அவன் மட்டும் வந்து மேஸ்திரியுடன் தங்கி கொள்ளும் முடிவுடன் வந்துவிட்டான்.

இப்படிப் போய்க் கொண்டிருந்த பீமனின் வாழ்வில் ஒரு திருப்பம் வந்தது. பீமனைத் தேடிக்கொண்டு வாத்தி மாமா வந்திருந்தார். ஒரு மாலை நேரப் பொழுதில் அந்த விசயத்தைப் பற்றி அவர்கள் வெகுநேரம் பேசினார்கள். திருமணம் என்றதும் இளைஞனுக்குத் தொற்றிக் கொள்ளும் பதட்டமும் பரபரப்புமாக அவன் வாத்தி மாமாவுடன் இரவு வெகுநேரம் பேசி கொண்டிருந்தான். முதலில் அவன் மறுக்கத்தான் செய்தான். கோபாலும், மாமாவும் சேர்ந்து அவனைச் சம்மதிக்க வைத்தார்கள்.

வாத்தி மாமாவோட சகலையின் மகள் பெரிய மனுசியாகி சடங்கெல்லாம் முடிந்து அமைதியான ஒருநாளில் சகலையுடன் பேசிக் கொண்டிருந்தபோது பட்டணத்து பீமனின் பேச்சு அடிபட்டது. நல்ல தேர்வு தான் என்று முடிவாகி பட்டணம் போய் மாப்பிள்ளையிடம் பேசி நாள் குறித்துக் கொண்டு வந்து விடுவது என்று ஏற்பாடு. முன்பே அவனுடைய அக்காளையும் மாமனையும் கலந்து பேசிவிட்டுத்தான் வாத்தி மாமா வந்திருந்தார். மாப்பிள்ளை கிளர்ச்சியடைந்த மனதுடன் தனது சம்மதத்தைச் சொல்லி கோபாலைப் பார்த்தான். சீமையெண்ணை விளக்கொளியில் கோபாலின் தங்கப்பல் மின்னியது. பீமனின் தோளைப் படார் எனத் தட்டி அவனைக் குதூகலப்படுத்தி விட்டார்.

'சரி மச்சா அடுத்த ஞாயிறு ஊருக்கு வந்து பொண்ணை ஒரு முறை பார்த்துட்டு வந்துடு. மத்த ஏற்பாடு எல்லாம் நா பாத்துக்கறேன். என்னங்க மேஸ்திரி நான் சொல்றது' என்று கோபாலைப் பார்த்துக் கேட்டார்.

பிறகு மூவரும் மனநிறைவுடன் தூங்கிப் போனார்கள். சற்று நேரத்தில் விழித்துக்கொண்ட கோபால், குயிலம்மா சாராய குடிசைப் பக்கமாகப் போய்விட்டு, விடியற்காலையில் சாராய நெடியுடன் வந்து படுத்தார். சற்றுநேரத்தில் அவரிடமிருந்து ஆழ்ந்த குறட்டையொலி கேட்கத் தொடங்கியது. அதேவேளையில் பீமன் விழித்துக்கொண்டு தன் வருங்கால மனைவியைப்

பற்றிய இன்பமான கனவுகளில் உலாவிக் கொண்டிருந்தான். முரட்டுத்தனமான அவனது தேகம் மென்மையான உணர்வுகளால் துள்ளியது. இனிமையான கனவுகளுடன் அன்றைய ராப்பொழுது முடிந்து பகல் தொடங்கியது.

சுடச் சுட ஆப்பமும், கொழுப்பு நிறைந்த காளை இறைச்சிக் குழம்பும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனாள், ஆப்பக் கடைச் சிறுமி. வாத்தி மாமா காலை உணவை ரசித்துச் சாப்பிட்டார். கிராமத்தில் கிடைக்காத பலகாரமாயிற்றே! வந்த வேளை நல்லவிதமாக முடிந்த திருப்தியுடன் கிராமத்துக்குப் புறப்பட்டுப் போனார்.

பீமன் ஊருக்குப் போய் பெண்ணைப் பார்க்க கனவு கண்டு கொண்டிருந்தான். அந்த நாளும் வந்து சேர்ந்தது. மாப்பிள்ளைக்குரிய மிடுக்கும் களையும் அவனிடம் ஒளி வீசியது. முதல் வேலையாக மூர் மார்க்கெட்டில் அவனுக்கு ஒரு கைக்கடிகாரம் வாங்கித் தந்தார் கோபால். அடுத்தவேளையாக கோபால் தனக்குத் தெரிந்த செருப்புத் தைக்கும் தொழிலாளியிடம் அவனை அழைத்துப் போய் கால் அளவு கொடுத்து நல்ல முரட்டுத் தோலில் செருப்புத் தைக்கச் சொன்னார். எல்லா ஏற்பாடுகளும் படுவேகமாக நடந்தன. கூடப் பிறந்த பிறப்பு போல ஏற்பாடுகளையும் செய்து ஒருநாள் விடியற்காலையில் ஊருக்கு வழியனுப்பி வைத்தார்.

பலவிதமான இனிய கனவுகளுடனும் பெரியமூட்டையுடனும் ஊர் போய்ச் சேர்ந்தான்.

பலமான வரவேற்புக்கிடையில் மொக்க மாமன் மட்டும் ஏதோ மனக்கலவரத்தில் இருந்தார்.

நமக்கு ஒரு பொம்பளப் புள்ள பொறந்து இருந்தா இந்தப் பயலுக்குக் கட்டி வச்சி அழகு பார்த்து இருக்கலாமே என் ஒரு சலனம் அவர் நெஞ்சில் நிழலாடியது. வாத்தி மாமாவும் சகலையும் வந்து விட்டார்கள். ஒரே கிண்டலும் கூச்சலுமாய்ப் பேசிக் கொண்டார்கள். ''சாயங்காலமா நான் பையனைக் கூட்டிக்கிட்டு வர்ரேன்'' என்று மொக்கையன் சொன்னது. ''எதுக்குன்னே சாயங்காலம் இப்பவே வந்து பார்த்துட்டு வரட்டும்'' என்று வாத்தி மாமா குறுக்கிட,

''எதுக்கும் ஒரு கால நேரம் இருக்குதுடா பொறுமையா சாயந்திரம் வந்து பார்க்கட்டுமே.''

மாலை நேரத்தில். போய் பெண்ணைப் பார்த்து வருவது என்று முடிவாகி விட்டது.

கிராமத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரப் புறப்பட்டான். இளவயது தோழர்களான குப்பனும் இருசனும் உடன் புறப்பட்டு விட்டார்கள். கிராமமே அவனை வியப்போடு பார்த்தது. "பட்டணத்துப் புள்ள வாட்சும், செருப்புமா இன்னாம ராசா வாட்ட நடக்கறா பாரு. ஊருக்காரன் கண்ணுல பட்டா பொல்லாப்பு வரும்" என்று ஒரு கிழவர் திண்ணையில் உட்கார்ந்தபடி முணுமுணுத்தார்.

"சொக்கலிங்கம் குடுத்து வச்சவதான். பொண்ண பட்டணத்து மாப்பிள்ளைக்குக் கட்டிக் குடுக்கப் போறான்."

"டேய், குப்பா அந்தப் பக்கம் மாப்பிள்ளையை இட்டுக்கினு போவாதிங்கடோய். ஒக்காலி அவனுங்க கண்ணுல பட்டா வம்புடா. பாத்துப் போங்கடா."

மூலைக்கு ஒரு குரலா வந்துகொண்டிருந்தது.

"இன்னா குப்பா, எந்தப் பக்கம் போக வேணாம்னு சொல்றாங்க?"

"அது ஒன்னும் இல்லடா, செருப்பும் வாச்சுமா நடந்தம்னா ஊர்க்காரனுங்களுக்குக் கண்ணு பொருக்காது. நாம செருப்புப் போடக்கூடாது, கொட புடிக்கக்கூடாதுன்னு சொல்லுவானுங்க. எவனாச்சும் இந்தக் கோலத்துல உன்னப் பாத்தான்னா ஆண்டைகிட்ட புகார் குடுப்பானுங்க. அவன் விசாரிச்சு தண்டம் போடுவான். அதான் பெருசுங்க எச்சரிக்கைப் பண்ணுது."

"நாம வாட்சு செருப்பு போட்டா அவனுங்களுக்கு எங்கடா நோவுது."

"அட நீ ஒன்னு. அவனுங்க அக்கா தங்கச்சிங்கள நீ பட்டணத்துக்குத் தள்ளிக்கிட்டுப் போயிட்டா என்ன பண்றது?" குப்பன் திடுமென இப்படிச் சொன்னதும் பீமன் சிரித்துவிட்டான்.

திடீரெனக் குப்பன் கிசுகிசுவென்று ஏதோ சொன்னான். இருசன் சுற்றிலும் பார்த்தான்.

ஆண்டையோட மூத்த மகன் ஏரிக்கரையில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தான்.

இயல்பாகவே குப்பனும் இருசனும் ஓரமாக ஒதுங்கிப் போய்விட, பீமனின் கையைப் பிடித்து இழுத்தார்கள்.

பீமன் அவர்கள் கையை உதறிவிட்டு மேலும் முன்னேறி நடந்தான். அப்படி என்னதான் நடந்துவிடும் பார்க்கலாமே என்ற ஆர்வம் அவனுள் எழுந்தது. மிக நெருக்கத்தில் ஆண்டையின் மூத்த வாரிசும் பீமனும் சந்தித்துக் கொண்டார்கள். ஆண்டை மேலும் கீழுமாகப் பார்த்தான். காலுல செருப்பு, கையில வாட்சு, முழுக்கால் சட்டை.

"யாருப்பா?"

"கனகமங்களம் வந்திருக்கிறேன்."

"உம் யார் வீட்டுக்கு?"

"மொக்கயன் வீட்டுக்கு."

"பெரிய மனுசங்க போற வாற இடத்தில் இப்படித்தான் செருப்புப் போட்டுக்கினு நடக்கறதாடா?"

ஒரேயடியாய் மரியாதை தேய்ந்து போனது. பீமனுக்கு, உடம்பு சூடேறிவிட்டது.

ஊருக்கு வந்தாலே ஏதாவது பிரச்சனை. சுதந்திரமா நடக்கக் கூட விட மாட்டுறானுங்களே. ஒரு நாள் ரெண்டு நாள் இருக்கிற நமக்கு இந்த பிரச்சனைன்னா காலம் முழுசும் எப்படித்தான் வாழறாங்களோ என்று தோன்றியது,

ஆண்டை கோபத்தோடு கத்தினான். சாதி கெட்டப் பயலுக்கு என்னடா வாச்சு செருப்பு. கழட்டுடா... நாயே ரத்தவெறி பிடித்த ஓநாய் போலவே ஊளையிட்டான்.

சத்தம் அதிகமாகவே மறைவில் இருந்து இருசனும் குப்பனும் ஓடிவந்தார்கள்.

"நீங்க போங்க சாமி, நாங்க இட்டுக்கினுப் போயிடறோம்."

"என்னடா, கழுதைங்களா கொழுப்பா? செருப்ப கழட்டி கையில எடுத்துக்கினு ஓடுங்கடா."

பீமா கழட்டுடா என்றான் இருசன். அவன் இயல்பாகவே நடுங்கிக் கொண்டிருந்தான்.

"நான் முடியாதுன்னா இவன் இன்னாடா பண்ணுவான்" என்று எதிர்க்கேள்வி கேட்டான்.

ஆண்டை மகனுக்கு ரத்தம் கொதித்தது. மிருக உணர்ச்சி மேலிட எதிர்பாராத விதமாக பீமனின் கன்னத்தில் வந்து அறைந்தான். "டா... போட்டு பேசற நாயே..."

குப்பனும் இருசனும் நடுங்கி உதறலெடுத்துக் கொண்டு பின்

வாங்கினார்கள்.

தன்மான உணர்ச்சி பீமனைப் பிடித்தாட்ட கோபாவேசத்தோடு ஆண்டையின் மகன் மீது பாய்ந்து மூக்கில் ஓங்கி ஒரு குத்து விட்டான். ஆண்டையின் வம்சத்திலேயே அதுவரை காணாத குத்து. அவனுக்குக் கண் இருண்டு விட்டது.

ஓ'வென்று அலறினான். பீமன் தன் ஆத்திரம் தீர ஒரு தலைமுறையின் பழிவாங்கும் நோக்கோடு மேலும் ஒரு குத்துவிட்டான். பாவம் எதிரி. அந்தக் குத்தில் மரண பயமே வந்துவிட்டது. பெருங் குரலெடுத்துக் கத்தினான். அந்த ஓலம் கிராமத்தின் மூலை வரை கேட்டது. அவன் தள்ளாடிக் கீழே விழுந்துவிட்டான்.

பீமா வேணான்டா வந்துரு வா... வா.. என்று அவனைப் பிடித்து இழுத்தார்கள்.

ஆண்டாண்டு காலமாய் அடங்கிக் கிடந்த எரிமலை சீற்றம் போல, கனல் தெறிக்கும் அவன் கண்களில் கோபம் கொப்பளித்தது. அவனைக் கொன்று தீர்த்தாலும் அவன் கோபம் அடங்கவே அடங்காது போல் பொங்கி வழிந்து அவனைச் சூடேற்றியது. ஆனால், அவன் நிதானத்துடன் இருந்தான். இப்படி திடீரென நடந்துவிட்டதற்காக அவன் பதட்டப்படவில்லை. எது வந்தாலும் அதை ஏற்க அவன் தயாராகவே இருந்தான். எதிரியின் ரத்தச் சகதியாய் அகோரமாய் இருந்தது. அந்த அகோரத்துக்குள் பலவீனமான அவமானத்தின் நெளியும் இயலாமையின் பரிதவிப்பும் தெரிந்தது. அவனால் எழுந்துகொள்ள முடியாதபடி தலை சுற்றியது.

வேகவேகமாய் பீமனை இழுத்துக் கொண்டு போனார்கள். குப்பனும் இருசனும். இன்னா பீமா இப்படிப் பண்ணிப்புட்டே, அவனுங்க பொல்லாதவனுங்க. போ... இன்னா நடக்கப் போவுதோ. குப்பன் கலவரத்தோடு சொன்னான்.

போங்கடா, தொட நடுங்கிப் பசங்களா, நீங்க இப்பிடி குனிஞ்சு... குனிஞ்சு கும்பிடு போடறதாலதான் அவன் செருப்பப் போடாத துண்டப் போடாதன்றான். இப்பிடித் திருப்பிக் குடுத்தம்னா பாரு. இனி என் முன்னால் கூட வரமாட்டான்.

இனி ஒவ்வொருத்தனும் இப்படித் திருப்பிக் குடுத்தாதான் சரிபடும். அதுல ரெண்டு மூணு உயிரு போனாகூடத் தப்பில்ல. நாளை வர்ற நம்ம புள்ளங்களாவது சுதந்திரமா இருக்கட்டும்.

இன்னைக்கு அவனுங்க வந்து என்ன குத்திப்போடுவானுங்களா பாக்கலாம். நான் ஒன்னும் ஓடி பட்டணத்துல ஒளிஞ்சுக்கப் போறதில்ல. என்னைக்கோ ஒருநாள் நம்ம சனங்களுக்கு விடியத்தான் போவுது. அத நான் தொடங்கி வச்சதா இருக்கட்டும். நீங்க ஒன்னும் பயப்படாதீங்க. என்ன வந்தாலும் நான் பாத்துக்கறேன்.

அதன் பிறகு அங்கு நடந்தக் கலவரத்தைச் சொல்லவோ எழுதவோ முடியாதபடி குடிசைகள் எரிந்து சாம்பலானதில் தொடங்கி ஒரு சின்னப் போரே நடந்து கொண்டிருந்தது. போலீஸ் வந்து குவிந்துவிட்டது. கிறித்துவப் பாதிரியும் சமாதானம் பேச முயற்சி செய்துகொண்டிருந்தார். பீமனை ரகசியமாகப் பட்டணத்துக்கு அனுப்பிவிட ஏற்பாடு செய்தார்கள்.

பீமன் ஒரேயடியாக மறுத்துவிட்டான். "என்ன எதுக்கு ஓடி ஒளியச் சொல்றீங்க. நான் என்ன தப்பு செய்தேன். செருப்புப் போட்டு நடக்குறது தப்புன்னா நாம் சரின்னு தலையாட்டிக் கிடணுமா? இதுக்கு எல்லாம் முத்துப்புள்ளி வைக்கணும். என்னை அவனுங்க வெட்டிக் கொல்லட்டும். தப்பு கெடையாது. ஆனா என்னோட பொணத்து மேல நீங்கள்லாம் ஒரு சத்தியம் பண்ணனும். செருப்புப் போடக்கூடாது, சட்ட போடக் கூடாது, தோள்ல துண்டு போடக் கூடாது, தலைப்பா கட்டக் கூடாதுன்னு சொன்னாலும் தட்டிக் கேட்கணும். எல்லாரையும்போல நீங்களும் செருப்புப் போடணும். சைக்கிளை மிதிச்சிக்கிட்டுப் போகணும். சட்டைப் போடணும். இனி எல்லாக் கொடுமைகளையும் தட்டிக் கேட்கணும். போதும். நம்ம ரத்தத்தை உறிஞ்சிக் குடிச்சது போதும்."

பல தலைமுறையின் குமுறல் அவனுள் வெடித்துச் சிதறுவதுபோல் இருந்தது. அவன் ஒரு தீர்மானத்தோடு இருந்தான். அவனது கருப்புக் கன்னத்தில் நான்கு விரல்கள் பதிந்த அடையாளம் தெளிவாகத் தெரிந்தது.

வாத்தி மாமாவுக்கு ஏன்டா இந்தப் புள்ளய இங்கே வரவழைச்சமோ என்றிருந்தது. ஆண்டையோட மகனையே இவன் கை நீட்டியது அவருக்கே குலை நடுக்கத்தைத் தந்தது.

கலவரம் ஏதும் பெரிதாகாமல் அடங்கிப் போனது. கதை எப்படிப் போய் முடியுமோ என்று அவருக்குக் குழப்பமாகவும் அச்சமாகவும் இருந்தது. அடிபட்டவனை ஆஸ்பத்திரியில்

சேர்த்திருப்பது இன்னும் புளியைக் கரைத்தது. இதைவிட ஆபத்தான விஷயம் எதிர் பக்கம் மிகுந்த அமைதியாக இருந்தது தான். ஏதோ ஆபத்தான திட்டம் இருக்கிறது என்று மட்டும் வாத்திக்குப் புரிந்துவிட்டது.

போலீஸ்கூட யாரையும் கைது செய்யவில்லை. ஊரே அமைதியாகிப் போனதால் இரண்டு போலீஸ்காரர்கள் தவிர மற்றவர்கள் போய் விட்டார்கள்.

சொக்கலிங்கம் ரொம்பதான் அரண்டுபோய்க் கிடந்தார். என்னடா இது கெணறு வெட்ட பூதம் கௌம்புன மாதிரி இப்படி ஆயிடுச்சே... மாப்பிள்ளய முழுசா பட்டணம் அனுப்பிச்சா போதும்னு இருந்தது அவருக்கு.

"பீமா நீ ராத்திரிக் கௌம்பிடு. நம்ம கொல்லைப் பக்கமா தெக்கால நடந்துப் போயிரலாம். அப்புறம் வண்டி ஏதாவது பிடிச்சிப் போயிரலாம். கௌம்பு" என்று வாத்தி மாமா அவசரப் படுத்தினார்.

"ஒண்ணும் பயப்படாதீங்க மாமா. நான் எதுக்குத் திருடன் மாதிரி ராத்திரியோட ராத்திரியா ஊரவிட்டு ஓடணும். பொழுது விடியட்டும். கிளம்பிடுறேன்.

தேவையில்லாம பேசினது, என்னை அவமானப்படு மேல கை வச்சது, எல்லாமே அந்த ஆள்தான். சாட்சிக்கு ரெண்டு பேர் இருக்கறாங்க. நம்ம மேல வழக்குப் போட்டாலும் சரி, போலீஸ் விசாரிச்சாலும் சரி, நான் பார்த்துக்கிறேன்.".

"அதுக்கு இல்லடா மச்சான். ஆண்டையப் பத்தி உனக்குத் தெரியாதுடா, நீ சின்னப் புள்ளையா இருக்கும்போதே பட்டணம் போய்ட்டவன். அவன் எதுவேணும்னாலும் பண்ணுவான். எனக்குப் பயம்மா இருக்குதுடா, நீ கௌம்புடா. அனாதையா கெடக்கற சாமிக்கு மால போட்டதுக்கே நூறு ரூவா தண்டம் போட்டவனுங்க. ரத்த காயம் பட்டா சும்மா இருப்பானுங்களா?'

"சும்மாயிரு மாமா. நான் எதுக்கு வந்தேனோ அத முடிச்சிட்டுத்தான் போவேன். நீங்க ஒன்னும் கவலப்படாதீங்க. அவனுங்களுக்கு மட்டும்தான் கை கால் இல்ல, நமக்கும் இருக்குது. உழைச்சி உழைச்சி இன்னும் வலுவா இருக்குது. பாத்துக்கலாம்." அவன் கண்களில் சுடரும், நம்பிக்கையும் வாத்தி மாமாவை உசுப்பிவிட்டாலும் உள்ளுக்குள் உதறியது.

அமைதியா எங்கேயோ கெடந்தவனைக் கூப்பிட்டு வம்புல

சிக்க வைத்து விட்டோமே என்று துயரப்பட்டார். ஏதோ வம்பு நடக்கப் போகுது என்று பயந்தார்.

அன்று மாலை பெண் பார்க்கப் போவது கைவிடப்பட்டது. அன்று இரவு வாத்தி பீமனைத் தன் வீட்டில் வந்து தங்கிக்கொள்ளச் சொன்னார். பாதுகாப்புக்கு இரண்டு ஆட்களையும் ஏற்பாடு செய்து இருந்தார். விடிய விடிய இரவு பேசிக்கொண்டே இருந்தார்கள். பிறகு பயம் நிறைந்த அந்த இரவின் கடைசிப் பொழுதில் ஒவ்வொருவராக உறங்க ஆரம்பித்தார்கள். கடைசியா வாத்தி மாமாவும் சற்றுக் கண் அயர்ந்தார். பீமன் எப்போதோ உறங்கிவிட்டான்.

திடீரெனக் கருகும் வாடை வந்தது. முதலில் விழித்தவர் வாத்தி மாமாதான். அச்சத்தில் ஓவென்று அலறினார். எழுந்திருங்கடா. கூரையில் தீ வச்சுட்டாங்கடா. எழுந்து வெளியே ஓடுங்கடா. அவர்கள் சுதாரிப்பதற்குள் குடிசை மளமள வெனத் தீப்பிடித்துக் கொண்டது. அதிகாலை நேரம் காற்று வீசியடித்த பக்கத்துக் குடிசைகளுக்குத் தீப் பரவியது.

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் பீமன் திகைத்துப் போய் நின்றுவிட்டான்.

தூரத்தில் வாத்தி மாமாவின் குரல் கேட்டது.

"டேய்... பீமா.. எங்க இருக்கிற...'

பீமன் அப்போதுதான் தீ பரவத் தொடங்கிய கூரையின் மீது புழக்கடையில் இருந்த பானைத் தண்ணீரைத் தூக்கி ஊற்றினான். யாரோ இருவர் குடிசைக்குப் பின்புறம் இருந்து ஓடிவந்தார்கள். குடிசை அணைக்க உதவ வந்தவர்கள் என்று நினைத்து வாய்புறம் உடைந்த இன்னொரு பானையைக் கையில் தூக்கினான். பளு தாங்காமல் உடைத்துக்கொண்டு அது கீழே விழுந்தது. அவன் குடி நீர் நிறைந்த பாத்திரம் ஏதாவது இருக்கிறதா என்று தேடியபோது கூரான ஏதோ ஒன்று அவனது முதுகில் பாய்ந்தது. அவனால் மூச்சு விடமுடியவில்லை. நிமிரவும் முடியாதபடி மேலும் ஒருமுறை வேகமாகப் பாய்ந்தது ஒன்று.

பீமா.. பீமா... என்ற வாத்தி மாமாவின் குரல் அவன் காதில் விழுந்தது. அவன் அலறக்கூட இல்லை. எதிரியைப் பிடித்துவிடத் துழாவினான். வேகமாக வந்த வீச்சரிவாளின் முனை அவன் கைகளில் சிக்கியது. வேகமான இழுப்பால் அவன் கையில் விரல்கள் இல்லாமல் போனதை உணர்ந்துகொண்டு வலியின்

வேதனையால் முனங்கினான்.

உடைந்து கிடந்த பானையின் மேல் அவன் பொத்தென்று விழுந்து விட்டான். கடைசி முனங்கலும் இப்போது இல்லாமல் போனது.

அவன் அணைக்க முயன்ற குடிசை தீப்பிடித்து மளமளவென்று எரிந்து சாம்பலானது. பொழுது புலர்ந்த தருணத்தில் அவனது உருக்குலைந்து கிடந்த உடலைப் பார்த்து, வைத்தி மாமா கதறியழுதார். கண்ணீர் விடாத இரும்பன் சொக்கலிங்கம் மனம் பேதலித்தவர் போல வெறுமனே நெஞ்சில் அறைந்துகொண்டு உட்கார்ந்திருந்தார்.

கிராமமே கதறியழுதுக் கொண்டிருந்த வேளையில் பிணத்தை ஏற்றிப்போக போலீஸ்காரர்கள் ஒரு மாட்டு வண்டியைக் கொண்டு வந்திருந்தார்கள். பட்டணத்தில் இருந்த அக்காளுக்கும் மாமனுக்கும் தகவல் சொன்னார்கள். எல்லாம் முடிந்து அந்த வீரனின் உடல் போலீஸ் பாதுகாப்போடு எரிந்து சாம்பலானது. அவன் உயிருக்குப் போராடும்போது இல்லாத பாதுகாப்பு அவன் செத்த பிறகு கிடைத்தது. அந்த வீர விதை அந்த மக்களின் இதயத்தில் முளைவிட ஆரம்பித்து விட்டது.

அவனது சாம்பல் அந்த மக்களின் தன்மான உணர்ச்சிகான உரம். எத்தனை வீரர்களை விழுங்குமோ இந்தச் சாதியப் பேய். விழுங்கட்டும், இன்னும் எத்தனை வீரர்கள் வேண்டுமோ எங்கள் தாயின் கருப்பைகள் கருவாக்கி உருவாக்கித் தந்துகொண்டே இருப்பார்கள். கூடிய விரைவில் வீரர்களை விழுங்கிய அந்த ஆண்மையற்ற அவலமான இழிந்த பேயின் மூளையச் சிதறடிப்போம். ஏராளமான உயிர்களின் ரத்தத்தை உறிஞ்சி வாழும் இந்த அகோரப் பசி கொண்ட பேயின் உடலில் வெறும் புழுக்கள் மட்டும்தான் நெளிந்து கொண்டிருக்கிறது.

அந்த இழிந்த சாதிப் பேயின் மூல சாஸ்திரங்களைப் பரப்பி மக்களின் மூளையைக் குழப்பும் வேடதாரி கும்பலின் கொள்ளைக்காரத் தனங்களை அம்பலமாக்குவோம் என்று வாத்தியின் உள்ளம் குரலெடுத்துக் கத்தியது. தன் காலம் பூராவும் இனி சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திலேயே போகட்டும். தன் காலத்திலேயே அதை வீழ்த்தி மாய்க்க வேண்டும் என்ற வெறி அவருள் தொற்றிக் கொண்டது.

எல்லாமே நான்கு நாட்களுக்குள் நடந்து முடிந்து விட்டதைக்

கோபால் மேஸ்திரியால் நம்பவே முடியவில்லை. ஒரு வாரத்துக்கு முன்பாகத்தான் அவனைச் செருப்புத் தைக்க அழைத்துச் சென்றது, புதுசா கைக்கடிகாரம் வாங்கித் தந்தது எல்லாம் நினைவுக்கு வந்தபோது அவர் கலங்கினார். உண்மையில் அவரால் அதை நம்பமுடியாதபடி தவித்துப் போனார். மூலைக்கு மூலை இந்த மக்களை இந்த சாதி பிய்த்துத் தின்று கொண்டிருக்கிறதே. தூ... என்று உமிழ்ந்தார். கல்யாணம் எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தட்டிக் கழித்தவனைத் தட்டிக் கொடுத்து சமாதானப்படுத்தி ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டு மணச் செய்திக்காகக் காத்திருந்தவரை பிணச்செய்தி அதிர்ச்சியடைய வைத்துவிட்டது.

சாதிப் பேய்க்குக் கிழடு தட்டிப் போய்விட்டதுதான் தன்னுடைய இழிந்த செயலுக்காக அது மரணத் தருவாயில் இருக்கும்போது, பாவமன்னிப்பை எதிர்பார்க்காமல் அது சாகும் நொடிவரையும் ஆண்மையுள்ள வீரர்களின் சூடான ரத்தத்தைச் சுவைக்கும் அதன் குரூரத்துக்கு இன்னும் வேகம் இருக்கத்தான் செய்கிறது. அது சாகும்... சாகும், வேகமாகச் சாகும்... சாகும் வரை சாகடிக்கப்படும்.

கோபால் சில நாட்கள் அவனைப் பற்றிய நினைவுகளுடன் போதையில் கிடந்தார். நாட்களும் வாரங்களுமாய்ச் சில மாதங்கள் உருண்டோடின. குயிலம்மா என்ற சலசலப்பு அவரை உலுக்கி எடுத்தாலும் கோபால் நாகம்மாளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதைச் சாடையாக ஊருக்குக் கடிதம் எழுதிப் போட்டார்.

மதுரயும் தங்கைக்கு நிறைய சீர் பொருட்கள் வாங்கிக் காடுத்து அவளது முகத்தில் சந்தோசத்தைப் பார்க்க விரும்பினார். ஒரு நல்ல நாளில் மிகவும் எளிமையாகச் சில நண்பர்கள் மட்டும் சூழ கோவிலில் வைத்து திருமணம் நடந்தது.

ஏம்பா ஊருக்குத்தான் யாருக்கும் சொல்லாம விட்டுட்ட தாலி கட்டுன கையோடு ஊருக்கு இட்டுக்கினு போய் வாஞ் என்று தோளில் ஆதரவாகக் கைபோட்டபடிச் சொன்னார் மதுர. கோபாலுக்கும் அதுதான் சரியென்று பட்டது. புது தம்பதிகள் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

நாகம்மாளின் இடுப்பில் இரண்டு வயதுக் குழந்தை சிண... கொண்டிருந்தாள். பிரகாசமாக மின்னிக் கலையான அவளது முகத்தில் கலவரமான அறிகுறி தெரிந்தது. அதிகமான நாணமும்

அதனால் ஏற்பட்ட துயரமுமாய் அவள் முகம் வாடிக் கிடந்தது. இடையே குழந்தையின் அழுகுரல் அவளை இயல்புமீறி துயரப்பட வைத்தது.

அவங்க வீட்டு சனம் என்ன சொல்லுமோ ! மொதப் பொண்டாட்டி வேற இருக்காங்களாம். அவங்க ஏத்துக்குவாங்களோ என்னமோ! குழந்தையோடு இருக்கிறவளைக் கட்டிக் கிட்டானேன்னு தூத்துவாங்களோ என்னமோ எல்லாம் சாமி விட்ட வழி.

அவளுடைய உள்ளத்தின் கலவரத்தை ஓரளவு புரிந்து கொண்ட கோபால் அவளைச் சமாதானப்படுத்த வழி தேடிக் கொண்டிருந்தார்.

''இன்னா சும்மா மூஞ்ச தூக்கி வச்சுக்கிட்டு, ஊருக்குத்தானே போறோம். கொஞ்ச சிரிச்சாப்லதான் இருந்தா என்னா?''

சிணுங்கிக் கொண்டிருந்த குழந்தையை வாங்கி முத்தமிட்டார். அது அவரைப் பார்த்துச் சிரித்தது. அவரும் சிரித்தார்.

வானம் கருத்து மந்தாரமாய் இருந்தது. வழி நெடுக மலைப் பாறைகள் விதவிதமாக நின்று கொண்டு அழகு காட்டிக் கொண்டிருந்தன. தவிட்டுக் குருவியும் மீன்கொத்திகளுமாய்ப் பறந்து திரிந்தன. ஜில்வண்டு சத்தம் வெறுமையை விரட்டி கிராமத்துக்குரிய ஓசையைத் தந்தது. மந்தாரம் கட்டியிருந்த மேகம் விலகி வெயில் அடித்தது. நடந்து... நடந்து நாகம்மாள் களைப்படைந்து விட்டாள். மூட்டைகள் வேறு கனத்தது. பயணக் களைப்பும் அலுப்புமாய்ச் சேர்ந்து கால்கள் வலியால் துவண்டு போனது.

பரந்து விரிந்து கிடந்த புளிய மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். குழந்தையும் தூங்கிவிட்டது. அவர் நெருங்கி விட்டது என்றாலும் அவளால் நடக்க முடியவில்லை. களைப்படைந்து விட்டாள். இருவரையும் தாகம் வாட்டி எடுத்தது. ஓடை சலசலக்கும் ஓசை கேட்டுப் பக்கத்தில் தெரிந்த மண்மேட்டில் ஏறிப் பார்த்தார். பரந்து கிடந்த கரும்புத்தோட்டம் வயலுக்குப் பாயும் நீர் ஓடிக்கொண்டிருந்தது.

எச்சரிக்கையுடன் சுற்றிலும் பார்த்தார். யாரையும் காணோம். கிணற்றில் இறங்கி நீர் அருந்துவதைப் பார்த்தால் தொலைந்தோம். கூட இவள் வேற இருக்கிறாள் என்று பழைய அனுபவங்களால் அவரது உதடு முணுமுணுத்தது.

பட்டணத்து ஜபர்தஸ்து எல்லாம் இப்போது மறைந்து விட்டது. தாகம் வாட்டியது. வரட்டும் பார்க்கலாம் என்று கிணற்றில் இறங்கி ஒரு வாய்த் தண்ணி அள்ளிக் குடித்தார்.

கரும்புச் சோலையில் இருந்து திடுமென ஒரு நாய் குரைத்துக் கொண்டு ஓடிவந்தது. அதற்குப் பின்னால் விவசாயி ஒருவன் ஓடிவந்தான். நாயின் தலையும் விவசாயினுடையதும் ஒரே நேரத்தில் கிணற்றுக்கு மேலாகத் தெரிந்தன.

"யாரு அது" என்று கேட்டபடி குரைக்கும் நாயை அடக்கினான் விவசாயி.

கோபாலுக்கு அவனை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. அவனுக்கும் அவரைத் தெரிந்துவிட்டது.

'என்னடா பன்ற அங்க" என்று மரியாதையில்லாமல் கத்தினான்..

"பட்டணத்தில் இருந்து வர்றோம்பா தாகமா இருந்திச்சு. ஒரு வாய்த் தண்ணி குடிக்கலாம்னு..."

"பட்டணம்... பட்டணமாம்லே... ஏறுடா" என்று எரிச்சலோடு ஏசினான்.

அந்த முதிய விவசாயி இவ்வளவு காலமாய் எதைத் தின்று, எதைக் குடித்து வாழ்ந்தானோ, மனிதப் பண்புக்குரிய எந்தக் குணநலன்களும் இல்லாத மிருகம் போல் கத்தினான். வரப்பில் நின்றுகொண்டு அவன் குரல் கொடுக்க யாரோ ஓடிவரும் சப்தம் கேட்டது.

"என்னங்க சாமி கூப்பிட்டிங்களா?'

'கண்டதுங்க கெணத்துல இறங்கி நாசம் பண்ணுதுங்க என்னடா பாத்துக்கிறீங்க." பல்லைக் கடித்தான். பிறகு நிதானமாகி, "பொம்பளையாளுங்க தண்ணி மொள்ள வந்தா எடுக்க வாணாம்னு சொல்லுடா..." என்றான்.

கோபால் அதிர்ச்சியால் அப்படியே நின்றுவிட்டார்.

"போடா... போ இன்னும் எதுக்கு நிக்கற போ" என்று விரட்டினான்.

இதென்னடா வம்பாப் போச்சே என்று புழுங்கிக்கொண்டே, கரையேறினார். அவங்க புழக்கத்துக்குத் தண்ணி மொல்ற கொ அதான் கத்துறானா... அவர் தனக்குள் சொல்லிக்கொண்டார்.

சண்ட... கிண்டன்னு பெரிசா பிரச்னையில்லாம...

போச்சேன்னு துண்டை உதறிக்கொண்டு மரத்தடிக்கு வந்தார். நாகம்மாள் மரத்தில் சாய்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள். குழந்தையும் தாயை அணைத்துக் கொண்டு தூங்கியது.

அவர் வெறுப்பில் தூவென்று துப்பினார். அந்தச் சத்தத்தில் அவள் விழித்துக் கொண்டாள்.

மூட்டையும் குழந்தையுமாக நடக்க ஆரம்பித்தார்கள். வெயில் சுரீர்...ரென்று அடித்தது.

கைக்குழந்தைக்காரி மிகவும் துவண்டுவிட்டாள். குழந்தை வேறு அல்லல்பட்டது.

பாதையில் இரட்டை மாடு பூட்டிய வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது. வண்டி அருகில் வரும்போது வண்டியோட்டியை உற்றுப் பார்த்தார். தெரிந்த முகமாக இல்லை...

இருந்தாலும் தயக்கத்தோடு "எங்க போவுது" என்று கேட்டார்.

"நா போற நாலு ஊரு தள்ளி. நீ எங்க போவணும்?"

"திருவாபடி."

"ஊம்... அங்க எங்க?' தெளிவின்றிக் கேட்டார் வண்டிக்காரர்.

"திருவாபடிதான் பெரியவரே" என்று திரும்பவும் சொன்னார் கோபால்.

"அது சரிதான்பா ஊரா காலனியா?" வண்டியோட்டி எரிச்சலோடு கேட்டார். பிறகு வெறுப்புள்ள வார்த்தையால் "காலனிதான்" என்றார்.

"உம்... பாத்தியா வெள்ளையும் சொல்லையுமா திரிஞ்சா வண்டி கேக்குதா? போ பொடி நடையா செத்த தூரந்தான்" என்று கையைக் கிராமத்தை நோக்கிக் காட்டினார்.

வண்டி கேக்குதாம்டா வெலங்குனாப்ல தான் போ என்று முணுமுணுத்துக் கொண்டு மாட்டைச் சாட்டையால் விளரினார். அலட்சியமாக எச்சிலை உமிழ்ந்தார்.

கோபாலுக்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்தது.

மூட்டையைத் தோளில் சுமந்துகொண்டு தனது கோபம் குறைய குழந்தையின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நடந்தார்.

தங்களை ஏற்ற மறுத்த வண்டி சலக்.. சலக்.. ஓசையோடு போய்க்கொண்டிருந்தது.

மீண்டும் வானம் மப்பும் மந்தாரமுமாய் மாறி, முழுக்கவும் கருத்துக் கொண்டு வந்தது. வானம் மட்டுமல்ல, காலத்தோடு

சேர்த்து மனிதர்கள் மற்றவைகளும் மாறிக்கொண்டேதான் போகிறது. எது மாறினாலும் இந்தச் சுரண்டிப் பிழைக்கும் சாதி வலைகள் மட்டும் அழியாது போலத் தோன்றியது. மூளையற்ற மூடன்கூட சாதி கவுரவத்தில் தன்னை ஏதோ ஒரு விதத்தில் உயர்ந்தவன் என்று நினைத்து அதைக் கட்டிக் காப்பாத்த முயல்கிறான். அந்த முயற்சியில் அவன் மனிதத் தன்மையை இழந்துப் போவதை அவன் உணர்வதில்லை. அந்த உணர்ச்சியை இழிவான சம்பிரதாயங்களும் சாத்திரங்களும் மேலும் கொழுந்து விட்டு வளரச் செய்கிறது. இந்தியன் ஒவ்வொருவனும் தனது அடையாளமாகச் சாதியை நினைக்கிறான். சாதியை விதைத்தவனுக்கு அமோக லாபம். அமோக விளைச்சல்தான். எங்கெல்லாம் சாதிக் கொழுந்து இருக்கிறதோ அங்கெல்லாம் அறியாமையும் வறுமையும் வாட்டுகிறது.

இயற்கைத் தாயோட மடியில் சுரக்கும் தண்ணிய அள்ளிப் பருகக்கூட உரிமையில்லாம் தடுக்கற இந்தக் கேவலமான சாதியக் கசடை எவன் விதைச்சிருப்பான். நல்லா கொழுத்த தாசிக் கூட்டத்துக்கு ஆள் பிடிச்சிக் கொடுத்து அதுல வாழ்வு நடத்துன எவனோ தான் இது மாதிரியான ஈனத்தனமான பாசிச வன்முறையை ஏற்படுத்தியிருப்பான் என்ற எண்ணம் அவருள் எழுந்தது.

கோபால் மனம் அவமானமடைந்த கோபத்தோடு இருந்தது.

நாகம்மாள் ஊரின் அழகைப் பார்த்துக்கொண்டு வந்தாள். பெரிய பெரிய பாறைகள் ஏதோ அளவு எடுத்து வெட் மாதிரி இருந்தன.

தூரத்தில் குன்றுக் கோயில் தெரிந்தது. அதன் , கோபுரம் அதன் பின்னணியில் மேகம் சூழ்ந்த கருத்த வானம் பார்ப்பதற்குத் துயரம் தருவது போல் இருப்பதாக கோபால் உணர்ந்தார்.

கிராமத்தில் இருந்து கருகும் புகை வாசனையும் மற்றும் பலவிதமானது காற்றில் மிதந்து வந்தது.

நாகம்மாளுக்குத் தாகத்தால் நாக்கு வறண்டது.

"இன்னா ஊரு எப்படி இருக்குது உம்."

வெறுமையை விலக்கவென்றே கோபால் கேட்டார். நாகம்மாள் வெறுமனே தலையாட்டினான். அவளுக்குக் கூச்சமாய் இருந்தது.

நீளமான செம்மண் சாலையில் ஒரு பள்ளமான சிறு பாதை வலதுபுறத்தில் இறங்கியது.

பாதையின் இருபுறமும் வேலிக்காத்தான் மரங்கள் புதர் போல் மண்டிக்கிடந்தன. அதன் பின்புறம் மாதாகோயிலின் கோபுர உச்சியில் சிலுவை துருத்திக் கொண்டு தெரிந்தது.

ஊர் நெருங்க... நெருங்க நாகம்மாளுக்கு இனம்புரியாத பதட்டம் தொற்றிக் கொண்டது. அவளது நடையில் தளர்ச்சி தெரிந்தது. அவளது தயக்கத்தைக் கோபால் புரிந்துகொண்டார்.

''இன்னா நாகம்மா ஒன்னும் வெசனப்படாத. எல்லா சரியா போயிடும். உன்னப் பாத்தா அம்மாவுக்கு மனசு எறங்கிடும். தோ வீடு பக்கந்தான்'' என்று முள் புதருக்குப் பக்கமாய் கை காட்டினார்.

ஆனால், பாதை நீண்டுகொண்டே போனது. அவர்களுக்கு முன்பாக ஆட்டு மந்தை போய்க் கொண்டிருந்தது. மந்தைக்கு நடுவே ஆட்டுக்காரப் பையன் முள் மரத்தில் தொங்கிய காய்களைக் கோலால் அறுத்துப் போட்டுக் கொண்டிருந்தான். இரு பக்க முள் மரங்களும் வானம் தெரியாதபடி மேலே மூடியிருந்தது.

ஆட்டு மந்தையைக் கடந்து போனார்கள். செடி வரிசைகளின் முடிவில் திறப்பு வெளிவந்தது. அதன் மத்தியில் செங்கல் சூளைகள் புகைந்துக் கொண்டிருந்தன. அதன் பின்புறம் நீளமான கரை தெரிந்தது. முன்பின் அந்த ஊருக்கு வந்திராத நாகம்மாளுக்குக் கூடத் தெளிவாகத் தெரிந்தது கரைக்கு அடுத்துப் பெரிய ஏரி இருக்கிறது என்று.

ஏரி, கடல் போலப் பரந்து விரிந்து கிடந்தது. ஏரிக்கரையில் நெருங்கி அடர்த்தியாகப் பனைமரங்கள் நின்றன கருத்த மதில் சுவர்போல..

இரண்டு கீரிப் பிள்ளைகள் குறுக்காக ஓடி, நாகம்மாளைக் கலவரப்படுத்தின. சூரியனுக்கு இறங்கு முகம். மேல்வானம் லேசாக வெளிச்சம் காட்டியது. அடர்ந்த மேகங்களுக்கு இடையில் ஒளிப் பிழம்பு தரையில் தாரையாய் பாய்வது போல் அழகு காட்டியது.

நாகம்மாளின் முகத்தை ஒரு முறை ஆசையோடு பார்த்தார். இவளை அம்மாவுக்குப் பிடித்துப் போய்விடும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்.

ஏரிக் கரையின் எதிர்ப்புறத்தில் இரண்டு பேர் வந்துகொண்டிருந்தார்கள். யாரோ புது ஆட்கள் வருவது தெரிந்து கூர்ந்து பார்த்தார்கள்.

தலையில் இருந்த துண்டை அவிழ்த்துக் கொண்டு "கோபால் மாமன்டா..." ஓவென்று மகிழ்ச்சியில் கத்தினான். இவரும் பதிலுக்கு "டேய் எல்லப்பா" என்று ஆச்சர்யமாய்க் குரல் கொடுத்தார்.

மற்றவன் ஓடிவந்து அவர் கையில் இருந்த மூட்டையை வாங்கிக் கொண்டான்.

கோபாலுக்குப் பின்புறம் மிரண்ட பார்வையுடன் நின்று கொண்டிருந்த பெண்ணையும் அவள் கையில் இருந்த குழந்தை யையும் பார்த்தபோது அவனுக்குக் குழப்பமாகிவிட்டது.

மூட்டைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் முன்னே. நடந்தார்கள்.

அப்பாடா ஊர் வந்துவிட்டது என்று நாகம்மாள் பெருமூச்சு விட்டாள் என்றாலும் அவள் இதயம் படபடத்தது.

குழந்தையை நெஞ்சோடு அணைத்தபடி நெஞ்சு படபடக்க கோபால் பின்னாலேயே நடந்தாள்.

குடிசைகள் இன்னும் நெருக்கத்தில் தெரிந்தன. அவளுக்கு மேலாகப் புகை கிளம்பி காற்றில் கரைந்து கொண்டிருந்தது. அடுப்பில் எரியும் காட்டுச் சுள்ளிகளின் தைல வாடை மிதந்து வந்தது.

குழந்தையை கோபால் வாங்கிக்கொள்ள கை நீட்டினார். நானே தூக்கி வர்றேன் என்பது போல முணுமுணுத்துக் கொண்டு குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

எதிர்த் திசையில் ஒடிசலான தேகத்துடன் சாயம்போன புடவையில் வயதானவள் ஓடிவந்தாள்.

"நாகம்மா அம்மா வர்றாங்க" என்று கிசுகிசுத்தார்.

நெருங்கி வராமல் தாய் தன் ஓட்டத்தை நிறுத்தி நிலையாக நின்று விட்டாள். அவளது உதடு விம்மித் துடித்தது. கிழிந்த முந்தானையால் வாயைப் பொத்திக் கொண்டாள். அவளது பார்வையில் குழப்பமும் அதிர்ச்சியும் இருப்பதை கோபால் கவனித்தார். இவள் தான் தன்னோட மாமியார் என்று நாகம்மாளுக்குப் புரிந்துவிட்டது.

நாகம்மாள் ஒரு வேகத்தோடு கோபாலைத் தாண்டிக் கொண்டு முன்னால் போய் கையில் இருந்த குழந்தையை மாமியாரின் காலடியில் போட்டுத் தானும் விழுந்தாள்.

இதை எதிர்பாராத கோபாலும் தாயின் காலைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''மவராசனா இரு ராசா'' மெல்லியதாய் குரல் வந்தது. அம்மா விசும்பி அழுதாள். காரணமற்று, நாகம்மாளும் அழுதாள்.

தாயின் காலடியில் கிடந்த குழந்தை வீறிட்டு அலறியது. எழாமல் தன் காலடியில் இருப்பவளைத் தூக்கி நல்லா இரு தாயி என்று அதே மெல்லிய குரலில் வாழ்த்தினாள்.

அம்மா நாகம்மாளை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். அவளது கண்கள் கண்ணீரில் கரைந்துவிடுவது போல் இருந்தது. அவளது முகத்தைப் பார்க்க தாய்க்குப் பரிதாபமாக இருந்தது. அம்மா குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அதற்குள் சேதி தெரிந்து தம்பிகள் இன்னும் சிலரும் சேர்ந்து விட்டார்கள். எல்லார் முகத்திலும் குழப்பு தாண்டவமாடியது.

புதுசா ஒருத்திய கூட்டி வந்துட்டாரே. என்னவோ ஏதோ பொம்பள வேற நம்ம ஜாடையா இல்லையே என்று குழம்பினார்கள்.

எது எப்படியோ அம்மா நாகம்மாளின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள்.

குழப்பமான அந்த நேரம் மௌனமும் விசும்பலுமாய்க் கடந்து போனது. நாகம்மாள் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். ''என்னமோ நடக்குது தாயி ஒன்னும் புரியல'' என்று கையை விரித்துக் காட்டினாள் அம்மா.

நாகம்மாளுக்கு ஏனோ அழுகை குமுறிக்கொண்டு வந்தது. அவளது உள்ளத்தை அம்மா புரிந்து கொண்டாளோ என்னவோ அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து அவளைச் சேர்ந்து பிடித்து அணைத்துக் கொண்டாள்.

அழுகையினூடே தனது கடந்தகாலத் துயரங்களைச் சொல்லி ஓய்ந்தாள். அம்மாவும் அந்தத் துயரை அப்படியே தான் வாங்கிக் கொண்டதுபோல் கண்ணீர் உகுத்தாள்.

இப்போது தாயின் கண்ணுக்கு நாகம்மாள் தெரியவில்லை. தன் மகள் பொன்னியம்மாள்தான் தெரிந்தாள். நாகம்மாளுக்கும் அங்கே மாமியார் தெரியவில்லை. தன் தாயைப் போலவே உணர்ந்தாள்.

குழந்தை பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அம்மாவையும்

பாட்டியையும் பார்த்தது.

குடிசைக்கு வெளியே தம்பிகளுடன் உட்கார்ந்து கோபால் பேசிக் கொண்டிருந்தார்.

"சரி மறவன்தாங்கல்காரிக்கு என்ன பதில் சொல்லப் போறானாம்." தாயின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நாகம்மாள் தவித்தாள்.

"சரி, நீ எதுக்குக் கலங்கற. எல்லாத்தையும் என் சாமி பாத்துக்கிட்டிருக்கு", என்று அம்மா கூரை உச்சியைக் காட்டினாள்.

குழந்தையைப் பாட்டி தூக்கிவைத்துக் கொஞ்சினாள். நாகம்மாளின் மனபாரம் இறங்கியது போல் இருந்தது.

குடிசைக்கு எதிரே பெரிய புளியமரம் கிளை விரித்து உயர்ந்து நின்றது. அதன் கீழே சிறிய குடிசை வெள்ளையடித்துப் பளீச்சென்று இருந்தது. அதில் முனியனின் விதவை அஞ்சலையும் சின்னப் பெண்ணும் குடியிருந்தார்கள்.

தாயும் மகளும் காட்டில் பொறுக்கிய சுள்ளிகளுடன் வரும் வழியில் சேதி தெரிந்து ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தார்கள்.

குடிசைக்கு முன்பாகச் சுள்ளிக்கட்டை போட்டுவிட்டு தம்பிகளுடன் பேசிக்கொண்டிருக்கும் கோபாலை நலம் விசாரித்தாள்.

நாகம்மாளைப் பார்க்க குடிசைக்குப் போனார்கள். அஞ்சலைக்கும் சின்னப்பொண்ணுக்கும் அவள் முன்பே பழக்கமானவள் என்பதாலும் தங்கள் வீட்டுக்கே மருமகளாய் வந்திருப்பதாலும் கேலியும் கிண்டலுமாய் பேச்சு திசை மாறி குடிசைக்கும் சிரிப்புச் சத்தம் கேட்டது.

சின்னப்பொண்ணு குழந்தையை வெளியே தூக்கி வந்து கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த கோபாலை முறைத்தாள் சின்னப்பொண்ணு.

யோவ்.. நீ கில்லாடிய்யா என்பதுபோல் இருந்தது, கோபாலை அவள் பார்த்த பார்வை. கிராம வாழ்க்கையோடு அவள் பின்னிப் பிணைந்து விட்டது தெரிந்தது. அதுதான் அவளுக்கு இயல்பாகவும் இருந்தது.

புளியமரம் தரைக்கு மேலாகக் கைகளை அகல விரித்துக் கொண்டு எல்லோரையும் சேர்த்திணைப்பது போல் அசைந்தாடிக்

கொண்டிருந்தது.

கோபால் குடிசைக்குள் எட்டிப் பார்த்தார். திரி விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. அந்த ஒளியில் நாகம்மாளின் முகம் தெளிந்து பாரம் இறங்கி வைத்தவளைப் போல மலர்ந்து இருந்தது.

வெளியே கருமேகம் விலகி நிலா ஒளி வீசியது. பிறகு பெரிய கருமேகம் வந்து நிலவொளியை மறைத்துக் கொண்டது. அந்த லேசான ஒளியில் கோபாலின் தங்கப்பல் ஒளிர்வதை அவர்கள் ஆச்சர்யமாகப் பார்த்தார்கள். இதுதான் பட்டணத்து பவுசு.

கோபால் இப்போது உடம்புப் பருத்து மினுமினுப்போடு இருப்பதைப் பார்த்து தம்பிகள் இருவரும் பூரித்துப் போனார்கள்.

பெரிய புளிய மரத்தை அண்ணாந்து பார்த்த அதனடியில் நிர்வாணமாய் சிரங்குப் பிடித்து நொண்டி நடந்த காலமெல்லாம் நினைவுக்கு வந்தது. கோபால் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

நாகம்மாள் நல்ல பெண்தான் என்பது போல் அம்மாவுக்கு சிபாரிசு செய்து கொண்டிருந்தாள் அஞ்சலை. குழந்தை சின்னப் பெண்ணிடம் ஒட்டிக் கொண்டது. ஒரு பூவைப் போல முகர்ந்து கொஞ்சினாள்..

அஞ்சலை அக்கா ரொம்பவும் வயதான தோற்றமடைந்து விட்டிருந்தாள். அம்மாவின் மனம் தடுமாறிக் கொண்டுதான் இருந்தது. இருந்தாலும் வழக்கம்போல சமையலில் உட்கார்ந்து விட்டாள். எரியும் அடுப்பில் சுள்ளியைத் தள்ளி விடுவதிலும் குழம்புப் பக்குவத்துக்கு வந்திருச்சா என்று வாசம் பிடித்து கொதித்துக் கொண்டிருக்கும் மீன் குழம்பைக் குடிசைக்கு வெளியேயம் மணம் பரப்ப வைத்தாள். சுள்ளியின் சடசடப்பையும் அவளின் முணுமுணுப்பையும் யாரும் கவனிக்கவில்லை. நாகம்மாளைத் தவிர.

பயணக்களைப்பும் பசியுமாய் இருந்த கோபாலுக்கு மீன் குழம்பு வாசம் வயிற்றையும் மனதையும் என்னமோ செய்தது. அம்மாவோட கைப் பக்குவத்தில் சாப்புட்டு எத்தனை காலமாயிடுச்சு. மனம் ஏங்கியது.

பழைய கந்தல்களை வைத்துக் கட்டிய மூட்டையை எடுத்து வந்து போட்டான் முருகன். தலைக்கு வைத்துக் கொள்ள சவுகரியமாய் இருந்தது. பக்கத்துக் குடிசைகளில் உரலுக்கும் உலக்கைக்கும் இடையில் நெல்மணி மாட்டிக்கொண்டு அவதிப்படுவதை தொம் தொம் சத்தம் சொல்லிக் கொண்டிருந்தது.

காய்ந்த பூமியில் சமீபத்து மழையும் காத்தும் ஒரு பச்சையை விரித்துவிட்டுப் போயிருந்தது. அதனால், காத்து சிலுசிலுவென்று வீசி குளிரெடுக்க வைத்தது.

பாவாடை மௌனமாய் உட்கார்ந்திருந்தான். அவர் யாரோட வம்புக்கும் போறதில்லை. ஏதோ சிந்தனையோடு அமைதியாக உட்கார்ந்திருந்தான். ஆடுகளை ஓட்டிவந்து பட்டியில் அடைத்துவிட்டு அண்ணனைப் பார்த்துச் சிரித்தான். பிறகு தனது வழக்கமான இடமான பாறையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அந்தக் கல் ஒரு ஆள் கால் நீட்டி படுக்கும் அளவு பெரியதாய் இருந்தது. அவரது முழு அறையும் அதுதான். புளியமரத்தடியில் இருந்தது. உதயத்துக்கு முன்னாடி, ஆடுகளோடு போய் இருட்டுறதுக்கு முன்னாடி, அதுங்களோட திரும்பி வர்றதும்தான் அவனோட வேலை.

குட்டியும் சினையாடுகளுமாய்ப் பதினைந்து தேறும். ரெண்டு பசு. அதுல ஒன்னு நோயில விழுந்திருச்சி. திரும்ப எழுந்திரிக்கவே இல்ல, அந்தத் துயரத்துல இருந்து மீள பாவாடைக்கு ஒரு மாதமானது. அந்த ஆள் சாதாரணமா இருக்கும்போதே ஏதோ துயரத்தோடு இருப்பது போலவேதான் தெரியும்.

கால்நடைகள்கிட்ட அவன் பேசுறது சுவாரசியமானது. இருந்த ஒரு பசுவும் பாவாடையைத் தவிர வேறு யாரையும் கிட்டத்துல அண்ட விடாது. யார் அது பக்கத்துல போனா மிரண்டு பாயும்.

பாவாடை மட்டும் அந்தப் பசுகிட்ட ரொம்ப செல்லமா பொண்டாட்டிகிட்டப் பேசறாப்பல குழைஞ்சி குழைத்து, பேசுவான். சமயத்துல மெதுவா பாடக்கூட செய்வான். பதிலுக்குக் காதைச் சிலுப்பிக் கொண்டு அவனைக் கூர்ந்து பார்க்கும். பருத்த வயிற்றால் உரசித் தள்ளும்

வாலைக் கழற்றி வீசும். அவன் முதுகில் பளீர் என்று வாலால் விலாசும் முறை பாவடையையும் அதன் கொம்பு பதம் பார்த்துவிட்ட அவன் புருவத்துக்கு மேலாகக் கோடாய் கிழித்துவிட்டது. கண்ணு தப்பிச்சது புண்ணியமா போச்சு 'அந்தப் பசுவ வித்துக் தொலைடா' அம்மாக் கத்தியதைப் பாவாடை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. வழக்கம்போல அதோட கொஞ்சுவதும் பாடுவதும் தொடர்ந்தது. அவன் பேசுறதும் பாடுறதும் அதுங்ககிட்ட மட்டும்தான்.

கருத்த மேகங்கள் தெற்கே போய்விட்டன. நிலா பொழிந்தது. இரவு சில்வண்டுகளின் சப்தம் தீப்பொறி பறப்பது போல திடுப்பென மின்மினிகள் பறந்து திரிந்தன. பசுவின் பெருமூச்சு ஓசையும், ஆடுகளின் மூச்சும், தும்பலும், வேலியை உரசித் தள்ளும் சப்தமும் கேட்டது.

நீண்ட நாட்களாக நகரத்தில் தொலைந்து விட்ட அமைதியையும் தூயகாற்றையும் சுவாசித்ததில் கோபாலை உறக்கத்தில் தள்ளியது. கோபாலின் உறக்கத்தைக் கலைத்து அம்மா சோறு போட்டாள். சப்பு கொட்டி கவளம்... கவளமாக விழுங்கினார். தட்டுல விழுந்த மீனோட முள்ளக்கூட மிச்சம் வைக்காம மென்று தீர்த்தார். தலையை முன்னுக்கு நீட்டி குடிசைக்குள் எட்டிப் பார்த்தார். நாகம்மாள் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். பக்கத்தில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

'நீ துன்னுட்டா கொழந்த அவளுக்கு நெறைய தான் போட்டு தந்து இருக்கறேன் தம்பி புடிச்சாந்தது'' என்று குசுகுசுத்தாள்.

அம்மா எப்பப் பேசினாலும் அவளது தொண்டைக் குழியிலேயே

வார்த்தைகள் மூழ்கிவிடும். கொஞ்சம் கவனிக்கத் தவறினாலும் அவளோட பேச்சைப் புரிஞ்சுக்க முடியாது திடீரென்று கையைக் காற்றில் துழாவுவதுப்போல அசைத்தாள்.

''எல்லா அது போக்குல போவுது ஒன்ன மட்டும் நெஞ்சில வச்சகடா கோவாலு என் சாமி எல்லாத்தையும் பாத்துக்கிட்டு தான் இருப்பாங்க உங்களுக்கு ஒரு கொறவும் வராது. எல்லா..'' அதற்கு மேல் பேச்சு வரவில்லை. வானத்தை நோக்கி கையைக் காட்டினாள். அவள் கழுத்தில் தொங்கிய பவழமணி நிலவொளி யில் சுடர்ந்தது.

அம்மாவின் கண்களில் நீர் துளிர்த்திருந்தது. கோபாலுக்கு அம்மா மடியிலே படுத்து உறங்க வேண்டும் போல் இருந்தது. அம்மா சாமி என்று சொன்னது அப்பாவை.

அம்மா குடிசைக்குள் போய் விட்டாள். பாவாடை அந்தக் கல்லிலேயே உட்கார்ந்து சாப்பிட்டான். பிறகு அங்கேயே போர்த்திக் கொண்டு உறங்கிவிட்டான்.

அவன் அப்பாவைப் போலவே இருக்கிறான். அவனுடைய மௌனம் அவருடையது போலவே. எல்லாம் அப்பா... அப்பா அவர் மனம் துள்ளியது இதயம் கனத்தது இரு கண்ணிலும் வழிந்த

சூடான கண்ணீர் காதுகளில் இறங்கி குளிர்ந்துப் போனது.

இப்போது நிலவு தெரியாதபடி பெரும் மேகம் ஒன்று மறைத்துக் கொண்டது. முழுமையான இருட்டு.

அப்பாவைப் பற்றிய எண்ணம் கோபாலை முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டது.

நெடிய உருவமான அப்பாவின் முகம் அமைதியானது. ஆனால் அவரது கைகள் அது எதையாவது செய்து கொண்டிருக்கும்.

எல்லாம் இப்போது நேரில் நடப்பது போலவே தெரிந்தது. வித விதமான காட்டுக்கொடிகளும், பனை மட்டைகளும், வீட்டின் முன் போராக இருக்கும். அதுங்களைப் பதப்படுத்திக் கயிறு திரித்துக் கொண்டிருப்பார். கயிறு திரிப்பதில் அவர் கை இயந்திரம் போல ஆடிக் கொண்டிருப்பதை அவன் பார்த்திருக்கிறான்.

இரண்டு மூன்று நாட்களுக்கு அவரை ஊருக்குள் பார்க்க முடியாது. வெகுதொலைவு எங்காவது போய் திடீரெனப் பெரிய பொதியைச் சுமந்து கொண்டு வருவார். கேழ்வரகுக் கூழைப் பெரிய மண் சட்டி நிறைய வைப்பாள் அம்மா. கடவுளுக்குப் படைப்பது போல் அத்தனை பவ்யமாக நடக்கும். உரித்த வெங்காயம் எப்போதாவது இருக்கும். பெரும்பாலும் பச்சைமிளகாய்தான்.

நிறுத்தம் இல்லாமல் மொத்தத்தையும் குடித்துத் தீர்ப் பிறகு மூட்டைகளைப் பிரித்து ஏதோ பொம் கணக்கிடுவதுபோல் பார்ப்பார்.

அதில் பலவகையான கிழங்குகளும் விதவிதமா கொடிவேர்கள், விதைகள், சில வதங்கிய செடி இருக்கும் ஆடு, மாடு, சனங்க சகலருக்கும் வைத்தியம் பார்ப்பார்.

அவர் தொட்டா கொணமாவாத உசுரே கெடையாது. நாலு ஊரு தள்ளியிருந்த சனங்களும் வரும். குடிசனங்க சேரிக்குள்ள வரத் தயங்குவாங்க. இருட்டுன பிறகு நோயாளியத் தூகிட்டு வந்து வைத்தியம் பண்ணிக்கிட்டுப் போவாங்க. சாதியாவது மண்ணாங்கட்டியாவது மனசுக்குள் சொல்லிக்குவாங்களோ என்னமோ.

'காலனியாளா போய்ட்டியடா. இல்லனா பத்து ஊரு சன உன் முன்னாடி கெடக்கும்' யாரோ ஊர் பெரிய மனுசன் ஒருநாள் ராத்திரி சொல்லிட்டுப் போன வார்த்தைகள் கோபாலுக்கு இப்பக் கேட்பது போல் இருந்தது.

நடு ராத்திரியில் குடிசைக்கு வெளியே குரல் கேட்கும்.

'டேய் மாவுளி... மாவுளி...'' என்று பக்கத்து குடிசைக்குக் கேட்காதபடி கிசுகிசுப்பார்கள். வாசலை மூடியிருக்கும் துவரைத் தண்டு படலையே நகர்த்திக்கொண்டு வெளியே போவார்.

இப்படி அவரை மரியாதைக் குறைவாகக் கூப்பிடும் குரல் வந்தாலே அது ஊர் சனம்தான் யாரோ வந்து இருக்கிறார்கள் என்று அவருக்குத் தெரிந்துவிடும்.

'பொய்யா வாழறதுக்கு எதுக்கு உசுறு'' என்று அவர் முணு முணுப்பார், யார் காதிலும் விழாதபடி.

மலைக்கோயிலை நோக்கி வணங்கிவிட்டு வைத்தியம் ஆரம்பிப்பார். எண்ணெய் விளக்கு பிரகாசமாய் எரியும். எண்ணைக்கூட ஏதாவது சேர்ப்பாரோ என்னவோ. விளக்கு சுடர்ந்து எரியும் வெளிச்சத்தில் வைத்தியம் நடக்கும். சில சமயங்களில் நோயாளி அலறுவார்.

சாமி பொறுத்துக்க... சாமி பொறுத்துக்க என்று அப்பா முணுமுணுப்பது கேட்கும். காய்ச்சல் பூச்சிக்கடி எல்லாத்துக்கும் அப்பா மருந்து வச்சிருந்தார். வைத்தியத்தின் முடிவில் சில வகை விதைகளையோ, பட்டைகளையோ போட்டுக் கொதிக்க வைத்து மருந்து தயாரிப்பார். பிறகு அளவு சொல்லிக் கொடுத்து 'போ சாமி எல்லாம் சரியா போயிடும்' என்று அவர் குரல் மெதுவாக வரும்.

வைத்தியக் கட்டணம் எதுவும் அவர் கேட்டதில்லை அவர்களாகவே தானியம் எதாவது வைத்துவிட்டுப் போவார்கள். அரிதாக சில சமயங்களில்

சாமிய... டவுனுக்கு இட்டுகினு போங்க சாமி இன்க வராதீங்க என்று சொல்லிவிடுவார். அந்த சமயங்களில் அவர்கள் குலுங்கி அழும் சத்தம் கேட்கும்.

''மாவுளி மாமா நீ மட்டும் வேற சாதியில உதிச்சிருந்தினா உலகமும் அறிஞ்ச மனுசனா இருந்திருப்ப. உன்னோட போறாத காலம் பறையனா பொறந்துட்ட. யாரு ராத்திரி திருட மாதிரி மருந்து வாங்கிக்கினு போனது?'' என்று புதுசா மதம் மாறின ஜோசப்பு மாமா கேட்டதுக்கு, அப்பா வெறுமனே வாய் மீது கை வைத்து அவரை அடங்கும்படி சொல்லிவிட்டு எதையோ பொடி செய்து கொண்டிருந்தார்.

அவர் வாயில் இருந்து வார்த்தைகள் அரிதாகத்தான் வரும்.

அப்பா பண்ணையாளாய் இருந்து உழைக்கப் போவது கிடையாது. அவர் சுதந்திர மனிதனாகத் திரிந்தார். அவரது வேலையெல்லாம் புதர் மண்டியக் காடுகளிலும் மலைக்குன்றுகளிலும்தான். அதில் பொன்னைத் தேடுவது போல் மூலிகைகளைத் தேடியெடுத்துக் கொண்டிருப்பார்.

சூரியன் உதிப்பதற்கு முன்பே அவரது வழுக்கைக்குக் கீழே உள்ள பிரமாண்ட நெற்றியில் நாமம் தீட்டுவார். பிறகு புளிய மரத்தின் பின்பாக வளர்ந்து நிற்கும் பெரிய பாறையின் உச்சியில் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டு தூரத்தில் தெரியும் குன்றுக் கோயிலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார். சமயத்தில் ஒருநாள் முழுக்கக்கூட உட்கார்ந்திருப்பார்.

ஒருமுறை உயிருக்குப் போராடிகிட்டுக் கெடந்த ஒருத்தன ராத்திரி நேரத்துல ரகசியமா தூக்கிக்கொண்டு வந்தார்கள். குடிசைக்கு வெளியே யாரோ கூப்பிடுற குரல் கேட்டது "மாவுளி... மாவுளி..." வழக்கம் போல தட்டியைத் தள்ளி வைத்து விட்டு வெளியே எட்டிப் பார்த்தார். 'சாமி நீங்களா..." என்று அப்பா ஆச்சரியத்தோடு சத்தம் போட்டே கத்தினார்.

'உஷ்..'. வந்தவரிடம் இருந்து வந்த சத்தம் – 'டேய் எம்புள்ளய காப்பாத்துடா'

குரல் ரொம்ப மெல்லியதாய் பலவீனமாய் வந்தது.

யாராய் இருக்கும்? அம்மா ஆர்வத்தில் எட்டிப் பார்ப்பது தெரிந்தது. அம்மா உடனே தலையை விசுக்கென்று தலையை இழுத்துக் கொண்டார். பெருமாகோயில் பூசாரி அய்யருமாரெல்லாம் என் சாமிய தேடி வர்றாங்க... என் சாமி... அம்மா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு குப்புற விழுந்தாள்.

பூசாரி தோளில் பையனைச் சுமந்து கொண்டிருந்தார். உடல் பிணம் போல் தொங்கிக் கொண்டிருந்தது.

'தொடலாமா சாமி" பூசாரியிடம் உள் அர்த்தத்தோடு கேட்டார்.

"அடேய் திருடன்போல எடந்தேடி வந்திருக்கேன், எப்படின்னா காப்பாத்துடா... எம்புள்ளயக் காப்பாத்துடா... ஊர் சனமெல்லாம் உன்னால

முடியும்ன்றாங்களேடா.."

பையனைக் கைகளில் ஏந்திக்கொண்டு குனிந்து குடிசைக்குள் புகுந்தார். தாழ்வான வாசலில் அவரால் நுழைய முடியாமல்

கூரையடியில் உட்கார்ந்து கொண்டார். எண்ணெய் விளக்கு பிரகாசமாக எரிந்தது. அதுபோன்ற பிரகாசத்தை இதற்கு முன்பு எண்ணெய் விளக்கில் அவர் பார்த்தது கிடையாது. அது எள் நெய்யும் வேறு சிலதும் சேர்ந்தது. அப்பாவின் தயாரிப்பு.

பூசாரி எல்லாம் முடிந்தது போல் குமுறி... குமுறி அழுது கொண்டிருந்தார். 'சாமி அழாதீங்க. சாமிக்கு நாடி நல்லாயிருக்குது, பயப்படாதீங்க. மொசக் குட்டியாட்டம் சாமி எழுந்து ஓடும்'' என்று நம்பிக்கையோடு சொன்னார்.

பூசாரியின் விசும்பல் நின்றுவிட்டது.

மண்சட்டியில் இருந்த எண்ணெயை எடுத்து முகர்ந்துப் பார்த்தார். அதன் நெடி குடிசை முழுவதும் பரவியது. தடுப்புக்கு அந்தப் பக்கத்தில் இருந்தவர்களின் தும்மல் கேட்டது. பூசாரி வெளியே போய் விட்டார்.

பிணம் போலக் கிடக்கும் மகனைப் பார்க்க அவரால் முடிய வில்லை. உடலில் இருந்த கடைசித் துண்டையும் அவிழ்த்து மூலையில் போட்டார். பிறந்த குழந்தைபோல கிடந்தவனின் உடல் முழுக்க மண் கலயத்தில் இருந்த எண்ணெயைச் சூடுபறக்கத் தேய்த்தார். கயிறு திரித்து சொரசொரப்பான கைகளால் தேய்க்க நோயாளியின் உடல் ரத்தச் சிவப்பாக மாறிவிட்டது. மறைந்து கிடந்த ரத்தம் தோல் வழியாகவே வந்துவிடும்போல் எண்ணெய் விளக்கொளியில் நோயாளியின் உடல் ஜொலித்தது. சுண்ணாம்புத் தொட்ட மஞ்சள் துண்டு போல.

பையன் செத்துவிட்டான் என்று நம்பினார் பூசாரி. லேசான சுவாசமும் நின்றுவிடும் என்றே தோன்றியது. யாரோ சொன்னார்கள். அவனிடம் போனால் ஒருவேளை பையன் பிழைத்துக் கொள்வான் என்று. நடக்கிற காரியமா அது அவனாவது நமக்கு வைத்தியம் பார்ப்பதாவது அவனைப் பார்த்தாலே தீட்டு. அவனிடத்தில் வைத்தியம் பார்த்துக் கொள்வதாவது.

பூசாரி மனப்போராட்டத்தில் இருந்து மீண்டு ஒரே மகன் எப்படி இழப்பது. பாசம் அவரை எல்லாக் கட்டுகளையும் அறுத்துக் கொண்டு வரச் செய்திருந்தது. அப்பாவின் முகத்தில் திருப்தியானதோர் உணர்வு வந்து விட்டது ஏதோ ஒரு பொடியைக் குழைத்து வயிற்றில் பத்து போட்டார். வாய்க்குள் சொட்டுச் சொட்டாக மருந்துத் திரவத்தை விட்டார். பிறகு மனத்திருப்தியுடன் நாடியைப் பிடித்தார். எல்லாம் நல்லபடியாக முடிந்தது.

''உள்ள வா சாமி'' அப்பாவின் குரல் கொஞ்சம் சத்தமாகவே வந்தது. 'வா சாமி விடிய இன்னும் நேரமிருக்குது'' என்று அப்பா ரகசியம்போல் சொன்னார். பையன் பனையோலை பாய்மீது கிழித்தகோடு போலக் கிடந்தான். பார்க்காததைப் பார்த்து விட்டது போல பூசாரி அலறினார். ''என்னடா இது'' நெஞ்சைப் பிடித்துக்கொண்டார். நோயாளியின் உடம்பில்

கிடந்த பூணூல் விளக்குப் பக்கத்தில் அறுந்து போய் கிடந்தது.

அப்பாவுக்குப் புரிந்தது. ''வைத்தியம் பண்ணும்போது இது இடைஞ்சலா இருக்குமேன்னுதான். உசுரு முக்கியமாச்சே. இந்தச் சாறு உயிருள்ளது. கொஞ்ச நேரத்துல சாமி கண்ணத் தொறந்துடும்' வைத்தியர் பையனின் தொண்டைக் குழியை நீவி விட்டார்.

'உண்மையாதான் சொல்றயாடா பகவானே, இதெல்லாம் நெசமா? பூசாரி கூரையை அண்ணாந்துப் பார்த்தார். அவர் கண்களில் ஈரம் துளிர்த்துப் பொங்கி வழிந்தது. அவருக்கு இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை. 'சாமி பொழச்சுக்கும் சாமி... அப்படி பொழச்சுகிட்டா என்னக் கோயிலுக்குள்ள விடுவியா சாமி. ஒரே ஒரு தடவ பெருமாளப் பார்த்துட்டு வந்துடறேன் ஒரே ஒரு தடவை.' அவர் குரலில் கெஞ்சலும் விழிகளில் அபரிமிதமான ஏக்கமும் இருந்தது.

பூசாரி மாவுளியைப் பயத்தோடுப் பார்த்தார். நான் எப்படி திருடன் போல சேரிக்குள்ளாற உன்னப் பாக்க வந்தேனோ அதே மாதிரி நீயும் திருட்டுத்தனமா பெருமாளைப் போய்ப் பார்த்துட்டு வந்துரு என்பது போல இருந்தது அந்த பார்வை.

பெருத்த மௌனம் நிலவியது. அப்பா நோயாளியின் மணிக் கட்டைப் பிடித்து நாடி பார்த்தார்.

இளம் பூசாரி முணங்க ஆரம்பித்தான். எங்கோ முன்னதாகவே விழித்துக்கொண்டே சேவல் கூவியது. பூசாரிக்கு ஆச்சரியம் தாங்க முடியாமல் கேவியழுதார்.

எண்ணெய் விளக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த வைத்தியன் பூசாரிக்குப் பெருமாள் போலவே தெரிந்தான்.

'அங்க போய் என்னத்தடா பாக்க போற அது வெறும் கல்லுடா. ஏதோ வயித்துப் பொழப்புக்காக ஓடிக்கிட்டிருக்கேன். நீதாண்டா... எம்புள்ளய காப்பாத்திட்ட...'' அதற்குமேல் முணுமுணுப்பு கூட வர மறுத்தது, பூசாரி நடுங்கினார்.

நோயாளியின் முனங்கல் சத்தமாகக் கேட்கத் தொடங்கியது.

உடலை முறுக்கினான்.

அப்பா வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். யாருக்கும் புரியாத வார்த்தைகளும் பல விதமான சுலோகங்களும். இடைமுறிவுகளோடு வார்த்தைகள் வந்து விழுந்தது பூசாரி களுக்கான தொழில் மொழியில், உடல் வேகமாக குலுங் யாடியது. அந்த வார்த்தைகளைப் போலவே கருப்பர் வேண்டாத கழிவுகளும் வெளியே வந்து விழுந்தது. கும்ட பெருங்குமட்டலாய் வந்து எல்லாம் வெளியே வந்து விழுந்த விஷம் போன்ற கழிவுகள். மெலிந்து சுருங்கிப்போய்க் கிடந்த வயிறு மேலும் தட்டையாய் ஒட்டி நெஞ்சுக் கூடு விரிந்து வயிற்றில் இருந்த கடைசி ஈரமும் வெளியே வந்து விழுந்தது வைத்தியர் எல்லாவற்றையும் வழித்தெடுத்துக் கொண்டு போய் வெளியே வீசியெறிந்து விட்டு வந்தார்.

மண் பாத்திரத்தில் தெளிந்த நீர் இருந்தது. அதை முகத்தில் அள்ளித் தெளித்து உதட்டில் சிறு தாரையாக மெதுவாக ஊற்றினார். மொத்தமும் வாய்க்குள் போனது. மண் பாத்திரத்தில் விதைகளும் வேர் தண்டுகளும் மிஞ்சி அடியில் தங்கிவிட்டது.

நோயாளி மூச்சு விடுவது நன்றாகத் தெரிந்தது. பூசாரிக்குக் குழந்தை பிழைத்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்துவிட்டது.

கண்கள் கலங்க பரவசமான நிலையில் பூசாரி வைத்தியனைப் பார்த்தார். பெருமாள் சிலைக்கு முன்பாகச் சில சமயங்களில் இப்படித்தான் உணர்ச்சி வசப்பட்டு நிற்பார். அதேநிலையில் இப்போது மாவுளி முன்பு நின்றார். அவரது துக்கம் போய் இப்போது கிடைத்த பேரின்பத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியாது தவித்தார்.

பரிகாரமா உனக்கு என்ன வேணும் என்பது போலப் பார்த்தார்.

அந்தப் பெருமாள் கோயில் வந்த காலத்துல இருந்து இன்னி வரைக்கும் என் பாட்டன் முப்பாட்டன் பாக்காத பெருமாளை நான் பாக்கணும் உன்ன மாதிரியே நானும் அதத் தொட்டு வணங்கணும் என்று பார்வையாலே பதில் சொன்னார்.

"இனி ஆபத்தில்ல. நோய் களைப்பு போய் ரெண்டொரு நாள்ல சாமி எழுந்துக்கும்' என்றவர் நோயாளியைத் தூக்கிக் கொண்டு குடிசைக்கு வெளியே வந்து பூசாரியிடம் கொடுத்தார். சூடு பரவியிருந்த உடலைத் திருப்தியோடு சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு பூசாரி இருளைக் கடந்து போய்

மறைந்தார். நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டது. பொழுது புலர இன்னும் நேரம் இருந்தது. பொழுது புலரும் வரை நரிகளின் ஊளையிடும் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருக்கும்.

மூலிகை தேடிப் போகாத நாட்களில் புளியமரத்துக்குப் பின்பாகவும், புளியமரத்தை விடவும் உயரமாகவும், இருக்கும் பாறையில் ஏரி உட்கார்ந்து கொள்வார். அங்கிருந்து பெருமாள் கோயில் நன்றாகத் தெரிந்தது. கோயிலை உற்றுப்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார். வழுக்கைக்குக் கீழாகப் பெரிய படர்ந்த நெற்றியில் நாமம் வரைந்திருப்பார். அம்மா வேளா வேலைக்கு எதாவது கொண்டு போய்க் கொடுத்து விட்டு எச்சில் பாத்திரங்களோடு கீழ் எறங்கிடுவாங்க.

அம்மாவிடம் அவர் அதிகமாகப் பேசுவதில்லை திடீர் திடீர்னு இப்படி மௌனத்தில் இருக்கும் மனிதரிடம் என்ன பேசுவது

ஒரு நாள் மாலைப்பொழுது ஊர்க் கால்நடைகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. அவர் பாறையில் இருந்து இறங்கி கோயிலுக்குப் போகும் பாதையில் வேகமாக நடந்தார். அவரையே பார்த்துக் கொண்டும் கண்காணிப்போடு இருக்கும் அம்மாவுக்குப் புரளியை உண்டு பண்ணியது.

'தே. தே... நில்லு... ஐயா.. ஐயா... நில்லு தே..'' என்று சன்னமான குரல் கூவியழைத்துக் கொண்டு பின்னாலே ஓடினாள். அவர் திரும்பிப் பார்ப்பதாய் இல்லை. அம்மாவின் புலம்பல் கேட்டு பையன்களோடு விளையாடிக் கொண்டிருந்த நானும் அம்மாவின் பின் ஓடுகிறேன்.

''எப்பா. நில்லு... எப்பா நில்லு''

'ஐயா. அது நாம் போற பாதையில்லையே ஊராளுங்கப் பாத்தா கலவரம் தான் என்று தோன்றியது அம்மாவுக்கு அதற்கு மேல் பின் தொடர தெம்பு இல்லை. பாதையிலேயே உட்கார்ந்து கொண்டு பரிதாபமாக அழுது புலம்பினாள். இருட்டிவிட்டது.

''உங்க அப்பாவுக்குப் பெருமாளப் பாக்கத் துடிக்குது. நம்மல போல சனங்களுக்குச் சாமி கண்ணத் தொறந்தாலும் சாதி சன வுடுமா.. என்ன பன்னாங்களோ.. சாமிய'' என்று கதறியழுதாள்.

எதுவும் புரியாத வயது அம்மாவப் பாத்து அழ மட்டும் தான் முடிஞ்சது.

நல்லா இருட்டி விட்டது. தூரத்தில் கெட்ட கெட்ட வசவுகள், யாரையோ அடிக்கும் ஓசை, இழிந்த வார்த்தைகள், அம்மா

எழுந்து இருளில் ஆழ்ந்து பார்ப்பது தெரிந்தது.

யாரோ இரண்டு பேர் கைகால் கட்டிய மனிதனை விலங்கு போல கழியில் கோர்த்துக் கொண்டு வந்து ஊருக்கு வெளியே தொபீர் எனப் போட்டுவிட்டு அவர் மீது காறி உமிழ்ந்து விட்டு போனார்கள். தூக்கி வந்த கழியைக்கூடத் தூக்கிப் புதரில் வீசியெறிந்தார்கள். காது கொடுத்துக் கேட்க முடியாதபடி வசவுகள். ஆடையின்றி நிலத்தில் வலியால் நெளித்து கொண்டிருக்கும் அப்பாவைப் பார்க்கும்போது ஓரளவு புற்று. அவங்களுக்குப் பிடிக்காத எதையோ செய்ய முயற்சி பண்றார். உடம்பெல்லாம் கல்லடியும் தடியடியும் பலத்த காயங்களை உண்டாக்கியிருந்தது. சாமி சாமி என்று வாய் முணுமுணுத்தது. கோயிலுக்குள் நுழைந்து அந்தக் கடவுளைப் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் இப்போது வலுத்து விட்டது.

அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று பேசிக் கொண்டார்கள்.

பூசாரி குடிசைக்கு வந்து போனதில் இருந்து அவரது எண்ணம் இன்னும் வலுத்து விட்டது.

அவரே தனக்கு வைத்தியம் பார்த்துக் கொண்டார். காயங்கள் ஆறி உடம்பு தேறியது. மீண்டும் பாறைமீது ஏறி உட்கார்ந்து கொண்டு கோயிலை வெறித்துப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்.

வைத்தியரைத் தேடி யாராவது வந்தால் கீழே இறங்கி வந்து வைத்தியம் முடிந்ததும் மேலே போய் உட்கார்ந்துக் கொள்வார்.

இனி அவன் அந்தப் பக்கம் காலை வைக்கட்டும். அவன வெட்டிப் பலி போட்டுட்டோம் என்று காது படவே சொன்னது அம்மாவுக்கு பயத்தைத் தந்தது. அம்மாவின் கண்காணிப்பையும் மீறி பாறையில் உட்கார்ந்திருந்த மனுசன் ஒரு நாள் காணாமல் போனார். சாமி சாமி என்று அம்மா எங்கெல்லாமோ தேடினாங்க. சனங்கள் ஆளுக்கொரு மூலையா காலனியே சேந்து தேடுது. கிராமத்துக்கு வெகு தொலைவுல அவரது உயிரற்ற உடல் தான் கிடைத்தது. கோபால் துடித்துப்போய் ஓவென்று அழுதார். அவர் சின்னப் பையனாய் இருந்த போது நடந்தது கொடுமை யான அது அவரது நெஞ்சில் வன்மையாய்ப் பதிந்துவிட்டது.

தெளிவான காட்சிகளால் ஓடிய கொடுமையான கடந்த காலத்தை நினைத்து அவருக்குக் கோபமாய் வந்தது. வெகு நேரம் வரை தூக்கம் வராமல் புரண்டார். பிறகு எதிரே சிறு

கல்மீது உறங்கும் தன் தம்பியைப் பார்த்தார். இருளில் மங்கலாக பாவாடை படுத்திருப்பது தெரிந்தது. அவனைப் பார்த்தால் அப்பாவைப் பார்ப்பது போலவே இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டார். பிறகு கலவரமான மனதுடன் தூங்கிப்போனார்.

⊙⊙⊙

விடிந்தபோது பாவாடை ஆடுகளுடன் கிளம்பி விட்டான். ஏரியில் நீந்த வாத்துகளை ஓட்டிச் சென்றார்கள். கால் நடைகள் குடிசையின் விளிப்புகளை உரசிக்கொண்டு சென்றன. கிராமம் உயிர்ப்போடு இயங்க ஆரம்பித்துவிட்டது என்பதற்கு அறிகுறியாகப் பலவிதப் பறவைகள் தங்களுக்குள் காதலைத் தெரிவித்துக் கொண்டு கீறிச்சிட்டு குதூகலித்துப் பறந்து திரிந். ஏரியில் குளித்து விட்டு காக்கைகள் புளிய மரத்தில் உட்கார இளைப்பாறின. மரங்கொத்தி ஒன்று தன் வேலையை ஆரம்பிக் விட்டது. காலைப்பொழுது எப்போதுமே பறவைகளின் உலகமாகி விடுகிறது. அவைகளுக்குச் சாதி பேதமோ, நிம் பேதமோ, பணப் பேதமோ கிடையாது. குடிசைக்கு மேல் ஒரு சேவல் சத்தமிட்டுக் கூவியது, சேவல் கூவி பொழுது புலர்ந்ததா பொழுது புலர்ந்தபின் சேவல் கூவியதா இப்படியும் நடந்தது சில சமயங்களில் அப்படியும் நடந்தது.

மாமியாரும் மருமகளும் சேர்ந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள், குடிசைக்கு எதிர்ப்புறத்தில் இருந்த வேப்பு, புளிய மரங்களின் உதிர்ந்த சருகுகளும் வைக்கோலும் கூலமாய்க் கிடந்தது. நாகம்மாள் அதையெல்லாம் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

அம்மாவுக்கு அந்த இடத்தை சமப்படுத்தி ஏதாவது காய்கறித் தோட்டம் போட எண்ணம். அவளுக்கு நேரம் ஒழியவில்லை தரை மேடு தட்டி பெரிய பெரிய உருண்டைக் கற்கள் கிடந்தன. அதையெல்லாம் புரட்டி வேறிடத்தில் போட்டால் நல்லா யிருக்குமே என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

அம்மா நினைத்தது போலவே நாகம்மாளுக்கும் எண்ணம் தோன்றியது அவள் ஒத்தையாளாகவே பாறைகளைக் கடப் பாறையால் நெம்பினாள். அதைப் பார்த்த முருவன் உதவிக்கு வந்தார். ஐந்து சென்ட் தேறும் நிலத்தில் பகலெல்லாம் உழைத்துக் கொண்டிருப்பாள்.

கோபால் தன் சிறுவயது நண்பர்களுடன் கள்ளு குடிக்கப்

போய்விடுவார். மாலைப்பொழுதில் போதையில் வருவார்.

நிலம் காய், கீரைகளை விதைக்க ஏற்றதாய் இருந்தது. மாமியார் வாங்கி வந்த தக்காளி கத்திரி நாற்றுகளை அவளே பாத்திப்பிடித்து கத்தரி ஒரு பக்கமாகவும் தக்காளி மறுபக்க மாகவும் நட்டாள்.

மாமியாருக்கு ஆச்சரியமாய் இருந்தது. பட்டணத்துக்கான என்னமோ ஏதோ என்றிருந்தவருக்குக் கத்தரி நாற்றுகளை நடவு செய்து கொண்டிருந்தவளைச் சாப்பிட அழைத்தார்.

அவளுக்கும் பசித்தது, அம்மாக் கூப்பிட்டதும் மறுப்பு இல்லாமல் வியர்வையை முந்தானையில் துடைத்துக்கொண்டு குடிசைக்கு வந்தாள்.

கம்புக் கூழின் புளித்த வாடை வீசியது. குடிசைக்குள் உட்கார்ந்து கொண்டு அம்மா கரைத்துக் கொண்டிருந்தாள். ரவிக்கையில்லாத அந்த உடல் வதங்கி குச்சி போல் இருந்தது. கண்கள் மட்டும் என்னமாய் ஒளி வீசுது. அவளோட வயசு கிழடுங்களுக்குப் பார்வை மங்கிவிட்டதாம். அவள் உழைச்சி... உழைச்சி ஓடாய்ப் போகவில்லை வைரம் பாய்ந்து உறுதியாக இருந்தாள்.

கம்பு கூழ் ஆனந்தமாக உள்ளே இறங்கியது. அவசரத்தில் புரையேறியது அம்மா மார்பைத் தடவி விட்டாள் ''மொல்லடி யம்மா...' அம்மா நிதானப் படுத்தினாள்.

''கொழந்த, அப்பன் ஆயில்லாம் பட்டணத்துல தானே இருக்காங்க?''

இல்ல, அவள் குழந்தை போல தலையாட்டினாள். ''ஆத்தால் நான் பாத்ததுகூட இல்ல நாள் சமையறதுக்கு முந்தியே அப்பனும் போச்சு'' கையை விரித்தாள். குழந்தைகளினுடையது போன்ற கண்கள் கலங்கி கண்ணீர் மளமளவெனக் கொட்டியது.

'எல்லாமே எனக்கு அண்ணன்தான்''

''சரி... குடி குடி தாயி உனக்கு ஒரு கொறவும் வராது... குடி'' அம்மா ஆறுதலாய்ப் பேசினார். அம்மாவிற்குச் சீமைக்குப் பஞ்சம் பொழைக்கப் போன பொன்னியம்மாள் நினைவுக்கு வந்தாள். அது அங்கக் கெடந்து என்ன வதைபடுதோ யாரு கண்டது அம்மா வற்றியுலர்ந்த நெஞ்சைப் பற்றிக்கொண்டாள் தன் கண்களை மூடியபடி.

உன் நெஞ்சிலும் ரணம் என் நெஞ்சிலும் ரணம். ரணம் இல்லாத நெஞ்சே பூமியில கெடையாதா சாமி. அம்மா தனக்குத் தானே

கேட்டுக் கொண்டாள்.

''என் நெஞ்சுக்குள்ள இருக்கறத நா கொட்ட ஆரம்பிச்சா'' என்று அம்மா கையை அகலமா விரிச்சிக் காண்பிச்சா 'எம்மா வெவரமான நாள்ல இருந்து இன்ன வரைக்கும் துயரத்தையும் துன்பத்தையும் தவிர வேற ஒன்னும் காணலயே'... ஒடுங்கியக் குரலில் வார்த்தை தெளிவாக வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். பிறகு அவளே 'எனக்கு ஒரு நிம்மதின்னா அது எம் புள்ளைங்க தான்' என்றாள்.

''அவளைப் பாக்க உன்ன மாதிரியேதான் இருப்பா. பஞ்ச காலத்துல எவனோ சொன்னான்னு பொழப்பு தேடி சீமைக்குப் போனாங்க என்னாச்சோ.'' அம்மா மார்பில் வேகமாக அறைந்து கொண்டாள். அப்போதும் உதிரவில்லை அவள் துயரம் உதிரம் அற்ற விழியில் கண்ணீர் பெருகியது தாயும் மகளுமாய் உணர்ச், இருவரும் பேச்சற்று மன அமைதியோடு குடித்து முடித்தார்கள் யாரோ வாசலில் வந்து நிற்பது போல் இருக்கவே நாகம்மாள் எட்டிப் பார்த்தாள். வந்தவர் முன் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'அத்தயாருஅதுதிண்ணையிலஇருக்காங்க'' என்று குசுகுசுவெனக் கேட்டாள்.

அம்மா எட்டிப் பார்த்தாள்.

''நம்ப வாத்தியார் வந்திருக்காங்க'' சொல்லிக்கொண்டே அம்மா விசுக்கென்று தலையை இழுத்துக் கொண்டு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு வெளியே போனாள் கும்பிடுறேனுங்க'' அம்மா வணக்கம் சொன்னாள்.

எங்கோ கவனத்தில் இருந்தவர் குரல் கேட்டு எழுந்து வணக்கம் சொல்லி விட்டு உட்கார்ந்தார்.

''அம்மா குடிக்கத் தண்ணியும் எதாவது ஆகாரமும் கொண்டாங்க'' உறுதியாகவும் உரிமையாகவும் வந்தது வார்த்தை.

அம்மா என்ற அவரது வார்த்தை எந்தப் போலித்தனமுமற்ற சுத்தமான ஓசையது நெஞ்சில் இருந்து வந்த தூய்மையான குரல் அந்தக் குரல் அம்மாவை உலுக்கியெடுத்தது.

அம்மா குடிசைக்குள் ஓடினாள். வேகவேகமாய்ச் சுத்தமான மொந்தையில் தண்ணீர் கொண்டு வந்தவள் அவருக்குப் பக்கத்தில் அதை வைத்து விட்டு மீண்டும் குடிசைக்குள் ஓடி கம்பங்கூழைக் குடிக்கும் பதத்துக்குக் கரைத்துக் கொண்டிருந்தாள்.

புதிதாக வெட்டிய கிராப்பும் கடுக்கன் போடக் குத்திய காதுமாய் புளியமரத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் வந்தவர். பிறகு, ஆண்மையோடு தனது மீசையை முறுக்கியபடி பசி களைப்பிலும் நேராக நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அம்மா சிறு மொந்தையில் கரைத்தக் கூழை கொண்டு வந்து தண்ணீருக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுத் தன் சொந்த மகனைப் போல பாசத்தோடு அவரைப் பார்த்துக் கொண்டு அமைதியாக நின்றாள்.

இதையெல்லாம் வியப்பாகப் பார்த்துக் கொண்டு குழப்ப மடைந்தவளாக உட்கார்ந்திருந்தாள் நாகம்மாள்.

'அம்மா எத்தனை முறை சொல்றது எதாவது சாப்பிடக் கொடுத்தா கையிலக் கொடுக்கணும். இப்படித் தூரமா வச்சிட்டுப் போனா என்ன அர்த்தம். எனக்கு ஆகாரம் கொடுக்கப் பிடிக்கலையா?'' என்று உரிமையோடு கேட்டார்.

''பழகிப் போச்சி சாமி.'' அம்மாவின் குரல் உடைந்து போய் வந்தது.

''பழக்கத்த மாத்தணும். தாயி. இந்த மதிகெட்ட வழக்கமெல்லாம் மண்மூடிப் போகணும்'' அவரது குரல் காலத்தின் குரல் போல வந்தது.

'எடுத்துக் குடுங்க அம்மா'' கையை நீட்டினார், தாயிடம் பிள்ளை ஏந்துவது போல. அம்மா நீர் மொந்தையை எடுத்துக் கொடுத்தாள். அவளது பாசத்தைப் போல இனிமையும் குளிர்ச்சியு மாய் இருந்தது நீர். வாய், முகம் கழுவி அதிலே மீதியைக் குடித்து காலி மொந்தையை அம்மாவிடம் கொடுத்தார்.

அம்மா அடுத்து கூழ் மொந்தையை எடுத்துக் கொடுத்தாள். அவர் ஆவலாய் வாங்கி ஒருமுறை அதை உற்றுப் பார்த்து அதன் மணத்தை முகர்ந்தார். அதன் புளித்த மணம் அவரைக் கிளர்ச்சி யடைய செய்தது. கூழை ஆர்வம் பொங்கக் குடித்து அம்மா உரித்து வைத்திருந்த வெங்காயத் துண்டை மென்று அதன் காரமுள்ள சாறின் நெடியில் மொந்தையைக் காலி செய்துவிட்டு உண்ட இன்பத்தைக் கண்கள் மூடி ரசித்தார்.

காலி மொந்தையை அம்மாவிடம் கொடுத்து விட்டுக் கை கூப்பினார்.

அம்மா அதை விரும்பாமல் கூசினாள்.

''நெறைய வேலை இருக்கு அம்மா'' கையை அகலமாய் விரித்துக் காட்டினார்.

''வெள்ளைக்காரன் நம்ம நாட்ட விட்டு ஓடப் போறான். அது ஒண்ணும் பெரிசு இல்ல தாயி நம்ம சனங்களுக்கு கல்வி வேணும். கல்வி இல்லனா இந்த கணவாய்ப் பேய்களும் பணப்பேய்களும் அவங்க மேல உக்காந்து சவாரி பண்ணதான் விரும்பும். அப்புறம்... சனங்க அந்த வெள்ளைக்காரனே மேல் என்று நினைக்க ஆரம்பிச்சுடுவாங்க இல்ல.'

அம்மாவைப் பார்த்துக் கேள்விபோலக் கேட்டு விட்டு அவளது முகத்தைப் பார்த்தார்.

''பட்டதுன்பம் போதும் அவங்களுக்கு உள்ளூர் வெள்ளையனிடம் இருந்து விடுதலை வேண்டும் சரியா?'' என்று மீன் அம்மாவைப் பார்த்துக் கேட்டார்.

அம்மா திருதிருவென விழித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்து அவர் கடகடவென உடல் குலுங்கச் சிரித்தார். புளிச்ச ஏப்பம் ஒன்று பெரிதாய் வெளிப்பட்டது திருப்தியோ, வயிற்றைத் தடவிக் கொண்டார். அவர் எப்ப எதப் பேசுவார்னே தெரியாது. திடீர் தொடங்கி சரசரமான தோரணம் போல வார்த்தைகளைக் கொட்டுவார். பொய் இல்லாத கபடமற்ற வார்த்தைகள்.

பிறகு தூரமாய் கை நீட்டி ''தோட்டம் போடுறீங்களா நல்லது அங்க அவரையும், புடலையும் நல்லா வரும். நல்ல வாழைகூட அங்க வைக்கலாம். நல்ல விதை கெடைச்சாக் கொண்டு வர்றேன்'' என்று அம்மாவிடம் சிறுவனைப் போல கொஞ்சலோடு சொன்னார்.

''பாவாடையக் கேட்டதா சொல்லுங்க, நேற்று என்னைப் பார்த்தும் பார்க்காதது போல் போய்விட்டான் நல்லவன்.'' என்றவர், இடைநிறுத்தம் போல் பேச்சை நிறுத்தினார். என்ன நினைத்தாரோ நான் போய் வருகிறேன் என்று புறப்பட்டார்.

அவரது மனம் பலமான யோசனையில் இருந்தது. பாவாடை அவரிடம் வேதனையோடு தன் அப்பாவைப் பற்றிச் சொன்னது அவர் நினைவுக்கு வந்தது. கோவிலுக்குப் போக நினைத்த தந்தையை அடித்துக் கொன்றுப் போட்டார்களாமே. எந்த மாதிரியான கடவுளை இவர்கள் வணங்குகிறார்களோ அவர்களது சுய நலத்துக்கு ஏற்றபடி கடவுளை வடிவமைத்து வைத்திருக்

கிறார்கள். என்னையும் அவர்களைப் போன்றே மிருக உணர்ச்சி யுள்ளவன் என்று நினைத்து விட்டானோ என்னவோ நேற்று என்னைப் பார்த்தும் பார்க்காதவன் போல போய்விட்டானே கவலையோடு நினைத்துக் கொண்டார்.

விரைவில் இவர்களுக்குக் கல்வி தரவேண்டும். தடை செய்ய யாருக்கும் அதிகாரம் கிடையாது. ஏற்கனவே கிறிஸ்துவ மெஷ னரிகள் வேலையைத் தொடங்கிவிட்டது. நாமும் ஆரம்பிக்க வேண்டும். உதவிக்காகப் பேராசிரியர் சாமுவேலுக்குக் கடிதம் எழுத வேண்டும் முடிந்தால் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்துக் கொண்டார்.

வர்ணாஸ்ரம முறை இந்தத் தேசத்தைப் புற்றுநோய்போல் தச் சீரழித்துச் சாகும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. கலாசாரம், பண்பாடு என்று தன் கோரப் பற்களை அரிதாரம் பூசி மறைத்துக்கொண்டு சாது போல் வேடமிட்டு நிற்கிறது.

எரிகிற வீட்டில் உருவிய வரை லாபம் என்று வருபவன் போகிறவன்எல்லாம்ஒருகட்டையாகஉருவிஇங்குமிச்சமில்லாமல் கொள்ளையடிக்கப் பட்டுவிட்டது. மிஞ்சியுள்ளதையும் சாதி என்ற பெயரில் தங்கள் தலைகளில் வளர்ந்துள்ள கொம்புகளைக் காட்டியும், உறையிடப்பட்ட கத்திகளைக் பாட்டியும், பூண் போட்ட தடிகளைக் காட்டியும், நொறுங்கிய கூழாங்கற்கள் கட்டிய சாட்டைகளைக் காட்டியும், பெரும்பாலான உழைக்கும் மக்களை ஒன்றுமில்லாதவர்களாக்கி ஒரு அடிமை தன்னை அடிமை யென்று தெரிந்துக் கொள்ளாதபடி கல்வியும், ஏன் என்று கேள்வி கேட்பதைகூட தடை செய்து மனிதனை விலங்கு போலாக்கிவிட்ட இந்தக் கணவாய்ப் பேய்களையும், கொம்பு முளைத்த தடியேந்திய கொள்ளைக்காரப் பேய்களையும் ஒழிக்க வேண்டுமானால், இவர்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி கிடைத்து விட்டால் சாதியும், அதன் தத்துவங்களும், அதன் மூலங்களும், வாலைச் சுருட்டிக்கொண்டு ஆண்மையற்றுத் திரிந்து இழிவான முறையில் இறுதியாக உறுதியாக இல்லாமலே போகும்.

வீரம், உழைப்பு, சிந்தனை, எதிலுமே சளைக்காத மனிதர்கள் இவர்கள். இவர்களைச் சுற்றி காலங்காலமாக வேல் கம்புகள், சாட்டை, சாணிப்பால், காமக் கொடூரக் கோமாளிகள் சுற்றி நின்று அச்சுறுத்தி இவர்களை ஒன்றுமில்லாத மனிதர்களாக்கி விட்டார்கள். கொடுமைதான். இவர்களைப் பலவிதங்களிலும்

சூறையாடியும். இந்த மனிதர்கள் மனிதர்களாகவே இருக்கிறார்கள். இவர்களின் இதயத்தில் காயம் இருக்கிறதுதான். ஆனால், அதில் அன்பு ஊற்று வற்றாமல் தான் இருக்கிறது. அது தான் அவர்களை மேலும் அடிமையாகவே வைத்திருக்கிறது. அவர்கள் தங்கள் விலங்கை உடைத்தெறிய நானும் எதையாவது செய்ய வேண்டும். அதில்தான் எனது விமோசனமே இருக்கிறது என்று அவர் மனதுக்குள்ளாக நினைத்துக் கொண்டார். தணியாத தாகத்துடன் தணல் போன்ற நெஞ்சுடன் பலவிதமான அனல் வீசும் சிந்தனையுடன் குடிசைகளுக்கப்பால் கடந்து மறைந்துப் போனார். ஆனாலும் அவரது தன்னைத்தானே விமர்சனம் செய்து கொண்டிருந்தது.

சாதியைச் சுமந்து கொண்டிருக்கும் வரை நான், பண்புகளோடு இருக்க வாய்ப்பில்லை. அதனால் நான் மனிதனுமில்லை, காலம் முழுக்கப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்பாகத் திரும்பிப் பார்க்கிறேன்.

பிராமணனாய் இருக்கலாம், சத்திரியனாக இருக்கலாம் வைஷ்யனாக இருக்கலாம், மனிதனாக இருந்தானா என்ற கேள்வியின்போது வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான். காலமும், அதன் வரலாறும், அதைத்தான் சொல்கிறது. சின்னஞ்சிறு கூட்டம் மாபெரும் பெருங்கூட்டத்தை அதன் உழைப்பைத் திருட அந்தப் பெருங்கூட்டத்தின் மேல் அதிகாரி, செலுத்த எத்துனைக் கொடூரமான வழிகள். யுத்தத்தின்போது, எதிரிகளைக்கூட கண்ணியத்தோடு நடத்த விதிகள் உண்டு. ஆனால், இந்தப் பெருங் கூட்டத்தை இந்த மண்ணின் ஆதி மனிதர்களின் உழைப்பைச் சிந்தாமல் சிதறாமல் திருடிக் கொள்ள எவ்வளவு கொடுமையான வழிமுறைகள்.

சாட்டையடி, சாணிப்பால், உறுப்பை வெட்டுறது, கொலை, கற்பழிப்பு, நிர்வாணமாக்குறது, சித்ரவதைகள், தொட்டா தீட்டு, பார்த்தாத் தீட்டு, கேட்டாத் தீட்டு, எதிரே ஆண்டைகளைப் பார்த்தால் போய் ஒளிந்து கொள்ளணும், இல்லன்னா குப்புற விழுந்து கிடக்கணும். இதெல்லாம் எந்தக் கடவுளின் நியாயம், அறிவாளிகளே?!

அவனது ரத்தமும் வியர்வையும் உங்களது தொப்பையில் கொழுப்புக் கட்டிகளாய் வளர்ந்து குலுங்குவதைத் தடவிப் பாருங்கள். விரதம் இருந்து அதைக் கரைக்க முயலும் தந்திரக்

காரர்களே!

அவனைத் தொட்டால் தீட்டு என்று உரக்கக் கூவி அழுத்தமாக எழுதி வைத்த உங்கள் கைகளால் அவனைப் பல விதங்களிலும் கட்டி வைத்துவிட்டு மீசையை முறுக்கிக் கொண்டு அவனது பெண்களைப் புணரும்போதும் அவர்களது முலைகளைப் பிய்த்தெறிந்தபோதும் அவர்கள் அலறித் துடித்து உங்கள் தோளில் இருந்து இடுப்பு வரை ஓடும் நூலை அறுத்தெறிந்து உங்கள் மீது காரி உமிழ்ந்தபோதும் உங்க தீண்டாமைக் கட்டுக்கதைகள் எங்கே போனது?

அவர்களது வியர்வையும் ரத்தமும் உனது உணவுத் தட்டி இருக்கிறது உற்றுப் பார். நீ ஆசாரத்தோடு அதில் நீர் தெளித்தாலும் அது மாறப் போவதில்லை. அவன் கண்ணீரும் வியர்வையும் உப்பு... உப்பு.

வெள்ளையன் அடிமைப்படுத்தினான். விஷயம் அதில் இல்லை. உன்னிடம் இருந்து கருப்பனுக்கு விடுதலை தர காலம் அவனைக் கடல் கடந்து ஏவியது. அதனாலேதான் அம்பேத்கரும், சாமுவேலும் உதித்திருக்கிறார்கள். உன் சாட்டையும், சாணிப் பாலும் உன் கல்லறைக் குழியில் உன்னோடு வைக்கப்படும் போ.. போ... சாத்தானே தூர விலகிப் போ. அவர் உள்ளம் பெருங் குரலெடுத்துக் கத்தியது. காலத்தின் குரல் போல புது யுகத்தின் குரல் போல.

அம்மா கண்கள் கலங்கிப்போய் அவரையே பார்த்தபடி நின்றிருந்தாள். குடிசைகளுக்கு அப்பால் அவர் மறைந்து போனாலும் அவரது மனம் அவரைத் தன் சொந்த மகனைப்போல நினைத்தது.

இந்த மாதிரி மனுசங்களால் தான் இன்னமும் பூமி உசுரோட இருக்குதோ என்னமோ என்று நினைத்துக் கொண்டாள்.

"யாரு அத்த அவங்க" என்று ஆச்சரியமாய்க் கேட்டாள் நாகம்மாள்.

"என்னன்னு சொல்றது உண்மை எது பொய் எதுன்னு நமக்குத் தெரியுதா என்ன. ஆளுக்கு ஒன்னாப் பேசுறாங்க என்னத்த சொல்ல. புத்திச் சுவாதீனம் இல்லாம ரொம்ப தொலைவுல இருந்து இங்க வந்துட்டாருன்னு சனங்க பேசிக்கறாங்க. அவரப் பாத்தா அப்படியாத் தெரியுது?" மருமகளைப் பார்த்துக் கேட்டாள் அம்மா.

"சீமை பாஷையில் இருந்து எல்லாக் கல்வியும் தெரிஞ்சு வச்சிருக்கிறாரு என்னமோ அவரப் பத்தின விசயம் மர்மமா தான் இருக்குது" என்றவள் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தாள். பிறகு சனத்துக்கு ஒன்ன கூட்டி பத்து பேசத் தெரியுமே தவிர வேற யோசனை ஏது? நல்ல புத்தியுள்ளவர் மாதிரியில்ல படுது அவரப் பாத்தா.

நம்ம பாவாடைக்கு அவரோட நல்ல பழக்கம், ஒரு நாள் சூரியன் கௌம்பற நேரத்துல பாறை உச்சிக்குப் போய் ஒக்காந்தவங்க எம்மா இருட்டின பொறவுதான் கீழ எறங்குனாங்க அப்படி என்னதான் பேசியிருப்பாங்களோ" என்று அம்மா முகவாயில் கைவைத்துக்கொண்டு மருமகளைப் பார்த்தாள்.

அம்மாவின் கண்களில் ஆச்சரியம் தெரிந்தது. நல்லா ஒசரமா வாசல் வச்சுக் கட்டுங்க என்று புத்தி சொல்றார். வழக்கமா அப்படி கட்டினா, மறுநாளே கொளுத்திடுவாங்க, இப்ப இவர் வந்து.

கட்டுங்க யார் கொளுத்தறாங்கன்னு பார்க்கலாம்னு சொல்றார்.

சின்னப் புள்ளைங்களுக்குப் பாடம் சொல்லித் தர்றார். ஒண்ணு ரெண்டு புள்ளைங்க வாசிக்கத் அவர் வந்தப் பொறவுதானே.

திடீர்னு ஒரு நாள் எல்லாரையும் கூப்புட்டுப் பேச ஆரம்பிச்சார். "எம்மா... சனங்க சிரிப்பாச் சிரிக்குதுங்க, பேசறார் பேசறார்ஞ் எல்லா சனங்களும் ஒக்காந்துருச்சி. புத்தி வராமாதிரி புதுப் புதுக் கதையா சொல்றார். திடீர்னு ஒரு நாள் காணாமப் போறார், அவரோட சங்கதி ஒண்ணுமே புரியமாட்டேன்னுது." அவரைப் பற்றி அம்மா நிறைய விஷயங்களைச் சொல்லிக்கொண்டே போனாள்.

ஆனால், அந்த சனங்களுக்குத் தெரியாத வேறு ஒரு கதையும் இருக்கத்தான் செய்தது. அதையும் நாம் பார்க்கத்தான் போகிறோம்.

ஆனாலும் அவரது இப்போதைய நடத்தை மக்களுக்கு அவர் மேல் நல்ல மரியாதையை ஏற்படுத்தியிருந்தது. திடீர்னு யாருடைய வயலிலாவது இறங்கி யோசனை சொல்லுவார். சமயத்துல அவங்களோடு சேர்ந்து வேலையும் செய்வார். ஏரிக்கரை, குளக்கரை, வயல்காடு இப்படி. எங்கயாவது திடீர்னு வந்து சனங்கக்கிட்ட பேசிக்கொண்டிருப்பார். அவங்களோட சேர்த்து வேலை செய்வார், கல்வியப் போதிக்கும் மனுசன் என்று மட்டும் மக்களுக்கு அவரைப் பற்றிய எண்ணமிருந்தது. ஆனால், அவர் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்.

ஒசந்த சாதி, தாழ்ந்த சாதின்னு எதுவுமே கெடையாது. எல்லாம் சுரண்டிப் பிழைக்கறதுக்கான ஏமாத்து வேலை என்று அடிக்கடி சொல்லுவார். இதனால் ஊர் சனங்களுக்கு அவரைப் பிடிக்கவில்லை. அவர் எப்போதும் காலனி சனங்களுடனேதான் இருந்தார். அவரப் புத்தி பேதலிச்சவன்னு சொல்றது ஊர் சனங்கதான். நெசத்த சொல்றாரே!

ஒரு முறை அங்கிருந்து பெருமாள்கோயிலைப் பார்க்க சில வெள்ளையர்கள் வந்து இருந்தார்கள். ஊர்க்காரர்கள் யாரும் அவர்களை வரவேற்க வரவில்லை. காரணம், அவர்கள் மாட்டுக்கறி தின்பவர்கள் என்பதால்தான் அதைவிட முக்கிய காரணம் அவர்களுடன் வந்த இருவர் படித்த பறையர்கள் என்பதும் ஒரு காரணமாம்.

வெள்ளையர்கள் கோயிலுக்குப் போனால் தீட்டு என்பதால் அவர்கள் கோயிலுக்குப் போவதை ஊர்க்காரர்கள் விரும்பவில்லை. ஆனால், அவர்களைத் தடுத்து நிறுத்தும் தைரியம் அவர்களுக்கு இல்லை என்பதும் உண்மைதான்.

இவர்தான் அவர்களை எதிர்கொண்டு வரவேற்றார். அவர்களுக்கு இணையாக ஆங்கிலத்திலும் பேசினார். சுற்றி நின்று வேடிக்கைப் பார்த்த சனங்கள் வாயடைத்துப் போனார்கள். வெள்ளையர்களைக் கோயிலுக்கு அழைத்துப் போய் சுற்றிக் காண்பித்தார். பிறகு அவர்கள் போய்விட்டார்கள்.

அவர் சனங்களிடத்திலே வந்து சொன்னார், 'வெள்ளைக்காரனுங்க கோயிலைச் சுற்றிப் பார்த்துட்டு, புகழ்ந்து பேசுறாங்க. இந்தக் கோயிலைக் கட்டி ஐந்நூறு வருஷமாச்சுன்னு சொன்னேன், ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அது இல்ல விஷயம்' என்று இடைநிறுத்தம் செய்தார். பிறகு அவரே, 'நீங்கள்லாம் இது வரைக்கும் அந்தக் கோயிலுக்குள்ளப் போனதே இல்லன்னு சொன்னேன். அப்படின்னா எதுக்காக இதக் கட்டினாங்க என்று ஒரு வெள்ளையர் கேட்டார். அது புரியாமத்தானே நானே அலைஞ் சுக்கிட்டு இருக்கறேன் என்று அவங்களுக்குச் சொன்னேன். என்ன கருப்பா நான் கேட்டது சரிதானே' என்று கூட்டத்தில் இருந்த ஒருத்தனைப் பார்த்துக் கேட்டுவிட்டுச் சிரித்தார்.

கூட்டத்தில் இருந்த கருப்பன் சிரித்தபடி, ''நீங்கள் சரியாத்தான் சொல்றீங்க, சாமி' என்றான்.

சனங்கள் உணர்ச்சி வசப்பட்டு அவரை... ஆச்சர்யமாய்

பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவருக்குக் கோபம் தலைக் கேறியது. "என்ன எதுக்குச் சாமின்னு கூப்பிடுறிங்க ஒரு கல்ல எடுத்து அதுக்குப் பொட்ட வச்சுட்டா அதுவும் உங்களுக்குச் சாமி நானும் சாமி. அடப் போங்கப்பா" சலிப்பாக சனங்களைப் பார்த்தார்.

"நான் சாமியும் கெடையாது. ஒரு மண்ணும் கெடையாது. நானும் உங்களப் போல மனுசன்தான். புரியுதா, இனிமேல் என்னை வாத்தியார்னு கூப்புடுங்க. நான் இனி வாத்தியார்தான் கூத்து வாத்தியார்... கூத்து வாத்தியார்" சொல்லி விட்டுக் கண் கலங்கும்படிச் சிரித்தார். சனங்களும் கூடவே சிரித்தார்கள்.

அந்தக் கிராமத்துல நாற்பதுக்கு முப்பத்தெட்டு பேர் கைநாட்டுதான். இரண்டு குடும்பம் கிறிஸ்தவங்களா மாறிட்டதால் அவங்களுக்குப் பாதிரிமார் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சுட்டாங்க. பள்ளிக்கூடம்னு எதுவும் கெடையாது. கிறிஸ்தவர்கள் வாசிக்கப் போய் வந்து கொண்டு இருந்தார்கள். மற்றவர்களும் போகலாம். போகவும் ஆசையாகதான் இருந்தது. நிலத்துக்காரர்கள் உருட்டி மிரட்டினார்கள். சபைக்காரங்க கிட்ட போனா வேலை கெடையாதுன்னு தீர்மானமா சொல்லிட்டா சனங்க வயித்துப் பொழப்புக்கு என்ன பண்ணும். அதனால அந்தப் பக்கம்கூட யாரும் எட்டிப் பார்க்கறது கெடையாது.

திடீரென ஒருநாள் வாத்தியார் ஆலமரத்தடியில் இருந்த புல் பூண்டுகளை வெட்டிச் சுத்தப்படுத்தினார். ஊர் இளசுகள் அவருக்கு உதவிசெய்தார்கள். பனை ஓலை கொட்டகை அமைக்கப்பட்டுப் பள்ளிக்கூடம் துவங்கி விட்டது. குழந்தைகள் துள்ளிக் குதித்துக் கொண்டு வந்தார்கள். வயது பேதமின்றி சகலருக்கும் பாடம் நடத்தினார் வாத்தியார். இரண்டு மாத காலம் பள்ளிக்கூடத்தை விட்டு அவர் நகரவே இல்லை இதற்குள் நான்கு பையன்கள் தேறிவிட்டார்கள். அவர்களால் ஓரளவு வாசிக்கலாம் எழுதவும் முடிந்தது. அதில் ஓரளவு தேறியவனாய்ப் பார்த்துப் பள்ளிக்குத் தலைவனாக்கிவிட்டு இரண்டொரு நாளில் வருவதாகச் சொல்லி எங்கோ போய் விட்டார்.

ஒருவன் சொல்ல மற்றவர்கள் திருப்பிச் சொன்னார்கள். பள்ளி இரைச்சலிட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு எழுத்துகள் புரிய ஆரம்பித்தது. சில புத்திசாலிக் குழந்தைகள் இரண்டு மூன்று எழுத்துகளைக் கூட்டி வாசிக்க ஆரம்பித்தார்கள்.

அந்தக் கிராமத்தில் அப்படித்தான் கல்வி வளர ஆரம்பித்தது. கல்வி வாடையை மக்கள் முதல்முறையாக நுகரத் தொடங்கி விட்டார்கள். கல்வி ஒன்றுதான் இவர்களுக்குக் கதிமோட்சம் என்பதை இவர்கள் உணரத் தொடங்கி விட்டால் போதுமே.

வாத்தியாரின் ஒவ்வொரு செயலும் ஊர்க்காரர்களும் எரிச்சலைத் தந்தது.

அவனுங்களுக்குப் படிப்புச் சொல்லித் தந்தா நாளைக்கு நம்மள மதிக்க மாட்டானுங்க. எதுத்துக் கேள்வி கேட்பானுங்களே. கிறிஸ்துவச் சாமியாருங்க ஒரு பக்கம் அவனுங்கள் ஏத்திவுட்டா இந்தப் பாப்பான் வேற கிறுக்குத்தனமா என்னன்னமோ பண்ணித் தொலைக்கறான் என்று புலம்பினார்கள்.

வாத்தியார் வேலை வழக்கம் போலவே நடந்தது. அவர் யாருக்கும் பயப்படுவது போலவே தெரியல.

அவரப் பத்தி ஊருல பலரும் விதமா கதை கட்டித் திரிஞ் சாலும் ஒருத்தருக்கும் ஒன்னுமே தெரியாது என்பது தான் உண்மை. உண்மையைத் தெரிஞ்சா யாருமே கொஞ்ச பதறத்தான் செய்வாங்க.

இருபது வேலி நிலத்துக்கு அதிபதியான சோமசுந்தர ஐயர் தன் காலத்தில் சம்பாதித்த சொத்துதான் என்றாலும், பஞ்சத்தில் அடிபட்டுக் கிடந்த குடும்பம் இப்படி திடுதிப்பென தழைப்பது அக்ரகாரத்தில் ஒன்றும் பெரிய விஷயமில்லைதான்.

விஷயம் என்னவென்றால் களவாய்புரத்து சிற்றரசுக்கு விசுவாசியான திவான் ரகுபதிக்கு ராசாவிடத்திலே மிகுந்தச் செல்வாக்கு உண்டு. தன் காலத்துக்குப் பின் தன் மகனுக்கு அந்தப் பதவியை வாங்கித் தந்து அவனது செல்வ வாழ்வுக்கு வழி செய்தார் திவான்.

மகன் லிங்கேசனுக்கே புத்தி ரொம்பவும் மந்தம். திவான் உத்தியோகத்துக்கு லாயக்கற்றவன் என்று அரண்மனையில் வெளிப்படையாகவே பேசிக் கொண்டார்கள். ராசாவிடத்திலும் அவனுக்கு அவ்வளவாக நல்லப் பெயர் கிடையாது.

முன்னாள் திவான் ரகுபதிக்கு இது மனவேதனையைத் தந்தது. மந்த புத்தியுள்ள மகனுக்கு. பதவி கிடைத்தால் பொறுப்போடு நடந்துகொள்வான் என்று நினைத்தவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவனோ போதை விழி பெண்கள் மடியிலே விழுந்து

கிடந்தான். அப்பன் சேர்த்து வைத்த சொத்தே போதும் தான் மண்ணுக்குள் போவதற்குள் தானும் ஒரு வழியாகி சொத்தையும் ஒரு வழி செய்துவிடலாம் என்று நினைத்தான் போலும்.

ஒழுக்கத்தில் உத்தமசீலரான ரகுபதி மகனின் செய்கைகளால் வேதனை அடைந்தார். அவனது திவான் பதவியையாவது காப்பாற்ற நினைத்துத் தனக்கு நெருங்கிய பழக்கம் உள்ளவரான சோமசுந்தரரைத் தனது மகனுக்குப் பின்புலமாய் மறது வழிநடத்தும்படியும் தனது பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்தும் மந்தப் புத்தி மகனைச் சோமசுந்தரரிடம் ஒப்படைத்த மன நிறைவில் ரகுபதி மண்ணடியில் போய்ச் சேர்ந்தார்.

பஞ்ச வாழ்வு நடத்திய சோமசுந்தரரே இப்போது திவான் சம்பந்தமான எல்லா அரசுக் காரியங்களையும் பார்த்துக் கொண்டார். லிங்கேசன் திவான் பட்டத்தை மட்டும் சுமந்துகொண்டு பொது மகளிரின் மடியில் மயங்கிக் கிடந்தான். செல்வம் அவனை விட்டுப் போய்க்கொண்டிருந்தது.

சோமசுந்தர ஐயருக்கோ செல்வபலம் கூடிக் கொண்டே போனது. வேலி... வேலியா நிலம். காதில் வைரம் மின்னத் தொடங்கியது. வேறு பலவும் வந்து சேர்ந்தபடியே இருந்தது.

அவரது இரண்டுப் பிள்ளைகளில் ஒருவன் எழுதப் படிக்கக் கற்றுத் தேர்ந்தவுடன் குத்தகை வசூலிக்கவும் பத்திரம் எழுதுவதுபோன்ற வேலைகளுக்குத் தோதாகிவிட்டான்.

இளையவன் சங்கரனை நல்ல விதமாய்ப் படிக்க வைத்து வெள்ளை அரசு உத்தியோகத்தில் சேர்த்துவிட சோம சுந்தரர் எண்ணம் கொண்டிருந்தார்.

சங்கரனும் படிப்பிலே கெட்டி, குணத்துலே சுட்டி. தட்டி வேலை வாங்க வேண்டியதில்லை. எட்டி நின்று சுட்டினால் போதும் வெட்டிக் கொண்டுவரும் ரகம். அழகன் பேரழகன். அந்தப் பார்ப்பனத் தெருவிலே யாருக்காவது கிருஷ்ணன் வேடம் போட வேண்டுமா? லேசான ஒப்பனையிலே சங்கரன் அப்படியே அச்சு அசலா ஆத்திகர் மனதில் பதிந்திருந்த கிருஷ்ணனா மாறிவிடுவான். நிறத்தை மறைக்கத்தான் நீலமோ கறுப்போ பூசவேண்டியிருக்கும். எடுப்பான நாசி, அழகான புருவ வளைவுகள், எவரையும் கவர்ந்துவிடும் தோற்றம், நல்லபிள்ளை என்ற பெயர் வேறு. மனிதப் பண்புகள் தழைத்து வளரத் தொடங்கியது. சோமசுந்தரர் அவனைப் பெரியப்

படிப்புக்காக சென்னைக்கு அனுப்பி விட்டார். தாய் விசாலத்துக்கு அவன் மீது தான் பற்று அதிகம். மூத்தப் பிள்ளைதான் செல்லப்பிள்ளை இளையப் பிள்ளை எடுப்பார் கைப்பிள்ளை என்ற நிலை இந்த வீட்டில் மாறி இருந்தது.

''நீங்கள் கடிதம் போட்டீர்களா நான் அவனுக்காக மனம் உருகிக் கொண்டிருக்கிறேன் என்று எழுதினீர்களா'' என்று துளைத்தெடுத்துக் கொண்டிருந்தாள் அம்மா.

'எப்படிச் சாப்பிடுகிறானோ, எப்படி இருக்கிறானோ மெலிஞ் சிப் போய் இருப்பானோ'' என்று சங்கரனை நினைத்துக் கொண்டு அம்மா புலம்பினாள்.

''அவன் நினைப்பு வந்துட்டா ஒரு வேளையும் ஓடாதே உனக்கு'' சோம சுந்தரர் சிடுசிடுத்தார்.

''ஏம்மா விடிந்தவுடன் சங்கரன் புராணம்தானா? அவன் பட்டணத்துல நன்னா வாசிச்சிண்டு பேஷா மாமியாத்து சமையல்ல ஒரு சுத்து சதை போட்டிருப்பான். உன்னோட சமையல் பேரானந்தத்தில் இருந்து அவனாவது தப்பிப் பிழைச்சானே அது போதாதா'' மூத்தவன் கிண்டலடித்தான்.

''போடா அசடு என்னைக் குறை சொல்றது தான் உனக்கு வேலை நீ போய் சங்கரனைப் பார்த்து வரப்படாதா?'

'ஏம்மா செத்த நாழி சும்மா இருங்கோ அப்பா காதுல விழப் போறது' மூத்தவன் வாய் மீது விரல் வைத்துச் சாடைக் காட்டினான்.

பட்டணத்தில் படிக்கறவா எல்லாம் பொம்பளப் பிள்ளைகளோடு சேர்ந்த கூத்தடிப்பாளாமே அட பகவானே என் கொழந்த அப்படி ஏதும் செய்வானா இருக்காது என்று தன் மனதுக்குள் பலவாறாகப் பேசிக்கொண்டும் வாய் விட்டுப் புலம்பிக்கொண்டும் வீட்டு வேலைகளில் மூழ்கிப்போனாலும் அம்மாவுக்குச் சங்கரன் நினைப்பாகவே இருந்தது.

சங்கரன் படித்துக் கொண்டிருந்த பாடசாலையில் ஆசிரியர் சாமுவேலுடன் சங்கரன் நட்பு கொண்டிருந்தான்.

ஆசிரியரின் பேச்சும், தெளிவான போக்கும் அவனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

அவன் கல்லூரியில் சேர்ந்த சில மாதங்களிலேயே இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விட்டார்கள்.

இருவரும் சமூகத்தைப் பற்றியும் சில நேரங்களில் இலக்கியம்

பற்றியும் விவாதம் செய்வார்கள்.

ஆசிரியர் தனி அறையில் வசித்து வந்தார். அவருக்கு மணமாகியிருந்தாலும் அவர் தனியாகவே வசித்து வந்தார். அவரது மனைவி வாரத்துக்கு ஒரு முறை வந்து பார்த்துவிட்டுப் போவாள். அவரது மனைவி கிறிஸ்தவக் கன்னி சகோதரிகளுடன் தங்கி மத சம்பந்தமான சேவைகள் செய்துவந்தார்.

கல்லூரி நேரம் போக பெரும்பாலும் அவன் ஆசிரியருடனே பொழுதைச் செலவிட்டான்.

பெரும்பாலும் சமூகத்தைப் பற்றியும் விஞ்ஞான வளர்ச்சி பற்றியும் விவாதிப்பதில் சங்கரன் ஆர்வமாய் இருந்தான். எல்லாவற்றுக்கும் சாமுவேலிடம் தெளிவான பதில் இருந்தது. மாலைப் பொழுதில் கடற்கரை மணலில் உலாவிக் கொண்டிருந்தார்கள். விவாதத்தைச் சங்கரனே ஆரம்பித்தான்.

''இந்தப் பூமியில் வாழும் மனித இனம் மொத்த ஏற்றுக் கொள்ளும்படியான நீதியை ஒருவனால், முடியும்னு நினைக்கறீங்களா?' என்று கேட்டான் சங்கரன்.

ஆசிரியர் நெற்றியைச் சுருக்கிக் கொண்டார். பிறகு தொண்டையைச் செருமியபடி, ''அது அவ்வளவு சுலபம் இல்லை. ஒருவேளை அது முடியாதுன்னு நினைக்கிறேன். நல்லதும் கெட்டதும் கலந்துதான் மனித இயல்பு. மனிதப் பண்பு வளர்ந்தவர்கள் நல்லதை மேலும் வளர்த்தெடுக்கப் போராடுவார்கள்'.

'ஏன் மனுசருக்கு அவ்வளவு புத்தி போதாதுன்னு நெனைக்கறீங்களா?'

'இல்லை, நான் அப்படிச் சொல்ல வரவில்லை. மனிதன் மகா புத்திமான் தான். ஆனால், தான் என்ற கர்வமும் நீதிக்குக் கட்டுப்படும் தன்மையற்ற மனிதரும்தானே இன்றைக்கு இருக்கிறோம்'' இறைவனையே நாம் கேலிக்கூத்தான விஷயமாக்கி வியாபாரப் பொருளாகவும் மாற்றி வருகிறோம். மனிதத்தன்மை அற்றவர்களே சமூகத்தின் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்து கொண்டு அறிவாளிகள் என்று மார் தட்டுகிறார்கள். அண்டத்தைக் காத்து ரட்சிக்கும் பரம்பொருளே என்றுதான் உலக மனிதர் அனைவரும் வணங்குகிறோம்.

உண்மையில் என்ன நடக்கிறது கிருத்துவன் இயேசுவே கடவுள் என்கிறான். முகமதியனோ அல்லா ஒருவனே

இறைவன் என்கிறான். இந்துவாகிய நீங்களோ, ஈசனைச் சிலரும் விஷ்ணுவைச் சிலருமாகப் பரம்பொருள் என்கிறீர்கள். யோசித்துப் பாருங்கள். ஒரே பூமியை நாம் பல உலகங்களாகப் பிரித்து விட்டோம். நம் சொந்த மனிதனையும் பல வர்ணங்களாகப் பிரித்து விட்டீர்கள். பாதைகள்தான் வேறு, சென்று சேருமிடம் ஒன்று தான் என்று பீடங்களில் உட்கார்ந்திருப்பவர்கள் சொல்வது கேட்க நன்றாகத் தான் இருக்கிறது. சிவனும் விஷ்ணுவும் ஒன்னுன்னு சொல்பவர்கள் மனதளவில் அதை ஏற்றுக் கொள்வதில்லையே.

தங்களது மனச்சாட்சியைக் கருப்புத் திரைபோட்டு மறைத்துவிட்டு இவர்கள் செய்யும் குழப்பம் எளியவர்களைச் சுரம் அவர்களை ஒன்றுமில்லாதவர்களாக்கி விடுவதில்தான் முடிகிறது.

இந்த வித்தைகளைக் கற்று வைத்துக்கொண்டு அதைப் பயன்படுத்தி சமூகத்தில் சுக வாழ்வு வாழ்பவர்களுக்கு நிச்சயம் தெரியும் இரை தேடி அலையுற மிருகத்துக்கு என்ன நியதி இருக்குமோ அதே நியாயத்தை வச்சுக்கிட்டு தான் இவர்கள் ஏழை மக்களை வேட்டையாடுறாங்க. இதுதான் இன்றைய உலகில் நடந்து கொண்டிருக்கிறது. இதில் உலகத்துக்கான நியதி ஏற்கனவே நிறைய உள்ளது. ஆதிக்கம் செய்யும் மனிதர்கள் அதைக் கருப்புத்திரைப் போட்டு மூடி மறைத்துவிடத்தான் விரும்புவார்கள். வாய்க் கூசாமல் கலாசாரம், பண்பாடு என்றும் நாகரீகமானவர்கள் என்றும் கூச்சலிடுகிறார்கள்.'' என்றவர் சரிதானே என்பதுபோல் சங்கரனைப் பார்த்தார்.

'மதங்களைப் பற்றிய உங்களது தனிப்பட்ட அபிப்பிராயத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?' என்று சங்கரன் ஆவலோடு கேட்டான்.

''உலகத்துலயே கிருத்துவ மதம் தான் உன்னதமானது என்று நான் சொல்லுவேன்னு நீ நம்பறியா'' என்று குத்தலான பதில் கேள்வி கேட்டார்.

'நாம் யாருக்கும் பிரதிநிதியில்லையே பொதுவான அபிப்ராயங்களைத் தானே பேசுகிறோம். உங்கள் வருணத்தை அறிந்து கொள்வதில் கூட எனக்கு அக்கறை இல்லை. ஒருவேளை நீங்கள் வருணமற்றவராகக்கூட இருக்கலாம். எனக்கு ஆட்சேபனையில்லை'' என்று சங்கரன் சொன்ன போது ஆசிரியர் சிரிக்க ஆரம்பித்தார்.

தன்னை அலட்சியப்படுத்துகிறாரோ என்றுகூட நினைக்கத்

தோன்றியது சங்கரனுக்கு.

'நீங்கள் வருணபேதம் பிறப்பை வைத்துக் கணக்கிடுவீரா அல்லது செய்கையை வைத்தா?'

சங்கரன் மனம் குழம்பியவன்போல நெற்றியைச் சுருக்கிக் கொண்டு ஆசிரியரைப் பார்த்தான். பேரலை ஒன்று அவர்களை முழங்கால் வரை நனைத்து விட்டுப் போனது.

''என்னைப் பொருத்தவரை வருணம் என்பதே மகா மோசடியான ஒரு திட்டம். மனிதக் குலத்துக்கு எதிரான அப்பட்டமான பாசிசம் இதைவிட வேறு எதுவும் இருக்க முடியாது என்பது என் கருத்து. பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு என்பது மோசடியான திட்டம். வெளிப்படையாக சொல்வேன் என்றால் செயலின் அடிப்படையில்தான் வர்ணம் இருக்கலாம். பிறப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்வது மோசடி. மொத்தத்தில் வர்ண பேதமே மோசடியானதுதான்.

செய்கை அடிப்படையில் வருணத்தைப் பார்த்தால் உங்களில் நான் ஒரே ஒரு பிராமணரைத்தான் பார்த்திருக்கிறேன் என்று பேராசிரியர் வேகமாகச் சொன்னார்.

''யார் ஐயா அந்த ஒரு பிராமணர்'' என்று ஆவலோடு கேட்டான் சங்கரன்.

''நீயே சொல்லேன் பார்க்கலாம்' என்றார். நீங்கள் தானே சொல்கிறீர்கள். நீங்கள் சொல்கிற நடத்தையின் அடிப்படையில் பார்த்தாலும் நான் பெரிய பட்டியலே தர வேண்டியதிருக்கும்.'

'நலம் சுயநலமய்யா' என்று சிரித்தார் ஆசிரியர்,

'திருவல்லிகேணி சுப்ரமண்ய பாரதிதான் அந்தப் பிராமணன். உண்மையாகவே அவன் மாமனிதன்தான். வேறு சிலரும் இருக்கலாம் எனக்குத் தெரியாது. மனிதப் பண்புகள் வளர்ந்த அவனை அந்தப் பண்புகளற்றவர்கள் எதிரியாகப் பார்த்தார்கள். புரிகிறதா? உள்ளார்ந்த தோழமையோடு அவனைப் பார்த்தார். ''நீங்கள் இந்த விஷயத்தில் எனக்கு முரண்பாடாகத் தெரிகிறீர்கள். அவர் ஆங்கிலேயருக்கு எதிரி, நீங்களோ அவர்களுக்கு நண்பர், நீங்கள் எப்படி அவரோடு உடன்பட முடியும்.''

''நீ ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் சங்கரா. என் சகோதரன் இங்கிலாந்து சென்று பயில்வதற்கும் நான் இந்தப் பாடசாலையில் உனக்கு ஆசிரியனாய் இருப்பதற்கும் வழி பண்ணியது ஆங்கிலேயரின் ஆட்சிதான். அதை நீ புரிந்துகொள்ள

வேண்டும். ஒருவேளை கிறித்துவ மதபோதகர்கள் கூட அதற்கு ஒரு காரணமாய் இருக்கலாம். எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது நான் கிறித்துவனாக மதம் மாறியதால் தான் இந்த அளவு நான் உயர வாய்ப்பு கிடைச்சது. இதை உன்னால் மறுக்க முடியாது இல்லையா''

'நீங்கள் சொல்வதை நான் ஒத்துக் கொண்டாலும் நம் சொந்த மண்ணில் அயலானிடத்தில் நீங்கள் அடிமையாய் வாழ்வதைப் பற்றி நீங்கள் மானக்கேடாய் நினைக்கவில்லையா' அவன் பேச்சில் கூர்மையான வேகம் இருந்தது.

சாமுவேல் தன் மாணவனை ஆழமாகப் பார்த்தார் பிறகு. 'நல்ல கேள்வி கேட்டாய் சங்கரா. சொந்த மண்ணில் சொந்த மனிதர்களால் விலங்கை விடக் கேவலமாய் நடத்தப்படுவதை ஆங்கிலேயனால் மனிதனாய் நடத்தப்படும் வாழ்க்கையைத்தான் நான் கௌரவம் உள்ளதாக நினைக்கிறேன். எந்த நிலையிலும் மனிதனுக்குச் சுயமரியாதை அவசியம். அதைத் தவறு என்று சொல்கிறாயா ஆண்டாண்டு காலமாய் முடங்கிக் கிடந்த எங்களோடு கை குலுக்கி எங்களுக்குக் கல்வியும் சமத்துவமும் தர முயல்பவர்கள். உனக்கும் அது தெரிந்திருக்கும்.''

''ஒப்புக் கொள்கிறேன். ஆனால், ஆங்கிலேயன் நம் இருவருக்கும் பொது எதிரியல்லவா?'

'உண்மைதான். நீங்கள் வருணத்தை ஒழித்து, மனுச் சட்டத்தை கொடிய பாசிச குருரனின் படைப்பு என்று அறிவித்து, சாதிமுறைகளைத் தலைமுழுகி, கோயில், குளம், பாதை, சுடுகாடு, பல்லக்கு, பதவி, கல்வி, எல்லோருக்கும் பொது என்று அறிவியுங்கள். பறையனும், பள்ளனும் மனிதனே அவனுக்கும் எல்லா உரிமையும் உண்டு என்று சொல்லும் உங்கள் மனச்சாட்சியை மூடி வைத்துள்ள கருப்புத் துணியைக் கிழித்து எறிந்து விட்டு சாதி பேதமற்ற உலகில் தான் நான் வாழ்கிறேன் என்று உறுதியாகச் சத்தமிட்டு உங்களால் சொல்ல முடியும் என்றால் நான் ஆங்கிலேயனுக்கு எதிரியாகிறேன். அதுவும் முதல் எதிரியாக அப்போது பாருங்கள் என்னை. எனது மதத்தைக்கூட அதன் சொந்தக்காரர்களிடமே தூக்கியெறிந்து விடுகிறேன்'' என்று பேசியபோது அவரது கண்களில் கோபக்கனல் வீசியது போலதான் உணர்ந்தான் சங்கரன். அதில் உண்மை இருப்பதையும் அவனால் மறுக்க முடியவில்லை.

உணர்ச்சிமயமான அந்த நேரத்தில் அலைகளின் பேரிரைச்சல் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை. இருவரும் அமைதியாக நடந்து கொண்டிருந்தார்கள் அவர்கள் பாதங்களைச் சிற்றலைகள் வந்து தழுவிச் சென்றன. காற்று குளிர்ச்சியாகவும் வேகமாகவும் வந்தது.

''நாம் பாரதியைப் பற்றிப் பேச ஆரம்பித்து வேறு விஷயங்களில் நுழைந்து விட்டோம். பாரதி உண்மையாகவே ஒரு நெருப்புதான். புரட்சி என்ற வார்த்தைக்கு அவன் ஒரு சரியான அடையாளம். பழுத்துப்போன பத்தாம்பசலித்தனத்தைப் புரட்டிப் போட விரும்பியவன். அவனை இன்னமும் நாம் யாரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் பேரில் அவனுக்குள்ள அனுதாபம் தன் இனத்தாரின் மேல் அவனுக்கு எல்லையில்லாக் கோபத்தையும் உண்டு பண்ணியது என்பதை அவனைப் புரிந்தவர்களுக்குத் தெரியும். தன்னை ஒரு பிராமணன் என்று சொல்லிக்கொள்ள அவன் மனம் கூசியது. அதனால் தான் அதன் சாஸ்திர சட்டங்களின் பேரில் அவனுடைய கோபம் பிரமாண்டமானது. அவனது அன்னைப் பூமியைப் பற்றி, அவனது கவிதைகள் சாதாரண கவிஞனின் கற்பனைகளே அல்ல. இந்தத் தேசத்தையும் தேசமக்களையும் அவன் சக்தியின் வடிவமாகவேக் கண்டான். அவன் காலத்தின் கவி... சரி சங்கரா, பாரதியைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'

''கவியைப் பற்றி நான் என்ன சொல்ல நீங்களே எல்லாவற்றையும் சொல்லி விட்டீர்கள் நீங்கள் சொன்னதை நாம் அப்படியே ஒப்புக்கொள்கிறேன். நல்ல மனிதன்'' என்று, சங்கரனின் வாய் முணுமுணுத்தது. கடற்காற்று வலுவாகிவிட்டது. மேற்கே சூரியன் முற்றிலுமாக மறைந்துவிட்டான். ஆனால், இருள் வரவில்லை. மங்கலான உப்பு நீர்த் திவலைகளுக்கு இடையே அவர்கள் காற்றை அனுபவித்தபடி நடந்து கொண்டிருந்தார்கள். கல்லூரிச் செங்கல் கட்டிடம் கடலுக்கு எதிரே அமைதியாக நின்று கொண்டிருந்தது.

கடல் கறுத்து பிரமாண்டமாக வளர்ந்துபோய் முடிவில் வானத்தோடு இணைந்து விட்டதுபோல் இருந்தது. இப்போது வானமும் கறுத்துப் போனது இரண்டிலுமே மீன்கள் நீந்தித் திரிந்தன. மீன்கள் பிரகாசிக்க வானம் அழகாகத் தெரிந்தது. இந்த மீன்களை யாராவது பிடிக்கத்தான் முடியுமா? இல்லை

அணைத்துவிடத்தான் முடியுமா? சில கணங்கள் கருமேகங்கள் வேண்டுமானால் மறைத்துக் கொள்ளலாம் அதுவும் விலகத்தானே வேண்டும். அதேபோல் மனிதர்களும் தங்கள் மனச் சாட்சியின் மீது போர்த்தியுள்ள கறுப்புத் துணியை விலக்கி உலகைப் பார்க்க வேண்டும்.

பாசிச வர்ணங்களைத் துடைத்தழித்து மனிதர்களாக மனமாற்றமடைய வேண்டும். அதனால்தான் வெள்ளையன் இந்தியரை விலங்காண்டிபோல் பார்க்கிறான். தங்கள் மனச் சாட்சியின் மீது போர்த்தியுள்ள கறுப்புத்துணியை அகற்றி உலகைப் பார்க்காதவர்களால் ஏனைய மனிதர்களுக்கு ஒன்றும் கெடுதல் வந்துவிடப் போவதில்லை. கறுப்பு ஆன்மாக்கள் ஒளி யில்லாமல் தானே கெட்டொழிந்து போகும். யார் அதைக் காப்பாற்ற முடியும். ஆசிரியர் தன் மனதுக்குள்ளாகவே பேசிக் கொண்டார்.

கடற்கரையில் எதிரில் வரும் ஆள் தெரியாத அளவு இருள் சூழ்ந்தது. கடலில் இருந்து வந்த அலையோசையைத் தவிர வேறு கேட்கவில்லை. குளிர் அதிகமானபடியால் இருவரும் விடை பெற்றுக் கொண்டு பிரிந்து போனார்கள். அவர்கள் மன மட்டும் ஓயாத சிந்தனையில் இருந்தது.

சோமசுந்தரருக்குத் தபால் வந்திருந்தது.

அவரும் மூத்த மகனும் வெளியே வேலையாகப் போயிருந்தார்கள். விசாலத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. கடிதத்தை உற்றுப் பார்த்து நமுச்சு ஒன்றை விட்டாள். தனக்குப் படிக்கத் தெரியாதது என்பதால் தற்போது அவள் மிகவும் வருத்தமடைந்தாள். வந்திருக்கும் கடிதம் மகனிடமிருந்துதான் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது. குழந்தை என்ன எழுதியிருக்கிறானோ என்று தவிப்பாய் இருந்தது.

சங்கரன் விடுமுறையில் வந்ததும் அவனிடம் வாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். இந்த வருடத்தோடு அவனது பட்டணப் படிப்பு முடியப்போகுது என்று அவர் சொன்னாரே என்று நினைத்துக் கொண்டாள் அம்மா.

சோமசுந்தரர் வீடு திரும்பியதும் கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''செத்த நாழி பொறுக்க மாட்டியா சங்கரன் எழுதினதா

இருக்கும். அதான் பறக்குற..'' என்று பொரிந்துகொண்டே தெய்வப் படங்களுக்கு முன்பாக தலைவணங்கி பிரார்த்தனை செய்துவிட்டு வந்து கடிதத்தை வாங்கிப் பிரித்து மேலோட்டமாகப் பார்த்தார்.

''ஆயிரம் கோடி நமஸ்காரங்களுடன் எழுதும் கடிதம்.

தங்கள் புத்திரனைப் பற்றி நான் இவ்விதம் எழுதுவதால் தாங்கள் என் மீது கோபம் கொள்ளலாகாது. சங்கரனின் வாசிப்பில் எவ்விதக் குறைபாடும் கிடையாது. பி.ஏ., வாசித்து முதலாவதாக தேறிவிடுவான் என்றும் அவனோடு வாசிக்கும் பிள்ளைகள் பேசிக் கொள்கிறார்கள். எனக்கும் நம்பிக்கையுண்டு.

பட்டதும் பற்றிப் கொள்ளும் கற்பூரக்கட்டி. ஞானத்தில் உங்களைப்போல ஜொலிக்கிறான். வெளி மனுசாளோடு நிறைய சகவாசம் வைத்துக்கொண்டு விட்டான். நம்மக் குலத்தை பழிக்கும் நாஸ்திகக் கும்பலுடன் அவன் நெருங்கிப் பழகுவதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. என் உத்தரவு இல்லாமலே வேறு ஜாகைக்குப் போய் விடுவான் என்று தோன்றுகிறது. பஞ்சமர்களோடு சுற்றுவதாகவும் கேள்விப்படுகிறேன்.

சங்கரனின் கல்லூரியில் பஞ்சமன் ஒருவன் ஆசிரியனாக இருக்கிறானாம். வெள்ளையர்களுடன் நெருக்கமான தொடர்புடைய கிறிஸ்துவன். அவனோடு நம் சங்கரனுக்குப் பழக்கம் அதிகமென்று கேள்விப் படுகிறேன். மேல் படிப்புக்காக வெளிநாடு செல்ல இருக்கிறான் என்று நினைக்கிறேன்.

உங்களைப் பற்றிய நினைப்பும், தான் ஒரு பிராமணன் என்ற எண்ணமும், இன்றி மத துவேஷ விவாதங்களில் அதிக ஆர்வமாய் உள்ளான் என்று அறிகிறேன். அவனைக் கிறிஸ்துவனாக்க முயற்சி நடப்பதாக நினைத்து நான் அச்சப்படுகிறேன்.

இந்தக் கடிதத்தில் சொல்லியிருப்பது அத்தனையும் நான் ருசுப்படுத்திக் கொண்டு எழுதியதுதான். என் கடமையை நான் செய்துவிட்டதாகக் கருதுகிறேன். மேற்படி நீங்கள் சங்கரனுக்குப் படுகிறது போல் கடிதம் எழுதவும்.

விஸ்வேஸ்வரய்யர்,

திருவல்லிகேணி.

கணவரின் முகத்தில் கோபம் கொப்பளிப்பதைப் பார்த்துத் திகிலடைந்து விட்டாள். அவளுக்கு உடம்பு நடுங்கியது.

''கதையைக் கேட்டாயோ விசாலம் உன் மகன் பண்ணுகிற வேலை ரொம்ப நன்னா இருக்கிறதாம் விஸ்வேஸ்வரன் எழுதியிருக்கிறான். வாசிப்பில் எல்லாம் ஒன்றும் குறையில்லையாம். என்னத்த சொல்ல பறையன் தோளில் கைபோட்டு நடக்கிறானாம். இதற்குத்தான் பட்டணம் அனுப்பினேனா? இந்த வெள்ளைக்காரன் படிப்பே எல்லாவற்றையும் கெடுத்து குட்டிச் சுவராக்கதானா அட ஈஸ்வரா'' என்று தலையில் அடித்துக் கொண்டார்.

''என் பிள்ளை அப்படியெல்லாம் செய்வானா கடிதத்தைப் பார்த்துக் குழம்பாதீங்கண்ணா! நேரில் போய் ஒரு முறை அவனைப் பார்த்துட்டு வாங்களேன்.'

'அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் விஸ்வேஸ்வரன் ஒன்றும் அச்சு பிச்சுன்னு எழுதறவன் கிடையாது. சட்டம் வாசித்துத் தேறி பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பன். தீர விசாரிக்காமல் எழுத மாட்டான். எனக்குத் தெரியும்.'

'சரி என்ன செய்யப் போறேள்' அம்மா படபடத்தாள்.

'அப்படியே விட்டுவிடப் போகிறேன்.'

'குழந்தைதான் ஏதோ தெரியாமல் நடந்துக்கிறான் பெரியவர்களாகிய நீங்கள் அப்படியே விட்டு விடுவீர்களா?'

'வேற என்னத்தடி செய்யச் சொல்ற. வெள்ளைக்காரன் வந்து புகுந்தான். அமினா நுழைஞ்சதுபோல தான் சாஸ்திரம், சம்பிரதாயங்களை யார் நம்புகிறான் உன் பிள்ளை ஆங்கிலத்தில் வாசிக்கிறான். அந்தப் பாஷையில் பேசக்கூட செய்வான். அவர் தலையைப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து விட்டார்.

என் வழிக்கு வராமல் போனால் என் சொத்தில் ஒரு அணா அவனுக்குக் கிடையாது. அவன் இங்கிலாந்து போகட்டும். வேறு எங்காவது போய்த் தொலையட்டும். நான் விட்டு விடத்தான் போகிறேன்.''

அவர் வாயில் இருந்து தடித்த வார்த்தைகள் வந்தாலும் மனம் புழுப் போலத் துடித்தது.

அம்மா திகிலடைந்து மிரண்டு போய் நின்றிருந்தாள்.

வெளியில் இருந்து வீடு திரும்பிய மூத்தவன் தன் பங்குக்குத் திட்டித் தீர்த்தான்.

"என்னதான் படித்து அறிவு வந்து விட்டாலும், நம்மவாளை நாமே தூஷிக்கலாமோ! பெரியவா எல்லாம் சரியாதான் செய்திருப்பா வரட்டும் அவனை ஒரு வழி பண்ணுகிறேன்" அப்பா உறுமினார்.

கோபமாய் இருக்கும் கணவனைப் பார்த்து விசாலம் அஞ்சி நடுங்கினாள். சங்கரனுக்காக அவள் மனம் புழுப்போல துடித்தது. நாட்கள் அவளுக்கு நெருப்பாகக் கடந்தன.

அதேநேரத்தில் மூத்தவன் சீனுவுக்குக் கல்யாணப் பேச்சு நடந்து கொண்டிருந்தது.

பெண் வீடு பார்க்க வளவனூருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் இரண்டு கடிதம் வந்தது. அது சங்கரனுடையது.

நல்ல காரியத்திற்குக் கிளம்பும் போது புரளி எதற்கு என்று படிக்காமலே பெட்டியில் கொண்டு போய் வைத்து விட்டார்.

பெண் பார்க்கப் போனார்கள். கல்யாணம் பேசி முடிவானது. தன் மகனுக்கு ஆறாயிரம் ரூபாய் தட்சணையாகக் கிடைத்ததில் சோமசுந்தரருக்கு மன நிறைவுதான். பெரிய மிராசுவிடத்திலே பெண் வாழ்க்கைப் படப் போகிறதை நினைத்துப் பெண்ணின் பெற்றோர் மன நிறைவோடு பிள்ளை வீட்டாரை வழியனுப்பக் கூடி நின்றிருந்தார்கள். இடையில் பெண் வீட்டார் யாரோ கேட்டார்கள்.

"உங்கள் இளைய மகன் எங்கே" என்று.

"பட்டணத்தில் பி.ஏ., வாசித்துக் கொண்டிருக்கிறான்" என்று பெருமிதமாகச் சொன்னார் சோமசுந்தரர்.

அவரது உள்ளம் கடிதத்தைப் பற்றியே நிலை கொண்டிருந்தது.

வீட்டிற்குப் போனது முதல் வேலையாக கடிதத்தை எடுத்து வாசித்தார்.

'அன்புடைய தகப்பனாருக்குக் கோடிக்கோடி நமஸ்காரங்கள்'' என்று துவங்கியது கடிதம்.

**ஆமாம் இதிலொன்றும் குறைச்சலில்லை என்று மனதுக்கு முணுமுணுத்தார் சுந்தரம்.**

இங்கு பரிக்ஷைக்கு வாசித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சில வாரங்களில் பரிக்ஷை முடிந்துவிடும். எந்த தவறுதலும் இன்றி நான் முதலாம் வகுப்பில் தேறிவிடுவேன். அனேகமாக எனக்குத் தங்கப்பதக்கம் கிடைக்க வாய்ப்புள்ள என்று என் ஆசிரியர்கள் பேசிக் கொள்கிறார்கள். அதைப் பற்றி உங்களுக்கு எந்த எண்ணமும் வேண்டாம்.

மேல்படிப்புக்கு என்னைப் போகச் சொல்லி நண்பர்களும் ஆகிரியர்களும் வற்புறுத்துகிறார்கள். எனக்கு ஒன்றும் ஆர்வம் இல்லை இருக்கிற அறிவையும் படிப்பையும் வைத்து நம் மக்களுக்குச் செய்யவேண்டிய வேலைகள் ஏராளமாய் இருப்பதை நான் உணர்ந்துள்ளேன். இதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். பரிக்ஷை முடிந்து சில தினங்கள் கழித்து நான் வருகிறேன்.

தற்போது விஸ்வேஸ்வரன் மாமாவின் இடத்தில் இருந்து வேறு ஜாகைக்குப் போய்த் தங்கியுள்ளேன். சாஸ்திரங்களும் இன்னும் சில நமது முன்னோர்களின் ஏற்பாடுகளும் நம்மை உயர்ந்த நிலையில் வைத்து ஏனைய பலரை அடிமைகளாக்கி நமது நல்வாழ்வுக்கு அவர்களை எருவாக்கி விட்டிருக்கிறது. அது இப்போது கண் கூடாகத் தெரிகிறது.

பட்டணத்தில் சமத்துவச் சங்கங்களின் கூட்டம் அதிகமாக நடக்கிறது. சுய ராஜ்ஜியக் கோரிக்கையை விட இந்தச் சங்கங்களின் அறைகூவல்தான் மூலைக்கு மூலை கேட்கிறது.

ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் என் நண்பர் சிலருக்கும் நல்ல தொடர்பு இருக்கிறது. மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய பணிகள் அனேகம் உள்ளது என்று அறிகிறேன். இவை தானன்றி வேறு எதுவும் இல்லை. பரிக்ஷை முடிந்ததும் நான் ஊருக்கு வருகிறேன்.

சங்கரன்

மைலாப்பூர்.

இரண்டாம் கடிதம் அம்மாவுக்கும் அண்ணன் சீனுவுக்கும் எழுதப்பட்டது. முதல் வரியைப் படித்துவிட்டு அம்மாவிடம் எறிந்துவிட்டுப் படித்து முடித்த கடிதத்தைக் கிழித்து தூரமாய் எறிந்தார். சோமசுந்தரரின் கண்கள் சிவந்தன.

''இங்க வர வேணாம். அங்கேயே விழுந்து செத்துத் தொலைஞ்சு போ. ரெண்டுல ஒண்ணு போனது என்றாகிவிடும்.''

பாவம் விசாலத்துக்கு முன்பே உடல் சுரத்தால் பலவீனமாக இருந்தது. அவள் சங்கரன் நினைப்பாகவே உடல் இளைத்துப் போய் இருந்தாள்.

என்னத்துக்கடா சங்கரா வாசிச்சி முடிச்சோமா சர்க்காருல ஒரு உத்தியோகம் பார்த்தோமான்னு. சுகமா இருக்காம எதுக்கடா உனக்கு லோக காரியமெல்லாம். நீ என்ன தரித்திரன் வீட்டுப் பிள்ளையா மிராசுடா... பெரிய மிராசு. அம்மா தனக்குள்ளே புலம்பினாள். அவள் குரல் அவளுக்கே கூட கேட்கவில்லை அவ்வளவு பலவீனமாகி விட்டிருந்தாள்.

என்னைப் பற்றி விஷ்வேஸ்வரன் என்ன நினைப்பான் நான் பிள்ளையை அவனுடைய பாதுகாப்பிலே விடுவதாம் வெளையாண்டான் அவரிடத்திலே மனஸ்தாபம் செய்துகொண்டு வேறிடம் போய் ஜாகை எடுத்துத் தங்குவதாம் இதெல்லாம் நல்ல பிள்ளைகள் செய்கிற காரியமா எல்லாம் தலைவிதி. விதி அவனை அப்படி ஆட்டுவிக்கிறது என்றால் நான் என்ன செய்ய முடியும்' என்று தனக்குத்தானே நொந்து கொண்டார்.

சமஸ்தானத்திலும் இப்போது சோம சுந்தரருக்கு வரவேற்பு இல்லை.

இப்போது ராஜாவுக்கும் கவர்னருக்கும் நட்பு பலப்பட்டு விட்டது. திவான் லிங்கேஸ்வரன் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி கடைசியாகப் போய்ச் சேருமிடத்துக்கு போய்ச் சேர்ந்து விட்டார். இனி அரண்மனை வேலைகளைத் தலை முழுகி வீட்டோடு இருந்து விட வேண்டியதுதான்.

சமஸ்தான நிலவரி வரி வசூலிப்பது எல்லாமே ஆங்கில கலெக்டர்கள் கையில் மாறிவிட்டன. அந்த வேலைகளுக்குத் தங்களது விசுவாசிகளையே அவர்கள் நியமித்தார்கள். அதனால் ஆங்கிலேயர் மீது சோமசுந்தரருக்குக் கடுமையான வெறுப்பு ஏற்பட்டது. அப்பேர்ப்பட்டவர்களுடன் சங்கரனுக்கு என்ன நட்பு வேண்டி கிடக்குது. வாசித்து முடித்தோமா ஊர் வந்து சேர்ந்தோமா என்று இல்லாமல் அவருக்கு எரிச்சலாய் இருந்தது. என்ன செய்யலாம் என்ற யோசனையில் உட்கார்ந்து விட்டார்.

◉◉◉

சிறியது, பெரியது, உயர்ந்தது, தாழ்ந்தது இருப்பது இல்லாதது, துறவறம், இல்லறம் இது மாதிரியான மாறுபட்ட பட்டியல் நீண்டு கொண்டே இருக்கலாம். இந்த மனிதர்களில் லட்சியங்கள், அதன்

முடிவுகள் வெற்றியோ, தோல்வியோ எதுவானாலும் வளர்ச்சியின் மற்றொரு கட்டமாகத்தான் அது வளர்கிறது. மாற்றங்கள் மட்டும் தான் மாறாதது. சரியாகத்தான் சொன்னான் கார்ல் மார்க்ஸ்.

வெள்ளையன் இந்தியாவுக்குள் நுழைந்தது நல்லதாகத்தான் முடிந்தது. வருணப் பேதத்துடன் வர்க்க பேதத்தையும் நுழைத்து பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் மோதவிட்டு புதியக் கலாசாரத்தைப் பிரசவிக்க செய்த கல்வியாளன்.

அவன் நம்மிடம் இருந்து ஏராளமாய் உறிஞ்சிவிட்டான். தெரிந்தோ, தெரியாமலே உண்மையாக அவனுடைய வசதிக்காக பல நல்ல விஷயங்களை நமக்கு அறிமுகப்படுத்தி விட்டான். சகலருக்கும் கல்வி என்பது அடிமைகளையும் கேள்வி கேட்க வைக்கும்.

கல்விதான் மனிதனை வளர்க்கிறது; கல்விதான் மனிதனின் அகக்கண்களைத் திறக்கிறது.

சங்கரன் புத்தியில் பலவிதமான சிந்தனைகள் ஓடின. ஊருக்குப் புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு சாமுவேல் ஆசிரியரைப் பார்க்கப் புறப்பட்டான். தேர்வு முடிந்து இரண்டு நாள் ஆகிவிட்ட நிலையிலும் ஊருக்குப் போக தயக்கம் காட்டினான். ஆசிரியரை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் இருந்தான். அவரோடு உரையாடுவது அவனுக்குப் புத்துணர்ச்சி தருவதாக இருந்தது.

தற்போது ஆசிரியர் குடியிருக்கும் பகுதி ஆங்கிலோ இந்தியர்கள் மட்டும் வாழும் தனிக் குடித்தனப் பகுதி. அந்தப் பகுதியில் நுழைந்ததும் கிராமபோன்களில் இருந்து இனிய மேற்கத்திய இசை காற்றில் மிதந்து வந்தது. அவர்கள் பெரும்பாலும் இசை விரும்பிகளாக இருந்தார்கள். அவர்கள் முழுவதுமாக வெள்ளையரோடும் சேர்ந்துகொள்ள முடியவில்லை. இந்தியரோடும் கலந்துவிடவும் முடியவில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் தங்கள் பண்பாட்டை அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு வீடுகள் தள்ளி வரும்போதே சங்கரனைச் சாமுவேல் பார்த்து விட்டார்.

வாங்க... வாங்க என்று அன்போடு வரவேற்றார்.

‘இன்னைக்குப் புதியவர் ஒருவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன்’’ குதூகலமான குரலில் சொன்னார்.

''யார் அந்தப் புதியவர்'' ஆவலோடு கேட்டான்.

'என் மனைவிதான்''

'ஓ மேடம் உங்களைப் பார்க்க வந்திருக்கிறாங்களா'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

'நோ... நோ... இனி என் கூடவே தங்கப் போறாங்க''

'ரொம்ப நல்லது. நல்ல சாப்பாடு இல்லாம நீங்க ரொம்ப மெலிஞ்சுப் போயிட்டீங்க''.

ஆமா அது உண்மைதான் என்று சாமுவேல் ஒப்புக் கொள்வதுபோல் தலையாட்டினார்.

வீட்டின் வெளி வராந்தாவில் வழக்கத்துக்கு மாறாகப் பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அதில் ஒன்றில் சங்கரன் உட்கார்ந்து கொண்டான்.

''இந்த நாற்காலியில் உட்கார மிகவும் வசதியாக இருக்கிறதே'' என்று தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினான்.

'அதனால்தானே அதை வாங்கிப் பயன்படுத்துகிறேன்.'

தனது பூட்ஸ்களுக்குப் பளபளப்பு ஏற்றிக்கொண்டே சொன்னார் ஆசிரியர்.

'என்ன சங்கரா, ஊருக்குப் புறப்பட்டாகி விட்டதா?'

''எல்லாம் தயார். உங்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு போகத்தான் வந்தேன்.'

'மேல் படிப்புக்கு எண்ணம் உண்டா?'

'முன்பே உங்களிடம் தெரிவித்து விட்டேனே' என்றான்.

'இங்கிலாந்தில் இருக்கும் என் இரு சகோதரர்களில் ஒருவன் இங்கிலாந்திலேயே இருந்து விடப் போவதாகவும். மற்றொருவன் ஆஸ்திரேலியா போய்விடப் போவதாகவும் கடிதம் வந்துள்ளது. போகும் வழியில் என்னை வந்து பார்த்துவிட்டுப் போவதாக எழுதியுள்ளான்'' என்று சங்கரனுக்கு ஒரு தகவல் போலச் சொன்னார் சாமுவேல்.

''இதையெல்லாம் கேட்பதற்கு மிகுந்த ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் தருகிறது. ஆனால் அவர்கள் இப்படிச் செய்வது உங்களினத்தவருக்கு அல்லது பொதுவாகவே துரோகமாகாதா'' என்று கேட்டான்.

ஆசிரியரின் பார்வை சங்கரனைத் துடிப்போடு பார்த்தது. ஆசிரியரின் மனைவி டோரா தேநீர் கொண்டு வந்தார். ''எனது

மாணவர் தேநீர் அருந்த மாட்டார்'' என்று சொல்லிவிட்டு அவருக்கு ஒரு கோப்பை எடுத்துக் கொண்டார்.

ஆசிரியரின் மனைவியைப் பார்க்க சங்கரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பார்ப்பதற்கு நீல நிறக் கண்களுடன் வெள்ளைப் பெண்மணி போல இருந்தார்.

'ஓ, இவர் பிராமண மாணவரா'' என்று ஆங்கிலத்தில்கேட்டாள்.

''ஆமாம் இவர் பிராமணர்தான். ஆனால் தீட்டு போன்ற ஆசாரங்களைக் கடைபிடிப்பதில்லை''

''உங்கள் மாணவர் என்பதால் அப்படி மாறிவிட்டாரோ' என்றபடி அந்த அம்மாள் சிரித்துக்கொண்டே உள்ளே போய் விட்டார்.

''எல்லோரிடத்திலும் சேவையை எதிர்பார்க்க முடியாதல்லவா? என் மனைவியின் மூலமாக நானும் வெளிநாடு சென்றுவிட முடியும். நான் அதைக் கொஞ்சமும் விரும்பவில்லை. மேலும் யுத்தம் தொடங்கி விட்டதாம். ஹிட்லர் பெருத்த வெறியோடு போரில் இறங்கியுள்ளானாம். இந்தப் போர் அவ்வளவு எளிதில் நிற்காது என்று கருத்துத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளான் என் தம்பி. இந்தச் சூழ்நிலையில் கிடைத்த எந்த ஒரு வாய்ப்பையும் ஆங்கிலேயர் பயன்படுத்திக் கொள்ளத்தான் செய்வார்கள். தங்களுக்கு வாழ்வும், மனித உரிமைகளும், தந்தவர்களுக்கு விசுவாசமாய் இருப்பது நியாயமானதுதானே.'

''அப்படியானால் உங்கள் சகோதரர் முடிவு சரி என்கிறீர்களா?'

''உறுதியாக! ஏன் உங்களது நுகத்தடிகளைச் சுமந்து இங்கு அடிமைகளாய் இழிந்து வாழச் சொல்கிறாயா?'

''அப்படியில்லை. அவருக்குக் கிடைத்த கல்வியைத் தங்கள் மக்களின் விடுதலைக்கு அவர்களது அறியாமைப்போக்குவதற்குப் பயன்படுத்தலாமே.'

''நான் முன்பே சொன்னபடி, பொதுச் சேவையை எல்லோரிடத்திலும் எதிர்பார்க்க முடியாதே. எனக்கு வாய்ப்பு இருந்தும் வளமான வாழ்வு தேடி வேறு எங்கும் போகப் போவது இல்லை. இங்கு இருந்து கொண்டே ஏனைய தீண்டப்படாத மக்களுக்குக் கல்விக் கண் திறக்க உதவியாய் இருப்பதே என் குறிக்கோள். என்னை உங்களால் சந்தேகப்பட முடியுமா?'

சங்கரன் தலையாட்டினான். கூடவே ''இது போன்ற

சாதிய அமைப்பு எத்தனைக் காலம் நீடிக்கும். முகமதியரோ ஆங்கிலேயரோ மற்றைய ஏனைய அயலார்களோ வந்து நம்மை ஆட்சி செய்து, நம் அனைவரையும் அடிமைப்படுத்தியது எதனால்? சாதிகளால் நாம் பிரிந்து கிடந்து நம்மை நாமே பலவீனப்படுத்தி கொண்ட தால் தானோ!'' என்றான்.

'மறுக்க முடியாத உண்மை. இதிலென்ன சந்தேகம். ஆனால் இதில் ஒரு வினோதம் என்னவென்றால் நீங்கள் சில காலங்கள் தான் அடிமையாக இருந்திருக்கிறீர்கள். என் போன்ற தீண்டப்படாத மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அடிமையினும் கேடாக பாம்பு, எலிகளை விடக் கேவலமாக நடத்தப்பட்டு வந்ததையும் அதற்கு மூல கர்த்தாக்கள் நீங்கள்தான் என்பதை உணர்ந்திருக்கிறீரா பிராமணரே?' என்று எதிர்பாராத சமயத்தில் இதயத்தில் ஈட்டிப் பாய்ச்சுவதைப் போல் தாக்கினார் ஆசிரியர்.

உண்மையில் சங்கரன் நிலைகுலைந்துதான் போனான் 'ஆமாம்' என்று வேகமாகத் தலையாட்டினான்.

'ஆனால் மற்றவர்களுக்கும் இந்த அநீதியில் எந்தப் பங்கும் இல்லை என்பதை உங்களால் மறுக்க முடியாது.''

'சரி சங்கரா, அதற்கு நான் ஒரு விளக்கம் சொல்லட்டுமா?'

''ஓ தாராளமாக'' அவன் ஆர்வத்துடன் ஆசிரியரை உற்றுப் பார்த்தான்.

ஆசிரியர் தொண்டையைச் செருமிக்கொண்டு ஆரம்பித்தார். ஓரிடத்தில் புதையல் இருப்பதை அறிந்தவன் அதைத் தான் மட்டும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையோடு, அதனை எடுத்துச் செல்ல எத்தனிக்கும் போது புதையலை அபகரிக்கத் துணியும் பலமுள்ள சில எதிரிகளைத் தன் புத்தியால் வீழ்த்தி, புதையலில் மிகச்சிறிய சொற்பப் பங்கை அவர்களுக்குப் பகிர்ந்தளித்துவிட்டு மீதியைத்தான் அபகரித்துக் கொண்டு பங்கு கேட்கத் துணியாத பலமற்ற ஏனையோரைப் புதைகுழியில் தள்ளி புதையலைப் பற்றி அறிந்து கொள்ளவோ, அறிந்துகொண்டால் அடைய முடியாதபடி, கடும் கட்டுத் திட்டமான கொடூர ஏற்பாடுகளைச் செய்தது யார்?

இயற்கையாகவே அவரிடத்தில் அழுத்தமான கடுமை பரவிய முகத்தைச் சங்கரன் பார்த்ததில்லை. இப்போது முதல்முறையாகப் பார்த்தான்.

இந்து சாஸ்திரமான மனுச் சட்டத்தைப் பற்றியும், தகாதவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதையும் தான்

குறிப்பிடுகிறார் என்று சங்கரன் புரிந்து கொண்டான்.

'மன்னிக்க வேண்டும் ஐயா, நான் உங்களை எல். கேட்கலாமா?'

'கண்டிப்பாகக் கேட்க வேண்டும்'' என்றவர் சங்கரனின் கேள்வியை ஆவலோடு எதிர் நோக்கினார்.

'இந்து என்று தன்னைக் கருதிக்கொள்ளும் ஒரு தீண்டப்படாதவர் என்னைக் கேட்டிருந்தால் நான் அதற்குத் தக்க பதிலைச் சொல்லி இருக்கமுடியும். நீங்களோ கிறிஸ்துவர். இந்தக் தூண்டிலில் இருந்து தப்பி அந்த வலையில் போய்ச் சிக்கிக் கொண்டவர். இதுபோன்ற கேள்வியைக் கேட்பதற்கு உங்களுக்கு எந்த முகாந்திரமும் இருப்பதாய் நான் உணரவில்லை.''

'சரி, நான் ஒரு கிறித்துவன் என்பதற்காக எனக்கு எல்லா விதமான சாதியக் கட்டுகளில் இருந்தும் விடுதலை கிடைத்து விட்டதா?'

'நீங்கள் எனக்கு ஆசிரியராக இருக்கிறீர்கள்.''

''ஆமாம். இந்த மாற்றம் தந்தவன் வெள்ளையன்தானே. யாரோ எங்கிருந்தோ வந்தவன் எனக்குத் தந்த சொற்ப விடுதலை. ஒருவேளை அவன் வெளியே போய்விடலாம். அப்போது என் நிலை ஏனைய மக்களின் நிலை?''

'அப்போது மதம் உங்களைக் காப்பாற்றும்'' இப்படிச் சொன்னதற்காக அவன் வெட்கப்படவும் வருந்தவும் செய்தான். காப்பாற்றும் என்ற நம்பிக்கையோடு மதத்தைப் பிடித்துக் கொண்டிருப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், நீங்கள் சொன்ன ஒரு வார்த்தை உண்மையானதுதான். நான் இந்துவாக இருந்தேனோ இல்லையோ அதுபோன்ற ஒரு வலையில் இருந்து நான் விடுவிக்கப்பட்டு விட்டேன். இப்போது வேறு ஒரு வலை என்னை இறுக்க மூடிக்கொண்டுவிட்டது போன்ற உணர்வு எனக்கு இருக்கிறது.''

ஆசிரியர் சிரித்தார். ஆமாம் நான் வேறு வலையில் தான் சிக்கிக்கொண்டேன் என்பதுபோல் தலையசைத்தார். ''புதைகுழியில் சிக்கித் தவிக்கும் மனிதன் தனக்கு எதிரே தெரியும் இடைக்கழியைப் பற்றிக்கொள்வானா? மாட்டானா? நிச்சயம் பற்றிக் கொண்டு கரையேற முயற்சிப்பான்.'

''அப்படியானால், நீங்கள் தான் கரையேறி விட்டீர்களே, பிறகு ஏன் இந்துமதச் சாஸ்திரங்கள் பேரில் காழ்ப்போடு இருக்கிறீர்கள்?''

'நான் கரையேறி விட்டேனா?' அவர் ஆச்சர்யத்தோடு கேட்டார். அனைத்து விதமான மக்களுடன் சமூக உரிமையோடு தத்துவமாக வாழ்ந்தால்தான் கரையேறியதாக அர்த்தம். என்னை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்து தருவீர்களோ'' என்று கேட்டுவிட்டு சங்கரனை ஆழ்ந்துப் பார்த்து கண் சிமிட்டினார்.

'பல ஆண்டுகளாக வளர்ந்து செழித்து நிற்கும் இந்த முள் மரத்தை ஒரேயடியாகச் சாய்த்துவிட முடியும் என்று எப்படி நினைப்பது. நான்கு விதை நாலாயிரம் விதைகளாக பெருகிப் போய்க் கிடக்கிறது. எனக்குள் இருந்த மரத்தை நான் அடியோடு வெட்டிச் சாய்த்துவிட்டேன். அது என்னிடத்தில் இல்லை என்பதை நீங்கள் நம்புவீர்கள் என்று நான் நம்புகிறேன்.''

'நான் கேட்ட கேள்விக்கு நேரிடையான பதில் இது இல்லையே. நீர் சொல்வதுதான் பதில் என்றால், நான் கொண்டிருப்பது காழ்ப்பு அல்ல. நான் மதம் மாறிவிட்டதால் இந்த நிலையை அடைந்தேனா இல்லை என்பதே என் முடிவான கருத்தாகும். உங்கள் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நான் பயில நீங்கள் அனுமதித்திருந்தாலும் நான் இந்த நிலைக்கு உயர்ந் திருப்பேன். நான் கிறிஸ்தவனாக இருப்பதால் எனது மேல் படிப்புக்குச் சிபாரிசுக் கடிதம் கிடைத்தது. நான் இப்போது பாடசாலையில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததும் அதே மதகுருமார்களின் சிபாரிசுதான். எனது திறமையை முன்வைத்து தான் இந்த சிபாரிசுகள் எல்லாம் நான் கிறிஸ்தவன் என்பதற்காக மட்டுமல்ல என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனது திறமையைப் பற்றி உங்களுக்குத் தெரியும். இந்துக்களின் கல்லூரியில் என்னை ஆசிரியராக இருக்க வாய்ப்பு தருவார்களா, ஓரிரு ஆண்டுகளாகத்தான் ஆதிதிராவிட மாணவர்களையே இந்துக் கல்லூரியில் அனுமதிக்கிறார்கள். இவ்வளவும் இருக்கும் இந்தத் தேசத்தில் நான் எங்கு போய் அடைக்கலம் புகுந்தாலும் நான் ஒரு தீண்டப்படாதவனே. பிராமணர் காபி கிளப்புக்குள் நான் நுழைய முடியாதபோது கிறிஸ்தவனாகித் தப்பிவிட்டேன் என்கிறீரே இது நியாயமா?

நான் வெள்ளையனோடு சுமூகமாக வாழமுடிகிறது. அவ்வளவே. இந்தியர் என்று சொல்லிக்கொள்ளும் இந்தியரோடு என்னால் சுமுகமாய் வாழ முடியுமா? அவரின் வாதம் நியாயம்தான் என்று நினைத்துக் கொண்டான்.

சங்கரன் ஆசிரியரைப் பார்த்தபடி அமைதியாக

உட்கார்ந்திருந்தான். அவரது வார்த்தைகளைக் கேட்க ஆவலோடு காத்திருந்தான். அவரது நெஞ்சுக்குள் கனன்று எரியும் பெருந் தீயையும் அதன் விளைவாக எழும் வேதனையையும் புரிந்துகொண்டான்.

'இந்திய தேசத்தில் தலைவிரித்தாடும் இந்தக் கொடிய சாதிய பாசிசம் வேரோடும் வேரடி மண்ணோடும் வெட்டி வீழ்த்தப்பட்ட வேண்டும் அப்போதுதான் இங்கே உண்மையான நாகரிகம் மலரும். இந்தத் தேசத்துக்கும் அப்போதுதான் உண்மையான விடுதலை கிடைத்ததாகக் கருத முடியும். அதுவரை எந்த மகாத்மாக்களாலும் இந்தியர்களை ஒன்றுபட்டவர்களாக மாற்றமுடியாது. மாறவும் சாத்தியமில்லை. எந்த மதப் போர்வையும் என்னைக் காப்பாற்ற முடியும் என்று நான் நம்பவில்லை.

''கல்வி மட்டும் தான் என் போன்ற மக்களைக் காப்பாற்ற முடியும்.''

'அப்படியானால், கிறுஸ்தவ மதத்துக்கும் உங்கள் ஆதரவு கிடையாதா?'

உண்டு என்று சொல்ல வாயெடுத்தார். பிறகு ஏனோ தயங்கினார். ஆனால் ஒப்புக்கொள்வது போல் தலையசைத்தார். கூடவே உறுதியான வார்த்தைகளால்,

'நிச்சயம் அவர்களுக்குத்தான் என் ஆதரவு. அவர்கள்தான் எங்களுக்குக் கல்வியைத் தந்தவர்கள். அதற்காக நான் அவர்களை ஆதரித்தாக வேண்டும். அதே நேரத்தில் யாரும் மதத்தை ஆதரித்துக் கொண்டு இருக்கவேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மனிதனைப் பேணி ஆதரிக்கத்தான் மதம் என்று நம்புபவன் நான். போர்சுகீசியரும், டச்சுக்காரரும் இந்தியாவுக்கு வந்தது மதத்தைப் பரப்ப அல்ல; வியாபாரம் செய்ய. பலம் போட்டிக் காரணமாக பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் வந்தார்கள். கூடவே மதமும் வந்துவிட்டது. மொத்தத்தில் நம்மை அடிமைப்படுத்தியவர்கள் அந்நிய வியாபாரிகளும் அவர்களுக்குப் பின்புறம் நின்ற மதவாதிகளும்தான். அதற்கு வழிவிட்டதோ நமது ஒற்றுமையின்மை. நாம் ஒன்றாய் இருப்பதற்குத் தடையாய் இருப்பது எது? அந்தத் தடைநீக்கப்படும் வரை நாங்கள் மட்டுமல்ல நாம் ஒட்டுமொத்தமாக எப்போதும் அடிமைகள் தான். பல வழிகளில் நாம் அடிமைப் படுத்தப்பட்டுக் கொண்டேதான் இருப்போம். நான் சொல்வதின் அர்த்தம் உனக்குப் புரிகிறதா

சங்கரா' என்று கேட்டார்.

'முழுவதும் அப்பட்டமாகப் புரிகிறது ஐயா. உங்கள் மத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?'

'ஓஞ் நீங்கள் என்னிடத்திலே கேட்பதற்கு நிறைய கேள்விகளை வைத்திருக்கிறீர். அப்படித்தானே.'

'நிச்சயமாக உங்களிடம் இருந்து நான் நேர்மையான நடைமுறை சிக்கலற்ற பதில்களைத்தான் எதிர்பார்க்கிறேன்'' என்று அடக்கத்தோடு சொன்னான்.

தன் மாணவனை அன்போடு பார்த்தார் ஆசிரியர். அவர் கண்களில் நம்பிக்கை சுடர்ந்தது.

'என் மதத்தைப் பொருத்தமட்டில் யேசுவை நான் நேசிக்கிறேன். காரணம், அவர் ஒரு முற்போக்காளர் என்றே நான் கருதுகிறேன். காரணம், ஒரு விபசாரியின் குற்றத்தைக்கூட சமூகத்தின் குற்றமாகச் சுட்டிக்காட்டிய முதல் ஆன்மிக மனிதன். அன்பினால் அடைய முடியாதது ஏதுமில்லை என்று உணர்த்திய அற்புதர். உன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டச் சொன்ன புனிதர் என்றே இயேசுவை நான் நினைக்கிறேன். மற்றபடி என் எல்லா தேவைகளுக்கும் நான் அவரிடம் மன்றாடிக் கொண்டிருக்கப் போவதில்லை. நம் மூதாதையரில் அவர் ஓர் அறிவாளி மட்டுமல்ல, மனிதரை மனிதர் பேதமற்று நேசிக்கச் சொன்னவர். அவரை நான் நியாயம் நிறைந்த மனிதனாகப் பார்க்கிறேன். அவரை மாயா ஜாலம் செய்யும் மந்திரவாதியாகப் பார்ப்பது மனிதனின் பேராசைதான் என்பது என் கருத்து. இதில் வினோதம் என்னவென்றால், இங்கிலாந்து போய் தங்கிவிட்டான் என்று சொன்னேனே எனது தம்பி அவன் ஒரு மதபோதகனாய்த்தான் திரும்பி வருவான் என்று நம்புகிறேன். அவனுக்கு. அந்த மதத்தில் முழு ஈடுபாடு உண்டு. அது அவனுடைய விருப்பம். என்னைப் பொருத்தமட்டில் மதம் மனிதனை நெறிப்படுத்தும் நல்ல திட்டம். அந்த அளவில் மட்டுமே மதத்தோடு உறவு வைத்துக் கொள்ள விரும்புகிறேன். இயேசு ஒருவேளை வந்தால் கோயிலில் பிரசங்கம் செய்வதை விடுத்துத் தீண்டாமைக்கு எதிராகப் போராடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் அறிந்த யேசு ஒரு சமூகப் போராளி. பூலோக வாழ்க்கையில் நல்ல நெறியோடு சகல மனிதருக்கும் பயனுள்ள

வகையில் இருப்பேன் என்றால் மேலுலக வாழ்க்கை என்ற மாயத்தில் எனக்கு அக்கறை கிடையாது'' என்றவர், சில விநாடிகள் பேச்சை நிறுத்திவிட்டுத் தொடர்ந்தார்,

''சாஸ்திரம், சம்பிரதாயம் என்று பாசிசக் கூச்சலிட்டுக் கொண்டு உயர்சாதி என்று தங்களுக்குத் தாங்களே பட்டத்தையும் சூட்டிக்கொண்டு அதற்குக் கடவுளையே சாட்சியாக வைத்தும் கபடத்தனமான சுயநலத்துடன் எங்கள் பாட்டன் முப்பாட்டன்களையும் போதுமான அளவு சீரழித்து உறிஞ்சிக் கொள்ளை அடித்துவிட்டார்கள். ஒன்றுமில்லாமல் போனவர்களை இப்போது புனரமைக்கப்பட வேண்டும். உங்கள் முன்னோர்கள் செய்து விட்ட தவறுகளுக்கு நீங்கள் பரிகாரம் தேடிக்கொள்ள முடியாது என்று நான் நம்புகிறேன்.'' அவரது முகத்தில் கடுமையான துயரம் படர்ந்தது. அந்தத் துயரத்தைச் சங்கரனால் புரிந்து கொள்ள முடிந்தது.

சமீப காலமாக குடிசைப் பகுதிகளுக்குப் போய் நிலைமைகளை நேரிலேயே கண்டுள்ளான். தூய்மைக் கேடான பகுதியில் குறிப்பாகச் சாக்கடைக் கால்வாய் ஓரங்களில்தான் அவர்கள் குடியிருப்பு பெருகிக் கிடந்தது. படுமோசமான அங்கே தூய்மைக்கேடு நிலவியது. தன்னால் சில மணி நேரம்கூட அங்கு இருக்க முடியவில்லை. இந்த மக்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டு வாழ்கிறார்கள் என்ற கேள்விக்கு அவனுக்குப் பதில் தெரிந்திருந்தது.

காயடிக்கப்பட்ட விலங்கிடம் இன விருத்தியை எதிர்பார்க்க முடியுமா? வருணாசிரம சட்டப்படி. இந்த வருணமற்ற மனிதனின் சகல சமூக நடவடிக்கைகளுக்கும் விலங்கு போடப்பட்டுள்ளது. அவனால் தப்பிச் செல்வது என்பதே சாத்தியமில்லை. விலங்குகளின் சிறுநீர்கூட அவர்களுக்குப் புனித தீர்த்தமாய் இருந்தது. இவனையோ அதையும்விட மிகமிகக் கீழாகத்தான் வைத்திருந்தார்கள். இந்த நிலையில் இந்த மனிதர்களிடம் நல்ல இதயம் மாசடையாமல் இருப்பதைப் பார்த்து அவன் ஆச்சர்யப்படத்தான் செய்தான்.

''சரி, இருவரும் சாப்பிட வாருங்கள்'' என்று ஆசிரியரின் மனைவி அங்கிலத்தில் அழைத்தார். அவர் வாயினின்று தவறிகூட மனைவி ஆங்கிலத்தில் தமிழ் வர மறுத்தது.

''சரியான மாணவர்தான் கிடைத்துள்ளார்' என்று சிரித்தார்.

''ஆமாம். உங்களுக்குப் பேசுவதற்கு எங்கிருந்துதான் விஷயங்கள் கிடைக்கிறதோ. நான் தொடர்ந்தாற்போல் பத்து நிமிடம் பேசினால், பிறகு வந்தவரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்'' என்று சொல்லிக்கொண்டே அப்பாவித்தனமாகச் சிரித்தார்.

சாப்பாட்டு மேசையில் பொரித்த ரொட்டித் துண்டுகளும் சாதாரண ரொட்டித் துண்டுகளின் மேல் பழுப்பு நிற வெண்ணெய்த் தடவி உண்ணத் தயார் நிலையில் இருந்தது. சில பச்சை வாழைப் பழங்களும் மணக்கும் தேநீரும் பசியை வரவழைக்கும் சூழலை உண்டாக்கியது. உணவுப் பாத்திரம் நேர்த்தியாகச் சுத்தமாக இருந்தது. சன்னல் திரைகளில் பூவேலைகள் செய்யப்பட்டுப் பார்ப்பதற்கே இனிமையாக இருந்தது. உணவறைத் தூய்மையும் நேர்த்தியும் சங்கரனை மிகவும் கவர்ந்துவிட்டது.

'என்ன ஐயரே! பயப்பட வேண்டாம். நீங்கள் இங்கு இருக்கும் வரை மாமிசமோ மீனோ செய்துவிட மாட்டோம். உங்களுக்கு எந்தச் சங்கடமும் வேண்டாம்.''

சங்கரன் இயல்பான கூச்ச உணர்வுடன் அன்பான அவர்களின் உபசரிப்பில் ரொட்டித் துண்டுகளைச் சுவைத்தான். மனிதருக்கு மனிதர் உணவில்கூட வித்தியாசம் வந்துவிடுகிறது. எல்லாம் பழக்கத்தில்தான் இருக்கிறது என்பதுபோல் தலையை அசைத்துக் கொண்டான்.

ரொட்டி நல்ல மணத்துடன் சுவையாக இருந்தது. வெண்ணை வீட்டில் தயாரித்தது என்று விளக்கம் கொடுத்தாள் டோரா.

உணவை முடித்துக்கொண்டு அவர்கள் வெளியறைக்கு வந்தபோது, இளம் பெண் ஒருத்தி நின்றிருந்தாள். 'புதிய புத்தகம் ஏதாவது இருக்கிறதா மாமா'' என்று ஆசிரியரிடம் கேட்டாள். பார்ப்பதற்கு வெள்ளைச் சிறுமி போல இருந்தாள்.

'ஆமாம். இனியவளே, உனக்காக ஒரு புத்தகம் வைத்திருக்கிறேன். கோரா. தாகூரின் அருமையான புத்தகம்.''

தனது புத்தக அலமாரியில் இருந்து சமீபத்தில்தான் வாங்கப்பட்ட அந்த புத்தகத்தை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தார்.

வண்ண மீன் மாதிரி இருந்த அந்தச் சின்னப் பெண் மிகுந்த ஆவலோடு அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு புரட்டினாள்.

நாளை மாலையே தந்துவிட வேண்டும் என்று கண்டிப்போடு

சொன்னார்.

"என் நண்பருக்குப் பரிசாகத் தரப் போகிறேன். மாலைக்குள் கண்டிப்பாகத் தந்துவிட வேண்டும் சரியா?"

சரி என்பதற்கு அடையாளமாக அவள் வேகமாகத் தலையாட்டினாள்.

பிறகு அவள் வேகமாகப் போய்விட்டாள். ஆங்கிலோ இந்தியர்கள் இந்தியப் படைப்புகளையும் படிக்கிறார்கள். ஏறக்குறைய அவர்களுடைய மனோபாவம் வெள்ளையரின் மனோபாவமாகவே மாறிவிட்டிருக்கிறது. டோரா அம்மையார் ஆங்கிலோ இந்திய வம்சா வழியில் வந்தவர். அவரைப் பார்க்க அசல் வெள்ளைப் பெண் போலவேதான் இருந்தார். இங்கு ஒரு புதிய உலகமே உருவாகி விட்டதை சங்கரன் உணர்ந்தான்.

இந்திய சமுதாயம் இப்படியே கட்டுப்பெட்டியாய் கோணல் புத்தியோடு இருக்குமாயின் இந்துத்துவம் என்ற ஒரு வார்த்தை வருங்கால வரலாற்றுப் பாடங்களில் மட்டுமே இருக்கும் என்ற பயம் அவனைப் பிடித்தாட்டியது. பௌத்தம் வந்தது, ஜைனம் வந்தது, என்ன ஆனது, அது நமதோடு கலந்து விடவில்லையா?

இஸ்லாமும், கிறிஸ்தவமும் வந்ததும் இந்து மதம் ஆடி போய்விடாது என்ற எக்காளப் பேச்சு காலாவதியாகும். நாள் வந்துவிட்டது. இப்போது கல்வி வரப் போகிறது. கல்வி கற்ற மனிதனிடமிருந்து கேள்வி வரும்.

கேள்விகளுக்கு நம்மிடம் எந்தப் பதிலும் இருக்கப் போவதில்லை. இனி ஆட்டங் காணத்தான் செய்யும். வருங்கால சந்ததியினர் அந்த ஆட்டத்தின் அதிர்ச்சியைப் பார்க்கத்தான் போகிறார்கள் என்று மனதுக்குள் எண்ணமிட்டான்.

"என்ன ஆழ்ந்த யோசனையா" என்று குறுக்கிட்டார் ஆசிரியர்.

சிரித்தபடியே இல்லையென்பதுபோல் தலையசைத்தான்.

"என்னதான் யோசனை செய்தாலும் குழப்பம் மட்டுமே மிஞ்சுகிறது. செயலில் இறங்கவேண்டும். அது ஒன்றுதான் குழப்பம் தீர ஒரே வழி' என்றார் அவர்.

"சரியாகத்தான் சொல்கிறீர்கள்.'

"சரி அது இருக்கட்டும். நீ இன்று எங்களுடன் தங்கிவிட்டு நாளை புறப்படலாமே.'

சங்கரன் மனதிலும் அந்த எண்ணமே இருந்தது.

‘நீங்கள் அனுமதித்தால் இன்னும் சில நாட்கள்கூட. நான் உங்களோடு தங்கியிருக்க விரும்புகிறேன்.‘

ஓ... தாராளமாக என்று மகிழ்ச்சியோடு வரவேற்றார்.

இந்த விடுமுறை நாட்களில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதப் போகிறேன். அது குறித்து நாம் கலந்துரையாடினால், நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன் என்று சொன்னார் சாமுவேல்.

‘சரி, நாம் மூவரும் கொஞ்ச நேரம் சீட்டு விளையாடுவோம். கொஞ்சம் பொழுதுபோக்காக இருக்கும். என்ன’’ என்று கேட்டாள். நல்லியல்பு வாய்ந்த அந்த அம்மையாரின் முகத்தில் கனிவும் தாராள மனப்போக்கும் தெரிந்தது.

‘சரி, சங்கரா நாம் கவனத்தை வேறு பக்கம் திருப்புவோம். என் மனைவி நம் இருவரையுமே தோற்கடித்து விடுவாள். ஐரிஸ் வம்சத்தவள். விடாப்பிடியால் வெற்றியின் மீது கவனத்தை வைத்திருப்பவள்.

அவளுடைய உணர்வுகளுக்கும் நாம் மரியாதை கொடுப்போம் என்று சிரித்தார். நாம் இருவரும் சமூகத்தைப் பற்றியும் இன்னும் எவ்வளவோ பேசவேண்டியிருக்கிறது.

இந்தத் தருணத்தில் நாம் டோராவை ஒதுக்கி விட்டோம் என்று அவள் நினைத்துக்கொள்ளப் போகிறாள். அதற்காகவாவது நாம் அவளுடன் விளையாடவேண்டும் என்ன சொல்கிறீர்?’’

‘‘ஓ.. நிச்சயமாக....’’ அவன் விளையாட்டுக்குத் தயாராகி விட்டான்.

‘சீட்டுகளை மழை போலப் பொழிந்தார். சீட்டாட்டத்தில் என் டோரா நிபுணி தெரியுமா, உங்களுக்கு.’’

சங்கரன் நாணத்துடன் சிரித்தான்.

சீட்டுகளை மூவருக்குப் பகிர்ந்து வட்டமாக போட்டுக் கொண்டிருந்தார். அவர் கையினின்று சீட்டுகள் துள்ளி வந்து விழுந்தன. கடைசியில் தனக்குப் போட்ட சீட்டைத் திருப்பிப் போட்டார். அது அனைத்துக்கும் பொருந்தும், நகைச்சுவையாளன் சீட்டு.

‘ஓ அடித்தது அதிர்ஷ்டம்’’ என்று குழந்தை போல் பரவசத்தோடு கத்தினார்.

தனது சீட்டுகளை வரிசையாக அடுக்கிவிட்டு, ‘‘ஓ யேசுவே.. என்று மலர்ச்சியோடு கத்தினார். பிறகு இயல்பாகச் சிலுவைக்

குறியிட்டுக் கொண்டார்.

'இயேசு என் பக்கத்தில் இருக்கிறார். உங்கள் கள்ளத்தனம் ஈடேறாது பாருங்கள்'' என்றபடி.

சீட்டுக்களை வரிசையாக அடுக்கிவிட்ட பிறகு, டோராவின் முகம் கடுகடுப்பாகி விட்டது.

ஓ இப்படியாகி விட்டதே என்று முணுமுணுத்தார். மூவரிடம் இருந்தும் கார்டுகள் துள்ளி வந்து விழுந்தன.

டோரா அம்மையார் ஒரு சீட்டை உருவிப் போட்டு தலையில் தானே தட்டிக் கொண்டார். அவர் போட்டதோ நகைச்சுவையாளன் சீட்டு. அதை எடுத்ததோ ஆசிரியர். எந்தச் சீட்டுடனும் பொருந்தக்கூடியது அது. மகிழ்ச்சியில் அவர் ஓ'வென்று கத்தினார். சீட்டாட்டம் ஆர்ப்பாட்டமாய் போய்க் கொண்டிருந்தது. முதல் ஆட்டத்தில் சாமுவேல் வெற்றியடைந்தார்.

என்ன அன்பே, உன்னை இயேசு கைவிட்டு விட்டாரே என்று கிண்டலடித்தார்.

நீங்கள் ஜோக்கரைப் போடுவீர்கள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்றான் சங்கரன்.

போதும்... நீங்களும் உங்கள் ஆசிரியரும் ஏதோ தில்லு முல்லு வேலைகள் செய்துவிட்டீர்கள். இல்லையென்றால், வெற்றி எனக்குத்தான் என்று ஏமாற்றத்தோடு மொழிந்தார்.

இதே போக்கில் நான்கு ஆட்டங்கள் ஆடினார்கள். நல்ல வேளையாக கடைசி ஆட்டத்தில் டோராவுக்கு வெற்றி கிடைத்தது. சிறுமியைப் போல துள்ளிக் குதித்தார். உண்மையாகவே அவரது முகம் சிறுமியுடையது போலத்தான் இருந்தது.

இது போதும் இனி நான் வீட்டு வேலைகளைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே சமையலறைக்குப் போய் விட்டார்.

பிறகு ஆசிரியர் தனது சீட்டுகளைக் கவிழ்த்துப் போட்டார். அவரிடத்தில் ஏற்கெனவே சீட்டுகள் பொருந்திவிட்டிருந்தது. சங்கரைனைப் பார்த்து ஆசிரியர் கண்சிமிட்டினார்.

சங்கரா நாம் மாடிக்குப் போவோம். அங்கு மாலைப் பொழுதில் அருமையான காற்று வீசும் என்றார்.

அன்றைய மாலைப்பொழுது அருமையாகவே இருந்தது. தூரத்தில் பஞ்சாலையின் புகைப்போக்கி தெரிந்தது. அங்கிருந்து

வெளியான புகையும் தூசியும் மட்டும் இந்த மண்ணில் படிந்தது. அதில் உற்பத்தியான உயர்தர பருத்தித் துணிகள் கடல் வழியாக இங்கிலாந்துக்குப் போனது. தொழிற்சாலையைச் சுற்றி ஏராளமான குடிசைகள். பெரும்பாலும் தொழிற்சாலை நிர்வாகமே கட்டித்தந்த புதிய தளமிட்ட குடியிருப்புகள் தெரிந்தன.

மாடியில் இருந்து பார்த்தால் பெரும்பாலும் குடிசைகளே தெரிந்தன. அங்கிருந்து அமைதியற்ற இரைச்சல் கேட்டது.

''அந்தச் சூழ்நிலையை அவர்கள் வெறுப்பதாகவே தெரியவில்லை. துர்நாற்றத்தில் இயல்பாகவே இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். சிந்தனை எதுவும் அற்ற நிலையில் ஏதோ குற்றச் சாட்டு போல் சொன்னான்.

ஆமாமாம். தூரத்தில் இருந்து பார்க்கும் உங்களைப் போன்ற பலருக்கும் அப்படித்தான் தோன்றும். அவர்கள் அந்த சூழ்நிலைக்குள் வலுக்கட்டாயமாகத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். வேறு வழியில்லாமல் அவர்கள் அதில் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்கள். மலத்தையும் துர்நாற்றத்தையும் யாராவது நேசிப்பார்கள் என்று நான் நம்பவில்லை.

''உங்கள் சட்டமேதை மனு எழுதியதை நீங்கள் படித்துப் பார்த்திருப்பீர்களே! சூத்திரர்களுக்குக் கல்வி கற்பிக்கக் கூடாது. கற்பிப்பவரின் குரலைக்கூட கேட்கக்கூடாது. அப்படி ஒருவேளை அப்படிக் கேட்க நேர்ந்துவிட்டால் கேட்பவரின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றச் சொன்ன பாசிசப் பேய்த்தனத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? சூத்திரருக்கே இந்தக் கதியென்றால், வருணமற்ற இவர்கள் கதி. யோசித்துப் பாருங்கள்.

அதனால்தானோ என்னவோ, இவர்களை இப்போது காந்தி கடவுளின் குழந்தைகள் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார். இது உபயோகமற்ற காரியம் என்றே நினைக்கிறேன்.

''இந்த மக்களின் நிலையைச் சரியாகப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்காத பட்சத்தில் அவர்களைப் பற்றிச் சிந்திக்காமல் விட்டுவிடுவதே நல்லது''

'நீங்கள் சொல்வது அத்தனையும் மிகவும் சரியானதே. நான் மறுக்கவில்லை. மறுக்கமுடியாது என்றே கருதுகிறேன். ஆனால், அவர்களைச் சுத்தக் குறைவாக இருக்கச் சொல்லி யாரும் வற்புறுத்தியதாக எனக்குத் தெரியவில்லை. கூடவே சுத்தத்திற்கும் கூடவா கல்வியறிவு வேண்டும்.''

‘நல்ல கேள்வி கேட்டீர்கள் சங்கரா. யோசித்துப் பாருங்கள் உங்கள் ஊர் குளம், ஏரி, ஆறுகளில் அவர்களைக் குளிக்க நீர் எடுக்க அனுமதிக்கிறீர்களா? வண்ணார்கள் இவர்கள் துணிகளைச் சலவை செய்துதர மாட்டார்கள். சொந்தமாய்க் கிணறு வெட்டிக் கொள்ளக்கூடாது. இத்தனை கெடுபிடிகளுக்கு இடையே உங்கள் கேள்வி உங்களுக்கே நியாயமா?‘

‘அது கிராமங்களில். இங்கே அப்படியில்லை’’ என்றான் அவசரமாக.

‘ஒரு பகுதி முழுமைக்கும் ஒரே ஒரு குழாய்தான் போட்டிருக்கிறார்கள்.’’ ஆசிரியர் மேற்கு மூலையில் சுட்டிக் காட்டினார். ‘நேரத்தில்தான் விடுவார்கள். சனங்கள் தண்ணீருக்காக எப்படி முண்டியடிக்கப் போகிறார்கள் என்று நீங்களே பார்ப்பீர்கள். பொதுவாக மழைத்தண்ணீர் தேங்கும் குட்டைகளில் குளித்து, துணிகளை வெளுத்தும் தான் தங்கள் அசுத்தங்களைப் போக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் தேவையை எல்லா வகையிலும் தடைசெய்துவிட்டு அவர்களைச் சுத்தக் குறைவானவர்கள் என்று குற்றம் சாட்டுவது படுகேவலமான முட்டாள்தனம் என்று நான் கருதுகிறேன். என் மனைவி எலிசபெத் டோரா இங்கிலாந்தில் இருந்து வந்தவள் இல்லை ஐயா. நானும் அவளும் அங்கிருந்து வந்தவர்கள்தான்’’ என்று குடிசைகள் பக்கம் கையைக் காட்டிச் சொன்னார்.

‘‘ஐரிஷ்காரர் ஒருவர் தேவாலயம் கட்டும் வேலையாக இங்கு வந்து தங்கியிருந்திருக்கிறார். அவரிடத்தில் சமையல் செய்துகொண்டு அவருடைய பங்களாவிலே தங்கிவிட்டார்கள். வேலைக்காரத் தம்பதிகள். அவர்களின் ஒரே மகளுக்கும், ஐரி–ஷ்காரரான கட்டிடப் பொறியாளருக்கும் தரும் ஏதுமின்றிப் பிறந்தவள்தான் என் மனைவி எலிசபெத் டோரா. அவர் இங்குக் கட்டிடப் பணி முடிந்ததும் என் மனைவியின் தாயை அழைத்துக் கொண்டு இங்கிலாந்து போய்விட்டராம். அந்த புண்ணியவான் வயதான தன் தாய் தந்தைக்கு அவள் விட்டுச் சென்ற குழந்தைப் பாதிரிகளின் ஆதரவில் வளர்ந்துகொண்டு இருந்தாள். நானும் பாதிரிகளின் ஆதரவில்தான் வளர்ந்தேன். அந்தச் சூழ்நிலை–யில்தான் நாங்கள் பழகினோம். பின்பு செய்துகொண்டோம். நாங்கள் பண்போடு வளர்க்கப்பட்டோம். இப்போது நீங்கள் எங்களைப் பார்க்கிறீர்கள். எங்களிடத்தில் எந்த விதத்திலாவது

பண்பில் குறை கண்டீர்களா. நான் நீங்கள் இழிவாகக் கருதும் சேரியில் பிறந்து வளர்ந்தவன்தான். கல்வி ஐயா கல்வி, கல்விதான் நம் அனைவருக்கும் கதிமோட்சம். கல்வியைப் பறித்துவிட்டாலே போதும். விலங்காண்டிதான், அது நீங்களானாலும் சரி, நானாலும் சரி. ஒரு காலத்தில் கல்வியோடு சுதந்திரமாக இருந்த எங்களை நீங்கள் இந்த நிலைக்குத் தள்ளிவிட்டீர்கள். எங்கள் மூதாதையர் செழுமையான மொழிப் புலமையும் படைப்புத் திறனோடும் இருந்தார்கள். இன்று நீங்களே பாருங்கள்'' குடிசைப் பகுதி நோக்கி சுட்டிக்காட்டினார்.

'அவர்களுக்குக் கல்வி கிடைக்கட்டும். பாருங்கள் இன்னும் நாற்பது ஆண்டுகளில் மேதைகளும் தொழில் வல்லுநர்களும் தோன்றிவிடுவார்கள். இப்போதே கண்கூடாக உலகம் பார்க்கிறது. பீமாராவைப் போன்ற கல்வியாளர் உலகிலே வெகுசிலரேதான் இருப்பார்கள். யாராவது மறுக்க முடியுமா? ஒவ்வொரு நசுக்கப்பட்டவனும் மார்தட்டிக் கொள்ளமுடியும். இங்கிலாந்து வட்ட மேசை மாநாட்டில் போய், தன் மக்களுக்காகப் பேசிவிட்டு வந்துள்ளார். எவ்வளவு பெரிய மகத்தான செயல். அந்த மாநாட்டில் புலவர்களும், இலக்கியவாணர்களும் பெரும் பணக்காரர்களும் இருந்தார்கள். ஆனால்..'' என்று நிறுத்தினார் பேராசிரியர். பெருமை பொங்க தன் மாணவனைப் பார்த்தார். ஒரு பெரும் மூச்சொன்றை விட்டுத் தொடர்ந்தார்.

''பல்கலைக்கழகத்தில் முறையாகப் பயின்று பல துறைகளில் டாக்டர் பட்டம் பெற்று, அங்கீகரிக்கப்பட்ட அறிஞனாக வீற்றிருந்தது அம்பேத்கர் பீமாராவ் மட்டுமே. எண்ணிப் பாருங்கள். இவர்கள் ஒட்டுமொத்த பேருக்கும் கல்வி தந்தால் என்ன நடக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். உற்றுப் பாருங்கள் அவர்களை. எவ்வளவுதான் தாழ்த்தினாலும் அவர்களது இதயம் இன்னமும் அன்புடன் சுடர்கிறது. அவர்களது ஆன்மா கெட்டொழிந்துப் போகாமல் தூய்மையாகவே இருக்கிறார்கள். இன்னமும் பொறுமையும் பணிவுடனே இருக்கிறார்கள். அதை நீங்கள் பார்க்கிறீர்கள் இல்லையா?'' என்று சங்கரனைக் கேள்வியாகக் கேட்டார்.

பலநூறு ஆண்டுகளாக அடிமையாக இருக்கும் அவர்கள் மனதளவில் இன்னமும் தூய்மையாகவே இருக்கிறார்கள். அவர்களது உள்ளத்தில் அன்பு அணையாமல் இருக்கிறது.

உங்களால் இருநூறு ஆண்டுகால அடிமைத் தனத்தைக்கூட ஏற்க முடியவில்லை.முதலில் ஆங்கிலத்தை மிலேச்ச பாஷை என்று சத்தம் போட்டுச் சொன்னீர்கள். இப்போது உங்கள் எல்லோர் வாயிலும் ஆங்கிலம் நிரம்பி வழிகிறது. உங்களில் எத்தனைபேர் வெள்ளையனின் சதிகளுக்கு உடந்தையாக இருக்கிறீர்கள். நீங்கள் சுதந்திரம் கேட்பதற்குக் காரணம் இந்திய மண்ணின் வளங்களை நீங்கள் தனி சுதந்திரத்துடன் அனுபவிக்க மட்டுமே. ஆங்கிலேயன் புதுப்புது வழிகளைக் கற்றுக் கொடுத்து விட்டான். அத்தனையும் தனி சுதந்திரத்துடன் பயன்படுத்தத் துடிக்கிறீர்கள்.

உங்களுக்கு அவர்கள் கல்வியைத் தடை செய்யவில்லை. எந்தச் சமூக சுதந்திரத்தையும் தடை செய்யவில்லை. ராசாக்கள் ராசாவாகவே இருக்கிறான். ஜமின்தார் ஜமின்தாராகவே இருக்கிறான். அவர்களின் ஒரு சுகமும் குறைந்து போகவில்லை. அவர்கள் இங்கிலாந்துப் போய் கல்வி கற்கமுடியும். இங்கிலாந்து பெண்ணை மணந்துகொள்ள முடியும். இங்கிலாந்திலேயே தொழில் தொடங்கமுடியும். ஆனாலும், நீங்கள் உங்கள் அயலானுக்குக் கீழ் உள்ள அடிமையாகத்தான் கருதுகிறீர்கள்.

சுயராஜ்யம் பெற எத்தனைவிதமான போராட்டங்கள், எத்தனை விதமான சதியாலோசனைகள், ஆயுதப் போராட்டம், அகிம்சா போர் ஒருபுறம். இத்தனை போராட்டங்களும் எதற்கு?

உங்களுக்குத் தலைமை வேண்டும். நாட்டாண்மை செய்ய வேண்டும் என்ற வெறி. அவனது கல்வி, கலாசாரப் பண்பாட்டு மற்றும் மதம் பரவுவதால் உங்கள் சாஸ்திர சம்பிரதாயங்கள் கேலிக்குள்ளாவதோடு கேள்விக்குள்ளாக்கவும் செய்கிறது. இதைவிட முக்கியமான விஷயம் வெறும் இடுப்புத் துண்டோடு ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாய் இருந்தாலும் சரி, விலங்கினும் மோசமாக உங்கள் காலடியில் சேறோடு சோறாக நசுங்கிக் கிடந்த மக்களின் தோள்களில் அவன் கை போட்டு நடக்கிறான். அவனை மதம் மாற்றி தன் ராஜாவின் பெயரையே அவனுக்குச் சூட்டுகிறான். இதையெல்லாம் உங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவன் நல்ல பெயர்களைச் சூட்டிக் கொள்ளக் கூட அனுமதிக்காத நீங்கள் வெள்ளையனைப் பாருங்கள், தன் ராஜாவின் பெயரையே அவனுக்கு வைக்கிறான். இன்று ஜார்ஜ்களும் எலிசபெத்களும் சேரியில். அவன் தேவாலயத்தில் நுழைவதோடு மட்டுமல்ல, பூசாரியாகவும் மாறமுடிகிறது.

இந்த விஷயங்கள் உங்களுக்கு அதிர்ச்சயடைய வைக்கின்றன. உங்களால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், அங்கும் கூட சாதி சாதி வேறுபாடு இல்லாமல் இல்லை. தடுப்புச் சுவர்களும் சாதிய வேறுபாடுகளும் இருக்கிறதுதான். மதங்கள் பெரிய புரட்சிகளைச் செய்துவிடாது. மதத்தின் குணமே பழமையைத் தக்க வைப்பதுதானே.

இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம். உண்மையைச் சொல்லப் போனால், உங்களுக்கும் வெள்ளையனுக்கும்தான் பிரச்னை.

எங்களைப் பொறுத்தவரை நீங்கள் தான் எங்கள் முதல் பிரச்சினை. அவர்கள் இந்த மண்ணுக்குள் காலடி வைத்த பிறகுதான் வளைந்து கிடந்த எங்கள் கூன் விழுந்த முதுகு ஓரளவு நிமிர்ந்துள்ளது. எங்களை முழுமையாகக் கரையேற்றிவிடுவது அவன் வேலையல்ல. மொழி தெரிந்த அவனைச் சகித்துக் கொள்ளும் பணியாள் தேவை. எங்கள் வளர்ச்சியால் அது ஒரு நிலைதான். எங்களை முழுமையாகக் கரையேற்றிவிடுவது அவன் வேலையல்ல. மொழி உண்மை இப்படியிருக்க, உங்களது ஆயுத மற்றும் சத்தியாகிரகப் போராட்டங்களில் பெரும்பான்மையாகத் தீண்டப்படாதவர்களும் கலந்துகொள்கிறார்கள். வந்தே மாதரம், ஜெய் ஹிந் கோஷங்கள் அவர்கள் இதயத்தில் இருந்து பீறிட்டெழுகிறது. நீங்கள் தாழ்த்தி வைத்திருக்கும் மக்களின் ஆன்மாக்கள் தூய்மையோடு சுடர்வதை நீங்கள் பார்க்க முடிகிறது.

காந்தியார் அவர்களைக் கடவுளின் பிள்ளைகள் என்கிறார். அவர்களும் ஆட்டுக்குட்டிகளைப் போல அவர் பின்னாலே போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆனால், கடவுளின் பிள்ளைகளுக்குக் கோவிலின் கதவுகள் மூடியே கிடக்கின்றன. அந்தக் கதவுகள் வெள்ளையன் இந்த மண்ணில் இருக்கும்போதே திறக்குமோ அல்லது அவன் போன பின் உங்களோடு நாங்கள் இன்னொரு சுதந்திரப் போர் நடத்த வேண்டி வருமோ யாருக்குத் தெரியும். 'உச்...' என்று சலிப்பாக உதட்டைப் பிதுக்கினார்.

இப்படிப் பேசுவதால் என்னைச் சுதந்திரத்தின் எதிரி என்று நினைத்துவிட வேண்டாம். சுதந்திர இந்தியாவில் எங்கள் நிலை என்ன என்று யோசிக்க வேண்டியது ஒவ்வொரு நசுக்கப்பட்டவனின் கடமை. எங்களுக்கு நாங்களே தலைமையேற்க வேண்டும்.

எங்களில் ஒரேயொரு அயோத்திதாசப் பண்டிதனோ? ஒரேயொரு இரட்டை மலை சீனிவாசனோ ஒரேயொரு பீமாராவோ மட்டும் போதாது என்று நான் நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது.''

சங்கரன் ஆசிரியரைப் பெரும் வியப்போடு பார்த்தான்.

''உங்களின் பேச்சு எனக்கு ஆச்சர்யத்தைத் தருகிறது. உங்களோடு நான் பலகாலமாகப் பழகிவருகிறேன். ஆனா, இன்றைய உங்கள் கருத்துகள் என் மண்டையைச் சூட விட்டது. நிறைய விஷயங்களை நீங்கள் மனதுக்குள் புதைத்து வைத்திருக்கிறீர்கள்.'

'ஆமாம். இரண்டு நாட்களுக்கு முன்பு வரை நீங்கள் எனக்கு மாணவர். இன்று நீங்கள் எனக்கு மாணவர் மட்டுமல்ல நண்பராகவும் இருக்கிறீர்கள். நான் உங்களோடு தாராளமாகப் பல விஷயங்களை மனம் விட்டுப் பேசலாம் இல்லையா?'

''நிச்சயமாக.''

அவன் உடனே அவரை அங்கீகரித்தான். அந்த நேரம் பார்த்து டோரா தேநீரும், சங்கரனுக்கு எலுமிச்சைப் பழச்சாறும் எடுத்து வந்தார்.

இருவருமே மௌனமாக இருப்பதைப் பார்த்து அவருக்கு ஆச்சரியமாய் இருந்ததோ என்னமோ!

'என்ன இருவரும் அமைதியாக இருக்கிறீர்கள். மாடி வாக்குவாதம் செய்வீர்கள் கேட்டு ரசிக்கலாம் என்று வந்தேன் பிரார்த்தனை செய்வது போல் அமைதியாக இருக்கிறீர்கள்'' கேலி செய்யும்விதமாக இருந்தது அவரது கேள்வி.

இருவருமே பலமாகச் சிரிக்கத் தொடங்கினார்கள்.

'பேராசைக்காரர்கள் தானே இது வேண்டும். அது வேண்டும் என்று பிரார்த்தனை செய்வார்கள்'' என்று அவளைச் சீண்டினார்.

டோரா தன் கணவனை முறைத்தார். அந்த முறைப்பில்கூட கடுமை தெரியவில்லை.

தனக்கு இங்கு வேலையில்லை என்பது போல் காலியான கோப்பைகளை எடுத்துக்கொண்டு போனார்.

அழுத்தமான மத நம்பிக்கையுள்ள எந்த மனிதனும் மதத்தைப் பற்றிய எந்த உண்மையான குற்றச்சாட்டையும் விரும்புவதில்லை.

'சங்கரா ஒன்றை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.'' அப்படிச் சொல்லும்போது அவரது கண்கள் மட்டுமல்ல முகமும் சுடர்ந்தது. அவனை உறுதியாகப் பார்த்தபடி

புன்னகைத்தார்,

'எதைப்பற்றி?' அவசரமாகக் கேட்டான்.

'இந்த மக்களின் எதிர்காலம் மிகவும் நன்றாக இருக்கும் தங்கள் கைகள் கண்ணுக்குத் தெரியாத கட்டுகளால் விலங்கிடப் பட்டிருப்பதை இவர்கள் உணர்ந்துகொண்டு விட்டார்கள். இனி ஒவ்வொரு விலங்காய் உடைத்தெறியப்படும். ஈரோட்டு ராமசாமி காங்கிரசையும், அதன் சாதியத் தலைவர்களையும் விமர்சிக்கத் தொடங்கி விட்டார். சூத்திரன், ஆதிதிராவிடரின் உரிமைக் குரல் ஒலிக்கத் தொடங்கி விட்டது. நல்ல முன்னேற்றம் தான். விடுதலைக்காக உழைக்கிற ஒரு கட்சியில்கூட வருணாசிரம அகோரம் ஆட்டிப் படைக்கிறது. கட்சி மாநாட்டில் தனித்தனி சமையல். அங்கேயே இப்படியென்றால் சேரிகளின் நிலை எப்படியிருக்கும். தூய்மையானவற்றையோ, கருத்தானவற்றையோ ஏன் கனிவான காதல்கூட தடை செய்யப்பட்டுள்ளது. கனி மரங்கள் மட்டுமல்ல, விலை உயர்ந்த உலோகங்கள்கூட பயன்படுத்தக் கூடாது. குடிசைகளில் கொஞ்சம் உயரமான வாசல் வைக்கக் கூட சில இடங்களில் தடுக்கப் படுகிறார்கள். இத்தனை தூரம் சீரமிக்கப்பட்டும் அன்பும் கட்டுப்பாடும் அவர்களிடத்தில் இன்னும் குலையாமல்தான் இருக்கிறது. அவர்கள் மண்டை நிறைய கட்டுக்கதைகளால் நிரப்பப்பட்டுள்ளது. தங்கள் வாழ்வின் இந்த நிலைக்கு விதியைக் காரணம் காட்டி தங்களது கை விலங்கைத் தாங்களே பாதுகாக்கிறார்கள். ஒருவேளை அவர்களை அமைதியாக வைத்திருக்க அது உதவுகிறது. விதியை நம்ப மறுக்கும் ஒரு சூழலில் அவர்கள் கிளர்ச்சியாளர்களாய் தங்கள் உரிமைக்குப் போராடுபவர்களாய் மாறுவதை யாரும் தடுக்க முடியாது. அதேவேளையில் அவர்களுக்குக் கல்வி கிடைத்தால் நடக்கும் அற்புதங்களை நீங்களும் நானும் பார்க்கும் வாய்ப்பு கிடைக்குமோ என்னவோ கல்வி கிடைத்தால் பழைய மூடத்தனமான புளுகு மூட்டைகளைத் தூர எறிந்து அதன் மீது காரி உமிழ்ந்து விட்டு பகுத்தறிவுள்ள கல்வியாளர்களாய் மலர்ந்து விடுவார்கள். இந்தத் தேசத்தின் சகலமானோரைப்போல் சக்திமிக்க மனிதர்களாய் அவர்கள் மாறி விடுவார்கள். அதற்கு என்னையே ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நானே ஒரு சாட்சிதான். ஆமாம்... நீங்களே பார்க்கிறீர்கள். நானே ஒரு சாட்சிதான்'' அவர் திரும்பவும் சொன்னார். மார்பில் லேசாக

அறைந்து கொண்டார். அவரது கண்களில் நம்பிக்கை சுடர்ந்தது.

'உங்கள் நம்பிக்கை முழுவதுமாக வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்' அவன் தன் ஆசிரியரை மனமார வாழ்த்தினான்.

''கிறிஸ்தவ மதத்தில் நாத்திகர் இருப்பார் என்றே இதுநாள்வரை நான் நினைத்துக்கூட பார்த்தது இல்லை'' என்று ஆச்சர்யத்தோடு சொன்னான்.

''உலகம் ரொம்பவும் பெரிசு சங்கரா நீங்கள் பொருளாதாரம் படித்தவர். ஒருவேளை உங்களுக்குத் தங்கப்பதக்கம் கூடக் கிடைக்கலாம். அதை வைத்துக்கொண்டு நீங்கள் வெள்ளையர் நிர்வாகத்தில் குமாஸ்தாவாகப் போகலாமே தவிர, உலக அறிவு உங்களுக்குக் கிடைத்து விட்டதாகச் சொல்லமுடியாது. நீங்கள் தான் முயலவேண்டும். நிறைய படியுங்கள். வேதங்களும் சாஸ்திரங்களும் மட்டுமே நமக்கு அறிவைத் தந்துவிடும் என்று நான் நம்பவில்லை. ஜோசப் மெக்கேபியின் நூல்கள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. அவரின் குடும்பத்தார் பரம்பரம்பரையாகக் கிறிஸ்தவத்தில் ஊறித் திளைத்தவர்கள். பல ஆண்டுகளாய் அவரும் மத போதனை செய்தவரே. நடுநிலைமையுடன் அவர் சிந்தித்ததின் பலன் அந்த மதத்தில் இருந்தே விலகினார். அதன் பொய்மை நிறைந்த கபட வேடங்களை உலகுக்கு அம்பலமாக்கினார். 'மதம் ஒரு அபின்' என்று சொன்னவன்கூட அடிப்படையில் கிறித்தவன்தானே. நல்லவேளையாக நான் பரம்பரையாகப் பின்பற்றிய பாசிச அமைப்பில் இருந்து விடுபட்டு விட்டேன். இப்போது எனது புதிய மதப் பூச்சால் நன்மையடைந்துள்ளேன். அவர்கள் என்னை வளர்த்து, கல்வி தந்து, வாழ்க்கை தந்து நல்ல வேலையும் பெற்று தந்தார்கள். இந்த ஒரு காரணத்துக்காகவே நான் இந்த மதத்தின் தீவிரப் பற்றாளனாக இருக்கமுடியும். இது ஒரு சராசரியான பார்வை. ஆழ்ந்துப் பார்த்தால்தான் உண்மை புரியும். மதத்தின் போக்கில் மக்கள் இல்லை. மக்களின் போக்கில்தான் இன்றைக்கும் மதம் இருக்கிறது. சாதியப் பாகுபாடு கிறித்துவத்தில் இல்லாமலில்லை. பெரும்பாலான மக்கள் சாதியை விரும்புகிறவர்களாக இருக்கட்டும் என்று ஆசிர்வதிக்கவும் செய்கிறது. கண்கூடாக பார்க்கிறோமே. முதலில் இது இன்றைய ஆட்சியாளர்கள் மதம். பிரிட்டிஷ் இந்தியாவின் ராணியும் என் மதத்தைச் சேர்ந்தவர். அவர்களால் நினைத்த சலுகையை எனக்கு வழங்க முடியும். சலுகைகளை மட்டுமே

கணக்கில் வைத்துக்கொண்டு மதத்தை அணைத்துக் கொள்வது அவ்வளவு மனசாட்சியுள்ள வேலையல்ல என்பதுதான் என் நிலை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு இறைவனைப் புரிய வைத்துவிட முடியும் என்பதை என்னால் ஏற்க முடியாது.

இறைவன் என்றால் மனிதனுக்குச் சலுகையும், செல்வமும் வழங்குபவர் என்று அர்த்தமல்ல. ஆனால், கடவுள் காலம் காலமாக இந்த வேலையைச் செய்பவராக தான் நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இல்லையா சங்கரா' என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

'உங்கள் பேச்சு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.'

''ஆமாம். ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனால், ஆச்சரியப் படவேண்டிய அவசியமே இல்லை. எனது அடிமை விலங்கை நான் உணர்கிறேன். அந்நியர் தங்கள் நாகரிகத்தின் வலிமையைக் காட்ட தற்காலிகமாக எனது விலங்கைக் கழற்றி விட்டார்கள். இது நிரந்தரமா என்பது சந்தேகம்தான். என் தனிப்பட்ட விடுதலையை மட்டுமே கருத்தில்கொண்டு நான் சுதந்திரமானவன் என்று என்னால் நினைக்க முடியாது. இந்த மண்ணில் கடைசி சமூக விலங்கிடப்பட்ட அடிமை உள்ளவரை என்னையும் ஓர் அடிமையாகத் தான் கருதுகிறேன். எனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு முழுக்க அவர்களது விடுதலைக்குப் பயன்பட வேண்டும் என்றே கருதுவேன்.''

'அப்படியானால், வெள்ளைக் கிறித்துவர் உங்களோடு கை குலுக்கிப் பேசும் போதும் உறவாடும்போதும் நீங்கள் மன நிறைவில்லாமல் தான் நடந்து கொள்கிறீர்களா?''

''ஆமாம்'' என்றவர் யோசனையோடு அவனைப் பார்த்தார். ''இதே வெள்ளையர்கள்தான் தென்னாப்பிரிக்காவில் தீண்டாமையை அனுசரிக்கிறார்கள். அமெரிக்காவிலும் அதேதான் நடக்கிறது. அங்கேயும் உரிமைகேட்டுப் போராட்டம் நடப்பதைப் படிக்கிறோம். வெள்ளைப் பாதிரிகள் யாரும் கருப்பருக்காக பரிந்து பேசவில்லையே. மதத்தை மீறிய ஓரிரு நியாயவான்கள் இருக்கலாம். மொத்தத்தில் சுரண்டுவதற்குப் பலரும் பலவிதமான ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். அவர்களிடம் இருந்து விடுதலை பெறுவதில் தான் விஷயமே இருக்கிறது. இந்த நிலையில் தப்பித்துக்கொள்ள அடிமை விலங்கை உடைத்து எறிய நாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டிய காலமிது. இதை

விடச் சிறந்த காலம் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. வெள்ளையன் புகைவண்டிக்கு மட்டும் பாதைப் போடவில்லை. எங்களுக்கான சன்னலையும் திறந்து வைத்துள்ளான்.''

''அப்படியானால், நானும் உங்களோடு சேர்ந்துக் கொள்ளலாமா?' என்று ஆர்வத்துடன் கேட்டான்.

நிச்சயமாக. ஆனால், நீங்கள் மேற்படிப்புக்காக இங்கிலாந்து போகப் போகிறீர்களே...''

''இல்லை, அந்த எண்ணத்தை நான் கைவிட்டுவிட்டேன்.'' அவன் உறுதியாகச் சொன்னான்.

''வேறு என்ன செய்வதாக உத்தேசம்''

'செய்வதற்கு என் எதிரில் ஏராளமான வேலைகள் இருக்கிறது. ஆனால், நாம் நினைப்பதைச் சாதிக்க நமக்குச் சுயராஜ்யம் வேண்டும்.''

''ஆமாம். உண்மைதான்' என்று ஆமோதித்தார்.

''இல்லை, நீங்கள் சுதந்திரப் போராட்டத்தைப் பொறுத்தவரை அதன் எதிரியாக இருக்கிறீர்' என்று குற்றம் சாட்டினான்.

'ஓ.... நீ அப்படித்தான் நினைக்கிறாயா சங்கரா, சுதந்திரத்தின் எதிரியில்லை. உங்களிடம் இருந்து எனக்கு விடுதலை எப்போது என்றுதான் கேட்கிறேன். ஏனைய நசுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களும் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும். அதற்காக உத்திரவாதம் உண்டா? இதுதான் என் கேள்வி. இந்த விஷயத்தில் நான் டாக்டர் பீமாராவ் கட்சியைச் சார்ந்தவனாக இருப்பேன்.''

''நீங்கள் அம்பேத்கரைக் குறிப்பிடுகிறீர்களா?'' என்று ஆவல் பொங்கக் கேட்டான்.

''ஆமாம். அவரது அணுகுமுறையிலான சுதந்திரம் நசுக்கப் பட்ட, தாழ்த்தப்பட்ட ஏனைய தீண்டப்படாத மக்களுக்கு நல்ல பயனைத் தரும் என்று நம்புகிறேன். எது எப்படியோ வெள்ளையர்களால் இனி சுதந்திரத்தைத் தள்ளிப்போட முடியாது என்பது உறுதியாகிவிட்டது. அவர்களது மூலதனம் இங்கு ஏராளமாய் இருக்கிறது. அவ்வளவையும் சேதாரம் இல்லாமல் கொண்டுபோகும் வரை கொஞ்சம் இழுத்தடிப் பார்கள். போதாக்குறைக்கு உலகப் போரில் அவர்கள் முக்கியப் பங்கு வகிப்பதால் நிச்சயம் மாற்றங்கள் வந்தே தீரும். சோவித் ரஷ்யாவின் கை ஓங்கி வருகிறது. உலகப் போரை ஒரு முடிவுக்குக்

கொண்டுவரும் பெரும் சக்தியாக அவர்கள் இருக்கிறார்கள். நேசநாடுகளே கூட ரஷ்யாவின் வளர்ச்சியைப் பார்த்து உள்ளுக்குள் அச்சம் கொண்டுள்ளன. சிவப்பின் பயம் காரணமாக காலனியாதிக்கத்தைக் கைவிடும் நிர்ப்பந்தம் பிரிட்டனுக்கு வரும்.''

ஆசிரியரின் பேச்சில் உறுதி தெரிந்தது. சங்கரன் தனது ஆசானை அமைதியாக பிரமிப்போடும் பார்த்தான். ஆனால், காந்தியுடன் அம்பேத்கர் மோதல் போக்கைக் கொண்டுள்ளார். இது அவ்வளவு நல்லதல்ல. காந்தியை இந்தியர்கள் ஒட்டுமொத்தமாக தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அவரை எதிர்ப்பது நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்வதாகும். நமக்குள்ளே ஒற்றுமை இல்லாது போனால் வெள்ளையன் இங்கிருந்து நகரவே மாட்டான் என்பது தானே உண்மை.'

திருப்தியற்ற முறையில் ஆசிரியர் பார்த்தார். பிறகு, ''இந்த விஷயத்தில் ஒத்துப்போவது என்பது என்னை நானே படுகுழியில் தள்ளிக் கொள்வதற்கு ஒப்பானது என்பது உங்களுக்கே புரிய வில்லையா? காந்தி அவர்களோ இந்திய தேசம் முழுமைக்கும் பிரதிநிதியாய் இருந்து வழிநடத்துவதாய் நினைக்கிறார். அது உண்மையுங்கூட. ஆனால், தாழ்த்தப் பட்டோரைப் பற்றிய அவரது பார்வை சிக்கலான தன் சுயமதிப்பீடுகளால் அதைத் தீர்மானம் செய்கிறார். தாழ்த்தப்பட்டோருக்கு அதில் பலன் கிடைக்காது. பீமாராவ் அவர்களோ தீண்டப்படாதவர்களுக்கு மட்டுமே பிரதிநிதியாய் இருக்கிறார். வருணாசிரமத்தை ஒழித்து விடவும் சாதிய பாசிச வன்முறைப் பேயை இந்திய மண்ணில் இருந்து வேருடன் அழித்துவிட ஆசைப்படுகிறார். ஆனால், மகாத்மாவோ வருண அமைப்பை மேலும் கட்டிக்காத்து தீண்டப்படாதோரை அரிஜன் என்று சொல்லி ஐந்தாம் வருணம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் இருக்கிறார். இதன் அடிப்படையில்தான் இருவரும் மாறுபடுகிறார்களே ஒழிய தனிப்பட்ட முறையில் இருவருமே மாமனிதர்கள்தாம் என்பதை உலகமே அறிந்திருக்கிறது. ஆனால், காந்தியின் தத்துவம் அவரை ஏமாற்றி அவரையே விழுங்கிவிடும். வருணாசிரமத்தின் கபடத் தனத்தை அவர் புரிந்து கொள்ளவில்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. வருணாசிரம தத்துவத்தை அவர் தனக்கான முறையில் புரிந்துகொண்டு அதையே மக்கள் மீதும் திணிக்க முயல்கிறார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அது துன்பத்தை மட்டும்தான் தரும்.''

'அம்பேத்கரின் மேதைமையை நானும் போற்றுகிறேன். வட்டமேசை மாநாட்டில் பெரும் அறிவாளிகள், இலக்கிய கர்த்தாக்கள், நாடறிந்த பிரபுக்கள்கூட கலந்துகொண்டார்கள். ஆனால், பல்கலைக்கழகங்களால் அங்கீகரித்துப் பெரும் பட்டங்கள் பெற்ற ஒரே கல்வியாளர் அம்பேத்கர் மட்டுமே என்ற செய்தி எனக்கும் வியப்பாகத்தான் இருந்தது. பெரிய விஷயம்தான்.'

அவன் பலமாகத் தலையை அசைத்துக்கொண்டான். இவ்வளவு நெருக்கடியிலும் ஒரு தீண்டப்படாதவன் இவ்வளவு பெரிய சாதனையை நிகழ்த்த முடியும் என்றால் எல்லா வாய்ப்புகளும் சகலரையும் போல் அவனுக்கும் கிடைக்கும் என்ற நிலை வந்தால் எத்தனை பெரிய வெற்றிகளை அவர்கள் அடைவார்கள். எண்ணிப்பார்க்கவே அவனுக்கு பிரமிப்பையும் அதே நேரத்தில் இனம்புரியாத அச்சமும் எழுந்தது.

'எனக்கு ஒரு விஷயத்தில் அவரது போக்கு பிடிக்கவில்லை. அவர் தான் ஒரு இந்துவாகச் சாகப்போவதில்லை என்று சொல்லியிருப்பது சரியானதுதானா?''

''ஓ, நீ கவலைப்படுவதுபோல் தெரிகிறது.''

'நிச்சயமாக, இத்தனை பெரிய அறிவாளி நம்மைவிட்டுப் போய் விடுகிறாரே. அதன்பின் விளைவுகள் இந்துக்களுக்கு நட்டமாகக்கூட இருக்கலாம் என்பதால் கவலைப்படுகிறேன்.'

''சங்கரா நீ மட்டும் கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது. இந்து சமுதாயமே இதற்காகக் கவலைப்பட வேண்டும். வருணமற்ற ஒருவன் இந்துவாக இருக்கவேண்டும் என்றால் எப்படி சாத்தியம். வெகு காலமாய் அவர் எங்களையும் இந்துக்களாக நடத்துங்கள் என்று தானே போராடினார். நீங்கள்தான் குளங்களையும், கோயில்களையும் இழுத்துப் பூட்டிக் கொண்டீர்கள். ஏன், பொது வீதிகளையும்தான். அப்படியா. நீங்கள் பூட்டிக் கொள்ளுங்கள். நாங்கள் வேறு வழியைப் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டார். இதில் வேதனைப்பட என்ன இருக்கிறது'' என்று கேட்டுவிட்டு சங்கரன் முகத்தை நோக்கி நேர் பார்த்தார். ஆனால், சங்கரனால் அவரை அப்படிப் பார்க்க முடியவில்லை.

''மனித வாழ்க்கையில் மதம் என்பது ஒரு முக்கிய வாழ்நிலை அம்சம் என்று அவர் கருதுகிறார். ஆனால், அந்த யோக்யதை

இந்து மதத்திற்குக் கிடையாது என்பது அவரது ஆய்வின் முடிவு. அந்த முடிவுக்கு அவர் வரும்படி நீங்களேதான் அவருக்கு செய்துவிட்டீர்கள். அவருக்கும் நிறைய வெள்ளையர்களிடத்தில் பழக்கம் அதிகம். ஒருவேளை அவர் கிறிஸ்துவ மதத்துக்குப் போய்விடுவாரோ'' என்று அச்சம் தொனிக்கும் குரலில் கேட்டான்.

'நிச்சயம் அது போன்ற செயலில் இறங்குவார் என்று நான் நம்பவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு சம்பவத்தை உங்களுக்கு நான் சொல்லுகிறேன். அவரது மனைவி இறந்து வெகுகாலமாகிவிட்டது. அந்த சமயத்தில் அவர் இங்கிலாந்தில் தங்கியிருந்தார். அங்கே ஒரு வெள்ளை மாது அவரது அறிவாற்றலால் ஈர்க்கப்பட்டு தன்னை மணந்து கொள்ளுங்கள் என்று அவரை வற்புறுத்துவதாகவும் வதந்திகள் உலவின. அந்த ஐரோப்பியப் பெண்ணை அம்பேத்கர் மணந்துகொண்டார் என்று பத்திரிகைச் செய்திகள்கூட வந்தன. அவர் இந்தியா திரும்பும்போது தனது வெள்ளைக்கார மனைவியோடுதான் திரும்புவார் என்று பத்திரிகையாளர்கள் துறைமுகத்தில் கூட இருந்தார்கள். பிறகுதான் தெரிந்தது அது வெறும் புரளி என்று. ஒருவேளை அவர் விரும்பியிருந்தால் அது ஒன்றும் முடியாதது இல்லையே. அவருடைய எதிரிகளுக்குக்கூடத் தெரியும். அவர் இந்திய மண்ணையும் அதன் அடித்தட்டு மக்களையும் தன் உயிரைவிடவும் மேலாக நேசிக்கிறார். தீண்டாமை போன்ற பித்தலாட்டத்தைத்தான் அவர் வெறுக்கிறார். அதனால் நிச்சயம் அயலார் மதங்கள் எதிலும் நுழைந்து விடுவார் என்று நான் நினைக்கவில்லை. ஒருவேளை அவர் இப்படிச் செய்ய வாய்ப்பு இருக்கிறது.''

'எப்படி?'' அவசரப்பட்டான் சங்கரன்.

''அவரோ மிகப் பெரிய படிப்பாளி. வரலாற்றைப் பற்றிய மேதைமை அதிகம் உள்ளவர். வருணப் பேதங்களையும் பிராமணியத்தையும் எதிர்க்கவே உதித்த புத்த மதத்தை ஒருவேளை அவர் தேர்ந்தெடுக்கலாம். அதற்கு வாய்ப்பு உள்ளது. காரணம், புத்த மார்க்கத்தில் கடவுள் கிடையாது. மனிதம் மட்டுமே அதில் கடவுள். ஒருவேளை அவர் அந்த மதத்தைத் தேர்ந்தெடுக்கலாம். சமீபகாலமாக புத்த பெரியார்களுடன் அவர் தொடர்பு வைத்து இருப்பதாகத் தினச் செய்திகளில் படிக்கிறேன். என்ன? எனது யூகம் சரியாக இருக்குமா'' என்று கேட்டார் சங்கரனைப் பார்த்து.

காலம்தான் பதில் சொல்லவேண்டும் என்பதுபோல அவன் உதட்டைப் பிதுக்கினான்.

''நிறைய கேள்விகள் உன் மனதில் இருக்கிறது என்றால், நீ ஏதோ திட்டத்தோடு இருக்கிறாய் என்றே அர்த்தமாகிறது. உன் திட்டம் என்ன! ஊருக்குப் போய் என்ன செய்யப்போகிறீர்?''

''ஒரு திட்டம் இருக்கிறது. சுதந்திர இந்தியாவில் வாழப் போகும் அத்தனை மக்களையும் சார்ந்த ஒரு புதிய இயக்கம் அதில் பேதங்களே கிடையாது. இந்தியாவின் வளர்ச்சியை மட்டுமே முன்னெடுத்துச் செல்லும் இளைஞர்களால் ஆன இயக்கம்.''

'நல்லது. காங்கிரசை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்களும் இப்படித்தான் சொல்லிக்கொண்டு ஆரம்பித்தார்கள். ஆனால், அங்கே பிராமணர்களுக்குத் தனிச் சமையல் இன்னும் பல சனாதானங்கள் நடக்கத்தான் செய்கிறது. அதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஈரோட்டு ராமசாமியும் காங்கிரசில் இருந்து வெளியேறி விட்டார். என்ன காரணம் என்று உங்களுக்குத் தெரியாதா என்ன. எது எப்படியோ, நீங்கள் நல்ல இலட்சியத்தோடு இருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அப்படியானால் உங்கள் சுயராஜ்ய கோரிக்கை.'

'ஐயா, நீங்கள் தெரிந்திருந்தும் என்னை மடக்கப் பார்க்கிறீர்கள். நமக்குச் சுதந்திரம் இயந்திர கதியில் வந்து சேரும். இங்கிலாந்தின் பலம் ஐரோப்பாவில் ஹிட்லரால் சோதிக்கப்படுகிறது. இங்கு நம் தேசத்துப் போராளிகள் பகத்சிங், படுகேஸ்வர்த்தத்தா ஆகிய இருவருக்கும் பத்தாம் ஆண்டு வீரவணக்கம் செலுத்துகிறார்கள். சுபாஸ் சந்திரபோஸ் ஆயுத பலத்தால்தான் தேசம் விடுதலை பெறமுடியும் என்று முழங்குகிறார். வெளி தேசங்களில் படையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். நம் மகாத்மாவோ உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி எதிரிகளைக் கதிகலங்க வைக்கிறார். மேற்கு வங்கத்தில் இருந்து தோழர்கள் ரஷ்யா பயணமாகிறார்கள். அவர்கள் பொதுவுடைமைக் கருத்துகளை மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள். இந்த எட்டுக்கால் சிலந்திப் பிடியில் இருந்து வெள்ளையர் தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் என்று ஓடிப் போவது உறுதி'' என்று சொன்னவன் யோசனையோடு நெற்றியைத் தடவினான். பிறகு, ''நான் பாரதியைப் பின்பற்றப் போகிறேன். வருணம், வர்க்கம் இரண்டின் எதிரிகளையும் ஒன்றுசேர்த்து சமத்துவமான சமூகத்தைப் படைப்பதே வருங்கால

இளைஞர்களின் லட்சியமாக இருக்கவேண்டும் என்று போராடப் போகிறேன்.''

''நல்லது சங்கரா, உனக்கு எனது வாழ்த்துகள்.' மனநிறைவோடு தன் மாணவனைப் பார்த்தார்.

'நீங்களோ பிராமணர், நானோ தீண்டப்படாதவன் என்று உங்களால் சொல்லப்பட்டவன். பாரதியோ கவி. நம் மூவரையும் இணைப்பது எது?'

'என்ன சொல்கிறீர்கள்'' என்று சட்டென்று நிமிர்ந்தவன் பாரதியும் பிராமணன் தானே'' என்று கேட்டான்.

ஆசிரியர் இல்லையென்பது போல் தலையாட்டினார். தன்மீதிருந்த அடையாளங்களை அவர் அழித்துவிட்டது உங்களுக்குத் தெரியாதா? கபடமற்ற உன்னத லட்சியமும் ஒட்டுமொத்த மனித சமூகத்தின் சகோதரத்துவமும், விடுதலையும் தான் பாரதியின் உள்ளொளியாக இருந்தது. அவனைப் போலவே இந்தியன் ஒவ்வொருவனும் நினைத்துச் செயல்பட்டால் ஐரோப்பா முழுவதும் திரண்டு வந்திருந்தாலும் நம்மை அடிமைப் படுத்தியிருக்க முடியுமா? சொல்லுங்கள்.''

சங்கரனுக்குத் தேசிய உள்ளொளி எதுவென்று நன்றாகத் தெரிந்தது.

பாரதத் தாயின் இதயம் பலவீனமாகத் துடித்துக் கொண்டிருப்பதை போல் உணர்ந்தான். அதைப் பலப்படுத்தி அதன் அடிமைத் தளைகளை அறுத்தெறியவும் அவன் உள்ளம் சபதம் கொண்டது.

பேராசிரியருடன் தங்கியிருந்த இரண்டு நாளும் பலவிதமான விவாதங்களால் அவனது உள்ளத்தில் உறுதியான புதிய எண்ணங்கள் எழுந்தன. தனக்குப் பிரியமான அவர்களிடம் பிரியாமல் பிரிந்து வாழ்த்துகளுடன் ஊருக்குக் கிளம்பினான்.

◉◉◉

ஒவ்வொரு மனிதனின் பாதங்களுக்குக் கீழாகவும் தலைக்கு மேலாகவும், இடப்புறமும், வலப்புறமும், முன்னும், பின்னும் எல்லையற்ற தூரத்தில் பரவிக் கிடக்கிற ஏதோ ஒன்று என்ன அது?

நம் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டதோ! ஒருவேளை வருங்கால மனிதன் அறிந்து கொள்வானோ!

அறிவு பெருகி எல்லையில்லை என்பதை அழித்து எல்லை

எது என்பதை அறிந்து அதையே தொடக்கமாகக் கருதி மேலும் துளைத்துக்கொண்டு போவானோ!

அட என்ன! எல்லையே இல்லையே. முடிவே இல்லையே, என்று போய்க்கொண்டே இருப்பவனை முட்டாள் என்று வெளி பரிகசிக்குமோ. ஒருவேளை சக்தி கொண்ட மனிதனின் இயந்திரங்கள் வெளியைக் கடந்து போகும் நம் பத்தாவது தலை முறைக்குத்தான் பதில் தகவல்கள் வந்து சேருமோ என்னமோ யார் அறியமுடியும். இந்த ஆச்சரியமான அதிர்ச்சியான புள்ளிகள்தான் இறை என்பதோ? ஆமாம். உண்மையில் அது இறைந்து கிடக்கவில்லை எங்கும் குவிந்தும் கிடக்கவில்லை. அதற்கு நிறமும் இல்லை, வடிவமும் இல்லை. ஒளியும் இல்லை ஒலியும் இல்லை. வேறு என்னதான் அது.

ஆம். அதுதான் சர்வமும் பொருந்திய ஒன்று. அந்த ஒன்றைப் பற்றிய எண்ணம் உற்பத்தி செய்வது உனது மூளைதான். அவ்வளவு பிரம்மாண்டத்தைக் காட்சியாக்குவது உன் மனம் தான். அதை உன் மனம் சொல்வதுபோல் நீயும், என் மனம் சொல்வதுபோல் நானும் நினைத்துக் கொள்கிறோம். அதைப் பற்றி உனக்கும் எனக்கும் காலம் பலதையும் கற்றுத் தருகிறது. நீயும் இடைவிடாமல் கற்றுக்கொண்டே வருகிறாய். பெரும்பாலும் தவறாகவே கற்றுக் கொள்கிறாய். தவறுகளை மூடி மறைக்க என்னையும் அடித்து நொறுக்குகிறாய். என்னை அடித்தப் பாவங்களை மறைக்க புதுப்புதுக் கதைகளைச் சொல்லி அதையும் என்னை நம்பச் சொல்லிக் கட்டாயப்படுத்துகிறாய்.

நீ மனதால் பக்குவப்படும் முன் தாயையோ சகோதரியையோ மகளையோ புணர்ந்து கொண்டிருந்தாய். நிர்வாணமாய் அலைந்துக்கொண்டு ரத்தம் சொட்டச் சொட்ட உன்னையே நீ தின்றுகொண்டிருந்தாய். பூமிப் பந்து முழுக்கத் திரிந்துக் கொண்டிருந்த உன்னை இதெல்லாம் முறையற்றது என்று உன்னைத் தடுத்து நிறுத்தியது எது? வளர்ச்சியடைந்த மனித மனம்தானே.

பரிணாமம் அடைந்த மனமுதிர்ச்சிதானே இந்தக் காட்டு மிராண்டித் தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

மனிதா, நீ மனதால் வளர்ந்து விட்டாய். உனது மூளையின் அளவுகூட மிக அதிகமாம். உனக்குப் பகுத்தறியும் முதிர்ச்சியும் வந்துவிட்டதாம். நாகரிகமானவன் என்று பூமியதிர சத்தமிட்டுச்

சொல்கிறாய்.

ஓ... அதனால் தான் நீ அவளை மணக்கலாம், நான் அவனை மணக்கக் கூடாது. நீ அதில் குடிக்கலாம். நான் அதில் குடிக்கக் கூடாது, நீ அங்கு நுழையலாம். நான் அங்கு நுழையக்கூடாது. நீ படிக்கலாம். நான் படிக்கக்கூடாது, நீ உடுத்தலாமே நான் உடுத்தக்கூடாது.

பன்றியும், எலியும், காக்கையும், பாம்பும்கூட உனக்கு என்னையும் விட உன்னதமானது.

எனக்குச் சேறும், சகதியும், கிழிசலும், கந்தலும்,எச்சிலும் பதறும் உன் விருப்பம் போல் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம், எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். யார் தந்தது உனக்கு இந்த உரிமையை?

உனக்கு மட்டும் மேன்மையானது, தூய்மையானது எல்லாம். ஆனால், அதையெல்லாம் கூட நான் தான் உனக்குச் செய்துதர வேண்டும். நீ ஒரு துரும்பையும் அசைக்கமாட்டாய். ஆனால் எல்லாம் உனக்கு. உழைக்காமலே உண்பது உனக்கு வெட்ககரமானது.

ஓ இதயம் படைத்தவனே நாகரிமும், பண்பாடும் உள்ளவன் என்று சொல்லிக்கொள்பவனே, உன் மூளை பரிணாம வளர்ச்சி அடைவது போல் எனக்கும் வளர்ச்சியடைகிறது புரிந்துகொள்.

பாசிச சாஸ்திரங்களைக் காரணம் காட்டி எனக்குச் சமூக விலங்கிட்டிருக்கும் கொடூரமானவனே!

புலியைக் கூண்டுக்குள் அடைத்து அதன் பற்களையும், நகத்தையும் நீக்கி பட்டினிப் போட்டுவிட்டால் அது பூனையாகி விடாது. ஒருவேளை அது முடமாக்கப்படலாம். ஆனால், அதன் குட்டிகள் புலியாகத்தான் பிறக்கும். உன் விலங்காண்டி தத்துவங்கள் எல்லாம் செத்து மண்ணோடு மண் ஆகப் போகிறது. பிணமாகும் முன்னே பிண வாடை வீசுகிறது.

மாற்றம்... மாற்றம்... பழைய உளுத்துப் போன கொடூர பாசிச பித்தலாட்ட சாஸ்திரங்கள் எல்லாம் இருந்த சுவடு தெரியாமல் புரட்டிப் போடும் மாற்றம்.

அடிமைகள் எல்லாம் புது வேகத்தோடு, புதிய சிந்தனையோடு, புதிய எண்ணத்தோடு புதிய செயலோடு கொந்தளிக்கும் உணர்ச்சியோடு வருகிறோம். இதோ இது எங்களுக்கான காலம் எங்களுக்கான உலகம். விஷ முள்மரமே இனி உன் விதைகள்

முளைக்காது. பாசிச சாத்திரமே எனக்குப் பதில் சொல். சங்கரனின் மனதில் பல புதுப்புது எண்ணங்கள் அலைமோத ஆர்ப்பாட்டமான மனநிலையில் ஊர் போய்ச் சேர்ந்தான். ஒடுக்கப்பட்ட மனநிலையில் ஒடுக்கியவர்களை நோக்கி கேள்வி எழுப்பினான்.

சங்கரன் வீடு வந்து சேர்ந்ததும் அம்மா விசாலம் புத்துயிர் பெற்றுவிட்டவள் போல் எழுந்து ஓடியாடி பரபரத்தாள். கிணற்றடியில் நீர் இறைத்து குளியல் பொடிகளைக் குழைத்துக் வைத்துவிட்டு அவனுக்குப் பிடித்த பலகாரம் செய்யத் தொடங்கினாள். மகன் வந்துவிட்டது அவளுக்குத் திருவிழா வந்ததுபோல் இருந்தது.

ஆளே மாறிவிட்டானே என்ன மாதிரியான முகம். இப்படி வாடிப்போய்க் கிடக்குது. குழந்தைப்போல விழிப்பான். இப்ப பார்வையில் கூட முரட்டுத்தனம் தெரிகிறது. ச்ச.. என்று எண்ணங்களால் கலவரப்பட்டுக் கொண்டே குளித்து முடித்து வந்தவனுக்கு இலை விரித்துப் பலகாரங்களை வைத்தாள்.

அமைதியான அம்மாவின் முகத்தை உற்றுப்பார்த்தான். அவளது கனிந்த முகத்தின் கலங்கிய விழிகளில் இருந்து இரண்டு துளிகள் தரையில் விழுந்தது தெரிந்தது. அம்மா பலவீனமான தன் கைகளால் அவரசமாகக் கண்களை கொண்டாள்.

'உனக்கு உடம்பு சரியில்லையா அம்மா''

'இல்லை நல்லாதான் இருக்கேன்'' அம்மா, தெளிவில்லாமல் வந்தது.

'எதற்காக ஏதோ போல் இருக்கிறாய் என் மீது கோபமா?'

பாசத்தோடு தன் பிள்ளையை ஆழ்ந்து பார்த்தாள். அவள் விழிகள் கலங்கி லேசாகச் சிவந்திருந்தது.

'என் கண்மணியடா நீ. உன் அப்பாதான் கோபமாக இருக்கிறார்.'

''ஓ..அப்படியா விஸ்வா மாமா எழுதிய கடிதம் தான் அப்பாவை என் மேல் கோபம் கொள்ள வைத்திருக்கும், என் கடமையைப் பிசகு இல்லாமல் செய்துவிட்டுத்தானே வந்திருக்கிறேன். பாடசாலையிலும் எனக்கு நல்ல பெயர்தான். என் மேல் அப்பாவுக்கு எதற்காகக் கோபம். உனக்குத் தெரியுமா அம்மா?'

'நீதான் பறை சனங்களுடன் நட்பு பாராட்டுகிறாயாமே. நம்

இனத்தைத் தூஷிப்பவரோடு உறவு கொண்டாடுகிறாயாம். உன் அப்பா இதையெல்லாம் சகித்துக் கொள்வார் என்றா நினைக்கிறாய். சூத்திரர்களுடன் கூட உன் அப்பா முகம் காட்டி பேசமாட்டார். நீ பட்டணம் படிக்கச் சென்றது. இதற்குத்தானா இப்படி கிராப்பு வெட்டிக்கொண்டு வந்திருக்கிறாய். உன் அப்பா பார்த்தால் வேதனையடைவாரே சங்கரா. உனக்கு இதெல்லாம் தெரியாதா?''

''அம்மா, குடுமியை வைத்துக்கொண்டு நான் சாதிப்பதற்கு என்ன இருக்கிறது. நாம்தான், நான் பிராமணன் அவன் சூத்திரன் என்று பெருமை பாராட்டிக் கொண்டும் பேதம் பார்த்துக் கொண்டும் இருக்கிறோம். வெள்ளையர்கள் நம்மை மதிப்பதுகூட கிடையாது. வெள்ளையனுக்கு நாமும், பறையனும் ஒன்றே. எங்கு திறமையிருக்கிறதோ அதைப் பயன்படுத்தி லாபம் அடைவதில்தான் அவன் லட்சியமாய் இருக்கிறான். நாமோ குடுமி யார் வைத்தது, பூணூல் யார் போட்டது என்று இருக்கிறோம். அம்மா நீ ஒன்றும் கவலைப்படாதே. உன் பிள்ளை தவறு செய்வான் என்று நீ நம்புகிறாயா?'

அவனது பேச்சும் அதன் முடிவில் வந்த கேள்வியும் அம்மாவைத் திடுக்கிட வைத்தது. பட்டணம் போய் படிப்பதற்கு முன் இருந்த சங்கரனுக்கும் இவனுக்கும் இடையே நிறைய மாற்றங்கள் இருப்பதை அம்மா கண்டுகொண்டாள். எப்படி மிடுக்காகப் பேசுகிறான் என்று மனசுக்குள் கர்வப்பட்டாள். படித்தவன் என்றாலும், சின்னக்குழந்தை தானே! அம்மா'' கவலைப் பட்டாள்.

''நீ தவறு செய்யமாட்டாய் என்று எனக்குத்தெரியும். நீ சின்னப் பிள்ளைதானே.

வெள்ளையன் என்றோ, ஒரு நாள் நம் தேசத்தை விட்டுப் போய் விடத்தான் போகிறான். நாம் அப்படியா சங்கரா சண்டாளர்களை நாம் தள்ளியே வைத்திருக்க வேண்டும் என்ற நம் முன்னோர்களின் கட்டுத் திட்டங்களை விட்டுவிடுவது மாபாதகமான செயல். உனக்குப் பாடசாலையில் இதையெல்லாம் போதிக்கவில்லையா?'' என்றாள் அம்மா. அவளைப் பார்க்க சங்கரனுக்குப் பாவமாய் இருந்தது.

''அம்மா என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் அப்பா நடத்திய திண்ணைப் பள்ளிக் கூடம் என்று நினைத்தாயா. ஒரு

ஆங்கிலேயர்தான் எங்கள் கல்லூரியின் முதல்வர். அங்கு பிராமணப் பேராசிரியர்களை விடவும் கிறிஸ்துவப் பேராசிரியர்களுக்குத்தான் மரியாதை. அவர்கள்தான் அங்கு ஆதிக்கம் செலுத்துகிறார்கள்'' என்று சிரித்தபடி அம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

அம்மாவுக்கு எரிச்சலாய் வந்தது. அவள் அப்பாவித்தனமாய் விழித்தாள்.

'பிறகு ஏன் அப்பா உன்னை அங்கு வாசிக்க அனுப்பினார்.''

''ஆமாம். ஆசை யாரை விட்டது. அங்குப் போய் படித்தால் தானே சர்க்காரில் உயர்ந்த பதவி கிடைக்கும். அதுதான்.''

என்னடா குழந்தை நீ என்னைக் குழப்பி விடுகிறாய். உன் அப்பா பிசகு பண்ணமாட்டார். நீயும் என் பிள்ளையாயிற்றே. அவரே எல்லாம் செய்துவிட்டுப் பின் ஏன் குதிக்கிறார். பேசாமல் நீ சர்காரில் ஏதாவது உத்தியோகம் பார்த்துக் கொள். அதுதான் நமக்கு கௌரவம். உன் அண்ணன் உன்னைப் போல் படிக்கவில்லை. அவன் நிலத்தை வைத்துக்கொண்டு மிராசு பண்ணட்டும்'' என்றாள்.

ஐயோ அம்மாவே! என்று நினைத்துக் கொண்டான். அவளுடைய மன அமைதிக்காக சரியென்று தலையாட்டி வைத்தான்.

வெளியே சிலர் நடந்து வரும் சந்தடி கேட்டது.

'உன் அப்பா வந்து விட்டார்'' எச்சரிக்கை செய்வதுபோல் சொன்னாள் அம்மா.

அவருடன் வந்த ஆட்கள் வாசலிலேயே நிற்க அப்பா வந்தார்.

'எப்போது வந்தாய் சங்கரா'' என்று கேட்டுக்கொண்டே,

'படிப்பெல்லாம் நல்லபடியாய் முடிந்ததா? நீயும் நல்ல சமயத்தில்தான் வந்து சேர்ந்திருக்கிறாய். சமஸ்தானத்தில் ஒரு நல்ல இடம் காலியாக இருக்கிறது, ஜில்லா போர்ட்டில் கூட ஒரு இடம் காலியாக இருப்பதாகக் கேள்விப் பட்டேன். இரண்டில் எங்குபோவது என்று நீயே தீர்மானித்துக் கொள். நான் வேண்டியதைப் பார்க்கிறேன்'' என்றவர் அர்த்தம் செறிந்த பார்வையோடு அவனைப் பார்த்தார். அவனது முழு மனநிலையையும் ஆராய்ந்து விடுபவர்போல. முடிந்தால் இன்று இரவே எதாவது ஒரு உத்தியோகத்தில் தள்ளிவிட நினைத்தார். அவனைக் கட்டிப்போட அதை ஒரு வழியாக நினைத்தார்.

‘வெகுகாலம் பட்டணத்தில் வாசித்துவிட்டு வந்திருக்கிறான் அவனை உடனே எங்கே அனுப்பி விடப் பார்க்கிறீர்கள்’’ என்று குறுக்கிட்டாள் விசாலம். தாயின் பரிவோடு..

‘நீ வாயை மூடிக்கொண்டு அடுப்பாங்கரையில் போய் ஆக வேண்டியதைப் பார்’’ என்று சூடாக மிரட்டி முறைத்தார். வேறு பேச்சில்லாமல் அம்மா உள்ளே போய்விட்டாள். மெலிந்த அவளது உடல் நடுக்கத்தோடு படபடத்தது. அவள் இப்போது தான் நோயிலிருந்து மீண்டிருந்தாள்.

அப்பாவும் வெளியே நின்றிருந்தவர்களை அழைத்துக் கொண்டு எங்கோ போய்விட்டார். அவர் ஓய்வே இல்லாமல் எதாவது நிலத் தகராறுகளைத் தீர்ப்பதும் வேறு சொத்து விசயமாகவும் திரிந்துகொண்டிருந்தார்.

என்ன இது வீட்டிற்குள் நுழையும் போதே எதாவது திட்டத்தோடு வருகிறாரோ என்ற நினைப்பில் பலகாரத்தை முடித்துக் கொண்டு ஊர் சுற்றக் கிளம்பினான். அவனுக்கு நிறைய நண்பர்கள் உண்டு. அவர்களுக்கு ஏற்கனவே செய்தி போய்விட்டது. பட்டணத்தில் இருந்து சங்கரன் வந்து விட்டான் என்று.

பழைய நண்பர்களுடன் ஐக்கியமாகி விட்டான் சங்கரன். தேவையற்ற வம்பளப்பதும் சில்மிஷமான கேள்விகளைக் கேட்டும் அவனைத் துளைத்தெடுத்தார்கள். இப்படியே சில வாரங்கள் ஓடியது.

சங்கரன் வழக்கமான குளக்கரையில் போய் உட்கார்ந்துகொண்டு நண்பர்களுடன் பல விஷயங்களைப் பேசுவது வழக்கம். அங்கு பேசப்படாத விஷயமே இல்லை என்று சொல்லுமளவுக்கு அனைத்தும் பேசப்பட்டது.

துடுக்குத்தனமும் பொறுப்பற்றவனுமான குப்பு திடீரென்று கேட்டான்.

‘சங்கரா நீ பட்டணத்தில் எவளையாவது பிடித்து சல்லாபித்தது எதையாவது சொல்லேன்’’ பல் இளித்தபடி கேட்டான்.

நாசமாய்ப்போக. சங்கரன் அதையெல்லாம் நம்மிடம் சொல்வானா? அவனைப் பார், அப்படியே கிருஷ்ணன் போலவே ஜொலிக்கிறான். யாராவது பெண் பிள்ளைதான் இவனைப் பிடித்துக் கொண்டிருப்பாள் என்று நான் சத்தியம் கூட செய்வேன்’’ என்று சொன்னதோடு. நண்பர்களைப் பார்த்துக் கண்ணையும்

சிமிட்டினான்.

சுந்தரம் கதைவிடுவதில் பலே கில்லாடி. துளை இல்லாத மூக்கில் வைர மூக்குத்தி எப்படி ஜொலிக்குது பார் என்பான். கைத்தட்டிச் சிரிக்கத்தான் பெருங் கூட்டமே இருக்குதே.

சங்கரனுக்கு எரிச்சலாக வந்தது. இந்தச் சோத்து மூட்டைகளோடு எப்படித்தான் மாரடிப்பது. வெறுமனே பெண்களைப் பற்றிப் பேசிக் கொண்டும் சல்லாபக் கதைகளுக்குக் கைத்தட்டி கூச்சல் போடுவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் யாருக்கும் சுய ராஜ்ஜியம் பற்றிய எந்த எண்ணமும் இல்லை. குளக்கரையே கதியென்று கிடந்தார்கள்.

ஒருநாள் கோபத்தோடு அவர்களைப் பார்த்துக் கத்தினான்.

''எப்போதும் பெண்களைப் பற்றிதான்... வேறு எதுவுமே உங்கள் மண்டையில் ஏறாதா. உங்களோடு நான் குளக்கரைக்கு வருவதே தவறு. நான் பட்டணத்துக்குப் போனது வாசிக்கத்தான் பெண்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய இல்லை''

நண்பர்களுக்குப் பெருத்த அவமானமாகிவிட்டது. இவன் படித்தாலும் படித்தான் ஒரு சுதேசியாக திரும்பியிருக்கிறான். இனி இவனிடம் சல்லாபக் கதைகள் பேசி பொழுதுபோக்க முடியாது. என்னமாய் கண்களை உருட்டுகிறான் என்று அவனது பால்ய நண்பர்கள் வியந்து தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

கிராப்பு சிரைத்துக் கொண்டிருக்கும் போதே தெரியவில்லை என்றான் ஒருவன்.

அதன் பிறகு அவன் நண்பர்களுடன் குளக்கரைக்கும் போவதில்லை. அவனுக்கு நிறைய புத்தக அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார் சாமுவேல். தென்னந் தோப்பிலே போய் அந்தப் புத்தகங்களை வாசிப்பது அவனுக்கு இப்போதைய வேலையாக இருந்தது.

ஒருநாள் காலை பொழுதில் அதுபோல் தென்னந்தோப்பில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தான். யாரோ பதுங்கி... பதுங்கி வருவதுபோல் தெரிந்தது. ''யார் அது'' என்று அதட்டலாகக் குரல் கொடுத்தான்.

'உங்களைத்தான் பார்க்க வருகிறேன்.' பெண் குரல்போல் கேட்டது. ஆனால் பார்க்க ஆண் போலவும் பெண் போன்ற நடையுமாய் நெருங்கி வந்தாள்.

சங்கரன் கையில் ஒரு கடிதத்தைத் திணித்துவிட்டு 'இதைக் கொடுப்பதற்காக ஒருவாரமாக உங்களைத் தேடியலைந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் எப்போதும் நண்பர்களுடனே இருப்பதால் உங்களைச் சந்திக்க முடியாமல் போய் விட்டது'' என்றவள், ''நான் வரேன் சாமி யாராவது பார்த்துப் போறாங்க'' என்று நளினமான பெண் போல நடந்து போனாள். சங்கரனுக்குக் குழப்பமாக இருந்தது.

ஒன்றும் புரியாத குழப்பமான நிலையில் கடிதத்தைப் பிரித்து படித்தான். கடிதத்தின் எழுத்துக்களைப் புரிந்துகொள்வதே சிரமமாய் இருந்தது. அவ்வளவு மோசமாய் இருந்தன எழுத்துக்கள். ஒருவாறு பிழை நீக்கிப் படித்தான்.

கணம் பொருந்திய திருவாளர் சங்கரன் அவர்களுக்கு!

நீங்கள் பட்டணத்தில் படித்தவர் என்றும் சமூகத்தில் புதுமையையும், நீதியையும் நிலைநாட்ட விரும்புகிறீர்கள் என்றும் அறிகிறேன்.

நான் பாவக்குழியில் விழுந்து கிடக்கும் அபலை. தாங்கள் எனக்கு உதவி செய்தால் தப்பிப் பிழைத்து வாழ வழி பிறக்கும் என்று நம்புகிறேன். இந்தப் பாவக் கூட்டில் இருந்து என்னால் தப்ப முடியாவிட்டால் செத்துப் போகத் தீர்மானித்துள்ளேன்.

தாங்களே என்னை மீட்கப் போகும் கர்த்தாவாக நம்பிக் கொண்டிருக்கிறேன். உங்களை எனக்குத் தெரியும். என்னை உங்களுக்குத் தெரியாது. உங்களைப் போன்ற நல்ல புருசர்கள் என்போன்ற பாவியைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லதுதான். ஆனால் என் விசயத்தில் நீங்கள் அசட்டையா இருந்து விடாதீர்கள். உங்கள் தோப்புக்குப் பக்கத்தில் கோயில் பாதையைக் கடந்து வந்தால் இரட்டை அரசமர வீடுதான் என்னுடையது. இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நாளை காலை உச்சி வெயிலுக்கு முன்பாக உங்களை எதிர்பார்க்கிறேன். உங்களிடம் பேச வேண்டியுள்ளது.

இப்படிக்கு,

பரிதாபி சுலோசனா.

சங்கரனைக் குழப்பம் பிடித்தாட்டியது. மாலைப் பொழுதில் வழக்கமாய் நண்பர்கள் கூடி கும்மாளம்போடும் போடும் குளக்கரைக்குப் போனான். தேவையற்றதைப் பேசி, இரைச்சலிட்டுக் கொண்டிருந்தவர்கள் சங்கரனைப் பார்த்து

அமைதியாகி விட்டார்கள்.

எதிலும் துடுக்குக்காரன் என்று பெயரெடுத்த சாமிநாதன் 'வாடா சங்கரா' என்று வரவேற்றான்.

'என்னமோ ஜம்பம் பேசினாய். நான் வாசிக்கதான் போனேன். பெண் பிள்ளைகளைப் பிடிக்க இல்லை என்றாயே. உங்கள் தோப்பில் அந்த மாமியோடு நீ பேசிக் கொண்டிருந்தாயே இப்போது என்ன சொல்கிறாய்'' என்று கிண்டலாகக் கேட்டான்.

'நீ யாரைச் சொல்கிறாய்?'

''அடே என்னமாய் நடிக்கிறான் பாரடா' என்றான் சுந்தரம்

மாமா என்றாலும் சரி மாமி என்றாலும் சரி ஒரு மாதிரியான அது உன்னை வந்து பார்க்கவில்லையோ' என்று கிண்டலோடு கேட்டான் சாமிநாதன்

'யார் அது என்னை எதற்காகப் பார்க்கவேண்டும்'' வேண்டும்மென்றே தெரியாதவன் போல் பாவனையோடு கேட்டான்.

'அதுதான் சங்கரா, நீ பச்சைக் குழந்தை உனக்குப் பாடம் சொல்லித் தரக் கூப்பிட்டு இருப்பாள்'' என்றான் சாமிநாதன்,

'என்னடா ஒரு தினுசாய்ப் பேசுகிறீர்கள்'' என்று போலியாக முறைத்தான். அவன் உதட்டில் சிரிப்பு தெரிந்தது.

கடிதம் வந்ததை எப்படியோ மோப்பம் பிடித்து விட்டிருக்கிறார்கள் என்பது புரிந்துவிட்டது,

கோயில் பாதையைக் கடந்துபோனால் தாசிகள் இருக்கும் வீடு உள்ளது. அங்கிருந்துதான் யாரோ கடிதம் அனுப்பியிருக்கிறார்கள் என்று ஊகித்தான்.

'சரி போங்கடா, உங்களைப் பார்க்கலாம் என்று வந்தேன். நீங்கள் என்னடாவென்றால் எதை எதையோ உளறுகிறீர் எனக்கு எதுவும் புரியவில்லை, நான் போகிறேன்'' என்று நழுவினான்.

'என்னடா நம்மை ஏய்க்கிறானா நான் தான் அந்த மாமாப் பயலைச் சங்கரனுடன் தோப்பில் பார்த்தேனே. அவனிடம் இருந்து, சங்கரன் எதையோ வாங்கிப் பார்த்தான் என் கண்ணாலே பார்த்தேன்.''

''சரி விடப்பா, கத்திரிக்காய் முளைத்தால் கடைத் தெருவுக்கு வரத்தானே வேண்டும்.'' ஆளுக்கு ஒன்றாய் பேசினார்கள்.

'பட்டணத்தில் படித்த ஆணழகன் ஒருவன் வந்து இருப்பதை

மோப்பம் பிடித்து இருப்பாளே. பெரிய மிராசுவோட பிள்ளை. வளைத்துப் போட தூது விட்டிருப்பாள்.'

'சே... அசடு போல் பேசாதீர்கள் சங்கரன் அவளையும் அவள் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்'' என்று சங்கரனுக்காக வக்காளத்து வாங்கிப் பேசினான் சுப்பு.

''சரி விடுங்கப்பா, அவளுடன் அவன் சல்லாபித்துவிட்டே வரட்டும். உலகம் ஒன்றும் இருண்டு விடாது'' என்றான் இதுவரை வாயே திறக்காத ஒருவன்.

ஒருவர் மாற்றி ஒருவராகப் பேசிக்கொண்டும் நகைத்துக் கொண்டும் வம்பளத்தபடி இருந்தார்கள். ஆபாசக் கதையில் இருந்து கோயில் பிரசாதத்தில் போய் முடிந்தது அவர்கள் பேச்சு.

பதுங்கிப் போகும் மனிதர்களைப் போல் இல்லாமல் எந்த தயக்கமும் இன்றி, சுலோசனா குறிப்பிட்டிருந்த இரட்டை அரசமர வீட்டிற்குப் போனான். ஆபத்தில் இருக்கும் ஒரு பெண்ணை மீட்கப்போவதே அவனது லட்சியமாய் இருந்தது.

இரட்டைத் தளம் போட்ட வீடு சமீபத்தில் தான் கட்டி–யிருந்தார்கள். இதற்கு முன்பு இந்தப் பக்கம்கூட சங்கரன் வந்தது இல்லை.

கடிதம் கொடுத்து விட்டுப்போன திருநங்கை வாசலிலேயே காத்திருந்தாள். சங்கரனைப் பார்த்ததும் வணங்கி வரவேற்றாள்.

'சாமி வாங்க அம்மா உள்ள இருக்கிறாங்க' நடுக்கூடத்தில் ஊஞ்சல் தொங்கிக் கொண்டிருந்தது.

அது ஆடிக்கொண்டிருந்த விதத்தைப் பார்த்தால் யாரோ சற்று முன்பாக அதில் இருந்து இறங்கிப்போய் இருக்கவேண்டும். ஊஞ்சலைத்தாண்டி சங்கரனை அழைத்துக்கொண்டு போனாள். மேல்மாடிக்கு மரப்படி சென்றது. முழுவதும் பர்மா தேக்கால் இழைத்தது.

படியின் முடிவில் அவள் நின்று கொண்டிருந்தாள். அவளேதான்! அவளது சிறுமி போன்ற பளிச்சென்ற கண்கள் வெட்கத்தோடு இமைத்தது. இவனைப் பார்த்து நடுங்குவதுபோலத் தெரிந்தது. அழைத்து வந்தவள் போய்விட்டாள்.

''வாருங்கள்'' என்றபடி நாணத்தோடு தனது சிறிய அறைக்குள் அழைத்துப் போனாள். அறைக்குள் இருந்த இரண்டு பெரிய சன்னல்களில் இருந்து காற்று இதமாக வந்து கொண்டிருந்தது.

பகல் பொழுதிலும் அறை குளிர்ச்சியாக இருந்தது. ஆனாலும் அவனுக்கு வேர்த்துப் போனது.

அவள் படபடப்போடு சன்னலுக்கு வெளியே பார்த்து விட்டுத் திரும்பினாள். எந்த அலங்காரமும் இல்லாத அந்தச் சிறு பெண் ஒளி ஊடுருவும் பளிங்குபோல தூய்மையாக மாசு எதுவுமற்ற தேவதை போல் இருப்பதைப் பார்த்து, கண்களை அவளை விட்டு நீக்க முடியாமல் ஒருகணம் தடுமாறினான்.

இத்தனை அழகிய விழிகள் ஒரு பெண்ணிடத்திலே இருக்குமா என்று வியந்து போனான் சங்கரன்.

இவளா அபலை. இருக்காது ஒருவேளை தன்னை ஏமாற்றி விட்டாளோ. தாசிகள் தந்திரமானவர்கள் என்று சொல்லக் கேள்விப்பட்டிருந்தான். தான் வீழ்த்தப்பட்டு விடுவேனோ என்று கூடத் தோன்றியது.

காற்றோட்டமும் வெளிச்சமும் நிறைந்த அந்த அறையில் இருந்த அழகிய வேலைப்பாடுள்ள நாற்காலியை எடுத்துப் போட்டு உட்காரச் சொன்னாள்.

அவனை உட்காரச் சொல்லிவிட்டு அவள் மீண்டும் படபடப்போடு சன்னல் பக்கமாகப் போய் வெளியே பார்த்தபடி நின்றிருந்தாள். இப்படியே இரண்டு நிமிடங்கள் கடந்து விட்டது. சங்கரன் வெறுப்படைந்துவிட்டான்.

அவனாகவே ''நீங்கள்தான் என்னை வரச் சொன்னீர்களா? என்று பொறுமையிழந்து கேட்டான் முகத்தை இவன் பக்கம் திருப்பாமலே. 'ஆமாம்'' என்று சொல்லும்போது அவளது அழகிய உடல் அதிர்ந்தாடுவது போல் இருந்தது.

ஆபத்து என்று என்னை வரவழைத்து விட்டு நீங்கள் வேறுபக்கம் திரும்பிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம். நான் வந்தது உங்களுக்கு அவசியமில்லை என்றால் நான் போகிறேன்.''

அவன் நாற்காலியைவிட்டு எழுந்துவிட்டான்.

''இருங்கள் போய்விடாதீர்கள்' என்று கூறியபடி பதற்றத்துடன் திரும்பினாள். பார்ப்பவரைக் கவர்ந்திழுக்கும் முகம் இப்போது பரிதாபகரமாய்த் தெரிந்தது. அந்தத் துயரம் படர்ந்த முகத்தில் கண்ணீர்த் தாரைகள் இரு கன்னங்களிலும் பெருகி வழிந்தது.

சங்கரன் உண்மையாகவே நிலை தடுமாறிப் போனான்.

''நீங்கள் எதற்காக இப்படி வருந்தி அழுகிறீர்கள். பயப்படாமல்

என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் எழுதியிருந்த கடிதத்தில் உள்ள விஷயங்களையும் உங்களைப் பற்றியும் நான் ஓரளவு யூகித்து வைத்துள்ளேன். உங்களுக்கு என்ன தொல்லை இருந்தாலும் என்னிடத்தில் சொல்லுங்கள். நான் உங்களுக்கு உதவி செய்வதற்காகவே வந்துள்ளேன். நான் இங்கு வரும்போது யாராவது பார்த்துவிடுவார்களோ என்று பயந்துகொண்டு வரவில்லை. துணிந்து வந்துள்ளேன் என்னை நம்பலாம்.''

அந்தச் சிறிய தேவதை மாதிரியானவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள் அவளது மொத்த மேனியுமே நடுங்கியது. ஒருவேளைத் தன்னைப் பார்த்துத்தான் நடுங்குகிறாளோ என்றுகூடத் தோன்றியது அவனுக்கு. நடுங்கிக்கொண்டே பேச ஆரம்பித்தாள்,

'ஒரு தாசிக்கு என்ன கஷ்டம் வந்துவிடப் போகிறது. நான் இங்கு இருந்து தப்பி எங்காவது போய்விட வேண்டும் எனக்குத் தற்கொலை செய்து கொள்வதில் விருப்பம் இல்லை. நீங்கள் தான் எனக்கு உதவ வேண்டும்'' என்று கை கூப்பி மன்றாடுவதைப்போல் பேசினாள். அவளது நடுக்கம் அதிகமாகவே இருந்தது.

'தப்பிப் போவதற்கு என்ன இருக்கிறது. நீங்களாகவே உங்கள் விருப்பப்படி போக நினைக்கும் இடத்துக்குப் போகவேண்டியது தானே'' என்றான்.

''உங்களுக்கு என் நிலையை எப்படிப் புரிய வைப்பது என்றே தெரியவில்லை. உங்களுக்குக் கடிதம் எழுதி உங்களை வரவழைத்து உதவி கேட்பது விஜயாவுக்குத் தெரிந்தாலும் நான் ஆபத்தில் சிக்கிக்கொள்வேன்'' அவள் படபடப்புடனும் அவசரத்துடனும் பேசினாள்.

'இந்த வீட்டில் எனக்கு ஆதரவு தந்து உதவும் ஒரே ஆள் செவந்தி'' இடைநிறுத்தி கண்களைத் துடைத்துக் கொண்டாள். தெளிவாகப் பேச முயற்சித்தாள்.

'இந்தப் பாவமான வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. நான் இதிலிருந்து தப்பிப் போய்விடவே நினைக்கிறேன். அப்படிப் போய்விடாதபடி என்னைக் கட்டாயப்படுத்துகிறார்கள். மானமுள்ள யோக்கியதையான வாழ்க்கை வாழ எனக்கு அருகதை இல்லையா சொல்லுங்கள். இந்த இழிநிலையில் இருந்து என்னைக் காப்பாற்றுங்கள்' என்று மீண்டும் அவனைக் கைக்கூப்பிக் கும்பிட்டாள்.

பொலிவான அந்த முகத்தில் சுடரும் அழகிய விழிகள் அவனை

நேரிடையாகப் பார்க்க அஞ்சியது. எப்போதாவது பார்க்க முயன்றாலும் கண்ணீர் பெருகி அவனைப் பார்க்கவிடாமல் மறைத்தது. அவள் இன்னும்கூட அவனை நேரிடையாகப் பார்க்கவில்லை. தரையைப் பார்த்துக்கொண்டும் அடிக்கடி சன்னல் பக்கமாகப் பார்த்தபடியும் பேசினாள். அவளது பேச்சின் இடையே வேதனையால் முனங்கும் பெண்ணின் குரல் கேட்டது. சங்கரன் அந்த அறைக்குள் வரும்போதே அந்தப் பரிதாபகரமான முனங்கல்களைக் கேட்டான். இப்போது அந்தக் குரல் அதிகமாகி ஒருகட்டத்தில் மரண ஓலம் போல் கேட்டது. ஆனால் அது மிகவும் மெல்லியதாய்க் கேட்டது, பலவீனமான குரல்போல.

'யாராவது வந்துவிடுவார்கள் என்று பயப்படாமல் எனக்கு முழு விவரத்தையும் சொல்லுங்கள். நான் உங்களுக்கு நிச்சயம் உதவி செய்ய முயற்சிப்பேன்.''

பரம்பரையாய் எங்கள் வழியில் வந்தவர்கள் செய்துவருவது போல் என்னால் இருக்க முடியாது. என் அம்மாவிடம் அல்லியனூர் ஜமின்தார் பெருந்தொகை கொடுத்துள்ளார். அவருக்கு என்னை விற்றுவிட என் அம்மா தீர்மானித்து விட்டாள். அவளைப் போதுமான அளவு கசக்கிப் பிழிந்து சலித்துப் போய் இப்போது என்னையும் சீரழிக்க, என்னை அவருடனே நிரந்தரமாக வைத்துக் கொள்ள பெருந்தொகையை முதல் பணமாகக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இன்னும் ஒரு வாரத்தில் என்னை ஓர் அடிமைபோல அந்தக் கிழவன் இழுத்துக் கொண்டுப் போக அம்மா சம்மதம் சொல்லி விட்டாள். இது எந்த அளவில் நியாயம். விரும்பாதவளை விட்டுவிட வேண்டியதுதானே. எனக்குத் தன்மானத்தோடும் சுதந்திரமாகவும் வாழ உரிமையில்லையா? எனக்கு நீங்கள் உதவுங்கள். கடைசி முயற்சியாக உங்களைச் சரணடைந்துள்ளேன். நீங்களும் என்னைக் கைவிட்டால் நான் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை'' தாங்க முடியாத குலுங்களுடன் தேம்பி அழும் அவளை அவனால் தேற்றவே முடியவில்லை.

அவளது பேச்சு அவனைப் புரட்டிப் போட்டுவிட்டது. தன் எதிரில் நிற்பவள் வெறுமனே அழகி மட்டுமல்ல. தன்மானமும் சுதந்திரத்தையும் விரும்பும் ஒரு உத்தமமான பெண். மனமார அவளுக்கு உதவி செய்ய அவனது உள்ளம் விரும்பியது.

தன்னை முழுவதுமாக ஒப்படைத்துவிட்டவள்போல்

நடுக்கமும் இன்றி இப்போது அவனை அவளால் பார்க்க முடிந்தது. அந்த அழகிய பெண் அவனை நேருக்கு நேர் பார்த்தாள். அவனால்தான் அவளைப் பார்க்க முடியவில்லை. ஒரு குற்றமும் அற்ற நிர்மலமான அந்த விழிகளில் எவ்வளவு வேதனையான கண்ணீர்.

அவன் முகம் கோபத்தில் சிவந்துவிட்டது. சே... என்ன மாதிரியான உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று வெறுப்போடு உதடுகள் உச்சரித்தது ஓசையின்றி.

'நீங்கள் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை எதற்காக அழவேண்டும். உங்கள் குற்றம் எதுவுமே இல்லை. நீங்கள் நேர்மையாக வாழ முடியும். குலத்தொழில் குலவழி என்று உருப்படாத சுயநலப் பேச்செல்லாம் இப்போது பேசமுடியாது. போலீசுக்கும் நீதிமன்றத்துக்கும் போகலாம் நான் உங்களை இந்த மோசமான சூழ்நிலையில் இருந்து நிச்சயம் காப்பாற்றுவேன். அவனது கண்கள் சிவந்து போய்விட்டதைப் பார்த்தவளுக்கு அவன் தன் மீது இரக்கம் கொண்டுவிட்டான். தன்னைக் கட்டாயப்படுத்தும் மனிதர்கள் மேல் அவன் கோபம் கொண்டு விட்டான். தன்னைப் புரிந்துக் கொள்ள ஒரு மனிதன் கிடைத்து விட்டான். தன்னைக் காப்பாற்ற ஒரு நல்லவன் என்ற எண்ணமே அவளுக்கு உவப்பாயும் ஆதரவாயும் இருந்தது. தான் எதிர்பார்த்ததை விடவும் அவன் நல்லவனாய் இருப்பதாக உணர்ந்தாள்.

சங்கரன் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பலவித சமூகப் பழக்க வழக்கங்களின் மேல் வெறுப்படைந்தவனாக சூடேறிப்போன தன் தலையைத் தேய்த்துக்கொண்டான்.

"சரி, உங்களுக்கு எத்தனை வயதிருக்கும்?" அவன் கேட்ட போது அவள் இயல்பாகவே வெட்கமடைந்தாள்.

"எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால், பதினாறு முடிந்து விட்டதாக நினைக்கிறேன்" என்றாள்.

துயரம் நிறைந்த விழிகளால் அவனை நன்றாகப் பார்த்தாள். தனக்கு உதவி செய்ய வந்துள்ளவன் இளைஞன் மட்டுமல்ல ஓர் ஆணழகன்தான் என்ற இளமையின் வம்பு நிறைந்த இனிய எண்ணங்கள் அவளது நெஞ்சுக்குள் குதித்தோடியதின் விளைவோ என்னவோ முகம் சிவந்து உயிர்ப்புள்ள கவர்ச்சியால் மினுமினுத்தது.

இதற்கு முன் இப்படியொரு அழகியை அவன் பார்த்ததில்லையென்றே தோன்றியது. இவளைப் பார்த்துவிட்டுப் போன ஜமின்தாரிடம் இருந்து இவளைக் காப்பாற்றுவது அவ்வளவு லேசான காரியமில்லை என்பதை அவன் உணர்ந்துகொண்டான்.

அவளது பரிதாபமான நிலை அவளது தன்மானம் இரண்டுமே அவனைக் கவர்ந்து விட்டது. போதாக்குறைக்கு அவளே பேரழகியாகத் தன் முன்பு நின்றுகொண்டிருப்பது அவனை என்னவோ செய்தது. தனது மனதை அவன் பெரும் பாடுபட்டு அடக்கினான்.

''உங்கள் வயதைக் கேட்டதற்காக வித்தியாசமாக எதுவும் நினைத்துக் கொள்ளாதீர்கள். ஒரு வேளை யாருக்காவது மனு போட வேண்டிய கட்டாயம் வரலாம் அதற்காகத்தான்'' என்றான்.

பரவாயில்லை. உங்களது எந்தக் கேள்விக்கும் நான் பதில் சொல்லத் தயாராக உள்ளேன் என்பது போல் இருந்தது அவள் பார்வையும், புன்னகையும். அவளது கண்கள் கலங்கவோ கண்ணீர் சிந்தவோ மறந்துவிட்டது போல் துடிப்புடன் படபடத்தது. எந்த அலங்காரமும் இன்றிப் பேரழகியாகத் தெரியும் அவளிடம் மேற்கொண்டு பேச அவனால் முடியவில்லை.

'எனக்கு ஒரு விஷயம் ஆச்சரியமாக இருக்கிறது'' என்று அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

''என்ன ஆச்சரியம்'' அவன் காதில் தேன்போல பாய்ந்தது. அவளது குரல் யாழினும் இனிய மழலையின் குரல் போல். ''என்னைப் பற்றி உங்களுக்கு யார் சொன்னது. எனக்கு எப்படி கடிதம் எழுதினீர்கள்.'

அவள் சில கணங்கள் தயங்கினாள். அவளது முகத்தில் இருந்த சுடர்கள் அணைந்து விட்டதுபோல் விழிகளில் கூட மாற்றம் தெரிந்தது. துயரமான நாணம் அவள் முகத்தில் தோன்றியது

'நான் உண்மை பேசுவதால் என்னை மன்னித்து விடுங்கள். உங்களிடம் என்னால் எதையுமே மறைக்க முடியாது. விஜயா விடத்திலே உங்கள் அப்பா பேசிக்கொண்டிருந்ததை நான் ஒற்றுக் கேட்டு உங்களைப் பற்றி ஓரளவு தெரிந்துக் கொண்டேன். சிலகாலமாய் பட்டணத்தில் படித்து கொண்டிருக்கும் உங்களைப் பற்றி விஜயாவிடத்திலே நிறைய பேசுவார். சமீபத்தில் உங்களைப் பற்றி மிகவும் வேதனையாகப் பேசுவதையும் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் பிராமணர்களுக்கு எதிரானவர்களுடன்

எல்லாம் சேர்ந்து ஏதோ செய்துகொண்டிருப்பதாகவும் பிறகு தாசி முறையைக்கூட ஒழித்து விடப் போராடுவானோ என்னமோ என்று அவர் பேசி கொண்டது என் காதில் விழுந்தது.

உங்களைப்பற்றி நான் எப்படியோ தெரிந்துக்கொண்டு விட்டேன். நீங்கள் ஊருக்கு வந்திருப்பதையும் நான் அவர் பேசுவதையும் ஒற்றுக் கேட்டுதான் தெரிந்து கொண்டேன். ஒருவேளை நீங்கள் எனக்கு உதவலாம் என்று எண்ணிதான் செவந்தியிடம் கடிதம் கொடுத்தனுப்பினேன். எழுத்தில் நிறைய பிழைகள் இருந்திருக்கும் இல்லையா'' என்று அப்பாவித்தனமாக கேட்டாள்.

''ஆமாம் பிழை இருந்தது. ஆனால் சொல்ல வந்ததைத் தெளிவாக எழுதியிருந்தீர்கள்.'' அவன் உதடு பதில் சொன்னாலும் அவனது கம்பீரமான முகம் களையிழந்து, திடீரென வாடிப்போனதைக் கண்டு சுலோச்சனா பதறிப்போனாள்.

''நான் ஏதாவது தவறாகப் பேசிவிட்டேனா?' என்று நடுங்கும் விரல்களைப் பிசைந்துகொண்டே கேட்டாள்.

'என்னுடைய அப்பா இங்கு எதற்காக வருவார்?'

''நன்றாகக் கேட்டீர்கள். இது போன்ற வீடுகளுக்கு எதற்காக வருவார்களாம்? உங்கள் கேள்வி ஆச்சரியமாக இருக்கிறது'' குத்தலான கேலியோடு இயல்பாகக் கேட்டாள்.

அப்படியானால் அவரும் வேறு பெண்களுடன் சல்லாபிப்பவர்தானா? அவன் நம்பிக்கையற்ற விதத்தில் தனக்குத் தானே கேட்டுக்கொண்டான். அவனது மனதில் கடும்வேதனை பரவியிருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

'நான் உங்களிடம் இப்படிப் பேசியிருக்கக் கூடாது. என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்,

அவளது தூய உள்ளம் அவனுக்கு நன்றாகக் தெரிந்தது. எத்தனை மக்கள் தங்கள் விருப்பம் இல்லாமலே வழிவழியாக நடப்பது என்ற போர்வையில் தங்களைத் தாங்களே பலியிட்டுச் கொள்கிறார்களோ, அவர்கள் விடுபடவே முடியாதபடி எப்படித் தனது கழுகுப் பிடியால் சம்பிரதாயங்களும் சாஸ்திரங்களும் பிடித்து வைத்துள்ளன என்பது அவனுக்குப் புரிந்தது. ஏனோ பேராசிரியரை இப்போது நினைத்துக் கொண்டான். பிறகு ''ஏதோ முனங்கல் சப்தம் கேட்கிறதே அது என்ன'' என்று கேட்டான்.

'என்னுடைய சித்தி உடம்புக்கு முடியாமல் இருக்கிறாள்.

அவளுக்கு முடியவில்லை. அவளால் முனங்குவதைத் தவிர வேறு வழியும் இல்லை. வைத்தியரால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லி விட்டார். என்ன செய்வது எங்களைப் போன்றோரின் கடைசி காலம் இப்படித்தான் முடிய வேண்டும் என்பது விதி. அவளோட பாவ வாழ்க்கைக்கு ஏற்ற பலனை அவள் இப்போது அனுபவித்துக் கொண்டு இருக்கிறாள். இன்னும் சில தினங்களில் அவள் இறந்துவிடுவாள்' சுலோசனாவுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டுவிட்டது. முடியாமல் சிறு குழந்தைபோல அழுதாள்.

வேறு வழியே இல்லையா' அவளது துயரத்தைத் தடைப்படுத்தும் விதமாகக் கேட்டான்.

பட்டணம் அழைச்சிப்போய் ஆங்கில மருத்துவரைப் பார்க்கலாம் என்று விஜயா சொல்லிக் கொண்டிருந்தாள். சித்திக்கு அதில் விருப்பம் இல்லை. என்னை நிம்மதியாகச் சாக விடுங்கள் என்று கெஞ்சுகிறாள்.'' சிறு சிறு விம்மல்களுக்கிடையே அவளது வார்த்தைகள் தெளிவாக வந்தது.

'நான் அவளைப் பார்க்கலாமா?'

''இல்லை வேண்டாம். அவள் உடல் முழுவதும் சீழ் கொப்புளம் பெருகிவிட்டது. அவள் வசதிக்காக ஆடையில்லாமல் தான் இருக்கிறாள். அவளுக்குப் பிழைத்துக் கொள்வதில் விருப்பம் இல்லை. அவளுக்கு நாம் தொல்லை தரவேண்டாம். அவள் விரைவில் இறந்துபோக வேண்டும் என்று நான் கடவுளை வேண்டுகிறேன்.'' துக்கத்துடன் அவள் பேசும்போது ஏற்பட்ட நடுக்கத்தைச் சங்கரன் உணர்ந்தான்.

ஒரு காலத்தில் அவள் பேரழகி. வேட்டை நாய்கள்போல அவளை விழுந்து பிடுங்கிக் கடித்துக் குதறியவர்கள் அவள் உடல் நலங்கெட்ட பிறகு அவளை எட்டிக் கூட பார்க்கவில்லை. அவளைத் தேவதையென்று ஆராதித்துப் பூஜித்தவர்களில் ஒருவராவது அவளை ஆறுதல் படுத்தக் கூட வரவில்லை. இப்போது அவள் மரண வேதனையில் புழுபோல நெளிகிறாள். மகா கொடூரமான கழுகுகள் அவளது அழகிய உடலைப் பாழ்படுத்திவிட்டன. மரணத்தை அவளுக்குப் பரிசாய்த் தந்து விட்டு வேறு ஒரு புது உடலைத் தேடிப் போய்விட்ட கழுகு மனிதர்களை நினைத்து அவள் குமுறினாள்.

அவளை ஆட வைத்தும் பாட வைத்தும் நிர்வாணமாக்கியும் தீராத விளையாட்டுகளால் அவளைக் களைப்படையச் செய்து

இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டவர்கள் அவள் இறந்த பிறகு அப்படி ஒருத்தி இருந்ததையே முழுவதுமாக மறந்து விடுவார்கள். அவளது பிணத்தைத் தொட்டுத் தூக்க இதுவரை அவளைத் தொடாமல் தூரத்தில் நின்று வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்த தீண்டப்படாத மக்கள்தான் அவளைத் தங்கள் தோளில் சுமந்து போய் எரிக்கவோ புதைக்கவோ போகிறார்கள்.

சாகும் தருவாயில் அவள் எதை நினைத்து மகிழ்வாள். மன நிறைவடைவாள் எதுவுமே இல்லை. அவளது வாழ்வே ஒரு கனவுபோல் எல்லாமே பசப்பும், பாசாங்கும், ஏமாற்றும், பிதற்றல்களும் பொய்ப் பித்தலாட்ட வாக்குறுதிகளும், பொய்களும், வெறிபிடித்த தழுவல்களும், ஆபாசக் கூச்சல்களும், இதைத் தவிர வேறு எதுவுமே அவளது கடைசி கால நினைவில் வரப்போவதில்லை. கடவுளுக்குச் சேவை செய்யப் பிறந்தவள் என்று சொன்னவர்கள் அவளைக் கடவுளுக்காகச் சேவை செய்ய வைத்தார்கள். இந்த சம்பிரதாயங்களையும் இதன் ஏமாற்றுக் தனமான கபட நாடகத்தையும் போர்த்திக் குளிர்காய்பவர்கள் தங்கள் மனசாட்சியை மொத்தமாகக் கொன்று வீசிவிட்டுப் பொய்யாக கலை, கடவுள், சம்பிரதாயம், சடங்கு என்று பெரும்பாலான மக்களை ஏமாற்றி விட்டு, கடவுளின் சிலைக்குப் பின்பாக நின்றபடி தங்களது ஆபாச வாழ்க்கையைத் தீராத வெறியோடு வாழ்கிறார்கள். இந்த நிலைக்குத் தத்துவங்களையும், சமயத்தில் கடவுளையும்கூட, சாட்சியாய் வைத்து உண்மைபோல சோடனை செய்கிறார்கள். ஒழுக்கங்கெட்ட அவள் வாழ்க்கைக்கு யார் காரணம்? அவளா, இல்லை அவர்களா, யார் காரணம்? இந்தக் கொடிய கேடுகள் மண்ணுக்குள் போகாத வரை இந்த மனிதர்களின் நல்வாழ்வு என்பது கேள்விக்குறிதானே?

உள்ளே செவந்தி வந்தாள். அவளது கைகளில் வெள்ளி சொம்பு மின்னியது.

'சாமி மோர் எடுத்துக்கங்க.'

'நான் பால் பொருள்கள் எதையும் சாப்பிடுவதில்லை. தப்பாக நினைத்துக் கொள்ள கூடாது.''

' நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது பால் பொருள் வேண்டாம் என்றால் வேறு எதையாவது சாப்பிடத்தான் வேண்டும்' என்று வற்புறுத்தினாள். ஆட்களுடன் பழகாதவள்போல அவளது நடுக்கம் தீரவேயில்லை, பேச்சிலும் நடுக்கம் தெரிந்தது.

"இப்போது எதையும் சாப்பிடும் மனநிலையில் நான் இல்லை. நீங்கள் குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் போதும்."

அவளே போய் வெள்ளிக் குவளையில் தூய நீர் கொண்டு வந்தாள். அவளது மெல்லிய நடுக்கம் குவளை நீரில் அதிர்வில் தெரிந்தது.

"சரி உங்கள் அம்மாவும், விஜயாவும் என்று சொல்கிறீர்களே அவர்களும் எங்கே போய் இருக்கிறார்கள்' என்று கேட்டான்.

"மன்னிக்கணும். நான் உங்களைக் குழப்பி விட்டேன். என் அம்மாதான் விஜயா. நான் அவளை எப்போதும் பெயர் சொல்லி அழைப்பதால் உங்களிடமும் அப்படியே சொல்லிக்கொண்டு இருந்துவிட்டேன்" வெட்கப்படுவது போல் நெளிந்தாள்.

உதடு நிறத்துக்குக் கன்னமும், கன்னம் நிறத்துக்கு உதடுமாய் நிறம் மாறினாள்.

வெட்கம் லேசான புன்னகையுடன் சேர்ந்து இப்போது அழகாகத் தெரிந்தாள். பேரழகி என்று சொல்வார்களே அவர்கள் எல்லாம் இவளைப் போல்தான் இருப்பார்களோ எண்ணிக் கொண்டான் சங்கரன். விஜயாவை அம்மா என்று சொல்ல எனக்குச் சங்கடமாக இருக்கிறது. என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம் என்று எவ்வளவோ மறுப்பு சொல்லிப் பார்த்துவிட்டேன். அவள் பிடிவாதமாக இருக்கிறாள். நமது சமூகக் கடமையைச் செய்வதில் இருந்து நாம் பின்வாங்கக்கூடாது. அப்படி நாம் ஓடி ஒளிவது பாவம் என்கிறாள். கடவுளுக்குச் சேவை செய்யும் நமது வாழ்க்கை புனிதமானதென்றும் நமக்கு அடைக்கலம் தரும் பெரிய மனிதர்களுக்குச் சேவை செய்து வாழ்நாளைக் கழிப்பதுதான் உத்தமம் என்கிறாள். இதைத்தான் காலம் காலமாய்ச் செய்கிறோம். என் கதறலையும் வேதனையையும் அவள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. பழைய வீட்டை இடித்துவிட்டுப் புதிய வீட்டை அந்த ஜமீன்தார் தான் கட்டிக் கொடுத்தார். என்னை அந்த ஆளோடு அனுப்பி வைப்பதை ஏதோ புனிதமான காரியம் போல் நினைக்கிறாள்."

செவந்தி இளநீர் காய்கள் இரண்டைச் சீவிக்கொண்டு வந்தாள். மறுக்க முடியாமல் நீரைக் குடித்து வழுக்கையை உண்டான். இனிப்பாகவும் சுவையாகவும் இருந்தது. நாவை விடவும் மனதில் அவன் இனிப்பான ஒன்றை உணர்ந்தான்.

அவள் அவசரமாகச் சன்னல் பக்கமாகப் பார்த்துக் கொண்டும்

தாவணியால் முகத்தைத் துடைத்துக் கொள்வதுமாய் இருந்தாள். துடைக்கத் துடைக்க முகம் சிவந்துகொண்டே போனது அவளுக்கு.

எத்தனை விதமான சமூக அடுக்குகள் அத்தனையும் பாசிச வெறியர்களின் திட்டமிட்ட செயல். தங்களது சுய லாபங்களுக்காகத் தங்களது பேராசைமிக்கக் கொடிய அசுரப் பற்களை பலமற்ற ஏனைய மக்களின் இளம் சூடான ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து கும்மாளம் போட்டதுடன் இல்லாமல், அதற்கு ஏனைய பொய்க் காரணங்களைச் சொல்லி அதை நிலைநிறுத்த பலவிதமான கடவுள் பாத்திரங்களை இவர்களுக்காகவே உருவாக்கிவிட்டு அதில் கிடைக்கும் அபரிமிதமான லாபங்களைச் சொகுசாக அனுபவித்துக் கொண்டும் தாங்கள் பெரிய அறிவு ஜீவிகள் என்று மார்தட்டிக்கொண்டும் வாழ்கிறார்கள். பேதையாக இருக்கும் இவர்களை யாரும் அடிமைப்படுத்தவே இல்லை. இவர்களாகவே தங்கள் கைகளை விலங்கிட்டுக் கொண்டு அந்நியனுக்கு முன்பாக மண்டியிட்டுக் கிடக்கிறார்கள். யார்தான் இவர்களைக் காப்பாற்றுவதோ

தங்கள் சொந்தச் சகோதரனை ஊருக்கு வெளியே துரத்திவிட்டு அவன் உழைப்பின் மூலம் வரும் அனைத்தையும் வீட்டின் உள் அறையில் வைத்துப் பூட்டிக்கொள்கிறார்.

பல ஆயிரம் மைல் தொலைவில் இருந்து வந்த அந்நியனையோ தங்கள் அரியணையில் வைத்து அழகு பார்க்கிறார்கள். பலமற்ற தங்கள் சகோதரனை அடிமைப்படுத்திவிட்டு அந்நியனிடத்தில் இவர்கள் அடிமையாகக் கிடக்கிறார்கள். எவ்வளவு பெரிய கேலிக்கூத்து என்று எண்ணியபடி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

''அம்மா வரும் நேரமாகிவிட்டது.'' அவள் நடுக்கத்தோடு சொன்னாள்.

'ரொம்பவும் பயந்தீர்களானால் காரியம் ஆகாது' என்ற விளையாட்டாகச் சொன்னான். லேசாகச் சிரிக்கவும் முயன்றான்.

''காரியம் நடக்குமுன்னே சிக்கிக்கொள்வது நல்லதா?'' அவளும் அமைதியாகக் கேட்டாள்.

அவனோடு பேசுவதில் அவள் தயக்கம் தளர்ந்தது. வேறு ஒன்று அவள் நெஞ்சிலே மலராமல் மலர்ந்தது.

'அது சரி, இன்னும் சில நாட்கள் உங்கள் அம்மாவைச் சமாளித்துக் கொள்ளுங்கள். அதற்குள் ஏதாவது ஏற்பாடு செய்வோம். இப்போது காலம் மாறிக்கொண்டு வருகிறது. உங்கள்

விருப்பத்துக்கு மாறாக யாரும் உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது.''

'இவர்களிடம் இருந்து தப்பி வேறு என்ன செய்வதாக உத்தேசம்'' அவன் பொதுவான எண்ணத்தோடு கேட்டான்.

இந்தக் கேள்வியால் அவள் நிலைகுலைந்தவள் போல் தடுமாறினாள். ஆமாம், இவர்களிடம் இருந்து தப்பிப்பதே புலிவாயில் இருந்து மீண்ட கதைதான். அப்படியே பிறகு என்ன செய்வது என்ன மாதிரியான வாழ்க்கை வாய்க்கும் அவளது விழிகள் ஆதரவற்றுத் தவிப்பதை அவன் பார்த்தான். அவளது வடிவான நெஞ்சு ஆதரவற்ற நிலையில் வேடனிடம் சிக்கிக்கொண்ட பறவையைப்போல் படபடத்தது. பெருமூச்சுடன் எழுந்த தனது மார்பை இரு கைகளாலும் பொத்திக்கொள்வதுபோல் பற்றிக்கொண்டாள். அவளது நிராதரவான தவிப்பு அதில் தெரிந்தது. முதல் முறையாக அவளது நிறைவான நெஞ்சுக்குள் புதுவித துயரம் புகுந்து துளைத்தது.சங்கரனுக்கு அவளது நிலைமை முற்றும் புரிந்துபோனது.

'உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?'' பயனற்ற கேள்வியது என்று கேட்கும்போதே அவனுக்குப் புரிந்தது.

'நிறைய இருக்கிறார்கள். ஆனால் எங்கு போவதும் எனக்கு ஆபத்தைத்தான் தரும். நீங்களே யோசித்து எனக்கு ஒரு நல்ல வழி செய்யுங்கள். இப்போது விஜயா வரும் நேரமாகிவிட்டது. அவள் அவசரப்பட்டாள். மீண்டும் அவளது விரல்கள் நடுங்க ஆரம்பித்தன.

''என்னை இங்கிருந்து அனுப்புவதிலேயே குறியாய் இருக்கிறீர்கள்'' என்று கேலி பேசினான். வெட்கப்படவும் செய்தான்.

''இல்லை. வீணாக வம்பில் சிக்கிக் கொள்வது. நமக்கு நல்லதா? அம்மா உங்களைப் பார்த்தால் காரியம் கெட்டுவிடும்.'' அவள் கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளது பதற்றத்தை அவன் புரிந்துகொண்டு நான் போய் வருகிறேன் என்று கிளம்பிவிட்டான். அவள் இப்போதும் சன்னல் பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மாவுக்கு அவள் அதிகம் பயப்படுவதுபோல் இருந்தது.

உண்மையில் அவனைப் பார்ப்பதைத் தவிர்க்கவும் அவள் அடிக்கடி சன்னல் பக்கம் பார்வையைத் திருப்பவேண்டியிருந்தது. அவளது நெஞ்சுக்குள் அவனது எடுப்பான உருவம் நன்றாகப் பதிந்துவிட்டது. அவன் அந்த அறையில் இருந்து போனபின் ஏற்பட்ட வெறுமை அவள் எப்போதும் அனுபவித்திராத துன்பத்தைத் தந்தது. இது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. தான் ஏதோ தப்ப முடியா பெரும் வலையில் வீழ்ந்துவிட்டதைப் போல் ஒரு கணம் உணர்ந்தாள். அந்தத் தவிப்பு அவளுக்கு இன்பமாயும் வாழ்க்கையில் முதல் அனுபவமாகவும் இருந்தது.

நல்லவனாகவும் நேர்மையும் வசீகரமான வீரனாகத் தெரிந்த சங்கரனை அவள் நெஞ்சு அப்படியே ஏற்றுக்கொண்டுவிட்டது. தனக்காக அவன் மனமிரங்கி தனக்கெதிரானவர்கள் மீது கோபப்பட்டு அவன் கண் சிவந்து போனதைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தாள். வாழ்வில் தனக்கு ஒரு புதிய வாசல் திறந்துகொண்டிருப்பதைப் போலவும் அதன் வழியே பாய்ந்துவரும் ஒளி தன் கண்ணைக் கூசச்செய்வது போலவும் அவளது கண்களும் நெஞ்சமும் இன்பமூட்டும் விதத்தில் கூச்சமடைந்தது. ஒருவித பரவச நிலையில் இருந்தது. தன் இதயத்தில் பயம் விலகி சில்லென, ஏதோ புகுந்துவிட்டது போல் உணர்ந்தாள்.

அவன் வீட்டைவிட்டு வெளியேறுவதைச் சன்னல் வழியாகப் பார்த்தாள். அவன் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவள் பார்வையை விட்டு அவன் மறையும் தருணத்தில் அவன் திரும்பி தன்னைப் பார்ப்பதைப்போல் உணர்ந்து வெட்கத்துடன் சங்கரன் உட்கார்ந்திருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவன் உட்கார்ந்த இடத்தின் சூடு இன்னும் குறையவில்லை.

அம்மாவையும் ஜமீன்தாரையும் நினைத்தால் முன் எப்போதையும்விட அவள் உடல் நடுங்கியது. தன்னை எப்படியும் இவன் காப்பாற்றிவிடுவான். தன் நெஞ்சு முழுவதையும்கூட அவனிடம் ஒப்படைத்துவிட அவள் துணிந்து விட்டாள். நெருப்பு போல் ஒளிவீசும் கண்களைப் பார்க்க முடியாமல் தான் தவித்ததை நினைத்து தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள் சுலோச்சனா.

இது என்ன விபரீதமான எண்ணமாய் இருக்கிறது. தனக்கு உதவி செய்ய வந்தவரை எப்படி நான் இப்படியெல்லாம் நினைக்கலாம்.

தப்பு செய்கிறேனா என்று நினைத்தாள். ஆனால், அவனது உருவம் அவள் முன்பாக வந்து அவளைத் தொல்லைபடுத்தத் தொடங்கிவிட்டது.

அம்மாவையும் ஜமீன்தாரையும் கூட அவள் மறந்து போனாள். அவன் வந்தான் வாசல் வழியே போனானில்லை. இங்கேதான் இருக்கிறான். எங்கே? தன் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தாள். பிறகு, தனக்குள் நிகழ்ந்துவிட்ட மாற்றத்தை நினைத்தும், அதனால் ஏற்பட உள்ளக் கிளர்ச்சியால் சிவந்துபோன முகத்தைத் திரும்பத் திரும்ப கண்ணாடியில் பார்த்து ரசித்தாள். அவளது சிவந்த முகம் மேலும் சிவந்து மின்னியது.

⊙⊙⊙

இருட்டிய பிறகு விழித்துக்கொள்ளும் அதிசய மாளிகையது. சுற்று வட்டாரத்துப் பெரிய மனிதர்களின் அந்தரங்க ராணியாக விஜயா கொடி கட்டிப் பறந்தாள்.

ஒரு காலத்தில் சமஸ்தானத்திலும் வேறு செல்வம் படைத்த மனிதர்களும் காம தேவதையாகவே அவளை வழிபட்டார்கள். விஜயாவின் அழகுக்குப் போட்டியே அவளது தங்கை பாலம்மாதான்.

பாலா.. பாலா.. என்று அவள் மடியில் சொக்கிக் கிடந்தவன் திவான் லிங்கப்பாதான். பெண் பித்தம் தலைக்கேறிய அந்தத் தறுதலை மனிதன் தானும் கெட்டு அவளையும் சீரழித்துவிட்டுப் போய்சேர்ந்தான். அவனை விழவைத்து அவனது வீழ்ச்சியில் தன்னை வளர்த்துக் கொண்டவர்தான் சோமசுந்தரம். லிங்கப் பாவின் கணிசமான பொருள் பாலம்மாவிடம்தான் கரைந்து போனது என்பது ஊரறிந்த செய்தி.

மாபாவம். மன்னிக்கமுடியாத பாவம். பல நல்ல குடிகளைக் கெடுத்துவிட்ட நயவஞ்சகப் பாசறையாகவும் இருந்த அந்த வீடு பெரிய பூதம்போல் நின்றுகொண்டிருந்தது.

அந்த பூதத்துக்குள் ஒரு பூ தன் மொட்டவிழ்ந்த பூங்கரங்களால் பூந்தையல் வேலை செய்துகொண்டிருந்தது. கைகள் மட்டும் தான் பூ வேலை செய்துகொண்டிருந்தது. அவளது இளம் நெஞ்சமோ காலையில் வந்து போனவனையே நினைத்து விரட்டமுடியாத நினைவுகளால் சூழப்பட்டு, பலவிதமான மனப் போராட்டங்களாலும் கண்கலங்க, வேலையில் பிடிப்பற்று அலைமோதித் தடுமாறும் உள்ளத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

உத்தமமான வழிதேடியலையும் நெஞ்சோடு.

காலையில் சங்கரன் வந்ததும் அவனது பேச்சுகளும் அவள் காதில் விழுந்து நெஞ்சுக்குள் புகுந்து யாரும் புரிந்து கொள்ள முடியாத உணர்வுகளை அவளுக்குள் ஏற்படுத்தியது. அந்த மின்னலின் நெஞ்சிலே மேகம் உருவாகி விட்டதையோ அது கருவாகி, பொழியக் காத்திருப்பதையோ யார் அறிவார்.

பள்ளியில் படித்து அனுபவத்தை வளர்த்துக் கொள்ளும் மனிதரிடையே சுலோசனா பள்ளியறைச் சல்லாப சரஸப் பேச்சுகளையும் அதன் பலதரப்பட்ட சாதுர்ய உளறல்களையும் ஒற்றுக் கேட்டு தன் அனுபவத்தை வளர்த்துக் கொண்டிருந்தாள். உல்லாச சல்லாபிகளின் துரதிஷ்டம் அவளது எண்ணம் அவர்களுக்கு நேர்மாறாய் இருந்ததுதான். அவர்கள் படுக்கையறையில் உயிருள்ள ஒரு பளிங்குச் சிலை பறிபோனது.

அந்தப் புழுநெளியும் அவலமான கேலிக்கூத்து வாழ்க்கையை அவள் வெறுத்துக் காறி உமிழ்ந்தாள். தன் சித்தி போலவே தானும் உடல் அழுகி மனசாட்சியைத் தொலைத்து, சதையும் அரிதாரமுமாய் மின்னி, பிறர் வாழ்வை நாசப்படுத்து, பேய் போல உலாவி, தானும் பாவக் குழியில் விழுந்து, பலரையும் தன் பாவக்குழியில் தள்ளி, தாளமுடியாத மனோவியாதியில் செத்துப் புழுக்களுக்குப் பலியாகி விடுவதை அவளது நெஞ்சுக் கூடுக்குள் இருந்த தூய இதயம் வெறுத்து நிராகரித்து விட்டது. அவளது மனசாட்சி இப்படி வாழ்வது கூடாது என அவளை எச்சரித்தது.

தன்னைத் தூய்மையானவளாக மாறவே விடமாட்டேன் என்று அடம்பிடிக்கும் இந்தச் சமுதாய அமைப்பை நினைத்து அவள் மேலும் துயரமடைந்தாள். தான் தப்பிப் போவது என்பது ஏதோ ஒரு முட்டாள்தனமான யோசனையோ என்றுகூட தோன்றியது. தப்பி எங்கு போவது, யார் நமக்கு அடைக்கலம் தருவார்கள், அடைக்கலம் தந்து நம் சுதந்திர உணர்வுகளுக்கு மரியாதை கிடைக்குமா, அப்படிப்பட்ட மனிதர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையையே அவள் எப்போதோ தொலைத்து விட்டாள். அப்படிப்பட்ட நல்ல மனித வாழ்வியலின் முக்கியமான நம்பிக்கையைப் பெற முடியாதபடி அவளது மனம் உடைந்து போய்க் கிடந்தது.

இப்போது அந்த உடைந்த மனதை ஒட்ட வைத்தது மட்டுமல்லாமல் உயிர்ப்புள்ளதாக இயங்கவும் வைத்துள்ளான்

சங்கரன் என்று மனமார நம்பினாள். கடந்த காலக் கசப்புகள் அவளது உள்ளத்தைக் கடுமையாக வருத்தியது.

அம்மாவை எத்தனை பேர் கொஞ்சி மகிழ்கிறார்கள். அருவருப்பானபடி அவளைப் புகழ்கிறார்கள். வெட்கமற்ற பேச்சினால் உளறுகிறார்கள். எத்தனை விதமான பொய் வர்ணனைகள், பித்தலாட்டச் சிரிப்புகள். பிறகு இதே மனிதர்கள் தான் தங்களது வெறி மொத்தமும் தீர்ந்தபின் விடிவதற்குச் சற்று முன்பாக நாய் போலக் குரைக்கிறார்கள். நரிபோல ஊளையிட்டு மாட்டுத் தொழுவத்தில் உள்ள ஆண் எருமைகள் சாணத்தில் ஊறிய வாலைச் சுழற்றி வீசுவது போல் அவளது கன்னத்தின் மார்பிலும் அறைகிறார்கள். தங்கள் பிதற்றல்களையும் வாக்குகளையும் மறந்து மனமில்லாமல் அற்பப் பொருளைக் கொடுத்து விட்டுக் காறி உமிழ்ந்து விட்டுப் போகிறார்கள். தன் உடல் முழுக்கச் சிதறிக்கிடக்கும் அவர்களது எச்சிலைத் துடைத்துக் கொள்ளாமல் சிரித்த முகத்துடனே அவர்கள் தரும் பொருளைப் பேராசையோடு பார்ப்பது எவ்வளவு கொடுமையானது. அவமானகரமானது. சே... விடிவதற்கு முன்பாக அவசர அவசரமாய் அவர்கள் ஓடிப் போவார்கள். பிறகு விளக்குகளை அணைத்துவிட்டு நடந்த கொடுமைகளை நினைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுவாள். கண்ணீரால் தன் உடலைக் குளிப்பாட்டிக் கொள்வதுபோல் அழுவாள். ஆனால், அவர்கள் ஏற்படுத்திவிட்டுப்போன கறைகள் பேய் போல் விடாமல் கெட்டியாய் பிடித்துக்கொண் டுவிட்டதை நினைத்து வேதனையால் துடிப்பாள்.

மீண்டும் வெளியே குதிரை சாரட் வண்டி வந்து நிற்கும் ஓசைக் கேட்கும். எவனாவது மைனர் தங்க காப்பும் செயினும் மின்ன வருவான். பகலில் வருவது அவனுக்கு எந்தக் கூச்சத்தையும் தராது. அவன் ஒரு ரகம்.

என்ன ஆச்சரியம்! மின்னல் போல தன்னைத் தயார்படுத்திக் கொண்டு போய் வரவேற்பாள்.

உங்களுக்காகவே நான் காத்திருக்கிறேன் என்று பொய் பேசுவாள்.

என்ன மாதிரியான கொஞ்சல், என்ன புகழ்ச்சி, எப்பேர்ப்பட்ட வர்ணிப்பு. கேவலமான விலங்குகளைப் போன்ற தழுவல்கள். சே...மறுபடியும் கேடுகெட்ட நாடகம் அங்கே அரங்கேறும். பிரகாசமான விளக்கு ஒளியில் இரண்டு புழுக்கள் நெளிந்துக்

கொண்டு இருக்கும். பொருள் வைத்திருப்பவன் யார் வேண்டுமானாலும் இங்கு வந்துபோகலாம். இருவருக்கும் இடையில் கருப்புத் திரைகள் தொங்கியதால் ஒருவர் மற்றவரைப் பார்க்க அவசியம் இல்லாமல் போகிறது. அப்படியே பார்த்து விட்டால் என்ன போய்விடப் போகிறது. இதையெல்லாம் நினைத்துப் பார்க்க சுலோசனாவுக்கு தலை சுற்றியது.

என்ன மனிதர்கள் சே... கேடு கெட்ட இழிபிறவிகள் வம்ச பயணத்தில் தான் ஒரு முற்றுப் புள்ளியாகிவிட அவளது உள்ளம் உறுதியாகிவிட்டது.

நீண்ட நேரமாகப் பலவிதமான வண்ணப்பூக்களைத் துணியில் போட்டு அழகான படுக்கை விரிப்புத் தயார் செய்து கொண்டிருந்தாள். அவளுடைய மனதில் பலவிதமான அழகிய பூக்கள் தோன்றி மறைந்தது.

வண்ணக் கம்பளி நூல் உருண்டைகள் அவளைச் சுற்றி ஏராளமாகச் சிதறிக் கிடந்தது. பூந்தையல் வேலையில் அவளுக்கு இருந்த ஆர்வம் அலாதியானது.

இப்போது நோயுற்று மரணத்தை எதிர் நோக்கியிருக்கும் சித்தியிடத்திலேதான் இந்தக் கலையைச் சுலோசனா கற்றுக்கொண்டாள்.

உள் பக்கம் தாழ் போட்டிருந்த கதவைத் தடதடவெனத் தட்டினார்கள். சுலோச்சனா எரிச்சலுடன் போய் திறந்தாள். மல்லிகை மணம் கமழ வெற்றிலைக் குதப்பிய உதடுகள் சிவக்க நின்று கொண்டிருந்தாள் அம்மா.

'ஏண்டியம்மா உன் உடம்பைப் பார்த்துக் கொள்ளும் லட்சணம் இதுதானா?

வேளைக்குச் சாப்பிட வேண்டாமா? இப்படி இளைத்த கொண்டு போகிறாயே எதற்காம். இப்படியெல்லாம் நாம் உடம்பைக் கெடுத்துக் கொண்டால் யாரும் நம் முகத்தில் கூட விழிக்க மாட்டார்கள் தெரியுமா?''

''விழிக்காமல் போய்த் தொலையட்டும். எனக்குப் பசிக்கும் போது நான் சாப்பிட்டுக் கொள்கிறேன். நீ போ இங்கிருந்து. நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன்'' சுலோசனா சுர்ரென்று எரிந்து விழுந்தாள்.

''என்னடி நீ நம் வம்சத்துக்கு வந்த களங்கம்போல் என் வயிற்றில் பிறந்திருக்கிறாயே. பிழைப்பு எது என்று தெரிந்து

கொள்.

இன்னும் சில நாட்களில் ஜமீன் வீட்டுக்குப் போக வேண்டியவள் நீ... நாலு வேலி நிலத்தையும் அதன் நடுவில் இருக்கும் பெரிய வீட்டையும் உன் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் தெரியுமா? இதெல்லாம் யாருக்காவது வாய்க்குமா...'' என்று மகளிடத்தில் ஆசை வார்த்தை பேசினாள்.

'ஏன் வாய்க்காதாம்'' பெருங்குரலெடுத்துக் கத்தினாரள் சுலோச்சனா. அவளது முகம் சிவந்து விட்டது நெஞ்சோ துடித்து விம்மியது. கண்கள் நெருப்பை உமிழ்வதுபோல் சுடர்ந்தது.

'என்னை எதற்காக இப்படி சித்ரவதை செய்கிறாய். பண்ணையும் வீடும் எனக்குத் தேவையில்லை. மானம் மட்டும் இருந்தால் போதும்'

''அடிப்பாவி நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்? இதைவிட நல்ல வாழ்வு உனக்கு அமையும் என்று பார்க்கிறாயா. மகாராசாடி அந்த ஜமீன். அந்த ஆளை என்ன நினைத்துக் கொண்டாய். நீ மகாராணி போல வாழலாம். பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையல்லவா இது. பெரிய பாக்கியமாக நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீயோ அதை விஷம் என்று ஒதுக்கப் பார்க்கிறாய். முட்டாள் உனக்கு உலகம் தெரியாது நீ சின்னப்பெண். உனக்கு நமது வாழ்க்கையைப் பற்றித் தெரியவில்லை. உன்னை இதுவரையில் யாரையும் தீண்டவிடாமல் வளர்த்தேன் பார் என் புத்தியை ஜோட்டால் அடித்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற வாழ்க்கை எத்தனைப் பேருக்கு அமைந்துவிம். என் கதை தெரியுமா உனக்குப் பத்து வயதிருக்கும்போதே என்னைச் சீரழித்து விட்டார்கள் தெரியுமா உனக்கு? நான் அப்போது நாட்டியம் மட்டுமா ஆடினேன். நா கூசுகிறதடி எனக்கு. நான் மட்டும் என்ன விருப்பத்தோடவா இந்த வாழ்க்கையை வாழ்கிறேன். வீணே அடம் பிடிக்காதே... போ போய் ஒரு இடமாக இருந்து கிடைத்த வாழ்க்கையைப் பிடித்துக் கொள். இதைவிட வேறு நல்ல வாழ்வுக்கு வழி எங்காவது இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.''

'நல்ல வாழ்க்கைஞ் நாலுபேர் பார்க்க மேளக் கச்சேரியோடு என்னை அழைத்து செல்வாரோ அந்த ஜமீன்'' என்றவள் குலுங்கி அழுதாள்.

''ஓ அப்படியொரு ஆசையிருக்கிறதா அடிப்பாவி மகளே'' என்று நெஞ்சில் அறைந்துகொண்டு அலறினாள். விஜயா எங்கோ

அடைந்திருந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டியது.

''அந்த ஆசையெல்லாம் கனவுதானடி. நமக்கு என் சொக்கத் தங்கமே நம் தலைவிதியைக் கடவுள் இப்படிப் படைத்துவிட்ட பின் என்னடி செய்ய முடியும்'' அவளால் மேலே பேசமுடியவில்லை. மகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறியழுதாள். அவளது உள்ளக் குமுறல் கண்ணீராய்க் கொட்டியது.

தனது மகளுக்கு ஏற்பட்டுவிட்ட இந்த விபரீதமான எண்ணங்களால் அவளுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று முடிவாக அவள் நம்பினாள். மகளுக்காக வருத்தப்படவும் செய்தாள்.

அம்மாவிடம் எவ்வளவோ பேச சுலோச்சனாவுக்குத் தோன்றியது. ஆனால் எதுவுமே அம்மாவின் மனதை மாற்றி விடாது என்பதும் அவளுக்குத் தெரியும்.

'எனக்குப் பிடிக்கவில்லையம்மா வேறுவிதமான வாழ்க்கையை நம்மால் வாழ முடியாதா. தேவடியாள் என்று உன்னை அழைத்தவர்கள் என்னையும் என் குழந்தையையும் என்னவென்று அழைப்பார்கள். தொடர்ந்து இப்படியே போய்க் கொண்டிருக்க வேண்டுமா? இந்த நிலை மாறாதா! அம்மா மற்ற பெண்களைப்போல் நாம் ஒருவனிடம் மட்டும் ஊரரிய வாழ்ந்து சாக முடியாதா அம்மா' என்று மனதுக்குள்ளே கதறிழுதாள். இந்த கணத்திலே தனக்குச் சாவு வந்துவிடக் கூடாதா என்று ஏங்கிக் குமுறியழுதாள்.

மகளை ஆதரவாய்த் தழுவியபடி மகளின் முகத்தை உற்றுப் பார்த்தாள். விஜயாவுக்குப் பெருமையாய் இருந்து, முகத்தில் மாசு மரு எதுவுமின்றி தூய்மையாய் நிர்மலமான பௌர்ணமி நிலவு போல இருந்தது. அந்தத் தூய பெண்ணைச் சீரழித்துவிட, தனக்கு எந்த உரிமையும் இல்லை என்பது அவளுக்குத் தெரியும்.

அதே நேரத்தில் அவளது நல்வாழ்வுக்குத் தான் ஏற்பாடு செய்திருப்பதையும் விடச் சிறப்பானது வேறு எதுவும் இருக்கமுடியாது என்றும் நினைத்துக் கொண்டாள்.

சுலோச்சனா கட்டிலில் உட்கார்ந்துகொண்டு முழங்கால்களுக்கு இடையில் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தாள்.

பரிதாபமாய் விழிக்கும் தன் மகளைப் பார்க்கவே விஜயாவுக்கு வேதனையாக இருந்தது.

''காலம்தான் மகளே நமக்குப் பதில் சொல்ல வேண்டும்.

உன்னுடைய பாதுகாப்பான வாழ்க்கைக்கு இதைச் செய்வதை தவிர எனக்கு வேறு வழியில்லை. என்னைப் புரிந்துகொள். நான் இந்த வாழ்க்கையில் பழகிப் போய்விட்டேன். எனது மனமும் உடலும் மரத்துப் போய்விட்டது. நான் இப்போது உனக்காக மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நீதானடி என் உயிர். உன்னைக் கூண்டுக்குள்ளேயே வளர்த்தேனே. உன்னை யாராவது தீண்ட விட்டிருப்பேனா. எத்தனைப் பேர் வந்தார்கள். எவ்வளவு ஆசை வார்த்தைகள். அத்தனை பேரையும் நானே சுமந்து கொண்டது எதற்காக. எல்லா பாவங்களும் என்னோடு போகட்டும். என் தலைவிதி உனக்கும் தொற்றிக் கொள்ள வேண்டாம். பார்... நம் கண்முன்னே உன் சித்தி செத்துக் கொண்டிருக்கிறாள். புரிந்துகொள். புரிந்துகொள்.'' அம்மா மெதுவாக சுலோச்சனா காதில் மட்டும் விழும்படி சொல்லிக் கொண்டிருந்தாள். எதுவுமே சுலோச்சனாவின் காதில் விழவில்லை.'ஜமின்தார் மனைவிக்கும் உனக்கும் எந்த வித்தியாசமும் இருக்காது. உன்னை வேறு ஒருத்தனும் நெருக்கவும் முடியாது. உனக்கு எல்லாம் நல்லபடியா நடக்குமடி செல்லமே...'' என்று தாய் வேறு பல விஷயங்கள் கூட பேசினாள்.

'ஒரு இளவரசிக்குரிய வாழ்க்கையை உனக்கு ஏற்படுத்தியிருக்கிறேன்' என்று கூட சொன்னாள்.

உண்மையாகவே ஜமீன்தாரிடம் மகள் வைப்பாட்டியாகப் போவது விஜயாவுக்குத் திருப்தியான ஒன்றுதான். ஜமீந்தார் தன் மகளைச் செல்வாக்கோடு வைத்துக் கொள்வான் என்பது அவளுக்குத் தெரியும். அவன் எல்லாவிதமான ஆட்டமும் ஆடித் தளர்ந்து போனவன். ஒரு அந்தஸ்த்துக்காகத் தான் இவளை வைத்துக்கொண்டு இருக்க ஆசைப்படுகிறான். அறுபது வயது கிழவனுக்கு வேறு எதற்காகத் தேவைபடப் போகிறாள். அந்த ஆள் மண்டையைப் போட்டதும் அவள் வாழ போதுமான பணம் அவளிடத்திலே இருக்கும். பிறகு அவள் வழியைப் பார்த்துக்கொள்ள வேண்டியது தான். அவளோடு சேர்ந்து வாழ எந்த யோக்கியமான ஆம்பிளையாவது முன்வருவான் என்ற நம்பிக்கை அவளுக்குக் கிடையாது. இவளுக்கோ தேவடியாள் வேலை பிடிக்கவில்லையாம். எப்படியோ பொருள் சேர்த்து வைத்துவிட்டுக் கண்ணை மூடினால் அவள் பிழைப்பை அவள் பார்த்துக் கொள்ளப்போகிறாள் என்று விஜயா நினைத்திருந்தாள்.

தனது மகளின் வயதில் தனக்கேற்பட்ட அனுபவங்களை நினைத்துப் பார்க்கவே அவள் உடல் நடுக்கியது. ஆனாலும் அவள் நினைவுகளைப் புரட்டிப் பார்க்கத்தான் செய்தாள். அந்த வயதில் ஆறு ஆண்களுக்கு மேல் அவளின் ஆசை நாயகர்களாக இருந்தார்கள். அவளுக்கு ஆசைநாயகர்களோ இல்லை. அவர்களுக்கு இவள் அரிய பொக்கிஷம் போலவே இருந்தாள்.

பாலம்மா இதற்குள் தன் வேலையைத் துவக்கி விட்டிருந்தாலும் விஜயா மின்னி காமக் கண்ணன்களின் கண்களையே கூச வைத்துக் கொண்டிருந்தாள். இந்தக் கூட்டத்தோடு வந்து சேர்ந்துகொண்ட ஆல்பர்ட் என்ற வெள்ளைக்கார இளைஞனை அவளால் தன் வாழ்நாள் முழுக்கவும் மறக்கமுடியாது. தென்னிந்திய நாட்டியக் கலையைப் பற்றி ஆய்வுசெய்ய வந்தவனை சமஸ்தான அதிகாரிகள் அவளுக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார்கள்.

அவன், அவளது நாட்டிய அசைவுகளைப் புகைப்பட ஆல்பங்களாகத் தயாரித்தான். இவளுடைய பெண்மையில் அவனும் அவனுடைய ஆண்மையில் இவளுமாகச் சொக்கி மூன்று மாதங்களுக்கு மேல் இன்பத்தில் திளைத்துக் கிடந்தார்கள். இவளை அவன் இங்கிலாந்துக்கு அழைத்துப் போகப் பார்த்தான். இங்கிருக்கும் பெரிய மனிதர்கள் அதற்கு அனுமதிக்கவில்லை.

அவனையும் விரட்டாத குறையாக பலவந்தமாக துரத்தியடித்தார்கள். அவள் வாழ்க்கையில் நடந்த முதல் காதலும் கடைசிக் காதலும் அதுதான். அவன் ஏற்படுத்திய பற்குறிகளைத் தனக்குக் கிடைத்த காதல் பரிசாக நினைத்து ஏங்கிக் கிடந்தாள்.

அதை இப்போது நினைத்துக் கொண்டு வேதனையின் அரிதான தூயக்கண்ணீர் துளி உருண்டது அவள் கன்னங்களில்.

இன்பமான அந்தக் காதலையும் பிறகு தனக்கு ஏற்பட்ட பல அவமானகரமான உறவுகளையும் நினைத்து உடலதிரக் குலுங்கி அழுதாள்.

எல்லோரும் வாய் கிழிய தாசி வாழ்க்கை புனிதமானது. தூய்மையானது என்று பேனா முனை நொறுங்க எழுதிக் தீர்க்கிறார்கள். ஆனால், தாசியின் வாழ்வில் நடப்பது என்ன தன் சொந்த மனசாட்சியை அழித்துவிட்டு அங்கம் முழுதும் வேடம் தரித்து உடல் அதிர ஆடனும். அந்த ஆட்டமெல்லாம் எதற்கு? யாரைத் திருப்திப்படுத்த? ஆடி, பாடி, குலுக்கி, மினுக்கி எல்லா

ஆபாசங்களையும் செய்ய வைத்தவர்கள் திரைக்கு வெளியே வந்து அளிக்கும் பட்டம் தேவடியாள்.

அம்மாவின் அழுகை சுலோச்சனாவை உலுக்கிவிட்டது. அவள் தன் தாயின் பரிதாபகரமான முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்தில் காலம் தனது அழுத்தமான சுவடைப் பதித்து விட்டது போல் தெரிந்தது. விஜயாவின் முகத்தில் கண்ணீரைப் பார்ப்பது அரிது. நாடகத்தனம் நிறைந்த கண்ணீர் அவளது ஒவ்வோர் இரவிலும் வழியும். இப்போது அவளது கன்னத்தில் பளபளத்த கண்ணீர். நெஞ்சில் இருக்கும் ரணத்தில் இருந்து வழியும் குருதிபோல் அது பளபளத்தது. தன் தாயின் மீது இரக்கம் கொள்ள வைத்த அந்தக் கண்ணீரைத் துடைக்க நினைத்தாள். ஆனால், வெகு சிரமப்பட்டு அந்த ஆவலை அடக்கிக்கொண்டு கண்ணீர் காய்ந்த தன் முகத்தைப் பாவாடைத் துணியால் அழுத்தமாகத் துடைத்தாள். திடீரென்று அவளுக்குச் சங்கரன் நினைவு வந்தது. கூடவே கிழட்டுச் சமீன்தாரின் பயங்கரமான ஓர் உலகத்தில் அனாதைபோல் தான் உலவிக்கொண்டிருக்கும் ஓர் ஆபத்தான உணர்வினால் தத்தளித்தாள்.

சங்கரனின் நினைப்பு அவளது நெஞ்சுக்குள் லேசான நடுக்கத்தையும், உணரும்படியான காய்ச்சலையும் ஏற்படுத்தியது. அவள் உள்ளத்தின் வெம்மை மூக்கு வழியாக உஷ்ணமாக வெளியாவதை உணர்ந்தாள்.

ஆபாசமான ஆண்களையே கண்டும் கேட்டும் வந்தவளுக்குச் சங்கரன் புதுமையானவனாகவும் தூயவனாகவும் தெரிந்தான். அவன்தான் உண்மையான ஆண் என்றுகூட நினைத்தாள்.

இதுபோன்ற ஒருவனோடு மட்டுமே தன்னால் வாழ முடியும் என்றுகூட நம்பத் தொடங்கிவிட்டாள். அதே நேரத்தில் இவளது பேச்சும் எண்ணமும் விஜயாவுக்குக் கலக்கமாய் இருந்தது. துரதிஷ்டவசமாக அவள் தங்களது வழக்கமான வாழ்க்கையை இழிவாக நினைப்பது பெரும் தலை வலியில் போய்முடியும் என்று நினைத்து வேதனைப்பட்டாள். எப்படியாவது அவளை வழிக்குக் கொண்டுவந்து அவளை ஜமீன்தாரிடம் அனுப்பிவிட விரும்பினாள். அந்த ஜமீன்தார் ஒரு கலாரசிகன். இவளுடைய அழகில் சொக்கியே அவன் செத்துப்போவான் என்று நம்பினாள்.

சராசரி மனித இதயத்தோடு தன் மகளை அப்படி அனுப்பி வைப்பதுகூட மிருகத்தனான செய்கை தான் என்றாலும் அதை

விடவும் பாதுகாப்பான வாழ்க்கை அவளுக்கு இந்த ஜன்மத்தில் வாய்க்க எந்த வழியுமே இல்லை என்பது அவளுக்கு நன்றாகவே தெரிந்தது.

தான் பட்ட துன்பத்தில் நூற்றில் ஒரு சதவீதம் கூட இவளுக்கு வாய்க்காது என்று விஜயா நம்பினாள்.

அந்த அறை கலவரமாய் இருந்தது. இடை இடையே பாலம்மாவின் மரணப்போராட்டமான துயரமான வேதனையான முனகல்கள் சூழ்நிலையை இன்னும் துயரம் ஆக்கியது. தன் தாயை முதல் முறையாக அன்பு வழியும் விழிகளால் பார்த்தாள். அவள் மேல் தனக்கிருந்த வெறுப்பை எல்லாம் உதறி எறிந்துவிட்டு தூய அன்போடு அடைக்கலம் தேடும் உணர்வோடும் தன் தாயின் மடியில் போய் படுத்துக் கொண்டாள். தாயின் உள்ளம் முழுவதுமாக அவளுக்கு தெரிந்தது.

"அம்மா அந்த கிழவரிடத்தில் முன்பு இருந்தவளைக் வென்றுவிட்டானா விட்டார்களாமே" என்று நெற்றி சுருக்கிக்கொண்டு தாயைப் பார்த்து கேட்டாள்.

"யாரடி உனக்கு இதையெல்லாம் சொன்னது" என்று அதிர்ச்சியோடு கேட்டாள் விஜயா.

"யாரோ சொன்னார்கள் உனக்கெதற்கு, உண்மையா இல்லையா எனக்கு பதில் சொல்"

ஒரு கணம் பாலம்மாள் மீது விஜயாவுக்குச் சந்தேகம் வந்தது. அவள்தான் இவளுக்கு எதையாவது சொல்லிக் கொடுத்திருப்பாள் என்று தோன்றியது.

"எனக்குத் தெரியவில்லையடி நீயேன் அதைப் பற்றியெல்லாம் கேட்கிறாய் உனக்கு அந்தப் பயமெல்லாம் வேண்டாம். அவளுக்கு வேறு யாருடனோ தொடர்பு இருந்ததாம். அதுவும் கீழ்சாதிக்காரனாம். அதனால் ஜமீன்தார் சுட்டுவிட்டதாகச் சேதி. உண்மை வேறு எதுவாகவும் இருக்கலாம். ஜமீன்தார் ரோஷக்காரன்டி. உன்னைப் பொருத்தவரை அது நல்லதுதானே. அந்த ஆள் உன்னைத் தங்கக்கூண்டிலே வைத்துப் போற்றுவான். இது சத்தியம் என்று அவள் தன் தலையில் அடித்துக் காண்பித்தாள்.

"அந்தக் கிழவனுக்கு நான் மட்டும் போதுமா நீயும் அங்கு வந்து போக வேண்டுமா."

ஒரு கணம் விஜயாவின் உடல் பதறித் துடித்தது. உதறித் தள்ளினாள் மகளை "சீ, நாயே. என்ன பெரிய... பெரிய

வார்த்தையெல்லாம் பேசுகிறாய். பாலம்மாள்தான் உன்னை இவ்விதம் உருவாக்கி விட்டிருக்கிறாள்.'

தன் மகளை அருவருப்போடு பார்த்தாள். அவளுக்கு மனம் கூசியது. தானும் தன் மகளும் நிர்வாணமாய் ஜமீன்தார் கட்டிலில் கிடப்பது போல் காட்சிகள் அவள் முன்பாக வந்து நையாண்டிச் செய்தது. விஜயா அருவருப்போடு தூவென்று துப்பினாள். சுலோச்சனா அம்மாவின் மடியில் இன்னும் ஆழமாக முகத்தைப் புதைத்துக்கொண்டு அம்மாவைத் துன்பப் படுத்தி விட்டதற்காக எந்த வேதனையும் கொள்ளாமல் ஆதரவோடு அவளைப் பிடித்துக் கொண்டாள்.

''நம் தலைவிதியை ஆண்டவன் அப்படிப் படைத்து விட்டான். நானும் நீயும் என்னடி செய்துவிட முடியும். எனக்குத் தெரிந்து நம் வம்சத்திலே நீ ஒருத்திதானடி எந்த மாசும் இல்லாமல் ஒரு பெரிய பணக்காரனுக்கு வாழ்க்கைப் படப் போகிறாய். நான் என் அம்மாவோடு சுவாமிக்கு மாலைக் கோர்த்து கொண்டிருந்தேன். வயசு எட்டோ, ஒன்பதோ கோயிலில் கூட்டம் எதுவும் இல்லை. கோயில் குருக்கள் அம்மாவை ஏதோ வேலையாக அழைத்துப் போய்விட்டார். நான் மட்டும் தனியாக உட்கார்ந்து பூக்களைச் சோடிப் பிடித்து அடுக்கிக் கொண்டிருந்தேன். குருக்களின் மகன் என்னைக் கர்ப்பகிரகத்துக்குப் பின்பாகப் பழைய கோயில் பொருட்கள் கிடக்கும் இடத்துக்கு அழைத்துப் போய் என்னைச் சீரழித்தான். எனக்கு ஒன்றும் புரியாமல் கதறியழுதேன். காணிக்கையாக வந்த பழங்களைத் தந்து என்னை அனுப்பி விட்டான். நான் போய் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தேன். அலங்கோலமாய் அம்மாவும் வந்தாள். அவள் மீதும் விபூதியும் துளசியும் கலந்த வாடை அடித்தது. இதே வாடைதான் குருக்கள் மகன் மீதும் அடித்தது. போகப்போக இது எனக்குப் பழகிவிட்டது. என் அம்மாவிடம்நான் சொன்னபோது அவள் சிரித்துக்கொண்டே என்னைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள். வேறு எதுவுமே சொல்லவில்லை. அது அவளுக்கு ஒரு பெரிய விஷயமாகவே படவில்லை. என் காலத்தில் நடந்தது எல்லாம் ரொம்ப மோசம். உனக்கு அப்படியெல்லாம் நடக்காமல் இருக்க நான் பட்ட பாடு உனக்கெப்படித் தெரியும் ' அம்மா சுலோச்சனாவின் தலையைப் பாசமாகத் தடவி விட்டாள். திடீரென்று சுலோச்சனாவின் காதில் எதையோ கிசுகிசுத்தாள். அம்மாவின் மடியில் இருந்து சட்டென்று

எழுந்து கொண்ட சுலோச்சனா அம்மாவை முறைத்தாள்.

'அய்யோ உனக்கு ஏன்தான் புத்தி இப்படிப் போகிறதோ. அந்தக் கிழவன் எப்போது சாவது, நான் விரும்பிய வாழ்க்கையை எப்போது வாழ்வது? அம்மா நான் எப்படியோ பிழித்துப் போகிறேன். நீ எனக்கு விடுதலை கொடுத்தாள் போதும். இந்தப் பயங்கரமான இருட்டில் இருந்து தப்ப உன் உதவி வேண்டும்.''

''முடியவே முடியாது'' என்பதுபோல் விஜயா தலையாட்டினாள். ''கற்பில்லாத ஆண்கள் ஒட்டு மொத்தமாய்ச் செத்தொழியும் வரை உனக்கும் எனக்கும் விடுதலையே கிடையாது. நாம் படும் வேதனைக்குச் சர்க்கார்கூட ஒன்றும் செய்யமுடியாது. தெரியுமா உனக்கு'' அம்மா நம்பிக்கையற்று பேசுவதைத் துயரமான முகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சர்க்காரை விட பலமுள்ள ஜமீன்களையும் மிராசுகளையும் நாம் பகைத்துக்கொள்ள முடியுமா என்ன? நம்மைத் தொலைத்து விடுவார்கள்'' மேலும் ஏதோ... பேசிக்கொண்டே போனாள் விஜயா.

எதுவும் சுலோச்சனா காதில் விழவில்லை. மிராசு என்ற ஒரு வார்த்தை மட்டும் அவள் காதில் விழுந்து விட்டதுபோல உற்சாகத்தோடு ''அம்மா'' என்று கத்தினாள்.. 'அம்மா மிராசே நமக்கும் நம் போன்ற ஏனைய நம் குலப் பெண்களுக்கும் உரிமை குரல் கொடுத்தால் ஏற்று கொள்வாயோ உம்...'

சுலோச்சனா அம்மாவின் முகத்தை நம்பிக்கையோடு பார்த்தாள்.

'என் செல்வமே, நீ நிறையக் கனவு காண்கிறாய். மிக நம் சிவந்த கொழுத்த உடலில் புரண்டு இளைப்பாறும் சுகத்தை விட்டுவிட்டு நம் வீட்டுக் கதவுகளை மூட பெரிய பூட்டு வாங்கித் தருவார்களோ முட்டாள் பெண்ணே! உனக்கு புத்திதான் பிசகி விட்டதோ என்னமோ! தேவடியாள் மகள் போல இல்லையடி உன் பேச்சு'' என்றவள், துயர் மறந்து சிரித்தாள். தன் மகளைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

தன் மகளின் மண்டையில் என்ன மாதிரியான எண்ணங்கள் எல்லாம் தோன்றுகிறது என்று பூரிப்பால் சிரித்தாள். கண் கலங்க பேய்போலச் சிரிக்கும் தாயின் முகத்தைப் பார்க்க சுலோச்சனாவுக்கு வேதனையாக இருந்தது. சிரித்து அடங்கிப் பெருமூச்சொன்றை விட்டாள். சிவப்பேறிய அவளது முகத்தில்

கண்ணீர் வழிந்தோடியது. அவள் திடீரென்று தன் கண்ணீரைத் துடைத்தும் கொண்டு எப்போதும் வலிநிறைந்த முனங்கல் ஒசை வரும் அறையைக் காட்டி,

'இப்படி செத்துப்போக எந்தப் பெண்ணாவது விரும்புவாளா? எந்தப் பக்கமும் தப்பிப் போகாதபடி நம்மை அடைத்துவிட்டார்களே. நாம் இப்படித்தான் சாக வேண்டும் என்று விதி எழுதப்பட்டு விட்டதே. நாம் எப்படி மீள முடியும். உன் சித்தியைவிட அழகியை நான் பார்த்ததே கிடையாது. அவளது நாட்டியம் ஒரு மின்னல்போல் பளீரிடும். அவள் காலத்தில் அவளைப் போல நாட்டியமாட ஒருத்தி பிறக்கவில்லை. அவளது நாட்டியத்தை விடவும் அவளது உடம்பையே ரசித்தார்கள். அவளும் வெறுப்படைந்து நாட்டியத்தையே நிறுத்திவிட்டு எப்போதும் பெரிய மனிதர்களின் படுக்கையறையிலேயே கிடந்தாள். அவள் நோய் வந்து சாயும்வரை அவளது படுக்கையறையில் தனியாக இருந்ததே கிடையாது. ஆண்கள் அவளை ஈக்களைப் போல மொய்த்துத் தொல்லைப் படுத்திவிட்டார்கள்.

இப்போது பார் அவள் தனியாக இருட்டறை கட்டாந்தரையில் நிர்வாணமாய் முனங்கிக் கொண்டு கிடக்கிறாள்.

யார் அவளை வந்து பார்ப்பார்கள். இப்படி தான் நம் வாழ்வு போகவேண்டும் என்று இருக்கிறது. இதுதானடி விதி.'

எல்லாவற்றுக்கு விதி மேலேயே பழி போடுகிறாயே அது என்ன விதி என்று கேட்கத் தோன்றியது.

''நம்மால் எதையும் மாற்ற முடியாதா?''

''முடிந்தால் நாம் ஏன் இப்படி வதைபடுகிறோம். நீ ஒன்றும் இதையெல்லாம் நினைத்துக் குழம்பிக் கொண்டிருக்காதே. பிறகு, உனக்கு மனநிலை சரியில்லையென்று ஜமீன்தார் உன்னை வைத்துக்கொள்ளும் எண்ணத்தை விட்டுவிடப் போகிறார் பிறகு எல்லாம் பாழ்தான்'' என்று முன்னெச்சரிக்கையோடு சொன்னாள்.

''விட்டுவிடட்டுமே. அதனால் என்ன?' என்று அப்பாவித் தனமாகக் கேட்டாள் சுலோசனா.

இந்தப் பெரிய வீடும், இரண்டு காளை பூட்டிய குடை வண்டியும் எப்படி வந்ததாம். அதையும் விட்டு விடுவோமா?''

''ஓ.. இதெல்லாம் எதற்கு? எங்காவது குடிசையில் போய் வாழ்வதுதான்''

''அடி தாசி மகளே' என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள். 'சரிதான் பிறகு பிழைப்புக்கு என்ன செய்வதாம்' என்று போலியான யோசனையோடு கேட்டாள்.

''ஏன் நமக்குப் பிழைப்புக் கிடைக்காதா என்ன, எத்தனை மக்கள் உழைத்துப் பிழைக்கிறார்கள்? அவர்களைப் போல நாமும் உழைக்க வேண்டியதுதான்''.

''பிழைக்கலாம். எப்படிப் பிழைத்தாலும் உன்னைத் தேவடியாள் பெற்ற பெண் என்றுதான் சொல்லுவார்கள்''

''வேறு எங்காவது போய் விடுவோம்'' என்று யோசனை சொன்னாள் சுலோச்சனா.

நாம் எங்க போனாலும் ஆண்களால் நாசமடையவே செய்வோம். நம்மால் ஊரோடு கூடி வாழவும் முடியாது. வெளியூர் ஓடி வாழவும் முடியாது. இந்தத் தொல்லையெல்லாம் வேண்டாம் என்று நான்கூட ஆல்பர்ட் துரையுடன் இங்கிலாந்து போய் விடலாம் என்று கனவு கண்டேன். அப்படி நான் நினைப்பது கடவுளுக்குச் செய்யும் துரோகம் என்றும், நான் நரகத்திற்குத்தான் போவேன் என்றும் பெரிய மனிதர்கள் பயமுறுத்தி விட்டார்கள்.

அப்படியும் அவன் மீது இருந்த காதலால் நான் எல்லாவற்றையும் உதறிவிட்டு அவன் பின்னால் போகத் தயாராக இருந்தேன். இந்தப் பாவிகள் என்ன செய்தார்களோ கேவலமான இந்த நரிப் பிறவிகள் துரையையே விரட்டி விட்டார்கள். என் கனவும் நாசமாய் போய்விட்டது. இந்த சோமசுந்தர ஐயர்தான் ஏதாவது சூழ்ச்சி செய்து அவனை விரட்டியிருப்பார் என்று எனக்குச் சந்தேகம். இவர்களை மீறி நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. ஏன் வீணாகக் கனவு காண்கிறாய்.

இதுதான் சமயம் என்று சங்கரன் தனக்கு உதவ வாக்களித்திருப்பதை அம்மாவிடம் சொல்லிவிட நினைத்தாள்.

''அம்மா... நான் ஒன்று சொல்லட்டுமா! என்னைக் கோபிக்கக் கூடாது... சரியா.''

அப்படி என்னதான் சொல்லப்போகிறாய். நீ, பெரிய மனுஷி போல் எல்லாவற்றையும் பேசக் கற்றகொண்டு விட்டாயே... சொல்லேன்.' அம்மா ஆர்வத்துடன் முகத்தைப் பார்த்தாள்.

''நான் சங்கரனுக்குக் கடிதம் எழு வரவழைத்தேன். அவரும் காலையில் வந்துவிட்டுப் போனார்.'

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் விஜயாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

''என்ன காரியம் செய்துவிட்டாய் சுலோ... உனக்கு புத்தி தான் பேதலித்துவிட்டது. நாம் தொலைந்தோம் போ, விஜயா பதட்டத்துடன் கைகளை உதறினாள். இரண்டு கைகளாலும் கன்னங்களைப் பிடித்துக் கொண்டு கீழ் பார்வையில் வெறுமனே மகளைப் பார்த்தாள்.

'யானை கொழுத்துவிட்டால் தன் தலையிலே மண் அள்ளிப் போட்டுக் கொள்ளுமாம். அப்படியிருக்குது உன் வேலை. யார் உனக்கு இந்த யோசனையைச் சொன்னது.''

இவ்வளவு தூரம் போய் விட்டதை நினைத்து விஜயா குழப்பமடைந்துவிட்டாள். அவளைக் குழந்தையென்று தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். அவள் பெரிய காரியங்களாய்ச் செய்துகொண்டிருக்கிறாள். விஜயா தலையைப் பிடித்துக் கொண்டாள்.

ஐயருக்குத் தெரிந்தால் காரி முகத்திலே உமிழ்வார், நான் உனக்குப் போதாதா. என் பிள்ளையும் உனக்கு வேண்டுமா என்றுகூட ஆபாசமாக கேட்டாலும் கேட்பார். என்ன செய்வது என்று குழப்பத்தால் வேகமாகத் தலையில் அடித்துக்கொண்டாள்.

'சரி, சங்கரனைப் பற்றி உனக்கு எப்படி தெரியும்''.

'நீயும் ஐயரும் பேசிக்கொண்டதை வைத்துத் தெரிந்து கொண்டேன்.'

'உன் எதிரில் நான் அவருடன் பேசியது இல்லையே.''

''உன் அறையில் வைத்துப் பேசிக்கொள்வீர்களே..''

''அடிப்பாவி அறைக்கு வெளியே இருந்து ஒற்றுக் கேட்பாயோ'' அவள் உடல் கூசியது. ஒருவிதமான அவமானம் நிறைந்த தகிப்போடு சுலோச்சனாவைப் பார்த்தாள்.

அவள் தலையாட்டி உண்மையை ஒப்புக்கொண்டாள்.

''அடி சிறுக்கி நாயே இந்தப் பழக்கம் எத்தனை நாளாய் இருக்கிறது உன்னிடத்தில்'' என்று ஏசினாள்.

விஜயாவைத் தாங்க முடியாத வெட்கமும் அவமானமும் பிடுங்கித் தின்றது. அவள் முகம் சிவந்து கண்களை உருட்டி விழித்தாள். தன் படுக்கையறையில் நடந்த ஆபாசங்களைப் பார்த்து விட்டதைப்போல் அவளது உடலும் உள்ளமும் கூசியது.

''சனியனே உன்னை நான் குழந்தையென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என் படுக்கையறையில் ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாயோ தூ... வெட்கங்கெட்டவளே'' என்றபடி. தன் மகளைப் பிடித்துத் தள்ளிவிட்டாள். அவளுக்கு அம்மாவின் அறையில் நடப்பதை ஒற்று கேட்பதால் அப்படி ஒன்றும் சுவாரசியம் இல்லைதான். தாய்க்கும் வித... விதமான ஆடவருக்கும் இடையில் நடக்கும் அந்தரங்கத்தை எந்த மகள்தான் காதைத் தீட்டிக் கொண்டு கேட்பாள்.

ஐயரோடு அம்மா இருக்கும்போது அழுகைக் குரலும் அலறும் சத்தமும் சில சமயங்களில் இவள் கேட்டதுண்டு. அந்த ஆள் அம்மாவை அடித்துவிடுவதாக இவள் நினைத்துக்கொண்டு அப்படி என்ன நடக்கிறது என்று கதவோரம் போய் நின்று கவனிக்க ஆரம்பித்தாள். சில சமயங்களில் அந்த ஆள் கோபமாக அம்மாவின் கன்னத்தில் அறையும் ஓசையும் அவள் வீல்லென்று அலறுவதும் சில சமயம் நாடகத்தனமான ஓசைகளும் அழுகையும்கூட கேட்டது. பெரும்பாலும் தனது மனச் சுமைகளையெல்லாம் அவளிடம் கொட்டினார். அப்படி அவர் கொட்டியதுதான் சங்கரனைப் பற்றிய விஷயங்கள்.

''நீ செய்தது வெட்கங்கெட்ட வேலையாக உனக்குத் தெரியவில்லையா.''

அவளுக்குப் பதில் சொல்ல சுலோச்சனா துடித்தாள். நான் ஒன்றும் உனது சிரிப்பையும் சந்தோஷ முனகல்களையும் ஒற்று கேட்க வந்ததில்லை. அவர் உன்னை அடித்து விடுகிறாரோ என்ற பயத்தால்தான் அங்கு வந்து நிற்க ஆரம்பித்தேன் என்று சொல்ல நினைத்தாள். அதற்குள் விஜயா மகளைத் தன் பக்கம் பற்றி இழுத்தாள். தனது மென்மையான அதே நேரத்தில் வலுவான கரத்தை மகளைச் சுற்றிப்போட்டு அணைத்துக் கொண்டாள்.

அம்மாவின் திடீர் அரவணைப்பால் திக்குமுக்காடி போனவளின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. வெளியே செவந்தி விளக்கேற்ற சுடரோடு நடமாடுவது தெரிந்தது. அந்த வீட்டின் ஒரே வேலையாள் அந்த வீட்டின் எல்லா மர்மங்களும் அறிந்தவள் அவளுக்கு ஒத்தாசையாக வண்டிக்காரன் ஒருவனும் இருந்தான். அவன் மாலை நேரத்தில் தன் புதுமனைவியிடம் போவதற்காக அவசரப்பட்டுக் கொண்டு போய்விட்டான்.

கொஞ்ச நேரத்தில் குங்குமப் பூ ஏலக்காய் வாசனையூட்டிய

பாலோடு செவந்தி வந்தாள். இருவருமே மிகுந்த ஆவலோடு பாலைப் பருகினார்கள். வழக்கத்திற்கு மீறி பாலில் கற்கண்டின் சுவை தூக்கலாக இருந்தது. 'சுலோச்சனா நம் வாழ்வைப் பற்றி நீ ரொம்ப தவறா நெனச்சுகிட்டிருக்கியா?'' மகளைப் பார்த்துப் பரிதாபமாகக் கேட்டாள்.

'அய்யோ, ரொம்ப நியாயமான வாழ்க்கைதான் இது'' அவளது வார்த்தையில் இருந்த குத்தலான நையாண்டி. முன் எப்போதையும் விட அவளைத் துன்புறுத்தியது.

'சரி, நான் கெட்டவள்தான் உனக்கு எந்த கெடுதலும் வராதபடி நான் பார்த்துக் கொள்வேன் புரியுதா? என்றவள் தன் மகளின் தலையை அன்போடு வருடினாள்.

இந்த சங்கரன் மாதிரியான ஆட்கள் வழக்கமான எல்லாவற்றையுமே கெடுத்துவிடுவார்கள். பிறகு, அவர்கள் நல்ல பெயரோடு சுகமாகத்தான் இருப்பார்கள். நாம்தான் கெட்டு குட்டிச் சுவராகப் போகவேண்டும். இளம் வயது பட்டணத்துப் படிப்பு எல்லாம் சேர்ந்து பழசு, எல்லாம் குப்பை, உலகத்தை இப்படி மாற்றுகிறேன் அப்படியாக்கி விடுகிறேன் என்று ஆயிரம் ஜம்பம் அடிப்பார்கள். பிறகு உள்ளதும் போச்சுடா நொல்லைக் கண்ணா கதைதான்.

இவளது மண்டைக்குள் எதையெல்லாம் புகுத்திவிட்டானோ, இவளது அழகில் மயங்கி வீராவேஷமாக உளறி இவளையும் கெடுத்து அவனும் கெட்டுப் போகப் போகிறான். விதி யாரை விட்டது என்று நினைத்துக் கொண்டாள். மகளிடம் எதையாவது பேசி அவளை வழிக்குக் கொண்டுவர நினைத்தவள் அவனுடைய அப்பா என்னிடத்திலே எப்படி கிடக்கிறார் என்று உனக்குத்தான் தெரியுமே? நீதான் எங்கள் இருவர் சம்பாஷணையையும் ஒற்றுக் கேட்பவளாயிற்றே' என்று சுருக்கென்று தைக்கும்படியான வார்த்தையை விட்டாள்.

பிறகு பிள்ளை உன்னை மடக்கப் பார்க்கிறான்'' என்றாள். கோபத்தோடு முறைக்கும் தன் மகளை எந்த உணர்வும் அற்ற பார்வையால் வெறுமனே பார்த்தபடி..

''நீ சின்னவள் உனக்கு இதெல்லாம் புரியாது. அவனிடத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் பேசிக்கொள். எது வேண்டுமானாலும் நடக்கட்டும். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை'' என்று அவளுக்கே உரிய சாதுர்யத்தோடு

சொன்னாள்.

சுலோச்சனாவின் கோபம் இன்னும் அதிகமாகி அம்மாவின் முகத்தில் உமிழ்ந்துவிடுபவள் போலவும் வெறுப்பைக் கக்கும் பார்வையால் அவளைத் தீய்த்து விடுவதுபோலவும் பார்த்தாள். பேச அவளுக்கு வார்த்தை வரவில்லை. சிறு... சிறு... விம்மல்களோடு மார்பைப் பிடித்துக்கொண்டாள்.

'நீ இன்னும் ஐந்து நாட்களில் ஜமீன் வீட்டுக்குப் போக வேண்டியவள். புரிந்துகொள்.'' உத்தரவு போல் வந்தது வார்த்தை.

''உனக்கு இப்படிப் பேச வெட்கமாக இல்லையா வீடு என்கிறாயே! படுக்கை அறைக்கு என்று சொல்'' என்று உடலதிரக் கத்தினாள். அவளது தாவணி நழுவித் தரையில் விழுந்துவிட்டது. வெட்கமற்ற முறையில் அம்மாவை வெறித்துப் பார்த்தாள். தன் மக்களின் முழு நிறைவான மார்பைப் பார்த்துப் பரவசப்பட்டாள். கசாப்புக்குத் தயாராகிவிட்ட ஆட்டை வியாபாரி பார்ப்பதுபோல்.

'ஏய் சுலோ... உனக்குப் பேய் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது. உனக்கு எங்கிருந்து வந்தது இத்தனை அகங்காரம். அவர் சொன்னது போல் அந்தச் சங்கரன் தறுதலையாகத்தான் இருப்பான் போலத் தெரிந்தது. உன் மனதையும் அவன் கெடுத்து விட்டிருக்கிறான் பாவி' என்று அவனையும் சபித்துவிட்டு, நீ கண்ணகி ஆகிவிட நினைக்கிறாயோ என்னமோ நம்மால் அதுவும் முடியாது. நம்மைக் கசக்கிப் பிழிய பேய்கள் போல் காத்துக் கிடக்கிறார்கள்'' என்றாள்.

நிலைமை விபரீதமாய்ப் போய்விட்டதை விபரீதமாய்ப் போய் விட்டதை விஜயா புரிந்து கொண்டாள். இனி காலங்கடத்துவது பெரும் ஆபத்தாய் முடியும்போல் இருந்தது. ஜமீன்தாரை நினைத்து ஒரு கணம் நடுங்கினாள். அந்த ஆளை நினைக்கும்போது எல்லாம் அவள் உடல் இயல்பாகவே நடுங்கியது. ஒரு பேய் போல அவன் உருவம் வந்து போனது.

'சரி, சங்கரன் என்னதான் சொன்னான்?'

அவள் அமைதியாக கண்கள் கலங்கியபடி வெறுமனே தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒரு வேளை நீ அவனிடத்தில் மயங்கி விட்டாயோ?'' இந்த வார்த்தை அவளைத் தலைநிமிர வைத்தது. நிமிடத்தில் அவள் விழிகளில் தெரிந்த ஜொலிப்பை விஜயா பார்த்தாள். அந்த ஜொலிப்பு ''ஆம்'' என்று பதிலளிப்பதுபோல் இருந்தது.

''யாரும் மயங்கவில்லை. நல்ல புத்தியுடன்தான் பேசினோம்''

‘என்ன பேசினீர்களாம்?’’

’அதான் நீ எனக்குச் செய்து வைத்திருக்கும் ஏற்பாட்டை பற்றித்தான். அதில் எனக்கு விருப்பம் இல்லை. என்னைக் காப்பாற்றும்படி சொன்னேன்.’’

அந்த ஜமீன்தார் முன்பாக சங்கரன் துரும்பு மாதிரி. அந்த ஆள் வெள்ளை அதிகாரியிடம் பேசும்போதுகூட கால் மேல் கால் போட்டுதான் பேசுவான். இந்த ஜில்லா கலெக்டர், போலீஸ் எல்லாம் அவனுக்குச் சலாம் போடுவார்கள். அவனிடம் எல்லா ஒப்பந்தமும் முடிந்து இவளுடன் கொஞ்சிக் குலாவ அந்தக் கிழவன் வீட்டைச் சரஸமாட தோதான மாளிகையாக மாத்தி பெரும் பூதம்போல இவளுக்காகக் காத்துகிட்டிருக்கான். இவள் மறுப்பெல்லாம் அவனிடத்தில் பலிக்காதே.

இவள் சிறகுகளை வெட்டிக் கூண்டில் அடைத்து விடுவான். எந்தச் சட்டமும் இவள் உதவிக்கு வரமுடியாது. யாரும் வரவும் மாட்டார்கள். பிறகு அடிமைதான். அடிமையாய் இருப்பதைவிடவும் ஆசை நாயகியாய் இருந்துவிடுவது எவ்வளவோ மேல். நம் சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் பூதூவி இவளை ஏற்றுக் கொள்ளும். சின்ன பெண்ணாகிய இவளுக்கு எதுவுமே புரியாமல் இப்படி குதிக்கிறாளே என்ன செய்ய? விதிவிட்ட வழி. மகளை நினைத்துத் தடுமாறினாள்.

‘‘அவர் போலீசுக்குப் புகார் செய்யவேண்டி வரலாம். நாம் பலர் மத்தியில் இழிவான வாழ்வு வாழாமல் நேர்மையாக வாழ முடியுமாம். நமது சுதந்திரத்தில் யாரும் குறுக்கிட முடியாது என்று தைரியம் சொன்னாள் சுலோச்சனா.

‘ரொம்ப காலமாக இப்படியெல்லாம் பேசிக்கொண்டு திரிகிறார்கள். இதெல்லாம் லேசில் நடக்கிற காரியமா ஆபத்திடம் தலையைக் கொடுக்கப் பார்க்கிறாய், கடவுளாய் விரும்பி நம் தலையில் இப்படி எழுதியிருக்கிறானே நாம் அதை மீறமுடியுமா?‘

‘‘அய்யோ எதற்காக அம்மா கடவுள்... கடவுள் என்று கடவுளைப் பழிக்கிறாய். அவருடைய மகளை நீ பலருக்கும் உடல்சுகம் தரும் வேசியாய் இரு என்றா எழுதி வைப்பார். நீ செய்யும் தப்புக்குக் கடவுளைச் சாட்சியாக அழைத்துக் கொள்கிறாய். நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக் கொள்ள சாஸ்திரச் சம்பிரதாயங்களைக் காரணம் காட்டுகிறாய்.

விஜயா வாயடைத்துப் போனாள். அவளால் இனி எதுவுமே

பேசமுடியாததுபோல் ஆகிவிட்டது. தான் செய்வதற்கு ஒன்றும் இல்லை. இனி நடப்பதை எதிர்கொள்ள வேண்டியதுதான். அவள் மோனமாய் தயாராகிவிட்டாள். அவளது தூய சிறகுகளைத் தானே உடைக்க முடியாதுஎன்று தோன்றியது. மகள் சொல்வதில் நியாயம் இருப்பதை அவள் உணராமல் இல்லை. அவளது உள்ளம் தூய்மையாக இருக்கிறது. மண்டை யோசிக்கத் தொடங்கிவிட்டது. இனி தான் என்ன சொன்னாலும் அவளது போக்கை மாற்றவே முடியாது. என்ன செய்வது இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

'சரி... நாளைக்கு அவனை வரச்சொல். நானும் அவனிடத்தில் பேசிப் பார்க்கிறேன்.'' அவள் தலையைப் பிடித்துக்கொண்டு மனக் கலவரத்தோடு அங்கிருந்து வேகமாகப் போய்விட்டாள்.

விஜயாவின் முகத்தில் ஏறிய கருமையைச் சுலோச்சனாவால் உணரமுடிந்தது. தன் தாயைப் பரிதாபமான பிறவியாய் நினைத்து உருகினாள். வெறிபிடித்த ஜமீன்தார்களும் பேராசைக்கொண்ட மிராசுகளும் உன்னையும் இன்னும் உன் போன்ற ஏனையப் பெண்களையும் நன்றாகக் கசக்கிப் போதுமான அளவு சீரழித்து விட்டார்கள். அதுவும் மதம், கலை, பண்பாடு, கலாசாரம் போர்வையிலேதான் இத்தனை கேவலமும் நடந்தேறியுள்ளது.

யார் தான் அதற்கு முற்றுப்புள்ளி வைப்பது. நாம் துவக்க வில்லை யென்றால் வேறு யார் தான் துவக்குவார்கள். இனி நாம் யாருக்கும் அடிமையில்லை. நாம் சுதந்திரப் பெண்கள். கலை, சேவை, என்ற பெயரில் இனி நாம் ஆபாச மனிதர்களுக்குப் பலியாகத் தேவையில்லை. எல்லாம் நம்மோடு முடிந்துவிட்டது. சுதந்திரமடைந்து விட்டவள் போல எந்தச் சலனமுமின்றி நாளை சங்கரனைச் சந்திக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் உறங்கப் போனாள்.

மனிதரின் மீது இரக்கங் கொண்டுதான் இயற்கை அவனுக்கு உறக்கத்தை வழங்கியிருக்கிறது. மனிதனின் துயரங்கள் தற்காலிக நிவாரணம் உறக்கம்.

◉◉◉

விடிய விடிய அப்படி என்னதான் எழுதிக் கொண்டிருந்தானோ என்று நினைத்தபடி அம்மா சமையல் கட்டில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

சுயராஜ்யம் பற்றி நீண்ட கட்டுரை ஒன்றை எழுதி முடித்துவிட்டு, குளித்து முடித்து கூடத்தில் நின்று தலையைத்

துவட்டிக் கொண்டிருந்தான்.

அம்மா அவனைப் பார்த்து விட்டு அலறினாள். 'சங்கரா எங்கேடா பூணூல்? எங்காவது அறுந்து விழுந்து விட்டதோ'' என்று பதைபதைப்புடன் கேட்டாள்.

'இல்லையம்மா அதை அறுத்து எறிந்துவிட்டுத்தான் தலை முழுகினேன்.'' அவனது குரல் உறுதியாக வந்தது.

''அடபாவி நீ இப்படிச் செய்தது உன் அப்பாவுக்குத் தெரிந்தால் உன்னைத் தலை முழுகிவிடுவார் பார்த்துக் கொள். பாழாய்ப் போன அந்தப் பட்டப் படிப்பு உன்னை இப்படி கெடுத்து விட்டதே! அவருக்குத் தெரிந்தால் பிராணனை விட்டுடுவார்'' என்று புலம்பினாள்.

'அப்பா ரொம்பவும் ஒழுக்கமானவரோ'' என்று ஏளனமிக்க தொனியில் கேட்டான்.

விசாலம் ரொம்பவும் துடித்துப்போய் விட்டாள்.

'இப்படியெல்லாம் பேச உனக்கு எப்படி மனம் வருகிறே அவர் ஒழுக்கத்தைப் பற்றி உனக்கென்னடா தெரியும்?'' என்று கத்தினாள்.

'சரியம்மா நீ ஒன்றும் கோபித்துக் கொள்ளாதே நான் வெளியே போய் வருகிறேன்' என்று சொல்லியபடி கிளம்பி விட்டான்.

கடவுளுக்குச் சேவை செய்ய, கலைகளை வளர்த்தெடுக்க என்று அவர்களை ஒரு சமூகமாக உருவாக்குவது, பிறகு அந்த பெண்களோடு படுத்துப் புரள்வதுதான் ஒழுக்கத்தின் லட்சணமோ என்னவோ சே... அவனுக்கு நெஞ்சு எரிந்தது.

சாப்பிடாமல் போகிறானே என்று அம்மா கலங்கினாள். இவன் மண்டைக்குள் என்ன புகுந்து கொண்டதோ என்று துயரமடைந்தாள்.

ஊரில் வீண் கதை பேசும் வீணர்களிடம் இப்போது ஒரு புதுக்கதை மாட்டிக்கொண்டு அல்லோகலப்பட்டது. சங்கரன் இப்போதெல்லாம் விஜயா வீட்டில் தான் கிடக்கிறானாம், கேள்விப்பட்டாயா'' என்றான் பல்துருத்திக் கொண்டு இருக்கும் ஒருவன்.

அந்தக் குட்டிதான் யாரையும் திரும்பிக் கூடபார்க்க மாட்டளே. சங்கரனை மட்டும் பார்க்கிறாளோ என்னமோ மிராசு பிள்ளையா–யிற்றே. பட்டணத்தில் படித்துவிட்டு வந்திருக்கும் ஆணழகன்.

அதுதான் கோவிலில் பார்த்து ஜாடை காட்டியிருப்பாள். அவளது கண் ஜாடைக்கு முன் மயக்கம் போடாத ஆண்பிள்ளை இருப்பானா' என்று நீட்டி முழங்கினான் சுந்தரம்.

'அப்படியானால் சீக்கிரத்தில் நீயும் போகப்போகிறாய் என்று சொல்'' என்றான் சுப்பு ஆபாசமாய்.

'பிறகு சரக்கைக் கடைத் தெருவுக்குக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு விற்க மாட்டேன் போ என்பார்களோ'' என்று தன் மேதைமையைக் காட்டிச் சிரித்தான் சுந்தரம்.

'ஓய், கொஞ்சம் சும்மா இரும். அதோ வருவது சங்கரன் தானே'' என்றபடி கூர்ந்து பார்த்தான், பல் துருத்தியவன்.

''ஆமாம். ஏதோ வெள்ளைக்கார துரை போல்தானே இருக்கிறான் கிராப்பும், பேண்டுமாக'' என்று வயிற்றெரிச்சல் பட்டுக் கொண்டான் சுப்பு.

'என்ன சங்கரா வெகுதொலைவு பிரயாணமா?' என்று ஒரே குரலில் இருவரும் கேட்டுவைத்தார்கள்.

''ஆமாம். தபால் ஆபிஸ் வரை போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே போனான்.

பார்த்தாயா வயதுக்குக் கூட ஒரு மரியாதை இல்லை. ரொம்ப பிகு பண்ணிக் கொள்கிறானே'.

'எல்லாம் பணம் பண்ணுகிற வேலைதான்' என்று ஒருவன் ஒத்து ஊதினான்.

'இங்கிலீஸ் படித்துவிட்டு வந்திருக்கிறான். எப்படியாவது சர்க்கார் வேலை கிடைத்துவிடாதா என்ன. அவன் அப்பாவுக்குத் தெரியாத வித்தையா? அது தான் பையன் யாரையும் மதிக்காமல் போகிறான்'' வயிறெரிந்தான் சுப்பு.

இப்படியே வேறு ஏதேதோ பேசி வெறுமனே மதிய சாப்பாட்டு வேளைக்குப் பிரிந்து போனார்கள்.

சங்கரன் தபால் ஆபிஸில் இருந்து வயல் வரப்புகளைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிட்டான். காவிரிப் பாசனத்துக்கு உட்பட்டுப் பரந்துவிரிந்து கிடந்தது நிலம்.

தூரத்தில் புதர்களுக்கு இடையே புகைந்துக் கொண்டிருந்தது. வயல்களில் பண்ணையாட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். வயல்வெளியெங்கும் சுற்றித் திரிந்தான். சோளக் காட்டுக்குள் புகுந்து இளம் கதிர்களாகப் பார்த்து அறுத்துக் கொண்டு புங்கை

மர நிழலில் உட்கார்ந்து சுவைக்க அதன் இனிமையான சாறை விழுங்கி ஓடைத் தண்ணீரை அள்ளிப் பருகினான், பசி தணிந்தது. செடிகள் மண்டிய புதர் காடுபோல் தோன்றியது. காட்டுச் செடிகளுக்கு இடையே புகுந்தது நடந்தான்.

புதர்களுக்கு மத்தியில் யாரோ ஒரு பெண் காய்ந்த சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

சங்கரனைப் பார்த்துவிட்டுப் போய் ஒளிந்து கொண்டாள். அது சங்கரனுக்குப் பிடிக்கவில்லை.

எதற்காக இப்படி ஓடி ஒளிகிறாள். ஒருவேளை தீண்டப்படாதவளாய் இருப்பாளோ சே.. என்ன இது மடத்தனம் யாரைப் பார்த்து யார் ஒளிவது மனிதர்களை மனிதர்கள் எப்படிப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்கள் பார்...

நான் என் வழியில் போகிறேன். நீ உன் வேலையைச் செய் என்று அவளைக் கூப்பிட்டுச் சொல்ல நினைத்தான். ஆனால், மனம் வெறுப்புற்ற நிலையில் புதரினூடே நடந்துப்போனான். அவனது கனத்த மிதியடிக்குக் கீழாக முள், சிறு பூச்சிகளும் நசுங்கிச் செத்தன.

காடு குளிர்ச்சியாய் இருந்தது. அருமையான அந்தச் சூழலில் சுலோச்சனாவை நினைத்துக் கொண்டான். மாசற்ற அழகிய அவளது முகம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இழிவான வாழ்க்கையை விட்டுவிடத் துடிக்கும் இவள் போன்ற மனிதருக்குத்தான் இந்த உலகம் என்று ஆகிவிட்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும். உலகமே தூய்மையாகி மனிதர்கள் தங்களுக்குத் தேவையற்ற உதவாத பழங்குப்பைகளைக் குழி தோண்டிப் புதைத்துவிடத் துணிந்தால் எப்படியிருக்கும்? அவன் சிந்தனையோடு நடந்தான்.

அவளது உணர்வுகளைச் செழுமைப்படுத்திக் கொள்ள, அவள் சுதந்திரம் அடைந்துவிட எது தடையாக இருக்கிறது. அவள் தூய்மையான வாழ்வு வாழ முடியாதபடி எது தடை செய்கிறது. அவள் தனது உடலை ஒருவனுக்கு மட்டுமே ஒப்படைத்து அவளது மனதில் ஒருவனுக்கு மட்டுமே இடம் தர முடியாதபடி செய்த சாஸ்திரம் எது. அவள் செய்யும் இழிவான வேலையைக் கடவுள் தொண்டு என்று சொன்ன இழிந்த எண்ணம் கொண்டவன் யார்?

அந்த அழகிய தூயவள் எல்லோர் முன்பாக ஆடவும், பாடவும் உடல் இச்சையால் தாறுமாறாய் அலைந்துத் திரியும் ஆண்களுக்காக

யார் அவளைப் படைத்தது. அப்படிப்பட்ட படைப்பாளனைத்தான் நான் தினம்... தினம் தொழுது வணங்குகிறேனா?

அப்படிப்பட்ட சாஸ்திரங்களைத்தான் உயர்ந்தது என்று போற்றுகிறோமா. அவன் உள்ளம் கூசியது.

இதுபோன்ற பாசிச அமைப்பைக் கட்டிக் காப்பவர்கள் தன் அப்பாவைப் போன்றவர்கள் தான் என்ற எண்ணம் அவன் நெஞ் சைத் துயரத்துக்குள்ளாக்கியது.

சுலோச்சனாவின் எண்ணங்களால் அவன் மனம் தடுக்க முடியாதபடி அலை பாய்ந்தது. மேலும் வேகமுற்றது.

தன்னால் அவளைக் காப்பாற்ற முடியும் என்ற எண்ணம் வலுத்தபோதும். அவளது அழகில் தனக்கு ஈர்ப்பு ஏற்பட்டு இருப்பதை உணரும்போதும் அவன் தனக்குத்தானே வெட்க மடைந்தான். அவளது திடமானத் தூய மனசாட்சியின் விழிப்பை அவன் நேசித்தான்.

இந்தச் சமூக அமைப்பு அதன் படிநிலை எல்லாம். சுரண்டுவதையும், உழைக்காமல் உட்கார்ந்து கொள்ளையடித்து தின்பதற்கான ஏற்பாடுமாய், அவனுக்கு அப்பட்டமாய்த் தெரிந்தது. கிளர்ச்சியடைந்த மனநிலையில் காடு முழுக்க சுற்றித் திரிந்து விட்டு வெளியே வந்தான். அவனது சொந்த வயல்வெளியில் இறங்கி நடந்தான். வயல் மிகப் பிரமாண்டமாய் வளர்ந்து ஆற்றிலிருந்து வரும் கால்வாயில் போய் முடிந்தது. கரும்புச் சோலை பச்சைப் பசேல் என்று தெரிந்தது. வலதுபுறத்தில் நெல் வயல்கள் அறுவடைக்கு முன்பாக இருக்கும் வழக்கமான அமைதியில் தங்கம் போல் பளீரிட்டது. கதிர்கள் மணிகளின் கனத்தால் தலை சாய்ந்து கிடந்தது. வயல் குருவிகள் கபடமில்லாமல் உறவாடி வயிறு பருத்து பறக்க முடியாமல் வரப்புகளில் உட்கார்ந்து கீச்சிட்டுக் கொண்டிருந்தன. வரப்பு முடிவில் பெரிய வற்றாத கிணறைப் போய் எட்டிப்பார்த்தான்.

நிர்மூலமான வானம் கிணற்றில் தெரிந்தது. வெகுநேரம் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். வானம் அதில் ஒரு முகம் கூடத் தெரிந்தது. பகலில் தோன்றும் நிலவோ என்று பார்த்தான். இல்லை அது சுலோச்சுனாவுடையது. இதென்ன வம்பு அவள் நினைப்பு ஒழியமாட்டேன் என்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

கிணற்றுக்கு நேரே சற்றுதூரத்தில் பண்ணை வீடு இருந்தது.

அதில் பண்ணைப் பொருட்களும் சமயத்தில் பண்ணையாட்களும் இருக்கும்படி கட்டப்பட்டது. பண்ணை வீட்டைச் சுற்றி இரண்டு பெரிய மாமரங்கள் கிளைத்து நின்றது. பத்து,, பதினைந்து முலைகளுடன் வாழை மரங்கள் லேசாகச் சாய்ந்தபடி நின்றன. பண்ணை வீடு சமீபத்தில்தான் வெள்ளையடிக்கப் பட்டிருந்தது. திடீரென மாமரங்களைப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற ஆசை வந்தது. சிறுவனின் உள்ளத்துடன் பண்ணை நோக்கி நடந்தான். வீட்டை நெருங்க... நெருங்க பலவீனமான குரல் கேட்டது.

பண்ணை வீட்டினுள் ஏதோ அசம்பாவிதம் நடப்பதுபோல் தோன்றியது, சிறு சப்தங்களும், முனகல்களும், ''வேண்டா சாமி'' என்ற பரிதாபமான கெஞ்சலும் கேட்டது.

ஒரு கணம் சங்கரனுக்கு நடுக்கம் உண்டானது. சுற்றிலும் ஒரு மனிதரையும் காணவில்லை.

வீட்டிற்குள் இருந்துதான் ஓசை வருகிறது. தெளிவாகக் கேட்டது ஒரு பெண்ணின் அழுகுரல். பிறகு சலசலப்பு நீண்ட நேர அமைதி.

சங்கரன் ஒரு கணம் அப்படியே நின்றுவிட்டான். அவனது உடம்பு சூடேறிவிட்டது.

அவன் நிலைகுலைந்து நின்று கொண்டிருந்த சமயத்தில் ஒரு பெண் அலங்கோலமான நிலையில் வெளியே ஓடிவந்தாள். அவள் உடுத்தியிருந்த கந்தல் மேலும் கந்தலாகித் தாறுமாறாய்த் தொங்கியது.

கந்தலை மார்புக்கு மேலாகப் போட்டு அழுத்திக்கொண்டு கரும்புச் சோலையில் புகுந்து ஓடினாள். கொஞ்ச நேரத்துக்கு முன்பாகக் காட்டில் சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த பெண் தான் அவள் என்பதைக் கண்டுகொண்டான்.

யாரோ விவசாயிதான் அவளை இப்படி அலங்கோலப்படுத்தி இருப்பான் என்ற எண்ணத்தில் பெரிய கல் ஒன்றை எடுத்து எடுத்துப் பண்ணைக் கதவில் எறிந்து கத்தினான்.

''யாரடா அந்த அசிங்கம் பிடித்த நாய் வெளியே வாடா'' அனல் பறக்கக் கத்தினான். அருகில் கிடந்த நீண்ட தடியை கையில் எடுத்து கொண்டு எதிரிக்காகக் காத்திருந்தான். கோபத்தில் அவன் உடல் நடுங்கியது.

வெளியே யாரும் வரவில்லை. வீடு பிணம் போன்று அசைவற்றுக் கிடந்தது. ஒருவேளை இவள் அவனைக் கொன்றிருப்பாளோ.

அப்படி நடந்திருந்தால் எவ்வளவு உத்தமமான செயலாய் இருக்கும் என்று அவன் மனம் எண்ணியது. ஒரு கணம் அந்த வீட்டோடு அவனை எரித்துவிடக்கூட எண்ணினான்.

கையில் கழியுடன் வீட்டிற்குள் பாய்ந்தவனின் கண்கள் மிரண்டு போய் மூடிக்கொண்டது. கழியை வீசிவிட்டு முகத்தைப் பொத்திக் கொண்டான்.

சங்கரனின் அண்ணன் நடத்திய போராட்டம் காரணமாகவும், அவனிடம் இருந்து தன்னைக் காப்பற்றிக் கொள்ள அவள் நடத்திய எதிர்த்தாக்குதலுமாய்ப் பெரிய கலவரத்துக்கிடையே அவன் தனது வேட்டையில் வெற்றியடைந்தாலும் அந்தப் பெண் முடிவில் அவனது மார்பிலே ஓங்கி மிதித்து தள்ளித் தலைமுடியைப் பிடித்து தரையில் மோதி அவனை நிலை குலைய வைத்துவிட்டுப் போ–யிருந்தாள். தலை தரையில் மோதிய அதிர்ச்சியில் பிணம்போல் தரையில் கிடந்தான். அவனது ஆடைகள் குடிசையின் மூலையில் சுருண்டு கிடந்தது. பூணூல் அறுந்து அதன் ஒருமுனை அவனது இடது காலில் சுற்றிக் கொண்டு கிடந்தது. அவனது நிர்வாண உடல் பூராவும் பூனைக் கீறிவிட்டதுபோல் ரத்தச் சிவப்பாய்க் கீறல்கள். சில இடங்களில் ரத்தம் உறைந்து கிடந்தது. அவன் மயக்கத்தில் கிடந்தான்.

அடப்பாவி இவ்வளவு கொடியவனா நீ என்று தோன்றியது. வெட்கமும், அவமானமும் சங்கரனைப் பிடுங்கித் தின்றது.

மூலையில் கிடந்த துணியை எடுத்து அவன் மீது வீசிவிட்டு வெளியே வந்து காறி உமிழ்ந்தான்.

அதிர்ச்சியும் களைப்புமாய் தென்னைத் தோப்புக்குள்ளாக நடந்து போய்க்கொண்டிருந்தான். மனம் இடிந்துபோய் வெறி கொண்டது போல் தடுமாறியது.

அதேநேரத்தில் ஆண்மை மறைந்து பெண்மை சுமந்து இயற்கையின் விந்தை போல செவந்தி அங்கு வந்து கொண்டிருந்தாள்.

சங்கரனின் கொதிப்படைந்த முகத்தைப் பார்த்து நடுங்கி போனவள், சங்கரனிடத்தில் கடிதம் ஒன்றைக் கொடுத்து விட்டு எதையோ சொல்ல வாயெடுத்தாள்.

சங்கரன் அவளை எரித்துவிடுவது போல் பார்த்துக் கடிதத்தை வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு ''நீ போ'' என்று விரட்டினான்.

சங்கரனின் மனம் அமைதியின்றித் தவித்தது. தன்மீது புழுக்கள்

நெளிந்து திரிவது போல் அருவருப்பாய் உணர்ந்தான்.

இயல்பு மீறி பல்லைக் கடித்து, பிறகு தூவெனத் துப்பினாள்.

கடிதத்தைப் படிக்க மனம் இல்லாமல் வெறுப்பில் கசக்கி உருட்டித் தூரமாய் எறிந்தான். பிறகு தன் வழியே சிதைந்த மனதுடன் வீடுபோய்ச் சேர்ந்தான். அம்மா எதையோ கேட்டாள். அவளுக்குப் பதில் சொல்லாமல் தன் அறைக்குப் போய்விட்டான்.

அம்மா ஏதோ காகிதக் கட்டுகளை அவன் முன்பாகக் கொண்டு வந்து நீட்டினாள். அவன் அதை எங்கேயோ வாங்கிப் போட்டுவிட்டுப் போய் படுக்கையில் விழுந்தான். மன அதிர்ச்சியும் களைப்பும் அவனை மயக்கத்தில் ஆழ்த்தியது. பிறகு அது உறக்கமாக மாறியது.

அம்மா இரவு சாப்பிட எழுப்பினாள். அவன் அசைவதாகத் தெரியவில்லை. பயத்தில் அவனைத் தொட்டுப்பார்த்தால்காய்ச்சல் எதுவும் இல்லை. கலவரத்தோடு மகனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொழுது சாய்ந்து வெகுநேரம் கடந்த பிறகு வீட்டிற்குள் நுழைந்தான். அவன் முகம் வாடி இருண்டிருந்தது. விளக்கு வெளிச்சத்துக்குப் பின்பாக மறைந்து அவனைப் பார்த்து அம்மா பயந்து போனாள்.

என்ன இன்றைக்குப் பார்த்து வீட்டிற்குள் நுழையும்போது அலங்கோலமாய் வாடிப்போன முகத்தோடு வருகிறார்கள். இன்றைக்கு என்னதான் ஆகிவிட்டதோ என்று கலங்கினாள்.

கிணற்றுத் தண்ணீரை வாளி வாளியாக எடுத்து ஊற்றினான். உடலைத்தான் கழுவ முடியும். மனதைக் கூடவா கழுவமுடியும். நீரில் மூழ்கிப் பாவத்தைக் கழுவிக் கொள்பவர்களின் பேராசையை என்ன சொல்வது. அதனால்தான் கங்கையில் பிணங்கள் மிதந்துகொண்டு வருகின்றன. யார் அதில் குளித்தால் நமக்கென்ன யார் அதைக் குடித்தால் நமக்கென்ன நாம் மோட்சம் போகிறோமா என்பதுதானே முக்கியம். அப்படி யாராவது மோட்சம் போகிறார்களா?

கோடான கோடி மக்களை வாழும் காலத்திலேயே நரகத்தில் தள்ளிவிட்ட இவர்கள். இங்கு உழைக்காமலே உண்டு, உடுத்தி, கெடுத்துச் செத்தபிறகும் சொர்க்கத்தை அடைய அலைகிறார்கள். எவ்வளவு யோக்கியமான காரிய மனிதர்கள். கடவுளே உனக்குத்தான் வெளிச்சம்.

பொழுது புலர்ந்ததும் அம்மா சங்கரனை எழுப்பினாள். அவள் கைகளில் நீர்த்தத் தண்ணீர் நுரைத்துக் கொண்டு இருந்தது. அந்தப் புளிப்பு வாடை சங்கரனுக்கு ரொம்பவும் பிடிக்கும். மூலையில் கிடந்த தபால்களை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அதை ஆவலுடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தான். ஒன்று சாமுவேல் அவர்களிடம் இருந்து வந்தது. மற்றொன்று அப்பாவின் பெயருக்கு வந்தது. அதை அம்மாவிடமே கொடுத்துவிட்டான்.

பேராசிரியரிடம் இருந்து வந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தான். சென்னையில் நடந்த சில பகுத்தறிவுக் கூட்ட சொற்பொழிவுகளைப் பற்றியும் அதை நிகழ்த்திய அறிஞர் பெருமக்களைப் பற்றியும் நீண்ட கடிதம் எழுதியிருந்தார் பேராசிரியர்.

நான் சமூகப் பகுத்தறிவுக் கூட்டங்களில் கலந்து கொள்வதைப் பாதிரியார்கள் விரும்பவில்லை. அதனால் என்னைக் கல்லூரியில் இருந்து நீக்கிவிடப் போவதாகக்கூட பேச்சு அடிபடுகிறது.

அவர்களால்தான், நான் வளர்க்கப்பட்டு மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உண்மைதான். என்றாலும், பிற்போக்கான சமூக அமைப்பை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்களோடு என்போன்ற மனிதர் இணைந்திருப்பதைத் தவிர்க்க முடியாததாகி விடுகிறது என்பதை நான் உணர்ந்துள்ளேன்.

அவர்கள் எனது கல்வி அறிவையும் திறமைகளையும் தேவாலயப் பணிக்கும் தேவன் பணிக்கும் மாற்றப் பார்க்கிறார்கள். பொதுவாக சாமியார்களுக்கும் எனக்கும் உறவுமுறை சரியானதாக இல்லை. உங்கள் நலனை அறிய ஆவலாய் உள்ளோம் என்று முடித்திருந்தார். கடிதத்தின் கடைசிப் பகுதியில் சில வரிகள் எலிசபெத் டோரா எழுதியிருந்தாள்.

**நீங்கள் என் கணவரை ஆசிரியராக நினைக்கிறீர். அவரோ உங்களைத் தன் மகன் போலவே கருதுகிறார் உங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் அவருக்கு விருப்பமாய் இருக்கிறது. அவரால் நீங்கள் கெட்டுப் போனீர்களா, இல்லை உங்களால் அவர் கெட்டுப் போனாரா என்று எனக்கு விளங்க வில்லை. இப்போதெல்லாம் அவர் சர்ச்சுக்குப் போவதில்லை. கூட்டங்களில் பேச அழைத்துக்கொண்டு போகிறார்கள். இதுபோன்ற நடத்தையால் எங்கள் பங்கு சாமியார்களிடம் கெட்ட பெயர் வாங்கியதுதான் மிச்சம். எது எப்படியோ**

**நானும் உங்களை என் மகன் போலவே நினைக்கிறேன். உங்களுக்கு எங்களது வாழ்த்துக்கள்.**

**சாமுவேல் டோரா.**

கண்கள்கலங்கியநிலையில்கடிதத்தைஎடுத்துத்தன்பெட்டியிலே பத்திரமாக வைத்துவிட்டு காலைக் கடன்களை முடித்து வந்து, இருண்ட தன் அறையில் வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். அம்மாவும் அவனிடம் பேச பயந்துகொண்டு அறைக்கு வெளியே தானியத்தைப் பொறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

திடுப்பென முன் நாள் நடந்த சம்பவம் அவன் கண்முன் விரிந்தது. செவந்தி வந்தாள். கடிதம் தந்தாள். ஆமாம் அந்த கடிதம் எங்கே?

திடீரென எழுந்தான். எங்கோ தூக்கி எறிந்துவிட்டது இப்போது அவனுக்கு நினைவு வந்தது.

அவசரமாக புறப்பட்டுப் போனவன் தென்னந் தோப்பில் போய்த் தேடினான். அகத்திகீரை மரத்தினடியில் ஒரு வெள்ளைக் காகிதம் கசங்கிப்போய்க் கிடந்தது. எடுத்துப்பிரித்துப்பார்த்தான்.

அவள்தான் எழுதியிருந்தாள்.

**நீங்கள் உடனே வரவேண்டும். உங்களிடம் என் அம்மா பேச விரும்புகிறாள். நான் எல்லாவற்றையும் சொன்னேன். நீங்கள் வெறும் வெறும் வாய் வீச்சுக்காரர் என்று கேலி பேசுகிறாள். நீங்கள் நிச்சயமாக எனக்கு உதவுவீர்கள் என்று நம்புகிறேன்.**

கடிதம் கையெழுத்தின்றி இருந்தது. பிழைகளோ ஏராளம். கடிதத்தைத் துண்டுத் துண்டாய் கிழித்துத் தூர எறிந்தான். தோப்பை விட்டு வெளியேறி கோயில் பாதையில் நடந்தான்.

கோவில் திருவிழாவுக்காக அலங்கார வேலைகள் நடந்து கொண்டிருந்தன. சுவர்களுக்கு வெள்ளையடித்துச் செம்மண் பட்டை தீட்டியிருந்தார்கள். சூரிய ஒளியில் சுண்ணாம்புப் பூச்சு கண் கூசியது. பாதையில் ஆள் நடமாற்றமின்றி இருந்தது.

விஜயா வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். வீட்டைச் சுற்றி மாமரங்கள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. வேப்ப மரம் பூத்து, பூவின் கசப்பான மணம் பரவியிருந்தது. அதன் பூக்கள் தரையெங்கும் பரவிக் கிடந்தன. மரத்தடியில் மாட்டு வண்டிகள் இரண்டு நின்றிருந்தது. இரண்டு ஜதை மாடுகள்

தூரத்தில் கட்டப்பட்டிருந்தன. வண்டிக்காரரும், செவந்தியும் ஏதோ கதையளந்துகொண்டிருந்தார்கள். சங்கரனைப் பார்த்ததும் என்னவோ சொல்லி குசுகுசுத்தார்கள். சங்கரன் எரிச்சலுடன் அவர்களைத் திரும்பிப் பார்த்து முறைத்தான்.

வண்டிக்காரர் பூனையைப் போல வண்டிக்குப் பின்பாக பதுங்குவதுபோல் நகர்ந்து கொண்டார். செவந்தி சங்கரனைப் பார்த்துக் கண்சிமிட்டினாள்.

வாசல் கதவு திறந்திருந்தது. உள்ளே பெரிய விசாலமான கூடத்தின் நடுவே ஊஞ்சலில் உட்கார்ந்தபடி விஜயா ஆடிக் கொண்டிருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த முறையே மிகுந்த ஆபாசமாய் இருந்தது.

அதைப் பார்க்கப் பிடிக்காதவனாய் வேறுபக்கம் திரும்பிக் கொண்டு கனைத்தான். மாடியில் இருந்து மரப்படியில் தடதடத்துக் கொண்டு ஓடிவந்த சுலோசனா அவனை வரவேற்றாள். ஊஞ்சலில் ஆண்டாள் பாசுரம் பாடிக்கொண்டு அலங்கோலமாய் காலைப் பரப்பி உட்கார்ந்துகொண்டும், கண்களை மூடி அபிநயித்துக் கொண்டும், இடது தொடையில் கிடந்த காலைத் தட்டியும் பாதத்தை ஆட்டியும் ஜதி போட்டாள். சங்கரன் வந்ததை அவள் கவனிக்கவில்லையா இல்லை கவனிக்க விரும்பவில்லையோ. மேலாடை விலகி மார்புத் தெரிவதைக் கூட மறைக்காமல் உட்கார்ந்திருந்தாள். அவளது கண்கள் மூடியே கிடந்தது.

சுலோச்சனா கோபமுற்ற நாகம் போல் சீறி தாயை உசுப்பினாள். விஜயா கண்களையும் திறக்கவில்லை. பாட்டையும் நிறுத்தவில்லை. வெளிதெரிந்த மார்பையும் மூடவில்லை. ஊஞ்சல் ஆட்டத்தையும் நிறுத்தவில்லை.

கண் மூடியபடியே வந்தவனை மாடிக்கு அழைத்துச் செல் என்பதுபோல சைகை காட்டினாள்.

சங்கரனுக்குப் பெருத்த அவமானமாய் இருந்தது. இருந்தாலும் சுலோச்சனாவைப் பின்தொடர்ந்து மாடிக்குப் போனான்.

'என்னை மன்னித்து விடுங்கள். விஜயா ஏன் தான் இப்படி நடந்துகொள்கிறாளோ எனக்குப் புரியவில்லை.''

''எனக்குப் புரிகிறது. நான் வருவது உன் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. பரவாயில்லை. அதனால் நான் ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லை'' என்றவன், ''ஒருவேளை' என்று இழுத்து வார்த்தையைப் பாதியிலேயே விழுங்கிவிட்டான்.

''என்ன ஒருவேளை..'' என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

''ஒரு வேளை என்னை வாடிக்கையாளன் என்று நினைத்துக் கொண்டாளோ என்னவோ.''

'சே.. என்ன பேச்சு இது. இந்த மாதிரி விஷயத்தில் ஆண்கள் எல்லோரும் ஒரே மாதிரிதானோ என்ற நினைப்புடன் முகத்தைச் சுளித்தாள். பிறகு கோபமாக அவனை முறைக்க முயற்சித்தாள். பாவம் முடியவில்லை.

''ஒன்றும் நினைத்துக் கொள்ளவேண்டாம். நான் விளையாட்டுக்குத்தான் பேசினேன்'' என்று சிரித்தான். 'ஓஹோ... நீங்கள் பெண் பிள்ளைகளிடத்தில் இப்படித்தான் பேசி விளையாடுவீர்களோ' என்று கொஞ்சலும் கோபமுமாய்க் கேட்டாள். பிறகு முகத்தில் தோன்றியப் புன்னகையை மாற்றிக் கடுமையாக வைத்துக் கொள்ள முயன்றாள். அது முடியாமல் தோற்றுப் போய் அவளது முகத்தில் இனிமையான புன்னகை தவழ்ந்தது.

'என்ன விஷயம்?'

'ஜமீன் தரகன் வந்து போனான். இந்த வாரக் கடைசியில் என்னை அழைத்துப் போகத் திட்டமாம்.'

எனக்கு இதைவிட நல்ல வாழ்வு கிடைக்காதாம். அவளால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. ஆனால்... என்று தடுமாறியவள்... திணறிப் பேச்சை நிறுத்தினாள்.

''என்ன ஆனால்...'' ஆவலாய்க் கேட்டான்.

பாசாணம் சாப்பிட்டு உயிரைவிடுவது என்று குலுங்கியழுதாள்.

பிறகு என்னை எதற்கு அழைத்தீர்கள். உங்கள் பாசாண விருந்துக்குச் சாட்சியாகவா?'' என்றவன், எழுந்து கிளம்பி விட்டான்.

''அய்யோ, அப்படி என்ன சொல்லிவிட்டேன் என்று கோபித்துக் கொண்டீர்கள்'' என்று அவன் கையைப்பிடித்து நிறுத்தினாள். வேறு வழி தெரியவில்லை. என் போன்றவர்களுக்காக என் முதல் பலி ஒருவழியாக இருக்கட்டுமே.''

'சரி, என் கையை விடுகிறீர்களா?'' என்று கேலி பேசினான். சட்டென்று கைகளை உதறிக் கொண்டு விலகி நின்றாள்.

நாணமும், வெட்கமும், அழுகையும், உள்ளுக்குள் சிரிப்புமாய் ஒரு நாடகம் அங்கு கலாபூர்வமாக அரங்கேறியது.

அறையின் மூலையில் நான்கு இளநீர் சீவி, வெள்ளிக் குத்துக் கோலுடன் குவளையும் தயாராக இருந்ததை அவன் பார்த்தான். அவளைச் சீண்ட வேண்டும் என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டான். 'விருந்தினர் யாராவது வரப் போகிறார்களா?'' என்று கேட்டான்.

சட்டென அவள் முகம் இருண்டு போனது போல் ஆனதையும், கண்ணீர் தாரையாகக் கொட்டுவதையும் அவன் எதிர்பார்க்கவில்லை.

ஒரு சிறுமிபோல தேம்பினாள்.

தாசியின் வீட்டுக்கு விருந்தினர் எதற்கு வரப்போகிறார்கள். சே... தனது அசட்டுத்தனமான கேள்வியால் அவனே வெட்கப் பட்டுக் கொண்டான்.

அவளுக்கோ அழுகை வெடித்துக்கொண்டு வந்தது. வேறு வழியில்லாமல் நெருங்கி அவளது கைகளைப் பற்றிச் சமாதானப் படுத்த முயன்றான். ஆனால், நடந்ததோ வேறு. அவளது தாமரை விரல்கள் அவன் கைகளில் இதழ் விரித்து ஆடியது. குளிர்ச்சியான அதன் தொடுதலில் சங்கரன் திக்குமுக்காடிப் போனான்.

இதுதானடா தவிப்பு... இது தானடா தடுமாறல். அடடா, இதற்காகத்தானோ ஆணும் பெண்ணும் படைக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் சம்பவங்களும் சூழ்நிலைகளும் உருவாகின்றனவோ. கணநேர வெப்பம் இருவர் இதயத்தையும் சுட்டுவிட்டது. ஆனால், பொசுங்கிப் போகவில்லை. நெருப்பில் தங்கம் கருகிப் போகுமா? உருகிப்போகும். பிறகு தூய்மையடைந்து விடும். பார்த்தலும், கேட்டலும், காதலும், காமமும், நெருக்கமும் உருக்கமுமாய்... மனிதனும் மற்ற உயிர்களும் தொடர்ந்து இந்தப் பழி நிலைத்திருந்த இயற்கை விரித்த வலை. யார் தப்பமுடியும் அதில்,

இதயமும் தங்கம் போலத்தான். இதயம், இதயமாக இருந்தால் பலரிடம் அது வெறும் ரத்தம் சுத்திகரிக்கும் உறுப்பாக இருக்கிறது. இருவரின் விரல்கள் மட்டுமா பிணைந்தன, இதயங்கள்கூட இடம் மாறியது. லேசாக வலிக்கவும் கண்கள் கலங்கவும் தடுமாறினார்கள் இருவருமே நடுங்கினார்கள்.

இந்த இன்பத்தை, இந்த வலியை, இந்தத் துயரை காலம் அந்த இருவர் மீதும் மெல்லிய போர்வையாய் போர்த்தியது.

பொதுவாக மனிதர்கள் இதுபோன்ற உணர்ச்சியைத்தான் காதல்

என்று அழைக்கிறார்களோ!

கண நேரத் தொடுதல் எல்லாம் காதலாகிவிட முடியாது. ஆனால், இதயங்கள் எப்போதும் காதலுக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பதை யாராவது மறுத்துவிட முடியும்?

காதலை விரும்பாதவர் யார்? காதல் காயப்படாத இதயமெல்லாம் ஓர் இதயமா? அவை வெறும் ரத்தம் சுத்திகரிக்கும் ஓர் உறுப்பாக மட்டுமே இருக்கும்! ஆமாம். இங்கு காயப்பட்டுத் துடித்தது ஓர் இதயம். இவனோ சுதந்திரமான சமூகப் புரட்சியாளன். அவளோ பழையதைப் புரட்டிப் போடத் துடிக்கும் புரட்சிக்காரி.

பூவினும் இனிய போதையூட்டும் அழகி. மை தீட்டாமல் கவி பாடும் விழிகள்.

காடையரின் களவுத் திட்டத்தை வெறுத்து ஒருவனை கைபிடித்து வாழ நினைக்கும் மானமுள்ள வனிதை. சில்லரையென்ன மொத்த விற்பனைக்கே போக மறுத்த தூயவள். அவளிடம் விதி விளையாடவில்லை. விதி என்ற கோமாளி வார்த்தையைக் கல்லறைக்கு அனுப்பிவிட்டு மதியோடு விளையாடுபவள். நேர்மையான, நீதியான, இழிவற்ற, தூய நல் வாழ்க்கையை நீயும் வாழமுடியும் என்று ஆறுதல் சொன்னவன் தான் அவள் பார்வையில் முதல் மனிதன். முதல் ஆண்.

அவனும் அவளும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டார்கள். பேச்சே எழவில்லை.

அவள் அவனை அழைத்தது தான் தப்பிக்கப்போக. அவன் அவளிடம் வந்ததோ காப்பாற்ற. இருவரும் விழுந்ததோ காதலில்.

என்ன இது விளையாட்டு. காலம் தன் கோலத்தை அழகாகத் தீட்டிவிட்டது. அந்த அழகிய கோலத்தில் இருந்து மீளமுடியாமல் இவருமே துடித்தனர். விழிகள் உறுதியோடும் உரிமையோடும் சந்தித்துக் கொண்டன. பிறகு தயக்கமின்றிப் பேசின. மீளத் துடித்தன அவளது விழிகள். மீள வேண்டாம். இப்படியே கட்டுண்டுக் கிடப்போம் என்றது அவன் விழி. இதென்ன இப்படி மோசம் போனேனே.

உன்னை இங்கிருந்து மீட்டு மனிதர் இல்லாத தீவில் கொண்டு போய் விட்டு வரமுடியுமா? எங்கும் ஆண்கள் இருக்கத்தான் செய்வார்கள். உன்னைப் போன்ற அழகியை யாரும் கவர்ந்துகொள்ளவே நினைப்பார்கள். அதுதான் நானே கவர்ந்து

விட்டேன். இது தப்பா?

இல்லை இல்லை. பொய்யாகத் தடுமாறியது அவள் விழிகள். இதென்ன இப்படியாகி விட்டதே.

இப்படித்தானடி ஆகும் அழகியே. இப்படியாகாவிட்டால் உலகம் எப்போதோ மனிதர் இல்லாத உலகமாகிவிட்டிருக்கும் தெரியுமா?

'நீங்கள் பெரிய மோசக்காரர்.''

'''ஆமாம். நீ மட்டும் என்னவாம். என்னை அழைத்தாய். அழுதாய். என் இதயத்தைப் பிளந்து உள்ளே புகுந்தாயே. மகா மோசக்காரி நீதான். இப்போது என் இதயத்தைப் பிடித்து உலுக்குகிறாய். காதலால் எனக்குக் காய்ச்சலடிக்கிறது.'

இப்படியே விழிகள் பேசிக்கொண்டிருந்தன. மேலும் நடந்ததைச் சொல்லவே முடியாது.

நெருக்கத்தில் தொடங்கி இறுக்கத்தில் முடிந்தது.

அவளால் அதற்கு மேலும் மீற முடியவில்லை. இயல்பான நாணத்தால், தன்மானமுள்ள உணர்வால் முதலில் விழிப்படைந்து, ''சற்று நகர்ந்து நில்லுங்கள்''என்றாள். அவளது குரல் கேட்டு வெட்கமடைந்தான். என்றாலும் நகர மறுத்துவிட்டான். இனி விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை. எல்லாம் முடிவாகிவிட்டது. ஆனால், இது சாத்தியமா? அவனது உள்ளமும் உடலும் அரைமயக்கத்தில் இருந்தது.

இந்த இளம் மிராசு தன்னைத் தாசியாக நினைத்து தாசியாகவே கொள்வானோ என்று ஒருகணம் அவள் மனதில் எண்ணம் எழுந்தது. அந்தக் கண நினைப்பு அவளை நடுங்க வைத்தது. அவனிடம் இருந்து வலுவாகத் தூர விலகினாள்.

'மன்னித்துவிடுங்கள். பிசகு நேர்ந்துவிட்டது'' என் தடுமாறினாள். அழுகையும் தேம்பலும் அதன் விளைவாக குலுங்கலுமாய் அவள் திணறினாள். அவளது உள்ளத்தின் போராட்டம் அவனுக்குப் புரிந்தது. காரணம் அவனிடத்தில் இருப்பது அவளது இதயம். அப்படித்தான் அவன் நினைத்தான்.

'நீங்கள் அழுகையை நிறுத்துங்கள். உங்களிடம் ஒன்று சொல்லப்போகிறேன்.''

கண்ணீர் நிறைந்த விழிகளுடன் அவனைப் பார்த்தாள்.

'அப்படி என்ன சொல்லிவிடப் போகிறீர்கள்' என்று கேட்டது

அவளது விழி.

'நீங்கள் அழுகையை நிறுத்தவேண்டும'' என்று மெதுவாகச் சொன்னான்.

ஆதரவான காதலனின் வார்த்தையால் இன்பமடைந்து ஆனந்தத்தில் மேலும் அழுதாள்.

உறுதியாக அவளைப் பற்றி இழுத்தான். எந்த எதிர்ப்பும் இல்லாமல் பூமாலை போல் லேசாக அருகே வந்தாள்.

'நீங்கள் இங்கு இருந்து தப்பிப் போவது என்பது பெரிய முட்டாள்தனத்தில்தான் போய் முடியும். அர்த்தமற்ற ஒன்று என்றுதான் சொல்வேன்''என்றவன், அவளது முகத்தை ஆழ்ந்து நோக்கினான்.

பெருத்த ஏமாற்றத்துக்கு உள்ளானவள்போல் திடுக்கிட்டுதனது கண்களைத் துடைத்துக்கொண்டு அவனை நம்பிக்கையற்று பார்த்தாள். அவளது முகக் கலை காணாமல் போய்விட்டது போல சுடரணைந்த விளக்காய் முகம் புகைந்தது.

நீங்கள் யாராவது ஒருவரை மணந்துகொண்டு வாழ வேண்டும். அப்படி முன் வருபவர் எத்தனை பேர் இருப்பார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?... அவன் முடிக்கும் முன்பே தலையில் இடி விழுந்தது போல் தலையைப் பிடித்துக்கொண்டு ஓரடி பின்னால் நகர்ந்தாள்.

'நானே உங்களை மணந்து கொள்கிறேனே! உங்கள் சம்மதத்தைச் சொல்லுங்கள். அடுத்து ஆகவேண்டியதை நான் பார்க்க வேண்டும்' அவன் நிதானமாப் பேசினான்.

அந்த வார்த்தைகள் அவளை என்ன செய்தது என்பதைச் சொல்ல வார்த்தைகள் கிடையாதுதான். ஆனால், அவள் அவனிடத்தில் ஏற்படுத்திய ஓரடி இடைவெளியில் இருவரும் இணைந்து கிடந்தார்கள். அவள் சத்தமிட்டுக் குலுங்கியழுதாள். கண்ணீர் பெருகி வழிந்தது. தன் கண்ணீரில் தானே குளித்துவிடத் துடித்தாள். அவளது உணர்ச்சிக்கு ஈடு கொடுத்துக் கண்ணீர் சுரக்கமுடியாமல் அவளது கண்ணீர் சுரப்பியே அழுதிருக்குமோ என்னவோ. அழுவதே அவளுக்கு இன்பமாய் இருந்தது.

அவனது வலுவான கைகளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, அவனது தூய்மையான விழிகளை அன்பொழுகப் பார்த்தாள்... பார்த்துக்கொண்டே இருந்தாள். கேட்டாள் ஒரு வார்த்தை. 'நீங்கள் சொல்வது உண்மைதானா?' அழுகையும்

வார்த்தையுமாய் கொட்டியது.

பதிலாக வெறுமனே பார்த்தான். அந்தப் பார்வையே ஆயிரம் சொன்னது.

வெளியே யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. அவனது கைகளை விட்டு விலகி உட்காருங்கள். வந்ததில் இருந்து நின்று கொண்டிருக்கிறீர்கள் என்று அவன் கைபிடித்துக் கட்டிலில் உட்கார வைத்தாள். இன்னமும் அவள் கை நடுங்குவதை அவன் கண்டான்.

ஆமாம். வந்ததில் இருந்து வெறுமனே நின்று கொண்டிருக்றேன். வேறு எதுவுமே நடக்கவில்லை பார் என்று நினைத்தபடி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

சுலோச்சனா கதவுக்கு வெளியே தலைநீட்டிப் பார்த்தாள். கதவுக்கு அருகிலேயே விஜயா நின்றுகொண்டிருந்தாள். 'சே.. என்னை நம்பாமல் உளவுப் பார்க்கிறாயா? அம்மாவின் காதில் கிசுகிசுத்தாள்.

"எல்லாம் உன்னிடத்தில் கற்றுக் கொண்டதுதான்." அம்மாவின் பதில் கிசுகிசுப்பு.

எப்போதும் விஜயா பார்த்திராத சிவப்பு மகளின் முகத்தில் குங்குமம் கொட்டிப் பூசியது போல் இருந்ததையும் அவள் கண்கள் தூய்மையாக மின்னுவதையும், அழுது வீங்கிய முகத்தையும் பார்த்து ஒருவிதமான சேட்டையுடன் கண் சிமிட்டினாள். அறைக்கு வெளியே வந்து அம்மாவைப் போலியாக முறைத்தாள்.

'நீயாடி என் பெண். எத்தனை ஜாலக்காரியடி நீ? மிராசு மகனை இப்படி வளைத்துவிட்டாயே. அவன் புரட்சி எல்லாம் எங்கே போயிற்று. இப்படி ஒரு வித்தை எனக்கு கூடத் தெரியலைடி' என்று சொல்வதுப்போல தன் பெரிய கண்களினால் மகளை ஆழ்ந்துப் பார்த்தாள்.

பிறகு அவளை முத்தமிட்டுக் கட்டியணைத்தாள். 'சரி வா' அம்மாவை உள்ளே அழைத்துப் போனாள்.

'மன்னிக்கணும்" என்று சொல்லிக்கொண்டே. வந்தவளை அலட்சியமாகப் பார்த்தான்.

'எதற்கு மன்னிப்பாம்" என்று அதே அலட்சியத்துடன் கேட்டான்.

"நீங்கள் வீட்டிற்கு வந்தபோது அலட்சியமாய் நடந்து

கொண்டதற்கு. உங்களை நான் தவறாக நினைத்திருந்தேன்''

'திடீர் என்று எப்படி என்னை நல்லவன் என்று நினைத்தீர்கள்'' கேள்வி சூடாக வந்தது.

'சுலோசனாவை மணந்து கொள்வதாக வாக்குக் கொடுத்தீர்களே அப்போதுதான்''

இதற்குள் எப்படி இவளுக்குத் தெரிந்திருக்கும். ஒருவேளை வெளியே நின்று ஒட்டுக் கேட்டிருப்பாளோ என்று சந்தேகப்பட்டான்.

அவனது மன ஓட்டத்தை அறிந்த சுலோசனா அப்படிதான் என்பதுபோல தலையாட்டினாள் ஜாடையாக.

வெறுமனே இருவரும் மனதிற்குள்ளாகச் சிரித்துக் கொண்டனர்.

'உங்கள் அப்பா நிச்சயம் இதை ஏற்கமாட்டார். ஜமீனிடத்தில் இருந்தும் எதிர்ப்பு வருமே'' விஜயா நம்பிக்கையற்று பேசினாள். பிறகு அறையில் நீண்ட நேரம் அமைதி நிலவியது.

'அவரிடத்தில் வாங்கிய பணத்தைத் திருப்பித் தந்துவிடுவேன். ஆனால் அந்த ஆள் மகாமுரடன். பலாத்காரம் செய்ய முற்பட்டால் நான் என்ன செய்யமுடியும்? அந்த ஆளுக்கு வெள்ளைக்காரர்களுடன் நல்ல பழக்கமுண்டு. அதனால் போலீஸ் கூட நமக்கு உதவாது. நாங்களோ பெண்கள். எங்களால் ஜமீனை எதிர்த்து நிற்கமுடியுமா?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டாள் பிறகு, 'அப்பாதான் மிகப்பெரிய எதிரியாக இருப்பார். யோசித்துப் பாருங்கள்

'நீங்கள் சொல்வது சரிதான். நான் என் அப்பாவின் அனுமதிக்காகக் காத்திருக்கப் போவதில்லை. மேலும் இவள் பழைய பழக்கத்தை விட்டுத் தொலைக்கும் உயர்ந்த லட்சியத்தோடு இருக்கிறாள். நானும் இவளை மனைவியாய் அடைந்து வாழ்க்கை நடத்த உறுதியாக இருக்கிறேன். யார் இதைத் தடுக்க முடியும்' சில கணம் தன் பேச்சை நிறுத்திவிட்டு, சுலோச்சனாவைப் பார்த்தான்அவளோ பேச்சற்று அவனையே பார்த்தபடி இருந்தாள். ''எங்களால் பிரிவது என்பதே முடியாத ஒன்று'' என்று சொன்னவன் அமைதியாக அவள் முகத்தைப் பார்த்தான்.

'எனக்குப் பட்டணத்தில் நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் உதவி கிடைக்கும். இவளைப் பட்டணத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டால் பிறகு யார் என்ன செய்துவிடமுடியும்''

என்றவன், தலையைத் தடவிக்கொண்டு யோசித்தான். 'என் கவலையெல்லாம் என் அம்மாவைப் பற்றித்தான். பாவம். அவளால் இதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவளுக்கு உடல் நிலையும் சரியில்லை. அவள் வாழ்த்து இல்லாமல் நான் வாழவே முடியாதே.' இந்த எண்ணத்தால் சங்கரன் கலவரமடைந்தான்.

"ஆமாம். இதில் உங்கள் சம்மதம்.." என்று விஜயாவைப் பார்த்தான்.

அவளும் இவனை அர்த்தத்தோடு பார்த்துவிட்டு "என் மகளின் நல்வாழ்வைக் கெடுத்துவிடுவேனா என்ன, எங்களோடு ஒழிந்துபோகட்டும் இந்த ஆட்டமும் வேஷமும்" என்று வெறுப்புடன் பேசினாள்.

"நீங்கள் உடனே இங்கிருந்து எங்காவது போய்விடுங்கள். இல்லையென்றால், ஆபத்துதான். ஜமீனிடம் இருந்து தப்ப முடியாது" என்றவள் தன் மகளை ஆசைதீர ஒருமுறை பார்த்தாள்.

'சரி நீங்கள் எப்போது கிளம்பப் போகிறீர்கள். நான் ஏற்பாடு செய்கிறேன்' என்றாள் அவசரத்துடன்.

'என்ன செய்யப் போகிறீர்கள்' அதே அவசரத்துடன் அவனும் கேட்டான்.

'பட்டணத்தில் போய் என்ன செய்வார்களாம். ஐந்தாயிரம் ரூபாய் பணமாக என்னிடத்தில் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். நகைகளும் இருக்கின்றன. எல்லாம் இவளுக்குத் தானே.'

ராவோடு இரவாக வண்டிக் கட்டிக்கொண்டு போய் விடலாம். இரவு முதல் ஜாமத்தில் புறப்பட்டால்தான் விடியும் பொழுதில் ரயிலடிபோகமுடியும். கையில் பணம் இருந்தால் பிரயாணத்துக்கு வேறு ஏதாவது கூட எற்பாடு செய்து கொள்ளலாம்' சாதுர்யமான திட்டங்களோடு பேசினாள்.

அவனோ வெறுப்படைந்த முகத்துடன் 'அது சரி நாங்கள் என்ன திருட்டுப் பேர்வழிகளா. இரவோடு இரவாக ஓட, என் அப்பாவிடம் சொல்லிவிட்டே காரியம் பார்க்கிறேன் என்ன செய்துவிட முடியும். என்னைக் குலத்தில் இருந்து ஒதுக்கிவிடுவார். சொத்தில் பாகம் இல்லையென்பார். போகட்டுமே. என் படிப்பு எனக்குப் பிழைப்புத் தரும். நாங்கள் இரவோடு இரவாக போக வேண்டியதில்லை. பிழை செய்பவர்கள் சத்தம் போட்டு

பேசுபவர்களாகவும், நியாயத்திற்காக நிற்பவர்கள் சத்தம் இருட்டில் மறைந்து ஓடுபவர்களாகவும் இருக்கக்கூடாது.

அவனது வார்த்தைகள் உறுதியோடு வந்தன.

'தம்பி நீங்கள் சின்னபிள்ளை. உங்களுக்குத் தெரியாது. ஒருவேளை உங்கள் தந்தையிடம் இருந்துகூடத் தப்பி விடலாம். ஜமீன் நாளை மறுநாள் இங்கு வந்துவிடுவார். பிறகு உங்களுக்கு நான் எந்த விதத்திலும் உதவமுடியாது. அந்த ஆள் எதற்கும் துணிந்தவர். உங்கள் சட்டமெல்லாம் அவரிடம் செல்லாது.'

'ஜமீன் வரும்போது இவள் இங்கு இருக்கக்கூடாது'' என்று நிறுத்தியவள், தன் மகளைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவளது பெரிய கண்கள் லேசாகக் கலங்கின.

''அவர் இங்கு வரும்போது சுலோச்சனா இங்கு இருந்தால் அவள் இல்லாமல் போகமாட்டார். பெரிய சச்சரவு ஏற்படும்'' என்றவளின் முகம் அரண்டு போய் இருண்டதாக மாறியது.

'நீங்கள் இன்றிரவே போய் விடுவதுதான் உத்தமம். நான் சொல்வதைக் கேளுங்கள்.''

'சரி. நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள். நான் வீட்டுக்குப் போகிறேன்.'

ஜமீன் நாளை மறுநாள் தானே வரப்போகிறார் என்ற நினைப்பில் அவன் சொன்னான்.

வீட்டுக்குப் போகிறேன் என்றவன் அங்கேயே தடுமாறி நின்றான்.

விஜயா லேசான புன்னகையுடன் நகர்ந்தாள். ஆனால், ஏதோ யோசனையுடன் சங்கரனை ஆழமாகப் பார்த்து,

''உங்கள் அம்மா இதற்கெல்லாம் அனுமதிக்கமாட்டார்களே?'' என்று சந்தேகம் நிறைந்த கேள்வியால் அவனைச் சோதித்தாள்.

''அதனாலென்ன அம்மாவிடம் என் எண்ணத்தைச் சொல்வது என் கடமை. அது பிசகினாலும் இவளை மணந்துகொள்வதில் எந்த மாற்றமும் வராது.' அவன் வார்த்தை உறுதியாக வந்தது.

சுலோசனா வெறுமனே ஒரு பூக்குவியல் போல நின்றிருந்தாள். அவளது முகத்தில் எந்தச் சலனமும் வெளியே தெரியவில்லை. ஆனால், உள்ளுக்குள்ளே அவள் எதோடவோ போராடுவது தெரிந்தது. ஆனால், அவளது பார்வை மட்டும் சங்கரனை முழுமையாக விழுங்கிக் கொண்டிருந்தது.

சங்கரன் அவளை ஆழமான ஒரு பார்வை பார்த்துவிட்டு நான் வருகிறேன் என்று புறப்பட்டு விட்டான். ஒரு சூறைக் காற்றுப் போல அவன் அந்த அறையில் இருந்து மறைந்து விட்டான்.

அந்தக் கண நேரம் அவன் மறைந்து போனது அவளை உலுக்கி அவள் இதயத்தைத் துடிக்கவைத்தது. அவனது முகத்தை நெருக்கமாகப் பார்க்க விரும்பினாள். சன்னல் வழியாக அவன் நடந்து போவதைப் பார்க்க ஏங்கினாள். அவளது கண்கள் கண்ணீர் வடித்தன. அந்தக் கண்ணீரைப் புனித நீரைப் போல துடைத்துத் தன் இளம் நெஞ்சிலே தேய்த்துக் கொண்டு காரணமற்றுக் குலுங்கியழுதாள். தன் நெஞ்சு முழுக்கவே அவன் புகுந்து கொண்டதற்கான துக்கமற்ற, துயரமற்ற, தூய்மையான துடிப்பான வலியை அவள் உணர்ந்தாள். தன் நெஞ்சை இறுக்கப்பற்றிக் கொண்டாள். சன்னல் வழியாக அவன் மறையும்வரை பார்த்துக்கொண்டே இருந்தாள். அவன் மறையவில்லை. ஆனால், அவளது தூயக் கண்ணீர் அவள் பார்வையை மறைத்தது. அந்தக் கண்ணீரைத் துடைக்க விரும்பாமல் அப்படியே நின்றிருந்தாள். அந்த மணம் வீசும் பூவில் குணம் மலர் அருவியாய் கண்ணீர், அவனால் அல்லல்படும் நெஞ்சு, புழுவாய் இழிந்துப் போன பழையதைப் புரட்டிப் போடும் நேர்மை, நேர்மையான உள்ளம், இதயம் நிறைய காதல், எதிர்காலக் கனவு, தன் தாயைப் பற்றிய நினைவு, தங்களின் இந்த நிலைக்குக் காரணமான பாவிகள் மீதான வெஞ்சினம், எல்லா அசிங்கங்களையும் உதறித் தன் மிருகத்தனமான கொள்ளைத் தந்திரங்களைத் தூர எறிந்து மனிதனாக நிற்கும் நேர்மையான ஆண் மகன், கிளர்ந்தெழும் உணர்வுகளுடன் முழுமையாக நின்றிருந்தாள். நலமான நாளைய வாழ்வின் கனவோடு. சில நேரங்களில் கனவுகள் நனவாகுவதுண்டு. அய்யோ பரிதாபம் கலையாத கனவென்று எதுவுமில்லை.

⊙⊙⊙

**உ**ச்சி வெயில் நேரம். கோயில் பாதையில் ஓரிருவர் போய் வந்துகொண்டிருந்தனர். கோயில் வாசலில் குளக்கரை சினேகிதர்கள் நின்றுகொண்டு சங்கரனைப் பார்த்துப் பல் இளித்தார்கள். ஒவ்வொருவனுடைய பார்வையும் ஒரு தினுசாக இருந்தது.

'என்னடா சங்கரன் குட்டியை மயக்கி விட்டிருப்பானோ?...

என்று குசுகுசுத்தான் ஒருவன்.

'பட்டணத்துக்குப் போய்ப் படித்தவனாயிற்றே. பகலிலேயே விஜயா வீட்டிற்குப் போய் வருகிறான். பார்த்தாயா?'

'அசடு, பிறகு எப்போது போவதாம். இரவில் சோமசுந்தரம் போய் விடுகிறாரே பிறகு பிள்ளையும் அப்பனும் நேருக்கு நேராக மோதிக்கொள்ள வேண்டியதுதான்'' என்று சொன்ன பல் ஆசாமி நேராகச் சங்கரனைப் பார்த்தான்.

இந்த வார்த்தைகள் தெளிவாகச் சங்கரன் காதுகளில் போய் விழுந்து, அவனைத் தடுமாறச் செய்தன. கால்கள் பின்னின.

அவன் காது பட வேறு ஆபாசப் பேச்சுகளும்கூட பேசினார்கள். சங்கரன் அவர்களைப் பார்வையாலே எரித்து விடுவது போல் பார்த்தான். பிறகு அவர்களை லட்சியம் பண்ணாமல் விடுவிடுவென்று வீடு போய்ச் சேர்ந்தான். அம்மா கூடத்தில் உட்கார்ந்துகொண்டு தானியத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். அவளது கண்கள் கண்ணீர் வடித்துச் சிவந்துபோய் இருந்தன.

சங்கரனைப் பார்த்ததும் உள்ளே போய்க் கூடத்தின் மத்தியில் நின்று கொண்டாள்.

'நீ செய்வது உனக்கே நல்லதாகப் படுகிறதா.'' அம்மாவின் பலவீனமான குரலும் அவளது மாசற்ற முகமும் அவனைக் கலங்கடித்தது.

அவன் பதில் பேசும் முன்பே அம்மா குலுங்கி அழுதாள். அழுகையினூடே பேசினாள்.

'நீ படித்த பிள்ளையோன்னா. உன் நடத்தை பற்றி எல்லோரும் தவறாகப் பேசுகிறார்களே. அதையெல்லாம் கேட்க நான் உயிரோடு இருக்கிறேனே' அம்மா பலமாக மார்பில் அறைந்துகொண்டு கதறினாள்.

சங்கரன் ஓடிப்போய் அம்மாவின் கைகளைப் பிடித்து கொண்டான்.

'அப்படி என்னதான் சொல்லிவிட்டார்கள் அம்மா''

அந்த ஒழுக்கங்கெட்டவள் வீட்டில் உனக்கு என்னடா வேலை. உனக்கு மூத்தவன் எப்படி அடக்கமாய் இருக்கிறான். நீ என்டா இப்படிக் கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போகிறாய்.''

'உன் பிள்ளையைப் பற்றி நீ இவ்வளவுதான் தெரிந்து

வைத்திருக்கிறாயா?' என்று கேட்டான்.

''என்னடா தெரிய வேண்டி கிடக்கிறது. உன் தகப்பனார் காதில் இதெல்லாம் விழுந்தால் உயிரை விட்டுவிடுவார் தெரியுமா? ஐயோ இப்படிப் போகக்கூடாத இடமெல்லாம் போய் கெட்டு ஒழியவா உன்னைப் பட்டணம் அனுப்பிப் படிக்கவைத்தார். உன் பத்தி இப்படியெல்லாமா போகவேண்டும். உன்னை என் பிள்ளை என்று நினைக்கவே மனம் கூசுகிறது'' அம்மா உடல் குலுங்க அழுதாள்.

அவன் திடீரென உடல் அதிர கத்தினான். ஒரு கணம் அம்மாவே நடுங்கிப் போனாள்.

''நான் ஒன்னும் ஒழுக்கங் கெட்டவளோடு குலாவப் போகவில்லை. ஒழுக்கங்கெட்டவள் என்ற பட்டத்தைத் தூக்கி எறிய ஒருத்தி விரும்புகிறாள். அவளுக்கு உதவவே நான் அங்கே போகிறேன். நான் சொல்வதைக் கொஞ்சமாவது புரிந்து கொள்.''

'நன்றாகப் புரிந்துக் கொண்டேன் சங்கரா, ஊராரும் புரிந்து கொண்டு விட்டார்கள். நீ பட்டணத்தில் இருந்து வந்த நாட்களாய் வீட்டில் எதுவுமே சரியில்லை. உன் பெரிய அண்ணன் உன்னைப் பற்றி நிறையக் கவலைப்படுகிறான். உன்னால் அவன்கூட சரியாகச் சாப்பிடுவதில்லை. இன்னும் ஒரு மாதத்தில் அவனுக்குக் கல்யாணம். நீ இப்படி ஊர் சுற்றிக் கொண்டிருந்தால் அவனுக்குப் பெண் தரச் சம்மதித்தவர்கள்கூட மறுத்துவிடப் போகிறார்கள். உன் அப்பா சர்க்காரில் உத்தியோகம் பார்த்து வைக்க ஏதேதோ செய்து கொண்டிருக்கிறார். நீ..''

அவள் முடிப்பதற்கு முன்பே சேலையால் வாயைப் பொத்திக்கொண்டாள். அழுகையால் அவளது பலவீனமான உடல் குலுங்கியது.

காலடிச் சத்தத்தை வைத்தே கணவர். வருவதைத் தெரிந்து கொண்டுவிட்டாள்.

அப்பா வீட்டிற்குள் நுழையும்போதே கூடவே புயல் வந்துவிட்டது போல் பெரும் பரபரப்பாய் இருந்தது.

கையில் இருந்த குடையை மூலையில் வீசி எறிந்தார். அதுபோய் விழுந்த வேகத்தில் இரண்டு வெங்கலப் பாத்திரம் உருட்டிப் பெரும் சத்தத்தை ஏற்படுத்தியது.

'என்னடா புறப்பட்டு விட்டாயா? அங்கு எல்லாம் தயாராகி விட்டதாமே உன் மாமியாரையும் உடன் அழைத்துச் சென்றுவிடு.

பிழைப்புக்குத் தோதாகி விடும்'' தூவென்றுத் துப்பினார்.

கோபத்தில் அவர் முகம் சிவந்து போய்த் துடித்தது. விழிகளைக் கடுமையாய் உருட்டினார். சங்கரனுக்குச் சற்று பயம் தொற்றிக் கொண்டது போல் ஓரடி பின் நகர்ந்தான்.

அம்மா மிரண்டு போய் நடுக்கத்தில் சுவரில் சாய்ந்துகொண்டு நிற்க முடியாமல் அப்படியே தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

'அந்தத் தேவடியாள் மகளை இவன் இழுத்துக் கொண்டு ஓடப் பார்க்கிறான். அந்தக் குடியைக் கெடுத்தவள் எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறாளாம். இவ்வளவு கேவலமான காரியத்தை யார் செய்வான். உன் மகன் செய்யப் போகிறானடி விசாலம்..'' கத்தினார். வீடே அதிர்வது போல இருந்தது. பக்கத்து வீடுகளுக்கு அவர் குரல் தெளிவாகக் கேட்டது. சுற்றியிருந்த வீடுகள் காதைத் தீட்டிக்கொண்டு நடப்பதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவருக்கு யார் சொல்லியிருப்பார்கள் என்று அவன் குழம்பிப் போனான். பிறகு சுதாரித்துக் கொண்டு பதிலுக்கு அவரை முறைத்துப் பார்த்தான்.

'நாம் ஏற்படுத்தி வைத்த பாவத்துக்கு நாம்தானே பரிகாரம் தேட வேண்டும்.'' அவனது குரல் தீர்க்கமாய் வந்தது.

'யார் ஏற்படுத்தியது. நானா இல்லை என் தோப்பனாரா? ஏண்டா தரித்திரம் பிடித்தவனே. நீ செய்கிற காரியத்துக்குத் தர்க்கமா செய்கிறாய். நீ எனக்குப் பிள்ளையும் இல்லை. நான் உனக்கு அப்பனும் இல்லை. என் கண் முன்னால் நிற்காமல் எங்காவது ஒழிந்து போ... போ... அந்த ஆட்டக்காரிகளை வைத்து பிழைப்பு நடத்து.'' அவர் பயங்கரமாய்க் கத்தினார். அவரது பெரிய குடுமி அவிழ்ந்து அலைந்தாடியது. அவரது காது, கடுக்கனில் இருந்த ரத்தச் சிவப்புக் கல் போல் அவரது கண்கள் கனல் கக்கின.

''பாவத்துக்குப் பரிகாரம் தேடப் போகிறாயோ இல்லை அந்தத் தேவடியாளோடு குடித்தனம் பண்ணப் போகிறாயா? எக்கேடாவது கெட்டுத் தொலை.''

''ஏன் நடத்தினால் என்ன? அவர்களின் இந்தப் பாவமான வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாற் போல் ஆகுமே'

''பார்த்தாயா விசாலம் உன் அருமைப்புத்திரன் பேசுகிற பேச்சை. என்னால் வெளியே தலை காட்டமுடியுமா? ஒரு

பிராமணன் பேசுகிற பேச்சா இது. இப்படியே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விட்டுவிடலாம் போல இருக்குது'' அதற்கு மேலும் கத்த வலுவில்லாததால் அவர் பக்கத்து அறைக்குள் போய்விட்டார்.

அம்மா பிரம்மைப் பிடித்தவள்போல நிலைகுத்திய கண்களுடன் அவனைப் பார்த்தபடியே இருந்தாள்.

சங்கரன் எப்படிப்பட்ட மனநிலையில் இருந்தான் என்று சொல்லமுடியாது. இவர்கள் இப்படியெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்யும் அளவுக்கு நான் என்ன அப்படி மனித குலம் அழியும்படியான மகாபாவம் செய்துவிட்டேன். தனக்குள் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான்.

தங்கள் சொந்த லாபங்களுக்காக இதுபோன்று பெண்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும்படியும் அந்தக் காரியத்தைக் கடவுளின் பேரால் சாஸ்திரத்தின் பேரால் ஏற்படுத்தித் தேவையான அளவு சுகம் காணத் துடிப்பதும், பிறகு அதைக் கேவலம் என்று காறி உமிழ்வதுமான கபடத் தனங்களை நினைத்து இவர்கள் தானே வெட்கித் தலைகுனிய வேண்டும். அப்படி இவர்கள் ஏற்படுத்திய இழிவானவைகளைத் துடைத்து அதை மானுடத் தன்மையோடு இயல்பானதாக மாற்றுவது பாவமான காரியம், கேவலமான செயல் என்று எந்த மனசாட்சி இவர்களைப் பேச வைக்கிறது. இவர்களின் மனசாட்சி எப்பேர்ப் பட்டதோ! தூ.. என்று காரி உமிழ வேண்டும் போல் இருந்தது. தன் அம்மாவுக்காக அதை அடக்கிக் கொண்டான். அவளும் கூடப் புரிந்து கொள்ள முடியாதவளாக இருப்பதற்குக் காரணம் அவளது கல்வியின்மைதான். அதற்காகத் தானே அவளுக்குக் கல்வி மறுக்கப்பட்டுள்ளது. அதைக்கூட அவளால் புரிந்துகொள்ள முடியவில்லையே என்று அம்மாவுக்காக வருந்தினான்.

வெகுசிலவே உள்ள மக்கள் பெரும்பான்மையான மக்களின் உழைப்பை நாகரிகமாக உறிந்து கொழுப்பதற்கும் தங்களது கொழுத்த உடலின் காமத்துக்குத் தீனியாகக் கடவுளின் பேரால் பெருங்கூட்டத்தை ஏற்படுத்தி அதில் சுகங்காணவும், பரந்து விரிந்த நிலம் முழுவதையும் வெகுசிலரே பங்கிட்டு ஏனையோரை அடிமையிலும் கீழாக வைத்து விலங்குகளைப் போல நடத்தி அவர்களிலும் பிரிவினைகளை ஏற்படுத்தி, அவர்கள் ஒருவரோடு

ஒருவர் மோதி வெட்டிச் சாய்த்துக்கொள்ளும்படியான சதி வேலைகளைச் செய்து ஆண்டைகளாகவும், ஜமீன்களாகவும் மிராசுகளாகவும் ஆண்டு அனுபவிக்கும் இவர்கள் தங்களை நாகரிக மனிதர்கள் என்றும் கலாச்சாரம் மிக்கவர்கள் என்றும் மேன்மையானவர்கள் என்றும் எப்படிச் சொல்லிக் கொள்கிறார்கள். அதேவேளையில் எல்லாம் இழந்துவிட்ட நிலையிலும் அன்பும், காதலும், இரக்கமும், நம்பிக்கையும், மனசாட்சியும் இன்னும் அழிந்துபோகாமல் இயல்பான மனிதத்தன்மையோடு, பொறுமையோடு எல்லாவிதச் சுமைகளையும் சுமந்துகொண்டு பண்போடு ஒளிரும் அடித்தட்டு மக்களை ஒரு கணம் நினைத்துப் பார்த்தான். அவனுக்குத் தலைச்சுற்றுவதுபோல் இருந்தது. கிணற்றடிக்குப் போய்த் தொட்டி நிறைய நீர் இறைத்து வெகுநேரம் குளித்துக் கொண்டிருந்தான். தலை குளிரும் வரை.

அம்மா சுத்தமான துவாலைக் கொண்டு வந்து தலை துவட்டி விட்டாள். அவளது நெஞ்சம் தன் மகனுக்காகப் பரிதவித்தது. எதுவும் வாய் திறக்காமல் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தாள்.

ஒரு சிறு விசும்பலுடன் ''சங்கரா, நீ அப்படியெல்லாம் எதுவும் செய்துவிட மாட்டாய்தானே'' என்று சின்ன குழந்தையை போல கேட்டாள்.

தாயின் மீதான அன்பால் அவனால் அடக்க முடியாமல் குலுங்கி அழுதபடி அம்மாவை இறுக்க அணைத்துக் கொண்டான். அவன் குலுங்கியழுதபோது அம்மாவின் வயிறு அதிர்ந்தாடியது. அவளது வயிற்றில் முகம் புதைத்து அழுதான்.

''நீ அவர்களோடு எல்லாம் பழகியதால்தான் இந்தக் கஷ்டமெல்லாம். அதனால்தான் நம்ம பெரியவா எல்லாம் அவாளைத் தூரமாய் ஒதுக்கிப் பார்வைக்கு படாதபடித் தூரமாய் வைத்திருக்கிறார்கள். பார் உனக்கும் கஷ்டம் பிடித்தாட்டுகிறது. கெட்ட சகவாசத்தால் தாசிகளோடு குடித்தனம் பண்ண நினைக்கிறாய். அம்மா சொல்றேன்டா கண்ணு. இன்றோடு எல்லாம் தலைமுழுகியாயிற்று என்று நினைத்துக்கொள்'' என்றவள் அவன் தலையை மெல்ல வருடி விட்டாள்.

'அம்மா நீ எல்லாவற்றையுமே தப்பாகவே புரிந்து கொண்டிருக்கிறாய். எல்லாமே தப்பு. உனக்குச் சொந்த மனசாட்சியே வேலை செய்ய முடியாதபடி அதைப்

பாழ்படுத்திவிட்டார்கள்.

பெரும்பாலான மக்களைச் சுரண்டுவதற்காகவே இந்த உயர்வு தாழ்வுகளை ஏற்படுத்தித் தாழ்ந்தவர்களை அடிமைகளாக்கி அவர்களைக் கல்வியற்றவர்களாக்கி, வெறும் உழைக்கும் விலங்குகளாக்கி அவர்களது சூடான ரத்தம், அவர்களது வியர்வையை நாம் கொள்ளையடித்துப் பெரும்பாலான மக்களுக்குத் துரோகம் செய்து வருகிறோம். மடி, ஆசாரம், இது எல்லாம் வெறும் கட்டுக் கதை. நீ உடுத்திய உடையும், தின்னும் சோறும், நம்மவர்கள் உருவாக்கியதா இல்லையே. நம் நிலத்தைக் குத்தகை எடுத்தவன் நாம் யாரைத் தொடப்படாது என்கிறோமோ அவனைக் கொண்டு உற்பத்தி செய்கிறான். அதை நமக்குக் கொடுக்கிறான். நாம் ஒரு பாவனையாக அதில் நீர் தெளித்து உண்டு கொழுக்கிறோம். இதெல்லாமே கபட நாடகம்தான். கொள்ளையடிக்கும் வழிமுறைகள்தான். நாம் திட்டமிட்டு ஒரு முறையைக் கடுமையான சட்ட திட்டங்களோடு ஏற்படுத்திவிட்டோம். அது பல நூறு வருடங்களாக வேலை செய்து வருகிறது. அது தன் இயல்போடு பல படிநிலைகளை ஏற்படுத்திச் செழுமையாக வளர்ந்து எளிய மக்களின் ரத்தத்தையும் வியர்வையையும் குடித்து, செழித்து வளர்ந்து விட்டது. நாம் ஏராளமான லாபத்தை அனுபவித்துக் கொண்டு நமக்காக உழைத்து தேய்ந்து போனவர்களைத் தீண்டப்படாதவர்கள். தீண்டினால் தீட்டு என்று வஞ்சகமாக கதை அளக்கிறோம். அவன் கைபடாத ஒரு பருக்கையும் நம் வயிற்றுக்குள் போனதில்லை தெரியுமா? நாம் இப்படி ஏற்படுத்தி வைக்க நான்கு, நாற்பதாகி, நாற்பது நானூறு ஆகிவிட்டது. ஆயிரங்களைத் தாண்டிவிடுமோ என்னவோ பிறகு ஏன் நம்மை வெள்ளையன் அடிமைப்படுத்த மாட்டான். இன்னும் நாம் மனம் மாறாமல் போனால் எல்லா பாவங்களும் அதன் பழிகளும் நம் அடுத்த தலைமுறையின் மேல்தான் விழும்.

வெள்ளையன் வந்த புதிதில் நாம் அவனைப் பறங்கியென்றும், மிலேச்சன் என்றும் புறக்கணித்தோம். தாழ்த்தப்பட்டவர்களின் தோள்மீது கைபோட்டு அவன் திரிய ஆரம்பித்தபோது நாமும் பறங்கியின் பாஷைகளைப் படித்துக் கொண்டு பறங்கியோடு கைகுலுக்கவும் அவனிடமும் நம் கபட மூட்டையை அவிழ்த்துக்கொட்டி தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவன் தந்த சலுகைகளை இப்போது நம்மவர் அனுபவிக்கிறார்கள்.

காலத்துக்கு ஏற்றபடி பிழைப்பு நடத்தும் நம் தந்திரம் உனக்குப் புரியாது அம்மா...'' அவன் நீளமாகப் பேசிக்கொண்டு போனான். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் மகனுக்கு மனம் பேதலித்துவிட்டதோ என்றுகூட சந்தேகப்பட்டாள்.

'சங்கரா, நீ பட்டணம் போய்ப் படித்தவன். உன் பேச்சு எனக்கெப்படியப்பா புரியும்' என்று சொல்லவும் செய்தாள். பிறகு தன் காய்ந்துபோன பலவீனமான தொண்டையைச் செருமிக்கொண்டு,

''சங்கரா, நீ இந்த அசட்டுத்தனங்களை விட்டு ஒழித்து ஏதாவது சர்க்கார் உத்யோகத்துக்குப் போய் விடு. மகாராணி மாதிரி ஒருத்தியைப் பார்த்து உனக்குக் கலியாணம் செய்து வைக்கிறேன்' என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள்.

''அய்யோ அம்மா, இந்தக் காலம் பூராவும் நான் உனக்கு சொன்னாலும் நீ அதைப் புரிந்து கொள்ளவே மாட்டாய். இந்தக் கட்டுப்பெட்டிக் கசடுகளை எல்லாம் உயர்வானது என்று நம்பும்படிப் பழக்கப் படுத்தப்பட்டு விட்டாய். உனக்குப் புரியாது. புரிய வைக்கவே முடியாது. அவன் தனக்குத் தானே சொல்லிப் கொண்டு தன் அறைக்குப் போய்விட்டான்.

அம்மா எவ்வளவோ கெஞ்சியும் அவனால் இரவு சாப்பிட முடியாதபடி அவன் மனம் கலவரமடைந்திருந்தது. அப்படியே உறங்கியும் போனான். உறக்கம் தான் மனிதனுக்கு அமைதியையும் ஆற்றலையும் தருகிறது.

பொழுது புலர்ந்து வெகு நேரமாகியும் சங்கரன் உறங்கிக் கொண்டிருந்தான். அவன் விழித்தபோது சூரியன் நன்றாக மேலே வந்துவிட்டான். அறை புழுக்கமாக இருக்கவே எழுந்து குளித்து முடித்துக்கொண்டு புத்தகங்களை எடுத்து ஒரு பெட்டியில் அடுக்கினான். கட்டிய வேட்டி சட்டையோடு புறப்பட்டு விடுவதாக முடிவு.

''சங்கரா உனக்குப் பழையதைக் கொண்டு வரட்டுமா? தயிர் விட்டு சாப்பிடு. மண்டைச் சூடு குறையும்'' அம்மா சொல்லிக் கொண்டே வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

மூத்தவன் காய்ச்சலில் முனங்கிக் கொண்டு படுத்துக் கிடந்தான். சோமசுந்தரர் வெளியே போகும் தயாரிப்புகளுடன் வெற்றிலைப் பெட்டியோடு திண்ணையில் உட்கார்ந்து தெருவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

குப்புசாமி கலவரத்துடன் ஓட்டமும் நடையுமாய் சுந்தரரை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவர் தலையில் குடுமி மட்டும் இல்லை ரகசியங்களும் அதற்குள் அடைபட்டு வெளியே வரத் துடித்துக் கொண்டிருந்தன. பல ரகசியங்கள் உலவும் மண்டையது. அது ஊராருக்குத் தெரிந்த விஷயம். சிண்டு முடிந்து சிக்கல் உண்டாக்குவதில் நிபுணர்.

''என்ன ஓய், காலையில் ஏதாவது விஷயம் கிடைத்து விட்டதா? காக்கை போல பறக்கிறீர்''

''அய்யோ அண்ணா, கேலி பேசாதீங்கோ. நான் சொல்லப் போவதைக் கேட்டால் மயக்கம் போட்டு விழுவேள்.''

''இதென்னடா இழவா போச்சே. நம்மாத்துப் பையன் சங்கதியைத்தான் இப்படி தவில் கொட்டி வருகிறானோ என்று தோன்றியது. எரிச்சலோடு, 'அப்படி என்ன ஓய் புதுசா சொல்லப் போறீர்...''

'கொலை... கொலை அண்ணா இரட்டைக் கொலை.'' ரெண்டு விரல்களைக் காட்டிச் சொன்னார்.

''விஜயாவை யாரோ கொன்றுவிட்டார்களாம்.'

'யார்? சதி விஜயாவையா'' சோமசுந்தரர் காதருகே வாய் வைத்து ரகசியம்போலக் கேட்டார்.

குப்புசாமி பெரிதாக தலையாட்டிவிட்டு ''பாவம் அவளது பெண் ஒருத்தி இருந்தாளே அவளும் கொலை செய்யப்பட்டு கிணற்றில் மிதக்கிறாள்.

'அய்யோ இதென்ன மோசம். குப்பு நீ கண்ணால் பார்த்தாயா?''

'என் ரெண்டு கண்ணாலும் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன்.''

சோமசுந்தரர் வாயைப் பொத்திக் கொண்டார். கிணறு வெட்ட புதையல் கிடைத்ததுபோல் இருந்தது. அது ஜமீன் வேலையாகத்தான் இருக்கும். எப்படியோ புள்ளையாண்டான் தப்பிச்சது என்றிருந்தது அவருக்கு.

சங்கரன் காதில் இடிபோல இறங்கியது இந்தச் சேதி. மனம் சிதற, காற்றுபோல பாய்ந்து வெளியே ஓடினான்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவன் திண்ணைக்குப் பக்கத்தில் தான் நின்றிருந்தான். குப்புசாமியின் சொற்கள் ஒவ்வொன்றும் அவன் மூளையைச் சிதறடித்தன. ஓடினான். கோயில் பாதை நெடுக்க சனங்கள் கூட்டமாய் போய்க்கொண்டும்

வந்து கொண்டும் இருந்தார்கள். அவர்கள் முகத்தில் பயந்து வெளிறிப்போன இழவுக்குறி தெரிந்தது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தலையில் அடித்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள்.

இரட்டை அடுக்கு மாடி வீட்டின் பின்புறம் சுற்றிலும் நின்ற மக்களை விலக்கியபடி கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். காலம் தான் வரைந்த கோலத்தைக் கொடூரமாய் அழித்திருந்தது. கிணற்றில் மிதந்த நிர்வாணமான பிணத்தைப் பார்க்கச் சகிக்காமல், கட்டியிருந்த வேட்டியை உருவி கிணற்றில் வீசினான். அது பிணத்தை மூடிக்கொண்டு நீரில் அலைந்த கூந்தலையும், ஊதி வெளுத்துப்போன கால்களையும் மட்டும் காட்டியது. நிர்வாணப் பிணத்தை வேடிக்கை பார்த்தவர்கள் இப்போது அரை நிர்வாணமாய் இருந்த சங்கரனையும் வேடிக்கை பார்த்தார்கள்.

அவனோ வெடித்துச் சிதறும் மண்டையைப் பிடித்துக்கொண்டு கிணற்றின் தடுப்புச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். வெகுநேரம் அப்படியே கிடந்தான்.

⊙⊙⊙

அன்றிலிருந்து அவன் தெளிந்து தன் நிலைக்கு வர மூன்று ஆண்டுகள் பிடித்தன. கலங்கிய உள்ளமும் கசங்கிய உடலுமாய் நடந்தான். நடந்து கொண்டே இருந்தான். எங்கே போகிறோம், எப்படி வாழ்கிறோம் எதுவுமே தெரியவில்லை அவன் நிதானமடைந்து சூழல் புரிய காலம் பிடித்தது. காலம் ஒரு கனவு போல் ஓடியது. சுதாரித்து எழுந்தபோது நான்கு சேரிகளில் திண்ணைப் பள்ளிகள் நடக்கத் தொடங்கின. வாரம் ஒரு ஊரில் இருப்பான். சிறியவர், முதியவர் என்ற பேதம் கிடையாது. கற்க விரும்பும் அனைவருக்கும் வாசிக்கக் கற்றுக் கொடுத்தான்.

அடுத்த கிராமத்துக்குப் போகும்போது தற்போது யார் கெட்டிக்காரனோ அவனை ஆசிரியனாக நியமித்துவிட்டு அடுத்த ஊருக்குப் போவான்.

ஒருவன் தன் பனைமரத்தின் ஓலைகளை வெட்டி வந்து குவித்தான். வேறு ஒருவன் பள்ளிக்குக் கூரை அமைத்து கொடுத்தான். பையன்கள் சுற்றிலும் ஆடுதொடா செடிகளை நட்டு வேலி அமைத்தார்கள். பள்ளிக்கூடம் தயார்.

எழுத்துக்கள், சிறுசிறு வார்த்தைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன. பாடல்களுடன் பல கதைகளும் சொல்லிக் குழந்தைகளுக்கு

ஆச்சர்யத்தை ஏற்படுத்துவான்.

சிறுவர்களுக்கும் அவனுக்கும் நட்பு ஏற்பட்டுவிட்டது. பெரியவர்கள் அவனை நெருங்க அச்சப்பட்டார்கள். சங்கரன் அவர்களை வலிய தேடிப்போய் தோள்களில் கை போட்டுக் கொண்டு விவசாயத்தைப் பற்றியோ, வேறு சாதாரண விசயங்கள் பற்றியோ பேசுவான். பல காலமாய் வயல் காட்டில் உழைத்து உழைத்து உரமேறிப் போயிருந்தவர்கள் காதுகளில் மிரட்டல் வார்த்தைகளும் ஏச்சும் பேச்சுமே கேட்டுப் பழகியவர்களுக்கு அன்பான, நட்பான வார்த்தைகள் அவர்களுக்குக் கூச்சத்தை ஏற்படுத்தியது. அவன் பேசும்போது அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. சில சமயங்களில் புலம்பினார்கள். சங்கரன் பெரியவர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது சின்னப் பையன்கள் கேலியோடு சிரிப்பார்கள்.

பையன்களின் புரிந்துகொள்ளும் ஆற்றல் அவனையே கூட திகைக்க வைத்துவிட்டது. அவர்களது கற்கும் திறனை நினைத்து அவனே ஆச்சர்யப் பட்டுப்போனான். மனுவின் சட்டங்களாலும் தொடர்ச்சியான அடக்குமுறையாலும் திட்டமிட்டு இவர்களது வளர்ச்சி நசுக்கப்பட்டு ஒரு சிலர் தங்களது வாழ்வு தேவைக்காக இந்த மனிதர்கள் நாசமாக்கப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரமும் சமத்துவமும் பறிக்கப்பட்டு, மனிதன் என்ற அடிப்படையான அங்கீகாரமும் அற்று வெறுமனே உழைக்கும் ஒரு விலங்கு என்று ஆக்கப்பட்டிருக்கும் கொடுமை அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இது எத்தனை பெரிய பாவம். இந்தக் கொடுமையான பாவத்தைச் செய்த மனிதனுக்கு எப்பேர்ப்பட்ட தண்டனை கிடைக்குமோ! அவன் உடல் ஒரு கணம் நடுங்கியது. இந்தச் சாதாரண உண்மைகூட புரியாமல் இவர்கள் எந்த மாதிரியான வேதங்களைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த மாதிரியான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எதை ஆசாரம், தூய்மை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்து நிற்கும் கோயில்களும் அதன் உள்ளே இருப்பதாகச் சொல்லப்படும் கடவுளும் அவனுக்குச் சந்தேகத்துக்குரியதாகத் தோன்றியது.

வெள்ளையன் வெளியேறுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அவன் இந்த நாட்டிற்கு வந்தது. அவன் வியாபாரப் பொருட்களுடன் மதத்தையும் கல்வியையும் மனித நாகரிகத்தையும் கொண்டு வந்துள்ளான். மனசாட்சியும்,

மனஉறுத்தலுமற்று தங்களது சுகவாழ்வுக்காக ஒரு பெரும் கூட்டத்தை நாசப்படுத்திவிட்டு மனசாட்சியின் வலியற்று இதையெல்லாம் நாகரிகமென்றும் சாஸ்திரத்தின் பேரிலும் சம்பிரதாயத்தின் பேரிலும் நடக்கும் நேர்மையான காரியம் என்று கூறும் இவர்கள் மனம் எப்போதுதான் வளர்ச்சி அடையுமோ என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

அது மாதிரியான எந்தப் பாவத்தையும் தான் செய்யவில்லை என்ற மனத்திருப்தி அவனுக்கு முழுமையாக இருந்தது.

பாரதியின் பாடல்களையே பாட்டாகவும் பாடமாகவும் நடத்தினான். கல்வியால் உயர்ந்து இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேல் உலகங்களுக்குப் போய், மேலும் கற்றும் தன் மக்களுக்காக உரிமைக்குரல் கொடுத்து வரும் அம்பேத்கர் பற்றிய செய்திகளை அவர்களுக்குச் சொல்லுவான்.

பெரியவர்களுக்கும் பையன்களுக்கும் ஆச்சர்யமாக இருந்தது. இரட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசர் பற்றிய செய்திகள் அவர்களுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. தேவலோகக் கட்டுக் கதைகள் கேட்டுப் பழகிய அவர்களுக்குத் தன் சொந்த மனிதர்களின் வளர்ச்சியும் அவர்களின் தங்களது மக்களுக்கான போராட்டங்களைக் கேட்கவும் புரிந்துகொள்ளவும் தன் பிள்ளைகளும் படிக்க வேண்டும், ஆண்டைகளின் சவக்கடியிலிருந்து தப்பி அவர்களும் உரிமைகளுடன் நடக்கவேண்டும் என்று விரும்பினார்கள்.

கூரைப்பள்ளி ஒரு மாறுதலைச் செய்தது உண்மையே. சங்கரன் இதேபோன்று பக்கம் பக்கமாய்ப் பரவிக்கிடந்த வேறு நான்கு கிராமங்களிலும் இதேபோன்று கற்றுக் கொடுக்கத் தொடங்கினான். அந்த மக்களுக்கு அவன் வாத்தியாராகவே மாறிவிட்டான்.

அவனது கல்விப் பணிக்கும் எதிர்ப்பு இல்லாமல் போகுமா என்ன ?

அவனைப் பைத்தியக்காரன் என்றும், அவனிடம் பிள்ளைகளைப் படிக்க அனுப்பினால் கூலி கிடையாது என்று பயமுறுத்தப்பட்டார்கள். எல்லா தொல்லைகளுக்கு நடுவேயும் சங்கரன் வேலை செய்து கொண்டிருந்தான்.

பக்கத்து கிராமத்தில் கிறிஸ்தவப் பாதிரிகள் பள்ளிகளுக்கான கட்டடத்தைக் கட்டி முடித்திருந்தார்கள்.

ஆண்டைகளும் நில சொந்தக்காரர்களும் புலம்பத் தொடங்கி விட்டார்கள்.

"அவா எல்லாம் மதுரை மீனாட்சி அம்மன் குள்ளாற போகலாம்னு ஜூடுசியல் ஜட்ஜ்மெண்ட் வந்துட்டதாமே வந்துட்டதாமே. இதெல்லாம் எங்கப்போய் முடியுமோ. கலி முத்திண்டு வருது' என்று பூசாரிகளின் குரல் நடுக்கத்தோடு மூலைக்கு மூலை ஒலித்தது.

மனிதனின் இரத்தத்தை உணவாகவும் அவனது வியர்வையை நீராகவும் குடிக்கும் இழிந்த கோமாளி அரக்கன் செத்து விழும்போது எழும் அசிங்கமான குரல் போல இருந்தது அந்த ஓலங்கள்.

ஓலமிடும் அந்தப் பேயைச் சம்மட்டியால் ஓங்கி அடித்தார் வெண்தாடிக்காரர். மூளையற்று வெறுமனே புளுகு மூட்டைகளைச் சுமந்து சூரையாடி வந்த பேயைச் சாறு தெறிக்க நசுக்கினார். அதுவோ ஈனக்குரல் எழுப்பியது. ஆனால், சாகவில்லை. அதன் பெரிய பாவமான வாழ்வு முடிவுக்கு வராமல் சித்திரவதைப்பட்டுச் சாக, காலம் கட்டாயமாக அதை உயிரோடு வைத்திருக்கிறதோ என்னவோ! முனங்கும் மூட, முடமானப் பேயாகி விட்டது. காலம் ஒரு மாற்றத்தை உருவாக்கிவிட்டது. இந்த மாற்றத்துக்கு மக்கள் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

மனநிறைவான ஒருநாளில் ஆசிரியரின் நினைவு வந்தது. வெகுகாலமாய் ஆசிரியரின் நினைவு வராமல் போனதால் சற்றுக் குழம்பவும் செய்தான். நீண்ட இடைவெளியில் தனக்கு ஏற்பட்ட மனச்சிதைவை மீண்டும் நினைவுப்படுத்திக்கொள்ள அவன் விரும்பவில்லை.

நீண்ட கடிதம் எழுதினான். பதில் கடிதத்துக்கான விலாசத்தையும் எழுதினான். அவனைப் பொறுத்தவரை அவனது இப்போதைய வேலை மனநிறைவைத் தருவதாகவும் ஆர்வமூட்டக் கூடியதாகவும் இருந்தது. ஆனாலும், அவனது மனம் கடுமையான காயத்தால் தடுமாறியது. நினைவலைகள் இடை–யிடையே அறுந்துப் போவதை அவன் உணர்ந்தான். உடலோ சொல்ல முடியாத அளவு பலவீனமடைந்து விட்டது. ஆனாலும் தன்னைப் புனரமைத்துக்கொள்ளும் விதமாக ஒவ்வொரு அடியாக மெதுவாக எடுத்துவைத்தான்.

சில கோமாளி எச்சமிச்சங்கள் மூலை பிசகிய மூடங்கள் அவன்

காதுபட பைத்தியக்காரன் என்று சொல்வது மட்டும் அவனைக் கடுமையாகத் தாக்கியது. அந்த உழைப்பாளி மக்களுடன் உறவாடுவது மட்டுமே அவனுக்கு ஆறுதலாய் இருந்தது. தன் முன்னே பெருங்கடமை இருப்பது போல் விசாலமான கனவுகளுடன் நெஞ்சு நிமிர்த்தி நடக்கத் தொடங்கி விட்டான்.

கிராமங்களின் ஆண்டைகளும் அவர்களின் ஏவல்களும் திட்டமிட்டு அவரை மனநோயாளி என்று சொல்லித் திரிந்தார்கள். சனங்களுக்கு அவர் கற்றுக் கொடுப்பது அவர்களுக்குக் கிலியேற்படுத்தியது.

கோபாலுக்குக்கூட அவரைப் பிடித்துப் போய் நேரம் கிடைக்கும்போது இருவரும் பேசிக்கொள்வார். கோபால் பட்டணம் போக அவசரப்பட்டார். அம்மாவோ அவரை இங்கேயே இருந்துவிடு என்று வற்புறுத்தினாள். அம்மாவுக்கு நாகம்மாளை ரொம்பவும் பிடித்துவிட்டது.

மாமியார் மனதுக்குள் புகுந்து கொண்டு, மகளாகவே மாறி–விட்டாள்.

முருவனும் அஞ்சலையோட மகள் சின்னபொன்னும் தனியே நின்று பேசிக்கொள்வதும் ஜாடை காட்டிக் கொள்வது இருந்ததை அம்மா கண்டுகொண்டாள். அதைக் கோபாலிடமும் ஜாடையாகச் சொல்லிவைத்தாள்.

சரி வந்தது வந்தோம். தம்பியின் கல்யாணத்தை முடித்துவிட்டுப் போவோம் என்று தோன்றியது.

மாலை நேரம் வழக்கத்துக்கு மீறி குளிர்ச்சியான காற்று வீசிக்கொண்டிருந்தது. குடிசைக்கு வெளியே காய்ந்த முள் செடிகளை அம்மா உடைத்துக் கொண்டிருந்தார். பொரித்த சோளத்தை விழுங்கிக் கொண்டிருந்தார் கோபால். மந்தைகள் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. இந்தக் கிராம வாழ்க்கையை அனுபவித்து எவ்வளவு காலம் ஓடிப்போய் விட்டது என்று நினைத்துக் கொண்டார்.

'ஏண்டா கோவாலு. அவள் அந்தப் பக்கமா இட்டுகினு போய் வர்றது' அம்மா வழக்கமற்று ஏதோ பெரிய விஷயத்தின் தொடக்கமாகப் பேசுவது போல் இருந்தது.

'அது கெடக்கட்டுமா. தம்பிக்கு ஒரு கல்யாணத்த முடிச்சிட்டா நல்லாருக்குமேன்னு தோணுது.'

அம்மா சடக்கெனத் திரும்பிப் பார்த்தார். அவளது அன்பு

ததும்பும் விழிகள் பளிச்சிட்டன.

''ஆமாண்டா, எனக்கு அதான் யோசனையா கெடக்குது. நீயும் கேக்கற. சரி அக்காள ஒரு பேச்சுக்குக் கேட்டு பாரு''

''என்னத்த கேக்றது நாமதான் பாத்துச் செய்யணும்.'

இப்படிப் பேசி முடித்து வார முதல் நாளில் மாவிலையும் தென்னை குருத்தோலைகளும் அலங்காரமாய்த் தொங்க தென்னை ஓலைக்கீற்று கொட்டகையில் திருமணம் நடந்தேறியது.

முக்கியமான விருந்தாளியே சங்கரன் வாத்தியார்தான். மணமக்களை வாழ்த்தினார். ஏனோ அங்கு வந்ததில் இருந்தே அவரது முகம் அவ்வளவு சரியாக இல்லை. பளிச்சென்று இருக்கும் அவரது முகத்தில் வழக்கத்துக்கு மாறாய் கருமை படர்ந்திருந்தது.

''அவர் சுற்றிலும் யாரையோ தேடினார். பிறகு மாப்பிள்ளை–யிடம் அம்மா எங்கே?' என்று கேட்டார்.

முருவன் அம்மாவுக்குக் குரல் கொடுத்து கூப்பிட, அம்மா உறவு சனங்கள பந்திக்குக் கூப்பிட போயிட்டாங்கன்னு யாரோ சொல்லிவிட்டுப் போக சங்கரன் அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவர் கையில் ஒரு நீல நிறப் புதுவகையான கடிதம் இருந்தது. ஏனோ திடீரென எடுத்து அதை இடுப்பில் சொருகிக் கொண்டு புறப்பட்டுவிட்டார். ஆனால், அவரது உள்ளத்தில் பெருந்துயரம் மூண்டிருந்தது.

முன் நாள், தபால் ஒன்று அவரிடம் கிடைத்தது. வழக்கமாகத் தபால்காரர் அவரிடம் தபால்களைக் கொடுத்துச் செல்வது வழக்கமான ஒன்றுதான். அவர் கிராமத்தில் இருக்கும் நாட்களில் அது நடக்கும்.

கடிதத்தை அவரே படித்துக் காட்டுவார். சில சமயங்களில் தன்னிடம் கற்றுக்கொள்ளும் பையன் யாரையாவது பிடித்து கடிதத்துக்குரியவரிடம் வாசித்துக் காட்ட சொல்லுவார்.

கடிதம் வெளிநாட்டில் இருந்து வந்ததுபோல் இருந்தது. படித்ததில் இலங்கை விலாசம் இடப்பட்டிருந்தது.

கோபால் குடும்பத்தில் இருந்து பஞ்சம் பொழைக்கப் போனவர்களைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருந்தார்.

எப்படியும் தான் வாசிக்கப் போகும் கடிதம்தானே என்று பிரித்து வாசித்தார். அதில் கண்டிருந்த செய்தி அவரை ஒரு கணம் நிலை தடுமாற வைத்தது.

பொன்னியம்மாள் வெள்ளைக்காரத் துரையால் கற்பழிக்கப்பட்டு அவமானம் தாங்காமல் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகவும் அதை எதிர்த்துக் கலகம் செய்த ரங்கன் தோட்ட துரையை மலைச் சரிவில் உருட்டி விட்டதால் காயமடைந்த துரையின் ஆட்கள் ரங்கனைக் கொன்றுவிட்ட செய்தியைத்தான் அந்தக் கடிதம் சொல்லியது.

பின் குறிப்பாக,

**இது ஒரு தகவலுக்காகத்தான் எழுதுகிறோம். இனி ஆகப்போவது ஒன்றும் இல்லை. அவர்கள் இருவரும் தேயிலை தூருக்குள் தன்மானத்துடன் போராடிக் களைத்தவர்களாய் மீளா உறக்கத்தில் இருக்கிறார்கள். சம்பந்தப் பட்டவர்களுக்கு எமது வருத்தத்தைச் சொல்கிறோம். யாரும் பிழைப்பு தேடி இங்கு வரவேண்டாம். இங்கு நிலைமைகள் சரி இல்லை.**

மலை நாடு எண்–10
நடேசன்

கடிதத்தை உரியவரிடம் கொடுப்பதால் புண்ணியமும் ஏற்படப் போவதில்லை. அவர்கள் இறந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

எங்கோ ஒரு மூலையில் தன் மகள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்று அந்தத் தாய் நினைத்துக் கொண்டிருக்கட்டும்.

இந்தச் செய்தி துக்கத்தைத் தவிர வேறு எதையும் தரப்போலதில்லை.

உண்மையை தனக்குள்ளே புதைத்துக்கொண்டு கடிதத்தைத் கிழித்தெறிந்தார்.

கடல் கடந்து போனாலும் இந்த மக்களின் துயரம் தீராது போல இருக்கிறதே.

எல்லா முனைகளிலும் இந்த மக்களைச் சீரழித்துக் காலங் காலமாகத் தொடரும் ஏற்பாட்டைச் செய்து வைத்த தன் பாசிச முன்னோர்களைப் பெருங்கோபத்துடன் காறி உமிழ்ந்தார். ஆவேசத்தால் தரையை ஓங்கி மிதிக்கவும் செய்தார்.

இவ்வளவு பாவமான காரியத்தைக் காட்டுமிராண்டிகளின் காலத்தில் செய்தது சரி. இன்னமும் இது வளர்ந்துகொண்டு

போவது மனிதத் தன்மையற்ற கேவலமானது என்று இவர்கள் எப்போது உணர்வார்களோ அவர் தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

சோர்வோடு தனது பாடசாலையும் தனது தங்குமிடமுமான குடிசைக்குப் போய்ச் சேர்ந்தார். நல்லவேளையாக வழக்கமான பையன்கள் யாரும் அங்கு இல்லை. சாணம் மெழுகிய தரையில் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டார். உடலும் உள்ளமும் வலித்தது. படுத்துச் சிறிது நேரத்திலேயே ஆழ்ந்த உறக்கத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். லேசான குறட்டைச் சப்தம் கேட்கத் தொடங்கியது. உறக்கம் இல்லாத மனிதராகிவிட்டார். தொடர்ச்சியாக அவர் மனதில் பலவிதமான எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. அதை மீறி அவரால் உறங்க முடியவில்லை. வெகுநாட்களுக்குப் பிறகு இன்றுதான் அவருக்கு ஆழ்ந்த உறக்கம் வந்தது.

கல்யாணம் முடிந்த மறுநாளே கோபால் பட்டணம் கிளம்பினார்.

முதல் நாளே கிடங்கில் கடுமையான வேலை. கூலி பிரித்து முகம் கை கால் கழுவும்போதே குயிலம்மாவின் நினைவு அவரைப் பற்றிக் கொண்டு மனசைப் பிராண்டியது. அந்த நினைவைக் கோபால் விலக்கப் பார்த்தார். மீண்டும் நாக்கு சாராயத்துக்காகவும் மனசு குயிலம்மாவுக்காகவும் ஏங்கியது. அறிவு புது பெண்சாதிக்காக வக்காலத்து வாங்கியது. மனசுல பாட்டிலால் இடித்து முத்துப் பல் பளீரிடச் சிரித்துச் சீண்டினாள் குயிலு.

நேரே சாராய மைதானத்துக்குப் போய்விட்டார். பொழுது முழுமையாய் சாய்ந்து சாராய நேயர்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். வழியில் குடி அதிகமாகி ஒருவன் விழுந்து கிடந்தான்.

தூரத்தில் வரும்போதே சாராயத்தின் இனிய நெடி கோபாலுக்குப் பரவசமூட்டியது.

சீமை எண்ணெயில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் மஞ்சள் நிறச் சேலையில் தகதகவென்று மின்னிக் கொண்டிருந்தாள் குயிலம்மா..

கோபாலுக்கு நாக்கும் உள்ளமும் வறண்டு போய்த் தவித்தது.

கோபாலைப் பார்த்துவிட்ட குயிலம்மா இருட்டைத் துழாவி

கொண்டு உற்றுப்பார்த்தாள். அவர் தங்கப்பல் தெரிய இளித்தார்.

ஏனோ சடக்குனு திரும்பிக் கொண்டாள். அவளது முகத்தில் ஒரு வாட்டம் படர்ந்து இருப்பதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. பக்கத்தில் போய்க் குத்துக் காலிட்டு உட்கார்ந்து கொண்டார். அவள் விளக்கைத் தூரமாய் தள்ளி வைத்தாள். அவள் மௌனமாகவே உட்கார்ந்து கொண்டிருப்பது அவரது பொறுமையைச் சீண்டியது.

'சரி எதனாச்சும் ஊத்து''.

'என்னத்த ஊத்தறது. எல்லாம் தீந்து போச்சு என்று சலிப்போடு உச்சுக் கொட்டினாள்.

ஏற்கனவே குடித்து போதை ஏறிபோன் ஒருவன் குவளையை நீட்டிக் கொண்டிருந்தான். கோபாலுக்குச் சொன்ன வார்த்தை அவனுக்கு ஏமாற்றத்தைத் தந்தது.

'தே இன்னாமே பொம்பள நீ எதனா இருந்தால் கொஞ்சம் ஊத்து ஒன்னும் பத்தல.''

அவன் ஆடினான். அவள் மேல் விழுவதுபோல் சாய்ந்து சுதாரித்துக் கொண்டு பின்னால் நகர்ந்தான்.

யோவ் போய்யா அந்தப் பக்கம். இல்லாத சரக்க எங்க இருந்து தருவேன்... போ... போ... அவனை விரட்டினாள்.

கோபால் சலிப்பாக உட்கார்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். வம்பு செய்து கொண்டிருந்தவன் கண்ணாடிக் குவளையை ஓங்கித் தரையில் அடித்துவிட்டுப் போனான். மண் சிதறி, கோபாலின் கண்ணில் விழுந்தது. அவர் கண்ணைப் பிடித்துக்கொண்டார்.

குயிலம்மா பதறிப்போய் விளக்கை அருகில் கொண்டுவந்து அவர் கண்களைப் பார்த்தாள். ஒன்றும் இல்லை. சின்னதாக தூசி விழுந்திருந்தது. வாயைத் துடைத்துக் கொண்டு ஊதினாள்.

கண்ணில் இருந்து தூசி வெளியேறியது. ஒரு சின்ன பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிக் கொடுத்தாள்.

அவர் தூரமாய்த் தள்ளிப்போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தார்.

ஒரு முழு புட்டி சாராயமும், சமைத்த கறி துண்டுகளுமாய் கொண்டுபோய் இடிந்து சரிந்து கிடந்த குட்டிச்சுவருக்குப் பின் பக்கம் வைத்துவிட்டு வந்தாள்.

''நீ போ சீக்கிரம் குடிச்சிட்டு வா. யாராவது வரப் போறாங்க.. வேற சரக்குக் கிடையாது.''.

சுவருக்குப் பின் பக்கமாய் உட்கார்ந்து முழு போத்தலையும் காலியாக்கி விட்டு எழுந்தார்.

ஏற்கெனவே தகராறு செய்துவிட்டுப் போனவன் திரும்பவும் குயிலம்மாவோடு சச்சரவிட்டுக் கொண்டிருந்தான்.

'இன்னா குயிலு, எனக்குச் சரக்கு இல்லன்ற உள்ள இருந்து வர்றது யாரு மாமாவா..'' அவன் சிரித்தான்..

'யோவ் பாத்துப் பேசுயா, அப்பறம் மருவாதி கெட்டுப் போயிரும். மாமாவாமே... மாமா. தூ'' என்று உமிழ்ந்து அவள் முறைத்தாள்.

'பின்ன இன்னாமே செவுத்துக்கு அண்ணாண்ட பாத்தியா தொற மப்புல நிக்குறாறு. அவருக்கு மட்டும் சரக்கு இருக்குதா' குயிலம்மாவுக்குச் சுர்ரென்று ஏறியது.

'அவ்ளோதாய்யா இருந்துச்சு. அத அந்தாளுக்குக் குடுத்துட்டன். எடத்த காலி பண்ணு. போலிஸ் வரப் போவுது.'

கோபால் அவனை முறைத்துக் கொண்டு நின்றிருந்தார். அவருக்குப் போதை உச்சத்துக்கு ஏறியிருந்தது.

'சரி நீ போ... நீ எதுக்கு இங்க நிக்கற' என்று கோபாலை நகர்த்தினாள். வந்திருப்பவன் பெரிய போக்கிரி. வார்த்தைய விட்டு அடிதடி ஏதாவது ஆயிடுமோன்னு பயம் அவளுக்கு. வலுக்கட்டாயமாய் அவரைத் தூரமாய் தள்ளிக் கொண்டு போய் விட்டு வந்தாள்.

'போய்யா, போ. உம் புது பொஞ்சாதி நீ வருவியான்னு பாத்துகினு இருப்பா, போ...' என்று குத்தலும் நையாண்டியுமாய் அவளது வார்த்தைகள் வந்தது. அவர் தள்ளாடியபடியே குடிசைக்குப் போய்ச் சேர்ந்தார்.

பேய் காளி வெகுநேரம் குயிலம்மாவோடு சச்சரவு பண்ணிக் கொண்டிருந்தான். சாராயம் கேட்டு வந்தவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பிப் போய்க்கொண்டு இருந்தார்கள். அவன் மட்டும் அவளோடு தகராறு பண்ணிக் கொண்டு அவள் கையைப் பிடித்து இழுக்கப் போனான். அந்த நேரம் பாத்து ஒரு பையன் விழுந்து அடித்துக் கொண்டு ஓடிவந்தான்.

'எக்கா.. எக்கா... போலிஸ்... போலிஸ்...'' என்று கத்தினான்.

அவ்வளவுதான். பேய் காளி குட்டிச்சுவரைத் தாண்டி எகிறிக் குதித்து ஓடினான். சாராயம் குடிக்க வந்தவர்களும் சந்து பொந்துகளைத் தேடி ஓடினார்கள். பையன் மட்டும் ஓடாமல் தலையைச் சொரிந்துகொண்டு நின்றான். ஒரு கணம் பதறிப் போன குயிலம்மாவுக்குப் புரிந்துவிட்டது.

'இன்னாடா மெய்யாலுமா போலீஸ் வருது'' என்று படபடப்போடு கேட்டாள்.

'அட நீ ஒன்னு...கா அந்த ஆளு உன்ன டபாய்ச்சிகினு இருக்கிறான். அதான் மவன இவனுக்கு இதாண்டா வழின்னு சும்மா ஒரு அசாப் காட்னா இப்பிடி ஓட்றானுங்களே...'' பையன் குலுங்கி, குலுங்கிச் சிரித்தான்.

குயிலுக்கும் சிரிப்புத் தாங்க முடியல. அவளும்கூட குழந்தைபோலச் சிரித்தாள். 'தங்கன்டா நீ'' அவன் தலையைச் செல்லமாகத் தேய்த்துவிட்டாள்.

இடுப்பில் சொருகியிருந்த கைப் பையை எடுத்துத் துழாவினாள். காசை எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தாள். புது பித்தளை இருபது காசு அவன் கையில் திணித்துவிட்டு 'போ... எதனாச்சும் வாங்கித் துன்னு.''

அவன் காசை வாங்கிக் கொண்டு ஓடினான். தோசைக் கல் பையன் வாயில் எச்சில் சுரந்தது. குடிசைப் பகுதியில் கிழவியின் மாலை நேர வீதியோரக் கடைக்கு முன்னே அவன் ஓட்டம் முடிந்தது. மைதானம் மயான அமைதியில். அவளோ தனியாக எல்லாவற்றையும் பதுக்கிக் கொண்டிருந்தாள். இரவோடு இரவாக போய்ச் சரக்கு வாங்கியாற புறப்பட்டுவிட்டாள். குட்டிச் சுவருக்குப் பக்கத்தில் அவளது கணவன் போதையில் உளறிக் கொண்டும் அவளை ஆபாசமாக அழைத்துக் கொண்டுமிருந்தான். எரிச்சல் மிக்க வசவுகளுடன் தூ..வென்று துப்பிவிட்டு இருளில் கிளம்பினாள். இருட்டில் நடக்கும் வியாபாரம்தானே. இருட்டிலேயே புறப்பட்டு விட்டாள்.

குடிசைப் பகுதி இப்போது ரொம்பவும் நெரிசலான இடமாக மாறிவிட்டது.

கிராமங்களில் இருந்து ஒத்தையாளாய் வந்து சம்பாதித்தவர்கள் இப்போது குடும்பமும் குடித்தனமுமாய் ஆகிவிட்டார்கள். குடிசைகள் பெருத்துக் கொண்டே போனது.

மக்கள் கடுமையாக உழைத்துக்கொண்டும் குடிபோதையில்

சச்சரவிட்டுக் கொண்டும் கிடந்தார்கள். நாமெல்லாம் இப்படித் தான் என்று அவர்கள் தாமாகவே நம்பத் தொடங்கி விட்டார்கள்.

அவர்களைச் சுரண்டிப் பிழைப்பவர்களின் நுகத்தடி அவர்களை மூச்சுவிட முடியாதபடி அழுத்தி நசுக்கி அவர்களை அப்படி எண்ணும்படிச் செய்துவிட்டது.

வெள்ளையன் இங்கு வந்து இருக்கிறான் என்பதற்கு அடையாளமாகப் புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி ஏதோ தேவை யில்லாத கட்டிடம் போல் நின்று கொண்டிருந்தது.

அன்றைய காலைப் பொழுது மிகவும் விநோதமாக இருந்தது. மூலைக்கு மூலை மூவர்ணக் கொடி பறந்து கொண்டிருந்தது. ''அப்பாடா நம்மள பிடிச்ச பீடை இன்னையோட ஒழியப் போவுது'' என்று சொல்லிக்கொண்டு போனார் பெரியவர் ஒருவர்.

காங்கிரஸ்காரர்கள் கதராடை அணிந்துகொண்டு கம்பீரமாக ரோட்டில் நடந்து கொண்டிருந்தார்கள்.

தேநீர்க் கடையில் காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தது. ''காந்திய நீ பாத்துருக்கியா?'' ''அட நீ ஒன்னு அந்த மனுசன பாத்தா இன்னா, பாக்கலினா இன்னா, தாத்தா இன்னா சும்மாவா அவனவன் கத்தியும் கபடாவும் தூக்கினு திரியறா. இவர் இன்னாடானா... துன்ன மாட்ட, துன்ன மாட்டன்னு சின்ன கொழந்த மாதிரி அடம்பிடிச்சி தொரைங்களையே தொறத்திட்டாரப்பா'' அவன் ரொம்ப ஆச்சரியமாய் சொல்லிக் கொண்டிருந்தான்.

உள்ளே தேநீர் போடும் மாஸ்டர் திடீரென மூக்கை நுழைத்தார்.

''நீ அறிஞ்சு வச்சது. அவ்ளதாண்டா. மக்குப் பயலே, காந்திய பார்த்து சுதந்திரத்த குடுக்கறான்றது எல்லாம் சும்மா கதையடா கதை. இந்த மாதிரி சாந்தமான ஆளுகிட்ட நாட்டை ஒப்படைச்சா வெள்ளக்காரன் இங்க வச்சு இருக்கிற கோடிக்கணக்கான சொத்துகள் சேதாரம் இல்லாம் எடுத்துட்டு ராசா மாதிரி ஊர் போய்ச் சேரலாம். சண்டை போட்டு நாட்ட மீட்க நெனைக்கிறவங்க கிட்ட நாடு போச்சுன்னு வச்சுக்க. வெள்ளக்கார துண்டக் காணோம், துணியக்காணம்னு ஓட வேண்டியது தான். அதான் புத்தியோட காந்தி மாதிரி சாந்தமான ஆளு கையில் நாட்ட குடுத்துட்டுப் போறான்''

கேரளத்துக்காரர். ஒரு தனிவிதமான விளக்கம் கொடுத்தார். 'எப்படியோ நம்ம ஜனத்துக்கு விடிவு காலம் வந்தா சர்தான்''

அந்த நேரம் பார்த்து இரண்டு கருப்புத் துண்டுத் துணிகளைச் சட்டையில் குத்திக்கொண்டு இருவர் வந்தார்கள்.

'விடிவு ஏது? இனிதான் பழைய சனியன் நம்ம தலையில ஏறி உக்காரப் போவுது.''

நான் தொரைகிட்ட டிரைவரா இருந்தவரைக்கும் சட்டைக்கு நெருப்புப் பொட்டி போட்டுகினுதான் போவணும். பூட்டுக்கு பாலீஸ் போடாம போவக்கூடாது. தலையில் தொப்பி இருக்கணும். நான் சர்ச்சுக்குப் போவலன்னு தெரிஞ்சா அந்த ஆளு அடிக்கக்கூட வருவாரு. இப்ப... அந்த ஆளு அடுத்த மாசம் கப்பல் ஏறப் போறான். 'எல்லா பழையக் குருடி கதவத் தொறடி கத தான். நெஞ்சில் படபடத்தக் கருப்புத் துணியைத் தொட்டு பார்த்துக்கொண்டான்.

லேசாகத் தொண்டையைச் சொருமிக்கொண்டு, 'பழையபடி வேதாளம் முருங்கமரம் ஏறப் போகுது. போல் பீடை இனிதான் பிடிக்கப்போவுது'என்றவன், உஷார் என்பதுபோல ஆள்காட்டி விரலால் சைகை காட்டினான்.

ஏற்கனவே பேசிக் கொண்டிருந்தவர்களை இளைஞர்களின் பேச்சு திணற வைத்தது.

'நம்ம உள்ளூர் தொரைங்க நம்மல கோயிலுக்குள்ள விடுவாங்களா. இல்ல கால்ல செருப்புப் போட்டுக்க ராசான்னு தான் சொல்லுவாங்களா. தோள்ல இருக்கிற துண்டை இடுப்புலக் கட்டிக்கணும்பா... புரிஞ்சிக்க...''

'சரியா சொன்னப்பா, நல்லா சொல்லு நம்ப தம்பிங்களுக்கு.'' கேரளத்துக்காரர் சபாஷ் போட்டுச் சிரித்தார்.

'தம்பிகளா பட்டணத்துலயே இருந்தீங்கன்னா இப்படிதான் பேசுவீங்க. கொஞ்சம் கிராமம் பக்கமா போய்ட்டு வாங்க. அங்க நம்மாளுக்கு நல்லா சாணிப்பால் பாயாசமும், சவுக்கடி தோசையும் குடுக்கிறாங்க...'' என்று சொல்லிவிட்டு இருவரும் போய் விட்டார்கள்.

''உம் படிக்கிறானுங்க அதான்... பேசக் கத்துக்கிட்டாங்க. தொடையில் தட்டியபடி ஒரு பெரியவர் சொன்னார். சேரி முழுக்க மூவர்ணக் கொடி தோரணங்கள் சனங்களின் தலைக்கு மேலாக படபடத்தன. பாரதத்தின் நிலம் சுதந்திரமடைந்துவிட்டது. உண்மைதான். ஆனால் அந்த நிலத்தில் உழைத்து ஓடாய் சருகாய் உருக்குலைந்து கிடக்கும் நசுக்கப்பட்ட மக்கள் விடுதலை

எப்போது என்று ஒவ்வொரு அறிவார்ந்த மனிதனின் நெஞ்சிலும் கேள்வி எழுந்தது.

பலவிதமான கேள்விகளோடு அன்றைய முதல் நாள் போய் மறுநாளும் உதயமானது. அன்றைய பொழுதின் பகல் சூடு அதிகமாகவே இருந்தது. தூரத்தில் எங்கோ பொசுங்கும் நாற்றம் மக்கள் இரைச்சலிடும் ஓசையும் கேட்டது. குடிசைகளில் இருந்தவர்கள் வெளியே வந்து பார்த்தபோது மேகத்தைத் தொடுவது போல் கரும் புகை உயரமாக வளர்ந்திருந்தது.

குடிசைகள் பற்றி எரிவதற்கான அடையாளம் அது. அய்யோ ஓடுங்க பத்திகினு எரியுதே. ஒரு பெண் மார்பில் அறைந்து கொண்டு அலறியபடி ஓடினாள்.

காற்றும் வெப்பமுமாய்ச் சேர்ந்து பெரும் பகுதியை எரித்து நாசமாக்கியது. சேரி முழுவதும் ஒருசில குடிசைகள் தவிர எல்லாம் கருகிப் போய்விட்டன. சின்னஞ்சிறு உடைமைகள் கூட போன துக்கத்தில் மக்கள் அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

'சுதந்திரம் வந்தா இன்னா, போனா இன்னா நம்ம பொழப்பு எல்லாம் இப்படித்தான்யா என்ற முணுமுணுப்பு கேட்டது.

சனங்கள் மிச்சம் மீதி சாமான்களோடு எதிர் மைதானத்தில் தஞ்சம் புகுந்திருந்தார்கள்.

வழக்கம்போல் கிறித்துவப் பாதிரிகள் பழைய துணிகள், பால் பவுடர், இன்னும் வேறு சிலதுகளுடன் மக்களுக்கு ஆறுதல் சொல்லவும் முடிந்த அளவு நிவாரணம் தரவும் வந்தார்கள். கூடவே கணத்த பைபிள்களும், மக்களுக்கு விநியோகிக்க சின்னஞ் சிறு பிரசுரங்களும் வந்தன.

கட்சிக்காரர்கள் தங்கள் பங்குக்கு ரொட்டித் துண்டுகளும் பாலும் கூட கொடுத்துவிட்டுப் போனார்கள். துயரம் மறந்து சனங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் எரிந்த குடிசைகளைச் சரி செய்துகொண்டு தங்களது பழைய இடங்களுக்குத் திரும்பினார்கள்.

பல குடிசைகள் தென்னை ஓலைக்குப் பதில் தகரத்தால் வேயப்பட்டது. தீ பிடிக்காமல் இருக்க எத்தனை பேருக்கு அது சாத்தியம். எரிந்த சேரி ஒரு துயரமான ராணுவத்தின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடும் அகதிகளின் முகாம் போல மெதுவாக உயிர்பெற்றது.

நாட்கள் ஓடின. ஒவ்வொருவராகக் குடிசைகளைக் சரி செய்துகொண்டு மைதானத்தைக் காலி செய்தார்கள்.

ஏனோ கோபால், அரிசிக்காரர், கிராமத்தார் ஏகாம்பரம் வகையறாக்களுக்குக் குடிசைகளுக்கு எதிரில் சாலையைத் தாண்டி இருந்த மைதானத்தில் புதிய குடியிருப்பை ஏற்படுத்தும் யோசனை வந்தது. அதுவும் பெரிய மைதானமாய் இருந்தது. மைதானத்தின் தெற்கு மூலையில் சமதளமாகவும் பெரிய கம்பெனியின் வேலிச்சுவர் இருபது அடிக்கு உயர்ந்து ஒரு பாதுகாப்பாகவும் இருந்தது.

அந்தச் சுவர் ஓரமாக இவர்கள் விசாலமான இடங்கள் பிடித்துக்கொண்டு, 'இங்கேயே இருந்துருவம்யா, அங்க போய் வருஷத்துக்கு நாலுதரம் இங்கு ஓடியாறதும், ஓடுறதுமா எதுக்கு'' என்றார் முனுசாமி.

குடிசைய கொஞ்சம் ஒசரமா ஏத்திக் கட்டுவோ ஆலோசனை சொன்னார் ஏகாம்பரம்.

வரிசையா பத்து குடிசைகள் பெரிய கம்பெனியின் வேலிச் சுவரை ஒட்டி எழுந்து நின்றன. வழக்கமான சிறுகுடிசைகள் போல் இல்லாமல் பெரிதாகவும் விசாலமாகவும் வேலி சுவருக்கும் குடிசைக்கும் இடைவெளி விட்டுப் பின் பக்கம் துவைக்க குளிக்க இடம் விட்டு, வசதியாகக் கட்டிக்கொண்டார்கள். ஓரளவ காசு புழங்கும் ஆட்கள்தானே.

உருவான சேரிக்குப் புது ஜெகநாதபுரம் என்று பெயர் சூட்டப்பட்டது. தெருமுனையில் காங்கிரஸ் கொடி, பிறகு கருப்புக் கொடியில் சிவப்பு வட்டம் போட்ட கொடி, பிறகு செந்நிற கம்யூனிஸ்ட் கொடி பறக்க ஆரம்பித்தன.

பிறகு படிப்படியாகக் குடிசைகள் வளர்ந்து கொண்டு போனது. கூச்சலும், சச்சரவும் நெரிசலும் வழக்கம்போல கோபால் இருந்த தெரு முதல் என்று கணக்கு வைத்து ஐந்து தெரு வரை ஒரு வரிசையாகவும் தெளிவாகவும் சேரி அமைந்திருந்தது. பிறகு தான்தோன்றித்தனமாய் கும்பல் கும்பலாகக் குடிசைகள் வந்து சேர்ந்தன.

கிராமத்தார் ஏகாம்பரம் குடித்தனமும் கோபாலின் குடித்தனமும் ஒரே கூரையின் கீழ் இருந்தது. ஒருகூரை இரண்டு குடும்பங்கள். ரத்த உறவுகளைப் போல இருவருக்குள்ளும் சகோதரத்துவம் கிளைத்திருந்தது.

சேரியின் தோற்றம் முழுமைபெற குயிலம்மா சாராயம் பதுக்கவும், தான் பதுங்கிக் கொள்ளவும் ஒரு குடிசையை கட்டிக் கொண்டாள். குடித்தனக் குடிசைகளில் இருந்து கொஞ்சம் தள்ளி–யிருந்தது அவளது குடிசை.

அந்தப் புதிய சேரியில் ஏற்பட்ட நல்ல விஷயமாக இரவு பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. நான்கைந்து இளைஞர் அதைத் தொடங்கி நடத்தினார்கள்.

ஊருக்கு அது புதுமையான திட்டமாய் இருந்தது. பையன்களும் சிறுமிகளும் அங்கு போய்ப் படிப்பதும் பொங்கல் போன்ற பெரிய பண்டிகைகளின்போது கலைநிகழ்ச்சிகள் நடத்தவும், நாடகம் போடவுமாக இரவு பாடசாலை புதுமையாக இயங்கியது.

என்ன இருந்து என்ன?

குடிசைகளுக்குக் கொஞ்சம் தள்ளி குப்பைகளைக் கொண்டுவந்து கொட்டத் தொடங்கினார்கள். நகரத்தில் சேகரிக்கப்படும் குப்பையில் பாதி அங்கு வந்து கொட்டப்படும். அதில் வரும் துர்நாற்றம், உற்பத்தியான கொசு எல்லாம் குடிசை மக்களைப் பத, பார்த்தன. குடிசைகள் இருக்கும் பகுதியைத் தேடி வந்து குப்பையைக் கொட்டும் போக்கு வெள்ளையன் போன பிறகும் மாறாமல் இருப்பதுதான் வேடிக்கை.

கார்ப்பரேஷன் இதைத் திட்டமிட்டுச் செய்கிறதா என்றுகூட தோன்றுகிறது. இந்த மக்கள் இருக்கும் பகுதியில் தான் கொண்டு வந்து கொட்ட வேண்டுமா? என்று எதிர்த்துக் கேட்க ஆள் இல்லை. அரசாங்கங்கள் கூட இந்த மக்களிடம் அடாவடித் தனமாகத்தான் நடந்து கொள்கிறது. அதற்குக் காரணம் அதிகாரத்தில் இருப்பவர்கள் ரத்தத்தால் கால காலமாக ஊறிப் போய்க் கிடக்கும் எளிய மக்கள் மீதான அலட்சியம்தான்.

குப்பைகள் மலைபோல் எழுந்து நின்றது. அதைப் பொறுக்கிக் காசு பார்த்து வயிற்றை நிரப்பும் மக்களும் வந்து சேர்ந்தார்கள். தொழிலுக்கு வசதியாக அவர்களும் குடிசைகளைப் போட்டுக் கொண்டார்கள். சேரி தனது முழுமையான அலங்காரத்துடன் வளர்ந்துகொண்டே போனது. குப்பைகள் மீதும் குடிசைகள் எழுந்தன. அந்தப் பகுதி சனங்கள் குப்பை மேட்டுச் சனங்கள் என்றே அழைக்கப்பட்டனர்.

குடிசை, குடி, கொடி, கோயில், குப்பை என்று வளரும் அதேவேளையில், நாகம்மாள் தனது இரண்டாவது பெண்

குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தை அப்பா கோபாலைப் போல கறுப்பு இல்லாடாலும் அவன் ஜாடையில் இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். ஊரில் இருந்து அம்மா வந்துவிட்டாள், பேத்தியைக் கவனித்துக் கொள்ள. குழந்தை தவழ்ந்து தத்தி, நடக்க முயன்றது. அம்மாவிடம் இருப்பதைவிடவும் பாட்டியிடம் நன்றாக ஒட்டிக்கொண்டது.

குழந்தை நடக்கத் தொடங்கியதும், பாட்டி சாரதான்னு பெயர் வைத்தாள். பிறகு குழந்தையைப் பிரிய மனமில்லாமல் ஒருநாள் ஊருக்குப் புறப்பட்டுப் போனாள்.

நாகம்மாளின் கையில் நல்லவிதமாகக் காசு புழங்கியது. சும்மா இருக்கமுடியாமல் ஆப்பக்கடை போட்டாள். நாலு தெரு சனம் வந்து குவிந்துவிட்டது. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் ஆப்பக் கடையை அவளும் அவளை ஆப்பக்கடையும் இறுக்கப் பிடித்துக் கொண்டார்கள்.

அவளது உறவுக்காரப் பொடியன் ஒருவன் அவளோடு தங்கிக் கொண்டான். அவனை இட்லி விற்றுவர தோதாக்கிக் கொண்டாள் அவள்.

புது ஜெகநாதபுரத்தில் மூன்று வேளையும் அடுப்பெரியும் ஒருசில வீடுகளில் நாகம்மாளின் குடிசையும் ஒன்று. ஆப்பக் கடை அமோகமாக நடந்தது. குயிலம்மாவைத் தவிர அவளது கடைக்கு வராத ஆட்களே கிடையாது.

குயிலம்மா கோபால் உறவு இப்போது ஊரார்க்கு வெளிச்சமாகிவிட்டது.

இப்போது ஜெகநாதபுரமும் ஒரு ஊருக்குரிய தகுதிக்கு வந்து விட்டது.

கோபால், அரிசிக்காரர், காங்கிரஸ்காரர் மூவருமே கிராமத்தின் பெரிய ஆட்கள் ஆகிவிட்டார்கள். பட்டணத்தில் தான் ஜெகநாதபுரம் இருந்தாலும், ஒரு கிராமத்துக்குரிய கட்டுப்பாடும் நடைமுறைகளும் வழக்கத்தில் இருந்தது.

காங்கிரஸ்காரரான ஏகாம்பரம்தான் மூத்தவர். எனவே, அவரே கிராமத் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார். அவருக்குச் சொந்தமாய் இரண்டு மாட்டு வண்டிகள். பார்வைக்கு அசல் காமராஜரைப் போன்ற கம்பீரமான தோற்றம். கபடமில்லாத கலகலப்பான மனிதர். நெடு நெடு உயரம். விடு விடுன்னு நடை கோபாலுக்கும் அவருக்கும் நட்பைத் தவிர வேறு எந்த

உறவும் இல்லாவிட்டாலும் உடன்பிறந்தவர்களைப் போன்ற நெருக்கத்துடன் பழகிவிட்டார்கள். பார்ப்பவர்களுக்கு இருவரும் உறவுக்காரர்கள் என்றே நினைக்க தோன்றும். கிராமத்தில் இருந்து நகரத்திற்கு அவர்கள் கொண்டு வந்த சொத்து அது.

கோபால் மொடா குடியராக இருந்த போதும் ஏகாம்பரம் மிதமான குடியராகவே இருந்தார். அவர் அப்படி அடக்கி வாசித்ததற்குக் காரணம் அவரது வீட்டுக்காரம்மாவின் கண்டிப்பு. அந்த அம்மாளை ஊரே சாமியம்மா என்றுதான் கூப்பிட்டது. பார்வைக்கு நல்ல கலையான தோற்றம். கணவன் குடித்துவிட்டிருந்தால் நையப்புடைத்தெடுக்கும் வேலையும் நடக்கும். அதன் காரணமாகவே அவர் அடங்கியிருந்தார் என்று சொல்லலாம்.

காலம் வேகமாக உருண்டது. நாகம்மாள் அடுத்ததாக ஒரு மகனையும் பெற்றாள். மூன்று குழந்தைகளுக்கும் தாராளமாக செலவு செய்ய போதுமான வருவாய் இருந்தது. பையனுக்குச் செல்லமோ செல்லம். உருப்படாமல் போவதற்கு எவ்வளவு செல்லம் கொடுக்க முடியுமே. அவ்வளவு செல்லம் கொடுத்து வளர்த்தார்கள்.

மூத்தவளைப் பருவமடைந்த அடுத்த மாதத்திலே தன் வீட்டில் தங்கியிருந்த மச்சானுக்குக் கல்யாணம் முடித்து ஊருக்கு அனுப்பி வைத்தார். நாகம்மாளின் பாரம் ஒன்று குறைந்ததுபோல் இருந்தது. அவளுக்கு நிம்மதியாய் இருந்தது. அந்த நிம்மதியைக் குலைத்துவிடும் நாளும் வந்தது.

ஆப்பக் கடையை முடித்துக்கொண்டு காய்கறி வாங்க பட்டாளம்போய் வரும் வழியில் மயங்கி விழுந்த நாகம்மாளைத் தெரிந்தவர்கள் கை வண்டியில் அள்ளிப் போட்டுக்கொண்டு வந்தார்கள். கோபாலுக்கு ஆள் அனுப்பிவிட்டுப் பக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப்போனார்கள். பிறகு தொடர்ந்து இப்படியே நடந்து கொண்டிருந்தது.

நாகம்மாளின் உடம்பில் பழைய மினுமினுப்பெல்லாம் போய் விட்டது. எல்லாவிதமான முயற்சியும் செய்து பார்த்தாகிவிட்டது. நிலைமை மாறவில்லை. நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டே வந்தாள். ஆப்ப சட்டிக் கீழாக எரிந்து சுடும் அனல் அவளைத் தீய்த்தது. உள்ளமோ குயிலம்மாவால் குத்திக் காயப்படுத்தப்பட்டு மெலிந்து நலிவடைந்துகொண்டு வந்தாள். அந்தாளுக்கு மூணு

புள்ளகளைப் பெத்ததத் தவிர வேற என்னத்தக் கண்ட. குடியும் கூத்தியுமா திரியுறாரு. மூஞ்சி தனியாத அந்த ஆளுகிட்ட யார் கேக்கறது. அவள் உள்ளுக்குள்ளே புகைந்துக்கொண்டாள்.

குயிலம்மாவுடன் தன் கணவனின் உறவு பற்றிய சனங்களின் பேச்சு நாகம்மாளைப் பெரிதாய் வாட்டி எடுத்தது. வாய் திறந்து கேட்கத் துணிவும் இல்லை. பொறுத்துப் போகும் மனமும் இல்லை. நெஞ்சுக்குள்ளேயே புழுங்கினாள். போதாக்குறைக்கு கல்யாணமாகிப் போன மூத்தவளும் கணவனோட சண்டை பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். இதெல்லாம் சேர்ந்துநாகம்மாளை வாட்டியெடுத்தது.

குயிலம்மா திண்ணைகள் வைத்துக் கட்டிய எடுப்பான குடிசை கட்டிக்கொண்டு ஊரோடு சேர்ந்து வாழ்ந்தாள். வெகுகாலம் மைதானத்தின் மூலையில் குட்டிச் சுவர்களுக்கு பின்பாகப் பிழைப்பு நடத்திக்கொண்டிருந்தவளுக்குக் கோபால் உறவு ஒரு அங்கீகாரம் போல் ஆனது.

கழுத்திலும் காதிலும் தங்கம் மினுமினுத்து முன்பை விடவும் அலங்காரமாய் இருந்தாள். அவளோட புருஷன் எப்போதும் போதையிலேயே விழுந்து கிடந்தான். தெளிந்ததும் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போவான். அங்கு அவனுக்குப் பிணம் அறுக்கும் வேலை. போஸ்ட்மார்டம் செய்யும் மருத்துவர்களுக்கு உதவியாக அந்த வேலையைச் செய்து வந்தான். மது அருந்த அவனுக்கு அரசாங்கமே அனுமதி கொடுத்திருந்தது. பட்டணத்துக் குடியர்களில் இருபத்தி நாலு மணி நேரமும் போதையில் இருப்பது அவன் ஒருவனாகத் தான் இருப்பான்.

பாட்டுப்பாடி ஆட்டம் போட்டபடியே பெண்டாட்டிய எல்லார் முன்னாடியும் கட்டிப்பிடித்து முத்தமிடுவான். அவளோ அவனைப் பிடித்துத் தூர எறிவாள். ஆபாச வார்த்தைகளால் வசைமாறி பொழிவாள். அவனோ சிரிப்பாய்ச் சிரிப்பான். பாட்டாய் பாடுவான். அப்படியே விழுந்து தூங்கிப் போவான்.

குயிலம்மாவைத் தவிர அவனை எல்லோருக்குமே பிடிக்கும். 'என்ன எழவோ சாராயத்தை ஊத்தி, பீடி கட்டு வாங்கிக் குடுத்து, தண்டச்சோறு போட்டு வச்சு இருக்கறதுக்குன்னே என் தலையில கட்டி வச்சு பூட்டாங்க பாவி மக்கா..." என்று சபிப்பாள்.

அவள் அப்படிப் பேசுறத கேட்டு அவனுக்குக் கோபம் வந்ததே கிடையாது.

அவன் உடம்புல ரத்தம் ஓடல. சாராயம்தான் ஓடுதுன்னு சனங்க பேசிக்குவாங்க.

சாராயம் விற்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. சுதந்திரத்துக்குப் பிறகு பணபலமுள்ள நிறைய வியாபாரிகள் வந்து விட்டார்கள்.

குயிலம்மாவுக்குப் பல தொல்லைகள். அத்தனையும் சமாளித்துக் கொண்டு அவள் திருட்டுத்தனமாச் சாராயம் விற்றாள். அதுக்கு ஒரே காரணம், கோபால். அந்த ஒரு வாடிக்கையாளருக்காக அவள் பல சிரமங்களுக்கு மத்தியில் சாராய பந்துகளைத் தூக்கிக்கொண்டு சந்து பொந்துகளில் பதுங்கித் தொழிலை நடத்தினாள்.

இருள் கவிழத்தொடங்கியது அக்கம் பக்கத்துக் குடிசைகளில். மங்கிய ஒளிவீசத் தொடங்கயது. குடியர்கள் அந்தக் குறுகலான சந்துகளில் வந்து குவியத் தொடங்கினார்கள். சிந்திச் சிதறும் சாராயத்தின் வாடை வீசத் தொடங்கியது. பாதையின் ஒரு ஓரமாக வயதானவள் கறி, மீன் துண்டுகளைப் பொறித்துக் கொண்டும் வாடிக்கையாளர்கள் தரும் சில்லறைக் காசுகளை மண்ணெண்ணை விளக்கொளியில் காட்டிச் சரி பார்த்தும் வியாபாரம் செய்து கொண்டிருந்தாள். கிழவியென்று அவளை யாரும் ஏமாற்றிவிட முடியாது.

கோபால் இந்த நேரத்திற்கெல்லாம் வந்து இருக்க வேண்டியது. ஏனோ வரவில்லை. தண்ணி கலக்காத சுத்தமான சாராயத்தை ஒரு போத்தலில் ஊற்றி தலைக்கு மேலாகக் சூரையில் கட்டித் தொங்க விடப்பட்ட பலகையில் வைத்து மறைப்புக்காக ஒரு துணி மூட்டையை எடுத்து வைத்தாள்.

இருட்டில் உட்கார்ந்திருக்கும் பேய் காளி இதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஓசி சாயராயத்துக்காக அவன் உட்கார்ந்து கொண்டு அங்கு நடப்பதைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். முன்பே காசில்லாமல் நூறு மில்லியை விழுங்கியிருந்தான்.

மீண்டும் ஏதாவது கிடைக்காதா என்று காத்திருந்தவனுக்குப் புரிந்துவிட்டது. கோபால் மேஸ்திரிக்குத் தான் அவள் எடுத்து வைக்கிறாள் இன்னைக்கு ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று மனதுக்குள் குமுறினான். அவள்மீது அவனுக்குத் தணியாத ஆசை இருந்தது. அதற்கான நேரத்தைத் தேடிக்கொண்டிருந்தான். குயிலம்மா கோபால் உறவு அவனுக்குள் பொறாமை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. இருட்டில் அவன்

உட்கார்ந்திருப்பதை அவள் கவனிக்கவில்லை. அவன் ஓசி சாராயத்துக்காக மட்டும் வரவில்லை. தன்னிடம் வேறு ஒன்றும் அவன் எதிர்பார்க்கிறான் என்பதும் அவளுக்குத் தெரியும். அது அவளுக்கு எரிச்சலைத் தந்தது. அந்த முரடனைக் கண்டு அவள் அச்சமடைந்திருந்தாள்.

குயிலம்மாவின் இதயம் பரிசுத்தமானது என்று சொல்வதற்கில்லை. என்றாலும், அந்த இதயத்தில் கோபால் என்ற கருப்பு மனிதன் கம்பீரமாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

பேய் காளி இருட்டில் பல்லை நற.. நற...வென்று கடித்துக் கொண்டும் கோபமாய் எச்சிலை உமிழ்வதுமாக இருந்தான்.

குயிலம்மா, குறுகலாகக் குடிசைகளின் ஊடே நெளிந்துப் போன சந்தையைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கோபாலைத் தேடுகிறாள் என்ற எண்ணம் பேய் காளியின் வெறியை அதிகப்படுத்தியது.

தள்ளாடியபடியே நடந்து அவள் முன் பாகம் பெயருக்கேற்றபடி நின்றான்.

பேய்ப் போல தன் முன்னாடி நிற்பவனைப் பார்த்ததும் குயிலம்மாவுக்கு எரிச்சலாய் வந்தது. பயத்தில் தன்னைத் தைரியப்படுத்திக் கொள்ள சத்தமாய் எச்சிலை உமிழ்ந்தாள்.

அவன் கண்களை உருட்டிக்கொண்டு வெறியோடு பார்த்தான்.

'போய்யா, போ, போய்த் தொலை. எதுவும் இல்ல. சரக்குத் தீந்துப் போச்சு'' என்று விரட்டினாள்.

'இன்னாமே, வித்தையா காட்ற. வச்சுக்கினு இல்லன்ற. உள்ள புருஷன தூங்க வச்சுட்டு வெளிய மேஸ்திரிக்காகக் காத்துக்கினுக் கீறியா'' என்று ஆபாச வார்த்தையால் சீண்டினான்.

அவளுக்குக் கோபம் பொங்கி வந்தது. ஆவேசமாய் எழுந்தவள் அவன் முகத்தில் காரி உமிழ்ந்தாள்.

''மான மருவாதி கெட்டுப் போய்டும் நாயே போய் தொலைடா...'' என்று ஆபாசமாய்க் கத்தினாள்.

'ஓசி சாராயத்துக்கு நாக்க தொங்க போடுற நாயி பேச்சு பேசறான்.'' என்று நெஞ்சு குலுங்க இரைந்தாள்.

உடம்பே பற்றிக் கொண்டு எரிவது போல் இருந்தது அவளுக்கு.

அவன் அப்படியே மரம் போல் நின்றுவிட்டான்.

அவள் போராட பலமில்லாதவள் போல போய் உட்கார்ந்து

கொண்டாள். அவள் தலைக்கு மேலாக ஊஞ்சல் போல் தொங்கிய பலகை ஆடியது.

இரண்டு எலிகள் பலகையில் ஓடி விளையாடின. அவற்றை விரட்டக்கூடத் தோன்றாமல் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

மேஸ்திரிக்காகக் காத்துக்கினுக்கீறியா... என்ற வார்த்தை அவள் நெஞ்சைப் போட்டு உலுக்கியெடுத்தது. அவளை அவமானம் பிடுங்கித் தின்றது.

தன் எதிரே மிருகம்போல உருமிக்கொண்டு நிற்கும் மனிதனைப் பார்த்தாள். ஒரு கணம் அவளது உடல் நடுங்கியது.

வாடிக்கையாளர்கள் யாருமற்று சந்து அமைதியாக இருந்தது.

கறி, மீன் விற்கும் கிழவியும் வியாபாரத்தை முடித்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

குயிலம்மாவுக்குப் பக்கத்தில் திரிவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் மங்கிய ஒளியில் பலகையில் ஒளித்து வைக்கப்பட்ட போத்தல் மின்னியது.

காளி ஒரு பதமான கல்லை எடுத்து போத்தலை குறிவைத்து அடித்தான். பலாங்... என்ற ஓசையுடன் போத்தல் உடைந்து சிதறியது. சுத்தமான சாராயம் பூராவும் குயிலம்மாள் தலைமீது கொட்டியது. சாராய வாடை குப்பென்று அடித்து அவனை வெறிபிடித்த பேயாகவே ஆக்கிவிட்டது. கொடிய பேய் அவனுள் புகுந்து கொண்டதோ என்பது போல் கடுமையாக தொண்டையைச் செருமி எச்சிலைத் தூரத் துப்பினாள்.

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் திகைத்துப் போய் அமைதியாகக் கிடந்தாள். அவனோ தீ பெட்டியைக் குலுக்கி ஒரு குச்சியை எடுத்து உரசினான். எமனின் ஒற்றைக் கோரைப் பல் போல சுடர்ந்து எரிந்தது தீக்குச்சி. அதைக் குயிலம்மா மேல் வீசியெறிந்து விட்டு இருளில் எங்கோ போய் மறைந்தான். தீ அவளைச் சூழ்ந்து கொண்டது. அந்த உயிர் போராட்டத்தாலும் அடர்ந்து எரியும் சேலையை உருவித் தூர எரிந்தாள். அது தாழ்வாக இருந்த குடிசை தன் நாவால் நக்கி கொழுத்த நெருப்பை உண்டாக்கியது. அந்தக் கணத்தில் நம்பிக்கை இழந்து பெரும் குரலெடுத்துக் கத்தினாள். ஆனால், அந்த நெருப்புக் கோளத்திற்கு வெளியே கருத்த குயிலம்மாவின் குரல் கேட்கவேயில்லை. அடங்கிப் போனது. ஐந்து குடிசைகள் எரிந்து சாம்பலானது. எரிந்த குடிசையில் சிக்கி

இறந்துவிட்டாள் என்று ஊர் பேசிக் கொண்டது.

மதுவிலக்கைப் பற்றி பேசி அகிம்சை மகாத்மாக்களின் நாட்டின் குடிமகன் குயிலம்மா கணவன் போதையில் சுயநினைவற்றுச் சுருண்டு கிடந்தான்.

சாம்பலான குடிசைக்கு எதிரே பறை அடித்துக் கொண்டிருந்தார்கள். ஏற்ற இறக்கங்களோடு அதன் பற... பற... ஓசை ஒலிக்க இரண்டு வேலையற்ற இளங்குடியர்களும் ஒரு முதிர் பெருங்குடியனுமாகச் சேர்ந்து மேள சத்தத்துக்க ஏற்றபடி துக்க நடனமாடிக் கொண்டிருந்தார்கள். நடனமுடிவில் போதை ஒருவரை ஒருவர் ரத்தம் வரும் அளவு தாக்கிக் கொண்டு பிறகு கலைந்து போனார்கள்.

கறி, மீன் கடை வைத்திருக்கும் கிழவி மார்பில் அறைந்துகொண்டு பலவீனமான குரலில் விசும்பி, விசும்பி அழுது கொண்டிருந்தாள். அழும்போது ஒப்பாரிப் பாட்டு பாடினாள்.

குயிலம்மாள் உயிரோடு இருந்த காலத்தில் அவள் காதுகளில் இதுபோன்ற வார்த்தைகள் விழுந்து இருந்தால், சொர்க்கத்தில் உலாவுவது போல் ஆனந்தமடைந்திருப்பாள். பாவம் தீய்த்த கரி துண்டாய்க் கிடக்கையிலே பாடினார்கள். ஆடினார்கள், அழுதார்கள், பிறகு எல்லாருமாய்ச் சேர்ந்துகொண்டு போய் புதைத்துவிட்டு வந்தார்கள். ஒருசில நாட்களிலேயே அவளை எல்லோரும் மறந்தும் போனார்கள்.

சிலகாலம் கழித்துப் பேசவும் செய்தார்கள். அவள் அந்தக் குடிசையில் ஆவியாய் உலாவுவதாக. குயிலம்மாவைப் பற்றிக் கதை கதையாகப் பேச்சு குசுகுசுக்கப்பட்டது.

அவளை ஆவியாக்கி பேய்க் கதை நாயகியாக்கிவிட்டார்கள். மாலையானதும் குழந்தைகளை அந்தக் குடிசை பக்கம் போகாதே என்று பயமுறுத்தவும் செய்தார்கள்.

எந்தக் குழந்தைக்காவது காய்ச்சல் வந்தால் அந்தப் பாழ் குடிசையில் போய் விளையாடியதால் வந்த வினைதான் என்று நம்பி கிராமத்தார் மனைவி சாமியம்மாவிடம் போய் வேப்பிலை அடித்துக் கொண்டு வந்தார்கள்.

குயிலம்மா இப்போது பெண்கள் மத்தியில் துர்தேவதையாகி விட்டாள்.

சாராயக்காரியின் குடிசை குட்டிச் சுவராகி பரிதாபமாய் எலும்பு துருத்திக் கொண்டு நிற்கும் கிழட்டுப் பூதம் போல் இருந்தது.

பார்வையிழந்துவிட்ட கிழட்டுப் பூனைபோல சாராயக்காரியின் கணவன் தெருவெங்கும் சுற்றி அலைந்தான். அவனுக்கு மனம் பேதலித்து விட்டது.

கோபால் மிக பெரிய அளவில் மனமுடைந்து துயரத்தில் சிக்கித் தவித்தார். ஆறுதலற்ற அனாதை போல மறைவில் கண்கலங்க குயிலம்மாவுக்காக ஏங்கினார். அவள் கைபடாத சாராயம் அவருக்கு வெறும் பச்சைத் தண்ணிபோல இருந்தது. திருப்தியற்றவராகக் குடல் நிறையக் குடித்தார். அவரது தொண்டையில் சாராயத்தின் காரம் தீண்டவில்லை. குயிலம்மாவின் மறைவு அவரைப் புயற்காற்றாய் சூறையாடியது. எந்த நேரமும் அவள் நினைவாகவே இருந்தார்.

அங்கீகாரம் இல்லாத வேட்டைக்காரன். விலங்கு இல்லாத காட்டுக்குள் பரிதாபமாகத் திரிவதுபோல் இருந்தது கோபாலின் நிலை. கடுங்குளிரில் போர்த்துக் கொண்டிருந்த போர்வையை யாரோ வெடுக்கெனப் பிடுங்கி தூர எறிந்துவிட்டது போன்ற ஒரு தவிப்பில் கோபால் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

கடுகடுப்பான அவர் முகத்தில் துயரம் படர்ந்து தளர்ந்து போய் உயிரற்றது போல் இருந்தது. யாரிடமும் பேசாது மௌனமாய் இருந்தார். எப்போதும் குயிலம்மா பற்றிய எண்ணங்கள் அவரைத் துரத்தியது. உயிரோடு இருந்த காலத்தை விடவும் இப்போது அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

நாகம்மாளுக்கும் அவருக்குமான தொடர்பு குறைந்துபோய் விட்டது. வீட்டுக்கு வருவதைக் குறைத்துக் கொண்டு வேலை பார்க்கும் கிடங்கிலேயே தங்கிவிட்டார். ஆட்களிடம் பணமும் எப்போதாவது பலகாரங்களும் வாங்கிக் கொடுத்தனுப்புவார்.

நாகம்மாளின் மூத்தமகள் கணவரிடம் கோபித்துக் கொண்டு வந்திருந்தாள். அவளும் இப்போது நிறைமாதக் கர்ப்பிணி. மனைவியை அழைத்துப்போக வந்த அவளது கணவன் இப்போது மாமியார் வீட்டிலேயே நிரந்தரமாய்த் தங்கிவிட்டான்.

நாகம்மாளின் குடிசை ஆட்களால் நிரம்பி வழிந்தது. ஏற்கனவே தனக்கு எடுபிடி வேலை செய்ய ஊரில் இருந்து இரண்டு உறவுக்கார பையன்கள் வந்திருந்தார்கள்.

சிறு குழந்தைகளாக இருந்த சாரதாவும், மணியும் அனைவருக்கும் செல்லக் குட்டிகளாகி விட்டார்கள்.

எல்லோர் தோளிலும் சவாரி செய்து கொண்டிருந்தான் மணி.

செல்லமே அவனைக் கெடுத்து குட்டிச் சுவராக்கி விட்டது.

குடிசைகளில் இருந்த தனக்கு இணையான பையன்களோடு சேர்ந்து பீடி புகைக்கத் தொடங்கிவிட்டான். அம்மாவின் சில்லரை நிறைந்த சுருக்குப்பை காணாமல் போவதின் மர்மத்தை ஒருநாள் சாரதா கண்டுபிடித்தாள். தட்டிக் கேட்டவளின் தலைமயிரைப் பிடித்து உலுக்கினான். ஓரிரு ஆபாச வார்த்தைகளால் திட்டினான். அவளோ அழுதுகொண்டே அம்மாவிடம் கோள் சொன்னாள்.

அம்மா அடுப்பில் கனன்று கொண்டிருந்த கட்டையை உருவித் தன் கோபம் தீர விளாசித் தள்ளினாள்.

பையன் வீட்டைவிட்டே ஓடிப்போனான். ஆளுக்கு ஒரு மூலையாய் போய்த் தேடினார்கள். அவன் அப்பாவிடம் போய் ஒளிந்து கொண்டான் என்று தெரிந்ததும் 'அப்பன் புத்தி தப்பாமல் இந்தச் சனியனுக்கு இருக்குது'' என்று எரிந்து விழுந்தாள் அம்மா..

இப்போது அடிக்கடி நாகம்மாளுக்கு நெஞ்சு வலி வந்தது. ஏனோ மருத்துவரைப் போய்ப் பார்க்காமலே வீட்டில் கை வைத்தியம் பார்த்துக் கொள்வாள்.

நோயாளி அம்மாவையும், தறுதலைத் தம்பியையும், பொறுப்பில்லாத அப்பாவையும் நினைத்து வேதனையடைந்த சாரதாவுக்கு ஒரே ஆறுதல் அம்மாதான்.

நாகம்மாளுக்குத் தன் மகளைப் பார்க்கும்போதெல்லாம் கண்ணில் நீர் கோர்த்துக்கொள்ளும் உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துட்டு போய்ச் சேர்ந்தா நல்லாயிருக்கும் என்று மனதுக்குள்ளேயே சொல்லிப் புலம்பினாள்.

நாளுக்கு நாள் நாகம்மாளின் உடலும் சோர்ந்து கொண்டு வந்தது. பழைய பொலிவு இல்லாமல் வெளுத்துப் போனவள் போல இருந்தாள்.

கோபால் முழு நேரக் குடிகாரராகி விட்டார். அவரது வருவாய் சாராயத்துக்கும் வெள்ளை வேட்டி, ஜிப்பா, கை ரிக்சாவுக்குமே சரியாய் இருந்தது.

பாழாய்ப் போன குடிப்பழக்கம் அவரையும் குடும்பத்தையும் சேர்த்துத் தள்ளாட வைத்தது.

குடிக்கு அடிமையாவதின் ஒரே விளைவு நல்ல குடியும் கெட்டொழிந்து போகிறது.

உடல் நலம் குன்றிவிட்ட நிலையில் கிராமத்தில் போய்

சிலநாள் இருந்து வர கோபாலும் பிள்ளைகளும் கிளம்பினார்கள். நாகம்மாளையும் வரச்சொல்லி வம்பு பண்ணி அழைத்தார்கள். அவள் மறுத்துவிட்டாள்.

"நீங்க போய் வாங்க. நான் வியாபாரத்தைப் பார்க்கனும்' என்று காரணம் சொன்னாள்.

⊙⊙⊙

சமீபத்தில் மழை பெய்து ஓய்ந்திருந்தது. ஊர் போகும் வழியெல்லாம் பச்சை பசேல் என்று வளமை தெரிந்தது. பஸ்ஸில் பெருந்து இறங்கி மூன்று கிலோமீட்டர் நடக்க வேண்டும். பழைய நாளுக்கு இது எவ்வளவோ மேல். நடக்கும் தூரம் குறைந்திருந்தது.

ஏற்கனவே கடிதம் போட்டிருந்ததால் முருவன் காத்திருந்தார்.

குழந்தைகள் சித்தப்பனிடம் போய் ஒட்டிக் கொண்டன.

அண்ணனும் தம்பியும் மாறி மாறி பார்த்து புன்னகைத்துக் கொண்டனர். முருவனுக்கு லேசாகக் கண் கலங்கியது. அண்ணனின் முக மினுமினுப்பு தொலைந்து போனதைப் பார்த்து அவருக்குத் திக்கென்று இருந்தது.

பையனைத் தூக்கி தோளில் உட்காரவைத்துக் கொண்டு பெரிய பையைத் தன் வலிய கையில் தூக்கிக் கொண்டார். சின்னதான ஒரு பையைச் சாரதா தூக்கிக் கொண்டு சித்தப்பாவுக்குப் பின்னால் நடந்தாள். கோபாலுக்கு ஒரு விதமான புத்துணர்ச்சி வந்தது போல் இருந்தது.

நாசியால் கூர்ந்து மோப்பம் பிடித்தார். நாலா திசையில் இருந்தும் சாராய வாடையும் புளித்தக் கள்ளின் மணமும் வீசியது.

வாசம் வரும் தீசை நோக்கி ஓடிவிட மனமும் கால்களும் துடித்தன. தம்பிக்குக் கட்டுப்பட்டு பொறுமையாக இருந்தார்.

சுட்டெரிக்கும் பகல்வேளை. தாவரங்கள் வயல்வெளி பளீரென மின்னியது. மரங்களின் குளுமை, வீசியடிக்கும் காத்து முகத்தில் படரும் செம்மண் புழுதி, தலைக்கு மேலாகக் கத்தி திரியும் தவிட்டுக் குருவி, வெகு அருகில் மண்டிக் கிடக்கும் வேலி காத்தான் புதர்களில் இருந்து வரும் வண்டுகளின் ஓசை, இந்த இன்பகரமான சூழலில் குழந்தைகள் சிக்கிக் கொண்டு குதூகலமடைந்து விட்டார்கள்.

தோளில் உட்கார்ந்திருந்த மணி திடீரென முருவனின் தலைப்பாகையில் பொத்தென்று அடித்தான்.

'நைனா அசையாத கைகுள்ள பட்டாம்பூச்சி மாட்டிகிச்சி'' என்று கத்தினான்.

''படிச்சிட்டியா'' என்று அவரும் குழந்தை போலவே கேட்டார்.

''அய்யோ பறந்துடுச்சே' என்று ஏமாற்றத்தோடு உச்சு கொட்டினான்.

''சரி விடுடா நம்ம கொல்லைக்குப் போய் நெறத்துக்கு ஒன்னா புடிச்சி தர்ரேன்'' என்று சமாதானப் படுத்தினார்.

அவன் ஏமாந்து போனதைக் கேலிசெய்து சாரதா சிரித்தாள். கோபாலின் எண்ணம் மட்டும் சாராய வாடை வரும் திக்கிலேயே இருந்தது.

விதவிதமான பாறைகள் பூமியின் மேலே கவிழ்ந்தும், நிமிர்ந்தும், நீள வாக்கிலும் பலவித வடிவங்களிலும் பிரமாண்டமாய்க் கிடந்தன. அதன் இடுக்குகளில் தாவரங்கள் புதர் போல மண்டிக் கிடந்தன. அதில் இருந்து பறவைகளின் கீச்சொலிகள் வந்தன.

தூரத்தில் பெரிய குன்றின் மேலாக ரங்கநாதர் கோவில் கோபுரம் தெரிந்தது. கிராமம் நெருங்கி விட்டதற்கான அடையாளம் அதுதான். அந்தக் கோயில் கோபுரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அப்பாவைப் பலிவாங்கிய குரூரமான மனிதர்கள் வாழும் குகைப் போலத் தோன்றும். அதில் என்ன பார்க்கத் துடித்தாரோ. பாவிகள் அவரை இல்லாமலே செய்துவிட்டார்கள். பூமிக்கு மேலே வானம் இப்படி ஆன்னு திறந்துக்கினு கெடக்குது அதோட முடிவு எங்கேயோ ஒருத்தனுக்கும் தெரியாது. ஆனால் பூமியில் இப்படி சின்னதும் பெரிசுமா மர்மமான குகைகளை கட்டி அதுல போய் என்னப் பாக்கறாங்களே? என்னத்தான் எடுத்து வர்றாங்களோ? அப்பா எதுக்காக அதுக்குள்ள போக ஆசைப்பட்டார். அவனுங்க எதுக்குத் தடுத்து அவரை கொலை செய்தாங்க. அவருக்குள் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை. நுட்பமாக பல கேள்விகள் அவருக்குள் எழுந்தாலும் பதில் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. மொத்தத்தில் அந்தக் கோபுரத்தைப் பார்ப்பதை அவர் வெறுத்தார். கிராமம் நெருங்கிவிட்டது.

அவர்கள் முதலில் எதிர் கொண்டது பாட்டியை. அவர் குச்சியாய் காற்றில் பறந்து வருவது போல் வந்து பேத்தியைக் கட்டியணைத்துக் கொண்டாள். பாட்டியின் உடல் உலர்ந்த திராட்சை போல் இருந்தது. அவரிடம் இருந்து விசும்பல் ஒலி

லேசாகக் கேட்டது.

முருவனின் தோள் மீதிருந்த பையன் பாட்டியின் விசும்பலுக்கு அர்த்தம் புரியாமல் அவரைக் கூர்ந்து பார்த்தான். இந்த இடைவெளியிலேயே கோபால் சேர வேண்டியவர்களுடன் போய்ச் சேர்ந்துக் கொண்டார்.

'சரி வீட்டுக்கு இட்டுக்கினு போம்மா புள்ளைங்க பசியோட இருக்கும்'' என்றவர், பைகளைத் தூக்கிக் கொண்டு அவர்கள் முன்பாக நடந்தார்.

கிராமத்துக்கே உரிய அழகிய பனை ஓலை குடிசைக்குள் சாணம் மெழுகிய சுவர் அதில் செம்மண்ணாலான பட்டைகள் மாவுக்கோலங்கள், கால் நடைகளின் பலவிதமான கத்தல்கள் என்று சாரதாவுக்கு இனித்தது.

பாறையை ஒட்டி வளர்ந்து நின்ற பிரம்மாண்டமான புளிய மரம் அதன் நிழலில் அமைந்த விசாலமான பெருங்குடிசை சாரதாவை அணைத்துக் கொண்டு முதியவள் குடிசைக்குள் போனாள்.

பையன் கற்களைப் பொருக்கினான். புளியம்பழங்களை அடித்து வீழ்த்த,

''பாவாடை நைனா எங்க ஆயா'' சாரதா கேட்டாள்.

'அவன எதுக்குடி கேக்கற கொழந்த இப்பல்லாம் அவன்தா ஆட்டுக்கே வர்றதில்லயே'' என்றவள் பேத்தியை ஒரு முறை ஆவலாகப் பார்த்தாள்.

'கொள்ளிக்கு அந்தப் பக்கமா குடிசை போட்டுகினு அதுல காளி செலய வச்சு குறி சொல்லிகினு அங்கயே கெடக்குறான். நம்ம சனங்க யார்கிட்டயும் பேசறது இல்ல வேற ஊர்க்காரங்க அவன்கிட்ட வந்து குறி கேட்டுகினு போறாங்க...ச்..'' என்று ஏதோ ரகசியம் பேசுபவள் போல மெலிதாகப் பலவீனமான குரலில் பேசினாள்.

குடிசைக்குச் சமீபத்தில்தான் கூரை மாற்றியிருந்தார்கள் குளிர்ச்சியாய் இருந்தது. காற்றில் குடிசையின் ஓலைகள் அசைந்து கொடுக்கும் கிறீச் ஓசை கூடத் தெளிவாக கேட்டது

''உங்கம்மாவை இட்டுகினு வரலயா?'' என்று கேட்டார் கிழவி.

''அம்மாவுக்கு ஒடம்பு சரியில்ல. கடைய பாத்துகணும் அதான்

வரமாட்டேன்னு சொல்லிடுச்சி.''

'ஆமா பொல்லாத கடை'' நெருப்புல வெந்துகினு பாட்டி முனுமுனுத்தார்.

''ஆயா கூழ் குடுக்கறியா. ஆசையா இருக்குது.''

'வேணாம்டி கொழந்த நெல்லு சோறு பொங்கியிருக்கறன் ஏரி நண்ட நசுக்கி ரசம் வைச்சிருக்றேன். அதைச் சாப்புடு நல்லா இருக்கும்' என்று குசுகுசுத்தாள். பிறகு என்ன நினைத்தாளோ பேத்தியை அணைத்து முத்தமிட்டாள்.

நீ அப்பிடியே உங்க அத்த மாதிரியே இருக்கற என்றவள் துயரத்தோடு தன் வறண்ட விழிகளைத் துடைத்துக் கொண்டார்.

இப்போதெல்லாம் சீமைக்குப் போன பொன்னியம்மாள் பற்றி நினைவுகள் அவளை வாட்டியது. மோசமான கனவுகளாக வந்தது. அங்க கெடந்து என்ன பாடு படுறாளோ என்று மகள் மீது ஏக்கமாக இருந்தது. வாழ்நாளில் ஒரு முறையாவது அவளைப் பார்க்க மாட்டோமா என்று கிழவி ஏங்கினார்.

தனது துயரத்தைப் பேத்தி பார்த்துவிட கூடாது என்ற உணர்வால் அடுப்புக்கு வெளியே எரிந்து கொண்டு வந்த சுள்ளியை எடுத்து அடுப்புக்குள் போட்டாள்.

''சாரதா... சாரதா'' யாரோ அழைக்கும் குரல் கேட்டது. குடிசைக்கு வெளியே எட்டிப் பார்த்தாள். ஆச்சரியத்துடன் குழந்தை போல துள்ளிக்கொண்டு ஓடினாள். ஆனால் அவளைக் குழந்தையோடு ஒப்பிட முடியாது. பருத்த உருளைக்கிழங்கோடு ஒப்பிடலாம்.

மா நிறத்தில் இருந்த அவளது முகத்தில் பருக்கள் நிறைந்து பருவப் பெண்ணுக்குரிய கலையை அவளுக்குத் தந்தது. அவளது சிரிப்பில் பட்டணத்துக் கலை நன்றாகவே தெரிந்தது.

சித்தப்பனின் கைகளில் வேர்க்கடலைச் செடிகளின் கொத்தும் ஈச்சங்குலையும் இருந்தது. அவள் ஆவலோடு அவர் அருகே ஓடினாள். ஆசையோடு அதை வாங்கிக் கொண்டு திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டாள். வேர்க்கடலைச் செடியை உற்றுப் பார்த்தாள். சமீபத்தில் பிடுங்கியதால் செடியில் மண்மணம் வீசியது. வேரில் தொங்கிய பருத்த காய்களை உரித்துச் சுவைத்தாள். இதுபோன்ற இன்பங்களுக்காகத் தானே கிராமங்களுக்கு வருகிறார்கள் பட்டணத்துக் குழந்தைகள்.

தன் அண்ணன் மகளின் முகத்தில் படர்ந்த மகிழ்ச்சியைப் பார்த்து மன நிறைவடைந்தவர் போல 'ஏம்மா கோழி புடிக்கட்டா' என்று கேட்டார்.

'புடிடா ரெண்டா புடி' என்று குடிசைக்குள் இருந்து அம்மாவின் குரல் மெலிதாகக் கேட்டது.

கை நிறைய புளியம்பழங்களோடு எதிரே நின்ற தம்பிக்கு வேர்க்கடலைச் செடிகளைப் பிரித்துக் கொடுத்தாள். அவன் எந்த ஆர்வமும் அற்று அதைப் பக்கத்தில் வாங்கி வைத்துவிட்டு புளியம் பழங்களைச் சுவைத்துக் கொண்டிருந்தான். கோழியை அறுத்துச் சுத்தம் செய்து கொண்டிருந்தார் முருவன்.

'எப்பா நாளைக்குச் சின்ன நைனா இருக்கற எடத்துக்குக்கு இட்டுகினு போறியா?'

முருவன் திரும்பிப் பார்த்தார் 'அவனையா?'' என்று கேட்டவர் ஒரு கணம் நிதானித்து,

'அவன்தான் நம்மளையெல்லாம் வேணாம்ணுட்டு போய்ட்டானே. அவன எதுக்கு நாம பாக்கணுமாம். சும்மா இரு கொழந்த'' என்றவர் இறகுகளைப் பிய்த்துப் போட்டார். அது காற்றில் பறந்தோடியது.

'அவர் என்னா அவ்ளோ பெரிய தப்பா செய்துட்டார்'' என்று கொஞ்சலோடு கேட்டாள்

எதையோ சொல்ல வாயெடுத்தார். சின்னப் பொண்ணு வந்து கொண்டிருந்தாள்.

களையெடுக்கறது, ஆடு மேய்க்கறதுன்னு அவளுக்கு ஏகப்பட்ட வேலை. வேலை முடிந்து, களைப்பு தெரிய வந்து கொண்டிருந்தாள். கையில் களைகொத்தியும் இடையில் புல் அறுக்கும் அரிவாளும் தொங்கிக் கொண்டிருந்தது.

சாரதா ஓடிப்போய் சித்தியைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். வெயிலில் காய்ந்து கருத்துப்போன கன்னத்தில் ஆசைதீரமுத்தமிட்டாள். சித்தியும் மகளைக் கொஞ்சி கட்டியணைத்தாள். முருவன் கூட லேசாகச் செருமிக் கொண்டு சிரித்தார். ''என்னமா வளந்துட்ட என் ராசாத்தி ' மகளைக் கண்ணேறு சுற்றி நெட்டி முறித்தாள்.

''எப்ப வந்தீங்க, அம்மா வந்திருக்குதா?' என்று சுற்றிலும் பார்த்தபடி கேட்டாள்.

புளிய மரத்தடியில் மணி உட்கார்ந்திருந்தான். 'வாடா மவனே'' என்று ஆச்சரியத்தோடு பையனைக் கை நீட்டி அழைத்தாள்.

'பாத்தியா அசையாம உட்கார்ந்துகிட்டிருக்கான்' என்ற சொல்லிக்கொண்டு பக்கத்தில் கிடந்த காய்ந்த சுள்ளி எடு அடிப்பதுபோல் பாவனை செய்து கொண்டு ஓடினாள்.

மணி உண்மையாகவே பயந்து புளியம் பழங்களைக் கீழே போட்டு விட்டு ஓட எத்தனித்தான்.

சாரதா விழுந்து விழுந்து சிரித்தாள். 'வாடா என் செல்ல மவனே'' என்று அவனை அப்படியே சேர்த்து அணைத்துக் கொண்டாள் சின்னப்பொண்ணு.

பையன் ஈ என்று இளித்தான். பிறகு சித்தியும் மகளுமாய் கேலி பண்ணிச் சிரித்தார்கள்.

'அடி... என்னா சிரிப்பு வேண்டிக் கெடக்குது போய் கொழந்தைகளுக்கு எதனாச்சும் சாப்புட குடு... போ' முருவன் பொஞ்சாதியை விரட்டினார்.

'ஆமா மாமன் எங்க'' என்று கேட்டாள்.

'ஆமா அவருக்குப் போவ எடங்கெடையாது பாரு அவரு வந்தா குடிக்கறவனுங்களுக்குக் கொண்டாட்டம் தா போ... போ கொழந்தைகளுக்குச் சாப்புட எதனாச்சு குடு.'' விரட்டினார்.

'அய்யய்யோ... கொழந்த... கொழந்த எனக்குத் தெரியாதா? என் பொண்ணுக்குச் சாப்புட குடுக்க'' என்று முணுமுணுத்துக் கொண்டு சாரதாவை அழைத்துக் கொண்டு குடிசைக்குப் போனாள்.

இப்படி ஒவ்வொருவரும் தன் மீது அன்பைப் பொழிவதால் மனநிறைவுற்ற சாரதா கிராமத்தின் ஒவ்வொன்றையும் ஆர்வத்துடன் ரசித்தாள். அவர்களுக்குக் கிராமம் சொர்க்கமாய் இனித்தது.

முருவன் குடிப்பதில்லை. அவர், தன் பிள்ளைகளைப் படிக்க வைக்கவும் கிடைத்த காசைப் பத்திரப் படுத்துவதிலும் அக்கறையோடு இருந்தார். பிள்ளைகளை அவர் கண்டிப்போடு வளர்ப்பதைப் பற்றி அக்கம் பக்கத்தவர் வியந்து பேசுவார்கள். பொறாமைப்படவும் செய்தார்கள். கட்டுத்திட்டமான குடும்பம் அவருடையது.

கோபால் சம்பாதிப்பதும் குடிப்பதும் அதில் சுகம் காணுவதாய் இருந்தார். மணியைப் படிக்க வைக்க வேண்டும்

என்ற எண்ணம்கூட அவரிடம் இல்லை. ஒருவேளை அவர் நினைத்தாலும் அவன் அதற்குத் தயாராக இல்லை. செல்லம் கொடுத்து கெட்டுப்போனவன்.

மீசை முளைக்கும் முன்பாகவே லாட்டரி, பீடி, இவைகளுக்குப் பழக்கமாகிவிட்டான். கெட்டொழிந்து போவதற்கான எல்லாம் அவனிடம் தொற்றிக் கொண்டு விட்டது.

அவன் பாக்கெட்டில் எப்போதும் சில்லரைகள் கலகலத்து கொண்டிருந்தது. அவன் அப்பாவின் பாக்கெட்டிலும் அம்மாவின் சுருக்குப் பையிலுமாகத் திருடக் கற்றுக்கொண்டு விட்டான்.

முருவன் தன் மகனை எப்போதும் படி, படி என்று துரத்திக் கொண்டிருந்தார். ஒழுக்கத்தின் எல்லா விதைகளையும் தன் மகனின் மண்டையில் விதைத்துவிட அவர் துடித்தார். ஆண்டைகளிடம் அடிமையாய் வாழ்ந்தது போதும். நாலு எழுத்துப் படித்துக் கொண்டால் எவனுக்கும் கை கட்டி வாய் பொத்தி நிற்க வேண்டியதில்லை என்பது அவருக்குப் புரிந்திருந்தது.

மாலைப்பொழுது நெருங்கிக்கொண்டிருந்தது. பள்ளிப் பிள்ளைகள் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். மாரிக்கு வரும் வழியிலேயே யாரோ சொல்லிவிட்டார்கள். வீட்டுக்கு வந்திருக்கும். விருந்தினர்களைப் பற்றி. ஓட்டமும் நடையுமாய் வந்தான். சின்னப் பாறையின் உச்சியில் நிற்கும் அக்காளைப் பார்த்து விட்டான். வேகம் இன்னும் அதிகமானது. அக்காள் முன்பு மூச்சு வாங்க வந்து நின்றான்.

'எப்பக்கா வந்தீங்க'' மேல்மூச்சு வாங்கியது. புத்தகப் பையைக் கொண்டுபோய் குடிசை மூலையில் வைத்துவிட்டு சாரதாவுடன் பேசிக் கொண்டிருந்தான். பிறகு தன் சமவயதுப் பையன்களோடு ஆட்டம் போடப் போய்விட்டான்.

ரங்கநாதர் கோயில் கோபுரத்துக்குப் பின்புறமாக சூரியன் மறைந்து கொண்டிருந்தது.

ஆயா காய்ந்த சுள்ளிகளை நறுக்கி கொண்டிருந்தாள். சின்னக் பொண்ணு உரலோடு யுத்தம் நடத்திக் கொண்டிருந்தாள்.

களத்திலிருந்து உஷ்... உஷ்... தொம்... தொம்... என்ற ஓசை வந்தது.

திடீரென்று மாரி தலைதெறிக்க ஓடிவந்தான். 'எதுக்கு ஆயா தம்பி இப்பிடி ஓடி வருது' சாரதா கேட்டாள்.

'எதுக்கா அவ அப்பன் வருவான். அதான். பசங்களோடு ஆட்டம் போடறத பாத்தானா போச்சு. தொடை சவாரி பின்னி பூடுவான் அதான் இந்த ஓட்டம்' என்று பாட்டி சிரித்துக் கொண்டு சொன்னாள். மாரி அவசர அவசரமாய்ப் போய் புத்தகக் கட்டை எடுத்து வந்து உட்கார்ந்து கொண்டான்.

கையில் ஒரு குச்சியுடன் சித்தப்பா வந்துகொண்டிருந்தார். 'பாத்தியா எம்மா இன்னா ஓட்டம் ஓடியார்றத... திரி பள்ளிக் கொடம் போய்ப் படிக்கறதுன்னா ஒழுங்கா... படி. இல்லன்னா எங்கூட வந்து மாடு மேய். இன்னா இந்த ஓட்டம் ஓடுற வேலைய வச்சுகுன கால ரெண்டயும் முறுக்கி ஏரில போட்டுறுவன் ஆமா'' என்று கோபமாய்க் கத்தினார்.

மாரி அவசர அவசரமாய் புத்தகத்தைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்தான். விழிகள் மட்டும் திருதிருவென அலைபாய்ந்தது. சாரதா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். இதுபோல ஒரு நாளாவது மணியை அப்பா கண்டித்ததுண்டா? கை நிறைய காசு தருவதும் பை நிறைய பலகாரம், கை நீட்டின உடையை வாங்கித் தருவதும் தான் அவரது வளர்ப்பின் அழகு. அதான் அவன் இதற்குள்ளாக பீடி புகைக்கிறான் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

நெல்லைக் குத்திக்கொண்டு வெளியே வந்தாள் சித்தி. புடைத்து உமி நீக்கினாள். முறத்தில் கடைசியாக ஒட்டிக் கொண்டிருந்த மாவைத் தட்டி சாரதாவின் வாயில் கொட்டினார். சில்லென்று இனிப்பாய் இருந்தது.

போதையேறிய முகத்துடன் கோபால் வந்தார். 'எங்க போன ஊர்லர்ந்து வந்தவன் வூட்டுக்குக் கூட வராம' அம்மா கேட்டார்.

கோபால் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டார். அவரிடம் இருந்து சாராய வாடை குப்பென்று வீசியது.

'சமைஞ்சப் பொண்ண வச்சுக்கிட்டு இதெல்லாம் இன்னாடா கூத்து.'' அம்மாவின் குரல் சற்று ஏற்றமாய் வந்தது. கண்ணைச் சுருக்கிக் கொண்டு மகனைப் பார்த்தாள்.

'சும்மா இரும்மா. இப்ப இன்னா ஆச்சுன்னு பேசற ரொம்ப நாள் கழிச்சி வர்றேன்.'' மேலும், பேச முடியாமல் நாக்கு குழறியது.

'இன்னா மாமா எப்படி இருக்கிறீங்க.' நாணத்துடன் விசாரித்தாள் சின்னப்பொண்ணு, 'அக்காள இட்டுக்கினு வர்றதுதானே''

கோபால் மௌனமாக அவளைப் பார்த்தார். முனியன் மாமாவின் முகம் அவளிடத்தில் தெரிந்ததுபோல் இருந்தது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ஏதோ சொன்னார். அவளுக்குப் புரியவில்லை. அவள் வெட்கத்துடன் சிரித்துக்கொண்டு அடுப்பங் கரைக்குப் போய்விட்டாள்.

கோபாலின் தொண்டை வரை சாராயம் ததும்பியது.

மாரி சத்தம் போட்டுப் படித்துக் கொண்டிருந்தான். சாரதா அப்பாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். சாராய நெடி அவளுக்குக் குமட்டியது.

கோபால் மகளைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தார். அவளும் ஆசைதீர அப்பாவைப் பார்த்தாள். அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்து பேச அவளுக்கு வாய்ப்பதே இல்லை. மகளின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டார். பிறகு சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார்.

கோழிக்குழம்பு வாடை குடிசைக்கு வெளியே வீசியது. பசியைக் கிளறி விட்டதுபோல் இருந்தது. வெளியே முழுமையாக இருள் கவிழ்ந்துவிட்டது. கிராமம் அமைதியாகி நிசப்தம் நிலவியது. புளிய மர இருளுக்குள்ளே மின்மினிகள் மினுக்கித் திரிந்தன.

கோபால் கொஞ்சம் நிதானத்துக்கு வந்திருந்தார். திடுமென நினைவு வந்தவர் போல,

'அம்மா அஞ்சலை அக்கா எங்க காணோம்''

'அவ தங்கச்சியூருக்குப் போறேன்னு போனா, ஒரு தகவலும் இல்ல.''

'என்னடா, கொழந்த நல்லா படிக்கிறீயா'' என்று மாரி பக்கம் திரும்பினார். திரி விளக்கு ஆடாமல் ஒரே நேர்க்கோட்டில் எரிந்துகொண்டிருந்தது. மாரி படிக்கிறேன் என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினான்.

''உன் அண்ணன பாத்தியா குறட்டை விட்டுத் தூங்குறான். அவன் மண்டையில் கோலி உருண்டையும் சூது கட்டும் இருக்குது. பள்ளிக்கூடம் போடான்னா அவன் எங்க போறான் எங்க வர்றான். யாருக்குத் தெரியுது.'

'ஆமா, அவனச் சொல்லிக் குத்தமில்லடா. அப்பன் வழிபுள்ள போவுது.' அம்மா கோபாலைக் குத்தம் சொன்னார்.

'பொட்டப் புள்ளையாவது இங்க வுட்டுட்டுப் போ. அந்த

பட்டணத்துல அவள வச்சுகிட்டு என்னத்தப் பண்ண போற. நீ குடிச்சிட்டுச் சாஞ்சிடுவ, அவ ஆப்பக்கட ஆத்தா வூட்டு சனங்கன்னு இருப்பா. குழந்த இங்க இருக்கட்டும்' தீர்மானமாய்ப் பேசினாள். அம்மாவின் குரல் இப்போது சத்தமாய் ஒலித்தது.

'சரிம்மா, போய் சோத்தப் போடு. அண்ணன எதனாச்சு பேசாத.'' முருவன் அம்மாவை அதட்டினார்.

அம்மாவோட கை பதத்துல கோழிக்குழம்பு இனித்தது. உண்ட மயக்கத்தில் பிள்ளைகள் தூங்கிவிட்டார்கள்.

அண்ணனும் தம்பியும் ஊர் நடப்புகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

திடுமென நினைவுக்கு வந்தவர்போல கோபால் 'டேய் முருவா' என்றார்.

''இன்னா''

''எங்கடா, வாத்தியார் ஒருத்தர் பசங்களுக்குப் பாடம் சொல்லிக் குடுத்துக்கினு இருந்தாரே, எப்படியிருக்கிறார்?''

பெருமூச்சொன்றை விட்டு, உச்சுக்கொட்டினார் முருவன். ''அதயேன் கேக்கறீங்க. நல்ல மனுசன். புதுசா பள்ளிக்கொடம் கட்டுறாங்களே, அதையே சுத்திச் சுத்தி வருவாரு. ராத்திரியானா பழைய கீத்துக் கொட்டாயில போய்ப் படுத்துக்குவாரு. வழக்கமா அவருகூட நம்ம பசங்க யாராவது போய்ப் படுத்துக்குவானுங்க. அன்னைக்குன்னு பாத்து ராத்திரி சினிமாவுக்குப் போயிட்டு அப்படியே ஏத்த எறைக்கப் போயிட்டானுங்க. பொழுது விடிஞ்சு ரொம்ப நேரமாச்சேன்னு பசங்க எழுப்ப போயிருக்கானுங்க.. ச்சு மனுஷன் வாயில் நுரை தள்ளிக் கெடக்குறாராம். என்னத்த சொல்றது. மனுசச் செத்துப் போயிட்டாரு. என்ன தீண்டுச்சோ என்னமோ..''

''அட பாவமே'' என்று கோபால் தலையில் அடித்துக் கொண்டார்.

''நம்ம சனங்கள்லாம் சேந்து மால மரியாதையோட அடக்கம் பண்ணிட்டோம்'' என்று வேதனையோடு சொன்னார்.

''அந்த மனுசனுக்குத் தான்னா அவ்ளோ கூட்டம் ஏழெட்டு ஊர் சனமும் வந்து சேந்திடுச்சி. எல்லா நம்ப சனங்கதான். பட்டணத்துல இருந்து ஒருத்தர் இவரப் பாக்க வருவாரு. அவருக்குக்கூட சங்கதி சொல்லமுடியாம போச்சு. எங்க இருக்கார்னு யாருக்குத்

தெரியும்?'' என்று துயரத்தோடு இடை நிறுத்தியவர்,

''போன மாசம்னு நெனக்கிறேன். பெரியவர் காரிலே வந்து எறங்குறார். என்னத்த சொல்றது. விஷயத்தச் சொன்னதும் பாவம், அவ்ளோ பெரிய மனுசன் பொத்துன்னு சாய்ஞ்சுட்டார். அவர் தேத்தறது பெரும் பாடா போச்சு. செத்துப்போனவருக்கு அவரு வாத்தியாராம். பெத்த அப்பன்போல குலுங்கிக் குலுங்கி அழுதாரு.'' சொல்லும்போது முருவனுக்குத் தொண்டை கம்மியது. துண்டால் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். துயரமான மனநிலையோட இருவரும் உறங்கப் போனார்கள்.

விடியலுக்கு முன்பாக வாசலில் சாணம் தெளிக்கும் ஓசை கேட்டது. குடிசைக்குப் பின்புறம் வாத்துக் கூட்டம் ஏரிக்குப் பயணமாகும் கப...பக்..பக்... கூச்சல் அப்போதுதான் விழித்துக் கொண்டு இரை தேடப்போகும் தவிட்டுக் குருவியின் சீரான ஒலி, கழனிக்கோ, மேய்ச்சலுக்கோ பயணப்படும் மாடுகள் குடிசையின் விளிம்புகளை உரசிச்செல்லும் ஓசை தனது தலையை வேகமாய்ச் சுழற்றி முதுகில் தொல்லை பண்ணும் பெரிய ஈக்களை ஓட்டும்போது எழும் உஷ் என்ற சத்தம் இந்தக் காலைப்பொழுது இனிமைகளை ஒன்றிணைக்கும் மாதாக் கோயில் மணியோசை. மரத்தில் துளையிட தொடங்கிவிட்ட இளம் மரங்கொத்தியின் சட... சடப்பு எல்லாம் ஒரே நேரத்தில் வந்து காலைப் பொழுதை இனிமையாக்கியது.

சாரதா விழித்துக்கொண்டாள். பாட்டிக்கு ஏதாவது உதவி செய்யலாம் என்று எழுந்தவளை வெளியில் கூரைக்கு மேலாக விழுந்த மழைத் தூறலின் சடசடப்பும் அதன் கூடவே வீசிய குளிர் காற்றுமாய்க் சேர்ந்து அவளைப் போர்வைக்குள்ளாக இருக்கும்படி செய்தது. பலத்த காற்று வீசியடித்தது.

சின்னப் பொண்ணு வாசலைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். சிறு தூறல் பெருமழையாகக் கொட்டத் தொடங்கியது.

''த்து... இன்னாடியம்மா திடுக்குனு மழை பேயுது'' என்று புலம்பிக் கொண்டு குடிசைக்குள் வந்து புகுந்து கொண்டாள். மழை வேகமெடுத்து, சோவென்று பெய்தது. மண்ணில் இருந்து எழுந்த மணம் கூரையின் மீது மழைத்துளிகள் ஏற்படுத்திய ஓசை குதூகலமூட்டியது. புளியமரம் பேய்போல சுழன்றாடியது. மரத்தில் பழுத்த புளியம்பழங்கள் சொட்... சொட்டென்று

தரையில் விழுந்து சிதறியது.

ஆயா காப்பிக்கொட்டையை வறுத்துக் கொண்டிருந்தாள். கோபால் பட்டணத்தில் இருந்து வரும்போது வாங்கி வரும் சரக்கோடு கட்டாயம் காப்பிக் கொட்டையும் இருக்கும்.

தீய்ந்த காப்பிக் கொட்டையின் மணம் நாசிகளைப் பரவசப்படுத்தியது. சாரதாவுக்கு அம்மாவின் ஆப்பக்கடையை நினைவுபடுத்தியது.

கோபால் விழித்துக் கொண்டார். முருவன் கருக்கலிலேயே கழனியில் வேலை பார்க்கக் கிளம்பிவிடுவது வழக்கம். இன்றும் கிளம்பிவிட்டிருந்தார்.

காற்று சுழன்றடித்தது. காற்றில் உதிர்ந்த புளியம்பழங்களைப் பொறுக்கிக்கொண்டு வந்த சித்தியின் பாதியாக மடித்துக்கட்டிய பாவாடைக்குள் மூட்டையாகத் துருத்திக்கொண்டிருந்தது புளியம் பழங்கள்.

மழையில் மொத்தமாய் நனைந்தவளாகக் குடிசைக்குள் நுழைந்தாள். பழத்தை மூலையில் கொட்டிவிட்டு அடுப்புக்கு எதிராக குத்துக்கால் போட்டு உட்கார்ந்து, அவளது நனைந்து சில்லிட்டுப்போன கைவிரல்களைச் சுடர்ந்து எரியும் சுள்ளிகளுக்கு மேலாகக் காட்டினாள்.

அலுமினியக் குவளையில் மாமியார் ஊற்றித்தந்த காபியை உறிஞ்சிக் கதகதப்பை உணர்ந்தவள் போல ஆழ்ந்த பெருமூச் சொன்றை விட்டவளாகக் குடிசைக்கு வெளியே பார்த்தாள். தூறல் நின்றுவிட்டிருந்தது. கோபால் குளித்துவிட்டு வந்து கூழ் குடித்தார்.

ஒரு யோசனையோடு அம்மாவின் முகத்தைப் பார்த்தவர், "தம்பிய போய்ப் பார்த்துட்டு வரட்டுமா?" என்று கேட்டார்.

அம்மாவின் கண்களில் நீர் திரண்டு விட்டது. 'அவன் இப்ப யார்கிட்டயும் பேசறது கிடையாதாம். அதுக்கு முன்னாடி பதிலாவது சொல்லுவான். இப்ப அதுவும் கிடையாது.

வெள்ளிக் கிழமையானா குறி சொல்றானாம். எங்கருந்தெல்லாம் சனங்க வருதுங்க. நா ஒரு நாளும் பாத்தது இல்லை" என்று சொன்னவள், கைகளைக் காற்றில் அலையவிட்டாள். அந்த வறண்ட விழிகளில் நீர் திரண்டது.

ஒரே ஒரு தரம் பார்த்தேன். உங்க அப்பாரு மொகம் அப்படியே

கோபத்தில் இருக்கறா மாதிரி அதுக்கப்பறம் நான் அந்தப் பக்கம்கூட போறது இல்ல. நீ போ போய்ப் பாரு உங்கிட்ட பேசினாலும் பேசுவான்.'

மழை நின்று காற்று சில்லென்று வீசியது. பாதை பூராவும் சேறும் சகதியுமாய் ஆகி விட்டிருந்தது. பாதையோர முள் மரங்கள் மழைத்துளியின் பாரம் தாங்கமுடியாமல் கிளைகள் தரையை நோக்கித் தொங்கின. இத்தனை நேரம் எங்கோ பதுங்கி கிடந்த தேன் சிட்டுகள் மழையால் கழுவப்பட்ட புத்தம் புதிய மலர்களில் இருந்து தேன் எடுக்கப் பறந்தோடின. கிராமம் உயிர்க் கலையோடு பொலிந்திருந்தது.

கோபாலுக்கு எதிரே வந்து கொண்டிருந்த ஒருவர் 'என்ன கோபால் எப்ப வந்த' என்று விசாரித்தார். அவர் கையில் சாம்பல் நிற முயல் அரைகுறை உயிரோடு துள்ளிக் கொண்டிருந்தது.

'நேத்துதான் மாமா வந்தேன்'' என்று பொன் பல் தெரியச் சிரித்தார்.

''மழை வர்றா மாதிரி இருக்குது. எங்க கிளம்பிட்ட'' என்று எச்சரிப்பது போல் சொல்லி விட்டுப் போனார் பெரியவர்.

ஈச்சங்காட்டுக்குப் பின்புறமாய் தான் சாமியார் தம்பி குடிசை போட்டுத் தங்கியிருந்தான். சகதியையும் முள் செடிகளையும் தாண்டிப் போனார். பெரிய குடிசை அதைச் சுற்றிலும் பெரிய சூலங்கள் நடப்பட்டிருக்கிறது. அரசமரத்துக்கடியில் நவக்கிரகச் சிலைகள் திசைக்கு ஒன்றாய்த் திரும்பிக் கொண்டிருந்தன. அந்தச் சிலைகளைச் சரியாக ஒரு மாதத்துக்கு முன்பாக யாரோ மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவன் பெயர்த்துக் கொண்டுபோய் குளத்தில் போட்டுவிட்டுப் போயிருந்தான்.

இவை புதிதாக நடப்பட்டவை. அரசமரத்துக்கு எதிரே பெரிய சதுர மேடை அதன் மேல் இருவர் இடுப்பில் துண்டு மட்டும் கட்டிக்கொண்டு தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். இருவரும் சண்டையிட்டுக் கொள்வது போல இருந்தது. வேறு யாரையும் காணவில்லை. கோபால் மேடைமீது ஏறி, சுற்றிலும் நோட்டமிட்டார். நீளவாக்கில் இருந்த குடிசைக்குப் பின்புறம் ரங்கநாதர் கோயில் குன்றில் மேல் எழுந்து நிற்பது போல் இருந்தது. அதன் மேலாக மழை மேகங்கள் அலை அலையாக நகர்ந்து கொண்டிருந்தது. குடிசைக்குள்ளிருந்து மஞ்சள் புடவை கட்டிய பெண் ஒருத்தி கோபாலை நெருங்கி வந்தாள்.

''எப்ப வந்தீங்க.''

''நேத்து.''

''சரி நான் போய் ஆத்தாகிட்ட சொல்றேன்.'' திரும்பவும் குடிசைக்குள் போய்விட்டாள். அவளை எங்கேயோ பார்த்தது போல் இருந்தது. சரியாக அடையாளம் பிடிவில்லை.

நீளவாக்கில் கட்டியிருந்த சுவரற்ற குடிசைக்குப் பின்புறமாக சிறியதாய் கோபுரம் வைத்துக் கட்டப்பட்ட கோயில் ஒன்று இருந்தது. அதைச் சுற்றி நான்கு சிறு குடிசைகள் இருந்தன.

மேடையில் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொண்டிருந்த இருவர் இன்னமும் அதே நிலையில் சச்சரவிட்டுக் கொண்டுருந்தனர். மேடைக்கு நடுவில் பெரிய சூலம் ஒன்று நடப்பட்டிருந்தது. அதைச் சுற்றிக் கொட்டப்பட்டிருந்த குங்குமம் மழையில் கரைந்து ரத்தம் போல் திகிலூட்டியது.

மீண்டும் தூறல் ஆரம்பித்துவிட்டது. தலையில் மேலாக கையை மறைப்புக் காட்டியபடி பாவாடை வெளியே வந்தார். அமைதி தவழும் அந்த முகத்தில் இப்போது அவ்வளவு அமைதி தெரியவில்லை. கண்கள் சிவந்து ஆழ்ந்துபோய் திகிலூட்டும்படி இருந்தது. அமைதியான பாவாடை பக்தர்களுக்கு ஆத்தாவாக அறிமுகப்படுத்தப் பட்டுவிட்டான். இப்போது அங்கே பாவாடை–யில்லை ஆத்தா... காளியாத்தா.

கோபால் இயல்பாகச் சிரித்துக்கொண்டு தம்பியிடம் போனார்.

'வாங்க' என்ற லேசான முணுமுணுப்புடன் கூரைக்குக் கீழே அழைத்துச் சென்றார். பனை ஓலை பாயைக்கொண்டு வந்து போட்டாள். கோபாலை முதலில் பார்த்த பெண்.

தம்பியின் மேல் இருந்த காவியுடை தோளோடு ஒட்டி பிறந்து வளர்ந்ததுபோல் தோன்றியது. தலையில் இருந்து தொங்கிய கூந்தலில் சடைபிடிக்கத் தொடங்கிவிட்டது. கண்கள் குழி விழுந்து ஆழமாய்த் தெரிந்தது. குழியில் தெரிந்த கண்ணும் ரத்தச் சிவப்பாய் மின்னியது. ஆள் மெலிந்து போய் இருந்தான். சாமியாரைப் பார்த்ததும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டடிருந்தவர்கள் வேறுபக்கம் போய்விட்டார்கள்.

''யார் அவங்க'' என்று கேட்டார் கோபால்.

'மனம் பேதலிச்சுப் போய் ஆத்தாகிட்ட சரண் அடைஞ்சவங்க' என்று பதில் வந்தது.

பாவாடை தனது சொந்த சகோதரன் என்ற நினைப்பு கோபால் மனதில் இருந்து அழிந்து விடுவது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. பாவாடையிடம் பாசம் எதுவும் வெளிப்படவில்லை. வார்த்தைகள் இரும்பால் செய்யப்பட்டதுபோல் வந்து விழுந்தது.

''சரி இதுக்கு மேல என்ன செய்றதா உத்தேசம்'' என்று கேட்டார் கோபால்.

''ஆத்தாளுக்கு என்ன உத்தேசமோ அதான்'' தீர்மானமாய் பதில் வந்தது.

அவித்த வேர்கடலைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள் அந்தப் பெண்.

வெளியே மழை வேகமெடுத்தது. ஏதோ முடிவோடு இருப்பது போல் மழை ஓங்கியடித்தது.

அம்மா சொன்னது போலவே பாவாடையின் முகம் அப்பாவினுடையது போலவே இருந்தது. அவர் நெற்றியில் நாமம் இருக்கும். பாவாடையின் நெற்றியில் குங்குமம் இருந்தது. முகத்தில் உக்கிரமான தோற்றம்.

''குழந்தைகளை அழைச்சிட்டு வந்திருக்கலாமே.'

''மழையா இருந்துச்சு அதுதான். நாளைக்கு இட்டுக்கினு வர்றேன்.'' சாமியார் மௌனமாக அண்ணனைப் பார்த்தார். 'இன்னைக்கு மழையில் இருந்து கொழந்தைகளத் தப்ப வைக்கலாம் நாளைக்கு'' என்று ஏதோ புதிர்போல சாமியாரிடம் இருந்து வார்த்தைகள் வந்து விழுந்தன. கண்கள் கூரையின் மேட்டு வளைவை உற்றுப் பார்த்தது.

''நல்லதோ கெட்டதோ மனசத் திடப்படுத்திக்கோ. எதையும் தடுக்க நீ யார் நான் யார்''

வார்த்தைகளைக் கக்கி விட்டு சாமியார் கண்களை மூடிக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருந்தார். கோபாலின் மனதில் கிலி பிடித்துக் கொண்டு விட்டது. அவரது உடல்கூட ஒரு கணம் ஆடியது. ஆனாலும், சமாளித்துக்கொண்டு அவித்த வேர்கடலையை உரித்து வாய்க்குள் போட்டுக் கொண்டார். மனதைத் திடப்படுத்த அதை விடவும் வேறு வழி தெரியவில்லை. பிறகு வலுக்கட்டாயமாக வேறு எண்ணங்கள் மனதை ஓடவிட்டார்.

அப்பா கடைசி வரைக்கும் கோயிலுக்குள்ள நுழைய முடியாம அந்தப் போராட்டத்துல செத்தே போனார். அது பழி தீர்க்கத்தான்

அவரோட புள்ள ஆத்தாளுக்குக் கோயில் கட்டி அதுக்குள் அவனே ஆத்தாளாக வாழ்கிறானோ என்று தோன்றியது. வரும் பக்தர்கள் சாமியாரைப் பக்தியோட வணங்கிவிட்டுப் போவதைக் கோபால் பார்த்தார். ஒருவேளை அப்பா இதையெல்லாம் பார்த்துத் திருப்தியடைவாரோ என்னமோ என்ற எண்ணம் அவர் மனதில் எழுந்தது.

உண்மையாகவே ரங்கநாதர் கோயிலுக்குள் நுழைய முடியாத சனங்கள் காளிக்கோயில் மூலமாய்த் தங்கள் ஏமாற்றத்தைத் தீர்த்துக் கொண்டார்கள்.

தாங்களாகவே தங்கள் உரிமையைப் பெறுவதற்கான ஒரு முயற்சியாகக்கூட அது இருக்கலாம்.

சிறுவயதிலிருந்தே ஏதோ வைராக்கியம் உள்ளவன் போலவே இருந்தான். கனவில் ஆத்தா உத்தரவு கொடுத்தாள் என்று புறம்போக்கு நிலத்தில் சிறிய குடிசை போட்டு அதில் படுத்துக் கிடந்தான். வெட்டாத முடி இடுப்புவரை தொங்கியது. பராமரிப்பு இல்லாமல் முடிச்சி விழுந்து விழுதுகள்போல தொங்கியது.

பக்கத்து கிராமத்து மக்கள் வந்து பார்த்துவிட்டு போனார்கள். கொஞ்ச நாள் வேடிக்கைப் பொருளாக இருந்தவன் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வாய்த்திறந்து பேசினான். அந்த நாட்களில் கூட்டம் கூடி அதுவே வாடிக்கையாகிவிட்டது. அவனது மறைவான வார்த்தைகள் ஒன்றிரண்டு பலித்துப் போனதோ என்னமோ கூட்டம் பெருகியது. வெள்ளிக் கிழமை குறி சொல்லும் படலம் தொடங்கி இன்று வரை நடக்கிறது.

ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து பூசை செய்யலாம். பேதமற்று யார் வேண்டுமானாலும் கோயிலுக்குள் நுழையலாம்.

ஒரு குறிப்பிட்ட வறட்சிக் காலத்தில் சுற்றுப்பட்ட அத்தனை கிணறுகளிலும் நீர் வற்றி சனங்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு வெள்ளிக்கிழமை குறிசொல்லும் நேரம் சாமியாடி ஆவேசம் பொங்க தன்னைச் சாட்டையில் விளாறிக் கொண்டு ஓடினார். சாமியாரின் குடிசைக்கு எதிரே வேப்ப மரம் ஒன்று தழைத்துக் கிளைத்திருந்தது.

அதனடியில் போய் நின்றுகொண்டு காலால் ஓங்கி மிதித்தார். 'இங்க தோண்டுங்கடா' என்று சாட்டையால் பூமியையும் விளாசினார். கிணறு வெட்ட இருபது அடி ஆழத்திலே நீர் பீறிட்டுக் கொண்டு வந்தது. இன்னமும் வற்றாதக் கிணறாக அது

இருக்கிறது. சாமியார் மேல் மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை கூடுவதற்கு அதுவும் ஒரு காரணம்.

அந்தக் கிணற்றில் நீர் ஊற இன்னொரு காரணமும் இருந்தது. அதன் பக்கத்தில் பல ஆண்டு பழமையான பெரிய ஏரி ஒன்று உள்ளது. அதுகூட காரணமாக இருக்கலாம்.

மழை பெய்து ஓய்ந்தது போல் இருந்தது. 'சரி நான் கிளம்பறேன்' என்றார்.

வெறுமனே தலையாட்டி முதல் முறையாகப் புன்னகைத்தார். அப்போதும் தம்பி பாவாடையைக் கோபாலால் பார்க்க முடிய வில்லை. யாரோ ஒரு பழக்கமில்லாத துறவி தான் தெரிந்தார்.

நான் சொன்னது ஞாபகத்துல இருக்கட்டும். வரக்கூடாதது வரப்போவுது மனச திடப்படுத்திக்கோ என்று சொல்வது போல இருந்தது. பிறகு தன் குடிசையை நோக்கி எந்த முணுமுணுப்பும் கையசைப்புமின்றி சாமியார் போய்விட்டார்.

கோபாலுக்குக் குழப்பமும் மனவருத்தமும் அலைக்கழிக்க வீட்டுக்குத் திரும்பினார்.

வரும்போதே அம்மா பார்த்துவிட்டாள். மகனின் திகிலடைந்த முகத்தை உற்றுப்பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

வாசலில் கம்பை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

கோபால் களைப்பாகத் திண்ணையில் போய் உட்கார்ந்து கெண்டார்.

குடிசைக்குப் பின்புறம் ஒரு காளை மாட்டின் கடூரமான கதறல் கேட்டது. அதன் வேதனையான கத்தல் வெகுநேரம் கேட்டது.

கோபாலின் மனம் அலைக்கழிப்புக்கு ஆளானதில் தன் வழக்கமான சாராயப் புகலிடம் தேடிப்போய் விட்டார்.

விதை நசுக்கப்பட்ட காளை வலியோடு கத்திக் கொண்டி ருந்தது.

நல்லா தானே போனான். எதுக்கு இப்பிடி பேயறைந்தவன் மாதிரி இருக்கிறான் என்று அம்மா மனதுக்குள் துக்கப்பட்டாள்.

இரவு சாப்பாட்டின்போது அவரால் சாப்பிட முடியவில்லை. சோற்று உருண்டையை வாயில் திணிக்க வாயைத் திறக்கும்போது அவர் கை நடுங்கியது. சாராய வாடை துர்நாற்றம் போல் வீசியது. போதை அதிகமாகி கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

முருவன் கைத்தாங்கலாக பிடித்து பாயில் படுக்கவைத்தார்.

பின் இரவில் பயங்கரமான கனவுகள் தொல்லைப்படுத்தின போலும் போதையின் தளர்ச்சியும் சேர்ந்து விடியும் சற்று முன்பு வரை உளறினார். பிறகு ஆழ்ந்து உறங்கிப் போனார்.

இரவெல்லாம் மழை சோவெனக் கொட்டியது. அம்மாவுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. வாசலை நன்றாக அடைத்துவிட்டுத் தட்டிக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள். வாயில் நசுக்கிய வெற்றிலையைப் போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தாள். அவளது அரை குருட்டு விழியால் வாசல் தட்டிக்கும் கூரை விளிம்புக்கும் இடையில் இருந்த திறப்பு வழியாக வெளியே பார்த்தாள்.

இருண்ட பாறையின் மேல் கருத்த பேய்ப் போன்ற புளிய மரத்துக்குப் பின்பாகப் புலரும் வானம் தெரிந்தது. ஆனால், மழை மேகம் அடர்த்தியாய் மூடிக்கொண்டிருந்தது.

இதெல்லாம் முதியவளுக்குத் தெளிவாய் தெரியாவிட்டாலும் தனது அனுபவ அறிவால் ஓரளவு யூகித்துக் கொண்டார். பருவமடைந்து செம்பருத்திப் பூ போல மின்னும் தனது பேத்தியை நினைத்துக் கொண்டார். அவளுக்கு கல்யாணத்த பண்ணனும். அவ அப்பனோ எந்த நேரமும் குடியில கெடக்கிறான். முருவனிடத்தில் இதைப் பற்றிப் பேசவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

கோபால் தொடர்ந்து இருமினார். வெளியில் இடியோசை அடங்கிய நேரத்தில் அவரது இருமல் ஓசை குடிசைக்குள் உறங்கியவர்களின் உறக்கத்தைக் கலைத்துவிட்டது. அம்மாவுக்குக் கலவரமாய் இருந்தது. பொல்லாத நோய் அவனைப் பிடித்துக் கொண்டதோ என்னமோ அவர் பயந்தார். காசநோய் என்றாலே எமனை நேரில் பார்ப்பது போல மக்கள் நடுங்கினார்கள். தாயும் நடுங்கினார்.

வாசல் தட்டியை நகர்த்தி விட்டு வெளியே எட்டிப் பார்த்தார். பொழுது புலர்ந்துகொண்டு வந்தது. பறவைகள் ஆதரவற்ற நிலையில் அபயக்குரல் எழுப்பின. மழையும், காற்றும் குறையும் நேரத்தில் வேறு மரங்களுக்கோ எங்கோ அடைக்கலம் தேடிப் பறந்தன. அங்கும் மழையும் காற்றும் தொல்லைப் படுத்தியதால் எரிச்சலடைந்த காகங்கள் கோபத்தில் கத்தின.

அம்மா அடுப்பை எரிய வைத்து காப்பிப் போடத் தயாரானார். கோபால் எழுந்து உட்கார்ந்துகொண்டார். பெருத்த இடியொன்று கூரையின் மேல் விழுந்து விட்டது போல் ஓசை யெழுப்பியது.

கிழவி அர்ச்சுனா... அர்ச்சுனா என்று புலம்பினார். பொழுது விடிந்து நேரமாகியும் வெளிச்சம் வரவில்லை.

முருவன் கோணி ஒன்றைத் தலைக்குப் போர்த்திக்கொண்டு கழனிக்கு ஓடினார். வெகுநேரம் மழைவிடாமல் பெய்தது. யாரோ வெளியில் வந்து நிற்பது போல் தெரிந்தது. வந்த ஆளைச் சாரதாதான் முதலில் பார்த்தாள்.

சேறும் சகதியுமான ஈர உடையுடன் கைலாசம் நின்று கொண்டிருந்தான். குளிரில் நடுங்கினான். வானம் போலவே அவன் முகமும் இருண்டு போய் இருந்தது. "வா அண்ணா என்று வாசல் தட்டியைத் தூரமாய் தள்ளி வைத்தாள். அவனைப் பார்த்ததும் கோபால் முகம் பேயைக் கண்டது போல் அரண்டு போனது. மெட்ராஸ்லருந்து இவன் எதுக்கு இந்தக் காத்து மழையில? அவர் நெஞ்சு அலறியது. சாமியார் மனக்கண் முன் தெரிந்தான்.

தலையைத் துவட்டிக் கொள்ள பழைய கந்தலை எடுத்துக் கொடுத்தாள் சின்ன பொண்ணு.

'என்னடா திடீர்னு" என்று அவசரமாகக் கேட்டார் கோபால்.

'பெரிய தங்கச்சிக்குக் கொழந்த பொறந்து இருக்குது" என்றவன், முடியாமல் அழுதான். இருட்டில் சரியாகத் தெரிய வில்லை. அவன் தலையில் இருந்து வழிந்த தண்ணீரோடு கண்ணீரும் சேர்ந்து வழிந்தது.

கோபாலுக்கு அப்பாடா என்றிருந்தது. 'என்ன கொழந்தடா.'

'பொம்பள புள்ளதாம்பா' என்று சொன்னவன் சாரதாவைப் பிடித்துக்கொண்டு குலுங்கியழுதான். அடக்கமுடியாமல் அவனுக்கு அழுகை வெடித்துக்கொண்டு வந்தது. 'இன்னாடா... கைலாசம்" என்று பதறினார் அம்மா.

"நாவம்மா அம்மா நம்மளவுட்டுப் போயிட்டாங்க... போயிட்டாங்க."

அவன் மார்பில் அறைந்து கொண்டு தரையில் சரிந்தான். நாகம்மாளோட அக்கா புள்ள குழந்தைல இருந்தே நாகம்மா கிட்ட வளர்ந்தவன். சித்தியின் மரணம் அவனுக்கு அதிர்ச்சி அப்படியே மயங்கி விழுந்துவிட்டான். 'பெரிய தங்கச்சிக்கு இடுப்பு வலின்னு ஆஸ்பத்திரில கொண்டுபோய் சேத்துட்டு வந்தோம். அம்மா அப்பவே நெஞ்சு வலின்னு சொல்லிட்டு இருந்தாங்க. நேத்து கடையும் போடல. நான் தங்கச்சிகூட இருந்து

பாத்துக்கிட்டிருந்தேன். அம்மா தங்கச்சிய பாக்க வருவாங்கன்னு பாத்தா ரொம்ப நேரமாகியும் வரல. சரி வூட்டுக்குப் போயி இட்டுகினு வரலாம்னு போனா அம்மா மூச்சு பேச்சு இல்லாம கெடக்குறாங்க. நான் கத்துன சத்தங் கேட்டு சாமியம்மாவும் ஏகாம்பர நைனாவும் வந்து பார்த்துட்டு கதறியழுவுறாங்க. என்னத்த சொல்றது?''

சொல்லிவிட்டு அவன் மார்பில் அறைந்துகொண்டான். 'தந்தி குடுத்தா எப்ப போயி சேருமோ. அதான் நானே வந்து சேர்ந்தேன்' அவனுக்கு மேல் மூச்சு வாங்கியது.

சாரதாவுக்கு நெஞ்சே உறைந்து போனது. மணி இவ்வளவு களேபரத்திலும் உறங்கிக் கொண்டு இருந்தான்.

துயரம் வந்தால் அது எந்த உருவில் வரும் என்று யாருக்குத் தெரியும். கொடுமையான வேதனையால் உடைந்து போன மனதோடு கல் போல இறுகிவிட்டார் கோபால்.

மழை விட மாட்டேன் என்று கொட்டியது. எப்படியோ அந்தக் காற்று மழையில் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள்.

மெட்ராசில் அவ்வளவாய் மழையில்லை. எல்லாம் முடிந்து விட்டது. பிணத்தைக் கொண்டு போய்ப் புதைத்துவிட்டு வந்தார்கள்.

இழவு வீடு துயரத்தின் குறி சூழ்ந்து துன்பக்கோலமாய்க் கிடந்தது.

அம்மா இவ்வளவு பணத்தைச் சேர்த்து வைத்திருந்தாளா என்று வாய்பிளக்குமளவுக்கு மரப் பெட்டியிலும் பானை யிலுமாய் சுருட்டியும் மடித்தும் கசங்கியும் ரூபாய் நோட்டுகள் இருந்தன. இன்னும் தகரப்பெட்டியில் கூட இரண்டு வகையான கம்மலும் கொலுசும் இருந்தது.

ஒரு பெரிய செம்புப் பானையிலிருந்து அரிசி கொட்டி வைப்பது வழக்கம். அரிசி தீர்ந்த நிலையில் அதில் ஒரு பை இருந்தது. மூத்தவள் எடுத்து பிரித்துப் பார்த்தாள் எழுநூறு ரூபாய் தேறும்படியான சில்லறை மூட்டை. சத்தம் இல்லாமல் தனது குடிசைக்கு எடுத்து போய் விட்டாள். ஒருவேளை அம்மா சாரதாவின் திருமணச் செலவுக்காக சிறுகச் சிறுகச் சேர்த்திருக்கலாம். கோபால் துயரத்தில் படுத்த படுக்கையாகிவிட்டார். ஓயாமல் இருமல் அவரை வாட்டி வதைத்தது. மனைவியின் மரணம் அவரை அமைதியற்றவராக்கி விட்டது. கோபாலின் வேலையை

மூத்தவளின் கணவன் செய்து வந்தான். கோபாலின் இரண்டு பக்க நுரையீரல்களிலும் பூச்சிகள் பிடித்துக் கொண்டு அரித்துத் தின்றன. பேத்தி தவழ்ந்து அருகே வரும்போதுகூட தூக்கிக் கொஞ்ச மனமின்றிப் போர்வைக்குள் முடங்கிக் கொள்வார்.

குழந்தையின் பிறப்பும் நாகம்மாளின் மரணமும் ஒரே நேரத்தில் நடந்தது என்ற நிகழ்வு வரவு செலவுப் புத்தகத்தில் கணக்கு வைப்பதுபோல் இருந்தது. குழந்தையைத் தூக்கிக் கொஞ்ச மனம் துடித்தது. நோய்த் தொற்றிக் கொள்ளுமே என்ற அச்சம் தடுத்தது.

நாகம்மாள் இறந்த சேதி கேட்ட அன்று கூட பையனைப் பள்ளிக்கூடம் அனுப்பி விட்டுப் பட்டணம் வந்த முருவனை கோபால் நினைத்துக் கொண்டார். கெட்டுத் தறுதலையாகத் திரியும் மணியைப் பார்த்து அவர் மனம் துயரமடைந்தது.

படித்துக் கொண்டிருந்த சாரதாவும் பள்ளிக்குப் போவதை நிறுத்திக் கொண்டாள். அக்காளுக்கு ஒத்தாசையாகவும் நோயாளி அப்பாவையும் பார்த்துக் கொள்ளவும்.

பீடியும், சாராயமும் கோபாலை எழுந்து கொள்ள விடாமலும் நோய்த் தணியவிடாமலும் பார்த்துக்கொண்டன.

ஆஸ்பத்திரிக்குப் போக சின்னக் குழந்தைப் போல அடம் பிடித்தார். முதல் இரண்டு ஊசியிலேயே அவர் பயந்து போய் ஆஸ்பத்திரி என்றாலே நடுங்கினார். தொடர்ந்து ஊசி போட்டுக் கொள்பவர்களுக்கு அரசாங்கம் ஊக்கத்தொகை அறிவித்திருந்தது.

"யாருக்கு வேணும் அவன் ஆயிரம் ரூபா. ஆள விடுங்க சாமி" என்று ஆஸ்பத்திரி போவதையே நிறுத்தி விட்டார். கிராமத்தார் ஏகாம்பரமும். அரிசிகார முனுசாமியும் வந்து பேசிவிட்டுப் போவார்கள். மற்றபடி புகையும், சாராயமும் தான் அவருக்குத் துணையென்றாகி விட்டது.

இந்த நிலையிலும் சாரதாவின் உடல் பெருத்துக்கொண்டே போனது. தெரு இளசுகள் பூசணிக்காய் என்றும், உருளைக் கிழங்கு என்றும் கிண்டலடிக்கத் தொடங்கினார்கள். அப்படி கிண்டல் பேசிய முருங்கைகாய் என்று பட்டம் சுமந்த அதே தெருவில் வசிக்கும் இளைஞன் தன் அக்காளுடன் பெண் கேட்க சாரதா வீட்டிற்கு வந்தான்.

தட்டில் பழம் இனிப்புகளுடன் நெற்றி நிறைய குங்குமத்துடன் பையனின் அக்கா நின்றிருந்தாள். முன்னறிவிப்பு இல்லாமல் திடீரென வந்துவிட்டவர்களைப் பார்த்து எரிச்சல் அடைந்து

விட்டார் கோபால்.

'என்னம்மா எதுக்கு இதெல்லாம்' என்று பழம் பூ தட்டை காட்டி கேட்டார்.

'தம்பிக்குப் பெண் கேட்கலாம்னு தான்'' அவள் தயக்கத்தோடு இழுத்தாள்.

ஒரே தெருவில்தான் இருந்தாலும் சமீபத்தில்தான் வந்து குடியேறினார்கள். அவ்வளவு பழக்கமில்லை. ஆனால் கோபால் அவர்களைக் கண்ணியக் குறைவுபட்டவர்களாகவே மனதுக்குள் நினைத்திருந்தார். உண்மையாகவே அவள் சண்டைக்காரிதான். அப்படிப்பட்டவள் வந்து பெண் கேட்டதும் அவருக்குக் கோபமும் எரிச்சலுமாய் பொறுமையற்றவராக 'பெண்ணெல்லாம் தரமுடியாது போங்க'' என்று கத்தினார்.

அதற்குள் விவரம் தெரிந்து ஏகாம்பரமும் முனுசாமியும் வந்து அவரைச் சமாதானப்படுத்தினார்கள்.

'நீ உன்னோட கோவத்துல கொழந்த வாழ்க்கைய பாழ்ப் பண்ணிடாத' என்று உரிமையோடு சொன்னார் ஏகாம்பரம்.

'பையன் ரொம்ப நல்லவன், நாம தான் பாக்கிறோமே கெட்ட சகவாசம் எதுவும் கெடையாது. குடி அது இதுன்னு நமக்குத் தெரிஞ்சு எதுவும் இல்ல. அந்தப் பொம்பளைங்க கொஞ்சம் வாயாடிதான். அவளுங்களப் பத்தி நமக்கென்ன பையன் நல்லவன்' என்றவர், கோபாலின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

கோபாலின் முகத்தில் தீர்மானமாய் இருப்பதற்கான அழுத்தமான அறிகுறி தெரிந்தது.

துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு இருமினார். 'ஆத்தாளும், பொண்ணும் சண்டகாரிங்க. நமக்குச் சரிபட்டு வராது. கொழந்த கல்யாணத்த அம்மாவும் தம்பியும் பாத்துக்கு வாங்க. சாரதாவை நான் ஊருக்கு அனுப்பிடப் போறேன்' என்று தீர்மானமாய்ச் சொன்னார்.

ஏகாம்பரத்துக்குத் தெரிந்துவிட்டது. இனி இந்த மனுச பிடிவாதத்தை நம்மாள முடியாது. வேற விஷயங்களைப் பேசி–விட்டுப் போனார்கள். பெண் கேட்டு வந்த மாப்பிள்ளை செழியன் ஏகாம்பரத்துக்காகக் காத்திருந்தான்.

வெளியே வந்தவரிடம் 'என்ன மாமா' என்று ஆவலோடு விசாரித்தான்.

"தம்பி நீ போய் வேற பொண்ணப் பாத்துக் கட்டிக்க. உனக்கு என்ன ராசாவாட்டம் இருக்க. கோபால் அமைதியா இருக்கறவன் அவனுக்கு இந்தச் சண்ட சச்சரவுல்லாம் புடிக்காது. உன் மேல் எந்தக் கொறையும் இல்ல.." என்று இழுத்தார். பிறகு, சொல்லறதுக்கென்னப்பா, உங்க அக்காளும், ஆத்தாலும் சண்டக்காரிங்கன்னு தான். அது சின்ன கொழந்த, செல்லமா வளந்ததுங்க. அக்கா வேற இல்ல அதான் யோசிக்கிறாரு" என்றவர், "அவன் பிடிவாதகாரன்பா நீ வேற எங்கயாச்சும் தேடு. இல்லன்னா ஊர்ல பொண்ணா இல்ல" அவனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார்.

மறுநாளே சாரதாவை ஊருக்கு அனுப்பிவிட்டார். கைலாசம் கொண்டு போய் கிராமத்தில் விட்டு வந்தான்.

பெண் கேட்டுப் போன செழியனோ ஏமாற்றத்தோடு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். அடுத்து என்ன செய்வது அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கட்டுனா அவளதான் கட்டனும்னு ஒரு தீர்மானம் அவனுக்குள் இருந்தது.

அக்காள், ஆத்தா மீது எரிச்சலாய் வந்தது. இதுங்க வாயாடிதனத்தாலேதான் எல்லாம் என்று அக்காளை எரிச்சலோடு பார்த்தான். அவளைத் திட்டவும் கழுத்தைப் பிடிப்பது போல் பாய்ந்தான்.

அவனுடைய அக்காளோ பொண்ணோட குடும்பத்தையே திட்டித் தீர்த்தாள்.

"டேய் இனி அந்த ராங்கிக்கார வீட்டுப் படியேறி, நா... பெண்ணு கேக்க மாட்டேன்டா. என்னடா அவ அவ்ளோ பெரிய மகராணி. நீ சர்தான்னு சொல்லு ரம்பயும், ஊர்வசியுமா பொண்ண கொண்டாரன்" என்று சவால் விட்டுப் பேசினாள். எரிச்சலோடு வாய் மூடி அமைதியாக இருந்தான். நடுக்கடலில் தத்தளிப்பதுபோல் இருந்தது அவனுக்கு.

அந்த நேரம் பார்த்து அனாதை ரட்சகன்போல ஏழுமலை சித்தப்பா வந்து சேர்ந்தார்.

'இன்னாத்தே... அண்ணி இன்னா பையனுக்கு பொண்ணு பார்க்கிறீங்களாமே ஒரு பேச்சிக்குகூட செல்லாம...என்று ஆரம்பித்தவர், 'முடிஞ்சுதா?

' அட நீ ஒன்னு இந்த பைய போயும் போயும் அந்த வூட்டு பொண்ண கேக்கச் சொன்னான்னு போனா மருவாதி இல்லாம

பேசி தொறத்துறான். அவன் பணம் அவனோட, பெரிய இவனாட்டம் பன்னிக்குறான் நம்ம பையன் மொடமா, குருடா இவன் குடுக்காட்டி வேற பொண்ணா கெடைக்காது போயேன்'' என்று இரைந்தாள். 'யார்டா அது'' சித்தப்பா பையனையே கேட்டார்.

அவன் முகத்தில் வெட்கம் படர்ந்தது 'அட யார்டான்னா'' என்று அதட்டினார்.

'அதாம்பா கோபால் மேஸ்திரி இருக்குறாரே அவர் பொண்ணத்தான்''

''அப்படி போட்றா சக்கன்னானாம்'' அவர் உரக்கச் சிரித்தார்.

''ஏண்டா இந்தச் சித்தப்பாவுக்கு யோகித இல்லன்னு தானே அக்காள கூப்பிடுகினு போன. மடையா இந்த மாதிரி விஷயத்துக்கு நாலு பெரிய மனுசனா போனா தானடா. கோபால இன்னா அவ்ளோ சாதாரணமா நெனைச்சு கிட்டிங்களா? உன் ஆத்தாளும் அக்காளும் சண்டக்காரிங்க. பொழுது போனா பொழுது விடிஞ் சா கத்தி ஊரக் கூட்டுவாளுங்க. இவளுங்க போய்ப் பொண்ணு கேட்டா இட்டுக்கினு போடியம்மான்னு சொல்லுவானா மனுசன்.''

அவர் சிரித்தார். தனது கட்டையான நரைத்த மீசையைத் தடவிக் கொண்டார்.

'ஆமா வந்துட்டாரு. நாங்க சண்டக்காரிங்கன்னு சொல்ல' அக்காளும் ஆத்தாளும் ஒரே நேரத்தில் முணுமுணுத்தார்கள்.

'தே... அண்ணி உனக்குத் தெரியாதா இன்னா அந்தாளு எங்க ஊர்க்காரன்தா. எல்லாம் நம்ம சனம் தான் நாம் பாத்துக்கறேன்'' அவர் ரொம்ப சாதாரணமாப் பேசினார். செழியனுக்கு நம்பிக்கை யில்லை. அவன் முகத்தில் கலவரம் தெரிந்தது.

''அது இல்லப்பா கிராமத்தார் அரிசிக்கார மாமா எல்லாம் கூட போய்ப் பேசிப் பாத்தாங்க. இல்லன்னு சொல்லி பொண்ண ஊருக்கு அனுப்பிச்சிட்டாறாம்'

''நல்லதா போச்சி வுட்றா, நாம அவ சித்தப்பனுங்ககிட்ட பேசிக்கலாம். நீ ஊருக்குக் கெளம்பு நான் பாத்துக்கறேன்.'

பையனுக்கு அப்படியே குளிர்ந்து போய்விட்டது. இது இன்னடா புதுக்கதையா இருக்குதுல. என்னமோ ஏதோன்னு தேடிக்கிட்டு இருந்தா தோ இருக்குது வாடான்னு கூப்பிட்டா மாதிரி இருந்தது அவனுக்கு.

'இப்பவே கௌம்பலாம்பா'' அவன் அவசரப்படுவது தெரிந்தது.

'பொறுடா இன்னைக்குச் செவ்வா நாளைக்குப் பொதன் நல்ல நாள் காலைல கௌம்பிடலாம் சரியா''

அவன் பலமாகத் தலையாட்டினான். அதில் அவனது அவசரம் தெரிந்தது.

ஊருக்குப் போய்ச் சேர்ந்த சாரதா, ஆயா முந்தானையையே பிடித்துக்கொண்டு இருந்தாள்.

ஆயா எங்கே போய் விடப்போகிறாள். எல்லாம் வீட்டைச் சுற்றித்தான் அவளுக்கு வேலை. ஏரிக்கு எப்பவாவது அழைத்துச் செல்வாள். தோட்டத்தில் காய், கீரை பறித்து வர என்று நாள் கழிந்தது.

அவள் ஊர் போய்ச் சேர்ந்த இரண்டாம்நாளிலேயே யாரோ பெண்கேட்டு வந்தார்கள். அட நீங்க ஒன்னு கொழந்த படிச்சிக்கிட்டு இருக்குது என்று சொல்லி அனுப்பி விட்டார் முருவன்.

'வளர்ந்த பொண்ணு வீட்டுல வச்சுக்கிட்டு என்ன பண்ணப் போறீங்க கேக்கற எடத்துல குடுக்க வேண்டியது தானே'' என்று சின்னப் பொண்ணு முருவனைக் கேட்டாள்.

'அட இவ ஒருத்தி அது சின்னப் புள்ள. மீசைய முறுக்கிக்கினு ராட்சச மாதிரி இருக்குறான். நல்ல கொணமானவனா கொழந்தைக்கு ஏத்தவனா பாப்பம் இருடி' என்று அவளை அடக்கினார்.

''பட்டணத்துல இருந்த புள்ள சட்டு... புட்டுன்னு எதயாவது செய்துட முடியுமா இன்ன.'

அக்கம் பக்கம் குடிசைகளில் இருந்த வயசுப் பெண்கள் சாரதாவுடன் ஒட்டிக் கொண்டு பழகினார்கள்.

அரசாங்கம் புதுசாய் கிணறு வெட்டியிருந்தது. அதில் போதுமான அளவு நல்ல ஊற்றும் இருந்தது.

இந்தக் கிணற்றில் இவர்களே நீர் இறைத்து கொள்ளலாம். முன்பு போல் காத்துக் கிடப்பதும் வெகுதூரம் போவதுமான சிரமம் இல்லை.

பொழுது புலர்ந்த நேரத்தில் தன் வயது பெண் பானையை எடுத்துக்கொண்டு ராட்டின கிணத்துக்கு நீர் இறைத்து வரப்

போனாள் சாரதா.

அங்கே திடீரென பெண்களின் குசுகுசுப்புச் சத்தம் கேட்டு, அவர்கள் கை காட்டி பேசும் திசையில் பார்த்தாள்.

தூரத்தில் யாரோ ஒரு பெரியவரும் பேண்ட் அணிந்த இளைஞனுமாய் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அருகில் நெருங்கியதும் அவளுக்கு அவனை அடையாளம் தெரிந்துவிட்டது. அவனும் அவளைப் பார்த்து விட்டான். அவளுக்கு நெஞ்சு படபடத்தது. நீர் நிறைந்த குடத்தைப் போட்டு விட்டு குடிசைக்கு ஓடிவிட்டாள். குடிசைக்குள் நுழையும் போது அவளுக்கு மூச்சிறைத்தது. கை கால்கள் நடுங்கின.

ஆயா பதறிவிட்டாள் 'என்னடியம்மா' என்று ஓடிவந்து பேத்தியைப் பிடித்து விசாரித்தாள். வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. வியர்த்துக் கொட்டியது. கிழவிக்கு ஒன்றும் புரியாமல் குடிசைக்கு வெளியே வந்து பார்த்தார்.

இடுப்பில் தண்ணீர் குடங்களுடன் பலமாகச் சிரித்தபடி இளசுகள் கேலியும், கிண்டலுமாக வந்து கொண்டிருந்தார்கள்.

ஒருத்தி உடைந்த பானையைக் கையில் பிடித்துக் கொண்டி ருந்தாள். அவர்களின் சிரிப்படங்க நேரம் பிடித்தது.

'ஏண்டி வரவங்க அவங்க வழியப் பாத்துப் போறாங்க. நீ எதுக்கு இந்த ஓட்டம் ஓடியாந்த'' என்றாள் ஒருத்தி.

'கொழா மாட்டிகினு போறவங்களப் பாத்தா பயப்படுதோ என்னமோ' என்றாள் ஒருத்தி.

'வழியில போறவங்களா பாத்துப் பயப்படுறதா?'

'இது இன்னாடியம்மா கதையா இருக்குது. யாரோ போறாங்கன்னு இவ பயந்து ஓடியாந்தாளாமே'

ஆயா பேத்தியைக் கண்களைக் குறுக்கிக் கொண்டு பார்த்தார்.

சாரதாவுக்கு முகம் சிவந்து வியர்த்துக் கொட்டியது.

''அப்படி யார்டி புதுசா வந்து இருக்கறாங்க'' என்று ஆயா கேட்டார்.

''அதான்... அந்த ஆட்டுக்கார மாமா' என்று ஒருத்தி சொன்னாள்.

''அட நம்ம குள்ளனா'' என்று கண்களைக் குறுக்குத் கொண்டு பேத்தியைப் பார்த்தார்.

''அந்தக் கெழவன பாத்து ஏண்டியம்மா நீ பயப்படுறே'

'தே... ஆயா நீ ஒன்னு அவ பயந்தது அவரப் பாத்து இல்ல. அவருகூட கொழா மாட்டிகினு இளசா ஒருத்தரு வந்தாரு. அவர பாத்து பயந்திருப்பா' என்று கிண்டலாய்ப் பேசி கண் சிமிட்டினாள்.

அந்தக் கிண்டல்கார கும்பலிடம் இருந்து தப்பி அவள் குடிசைக்குள் ஓடினாள்.

உச்சி வெயில் காய்ந்துக் கொண்டிருந்தது. வெளியே ஆயா யாரையோ வரவேற்பது தெரிந்து, குடிசைக்குள்ளிருந்து வெளியே எட்டிப் பார்த்தாள். ''எப்ப வந்த ரங்கசாமி'' என்று ஆயா வந்தவரைக் கேட்டாள்.

அந்த நேரம் பார்த்து முருவன் காய்ந்த வேப்பம் மரத் துண்டைத் தோளில் சுமந்துக்கொண்டு வந்து, வாசல் முன்பாகப் போட்டுவிட்டு, திண்ணையில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்தார்.

''இன்னா மாமா இந்தப் பக்கம்... எப்ப வந்தீங்க''

''உன்னைப் பாக்கத்தான் மச்சா''

''என்னையா'' என்றவர் வாசலில் எள் காய வைத்துக் கொண்டிருந்த அம்மாவைப் பார்த்தார்.

'அட அப்படி ஒக்காரு சொல்றன்'' சுதாரிப்புக்காகத் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''உன் அண்ண பொண்ண பத்தி பேசதான்'' என்று அவர் சொன்னது முருவனுக்குப் புரிந்துவிட்டது. பிறகு இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பேச்சு நல்லப்படியாய் முடிந்து, நல்ல நாள் பார்த்து பெண் பார்க்க வரச் சொல்லியனுப்பினார் முருவன்.

முருவனுக்குப் பையனைப் பிடித்துவிட்டது. அவனுடைய பவ்யமும், மரியாதையும், தோரணையும் பிடித்திருந்தது. ஒரு நல்ல நாளிலே அவர்கள் வர இவர்கள் போக என்று இரு வீட்டு சம்மதத்துடன் திருமணமும் நடந்தது.

மாப்பிள்ளைச் செழியனுக்கு 75 ரூபாய் சம்பளத்தில் வேலை. மாமனார் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

கோபாலுக்குக் கொஞ்சம் உடல் தேறியது போல் இருந்தது. வீட்டுச் செலவுக்குக் காசு கொடுத்தார். மூத்தவள் வேறு வீடு பார்த்துக் கொண்டு போய்விட்டாள். தம்பி மணியும் எங்கேயோ வேலைக்குப் போனான். அது அவனது பிரியாணி சாப்பாட்டுக்கும்

பீடிக்கும் சரியாய் இருந்தது.

சாரதாவின் கல்யாணத்துக்குக்கூட மாரியை அழைத்து வரவில்லை முருவன். மாரி அழுது அடம்பிடித்துப் பார்த்தான் பள்ளிக்கொடம் போ என்று விரட்டிவிட்டு வந்தார்.

மாப்பிள்ளை நல்லவனாய் வாய்த்துவிட்ட திருப்தியில் கொஞ்சம் மன அமைதியோடு இருந்தார் கோபால். ஆனால், அவரது உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. இருமல் அதிகமாகி விட்டது. சமீபத்தில் ரத்தம் கக்கத் தொடங்கினார். உடலின் இருபக்கமும் மார்பெலும்புகள் துருத்திக்கொண்டு வந்தது. உடல் இளைத்து மெலிந்து கொண்டுவந்தார். செழியன் அவரை வற்புறுத்தி மருத்துவமனைக்கு அழைத்துப் போனான்.

தனியார் மருத்துவமனையில் தான் பார்த்துக் கொள்வேன் என்று அடம்பிடித்தார். பணம் நிறைய செலவானது.

ஒரு கட்டத்தில் சாரதா தனது கழுத்தில், காதில் இருந்த நகைகளைக்கூட அடகு வைத்து கோபாலுக்கு வைத்தியம் பார்த்தாள்.

இப்போது அவரால் வேலைக்குப் போக முடியவில்லை. இருமல் அதிகமானது.

அன்றைய காலைப்பொழுதில் இருந்து சாரதா சோர்வடைந்து உட்கார்ந்து கிடந்தாள். அவளுக்கு வாயில் எச்சில் சுரந்து குமட்டிக்கொண்டு வந்தது. கோபால் கவலையோடு மகளைப் பார்த்தார்.

மாலை கணவன் வீடு திரும்பியதும் அவனிடம் சாரதா குசுகுசுவெனப் பேசுவதும் பிறகு இருவரும் சிரிப்பதும் கேட்டது. ஒருவாறு அவர் புரிந்துகொண்டார். சே... இந்த நேரத்தில் குழந்தைக்கு உதவ முடியாமப் போச்சே என்று மனதுக்குள் குமுறினார். நினைவுகளின் போக்கில் கண்ணீர் ததும்பியது.

கோபாலுக்கு வருவாய்ப் போனது. கையிருப்பும் குறைத்து விட்டது. செழியனின் குறைந்த சம்பளத்தில் குடும்பத்தை நடத்துவது முடியாததாகி விட்டது. போதாதென்று சாரதா கர்ப்பமாயிருந்தாள். இந்த நேரம் பார்த்து மணி எங்கோ போய்த் தொலைந்தான். மூன்று மாதமாகிறது. ஆள் எங்கே போனான் என்றே தெரியவில்லை.

இதுபோன்ற இக்கட்டில் செழியனின் அக்கா, வீட்டில் தம்பி இல்லாத நேரம் பார்த்து பிள்ளைத்தாச்சிப் பெண்ணிடம்

சச்சரவு செய்து வம்புக்கிழுத்தாள். நோயாளி அப்பன் முன்பாகப் போட்டு அடிக்கவும் செய்தாள். அக்கம் பக்கத்தவர் அவளை விரட்டியடித்தார்கள். வேலை முடிந்து திரும்பிய செழியனுக்குத் தெருவில் நுழையும்போதே யாரோ நடந்ததைச் சொல்லி விட்டார்கள்.

கோபத்தோடு போனவன், அக்காளை நையப் புடைத்துவிட்டு வந்தான். இதையெல்லாம் காணச் சகியாமல் கோபால் மன வேதனையில் முனங்கினார்.

குடும்பம் முக்கித் திணறியது. சாரதா நிறைமாதத்தை நெருங்கிக் கொண்டிருந்தாள். செழியன் பணத்துக்காகத் திண்டாடியது அவளை வாட்டியது.

நல்லவேளையாக எங்கோ போய் ஊர் சுற்றிவிட்டு திரும்பிய தம்பியிடத்தில் கொஞ்சம் பணம் இருந்தது. அது சாரதாவின் பிரசவச் செலவுக்கு உதவியது. ஆண் குழந்தை பிறந்தது. வறுமை உச்சியைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்த தருணத்தில் அது வீர் என்று அலறிக்கொண்டு இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தது. பேத்திக்கு குழந்தை பிறந்த செய்தி வந்தவுடன் மூட்டை முடிச்சுகளோடு ஆயா புதுஜகநாதபுரம் வந்து சேர்ந்தாள். மகனோட பேரனைப் பார்த்துச் சிரிப்பதா? தன் மகனைப் பார்த்து அழுவதா? கிழவி தன் சுருக்கம் விழுந்த கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு குழந்தையைக் கைகளில் ஏந்திக் கொஞ்சினாள்.

தரித்திரத்தில் பிறந்த குழந்தை அந்த முதியவளின் கைகளில் தளதளத்தது. கிழவி குழந்தையைப் பார்த்து முணுமுணுத்தாள். பண பணமா சம்பாதிச்சிக் குடிச்சே அழிச்ச உன் பாட்டன் ஒண்ணுமில்லாமப் போயிட்டான். இப்ப நீ வந்து உதிச்சு என்னத்த சாதிக்கப் போறியோ.

ஒரு ஆறு மாத காலம் ஆயா குழந்தையைப் பராமரித்துக் கொண்டு பேத்திக்கு உதவியாக இருந்தாள்.

குழந்தை தவழத் தொடங்கியது.

ஆயா ஊருக்குப் புறப்பட்டாள். கோபாலை வம்பு பண்ணித் தன்னுடனேயே அழைத்துக்கொண்டு போய் விட்டாள். கை நிறைய சம்பாதித்தும் திட்டமிடாத வாழ்க்கையும் ஊதாரிப் போக்குமாய் வாழ்ந்தவர் எந்தத் திட்டமும் இன்றி மரணத்தை எதிர்பார்த்து, மறுக்கவோ முரண்டுபிடிக்கவோ திராணியற்ற

பலியாடு போல அம்மாவுடன் போய்ச் சேர்ந்தார்.

மருத்துவம் பார்க்கும் இடத்திலே குணமாகாத நோய் பட்டிக்காட்டிலா குணமாகும். ரத்தம் முழுதும் வாய் வழியாக வெளியேறிக் கொண்டிருந்தது. சுரணையிழந்து விழுந்து கிடந்தார். கிராம வைத்தியத்தால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

நிறைய விதவிதமான பூசைகள் செய்தும், தேவதைகள் வழக்கம்போல வெறுமனே கல்லாகவே இருந்துவிட்டன.

ஒரு மாலைப்பொழுதில் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த சாரதாவிடம் கோபாலின் மரணச் செய்தி சொல்லப்பட்டது. இறுதியாக, தன் அப்பாவைப் பார்க்க விரும்பி இருந்த நகையையும் மார்வாடிக் கடையில் அடகு வைத்து விட்டு அழுது புலம்பிக் கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

பிணத்தை உற்றுப் பார்த்தாள். தன் அப்பா அது என்று அவளால் நம்பமுடியவில்லை. எலும்பின் மீது கறுப்பு தோல் போர்த்திவிட்டது போல் இருந்தது. கடைசி வரை அப்பாவின் சாயல் பிணத்தில் தெரியவே இல்லை. மனநிறைவற்ற பெரும் சுமை அவளது நெஞ்சிலே தங்கிவிட்டது.

மழைக்காலம், குளிர்காலம், கோடைக் காலம் போல் பிறப்புக் காலம், இடைப்பட்ட காலம், மரணக் காலம் என்று மனிதன் காலங்களோடு போராடிக் கொண்டும் சலிப்படைந்து கொண்டும் வாழ்பவன். போராட்டத்தின் முடிவில் மண்ணாகிப் போகிறான்.

இயற்கையாய்ச் சுழலும் இந்த விதியில் நல்லபடி கட்டமைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட மனிதன் அவனுக்கும் மற்ற மனிதர்களுக்கும் நல்ல முறையில் பயனளிக்கிறான். அடுத்த தலைமுறைக்கு நல்லதை விட்டுச் செல்கிறான்.

கட்டமைக்கப்படாத தறுதலை மனிதன் தானும் சீரழிந்தும் பிறரையும் சீரழித்துவிட்டு வரும் தலைமுறைக்குச் சீரழிவை விட்டுச் செல்கிறான்.

தீண்டப்படாதவர்களாய் ஊருக்கு வெளியே ஒதுக்குப் புறத்தில் வாழும் மனிதர்களிடையே சமூகக் கட்டமைப்பு வெகுகாலமாய்த் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு வஞ்சகமான கனவாய் பேய்மனம் கொண்ட மனிதர்களால் சீரழிக்கப்பட்டு வந்துள்ளது. பல விதமான ஆதிக்கச் சக்திகளால் நாசமாக்கப்பட்ட சமூகம் மிக சுலபத்தில் தறிகெட்டுப் போய்விடமுடியும்.

அதே வேளையில் அவர்களுக்குக் கல்வியும் கிடைக்காத

ஒன்று. சுதந்திரம் பெறும்வரை ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை அதுதானே. அப்படி கட்டமைக்கப்படாத மனிதனின் சீரழிந்த மகனான மணி கோபாலின் மறைவுக்குப் பிறகு கட்டுக்கடங்காத காளை போல கேட்பார் இன்றி சுற்றித் திரிந்தான்.

எப்போதாவது அக்கா, மாமன் முன்பாக வருவான். கையில் இருக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போவான். பிறகு சில மாதங்களுக்கு அவனைப் பார்க்கமுடியாது.

சாரதாவின் குடும்பம் பெரியதாகிவிட்டது. ஒன்றன் பின் ஒன்றாக ஐந்து பிள்ளைகள். குறைந்த வருமானம்தான். ஆனால், திறமையாகக் குடும்பத்தை நடத்தினாள். செழியன் தன் மனைவியைப் பற்றி மனநிறைவோடு இருந்தான்.

நாட்கள், வாரங்களாகி, மாதங்களாகி வருடங்களாய் அவர்களைக் கடந்து ஓடியது.

எங்கோ தறுதலைபோலச் சுற்றித் திரியும் மணியைப் பிடித்து வந்து அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பன்னி வைக்க மனைவியும், கணவனும் பேசிக்கொண்டார்கள்.

காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டிருப்பவனை எங்கே போய்த் தேடுவது? அவன் வழக்கமாக இருக்கும் இடத்தில் போய் விசாரித்தார்கள்.

அவன் ராஜஸ்தான் போய்விட்டதாக பதில் வந்தது. ஏமாற்றத்தோடு திரும்பினார்கள்.

பல மாதங்கள் கழித்து ஒரு நாள் சாரதா கொத்தவால்சாவடிக்குக் கணவனோடு போய்க் கொண்டிருந்தாள்.

ஒரு பெட்டிக் கடை வாசலில் வெறும் கால் சட்டையுடன் ஒருவன் போதையேறிய முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தான்.

''அய்யோ , இங்க பாருங்களேன்'' சாரதா அலறாத குறையாகக் கத்தினாள்.

''மணி'' என்று கூப்பிட்டாள்.

பட்டைத் தலையும் போதையில் சிவந்த கண்களுமாய் முகத்தில் நீர்ச் சொட்ட அக்காளையும், மாமனையும் மாறிமாறிப் பார்த்தான்.

பிறகு மௌனமாக எழுந்து அறைக்குள் போய்ச் சுத்தமான விலை உயர்ந்த பாண்ட், சட்டை அணிந்துகொண்டு வந்தான். அவன் நடையில் தடுமாற்றம் தெரிந்தது. அவன் நீளமான

தலைமுடி, சுருள் சுருளாய்க் காற்றில் பறந்தது. உடல் வற்றிப்போய் ஒல்லியாய் இருந்தான்.

சாரதா தேம்பி தேம்பியழுது கொண்டும் தம்பியை பார்த்துக் கொண்டும் நடந்தாள்.

என்.எஸ்.சி போஸ் ரோட்டில் இருந்த பெரிய ஓட்டலுக்கு அவர்களை அழைத்துப் போனான். கண்ணீருக்கிடையே சாரதா பேசினாள். 'டேய், இவ்ளோ காலம் போனது போவட்டும். இனியாவது வீடு வாசல்னு வந்து சேருடா. ஒரு கல்யாணத்த பண்ணி வைக்கிறேன். வா வந்து வாழ பாருடா'' என்று சொல்லிவிட்டு தேம்பியழுதாள்.

சாப்பிட்டார்கள் குழந்தைகளுக்கு இனிப்பும், பழங்களும் வாங்கிக்கொடுத்து கொஞ்சம் பணமும் கொடுத்தனுப்பினான்.

ஒரு வாரம் போகட்டும் வீட்டுக்கு வர்ரேன் என்று சொல்லி அவர்களை வழியனுப்பி வைத்தவன், சொன்னது போலவே வந்தும் சேர்ந்தான். எல்லா சீரழிவுக்கும் ஆளாகி மிச்சம் மீந்தவன்போல வந்து சேர்ந்தான்.

சட்டை நிறைய ரூபாய் நோட்டு இருந்தது. பணத்தை வட்டிக்கு விட்டான். வட இந்தியர்களின் பழக்கம் அவனுக்கு இருந்ததால் எதையும் வணிகப் புத்தியோடவே பார்த்தான். கையில் பணம் புழங்கியது.

சொந்தத்தில் பெண் பார்த்துக் கட்டிவைத்தார்கள். தன் குடிசையிலேயே ஒரு பகுதியை ஒதுக்கி அதில் மூங்கில் தடுப்பு போட்டு இளம் தம்பதியருக்கு அறை ஒதுக்கி கொடுத்தாள் சாரதா. வழக்கமான நாத்தானார், தம்பி பெண்டாட்டிச் சண்டைகள் சச்சரவுகள் எல்லாம் நடந்தன.

இது என் அப்பா வீடு எனக்குத்தான் சொந்தம் என்ற பேச ஆரம்பித்து விட்டான். அவனுக்கும் வரிசையாய் மூன்று பிள்ளைகள். வட்டிப் பணம் அவன் பாக்கட்டை நிரப்பியது. பெட்டியை அல்ல. பணத்துடன் ஆணவம், சாராயப் பழக்கம், எல்லாம் சேர்த்து அவனை ஆட்டி படைத்தது. கோபால் தன் காச வியாதியை அவனுக்குப் பரிசாகக் கொடுத்துச் சென்றிருந்தார். அவன் இருமும்போது ரத்தம் கட்டியாக வந்தது.

வட்டித் தொழில் நன்றாகவே நடந்தது. சௌகார்பேட்டை குஜராத்திகளிடம் அவன் பணம் சம்பாதிக்கும் வித்தையை நன்றாகவே கற்றிருந்தான். பாவம் வாழ கற்கவில்லை. இருக்கும்

பணத்தில் எப்படி சுகமாக வாழ்வது என்பது பற்றி அவனுக்கு தெரியவில்லை.

குழந்தைகள் அழுக்குப் பிடித்து தலைவிரி கோலத்தில் இருந்தார்கள். மனைவியும் பிள்ளைகளும் பட்டினியாய் இருக்கும்போதுகூட அவன் பாக்கெட்டில் பணம் இருக்கும். அவன் ஒரு வினோதமான பேர்வழியாக இருந்தான். சட்டைப் பையில் பணம் வைத்திருப்பதை விரும்பினான்.

தன் ஐந்து பிள்ளைகளோடு தம்பி பிள்ளைகளையும் சாரதா கவனித்துக் கொண்டாள். ஆனாலும், மணி அக்காளோடு வீம்பு பேசினான்.

'த பாரு... நீ நாலு செவுத்துக்குள்ளதான் உன் வேலையெல்லாம் நான் இந்தியா பூரா சுத்தி வந்தவன். என்னைவிட ஒரு புடி நீ கீழதான்' என்றும் ஜம்பம் பேசினான். இப்படிப் பேசியே அடுத்த குழந்தையும் பிறந்தது. அவனது மனைவியும் மெலிந்து ரத்தசோகை பிடித்து மருத்துவனையில் போய்த் தங்கினாள்.

மணியை காசம் பிடித்து வாட்டியது. மருத்துவரைப் பார்க்கும் எண்ணமின்றி காலத்தை ஓட்டினான்.

அவனது அறையோ ஒழுங்கீனமாய் இருந்தது. மனிதர்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டுதான் உள்ளே போகமுடியும். மூட்டைப் பூச்சிக்கும் கரப்பானுக்கும் தீனி போட்டு வளர்த்தான். வீட்டை கழுவினால் செல்வம் போய்விடும் என்று பேசும் அளவுக்கு மூட பழக்கங்கள் தொற்றி அவனைச் சீரழிந்தது.

அவனது உறங்குமிடம் கரி படிந்து மூட்டை பூச்சியை நசுக்கிய ரத்தக் கறைகளோடு பாழ்குகைப் போல் கிடந்தது. அறையில் எப்போதும் தீய்ந்த புகையிலை வாடை அடித்தது பீடி, சுருட்டாகி வியாதியை அதிகமாக்கியது.

அவனுடைய நுரையீரலுக்குப் பீடியின் காரம் போதவில்லை. இப்போதெல்லாம் சுருட்டு பிடிக்க ஆரம்பித்து விட்டான்.

சாரதாவும் ஊரில் படித்து முடித்து பட்டணத்தில் வேலை பார்க்க வந்த தம்பி மாரியும் வம்பு பண்ணி மருத்துவமனையில் போய் சேர்ந்தார்கள். கொஞ்சம் உடம்பு தேறியதும் மருத்துவர் அனுமதி இல்லாமலே வீடு வந்து சேர்ந்தான்.

மீண்டும் குடி, பீடி, சுருட்டு, கெட்ட சகவாசம் அவனைச் சீரழித்தது.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். சரியாக பயன்படுத்தாமலேயே மாத்திரை மருந்துகளில் நம்பிக்கையிழந்து விட்டான். எரிச்சல் தரும் நுரையீரலை சுருட்டு புகையால் சாந்தப்படுத்தி கொண்டான். ஒரு நாள் இரவு அவனது மனைவி மார்பில் அறைந்து கொண்டு ஓவென்று அலறினாள்.

என்னவோ ஏதோவென்று சாரதாவும் பிள்ளைகளும் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். தரை முழுதும் ரத்தம். இருமி இருமி துப்பினான். குழந்தைகள் அலறி விட்டார்கள். இரவோடு இரவாக ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

மருத்துவர்கள் நோயாளியின் உறவினர்கள் மீது சீறிப் பாய்ந்தார்கள்.

'சாகற நேரத்துல கொண்டாறீங்களா? இவ்வளவு நாள் என்ன பண்ணீங்க. இந்த ஆள வெளியக் கொண்டு போங்க. நோய் முற்றிப் போச்சு" என்று கத்திவிட்டு பேருக்குச் சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

அவன் எதைப் பற்றியும் கவலையில்லாதவன் போல சுருண்டு படுத்துக் கிடந்தான். எதிரே கண்ணீர் வழிய நின்ற அக்காளை முறைத்துப் பார்த்தான்.

'இப்ப உனக்கு சந்தோஷமா" என்று கேட்டான். பொறுமையின்றி அவளை வாய்க்கு வந்தபடி திட்டினான்.

அவனது மனநலம் பாதிக்கப்பட்டதுபோல அவனது செய்கையும் பேச்சும் இருந்தது. பெரும்பாலும் நிதானமின்றி நடந்து கொண்டான்.

அவனுக்காக வருந்துவதா, இல்லை கோபிப்பதா என்ன செய்வது என்று புரியாமல் சாரதா அழுதாள். வேறு என்ன செய்ய முடியும்.

மருத்துவமனையில் இருந்து யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீடு வந்து சேர்ந்து அழுக்குப் படிந்த அறையில் சுருண்டுப் படுத்துக்கொண்டான். பாவம் அவன் ஆடியபடியெல்லாம் அவன் மனைவியும் ஆடினாள். வேறு வழி.

அவன் தலைக்கு மேலாக வித விதமான கடவுள் படங்கள் கரி படிந்து சோகமாய்க் கிடந்தது.

ஊரில் இருந்து வந்த யாரோ சொன்னார்கள் 'ஏம்மா எங்கிருந்து வர்றவங்களும் காளி கோயில்ல தங்கி குணமாகி போறாங்க நீயும்

ஒரு முறை வந்து பாரேன்.'

மருத்துவர்களால் கைவிடப்பட்டு நோய் முற்றிய அந்த நோயாளிக்குக் காளிக்கோயில் நம்பிக்கை தருவதாக இருந்தது.

அவன் பணம் கொடுத்து இருந்தவர்களிடம் போய் மனைவி வசூலித்துக் கொண்டு வந்தாள். சிலர் வாங்கவில்லை என்று ஏமாற்றவும் செய்தார்கள்.

தடியெடுக்காத தண்டல்காரனாய் அவனும் போய் வசூலித்தான். கிடைத்தவரை எடுத்துக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

சித்தப்பன் முருவன் வீட்டுக்குக் கூட போகாமல் நேராகக் காளி கோயிலுக்கே போய்ச் சேர்ந்தான். சித்தப்பன் மகன் என்ற உறவெல்லாம் மறைந்து சாமி பக்தன் முறையாக கோயிலில் அடைக்கலமானான். வெள்ளிக்கிழமை நாளில் சாமியார் குறி சொன்னார்.

''உன்னோட வேலை செய்பவர்கள்தான் உனக்கு வினை செய்துவிட்டார்கள். அதுதான் உன்னைப் பிடித்து ஆட்டுகிறது. நாற்பது நாள் நீ இங்க இரு. எல்லா பீடையும் உன்னவிட்டுப் போகும்' என்று சொல்லி விபூதியை எடுத்து அவன் மேல் ஊதினார். அடங்கியிருந்த இருமல் சாம்பல் தூசியால் குமுறிக் கொண்டு வந்தது.

முருவன் வந்து பார்த்துவிட்டு வீட்டுக்கு வா என்று கூப்பிட்டார்.

'இருக்கட்டும்பா நான் இங்கயே இருந்துக்கறேன்'' என்று சொல்லி விட்டான்.

வீம்பும், ஜம்பமும் மட்டும் அவனிடம் பலம் குறையாமல் இருந்தன.

இப்போது காளி கோயில் பெரிதாய் வளர்ந்து ஊருக்கு தூரமாய் வரும்போதே அதன் கோபுரம் தெரிந்தது.

காளி கோயிலைச் சுற்றி ஏராளமான பக்தர்கள் தங்கும் குடிசைகளும் நோயாளிகள் தங்கும் குடிசைகளுமாக நிரம்பி பரவிக் கிடந்தது.

அந்தக் கோயிலைப் பற்றிய பலவிதமான நம்பிக்கைக் கதைகள் பல ஊர்களுக்கும் பரவி ஏராளமான சனங்களை வரவழைத்தது.

மணியின் பிள்ளைகள் எல்லாம் குட்டியும், குலுவானுமாய் விவரம் புரியாமல் நோயாளி அப்பனைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் பொழுது விடிந்தது. ஆனால், மணி மடிந்து போயிருந்தான். சாமியார் வந்து பார்த்துவிட்டு வெறுமனே கை விரித்துவிட்டுப் போனார்.

⊙⊙⊙

முருவன் ரொம்ப நேரமாய் பிணத்தருகில் உட்கார்ந்து பல வருட வாழ்வுப் போராட்டத்தைச் சில கணங்களில் கண்முன் கொண்டு வந்து பார்த்தும் வேதனைதான் மிஞ்சியது.

அருகில் நின்ற பெரியவர் முருவனைப் பிடித்து உலுக்கினார். உறக்கத்தில் இருந்து விழித்தவர் போல வறண்டு போன விழியால் அண்ணாந்து பார்த்தார்.

'எழுந்துரு முருவா'' நடக்க வேண்டியதைப் பார்க்கலாம். ரொம்ப நாளா காய்ல கெடந்தவன் பொழுதுக்கும் தாங்குமான்னு தெரியலை இப்பவே வாடையடிக்குது.''

முருவன் எழுந்து நிற்க முடியாமல் தள்ளாடினார். அவரைக் கைத்தாங்கலாக பிடித்துக் கொண்டார்கள்.

'மெட்ராசில் இருந்து ஆளுங்க வர நேரமாவும் மாதிரி தெரியுதே''

'அட அவங்க வந்தா சொல்லிக்கலாம். வேலைய பாருங்கப்பா.''

பட்டணத்தில் அரசாங்க உத்தியோகம் பார்க்கிற தம்பி மாரிக்காகவும் அக்காள் சாரதாவுக்காகவும் காத்திருக்க முடியாதபடி பிணம் நாற்றமெடுத்தது.

வழக்கமான சடங்கோடு குழிக்குள் போட்டு மூடி விட்டுத் திரும்பினார்கள்.

–முற்றும்–

## கரன் கார்க்கி

சென்னையைப் பிறப்பிடமாகக் கொண்ட தினகரன், ருஷ்ய எழுத்தாளரும், தாய் நாவலின் ஆசிரியருமான மாக்சிம் கார்க்கியின் மீதுகொண்ட ஈடுபாட்டினால், தன் பெயரைக் 'கரன் கார்க்கி' எனச் சூட்டிக்கொண்டவர். இவரது முதல் நாவல் அறுபடும் விலங்கு.

ஆசிரியரின் பிற நூல்கள்

- கறுப்பு விதைகள் (2009)
- கறுப்பர் நகரம் (2011)
- வருகிறார்கள் (2014)
- ஒற்றைப் பல் (2016)
- மரப்பாலம் (2018)

www.vasagasalai.com